# உலக வரலாறு

( இரண்டாம் பாகம் )

இது

யாழ்ப்பாணம், பருத்தித்துறை

திரு. த. இராமநாதபிள்ளை B. A. London.

அவர்களால் இயற்றப்பெற்றது

M-T

யாழ்ப்பாணம் சைவப் பிரகாச அச்சியந்திரசாலையில்
அச்சிடுவிக்கப்பட்டது.

1953

Copyright Reserved ] [ விலை

# WORLD HISTORY IN TAMIL

APPROVAL

BY

DEPARTMENT OF EDUCATION CEYLON.

*T. Ramanathapillai Esqr.,*
*Point-Pedro.*

"Reference to your application of 3-3-45 I have to inform you that you have been selected by the Research Council of Education to write in Tamil a standard Text-book on the above subject for the use of teachers and Post Primary Classes.-"

Director of Education
Colombo.
13-11-45.

---

*T. Ramanathapillai Esqr.,*
*Point-Pedro.*

Reference to your Letter of 16-6-46 I have to inform you that the Manuscript of the above book has been accepted by the Research Council of Education and that you be given a subsidy of Rs. 750.-

Director of Education
Colombo
28-9-46

# உலக வரலாறு

## ( இரண்டாம் பாகம் )

## 7-ம் அதிகாரம்: தமிழ் வேந்தர்

### 1-ம் பாடம் மதுரை

#### சரித்திர ஆராய்ச்சி

ஆராய்ச்சி வல்லோர் பாழாயிருக்கும் கோட்டங்களையும் இல்லங்களையும் மணற் குன்றுகளையும் கற்குவியல்களையும் பொருட்செலவு செய்து ஆராய்ந்து பார்த்தும் பழங்கதைகளைக் கேட்டுத் தெளிந்தும் இலக்கியங்களில் மறைந்து கிடக்கும் சரித்திரங்களைத் தேர்ந்தும், மட்கலங்களிலும், கற்பாறைகளிலும், செப்பேடுகளிலும், நாணயங்களிலும், யானைத் தந்தங்களிலும், சுட்ட செங்கற்களிலும், மூங்கிற்றுண்டுகளிலும், பனையோலைகளிலும் எழுதப்பெற்ற வரலாறுகளை வாசித்தும், பிறபாஷைகளிலுள்ள சரித்திர நூல்களைக் கற்றும் அரிய நூல்களை நுவல்கின்றனர். தமிழர் சுதந்தரமற்று ஊணும் உடையுமின்றி உழுதாண் சுவையினும் தொழுதாண் சுவையை நாடும் நிலையில் ஆராய்ச்சிகளில் ஈடுபடா திருத்தல் விநோதமன்று. உரோமாபுரத்தின் வரலாற்றை மாத்திரமன்றி அதன் பழங்கதைகளையும் படிக்கும் நாங்கள் எங்களுடைய சரித்திரத்தைக் கற்கின்றிலம். உரோமியூலுஸ் என்பானுக்கு ஓநாய் முலை கொடுத்ததையும் உரோமருக்கு அவர் தேவுக்கள் போர்க்களத்தில் துணைபுரிதலையும் கற்போர் மதுரையில் பாண்டியர்க்கு அழகர் உதவிபுரிந்த கதைகளைக் கற்கின்றிலர். இஃதொரு புறமாக, பழங்கதை கற்போர் தாம் பழங்கதை கற்கின்றனர் என்பதை மறந்து அக்கதைகளைச் சரித்திர நிகழ்ச்சிகள் என நம்புகின்றனர். உதாரணமாக, அகத்தியர் என்னும் தமிழ்த் தெரியாத ஆரியர் ஒருவர் வடநாட்டினின்றும் புலம்பெயர்ந்து பொதியத்தில் குடிபுகுந்து காடுகெடுத்து

நாடாக்கி, வேளிரைக் குடியேற்றித் தமிழ் நெடுங் கணக்கைக் கற்பித்து 12, 000 சூத்திரம் கொண்ட அகத்தியம் என்னும் இலக்கணத்தை எழுதித் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர் என்பதைச் சிறிதும் ஆராயாமல் நம்புகின்றனர். அகத்தியர் என்னும் தமிழ்மொழி வல்லோன் தமிழ்மொழிக்குப் பேருதவி செய்தனர் என்பதை யாம் மறுக்கின்றிலம். அகத்தியனைப் பற்றிய புராணக் கதைக்குப் பொருள் தெளிய முடியாது பலர் மயங்குகின்றனர் என்பதையே உணர்த்துகின்றோம்.

புராணங்கள் தமிழ் வேந்தர் மதுரையைத் தலைநகராக்கி மூன்றும் சங்கத்தை நிறுவித் தமிழை வளர்த்துச் செங்கோலோச்சினர் என முழங்குகின்றன. அக் கதைகள் சிலவற்றை ஈண்டுக் கூறுவாம்.

மணவூரிலே குலசேகரர் அரசுசெலுத்திய காலத்திலே வணிகன் ஒருவன் மேற்றிசைப்புலம் சென்று வணிகஞ் செய்து மீள்வான் கடம்பாவனம் புகுந்து ஆங்கு இருளில் விமானங் கண்டு அதிலே சுரர் கான நல்விரையால் சிவனை வழிபடுதலைக் கண்டு தானும் இருகை கூப்பித் தொழுதான். அச் செய்தியை அரசன் கேட்டு 'கடம்பாவனத்தில் நகர் காணுதி' எனத் தனக்குச் சிவன் கனவில் அருளிச்செய்த உரையோடு அச் செய்தி ஒத்திருத்தலை உணர்ந்து, நீள் நிலம் திருத்திச் செந்நகர் எடுப்ப அமைச்சரோடு ஆலோசித்தனன். அந்நகர் கூவல் குளம் பொய்கை நந்தாவனம் என்பவை உடையதாய் மதுரமான தன்மை பெற்றிருந்தமையால் மதுரை எனப் பெயர் பெற்றது.

இனி இந்திரனது ஏவலால் வருணன் மேகங்கள் ஏழையும் கூவி மதுரையில் பெய்யாது விடும்படி ஏவ, ஈசனுடைய மின்றிகழ் சடையினின்று நான்கு மேகங்கள் குன்றுபோல் நிவந்து நான்கு கூடமாகக் கூடலால் மதுரை நான்மாடக் கூடலாயிற்றென்ப. மேலும் கீர்த்திபூடணன் ஆண்ட காலத்திலே ஒரு பிரளயம் நடந்ததெனவும் அக் காலத்திலே இம் மாநகரின் எல்லையை அளந்து காட்டென வழுதி பணிக்க பாம்பு எல்லை காட்டியதால், மதுரை திருவாலவாய் எனப் பெயர்பெற்றது எனவும் கூறுப.

தொன்னகராகிய மதுரையின் புகழை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் செப்பமுடியாதெனப் புராணங்கள் புகல்கின்றன. மதுரையின் சிறப்பைத் திருவிளையாடற் புராணம் கூறு நிற்கும். ஈண்டு திருவிளையாடற்புராணம் எழுதப்பெற்ற வரலாற்றைத் தருதும். "18 புராணங்களுள் ஒன்றாய காந்தம் ஆறு சங்கிதை உடையது. ஒன்று சங்கரன் தன் துணைவிக்குச் சொல்லியதால் சங்கரசங்கிதை எனப் பெயர்பெற்றது. அதை முருகவேள்பால் அகத்தியர் கற்றுச் சூதற்கு உரைத்தமையால் அது அகத்திய சங்கிதை எனவும் பெயர்பெற்றது. திருவிளையாடற்புராணம் அகத்திய சங்கிதையின் மொழிப்பைக் கூறுகின்றது. புராணங்களை நந்தியிடம் சனற்குமாரர் கற்று வியாதனுக்கு உரைத்தனரெனவும் வியாதனிடம் சூதர் கற்றனரெனவும் கூறுப. இனி வியாதனை கோதமர் பராசரர் வாமதேவர் வான்மீகி வசிட்டன் சுகன் முதலிய முனிவர்களை முருகவேளிடம் மறை முதலனைத்தும் கற்ற குறு முனியிடம் கேண்மின் எனக் கூறினான் என்ப.

## பாண்டியர்

பாண்டியர் தெய்வகுலத்தினர் என்பது புராணங்களின் துணிபு. குலசேகரனுடைய மகன் மலயத்துவசன் அரசாண்டிருந்தான். அம் மலயத்துவசனுக்கு உலகு ஈன்ற அன்னை மகளாகிய செய்தியை நவில்வாம். மலயத்துவசன் மகவேள்வி இயற்ற, அத்தீயினின்றும் துகிலணியும் மேகலையும் புலம்ப, மூன்றுவயசுக் குழந்தையாக எழுந்தனள் பராசக்தி. அத்தருணத்தில் 'தடாதகை எனப் பெயரிட்டு முடிசூட்டுவாய் இப் பெண்ணுக்" கெனத் திருவாக்கு விசும்பிடை எழுந்தது. அப் பெண்ணுக்கு மணம் பேசிய காலை, அவள், "நான் போய் திசைகளும் பெரு நீர் வைப்பும் எனது கொற்றம் நாட்டி மீள்வல்" என்று தேர்ஏறித் திசை காவலரையும் கைலயங் கிரியையும் நோக்கிச் சென்றாள். அத்திசையைக் காவல் புரியும் நந்தியின் படை தோல்வியடைந்தது. அழகர் தோன்றி "நீ நகருக்கு ஏகு, நான் வந்து மணஞ் செய்வேன்", எனத் திருவாய் மலர்ந்தருளினார். வாக்குப் பண்ணியபடி உருத்திரரும் முனிவரும் புடைசூழ, குண்டோதரன் குடைபிடிக்க, விடைக்கொடி

உயர்த்திய முக்கட் செல்வன் மதுரையை அடைந்தான். சிவன் பாண்டியனாகி அரசு புரிந்துழி தனது திருவிளையாடலைக் காட்ட நினைந்து குண்டோதரனுக்குப் பசி எழுப்பினான். குண்டோதரன் நடை தளர்ந்து கண் புகைந்து, வாய் புலர்ந்து இருந்தான். அவன் அன்ன மாமலையை உண்டும் பசி தணியாமல் பால் தயிர் தேன் மிடாவோடும் வாய் மடுத்தும் பண்ணியம் கன்னல் காய் உண்டும் பசி கூடியதே. பின்னர் சிவன் அன்னக்குழியையும் வைகையையும் அழைத்துப் பசியைத் தணித்தனன்.

அழகருடைய மகன் உக்கிர பாண்டியன் மதிக் குலவரசைப் பெற்றான். அமைச்சர் அவனுக்கு வட புலத்துச் சூரிய குலத்து அரசன் சோமசேகரனின் புதல்வி காந்திமதியை மணம்பேசினர். உக்கிரன் செங்கோலோச்சி யிருந்துழி, அழகர் தோன்றி, "இந்திரனும் கடலும் வானும் உனக்குப் பகையாகும். ஆதலால் இந்திரன் தலை சிதற இந்த வளை கொண்டெறி; கடலில் இவ் வேல் விடுதி; மேருதன்னை இச் செண்டால் புடை" என அருளி மறைந்தனர். குண கடல் மதுரையை அழிக்கச் சென்றதாக மீனவன் வேலெறிந்தான்; கோள் நிலை திரிந்து மழை மறுப்ப, தமிழ் மன்னர் மூவரும் தமிழ் முனிவரின் இருக்கை சார்ந்து "பன்னீராண்டு வற்கடம் நிகழுமெனவும் சோமவார விரத மிருத்தல் நன்றெனவும் உணர்த்தப்பெற்றனர். மழைவேண்டி மூவரும் உம்பர்கோன் மருங்குபுக்கார். உக்கிரன் தேவர்கோன் தவிசில் ஏறியிருந்தான். இந்திரன் தன் ஆரத்தை வழுதிக்கு நல்கி உபசரித்தான். இந்திரன் உட்பகையினனாதலின் சினந்து மழையை மறுத்தனன். உக்கிரமாறன் வேட்டையாடும் எல்லையில் மேகங்களைக் கண்டு கடுந்தளை சிக்க யாத்தான். இதை யறிந்து இந்திரன் வெகுண்டு செல்ல, உக்கிரன் நரசிம்மாஸ்திரத்தை விட்டான். அதை இந்திரன் சிம்புட் படையால் தடுத்தான். முடிவில் உக்கிரன் வளைஎறிந்து குலிசத்தை விழுத்தி இந்திரனுடையமுடியைச் சிதைத்தான். பின்னர் சோள்சுள் சூரியனை நோக்கி நிற்ப, மழை வறந்து வற்கடம் நிகழ்ந்தது. உக்கிரன் கன்னித் தண்டமிழ் நாடு நீங்கி மேருமலையையடைந்து பொன் பெற்றான் என்ப.

பாண்டியர் தலைமுறை தலைமுறையாக மதுரையிலிருந்து செங்கோல் செலுத்தினர் என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. கடைச்சங்கம் இம் மதுரையில் நிறுவப்பட்டு முத்தமிழ் ஆராய்ந்து வந்ததெனவும் அச்சங்கம் கி. பி. நான்காம் நூற்றாண்டில் குலைந்ததெனவும் ஆராய்ச்சியாளர் துணிகின்றனர். சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் வெற்றிவேற் செழியன் மதுரையை நீங்கிக் கொற்கையில் இருந்து அரசுபுரிந்தனன் எனினும் பாண்டியர்கள் கடைச்சங்க காலந்தொட்டு மதுரையையே தலைநகராகக் கொண்டனர் என்பது பொருந்தும். கடைச்சங்க காலத்தில் மிகவும் புகழ்பெற்றுச் செங்கோலோச்சிய ஆழிவேந்தன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய மகன் உக்கிரப்பெருவழுதி மதுரையிலிருந்தே செங்கோலோச்சி முத்தமிழ் வளர்த்து தமிழ் நாகரிகத்தைச் சீர்மையுறச் செய்திருந்தான். உக்கிரப் பெருவழுதியை பரஞ்சோதியார் தம் திருவிளையாடலில் உக்கிரபாண்டியன் எனக் கூறி மிகவும் பாராட்டினர் போலும்.

கி. பி. 5-ம், 6-ம் நூற்றாண்டுகளில் பகைவர் மிகுந்தமையால் பாண்டியர் வலி குன்றினர். அக்காலத்தில் களப்பிரர் தமிழ்நாட்டின்மீது படையெடுத்துச் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரையும் வென்று சிறிதுகாலம் தமிழ் நாட்டை ஆண்டனர் என வேள்விக்குடிச்சாசனத்தாலும் சின்னமனூர்ச் சாசனத்தாலும் கல்வெட்டுக்களாலும் பெரிய புராணம் என்னும் திருதொண்டர் புராணத்தாலும் தெரிகின்றது. கி. பி. 7-ம் நூற்றாண்டில் கடுங்கோன் களப்பிரரைக் கலைத்தடித்துப் பாண்டியவரசை நிலைநாட்டினன். கடுங்கோனுடைய குலத்துதித்தோர் வரலாறு செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் இனிது புலப்படுகின்றது.

இக்களப்பிரர் துங்கபத்திரை நதிக்கு வடபால் இருந்த கருநாடரே. கிருஷ்ணாநதியும் துங்கபத்திரை நதியும் பாயும் நாடாகிய கன்னடதேயம் கரியபூமியாகலின் கருநாடகம் எனப்படும். இக் கருநாடர் சைனமதத்தைத் தழுவினர் என்பது புராணங்களால் புலப்படுகின்றது.

கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வாறு
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்டேர்
சேனைக் கடலங் கொடுதென்றிசை நோக்கி வந்தான்.

வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பி
சந்தப் பொதியிற் றமிழ்நாடுடை மன்னன் வீரஞ்
சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்து மாற்றால்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல் கொண்டான்.

தாழுஞ் சமண்கையர் தவத்தை மெய்யென்று சார்ந்து
வீழுங் கொடியோனது வன்றியும் வெய்ய முன்னைச்
சூழும் வினையால் அரவஞ் சுடர்த் திங்களோடும்
வாழும் சடையா னடியாரையும் வன்மை செய்வான்.

## பெரியபுராணம்—மூர்த்திபுராணம்

துன்னு சேனையிற் றுளங்கிய வொரு கருநாட
டன்ன னன்னாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்ட மண்கையர் கைவிழுந்து
முன்ன நீடிய வைதிக முறையையு மொழிந்தான்.

*—வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம்.*

# 2-ம் பாடம் பல்லவர்

## பல்லவர் குடிவழி

பாபதேவர்
|
ஸ்கந்தவர்மன்
|
புத்தவர்மன்
|
புத்தயங்குரன்
|
விஷ்ணுகோபன்
|
ஸ்கந்தவர்மன்
|
குமாரவிஷ்ணு I

- புத்தவர்மன்
  - குமாரவிஷ்ணு II
- ஸ்கந்தவர்மன்
  - வீரவர்மன்
  - ஸ்கந்தவர்மன்
    - சிங்கவர்மன்
      - ஸ்கந்தவர்மன்
      - நந்திவர்மன் I
    - விஷ்ணுகோபன்
      - சிம்மவர்மன்
      - விஷ்ணுகோபன்
      - சிம்மவர்மன்
        - சிம்ஹவிஷ்ணு
          - 600 மகேந்திரவர்மன் I
          - 640 நரசிம்மவர்மன் I
          - மகேந்திரவர்மன் II
          - பரமேச்சுரவர்மன் I
          - நரசிங்கவர்மன் II
          - பரமேச்சுரவர்மன் II
        - பீமவர்மன்
          - புத்தவர்மன்
          - ஆதித்தியவர்மன்
          - கோவிந்தவர்மன்
          - இரணியவர்மன்
          - நந்திவர்மன் II
          - தந்திவர்மன்
          - நந்திவர்மன் III
          - நிருபதுங்கன்
          - —கி. பி. 850 அபராஜிதன்

பல்லவர்கள் என்ன குலத்தினர் எனத் தெரிகின்றிலது. பாண்டியமன்னன் கடுங்கோன் களப்பிரரோடு பொருது அவர் களைப் பாண்டி நாட்டிலிருந்து துரத்திய காலத்தில், பல்லவர் ஓர் தமிழரசை நாட்டி யிருந்தனர். பல்லவருடைய அரசு 5-ம் நூற்றுண்டுமுதல் 9-ம் நூற்றுண்டுவரையும் ஓர் வல்லரசாக இருந்தது. பல்லவர்கள் சோழரோடு போர்புரிந்து வெற்றி யடைந்தனர். பல்லவருடைய தலைநகர் காஞ்சிமாநகரே. கந்த புராணம் இயம்பிய கச்சியப்ப சிவாசாரியர் காஞ்சிபுரம் மாட மாளிகைகளாலும் கோயில்களாலும் சிறந்ததெனப் புகழ்ந்திருக் கின்றனர். கி. பி. 7-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் சீன யாத் திரிகன் யுவான்சங் என்பவன் பௌத்த நூல்களை ஆராய்தற் கென இந்து நாடுகளைக் காணியவந்தான். அவன் காஞ்சியைத் தரிசித்து அவண் 10,000 புத்த துறவிகள் இருந்தனர் என எழுதி னன். காஞ்சியிலிருந்த புத்தகோயில்கள் பின்பு இந்துக்கோயில்க ளாயின. பல்லவர்கள் கற்கோவில்கள் கட்டுவித்து சிற்பம் ஓவி யம் முதலிய கலைகளையும் தமிழ் நாகரிகத்தையும் வளர்த்தனர் எனலாம்.

கி. பி. 6-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் மகேந்திரவர்மன் என்னும் வேந்தன் காஞ்சிபுரத்தில் அரசாண்டான். அவன் ஆண்டகாலத்தில் திருநாவுக்கரசர் ஜைனமதத்தைத் தழுவித் தருமசேனர் என்னும் பெயர்பூண்டு சமூகசேவை பல செய்திருந்தனர். திருநாவுக்கரசர் இருந்த திருமுனைப்பாடி பாடலிபுத்திரம் திருவதிகை வீரட்டானம் முதலிய இடங்களில் பல்லவருடைய ஆணைசென்றது. பின்பு திருநாவுக்கரசர் சைவ மதத்தைத் தழுவினராக, அமணர்கள் மிகவும் வெகுண்டனர். அமணருடைய தூண்டுதலால் குணபரன் மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்டும் கல்லுடன் கட்டிக் கடலில் போட்டும் பலவாறு துன்புறுத்தினன். மகேந்திரன் பின்பு திருநாவுக்கரசர் செய்த அற்புதங்களைக் கேள்வி யுற்றுச் சைனமதத்தை வெறுத்துச் சைவசமயத்தைத் தழுவி னன். அவன் குணபரேச்சுரம் என்னும் சைவக் கோயிலும் மகேந்திரவாடி என்னும் வைஷ்ணவ கோயிலும் கட்டினன். இம் மகேந்திரனுக்குப்பின்பு அரசாண்ட நரசிங்கன் சிவபக்த

ளுகத் துலங்கினுன். பல்லவர்கள் சிவபக்தி மிகுந்தவராயினும் திருமாலேயும் வழிபட்டனர்.

நரசிம்மனுடைய காலத்தில் பல்லவர்க்கும் சளுக்கியர்க்கும் இடையில் பகைமூண்டது. சளுக்கியர் தலைநகர் வாதாபியை ஹீயன்சங் தரிசித்து அது புகழ்பெற்ற நகரமெனவும் சளுக்கிய வேந்தன் புலிகேசி II மிகவும் பராக்கிரமசாலிஎனவும் குறிப்பிட்டான். பல்லவர் சளுக்கியரை வென்றனர் என்பது பெரிய புராணத்தால் புலப்படுகின்றது.

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத்துணை நெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னணவெண்ணில கவர்ந்தே யிகலரசன் முற்கொணர்ந்தார்.

—சிறுத்தொண்டர் புராணம்.

சிறுத்தொண்ட நாயனுர் என்னும் பரஞ்சோதியார் காஞ்சி மாநகரில் (640-ல்) அரசுசெலுத்திய நரசிம்மவர்மனுடைய படைத்தலைவனுகச் சேவித்தார். அக்காலத்தில் துங்கபத்திரைக்கு அப்பாலுள்ள சளுக்கிய நாட்டில் வாதாபி என்னும் தலைநகரில் அரசு செலுத்திய இரண்டாம் புலிகேசி என்பான் வல்லரசனுகத் திகழ்ந்தான். அவன் ஹருஷவர்த்தனனை வென்று நருமதையாற்றுக்கு அப்பால் நிறுத்தியிருந்தனன். பரஞ்சோதியர் கி. பி. 642 ல் புலிகேசியை வென்று வாதாபியை நூறினுர். சிறுத்தொண்டர் அதன்பின் அமைச்சுப் பதவியைத் துறந்து திருச்செங்காட்டில் சிவதொண்டு செய்திருந்தனர். 655-ல் புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன் கிருஷ்ணுநதிக்கு வடபால் கல்யாண புரத்தைத் தன் தலைநகராக்கி யிருந்தான்.

### காஞ்சிமாநகர்

வாதாபிப்போர் நடந்த காலத்தில் ஈயன்சங் (ஹீயன்சுவாங்) காஞ்சிநகரில் தங்கிப் பௌத்த நூல்களை ஆராய்ந்தான். ஈயன் சங் இலங்கையில் உண்ணுட்டுக் கலகம் நிகழ்ந்தமையால் இலங்கையைத் தரிசிக்கவில்லை. ஈயன்சங் பல்லவரைத் தமிழ்வேந்தரெனவே குறிப்பிட்டான். அவன் காஞ்சி பல்லவருடைய தலை

நகரெனவும், நாடு செழிப்பானதெனவும், அந் நாட்டவராகிய தமிழர் அஞ்சா நெஞ்சினரெனவும், சுத்த மனமுடையவரென வும், பொதுநலங் கருதுபவரெனவும், கல்வி கற்பதில் பேரவா வுடையவரெனவும் புகழ்ந்துரைத்தனன். ஈயன்சங் தன் வர லாற்றில் ஒன்றும் புனைந்துரைக்கவில்லை என்பது சரித்திரவல் லோர் யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. இது நிற்க, காஞ்சிமாநகர் முருகவேளின் கோயிலுக்குமாத்திரம் புகழ்பெற்றதன்று. அதன் தெருவீதிகள் அகலமாகச் சுகாதாரமுறை யுணர்ந்தோரால் அமைக்கப்பெற்றவை. அதன் கோபுரங்கள் அருந்தொழில் வாய்ந்து அழகுத் தெய்வத்திற்கு ஓர் உறைவிடமாக இருந்தவை எனலாம். பல்லவருடைய இராச்சியத்தில் புத்தருடைய விகா ரங்கள் பல இருந்தன. அம் மடங்களில் 10,000 பௌத்தர் வசித்தனராம். காஞ்சியில் அமணரும் பெருந்தொகையினர் இருந்தனர். அப் பௌத்தப் பள்ளிகளையும் ஆசிவகப் பள்ளி களையும் இந்துக்கள் சைவ வைஷ்ணவ மடங்களாக்கினர். இந் துக் கோயிலாகிய காமாட்சி கோயிலில் பௌத்தச் சிலைகள் எடுக்கப்பட்டன. ஆகையால் அது முன்பு பௌத்த சைத்திய மாக இருந்ததெனக் கருதப்படும். பல்லவமன்னன் நரசிங்கவர் மன் மாமல்லபுரத்தை நிறுவி ஏழு கோபுரங்கள் குடைவித் தான். அக் குடைவரைகளில் இலக்கியக் கதைகள் சித்திரிக் கப்பட்டன. அவற்றுள் அருச்சுனன் தபம் மிக அழகாக வரு ணிக்கப்பட்டிருக்கிறது. இச் சித்திரங்கள் தமிழரின் கலை வன் மைக்குச் சான்றாக இருக்கின்றன.

---

# 3-ம் பாடம் பாண்டியவேந்தர்

## பாண்டியர் வம்சம்

கடுங்கோன்
|
ஆதிராஜமாறவர்மன்
|
செழியன் சேந்தன்
|
மாறவர்மன் அரிகேசரி
|
கோச்சடையன் இரணதீரன்
|
இராசசிங்கன் I
|
சடிலன் நெடுஞ்சடையன்
765—(வேள்விக்குடிச்சாசனம்அளித்தவன்)
|
815 ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன்
|
வரகுணன் II — வீரநாராயணன்
|
~~இராசசிங்கன் II~~
(சின்னமன்னூர்ச்சாசனம் அளித்தவன்)

சென்னை சிலாசாசன பரிசோதகர் வெளியிட்ட அறிக்கை:

## பாண்டிய ஆழிவேந்தர்

### ஆழிவேந்தன் அரிகேசரி 670—710

கடுங்கோன்குலத்துதித்தோனுகிய அரிகேசரி மாறவர்மன் பராங்குசன் நெல்வேலிப்போரில் வில்லவரையும் பல்லவரையும் வென்றான்; தன்னுட்டுப் பகைவரையும் அடக்கினான்; சேரனை உழிஞப்போரில் வென்று உயிரோடு பிடித்து வெற்றிவிழாக் கொண்டாடி யாகஞ்செய்தான்; பின்பு பாண்டியன் சோழனுடைய நாடுகளையும் கைப்பற்றினான். இப் பாண்டியன் கூன்பாண்டியனுதல்வேண்டும். திருஞானசம்பந்தர் சமணரை வாதில் வென்று பாண்டியன் சுரந் தீர்த்துச் சைவசமயத்தைத் தழுவப்பண்ணினார். பல்லவருக்குச் சோழர் அஞ்சினராதலின்

சோழர் பாண்டியரின் நட்பைப் பெற விழைந்தனர். சோழ மன்னன் மகள் மங்கையர்க்கரசியைப் பாண்டியன் மணமுடித்திருந்தனன்.

## கோச்சடையன் 710—749

அரிகேசரியின் மகன் கோச்சடையன் என்னும் இரண தீரன் போர்ப்பிரியன். அவன் அயலாராகிய சேர சோழரை வென்று வானவன் செம்பியன் என்னும் பட்டப் பெயர்களைப் பெற்றான். கொங்குவேளிரை வென்று கொங்கர் கோமான் என்னும் பெயரையும் பெற்றான். அவன் கருநாடரோடும் மரதரோடும் அமர்புரிந்து வென்றியடைந்தான். பின்பு வேள் ஆய் என்பவனை மருதூர்ப் போரில் புடைத்துத் திறைபெற்றான்.

## இராசசிங்கன் 749

கோச்சடையன் மகன் மாறவர்மன் இராசசிங்கன் கொங்கர் பகையடக்கிப் பல்லவரையும் முதுகிடச் செய்தான். குழும்பூரில் பல்லவரைப் புடைத்து எண்ணிறந்த யானைகளும் குதிரைகளும் பிடித்தான். இப்பாண்டியன் பல்லவன் பரமேஸ்வரனுடைய கட்சியைச் சார்ந்து பல்லவ மன்னன் நந்திவர்மனை நந்திக் கிராமத்திலே சூழ்ந்து நின்றான் பல்லவர் தானைத் தலைவன் உதயசந்திரன் பாண்டியரைக் கலைத்துப் புறங்கண்டான். இராசசிங்கன் மழவக் கொங்கரை வென்று மழவக் குமரியை மணந்தான். பின்பு அவன் கொங்கர் குலத்தினரோடு நட்பாகிச் சளுக்கிய மன்னன் வல்லவனோடு பொருது வென்றான். இவ்வல்லவன் 747-ல் அரசுபுரிந்த இரண்டாம் கீர்த்திவர்மன் எனத் துணியப்படும். கீர்த்தி வர்மன் தான் சேர சோழ பாண்டியர்களை வென்றான் என எழுதினன்.

## பராந்தக நெடுஞ்சடையன் 765—815

இராசசிங்கன் மகன் பராந்தக நெடுஞ்சடையன் வேந்தனானான். அவன் தாய் மழவவேந்தன் மகள். அவன் சதிலன் எனவும் பெயர்பெற்றான். அவன்தான் வேள்விக் குடிச் சாசனம் அளித்தவன். அவனை வரகுணன் என அழைத்தலும் உண்டு. அவன் தன் மூன்றாம் ஆட்சி யாண்டுத் தொடக்கம் 43 ஆண்டுகள் கல்வெட்டுக்கள் எழுதினான். அவன் ஆண்டகாலம்

765 முதல் 815 வரையும் எனத் துணியப்படும். அவன் காவிரிக் கரையிலே பெண்ணுகடத்திலே பல்லவரைப் புடைத்தான். அவன் குறுநில மன்னர் பலர் வெள்ஆய் என்பவனின் தலைமையில் எழுந்தனராக, அவர்களின் பகைமையை அடக்கினுன். அமைச்சன் மதுரகவி நெடுஞ்சடையனுக்குக் கங்கமன்னனுடைய புதல்வியை மணம் பேசினன். அவன் ஆனை மலையில் விஷ்ணு தேவருக்கு ஆலயம் ஒன்று கட்டுவித்து நரசிங்கரை வழிபட்டான். மதுரகவி மரித்தபின் அவனுடைய சகோதரன் மகன் மாறன் எயினன் மந்திரியானுன். அவனுடைய சுற்றத்தார் பலர் அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றனர். இவர்கள் துணையுடன் செங்கோலோச்சிய நெடுஞ்சடையன் வரகுணன் குறுநில மன்னன் அதிகனேடு புகழியூரில் பொருதான். அதிகன் சேரருடைய துணையும் பல்லவருடைய துணையும் பெற்றபோதிலும் தோல்வியடைந்தான். நெடுஞ்சடையன் திருமாலுக்குக் கோட்டம் நிறுவி பூசைக்கு வேண்டிய பொருளும் அளித்தான். அவன் குமாரக் கடவுளுக்கும் ஓர் கோயில் கட்டுவித்தான். நெடுஞ் சடையன் பாண்டியருடைய ஆட்சியை நாலுபக்கமும் நாட்டினுன் எனலாம். அவன் விழிஞம் என்னும் அரணை எறிந்து, தஞ்சை கொடுமுடி என்னும் நாடுகளைப் பிடித்து, ஆண்டு பெரிய நேமிவேந்தனுனுன்.

## ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் 815 — 862

நெடுஞ்சடையன் மகன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லவன் 815 முதல் 862 வரையும் ஆண்டான். அவன் தன் குடைக்கீழ் உலகுமுழுவதையும் ஆண்டனன் எனச் சாசனங்கள் உரைக்கின்றன. அவன் சிங்கள மன்னனை இலங்கையிலும், பல்லவனைக் குனூரிலும் சளுக்கியனை விழிஞத்திலும் வென்றுன். மேலும் கங்கர் பல்லவர் சோழர் கலிங்கர் மகதர் என்னும் யாவரையும் குடமூக்கென்னும் கும்பகோணத்தில் வென்று பராக்கிரம கோலாகலன் எனப் பெயர்பெற்றுன். பாண்டியர் இலங்கை மன்னன் முதலாம் சேனனை வென்று கலைக்க, அவன் சேர நாட்டில் ஒளித்தான். இத்தோல்வியை மறைத்தற்கு மகாவம்சம் இரண்டாவது சேனன் பாண்டியனுக்கு எதிராக மாயபாண்டியனுக்கு உதவிபுரிந்து பாண்டியனை மதுரையில் முற்றுகையிட்டான் எனக் கூறுகிற்கும். இம் மாயபாண்டியன் வெற்றி

யடைந்து அரசுபுரிந்தான் என்பது ஐயம். மாயபாண்டியன் என ஒருவன் இருக்கவில்லை யெனவும் கருதப்படுகிறது. ஸ்ரீமாறனைப் பல்லவன் நந்திவர்மன் நிருபதுங்கன் காவிரிக்கரையில் புடைத்தானாயினும், பாண்டியரின் வலி குன்றியதன்று.

## வரகுணவர்மன் II. 862—880.

ஸ்ரீமாறன்மகன் வரகுணவர்மன் அரசுகட்டிலேறினன். வரகுணவர்மன் திருப்புயப்போரிலே கங்கமன்னன் முதலாம் பிருதுவிபதியை வென்றான். பிருதுவிபதி போரில் மடிந்தான். சோழரும் பல்லவரும் நட்பாகிப் பாண்டியரோடு பகைத்தனர். சோழர்வேந்தன் விஜயலாயன்மகன் ஆதித்தியன் தஞ்சையைப் பாண்டியருடைய துணைவராகிய முத்தரையரிடம் பறித்தான். பல்லவ மன்னன் அபராஜித்தனும் கங்கமன்னன் இரண்டாம் பிருதுவிபதியும் பாண்டியரோடு பொருது தோல்வியடைந்தனர். மணிவாசகர் வரகுணனுடைய அமைச்சராயிருந்தனர் போலும்.

## வீரநாராயணன் 880—900.

வரகுணனுடைய தம்பி ஸ்ரீபராந்தகன் வீரநாராயணன் கி. பி. 880 அளவில் அரசபதவியைப் பெற்றான். வீரநாராயணன் தன் எதிரி உக்கிரனைத் தனிப்போரில் வென்று பிணித்துச் சிறையிட்டான். அவன் கோயிற் பூசைக்குக் கொடையளித்தான். அவனும் அவன் மனைவி ஸ்ரீவானவன் மாதேவியும் திருமாலும் திருமகளும் போல அரண்மனையில் வீற்றிருந்தனராம். இவ் வீரநாராயணன் சோழனைப் பெண்ணாகடத்தில் வென்றான் எனத் தெரிகிறது.

## இராசசிங்கன் 900—920.

வீரநாராயணன் மகன் மாறவர்மன் இராசசிங்கன் முடிபெற்றான். அவன் சமணப் பள்ளிகள் கட்டினான். அவன்தான் சின்னமனூர்ச்சாசனம் அளித்தவன். அவன் சோழமன்னன் பராந்தகனோடு உலப்பிலி மங்கலத்தில் பொருது தோல்வியடைந்தான். பராந்தகசோழன் I. 907-ல் அரசுகட்டிலேறினன். அவன் பாண்டியனை வென்று மதுராந்தகன் என்னும் நாமம் புனைந்தான். பாண்டியன் இராசசிங்கன் சிங்களருடைய துணை

பெற்றுச் சோழரோடு போர்தொடர்ந்து வேலூரில் தோல்வி யடைந்தான். இராசசிங்கன் இலங்கைசென்று ஆங்குத் துணை பெருமையால் முடிகளையும் அணிகலன்களையும் இலங்கையில் வைத்துவிட்டுச் சேரனுடைய அவையில் இருந்தான். பராந்தக சோழன் பாண்டியனுடைய மகுடத்தை எடுத்தற்கு முயன்றான்.

## பெருமுத்தரையர்

பாண்டிய வேந்தருக்குக்கீழ் குறுநில மன்னராக அரசு புரிந்தோருடைய வரலாறு தெரிகின்றிலது. மலைநாடுகளில் குறுநிலமன்னர் பலர் ஆழிவேந்தருடைய ஆணைகேட்டொழு கினர். கடைச்சங்ககாலந்தொட்டுக் குறுநிலமன்னர் சிலகாலம் சுதந்தரமுடையராயும் சிலகாலம் சுதந்தரத்தை இழந்தோராயும் அரசுபுரிந்தனர். அக் குறுநிலமன்னருள் ஒரு கூட்டத்தினர் பெருமுத்தரையர் எனப்பட்டனர். இப் பெருமுத்தரையர் நாலடியார்பாடிய சமணமுனிவர்களை ஆதரித்தனர். இப் பெரு முத்தரையருடைய கல்வெட்டுக்கள் சில கிடைக்கின்றன. திரிசிராப்பள்ளி தஞ்சாவூர் முதலிய நாடுகள் பெருமுத்தரையர் களால் ஆளப்பட்டன. பெருமுத்தரையர் சிலர் பாண்டியரை விரோதித்துப் பல்லவருக்குத் துணைபுரிந்தனர். சடையன் மாற னுடைய காலத்தில் சத்துருபயங்கார முத்தரையனுடைய மனைவி ஒரு நன்கொடை யளித்தாள் எனக் கல்வெட்டுக் கூறு கின்றது. முத்தரையர்சிலர் மாறன் என்னும் பெயரினராகலின் அவர்கள் மாறன் குலத்தினராதல் கூடும்.

> பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
> கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
> பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
> நீரு மமிழ்தாய் விடும்.

> மல்லன் மாஞாலத்து வாழ்பவருள் எல்லாம்
> செல்வ ரெனினும் கொடாதவர்—நல்கூர்ந்தார்
> நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரை யரே
> செல்வரைச் சென்றிரவா தார்.
>
> —நாலடியார்.

## பாண்டியர் அரசியல்

பாண்டிய ஆழிவேந்தர் தமிழ்நாட்டில் தலைமுறை தலை முறையாகச் செங்கோலோச்சி வந்தனர். தேவாரகாலத்துப்

பாண்டியர்கள் யானை குதிரை கால் என்னும் மூவகைத்தானை உடையராய் இருந்தனர். யானைப்படை தொகுத்தற்கும் பயிற்றற்கும் அமைச்சன் ஒருவன் பாத்திரனாக நியமிக்கப்பட்டான். குதிரைகள் பிறதேயத்தோரிடம் வாங்கப்பட்டன. குதிரையேற்றம் பயிற்றுவோரும் வாட்போர் பயிற்றுவோரும் தமிழ் நாடெங்கும் இருந்தனர். படைவீரர் வீரச் செயல்செய்து ஏனாதி காவிதி என்னும் பட்டங்கள் அளிக்கப் பெற்றனர். சாத்தன் நாகனும் விளையங்தொழுகுரனும் ஏனாதிப்பட்டம் பெற்றனரென கழுகுமலைக் கல்வெட்டால் தெரிகிறது. இரணகீர்த்தி என்னும் ஒரு வீரனின் தியாகத்தை வீரக்கல் ஒன்று விளக்குகின்றது.

இனிப் பாண்டியர்கள் தாமே கற்றறிந்தோராகலின், அறிஞரையும் கலைஞரையும் புலவர்களையும் வித்தைவல்லோரையும் பாணரையும் நனிபேணினர். வடமொழிப் புலவர்களும் தண்டமிழ்ப் புலவர்களும் அரசவையில் ஆதரிக்கப்பட்டனர். ஆரியப் பிராமணர்களும் அரசவையில் ஆதரிக்கப்பட்டனர். மகத தேசப் பிராமணர் ஓர் கூட்டமாகப் புறம்பான கிராமத்தில் வதிந்தனர் எனச்சில ஏடுகள் உரைக்கின்றன.

ஆழிவேந்தர் தம் இராச்சியத்தை நாடுகளாகப் பிரித்தனர். நாடு கூற்றங்களாகவும் கூற்றம் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. கிராமம், குடி, மங்கலம், ஊர், வயல் என்பவை ஒரு பொருட்கிளவிகள். கிராமங்களில் சிறுச்சபைகள் கிராமவிஷயங்களைப் பார்த்தன. தானமாகக் கொடுக்கப்படும் ஊர்களை யானைமீது ஏறி எல்லை காட்டுதல் வழக்கம். தானங்கள் அரசருடைய ஏவற்படி செப்பேடுகளில் வரையப்பட்டன. தானங்கள் கோயில்களுக்கும் பிராமணருக்கும் கொடுக்கப்பட்டன. 1400 பொற்காசு கோயிற் செலவுக்கெனப் பதினாறு கிராமங்களுக்கு வரகுணரால் கொடுக்கப்பட்டன. கிராமச்சங்கங்களே கிராமக் கோயில்களைப் பராமரித்தன. நீதிப் பிரமாணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் அறிந்தோர் கிராமச்சபையின் உறுப்பினராயினர். உறுப்பினராகும் உரிமை குடிப்பிறப்பாலும் பொருளுடைமையாலும் பெறப்படும். கிராமச் சங்கத்தினர் வேலைபார்த்தற்குச் சிறுச்சபைகளைத் தெரிந்தனர். கிராமங்களிலுள்ள பெருங்காணியாளர் தம் நிலங்களில் வசிப்போரை வருத்தவில்லை எனத் தெரிகிறது.

# 4-ம் பாடம் சோழர்

## சோழர் வம்சம்

விஜயலாயன்

- ஆதித்தியன்
  - 925 பராந்தகன் வீரநாராயணன்
    - 949 இராசாதித்தியன்
    - கண்டராதித்தன்
      - 969 மதுராந்தகபரகேசரி
    - அரிஞ்சயன்
      - பராந்தகன் பரகேசரி (சுந்தர சோழன்) மணம் வானவன் மாதேவி
        - ஆதித்தியன்
        - இராசராசன் 983—1013
          - கங்கைகொண்ட இராசேந்திரன் 1013—1042
            - இராசாதிராசன்
            - இராசேந்திரன்
              - இராசமகேந்திரன்
              - மகள் மதுராந்தகி மணம் கீழைச்சளுக்கிய இராசேந்திரன் (என்னும்) அபய இராசேந்திரன் குலோத்துங்கன் I 1070—1118
                - சோழகங்கன் வெங்கிராசா
                - மும்முடிச்சோழன் வெங்கிராசா
                - விக்கிரமசோழன் 1118—1135
                  - அநபாய குலோத்துங்கன் II 1135—46
                  - இராசராசன் 1146—1178
                  - இராசாதிராசன் 1178—1186
                  - குலோத்துங்க சோழன் 1186—1216
                  - இராசராசன் 1216—1248
                  - * இராசேந்திரன் 1218—1267
                  - திரிபுவன வீரதேவன் 1331
            - வீரராசேந்திரன்
              - ஆதிராசேந்திரன்

## சோழவரசு

பாண்டியரைப்போல் சோழரும் போர் புரிதலிலும் செங்கோல் செலுத்தலிலும் வாணிகத்தை ஓம்புதலிலும் தமிழ்மொழியையும் சைவ மதத்தையும் வளர்த்தலிலும் தாம் தமிழர் என்பதையும் தேவவம்சத்தினர் என்பதையும் காட்டினர். பாண்டியரைச் சந்திரகுலத்தினரெனவும் சோழரைச் சூரிய குலத்தினரெனவும் புலவர்கள் பாராட்டினார்கள். சோழமன்னருள் மனுநீதிகண்ட சோழன் என ஒருவன் இருந்தான் எனவும் அவன்மகன் தேர்கடாவும்போது பசுக்கன்றென்றைக் கொன்றானெனவும் தாய்ப்பசு அரசவாயிலை அடைந்து மணியை அடித்து முறைவேண்டிற்றெனவும் உடனே அரசன் விசாரணை செய்து தன் மகனைத் தேரால் நெரித்துக் கொன்றான் எனவும் ஒரு கதையுண்டு. இக்கதை சோழர் நீதி தவறாதொழுகினர் என்பதற்கு ஓர் சான்றாகின்றது. பிறிதோர் சோழன் சிபி என்பான் வேடன்வலையிலகப்பட்டு வருந்திய புறா ஒன்றைக் கண்டு இரங்கி அப்புறாவுக்குப் பதிலாகத் தன் மாமிசத்தில் ஒரு துண்டு அரிந்து கொடுத்தான் எனவும் ஓர் கட்டுரை உண்டு. இக்கதை சோழர் சிவகாருண்ணிய முடையராயிருந்து தம் குடிகளைக் காத்தனர் என்பதை நாட்டுகின்றது. இங்ஙனம் நல்லரசாயிருந்த சோழ ராச்சியத்திலும் களப்பிரர் சிறிதுகாலம் கொடுங்கோலோச்சினர். பாண்டியரும் பல்லவரும் சுவாதீனமாயினபின்பும் சோழர் சுவாதீனமின்றியே இருந்தனர். சோழநாடு களப்பிரருடைய ஆட்சி நாடாக இருந்தகாலத்து சோழவரச குடும்பத்தினர் பிறதேசங்களில் அலைந்தனர்.

கி. பி. 879ல் கங்கமன்னன் பிருதுவிபதி I ஸ்ரீ புறம்பயப்போரில் வரகுணபாண்டியனோடும் அபராஜிதபல்லவனோடும் பொருது மாண்டான். அபராஜிதன் பாண்டியரோடும் சளுக்கியரோடும் பொருது இளைத்தானாக, தஞ்சையைப் பிடித்து உறையூரில் ஓர் சிற்றரசை நாட்டியிருந்த சோழமன்னன் விஜலாயன் பல்லவனை அட்டுத் தொண்டை மண்டலத்தில் குடியேற்றங்களை நிறுவினான். அவன்மகன் ஆதித்தியன் கொங்குநாட்டைப் பிடித்தான். 907-ல் பராந்தகசோழன் மதுரையிலும் ஈழத்திலும் அமர் செய்தான். அவன் கங்கமன்னன் அஸ்திமல்லனைத் தன்னை வணங்கச் செய்தான். இங்ஙனம் சோழவரசை அவன் ஓர் வல்லரசாக்கினான்.

சோழர் 7-ம் 8-ம் நூற்றுண்டுகளில் வலிகுன்றியிருந்தனர். 10-ம் நூற்றுண்டுத் தொடக்கம் 12-ம் நூற்றுண்டு ஈறுகச் சோழரே தலையெடுத்தனர். சோழராச்சியம் பெருகப் பாண்டிய ராச்சியம் சுருங்கியது. பாண்டியர் சோழருக்குச் சிறிதுகாலம் திறையளித்தனர். சோழவேந்தர் தம் இளங்கோக்களைப் பாண்டி நாடுகளில் தம் உபராசராக ஏற்படுத்தினர். பாண்டியர் வலி குன்றியபோதிலும் தம் சுவாதீனத்தை நாட்டற்குத் தருணம் பார்த்தே யிருந்தனர். பாண்டியர் ஓயாது போர்புரிந்து தம் சுவாதீனத்தைப் பெற்றதுமன்றிச் சோழருடைய நாடுகளையும் பறித்தனர்.

சோழமன்னர் விஜயலாயனும் ஆதித்தியனும் பல்லவரோடு பொருது வென்றனராயினும் 7-ம் நூற்றுண்டு இறுதியில் பாண்டியரே வல்லரசு நடாத்தினர். பத்தாம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் பராந்தக சோழன் I. இராசசிங்க பாண்டியனைக் கலைத்துப் பாண்டிநாட்டில் தன் புலிக்கொடியை நாட்டினுன். அவன் 3000 களஞ்சுபொன் தண்டமாகப் பெற்றுத் தன்வீரர்க்கு அளித்தானும். சோழனுடைய இவ் வெற்றி குற்றாலக் கல்வெட்டால் தெரிகிறது. 949-ல் இராட்டிரகூடமன்னன் 'கிருஷ்ண III. 'பராந்தகன் வீரநாராயணன்' மகன் 'இராசாதித்தியனைத்' தக்கோலக் களத்தில் கொன்றுன். சோழர் இளைத்தநேரம்பார்த்து வீரபாண்டியன் சோழனைக் கொன்று பாண்டிநாட்டில் சுவாதீன மாயினுன். இவ் வீரபாண்டியனோடு பராந்தகன் பரகேசரி சுந்தரசோழன் சேவூரிலே பொருது தோல்வியடைந்தான். அதன் பின் சுந்தரசோழன் மகன் ஆதித்தியன் வீரபாண்டியனைக் கொன்று சோழராட்சியைப் பின்னரும் பாண்டிநாட்டில் நிலைக்கச் செய்தான். ஆதித்தியனைத் தீவினையாளர் கொன்றனர். அவர்களை சதுர்வேதிமங்கலச்சபை விசாரணைசெய்து தண்டித்தது. அவன்பின் ஆண்ட உத்தமசோழன் தீவினையாளரைத் தூண்டியிருக்கலாம்.

## இராசராசன் 983—1013

இராசராசன் அமரபுஜங்கன் என்னும் பாண்டியனைப் பிடித்து விழிஞம் என்னும் அரணையும் கைப்பற்றினுன். சேரர் பாண்டியர்க்குத் துணைபுரிந்தனர்.

இராசராசனுடைய கல்வெட்டால் அவன் பாண்டிநாட்டை இராசராச மண்டலம் எனப் பெயரிட்டான் எனவும் பாண்டிய குடிகளிடம் அரசிறை பெற்றான் எனவும் அறிகிறோம். அவனுடைய இயற்பெயர் அருள்மொழி வர்மன் என்ப. அவன் தந்தை சுந்தரசோழன் மூன்றாம் கிருஷ்ணனை வென்றான். இராசராசன் இலங்கைமன்னன் மிகுந்தனை வென்று ஈழமண்டலத்தை ஆண்டான். அவன் வடக்கே கங்கரோடும் நொளம்பரோடும் பொருதான். அவனுடைய போர்களில் அவன்மகன் இராசேந்திரனே படைத்தலைமை வகித்தான். இராசேந்திரன் 900,000 படையோடு சென்று சளுக்கியமன்னன் சத்தியாஸ்ரயனைப் புடைத்தான். அவன் கன்னட நாட்டில் பீசபுரம் வரையும் சென்றான். பின்பு கீழைச்சளுக்கியரை அடக்குவான் சென்று வெங்கிநாட்டைக் கைப்பற்றினான். வெங்கிநாட்டு மன்னன் அம்மராசா II. இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணவுக்கு அஞ்சி ஓடினன். வெங்கிநாட்டில் பின்பு வாதப்பன் அரசு புரிந்தான். அவன்பின் இரண்டாம் தைலப்பன் ஆணைசெலுத்தினான். இதுநிற்க இராசேந்திரன் பின்பு ஆந்திரதேச மடைந்து தெலுங்கமன்னன் பீமனைப் பிடித்தான். இராசேந்திரன் கன்னடருடைய தலைநகராகிய வனவாசியைப் பிடித்து நவநிதிகள் எடுத்தான் என்ப. பின்பு சோழர் மேலைச் சளுக்கியர்க்கு அஞ்சிக் கீழைச் சளுக்கியரோடு நட்பாயினர்.

## சோழசளுக்கிய சம்பந்தம்

இராசராச சோழன்

- மகன் இராசேந்திரன் I
  - மகன் இராசேந்திரன் II
    - மகன் இராசமகேந்திரன்
      - மகள் மதுராந்தகி—மணம்—இராசேந்திரன் என்னும் குலோத்துங்க சோழன் I (அபயன்)
  - அம்மங்கதேவி மணம் சளுக்கிய இராசநரேந்திரன்
    - மகன் இராசேந்திரன் என்னும் குலோத்துங்க சோழன் I (அபயன்)
- குந்தவ்வை மணம் கீழைச்சளுக்கிய விமலாதித்தியன்
  - மகன் இரண்டாம் இராசேந்திரன் மணம் சோழமாதேவி
    - விஜயாதித்தியன் VII
      - சந்திரவர்மன் II

இராசராசன் மீனவன்மாதேவி என்னும் பாண்டியகுமாரியை மணந்தனன். இராசராசன் கி. பி. 983 முதல் 1013 வரையும் நேமியுருட்டினன். அவன் சளுக்கியரிடம் வெங்கிநாட்டைப் பறித்தான். அவ் வெற்றியின் ஞாபகசின்னமாக இராசராசேச்சுவரம் என்னும் பெரிய கோயிலைத் தஞ்சையில் கட்டினன். அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்குப் பொற்பூ அளித்தான். அக்கோயிலில் சைவசமய குரவர் நால்வரின் படிமங்களையும் பிரதிட்டை செய்வித்தான். பின்பு இராசராசன் கொல்லம் கலிங்கம் இலங்கை என்னும் நாடுகளைத் தனது ஆட்சிக்குள் கொணர்ந்தான். 1005 அளவில் இராசராசன் போரை நிறுத்தித் தன் மகன் இராசேந்திரனை இளங்கோவாக்கி ஆறியிருந்தான். இராசராசன் தன் மகள் குந்தவ்வையை கீழைச் சளுக்கிய விமலாதித்தியனுக்கு மணமுடித்துக் கொடுத்து நட்பா யிருந்தான்.

## ஆழிவேந்தன் இராசேந்திரசோழதேவன் 1013—1042

இராசேந்திரன் இளவயசுதொட்டுப் படைக்கலம் பல பயின்று தடக்கையனாகத் துலங்கினன். அவன் இளமையிலேயே படை வகுத்தலிலும் போர் புரிதலிலும் மிக வல்லுநனாகத் திகழ்ந்தான். அவன் சேரனுடைய கப்பற் படையை வென்று இலக்கத்தீவுகளிலும் மாலைதீவுகளிலும் புலிக்கொடியை நாட்டினன். 1017ல் இராசேந்திரன் இலங்கையின்மீது படையெடுத்து வென்று பொலநறுவேரையில் உபராசனை நியமித்து அரசியலை நடத்தினன். அவன் தமிழ்நாட்டில் மதுரை திருநெல்வேலி ஒழிந்த ஏனைய பாண்டிநாடுகளைத் தனது ஆட்சிக்குட்படுத்தினன். இராசேந்திரன் தன் கப்பற்படையை ஏவி பேகுநாட்டில் போர் நடத்தி கடாரதேயத்தோரைப் புடைத்தான். ஸ்ரீ விஜயமன்னன் சங்கிரம விஜயதுங்கன் தோல்வியடைந்தான். பேகுநாடு சிறிதுகாலம் சோழருடைய ஆட்சியை ஏற்றது. அங்கு இராசேந்திரனுடைய வெற்றித்தூண் எழுப்பப்பட்டது. அந்தமான்திவுகளும் நக்கவாரத்திவுகளும் சோழருடைய ஆட்சிநாடுகளாயின. இராசேந்திரன் திக்குவிஜயஞ்செய்து அயலோரை எல்லாம் அடக்கியபின் 1028ல் காஞ்சியிலிருந்து போர்முரசறைந்து வடக்குநோக்கி எழுந்து கங்கை

கடந்து அங்கத்தையும் வங்கத்தையும் ஆண்டிருந்த வேந்தன் மகிபாலனையும் அவனுடைய துணையரசராகிய கோவிந்தசந்திரன் தர்மபாலன் என்போரையும் கோசலநாட்டு இரணசூரனையும் வென்று கங்கைகொண்டசோழன் என்னும் பெயர் பெற்றான். அப்பெருவெற்றியை நினைவுகூர்தற்குக் 'கங்கைகொண்டசோழபுர' மென ஒரு நகரைத் திரிசிராப்பள்ளியில் அமைத்தான். அந்நகர் பெரியதோர் கோயிலும் குளமும் உடையது. இராசேந்திரன் பின்னரும் பாண்டியரோடு அமர்புரியவேண்டியதாயிற்று. பாண்டியன் தோல்வியடைந்து பொதியத்தில் ஒளித்தான். இராசேந்திரன் தன் மகனை மதுரையில் உபராசனாக நியமித்தான்.

பாண்டிநாட்டில் ஆண்ட சோழதேசாதிபதிகள் சோழபாண்டியர் என்னும் நாமம் புனைந்து ஆழிவேந்தனுக்குக் கீழ் உபராசராக இருந்தனர். சோழர்கள் இலங்கையைப் பிடித்தனராக இலங்கை மன்னரும் பாண்டியரும் நட்பாயினர். பாண்டியர் சோழரோடு இடைவிடாது பொருது முடிவில் தம் சுதந்திரத்தைப் பெற்றனர்.

இராசேந்திரன் மகன் இராசாதிராசன் கங்கைகொண்டசோழபுரத்தில் அரசாண்டான். 1046ல் அவன் பாண்டியரோடு பொருது தென்னவன் மானாபரணனைக் கொன்று வாகை சூடினன். அத்துடன் அவன் வீரசேரனைப் பிடித்து யானையின்கீழிட்டு உழக்கினன். அவன் பாண்டியர் மூவரையும் வென்றனன். அக்காலத்தில் பாண்டியர் மூவர் சிற்றரசராயிருந்தனர் போலும். அவன் சளுக்கியரோடு கொப்பம் என்னுங் களத்திற் போர் புரிந்து மாண்டான்.

### சளுக்கியச் சோழர்.

11ம் நூற்றாண்டில் சோழர் கீழைச் சளுக்கியரோடு நட்பாயினர். கீழைச்சளுக்கிய மன்னன் (விமலாதித்தியன் VI) சோழவரசகுமாரியை மணமுடித்தான். அவன் சந்ததியார் சோழவரசைப் பெற்றுச் சளுக்கியச்சோழர் எனப்பட்டனர். சளுக்கியச் சோழன் குலோத்துங்கன் 49 ஆண்டு செங்கோலோச்சி வெற்றிவேலனாக விளங்கினன். அவன் குமாரர்

வெங்கிநாட்டில் உபராசராக அரசாண்டனர். மேலைச்சளுக்கியமன்னன் விக்கிரமாதித்தன் VI குலோத்துங்கனோடு பகையாயிருந்தனன். 12-ம் நூற்றாண்டிறுதியில் பாண்டியர் தலைமைக்கச் சோழர் குன்றினர். பின்பு இரு நூற்றாண்டுகள் சளுக்கியச்சோழர் சிற்றரசரா யிருந்தனர்.

## சோழவரசியல் — கிராமச்சங்கம்

9 ம் நூற்றாண்டு தொடக்கம் 13-ம் நூற்றாண்டு வரையும் சோழர் பல கல்வெட்டுகள் பொறித்தனர். பராந்தகனுடைய கல்வெட்டால் கிராமச்சங்கங்களின் முபற்றியும் கிராமக்கூட்டங்கள் செய்யும் வேலைகளும் அவற்றை அரசாங்கத்தோர் மேற்பார்வை செய்யும் முறைகளும் தெளிவாகின்றன. கிராமச் சபைகள் ஆண்டுதோறும் தெரியப்பட்டன. கிராமச்சபை குடிகளிடம் வரி பெற்று அப்பொருளைக் கிராமவேலைகளில் செலவு செய்தது. கிராமக் குளங்களைப் பாழடையாமற் காத்தற்கும் இளமரக் காக்களையும் வெளி முற்றங்களையும் மேற்பார்வை செய்தற்கும் நீதி செலுத்தற்கும் எனச் சிறுச் சபைகள் தெரியப்பட்டன.

கிராமம் பல கொண்டது ஒரு கூற்றம். கூற்றம் பல கொண்டது ஒரு நாடு. நாடு பல கொண்டது ஒரு மண்டலம். சோழமண்டலம் தொண்டைமண்டலம் என்றாற்போல்வன பல கூற்றச் சபைகளையும் அவற்றின்கீழ் பல கிராமச் சபைகளையும் உடையவையாயிருந்தன. இவ்வரசியல்முறை சமதர்மக் குடியரசுக் கொள்கையை அனுசரிக்கும் 20-ம் நூற்றாண்டு ருஷியருடைய அரசியலிலும் சிறந்ததெனச் செப்பலாம்.

## அரசிறையும் கமச்செய்கையும்.

சோழவரசர் ஆறிலொருகடமை பெற்றனர். கிராமச் சபையாரிடம் காணி பெற்றோர் கிராமச்சபைக்கு அரசிறை கொடாது ஈர் ஆண்டு சென்றால் தம் நிலங்களை இழப்பர். அந் நிலங்கள் தரும நிலங்கள். தானியமேனும் காசேனும் அரசிறையாகக் கொடுக்கப்பட்டது. சோழர் தரும நிலங்களை கோயில்களுக்குக் கொடுத்தனர். கோயில்களை நடத்தும் சபையோர் அந்நிலங்களைப் பண்படுத்துவோருக்குக் கொடுத்துக் கிராமவரி பெற்றனர்.

சோழர் பொற்காசுகள் வழங்கினர். சோழர் வெள்ளி நாணயங்கள் அதிகம் அச்சிடவில்லை காலத்துக்குக் காலம் நிலம் அளந்து கணக்கெடுக்கப்பட்டது. கழனிகளுக்கு நீர்ப் பாய்ச்சுதற்குக் குளங்களும் வாய்க்கால்களும் தோண்டப்பட்டன. கங்கை கொண்ட சோழபுரத்துக்கு நீர்ப்பாய்ச்சுதற்குக் கட்டிய குளம் 16 மைல் நீளமானது.

### திருமுறை

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி னன்கினு லியங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினுல்
வண்பெற்ற முறையொன்று நூற்றினுல் வன்றொண்டர்.

ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமோன்று
மோகமேறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்.

வைத்ததற்பின் நம்பிகழல் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களையு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினொன்றாய் பண்ணினரே.

—திருமுறைகண்ட புராணம்.

இவ் வரலாறு உமாபதி சிவாசாரியர் இயற்றிய திருமுறை கண்ட புராணத்தில் கூறப்பட்டுளது.

11-ம் நூற்றாண்டில் அபயன் என்னும் இராசேந்திர குலோத்துங்க சோழவரசனின் ஆஞ்ஞைப்படி நம்பியாண்டார்நம்பி சைவசமயகுரவ ரியற்றிய தேவாரங்கள் என்னும் அருட்பாக்களை ஏழு திருமுறைகளாக வகுத்தனன். பின்பு 12-ம் நூற்றாண்டில் 63 நாயன்மார் வரலாற்றைக் கூறும் பெரிய புராணம் குலோத்துங்கன் II என்னும் அநபாயன் காலத்தில் சேக்கிழாரால் எழுதப்பட்டது. அது பன்னிரண்டாந் திருமுறை எனப்படும். சோழர் பிறமதத்தினரைத் துன்புறுத்த வில்லை. சோழவேந்தரின்கீழ் சிற்றரசனாயிருந்த கொடும்பாளூர்

மன்னன் விக்கிரமகேசரி மாவீரசைவர்க்கும் காளமுகச் சைவர்க்கும் மடம் கட்டிக் கொடுத்து 50 ஆட்களுக்கு உணவு கொடுத்தற்கெனச் சில கிராமங்களின் அரசிறையைக் கொடுத்தனனெனக் கல்வெட்டு ஒன்று உரைக்கின்றது.

### சோழர் கோயில்.

சோழர் கற்கோயில்கள் பல கட்டினர். சிற்பிகளும் ஓவியர்களும் நனிபுரக்கப்பட்டனர். தலைநகராகிய தஞ்சையிலுள்ள கோபுரங்கள் மிக நுட்பமான வேலை வாய்ந்தவை. இராசராச தேவர் கட்டிய இராசராசேச்சுரர் கோயில் மிகப் பெரியது. அக்கோயிலின் புறமதிலில் 343 நந்திகள் நாட்டப்பட்டன. மதிலின் கீழ்ப்பக்கங்களில் பௌத்த சிலைகளும் காணப்படுகின்றன. அக்கோயிலின் கோபுரம் 216 அடி உயரமானது. கோபுரத்தின் முடிக்கல் 25 சதுரவடி எனத் தெரிகிறது. 4 மைல் நீளமான பாதையால் அக்கல் கோபுரத்தின்மீது ஏற்றப்பட்டதாம்.

---

## 5-ம் பாடம்
## சமயக் கிளர்ச்சியும் தமிழ் மறுமலர்ச்சியும்

தமிழருடைய வரலாறு, எழுதப்பெற்றிலதாயினும் தமிழரசர் தமிழ்மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் பொறித்த கல்வெட்டுக்களாலும் குடிகளுக்கு அளித்த சாசனங்களாலும் ஒருவாறு தெளிவாகும். வேள்விக்குடிசாசனம், சின்னமனூர் சாசனம், திருத்தொண்டர்புராணம், வேம்பத்தூரர் திருவிளையாடற்புராணம், முதலியவற்றை ஆராய்ந்தோர் களப்பிரர் என்னும் கருநாடர் கி. பி. 5-ம் நூற்றாண்டிலே துங்கபத்திரைக் கரையிலுள்ள கரிய பூமியிலிருந்துவந்து, தமிழ்நாட்டு மூவேந்தரையும் வென்று, தம்கொற்றத்தைச் சிறிதுகாலம் நாட்டினர் என, விளம்புகின்றனர். கருநாடர் என்போர் கன்னடமொழிபேசும் திராவிடக் கூட்டத்தினராவர். இக் கருநாடருடைய ஆட்சிக் காலத்தில் அரசிய லுலகிலும் சமய வுலகிலும் மொழியுலகிலும் குழப்பம் ஏற்பட்டதெனக் கூறலாம். தமிழர் சுவாதீனம் இழந்தனராக, செந்தமிழ் நிலைகுலைய, வட

மொழியும் தமிழ்மொழியும் கலந்த மணிப்பிரவாள பாஷை பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் ஆதரவு பெற்றது. வடநாடுகளி லிருந்துவந்த பௌத்தரும் சமணரும் தம் மதங் களைப் பரப்பத் தொடங்கினர். கொல்லாமை புலாலுண்ணாமை என்னும் விரதங்களை வற்புறுத்தும் பௌத்த சமயத்தையும் சமணசமயத்தையும் தமிழர் விரும்பித் தழுவினர். புலவர்களும் அரசர்களும் இம்மதங்களுக்கு ஆதரவளித்தனர். கடைச் சங்ககாலத்தில் இயற்றப்பட்ட மணிமேகலையாலும் சிலப் பதிகாரத்தாலும் பௌத்தமும் சமணமும் தமிழ்நாட்டில் மிகவும் ஆதரவு பெற்றன எனப் புலப்படும். சமயநூல் வல் லோர் ஒருங்குகூடித் தம்மதம் மொழிந்து கலகமின்றி வாதித் தல் தமிழ்நாட்டு வழக்கம் என்பது மணிமேகலையால் தெரி கின்றது. மணிமேகலையில் தண்டமிழ்ச்சாத்தனர் புத்தருடைய கொள்கைகளை இனிது விளக்கினர். சிலப்பதிகாரத்தில் முத் தமிழ்முனிவர் இளங்கோவடிகள் ஆருகதத்தை விரித்து விளக் கினர். கி. பி. 7-ம் நூற்றுண்டில் பௌத்தமும் சமணமும் சளுக்கியருடைய தலைநகராகிய வாதாபியிலும் பல்லவருடைய தலைநகராகிய காஞ்சிபுரத்திலும் தழைத்தோங்கியவை எனச் சீனயாத்திரீகன் யுவான்சங் என்பவன் எழுதினன். சமணர்கள் தமிழ் மொழியைப் புரந்தனர் எனக் கூறலாம். வச்சிரநந்தி என்னும் சமணமுனிவர் தமிழ்ச் சங்கம் ஒன்றை மதுரையில் நிறுவினர். சமணமுனிவர்கள் நீதிநூலாகிய நாலடியாரை இயற்றித் தந்தனர். நாலடியாரிலுள்ள இருவெண்பாக்கள் பெருமுத்தரையருடைய செல்வத்தைக் குறிக்கின்றமையால்; நாலடியார் பெருமுத்தரையருடைய காலத்திலேயோ பின்போ இயற்றப்பட்டவையாகும்.

கி. பி. 6-ம் நூற்றுண்டில் தமிழர் களப்பிரரைக் கலைத் துத் தம்சுவாதீனத்தை நாட்டினர். காடவர் என்னும் பல்ல வர் ஓர் அரசைக் காஞ்சிபுரத்தில் நிலைநிறுத்தினர். பாண்டிய மன்னன் கடுங்கோன் கருநாடரைக் கலைத்துப் பாண்டிநாட் டில் தன்னுணையைச் செலுத்தினுன். இங்ஙனம் தமிழ்நாட்டில் செங்கோல் நிலைத்ததாகத் தமிழ்மொழியும் வைதிக சமயமும் புத்துயிர் பெற்றன. கி. பி. 3-ம் நூற்றுண்டு முதல் கி. பி. 6 ம் நூற்றுண்டு ஈருகக் குப்தர்கள் பாரத வருடத்தில்

செங்கோலோச்சிய காலத்திலே சமஸ்கிருத மொழியும் ஆரிய நாகரிகமும் வைதிகசமயமும் தழைத்தோங்கியவை என முன்னர்க் கூறினும். ஆரியர் ஆராய்ந்த கலைகளைத் தமிழரும் தேர்ந்து தெளிந்தனர். கி. பி. 6-ம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 12-ம் நூற்றாண்டு ஈறாகத் தமிழ்மொழியும் சைவசமயமும் வைஷ்ணவ சமயமும் புத்துயிர்பெற்று வளர்ந்தன. தமிழ்நாட்டில் சைவர்களும் வைஷ்ணவர்களும் பக்தி மார்க்கத்தைப் பரப்பினர். அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் சைவசமய குரவர்கள் பாலொடு தேன் கலந்தாற்போலப் பக்தியும் ஞானமும் ததும்பும் அருட்பாக்களை இசைத்தனர். ஆழ்வார்கள் திருவாய்மொழிகளைப் பாடித் திருமாலின் வழிபாட்டைச் சிறப்பித்தனர். சைவசமய குரவர்களும் வைஷ்ணவசமய ஆழ்வார்களும் பௌத்தத்தையும் ஆருகதத்தையும் நாத்திக மதங்களென நனி கண்டித்தனர். நம் சமயகுரவர்கள் சங்க நூல்களையும் வேதங்களையும் ஆகமங்களையும் ஆராய்ந்து தெளிந்து வைதிகசமயம் பொதுவெனவும் சைவம் சிறப்பெனவும் இருசமயங்களும் ஒரு பொருளையே குறிக்கின்றன எனவும் வற்புறுத்தினர். பின்வரும் பழைய செய்யுள்கள் இரண்டு இதை வலியுறுத்துகின்றன.

வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதுந்தமிழ் அதனின் உள்ளுறுநெய் — போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்.

தேவர்குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் மொழியும் முனிமொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

உபநிடதங்களையும் ஆகமங்களையும் கற்றுணர்ந்த திருமூலநாயனார் இரண்டும் ஒரு பொருளையே கூறுகின்றன எனத் திருவாய்மலர்ந்தருளினர். ஆரியமொழி வடவிந்திய நாடுகளிலே கற்றோருடைய பொதுமொழியாக உபயோகிக்கப்பட்டமையால் தமிழர்கள் தம்மொழியைப் பிராகிருதங்களோடு ஒப்பிடாமல் ஆரியத்தோடு சமமாகுமெனக் கூறினர். கண்ணுதற்

பெருங்கடவுள் பாணினிமுனிவருக்கு ஆரியவிலக்கணத்தையும் அகத்தியமாமுனிவருக்கு அருந்தமிழிலக்கணத்தையும் அருளினர் எனப் புராணநூலோர் புனைந்துரைத்தனர். புராணநூலோர் தமிழ் ஆரியத்திலும் சிறந்த தென்பதை மறந்தனர் போலும். இது நிற்க.

சைவசமய நாயன்மார்கள் சாதிவேற்றுமை பாராட்டாமல் சிவனை வழிபடுவோர் யாவரும் ஒப்பாவர் என எண்ணினர். திருத்தொண்டர் புராணம் கூறும் 63 நாயன்மாருள் இழிகுலத்தில் பிறந்தோர் பலர் என அறிவாம். சைவசமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியோருள் அப்பர் என்னும் திருநாவுக்கரசரே சிறந்தோராவர். அவர் வேளாண்குலத்தில் பிறந்தவர். அவருடைய பிள்ளைப்பெயர் மருணீக்கியார் என்பது. அவரை வாகீசர் என அழைத்தலும் உண்டு. திருநாவுக்கரையர் இளமையில் ஆருகதமே சிறந்த மதமெனத் துணிந்து அமண்பள்ளியிலிருந்து அறங்கள் பல செய்தனராகலின், சைனர்கள் அவரைத் தருமசேனர் என அழைத்தனர். திருநாவுக்கரசர் பல்வகைச் சமணநூல்களையும் நன்கு கற்றுப் போதித்திருந்தனர். அவருடைய கல்வியையும் தொண்டையும் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் மிகவும் மெச்சினன். திருநாவுக்கரசர் சூலைநோயால் வருந்தியபின் சைவசமயம் மெய்ச் சமயமெனஎண்ணித் தழுவினர். சமணர் தம்சமயம் குன்றுமென அஞ்சித் திருநாவுக்கரசைத் துன்புறுத்தும்படி மகேந்திரவர்மனைத் தூண்டினர். சமணர்கள் அவரைக் கொல்லும்படி நீற்றறையில் இட்டும் மதயானையை ஏவியும் நஞ்சூட்டியும் கல்லொடு கட்டிக் கடலில் வீழ்த்தியும் அவர் தப்பினர். பல்லவன் இவ்வதிசயங்களைக் கேட்டு அமண்சமயத்தைத் துறந்து சைவசமயத்தைத் தழுவினன். அவன் குணபதீச்சுரம் என்னும் சைவக் கோயிலைக் கட்டினன். திருநாவுக்கரையர் திருவதிகையில் சில காலம் தங்கிப் பின்பு கோயில் தோறுஞ் சென்று திருப்பதிகங்கள் பாடினர். அவர் ஆலயவீதிகளை உழவாரையால் புல்நீக்கி அலகிட்டு வந்தனர். திருஞானசம்பந்தர் கோயில்தொறும் சென்று பதிகம்பாடி வருங்காலத்தில் திருநாவுக்கரசரைச் சந்தித்து மிகவும் அன்புபாராட்டினர். திருஞானசம்பந்தர் கௌணிய கோத்திரத்தில் சிவபாதவிருதயருக்கு மகனாகப் பிறந்தார். அவர்பாடிய

தேவாரங்களை நீலகண்ட யாழ்ப்பாணநாயனார் யாழில் இசைத்தனர். அக்காலத்திலே கூன்பாண்டியன் சுரநோயால் வருந்தினான் எனவும் சமணர் அந்நோயை நீக்க முடியாமல் இருந்தனரெனவும், திருஞானசம்பந்தர் நோயை நீக்கிச் சைவசமயத்தைப் புரக்கும்படி அரசனைத் தூண்டினர் எனவும் சேக்கிழார் திருத்தொண்டர்புராணத்தில் விரித்துரைக்கின்றனர். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் செய்த தொண்டைப் பிற்காலத்தில் சுந்தரமூர்த்திநாயனார் தொடர்ந்தார். அவரை வன்றொண்டர் எனவும் திருவாரூரரெனவும் அழைத்தல் உண்டு. அவர் சேரமான்பெருமாள் நாயனாருடன் சமகாலத்தவர். அவர் நாயன்மார் அறுபத்திருவரைத் திருத்தொண்டத் தொகையில் குறித்தனர். சுந்தரருக்குப் பின் 9-ம் நூற்றாண்டில் வாதவூரடிகள் என்னும் மாணிக்கவாசகர் ஈழத்துப் பௌத்தரை வாதில் வென்று ஊமையாக்கித் திருவாசகத்தை இசைத்துப் பெரிய தொண்டாற்றினர். மாணிக்கவாசகர் சிவன் குருமூர்த்தியாகக் குருந்த மரத்தடியில் வந்து உபதேசஞ்செய்து தம்மை ஆட்கொண்ட வரலாற்றையும் தம்மகத்து நிகழ்ந்த சமயவநுபவங்களையும் நெஞ்சு நெக்கு நெக்கு உருகப் பாடினர். மாணிக்கவாசகர் இரண்டாவது வரகுணவர்மனுடைய அமைச்சனாக இருந்தனர் என ஆராய்ச்சியாளர் கூறுப. பட்டினத்தடிகள் இவ்வரகுணனையும் மாணிக்கவாசகரையும் சுட்டிப் பாடியுள்ளார். இவ்வரகுணன் அபராஜிதன் என்னும் பல்லவனைத் திருப்புறம்பயப் போரில் வென்றான். சைவசமய குரவர் நால்வரும் முறையே சாலோக சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய பதவிகளை அடைந்தனர் எனப் புராணநூலார் கூறுப. நால்வரும் முறையே தாசமார்க்கம் சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்கம் என்னும் வழிகளில் ஒழுகினர் என்ப.

சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டர் தொகையில் நாயன்மார் யாவர் என்பதைக் கூறினர். அவர்காலத்துக்குப்பின் இருந்த நம்பியாண்டார் நம்பி தேவாரங்களைத் தொகுத்து நாயன்மாருடைய வரலாற்றைச் சிறிது விரித்துக் கூறினர். அவர் அபயகுலோத்துங்கன் காலத்தவர். அவருக்குப்பின் இருந்த சேக்கிழார் நாயனார் அநபாயகுலோத்துங்கனுடைய காலத்தவர். அவர் நாயன்மாருடைய சரித்திரத்தை திருத்தொண்டர் புரா

ணத்தில் காவியமாக விரித்துரைத்தனர். மூவர் அருளிய தேவாரங்கள் ஏழு திருமுறையாகவும் திருவாசகம் திருக்கோவை எட்டாம் திருமுறையாகவும் திருவிசைப்பாக்கள் ஒன்பதாம் திருமுறையாகவும் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும் பல சான்றோருடைய பாடல்கள் பதினோராம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டன. பின்பு சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

சங்க காலத்திலே சாங்கியம், நியாயம், வைசேடிகம், யோகம், பூர்வமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என்னும் அறு சமயங்களும் ஆராயப்பட்டன. கி. பி. 9-ம் நூற்றுண்டில் சங்கராச்சாரியர் ஏகான்மவாதத்தைப் பரப்பினர். அதைச் சைவரும் வைஷ்ணவரும் மாயாவாதம் எனக் கண்டித்தனர். தத்துவநூல்களைச் சங்கராச்சாரியரும், இராமாநுசரும் மத்துவரும் ஆராய்ந்தனர். அவர்கள் பதஞ்சலி பிரமசூத்திரத்துக்கும் பாடியங்கள் சமஸ்கிருதமொழியில் எழுதினர். பின்பு மெய்கண்டசாஸ்திரம் என்னும் சைவ சித்தாந்தநூல்கள் கி. பி. 12-ம் நூற்றுண்டில் ஓதப்பட்டன. திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் என்னும் தமிழ்நூல்களின் தெளிவே சுத்தாத்து விதத்தைப் போதிக்கும் மெய்கண்டநூல்கள். சிவஞானபோதத்தை சுவேதவனப்பிள்ளை என்னும் மெய்கண்டதேவரும் அதன் வழிநூலாகிய சித்தியாரை சகலாகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரியரும் அதன் சார்புநூலாகிய சிவப்பிரகாசத்தை மறைஞானசம்பந்தருடைய சிஷ்யர் உமாபதி சிவம் என்போரும் இயற்றினர். பிற்காலத்தில் இச் சந்தான குரவருடைய மதத்தை ஆதீனங்கள் வளர்த்தன. திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞானமுனிவர் திராவிடமாபாடியம் இயற்றினர்.

## இயற்றமிழ் வரலாறு

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் சங்ககாலத்தில் புரக்கப்பட்டவை என்பது ஒருதலை. நாடகத்தமிழ் பிற்காலத்தில் புரப்போரின்றி அழிவெய்தியது. நாடகநூல்களோடு ஆடல் நூல்களும் மறைந்தன. சமணர் நாடகம் நடித்தலையும் பார்த்தலையும் கண்டித்தனர். இசைத்தமிழைச் சைவசமய குர

வர்கள் ஓம்பினர். தேவாரங்கள் பழைய பண்முறைகளுக்கு அமைய இசைக்கப்பட்டவையாகலின், இசைத்தமிழின் பாற் படும். இயற்றமிழ் நூல்களாகிய இலக்கணங்களையும் இலக் கியங்களையும் உரைகளையும் நிகண்டுகளையும் சைவர்களும் வைஷ்ணவர்களும் சைனர்களும் எழுதினர். நாலடியார், சீவக சிந்தாமணி, திருத்தொண்டர் புராணம், சிறுகாப்பியங்கள், கலிங்கத்துப்பரணி, கம்பர் இராமாயணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், நளவெண்பா முதலிய சிறந்த இலக் கியங்கள் அக்காலத்தில் தோன்றின. அக்காலத்திலேயே சங்க நூல்கள் ஆராயப்பட்டு உரைபெற்றன. தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர் தெய்வச்சிலையார் பேராசிரியர் நச்சினார்க்கினியர் சேனாவரையர் என்போர் நல்லுரைகள் எழுதினர். திருக்குற ளுக்குப் பரிமேலழகர் முதலியோர் உரைகள் இயம்பினர். பத்துப் பாட்டு பரிபாடல் புறநானூறு முதலியவையும் உரை எழுதப் பெற்றன. திருக்கோவையார் சீவகசிந்தாமணி என்பவையும் உரைபெற்றன. இக்காலத்தின் முற்பகுதியிலேயே களவிய லுரை எழுதப்பட்டதெனக் கருதப்படும். இக்காலத்திலேயே யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் நன்னூல் முதலிய இலக் கண நூல்களும் இயற்றப்பட்டன. திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி என்னும் நிகண்டுகளும் இக்காலத்திலேயே இயற்றப் பட்டவை.

## தமிழரசர் கோயில்கள்

தமிழருடைய சிறந்த கோயில்கள் யாவை என்பது தேவா ரங்களாலும் புராணங்களாலும் தெளிவாகும். உலகத்தில் கோயில்களாற் சிறந்தது தமிழ்நாடே என யாம் இறுமாப் புடன் கூறலாம். தமிழர் தெய்வபக்தி மிகுந்தோராகலின் பண்டுதொட்டுக் கோயில்கள்கட்டி இறைவனை வழிபட்டனர். ஆதிகாலத்துத் தமிழர் தம் வீரருடைய சின்னமாக அவர்க ளுடைய பெயரும் பீடும் எழுதிய கற்களை நாட்டித் தொழு தனர். தமிழரசர்கள் தில்லை காஞ்சி மதுரை முதலிய இடங்களில் பெரிய கோயில்கள் கட்டினர். பண்டைக் காலத்தில் குன்றங்களும் காடுகளும் ஆற்றங் கரைகளும் கோயில் அமைத்தற்குச் சிறந்த இடங்களெனக் கருதப் பட்டன. திருப்பரங்குன்றம், திருவானைக்கா, திருவையாறு

திருமறைக் காடு முதலிய இடங்களில் கோயில்கள் எழுந்தன. ஆதிகாலத்தில் கோயில்கள் மண்ணால் கட்டப்பட்டு பனையோலையாலும் வைக்கோலாலும் வேயப்பட்டிருக்கலாம். கடைச் சங்க காலத்துக் கோயில்கள் செங்கற்களாலும், கருங் கற்களாலும் கட்டப்பட்டன. சிவன், திருமால், முருகவேள், இந்திரன், சாத்தன் முதலியோர் கோட்டம் பெற்றனர் எனச் சிலப்பதிகாரத்தால் தெரிகின்றது. அக் கோவில்களிலுள்ள படிமங்கள் சுதையாலும் கருங்கல்லாலும் எழுதப்பட்டவை. பௌத்தமும் சமணமும் பரவிய காலத்தில் பௌத்த சைத்தியங்களும் தூபிகளும் விகாரங்களும் அருகன் கோயில்களும், அமண் பள்ளிகளும் எழுந்தன. புத்தருடைய சிலைகள் வெண்கல்லாலும் கருங்கல்லாலும் சுதையாலும் எழுதப்பட்டன. சைவர்கள் சிலை எழுதற்கு இமயத்திலிருந்தும் பொதியத்திலிருந்தும் சிலை கொணர்ந்து கங்கையிலேனும் காவிரியிலேனும் நீர்ப்படை செய்தல் வழக்கம். கடைச்சங்க காலத்தில் தழைத்தோங்கிய சிற்பக் கலை களப்பிரருடைய ஆட்சிக் காலத்தில் மறுபடியும் மலரத் தொடங்கியது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் முருகவேள் கோயிலைக் கருங் கற்களாற் கட்டினர். பாண்டியர்களும் சோழர்களும் தம் மண்டலங்களிற் பெரிய கோயில்கள் எழுப்பினர். சிவனும் திருமாலும் சிறந்த கோயில்கள் பெற்றனர். அக்காலத்தில் தெய்வச் சிலைகள் கல்லாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்டன. தமிழருடைய சிலைகள் இயற்கைப் பொருட்களைப் பார்த்து எழுதப்பட்டவையன்றிப் புலமையால் ஆக்கப்பட்டவையே. தெய்வச் சிலைகள் மெய்ப்பாடு அபிநயம் கதை முதலியவற்றை இனிது காட்டுவன. ஆனந்த நடனம் செய்யும் நடராசருடைய சிலைபோல் தமிழரை ஒழிந்த பிறரால் எழுத முடியாது. பல்லவர், சோழர், பாண்டியர் என்னும் மூவரும் கற்கோயில்கள் கட்டினர். தமிழருடைய சிற்ப முறைகளை இலங்கையிலும் சாவகத்திலும் காணலாம். இலங்கையில் சோழர்கள் சிவன்கோயில்கள் கட்டினர். அவை பொலநறுவையில் பாழாயிருக்கின்றன. சாவகத்தில் அகத்தியமுனிவனுக்கும், சிவனுக்கும் திருமாலுக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. தமிழ்நாட்டில் பிற்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் மிகப் பெரியவை. அவற்

றைக் கண்ணால் விடயிக்கமுடியாது தில்லையிலும் மதுரையிலுமுள்ள கோபுரங்கள் வானுக்கும் அப்பால் எழுகின்றன. அக்கோபுரங்களில் படிமங்கள் சுதையால் செய்யப்பட்டன. தில்லை நடராசர் கோயிலும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலும் பொன்னோடுகளாலும் கற்களாலும் மண்ணோடுகளாலும் வேயப்பட்டன. மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்ட கோயில்களும் அழகிய கோபுரங்கள் பல உடையன. சோழருடைய சிற்பச் சிலைகளின் திறனை ஆராய்வோர் சோழமன்னரால் இலங்கையிலுள்ள பொலநறுவெரையில் கட்டப்பட்ட சிவன் கோயில்களையும் ஆராயலாம்.

---

## 6-ம் பாடம்
## கன்னடர் (கருநாடர்)

கி. பி. 3-ம் நூற்றாண்டு தொடக்கம் 6-ம் நூற்றாண்டு வரையும் கடம்பர் கன்னடதேயத்தில் வல்லரசு செலுத்தினர். அவருடைய தலைநகர் வனவாசி. இவ்வனவாசி அசோகர் காலத்தில் சயந்தி எனப் பெயர் பெற்றிருந்தது. கன்னடநாட்டிலே கடம்பர் 14-ம் நூற்றாண்டு வரையும் அரசுபுரிந்தனர். கன்னடதேயத்தில் ஒரு பகுதியில் கங்கர் குலத்தினர் 2-ம் நூற்றாண்டு தொடக்கம் 11-ம் நூற்றாண்டு ஈறாக ஆண்டனர். கங்கர் சமண்சமயத்தைப் புரந்தனர். 983-ல் சாமுண்டராயன் சமணதேவர் கோமேதகருக்கு 50 அடி உயரமான சிலையொன்று சமைப்பித்தான். கங்கர் குலத்தினர் ஒறியாதேசத்தில் 6-ம் நூற்றாண்டு முதல் 16-ம் நூற்றாண்டு வரையும் இராச்சிய பரிபாலனம் செய்தனர்.

### சளுக்கியர் (கன்னடர்)

குசரத்தில் வதிந்த குடிகள் சிலர் தென்பூமியை நோக்கிப் புலம் பெயர்ந்தனர். அவர்கள் சளுக்கியரெனப் பெயர் பெற்றனர். சளுக்கியர் தாம் அயோத்தியிலிருந்த இராமருடைய குலத்தினரெனக் கூறுதல் தவறு. சளுக்கியருட்சிறந்த புலிகேசி I. என்பவனுடைய தலைநகர் வாதாபி எனப்படும். புலிகேசியின் பேரன் புலிகேசி II. மகாவீரன். அவனுடைய ஆட்

சிக்காலம் கி. பி. 608—642 என்ப. அவன் வடவிந்திய வேந்தன் கருஷவர்த்தனனை வென்று நருமதையாற்றுக்கு அப்பால் நிறுத்தினன். ஈயன்சங் புலிகேசியின் செங்கோலை வியந்து எழுதினுன். புலிகேசி ஆண்டதேயம் மகாராஷ்டிரம் எனப்படும். அத்தேயத்தில் பௌத்தப் பள்ளிகள்பல இருந்தவை எனவும் அவற்றில் 5000 பிக்குகள் இருந்தனரெனவும் ஈயன் சங் எழுதினுன். சளுக்கியர்க்கும் பல்லவர்க்கும் பகைமூண்டது. 642-ல் புலிகேசி II. காஞ்சி புரத்துப் பல்லவவேந்தன் நரசிங்க வர்மனேடு பொருது கொல்லப்பட்டான். சளுக்கியர் அந்நியரென்பதற்கு ஐயமில்லை. சளுக்கியர் இந்து மதத்தைத் தழுவினராயினும் பிற மதங்களுக்கும் ஆதரவளித்தனர்.

## இராஷ்டிரகூடர்

இராஷ்டிரகூடர் தலையெடுத்துச் சளுக்கியரை வென்றனர். இராஷ்டிரகூடர் தென்னுட்டவரே. அவருடைய வேந்தன் கிருஷ்ணு I. என்பான் எல்லா என்னும் குன்றில் சிறந்ததோர் கோயில் கி. பி. 760 ல் கட்டுவித்தான். அக்கோயில் மலையிலிருந்து குடையப்பட்டதாதலின் கைலாசம் எனப் பெயரிடப்பட்டது. இராட்டிரகூட வேந்தருள் அமோகவருஷன் நீடித்த காலம் (815—77) ஆண்டு கீர்த்தி பெற்றிருந்தான். அராபிய வணிகன் சுலைமன் என்பான் அமோகவருஷனை ஆழிவேந்தனெனவும் சீனருடைய ஆழிவேந்தனுக்கும் உரோமருடைய ஆழிவேந்தனுக்கும் நிகராவானெனவும் எண்ணினன். அமோகவருஷனுடைய தேயம் மாயகேதம்' அவன் நிலைப்படையொன்று வைத்திருந்தான். அவன் திகம்பர சமணரைப் புரந்தான். அவன் ஆண்டகாலத்தில் பௌத்தம் குன்றியது.

## சளுக்கிய விக்கிரமாதித்தன் (1076—1126)

கி. பி. 973-ல் சளுக்கிய குலத்தினர் கல்யாணி யென்னும் நகரில் அரசாண்டனர். சளுக்கிய மன்னன் தைலப்பன் II. இராட்டிரகூடரோடு பொருது வென்றுன். இத் தைலப்பன் இராசராசசோழ தேவரோடு பொருது தோல்வியடைந்தான். சோழர் பார்ப்பாரையும் குழந்தைகளையும் பெண்களையும் போர் நீதிக்கு மாருகக் கொன்றனரெனக் கூறப்படும். சோழர்க்குச் சளுக்கியர் மிக அஞ்சினர். 1052-ல் சளுக்கிய மன்னன் முதலாம்

சோமேஸ்வரன் கிருஷ்ணா நதிக்கு அண்மையில் கோடம் என்னும் களத்தில் சோழரைவென்று இராசாதி ராசனையும் கொன்றனன். இதுநிற்க கீழைச் சளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் தன் தமயன் இரண்டாம் சோமேஸ்வரனைப் புடைத்தான் கி. பி. 1076 முதல் 1126 வரையான ஆண்டுகளில் சளுக்கியர் வல்லரசு நடாத்தினர். விக்கிரமாதித்தன் சோழரோடு பொருது காஞ்சிநகரில் தன் கொடியை நாட்டினன். அவனுடைய அவையில் புலவன் வில்கணன் ஆதரிக்கப்பட்டான். வில்கணன் காசுமீர தேயத்தவன். அப் புலவன் தன் புரவலனுடைய வீரத்தையும் வேட்டையாடலையும் இராணியின் சுயம்வரத்தில் வேந்தன் தெரியப்பட்ட வரலாற்றையும் வருணித்துக் காவியம் எழுதினன். விஞ்ஞானேஸ்வரன் என்னும் அரசியல் நீதிவல்லோனும் அரசவையைச் சிறப்பித்தான்.

## வீரசைவர்

13-ம் நூற்றாண்டில் சளுக்கியர் வலிகுன்றிச் சிற்றரசராயினர். பிச்சகாலசூரியன் என்னும் ஒருவன் மன்னனைப் பகைத்தெழுந்து போர்புரிந்து வென்று சிலகாலம் ஆண்டான். 1167-ல் அவன் அரசைத்துறந்தான். அவனுடைய காலத்தில் இலிங்காயதர் என்னும் வீரசைவர் தலையெடுத்தனர். வீரசைவர் இலிங்கத்தை வழிபடுகிறவர்; வேதங்களை உரையெனக் கொள்ளார்; பார்ப்பார் குழந்தைகளைச் சிறுபராயத்தில் மணமுடித்து வைத்தலைக் கண்டித்தனர்; கொழுநரை இழந்த விதவையர் பின்னரும் மணமுடிக்கலாம் என்றனர். பார்ப்பாரையும் அமணரையும் வீரசைவர் மிகவும் வெறுத்தனர்.

## ஒய்சளர் (கன்னடர்) 1200—1400

சளுக்கியர் குன்றத் தேவகிரியாதவரும் துவாரசமுத்திர ஒய்சளரும் தலையெடுத்தனர். ஒய்சளர் குடக்கின் கண்ணுள்ள மலைச்சாரல்களில் வசித்தனர். விஷ்ணு வர்த்தனன் என்னும் ஒய்சள மன்னன் (1130—1140) சளுக்கியருக்குத் திறையளித்திருந்தனன். அவன் சமணரைப் புரந்து தன்னமைச்சன் கங்கராசனை ஏவி நல்ல கோட்டங்களும் கோபுரங்களும் கட்டுவித்தான். அவனுடைய கோபுரங்கள் முக்கோணக் கோபுரங்கள்

போன்றவை. தத்துவநூல் வல்ல இராமாநுசர் இந்துமதத்தை உபதேசித்து, அரசனை இந்து மதத்தினனாக்கினார். அரசன் சமணரை எண்ணெய் ஊற்றும் யந்திரத்தில் இட்டு நெரித்தான் என்பது உண்மையன்று. அக்கதையால் சமணர் சமய வாதத்தில் தோல்வியடைந்தனரெனப் புலப்படும். அரசனுடைய மனைவியருள் ஒருத்தியும் அரசகுமாரிகளும் சமணமுறைப்படியே ஆராதனை செய்தனர். அரசவையில் இராமாநுசர் நன்கு மதிக்கப்பட்டனர்.

இராமாநுசர் வைஷ்ணவர்; தத்துவங்களை நன்கு உணர்ந்தோர்; காஞ்சியில் கல்வி கற்றவர். அவர் ஆதிராசேந்திர சோழருடைய காலத்தில் ஸ்ரீ ரங்கத்திலே வாழ்ந்தனர். சோழன் சைவமதத்தினனாதலின் அவர் மைசூருக்குப் போனார். அரசன் இறந்தபின் ஸ்ரீரங்கத்திற்குத் திரும்பினார். இதுநிற்க ஒய்சள வேந்தன் விஷ்ணுவர்த்தனுடைய பேரன் வீரவல்லாளன் 1191-ல் யாதவரை வென்றான். ஒய்சளர் பின்னர் பாண்டியரோடு பொருது தோல்வியடைந்தனர். 1310-ல் ஒய்சளரை அலாவுடின் கில்ஜியினுடைய படைத்தலைவன் மாலிக்கபூர் அடுத் தொலைத்து அவர்களுடைய தலைநகராகிய துவாரசமுத்திரத்தையும் நூறினன். 1309-ல் யாதவமன்னன் இராமச்சந்திரன் மாலிக்காபூரை அஞ்சி அவனோடு உடன்படிக்கை எழுதினான். 1318-ல் அவனுடைய மருமகன் முகமதியரோடு பகைத்தெழுந்து கொல்லப்பட்டான்.

---

## 7-ம் பாடம்

## பிற்காலப் பாண்டிய நேமிவேந்தர்

### பாண்டியர் ஐவர்

**12-ம்** நூற்றாண்டின் இறுதியில் சோழர் வலிகுன்றினராகப் பாண்டியர் தலையெடுத்தனர். குலோத்துங்க சோழனுடைய காலத்தில் பாண்டியர் ஐவர் ஐந்து இராச்சியங்கள் நடத்தினர் எனத் தெரிகிறது. பராக்கிரமபாண்டியன், வீரபாண்டியன், சதவர்மன், ஸ்ரீவல்லவன், குலசேகரன் என்னும் ஐவரும் தத்தம் நாடுகளில் நீர்ப்பாய்ச்சுதற்கு வாய்க்கால் தோண்டியும்

குளம் தொட்டுக் கமத்தொழிலைக் காத்தும் செங்கோலோச்சினர் எனத் திருப்புத்தூர்க் கல்வெட்டால் புலப்படுகிறது. திருநெல்வேலியிலும் கொற்கையிலும் குலோத்துங்க சோழன் (1185) பொறித்த கல்வெட்டுக்களால் அவன் பாண்டியரோடு பொருது வென்றான் எனவும் பாண்டியர் ஐவரும் புலைஞர் உலாவும் காடுகளில் ஒளித்தாரெனவும் பாண்டிநாட்டில் வெற்றித் தூண்கள் சோழரால் நாட்டப்பட்டன எனவும் முத்துக் குளிக்கும் துறைகளைச் சோழன் கைப்பற்றினனெனவும் முத்தமிழ்வளரும் பொதியமலையில் சோழன் புலி முத்திரையைப் பதித்தான் எனவும் தெரிகிறது. குலோத்துங்கசோழன் தன் வீரருக்கு ஊர்களை அளித்துத் தென்னாட்டெல்லையை வரையறுத்தானெனவும் எழுதப்பட்டுளது.

**பாண்டியர்**

ஐவர் பாண்டியர் 1100
|
மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரமன்
|
சதவர்மன் பராந்தக பாண்டியன்
|
குலசேகரன்—கட்சிப்போர் வீரபாண்டியன்
|
சதவர்மன் குலசேகரன் 1190—1217
|
மாறவர்மன் சுந்தரன் 1217—1238
|
சதவர்மன் குலசேகரன் 1238
|
மாறவர்மன் சுந்தரன் 1239—1254
|
சதவர்மன் சுந்தரன் 1251—1270
|
உபராசன் (சதவர்மன் வீரபாண்டியன்) 1253—1275
|
மாறவர்மன் குலசேகரன் 1275—1296
|
உபராசர் { விக்கிரம பாண்டியன்
சதவர்மன் சுந்தரன்
மாறவர்மன் ஸ்ரீவல்லபன் }

ஐவர் பாண்டியருள் ஸ்ரீவல்லவன் சிறந்தோன் என்ப. அவன் இறந்தபின் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியதேவன் வேந்தனானான். அவன்பின் சத

வர்மன் பராந்தக பாண்டியன் அரசுகட்டி லேறினன். பராந் தகன் சோழரிடம் திறைபெற்றான். அவன் சேரநாட்டுக் குறு நில மன்னன் ஒருவனுடைய மகளை மணம் புரிந்தான். அவன் நீட்டல் முகத்தல் எடுத்தல் என்னும் அளவைக்குரிய அள வைக்கோல்களையும் கலன்களையும் எடைகளையும் பரிசோதித் துக் கயல் முத்திரையிட்டுச் செங்கோலோச்சினன். அவன் சோழரோடு நட்பாகித் தெலுங்கரோடும் கலிங்கரோடும் போர் புரிந்தான். பின்பு கோயில் கட்டித் திருவிளக் கேற்றுதற்கு ஊர்களும் அளித்தான். தைப்பூசத் திருவிழாவுக்கென ஓர் ஊரின் அரசிறையைக் கொடுத்தான்.

## பாண்டியர் கட்சிப்போர்

1160-ல் மாறவர்மன் ஸ்ரீவல்லவன் திருவாங்கூர் மன்னன் வீரராகவனிடம் திறைபெற்றான். மாறவர்மன் திருநெல்வேலி யில் தன்அரண்மனையை நாட்டினன். அவன் மரிக்கப் பாண்டி நாட்டில் கட்சிப்போர் ஆரம்பித்தது என மகாவம்சம் கூறு கின்றது. ஒரு கட்சித் தலைவன் குலசேகரபாண்டியன் பகைக் கட்சித் தலைவன் பராக்கிரம பாண்டியனோடு பொருது மது ரையை முற்றுகை யிட்டான். குலசேகரன் ஸ்ரீவல்லவ னுடைய மகனுதல் கூடும். பராக்கிரம பாண்டியன் இலங் கைப் பராக்கிரமபாகுவிடம் துணைபெற்றான் இலங்காபுரன் என்னும் படைத்தலைவன் இலங்கையினின்றும் வந்தான். சிங் களப்படை இறங்குமுன் குலசேகரன் பராக்கிரமனைக் கொன் றான். இலங்கைவேந்தன் படைத்தலைவனைப் போரைத் தொட ரும்படி ஏவினன். இலங்காபுரன் குலசேகரனோடு பொருது வென்று பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனை மதுரையில் அரசனுக்கினன். குலசேகரன் சோழருடைய துணைபெற்றும் தோல்வி யடைந்தான். சிங்களப் படைத் தலைவன் பாண்டியத் தலைவர் பலருக்குக் காசுகொடுத்து நட் பாக்கிப் படைபெற்றே குலசேகரனைப் புடைத்தன னெனத் தெரிகிறது. இராசாதிராயருடைய கல்வெட்டால் சோழர் தலைவன் பல்லவராயன் இலங்காபுரனைக் கலைத் தடித்துச் சிங்கள வீரரின் தலைகளை அரிந்து மதுரை மதிலில் இட்ட னன் எனவும் குலசேகரனுக்குப் பாண்டிய இராச்சியத்தை அளித்தன னெனவும் தெரிகிறது.

1170-ல் குலசேகர பாண்டியன் இறந்தபின் விக்கிரம பாண்டியன் ஆண்டான். அவனுக்கு எதிராக வீரபாண்டியன் சிங்களவருடைய உதவியோடு போர் முரசறைந்தான். இராசாதிராசசோழர் சிங்களவரையும் வீரபாண்டியனுடைய குமாரரையும் வென்று மதுரையைப் பிடித்து வெற்றித்தூண் நாட்டி வீராபிடேகம் செய்தனர். வீரபாண்டியன் முதுகிட்டோடித் திருவாங்கூரில் மறைந்து இருந்தான்.

சளுக்கியச் சோழன்குலோத்துங்கன் சோழவரசை கி. பி. 1186-ம் ஆண்டு பெற்றான். அவன்பின் அவன் மகன் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவன் சோழவரசுகட்டிலேறினன். சோழர் வலிகுன்ற ஒய்சளர் காஞ்சிபுரத்தைப் பிடித்தனர். குலோத்துங்கன் அவையைக் கம்பர் ஒட்டக்கூத்தர் புகழேந்தி என்னும் புலவர்கள் சிறப்பித்தனர். தமிழ்ப்பெருங் கவி கம்பர் குலோத்துங்கசோழரை ஒருமுறை வெறுத்து அவை விட்டு நீங்கி ஆந்திரவரசன் பிரதாபருத்திரன் I என்பவனுடைய அவையில் தங்கினர். கம்பர் இயற்றிய இராமாயணம் முதனூலினும் சிறந்ததெனப் பாராட்டப்படுகிறது. பிரதாபருத்திரன் வடமொழி தமிழ்மொழி என்பனவற்றைப் பயின்று வித்தியாபூஷணம் என்னும் விருதுப்பெயர் பெற்றுப் புலவர்களைப் புரந்திருந்தான். இவன் குலத்துப் பிரதாபருத்திரன் II 1295-ல் ஓரங்கல்லில் பட்டாபிஷேகம் பெற்று அரசுசெலுத்தி மும்முறை முகமது துக்லாக் என்பவனை வென்றான். நான்காம் போரில் பிரதாபருத்திரன் II தோல்வியடைந்தான். பிரதாபருத்தீயம் என்னும் நூல் வடமொழியில் வித்தியநாதன் என்னும் கவியால் இயற்றப்பட்டது.

### ஆழிவேந்தன் மாறவர்மன் சுந்தரன்

சதவர்மன் குலசேகரன் 1190 முதல் 1217 வரையும் செங்கோலோச்சினன். அவன் மதுரையைத் தன் இராசதானியாக்கினன். சோழரை ஒய்சளர் நெருக்கப் பாண்டியர் வலிமிகுந்தனர். அக்காலத்தில் பாண்டிய வேந்தனுக்குத் திறையளிக்கும் சிற்றரசர்கள் இருந்தனர் எனத் துணியப்படும். மழவராயன், கலிங்கராயன், சயங்கொண்டசோழன் ஸ்ரீவள்ளுவன் என்போர் பாண்டியருடைய ஆதரவில் ஆண்டனர்.

1217-ல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரசனானான். அவன் சோழரோடு பொருது தஞ்சாவூரைப் பிடித்துத் தீக்கொளுவிச் சூறையாடினான். சோழமன்னன் இராசராசன் ஓடியொளிக்கப் பாண்டியன் சோழ மண்டலத்தில் வீராபிடேகம் செய்வித்தனன். பாண்டியன் தில்லையில் நடராசரை வணங்கி நிற்கச் சோழன் விழுந்து நமஸ்காரம்செய்து முடிபெற்றான். இங்ஙனம் சுந்தரபாண்டியன் சோழநாடு கொண்டவனென்னும் விருதுப்பெயர் பெற்றான். சோழன் பின்னர்த் திறையளிக்க மறுத்தானாகச் சுந்தரன் போர் முரசறைந்து சோழநாடுபுக்கு வென்று சோழனையும் அரசியையும் சிறையாக்கி முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிடேகம் செய்வித்தனன். சுந்தரன் கொங்கு நாட்டிலும் தன்னாணையைச் செலுத்தினான். சுந்தரன் தனது நாணயங்களில் சோழநாடு கொண்டவனென்னும் விருதுப் பெயரையும் இலச்சினை யிடுவித்தான். சுந்தரபாண்டியனுடைய அமைச்சன் 'சோழன் குருகுலத்தம்பிரான்' பெருமாளுக்கும் ஈசர்க்கும் கௌரிக்கும் கோட்டங்கள் கட்டினான். இது நிற்கக் குறுநிலமன்னன் கோப்பெருஞ்சிங்கி பகைத்து எழுந்து சோழ ராசராசனைச் சிறையிட்டான். ஒய்சள மன்னன் வீரசிங்கன் அக்குறுநில மன்னனை வென்று இராசராசனை மீட்டு அரசளித்தான். சோழமன்னரும் பாண்டிய மன்னரும் ஒய்சள மன்னரும் விவாக சம்பந்தத்தால் ஒருவரோடொருவர் இனத்தவராயினர். ஒய்சளமன்னன் வீரசிங்கன் தான் சேரசோழ பாண்டியரையும் மரதரையும் காடவரையும் வென்றான் என எழுதினான். பாண்டியர் படைக்கஞ்சியே ஒய்சளர் சோழரோடு நட்பாகிச் சோழராச்சியத்தை அழிவெய்தவிடாது காத்தனர்.

ஆழிவேந்தன் சுந்தரபாண்டியன் இறந்தபின் 1238-ல் சதவர்மன் குலசேகரன் வேந்தனானான். அவன் ஓராண்டு முடியமுன் இறந்தான். மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரசபதவியைப் பெற்றுப் பதினைந்தாண்டு செங்கோல் செலுத்தினன். இவன்தன் மாமன் ஒய்சளமன்னன் வீரசோமேஸ்வரர் என்பவரோடு நட்பாயிருந்தனன். புதுக்கோட்டையில் வைஷ்ணவரும் சைவரும் கலகப்பட்டனராக வீரசோமேஸ்வரனுடைய படைத்தலைவன் அப்பண்ணதண்டநாயகன் இருகட்சியரையும் நட்பாக்கினான்.

## 'பொன்வேய்ந்தபெருமாள்;
## ஆழிவேந்தன் 'சதவர்மன்சுந்தரன்' 1125—1270

ஆழிவேந்தன் சதவர்மன் சுந்தரன் 1251-ல் பாண்டியவரசைப் பெற்றான். அவன் பாண்டிய ராச்சியத்தை வல்லரசாக்கினான். தென்னிந்திய நாடுகள் அவனுடைய ஆட்சியை ஏற்றன. வடக்கே நெல்லூர் கூடப்பா என்னும் நாடுகளிலும் சுந்தரனுடைய ஆணைசென்றது. சோழராயனும் கொங்குராயனும் சேரநாட்டு மன்னனும் பாண்டியனுக்குத் திறையளித்தனர். சுந்தரன் ஓய்சளரைப் புடைத்துப் படைத்தலைவன் சிங்கணைக் கொன்று காஞ்சிநகரில் மீனக்கொடியை நாட்டினான். பின்பு ஓய்சளமன்னன் வீரசோமேஸ்வரனை முதுகிடச்செய்து கண்ணூர்க்கோபம் என்னும் அரணைப் பிடித்தான்.

இவ்வண்ணம் பாண்டியர் கன்னடரை வென்றார் என்பது ஸ்ரீரங்கத்துக் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது. கன்னடர் திறையாக யானைகள் கொடுத்தனர். சுந்தரன் இலங்கையையும் பிடித்தாண்டான். இவ்வெற்றிகளை அளித்த நடராசரைச் சுந்தரன் சிதம்பரத்தில் வணங்கினான். சதவர்மசுந்தரபாண்டியனுக்குக்கீழ் உபராசராக இருந்தவர்கள் இப்போர்களில் துணைபுரிந்தனர். சுந்தரன் எல்லாமண்டலமும் கொண்டவனெனப் புகழ்பெற்றுப் பெரிய ஆழிவேந்தனாகத் திகழ்ந்தான். அவன் பெரிய கோயில்கள் எல்லாவற்றிற்கும் பொருள் கொடுத்தான். திருவாங்கூர் ஆர்க்காடு தஞ்சாவூர் என்னும் நாடுகள் பாண்டியருடைய ஆட்சிநாடுகளாயின. குறுநிலமன்னன் கோப்பெருஞ்சிங்கி பாண்டியருக்குத் திறையளித்தான். பாண்டியன் காஞ்சியி லிருந்த தெலுங்கமன்னன் கந்தகோபாலனைக் கொன்று தன் தம்பியை வேந்தனாக்கினான். அதன்பின் காகாதித்தமன்னன் கணபதியை வென்று நெல்லூரில் வீராபிடேகம் செய்வித்தான். சுந்தரன் தெலுங்கரை முதுகூரில் புடைத்து அவருடைய துணைவராம் ஆரிய மன்னரைக் கலைத்தடித்தான். இவ்வெற்றிக ளெல்லாம் பெற்று 1260-ல் மகாராசாதிராச ஸ்ரீபரமேஸ்வரன் என விருதுப்பெயர் புனைந்திருந்தான். இப்போர்களில் பெற்ற திரவியத்தால் சிதம்பரம் ஸ்ரீரங்கம் முதலிய கோயில்களைப் பொன்னோடுகளால் வேய்ந்

தான். ஸ்ரீரங்க விஷ்ணுவைப் பொன்னால் செய்துவைத்தான். அக்கோயிலில் உணவருந்தும் மண்டபம் ஒன்று கட்டுவித்துப் பொற்பூக்கள் அளித்தான். சித்திரைத் திருவிழாவில் திருமால் திருமகளோடு எழுந்தருளுதற்குப் பொற்கப்பல் செய்வித்தான். முத்துமாலை இரத்தினமுடி பொன்னாற் செய்த கருடன் பொன்னுடை பொன்னாலவட்டம் பொன்னாசனம் பொன்னாயுதங்கள் என்பவை ஸ்ரீரங்கநாதருக்கு அளிக்கப்பட்டன. இங்ஙனம் சுந்தரன் கோயில் பொன்வேய்ந்த பெருமாளெனப் பெயர்பெற்றான். சுந்தரன் புகழ்ப் பிரியனாதலின் இராசசூரியன், எல்லாம் தலையாயினனென்னும், பெயர்களை விரும்பிப் புனைந்து 1270-ல் புகழுலக மடைந்தான்.

சதவர்ம சுந்தர பாண்டியனுடைய வெற்றிகளில் தான் பங்கு பற்றினனெனச் சதவர்மன் வீரபாண்டியன் கல்லில் வரைந்தான். இச் சதவர்மன் வீரபாண்டியன் சுந்தரனுடைய உபராசனாக இருந்தனனெனக் கருதப்படும். இவன் 1253 தொடக்கம் 22 ஆண்டுகள் ஆண்டான். வலிய வடுகருடைய குன்றையும் தான் பிடித்தான் என எழுதினன். அத்துடன் சோழமன்னரையும் ஈழத்துமன்னரையும் காவிக்களத்தில் வென்றான். ஈழத்துமன்னர் இருவரைக் கொன்று படைவீரர் பலரைச் சிறையிட்டுச் சூறையாடினன் திரிகோணமலையிலும் திரிகூடமலையிலும் மீன் கொடியை நாட்டினன். ஈழத்து மன்னனிடம் யானைகள் திறையாகப் பெற்றான். அவன் சாவகமன்னனையும் வென்றிருத்தல் கூடும். அவனுடைய கல்வெட்டுக்களால் கிராமச் சபைகள் வரிபெற்றவை யெனவும் கோயில்களுக்குத் தானஞ் செய்யப்பட்ட நிலங்களில் வரிபெறவில்லை யெனவும் புலப்படும். அளந்து விற்கப்படும் பண்டங்களில் ஓர் அளவைக்கு ஒருகாசு அரசிறை பெற்றுக் கோயில்ஒன்று புதுப்பிக்கப்பட்டதாம். அக் கோயிலைப் புதுப்பித்தற்குப் பதினெண் கிராமங்கள் ஒருங்கு கூடின. அச் சபையில் இலங்கைக் கிராமத்தினரும் உறுப்பினராயிருந்தனர்.

### மாறவர்மன் குலசேகரன்

சதவர்மன் சுந்தரபாண்டியனுடைய ஆட்சிக்காலத்தில் மாறவர்மன் குலசேகரனும் சில நாடுகளை ஆண்டனன். ஆதலின் 1268-ல் சிறிதுகாலம் 3 பாண்டியர்கள் பாண்டிநாட்டில் ஆண்

டனர். மாறவர்மன் குலசேகரன் ஆழிவேந்தனாகிய பின்னரும் உபபாண்டியர் மூவர் இருந்தனர். அவர்கள் விக்கிரம பாண்டியன், சதவர்மசுந்தரன், மாறவர்மன் ஸ்ரீவல்லவன் எனப்படுவர். 13-ம் நூற்றாண்டில் இப் பாண்டியர்கள் ஆண்டகாலத்தில் மார்க்கோபோலோ என்னும் வெனிஸ்நகர வர்த்தகன் தமிழ் நாட்டில் பிரயாணஞ் செய்தான். அவன்காயல் என்னும் துறையை 1288லும் 1293லும் தரிசித்தான். அவனுடைய நூலில் தென்னாடு மலைபார்எனப் பெயர்பெற்றது. அவன் தென்னாட்டைத் தான் தரிசித்தகாலத்தில் பாண்டியர்ஐவர் அரசு புரிந்தனர் என எழுதினான். முகமதிய சரித்திர வாசிரியன் உசாவ் என்பவன் சுந்தரபாண்டியனுடைய மக்கள் மூவர் பாண்டிநாட்டில் ஆண்டனர் என எழுதினான். உபராசர்கள் நாணயம் அச்சிட்டுச் சுவாதீனமாக ஆண்டபோதிலும் பாண்டிய ஆழிவேந்தனுக்கு அமைந்தே அரசியல் நடாத்தினரென மார்க்கோப் போலோ உசாவ் என்னும் இருவரும் உரைத்தனர். குலசேகரனைச் சோனகவாசிரியன் காலேஸ்வார் என எழுதினான்.

குலசேகரதேவர் சயங்கொண்ட சோழபுரத்தைக் கட்டினார். சோழமன்னன் இராசேந்திரன் III. போர்க்கெழுந்து தோல்வியடைந்தான். சோழர்புலி காட்டில் ஆண்டது. குலசேகரன் மலைநாடாகிய கொல்லத்திலும் தன்னாணையைச் செலுத்தினான். சோழமண்டலமும், தொண்டைமண்டலமும், ஈழமண்டலமும், கொங்குநாடும் பாண்டியரின் ஆட்சிநாடுகளாயின. 1284-ல் பராக்கிரமபாகு III. ஆண்டகாலத்தில் பாண்டியர் சிங்களரோடு பொருது வென்றனர் என மகாவம்சம் கூறுகிற்கும். அக்காலத்தில் பாண்டியர் இலங்கையில் அரசுபுரியும்படி ஆரியச் சக்கரவர்த்தி என்னும் ஓர் அமைச்சனை அனுப்பினர். அவன் புத்த சின்னங்களை எடுத்துக் குலசேகரனுக்கு அனுப்பினான். பராக்கிரமபாகு மதுரைசென்று பற்சின்னத்தைப் பாண்டியனிடம் இரந்து பெற்றான். குலசேகரன் தன்னாட்சிக்காலத்தில் ஒருபோதும் சுகவீனமாகப் படுக்கவில்லையெனவும் அந்நியர் அவன் நாட்டின்மீது படையெடுக்கத் துணியவில்லையெனவும் நாடு மலியச் செங்கோலோச்சினனெனவும் உசாவ் எழுதினான். குலசேகரன் புவனேகவீரன் என்னும் பெயரை அணிந்தான். அவனுக்குக்கீழ் அமைந்து மாவலிவாணதிரையர் என்னும் குறுநிலமன்னர் ஆண்டனர்.

ஆழிவேந்தர் குலசேகரதேவர் ஆண்டகாலை குலசேகர னுடைய சகோதரன் சதவர்மன் சுந்தர பாண்டியதேவன் 1276 முதல் 1292 ஈறான காலத்தில் ஆண்டனன். அக் காலத்தில் சைவசித்தாந்தக் குரவர் அருணந்தி சிவாச்சாரியார் மெய்கண்ட தேவர் என்போர் ஆகமங்களை ஆராய்ந்து சிவஞானசித்தியாரை யும், சிவஞானபோதத்தையும் எழுதிச் சுத்தாத்துவித சைவ சித்தாந்த மடங்களை நிறுவி ஞானோபதேசஞ் செய்திருந்தனர். அதுநிற்க மாறவர்மன் விக்கிரம பாண்டியன் வேறொடுவென்றான். அவன் 1296 வரையும் ஆண்டனன். குலசேகரனுடைய இறு திக் காலத்தில் அவனுடைய குமாரர் சதவர்மன் சுந்தர பாண் டியனும் சதவர்மன் வீரபாண்டியனும் உடராசராக அரசு புரிந்தனர்.

---

## 8-ம் பாடம்
## தமிழர் வணிகமும் வாழ்க்கையும்

13-ம் நூற்றாண்டில் அராபியர் தமிழரோடு வணிகம் நடாத்தினர். அராபியர் தமிழ் நாட்டை மலேபார் எனப் பெய ரிட்டனர். மலேபார்க்கரை கொல்லம் தொட்டு தென்குமரிமுனை வரையும் நீண்டு கிடந்தது. தமிழ்நாட்டிலிருந்தே சீனரும் சிந்து தேயத்தினரும் பார்சியரும் தமக்குத் தேவையான பண்டங்களைப் பெற்றனர் என அராபியர் விளம்பினர். தமிழ்நாடே வணிகத் துக்கு மத்திய ஸ்தானமாக இருந்தது. பாண்டிநாட்டில் உள்ள காயல் என்னும் துறை மிகப் புகழ் பெற்றது. பாண்டியன் செங்கோலோச்சி அந்நியரை உபசரித்தனனாதலின், அந்நியர் அவனைக் காணவிரும்பி அரசவையை நாடினர். மேற்கு நாடு களில் இருந்து வரும் கலங்கள் எல்லாம் தாமிரபாணியின் முகத்துவாரத்திலுள்ள காயல் என்னுந் துறையையே நோக்கின. பாண்டியவேந்தர் யுத்தத்திற்குத் தேவையாகும் குதிரைகளை அராபிய வணிகரிடம் பெற்றனர். அராபியர் குதிரைகளைத் தம் நாட்டிலும் பார்சிய நாட்டிலும் பெற்றுக் கலங்களில் ஏற்றிக் கொணர்ந்து காயற்றுறையில் இறக்கினர். பாண்டிநாட்டில் குதிரை வளர்க்கப் பெருமையால் பாண்டியர்பொருள் குதிரை வாங்குதலில் செலவாயினது. ஒரு குதிரை 500 பொற்காசு

(சாகி) பெறும் என மார்க்கோப்போலோ எழுதினன். ஒவ்வொரு ஆண்டும் அராபியர் ஏறக்குறைய 1400 குதிரைகள் கொணர்ந்தனர். குதிரை ஒன்று 220 தினர் (பொற்காசு) பெறுமென உசாவ் எழுதினர். குதிரைகளுக்குப் பச்சைவாளி (யவை) நெல் கொடாமல் வறுத்த நெல்லை இரைகொடுத்தமையாலும், காய்ச்சிய பசுப்பாலை ஊட்டியமையாலும் நாற்பது நாள் கட்டிவைத்துத் தீன் கொடுத்தமையாலும் அவற்றை ஓட்டம் பழக்காமல் சாரிசெய்தமையாலும் அவை மெலிந்து இறந்தன. தமிழருக்குக் குதிரை வளர்க்கத் தெரியாதெனக் கருதப்பட்டது.

## முத்துக் குளித்தல்

இனி முத்துக் குளித்தலைப்பற்றி மார்க்கோப்போலோ எழுதுதலைக் காண்க. முத்துக்குளிப்போர் தம் மரக்கலங்களிலேறி மன்னார்க்கடலில் சித்திரை வைகாசியில் முத்துக் குளிப்பர். வணிகர் பலர் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து செல்வர். முத்துக் குளிக்கும் தொழிலாளர் கூலிபெற்றனர். வணிகர் தம் வருமானத்தில் பத்திலொன்று வேந்தர்க்குக் கொடுப்பர். முத்துக் குளிப்போரைப் பெரிய மீன்கள் அணுகாவண்ணம் காத்தற்கு மாந்திரிகரைக்கொண்டு சென்றனர். மாந்திரிகருக்கு இருபதிலொன்று கொடுத்தல் வழக்கம். மந்திரம் ஒரு பகல் மட்டும்தான் சித்திக்கும். இரவில் மந்திரம் வலியற்றுப்போம். முத்துக்குளிப்போர் மரக்கலங்களிலிருந்து இறங்கிச் சிறுச்சிறு ஓடங்களிற் சென்று முத்துக் குளிக்கத் தொடங்குவர். குளிப்போர் பத்துமுழம் மூழ்கி முத்துச்சிப்பிகளை வாரித் தம் அரையில் கட்டியிருக்கும் பையில் இடுவர். அவர்கள் வெளிவந்து ஆறியபின் பின்னரும் சுழியோடுவர். இவ்வண்ணம் நாள் முழுவதும் குளிப்பர். இம் முத்துக்கள் தாம் உலகு எங்கும் விலைப்படுகின்றன. திறமான முத்துக்கள் வேந்தருக்குரியவையாதலின் வெளிநாடுகளுக்குக் கொண்டுபோகப்படாது எனப் பாண்டியர் விதித்தனர். மார்க்கோப்போலோ பாண்டியருடைய செல்வத்தைப் பின்வருமாறு வருணித்தான். பாண்டியவேந்தர் முத்துமாலையும் இரத்தினமாலையும் அணிதல் வழக்கம். வேந்தனணியும் பட்டுத்தரீயத்திலும் முத்து இழைக்கப்பட்டிருக்கும். 104 முத்துக்களைக் கோத்திருக்கும் மாலையை அணிந்து

104 மந்திரங்களைச் சொல்லி வேந்தன் காலையிலும் மாலையிலும் செபஞ் செய்தனன். வேந்தன் கையிலும் மார்பிலும் முத்துப் பதித்த பொன்னுபரணங்கள் அணிவன். பாண்டியர் பெருந் தொகைதிரவியம் வைத்திருந்தனர். மதுரையில் 120 கோடி பொற்காசுடைய சாலையிருந்ததெனவும் முத்துக் குவியல்களும் இரத்தினக் குவியல்களும் உடைய சாலைகள் இருந்தவை யெனவும் உசாவ் எழுதினன்.

### தமிழர் பழக்க வழக்கம்

அரசவையில் மேன்மக்கள் பலர் அரசனுடைய ஏவலைக் கேட்டு நின்றனர். தென்னனுடைய ஆபத்துதவிகள் என்னும் மெய்காப்பாளர் அரண்மனையைக் காவல் செய்திருந்தனர். தமிழர் மெய்ப்பை யணியாமையால் தமிழ்நாட்டில் தையற் காரர் இல்லை யென்று மார்க்கோபோலோ எழுதினன். ஆடவரும் பெண்டிரும் வறியோராயினும் சரி செல்வர் ஆயினும் சரி ஒரு துண்டு ஆடையே யணிந்தனர். தமிழ்நாட்டில் வசிக்கும் பிராமணருள் சதிசெய்தல் என்னும் தீப்பாயும் வழக்கம் இருந்தது. விதவைகள் விரும்பியே தீப்பாய்ந்தனர். பண்டு தொட்டுக் கைம்மை நோன்பிருத்தல் வேளாளருடைய வழக்க மாக இருந்ததால் தீப்பாய்தல் மிக அருகியே நடந்தது.

ஆவோம்பல் இம்மை வாழ்க்கைக்கு இன்றியமையாத தொன்றுதலாலும், ஆவோம்பல் அவசியம் எனச் சைவசமயம் வற்புறுத்தியதாதலாலும் தமிழர் மாட்டிறைச்சி ஒருபோதும் உண்ணூர்; மாடுகளை ஒருபோதுங் கொல்லார்; என்னை! மாடு களை அவர்கள் தெய்வமெனத் தொழுதனர். மாடுகளைத் தமிழர் வளர்த்து ஆனைந்து என்னும் பால், தயிர், வெண்ணெய், மோர், நெய் என்பவற்றை உண்டு தம்சுகத்தைப் பேணினர். தம்மில்லங்களைச் சாணத்தால் மெழுகினர். குடிகள் மேன்மக் களாயினும் கீழ்மக்களாயினும் நிலத்திலேயே உட்கார்ந்தனர். மண்ணிலிருந்து பிறந்தமையால் மண்ணை இகழாமல் இருத்தல் நன்றென்பர். தமிழர் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தனர் என மார்க்கோப்போலோ புகழ்ந் துரைத்தனன்.

தமிழ் வீரர் தம்முடம்பைக் காக்கும் மெய்ம்மறை யின்றியே வேலுடனும் பரிசத்துடனும் போர் புரிந்தனர். தமிழ்

வீரர் ஓர் உயிரையும் வதை செய்யார். வீரர் பிறதேயத்தின ராகிய அராபியரைக் கொண்டே கொலைசெய்வித்து இறைச்சி பெறுவர். தமிழ் நாட்டினர் காலையிலும் மாலையிலும் நீராடிச் சுத்தமா யிருப்பர். உண்ணும்போது வலக்கையால் உண்பர். இடக்கையால் ஒருபோதும் உண்ணார். ஒவ்வொருவரும் தத் தம் கலங்களிலேயே நீர் பருகுவர். பிறருடைய கலங்களில் நீர் குடித்தல் சுகாதாரமுறை யன்றெனஉணர்ந்தனர். குடிக்கும் போது பாத்திரத்தைத் தமது உதட்டில் வையாமலும் எச்சிற் படுத்தாமலும் குடிப்பர். அந்நியர் குடிக்க விரும்பினால் கையில் நீரை ஏந்திக் குடிக்க வேண்டும். தமிழர் மதுபானம் செய்யவில்லை.

தமிழ் நாட்டில் தீவினையாளர் மிகக் குறைவு. தீவினை யாளரைத் தண்டிப்பதில் அரசாங்கத்தினர் மிக ஊக்கமா யிருந்தனர். கடன் கொடுக்க வேண்டியோர் பலமுறை கேட் டும் கொடாவிட்டால் அத்தகையோரைச் சுற்றியொரு வட்டம் கீறினால் அவர்கள் கடன் கொடுத்தொழிய ஏகலாகாது. தமி ழர் ஒருவனின் முகத்தைப் பார்த்தவுடனேயே அவன் சுத் தனோ கபடனோ என அறியும் வல்லமை உடையராக விருந் தனர். தமிழர் நிமித்தம் பார்த்துச் சொல்வதிலும் வல்லுநர். பிள்ளை பிறந்த உடனேயே நாள் கோள்நிலை என்பவற்றைக் காட்டும் சாதகம் குறித்தல் வழக்கம். தமிழர் எக்கருமம் செய்யினும் நிமித்தமும் நாளும் பார்த்தே செய்வர். குழந்தை களுக்குப் பெயரிடுதல், அன்னம்ஊட்டல், மயிர்மழித்தல், வித்தியாரம்பம்செய்தல் என்றற் றொடக்கத்துக் கருமங்களும் நாட்பார்த்தே செய்யப்பட்டன. மணவிழா, திருவிழா முத லிய விழாக்களும் நல்ல நாட்களிலேயே செய்யப்பட்டன. வயலுழுதல், பிரயாணஞ்செய்தல் முதலியவையும் நல்ல நாளிலேயே தொடங்கப்படும். சில நாட்கள் ஒரு கருமத்துக்கும் கூடாவென விலக்கப்படும்.

ஆண்பிள்ளைகள் 13-ம் வயதெய்தியவுடன் தம் சீவியத்திற் குப் பொருள் தேடவேண்டியவராவர். இளைஞர் பண்டம் மாறிப் பொருளீட்டித் தம் தாய்மாரிடம் கொடுத்து உணவு பெறுவர். தந்தையின் பொருளையுண்ணுதல் தமக்கு மரியாதை யில்லை என எண்ணினர். கோயில்களில் நடிகப் பெண்கள்

ஆடல்செய்து சேவித்தனர். தமிழ்நாட்டினர் நாள் முழுவதும் வெற்றிலை தின்றபடியே யிருப்பர். தாம்பூலம் விரைகளோடே சேர்த்து உண்ணப்பட்டது. வெற்றிலை பாக்கு உண்டு துப்பி நிலத்தை அசுத்தப்படுத்தலை மார்க்கோப்போலோ அருவருத்தனர்.

---

## 9-ம் பாடம் பாண்டியர் அரசியல்

பிற்காலத்துப் பாண்டியர்கள் பண்டைக்காலத்துப் பாண்டியரைப் போலவும் சோழ சேர வேந்தரைப் போலவும் செங்கோலோச்சினர் என்பது மலையிலக்கே. 11-ம் நூற்றாண்டு தொடக்கம் 16-ம் நூற்றாண்டு வரையும் தமிழ்நாட்டில் நிலைத்த செங்கோலின் இயலை ஆராய்ந்து பாண்டியருடைய உண்ணாட்டரசியலை விளம்புவாம். ஆழிவேந்தரால் ஆளப்பட்ட நாடுகளிலும் ஆழிவேந்தருடைய உபராசாக்களால் ஆளப்பட்ட நாடுகளிலும் ஆழிவேந்தருக்குத் திறை கொடுத்த குறுநில மன்னரால் ஆளப்பட்ட நாடுகளிலும் உண்ணாட்டரசியல் ஒரு தன்மையாகவே இருந்தது. கிராமச்சபை, கூற்றச்சபை, அமைச்சர் சபை முதலியவற்றைப் பற்றி முன்னர்க்கூறினோமாதலின் ஈண்டுச் சுருக்கு குடிகளின் உரிமைகளைச் சிறிது தேர்வாம். குடிகளின் காணிகள் உரிமைகள் முதலியவை பெரிய ஏடுகளில் அரசாங்கத்தாரின் கணக்கர்களால் எழுதப்பட்டன. உரிமைகள் பனேலைகளிலும் செப்பேடுகளிலும் எழுதப்பட்டன. கோயில்களுக்கும் குடிகளுக்கும் கொடுக்கப்படும் தானத்தை அரசன் வாய்மொழியாகச் சொல்வான். அரசனுடைய ஏவல்களை அமைச்சர் கேட்டுத் திருமுகங்களில் எழுதிவைப்பர். அரசிறைகள் கடமை, இலச்சினைப்பேறு, பொன்வரி, தரையிறை எனப் பலவாயின. கோயில்களுக்குத் தானம் செய்யப்பட்ட நிலங்களிலும் சில கடமைகள் பெறப்பட்டன. பின்வரும் அரசிறைகள் அக்காலத்தில் பெறப்பட்டன எனக் கூறுப. மா என்பது நூறுகுழி கொண்ட நிலவளவை. அது ஒருவேலியின் இருபதிலொன்று. ஒரு மா என்னும் காணித்துண்டில் நாலு மரக்கால் நெல் அரசிறையாகப் பெறப்படும். இஞ்சி வெற்றிலை வாழை முதலிய தோட்டங்களும் அரசிறை கொடுத்தல் வழக்கம். பதிக்காவல்

செய்வோர் தம் கூலியாகத் தம்கிராமத்தில் அரசிறை பெறுதல் உண்டு. அவ்வரசிறை குடிக்கு ஒருபணம். வயல் நிலத்தின் அரசிறை மாவிற்கு ஒருகலம் நெல். கமுக மரத்திற்கு 16/1; கரும்பு, வெற்றிலைக் கொழுந்து, இஞ்சி, எள், வாழை முதலிய தோட்டங்கள் மாவிற்கு அரசிறை ஐந்துபணம். அரசிறை கொடுத்தலால் குடிகள் வருந்தினரெனக் கூற இடமில்லை. குழப்பக் காலங்களில் சில நாடுகளில் குடிகளை உத்தியோகத்தர் வருத்தியிருக்கலாம். இனி வயல் நிலங்கள் செய்கையின்றி யிருந்தால் அரசிறை கொடுக்க வேண்டியதில்லை. தினை, வரகு, எள், பயறு, உழுந்து, கரும்பு, மஞ்சள், இஞ்சி, செங்கழுநீர், வாழை, வழுதலை, பூசினி, மா, பலா, நாரத்தை, எலுமிச்சை, நெல்லி, இருப்பை முதலியவற்றை யுடைய கமங்கள் அரசிறை இறுத்தன. காடுகெடுத்துப் பயிர்செய்வோர் முதலாண்டு பத்தி லொன்றும், இரண்டாம் ஆண்டு ஒன்பதி லொன்றும், மூன்றுமாண்டு எட்டி லொன்றும், நான்காமாண்டு ஏழிலொன்றும் கொடுத்துப் பின்னர் மூன்றிலொன்று இறுத்தல் வழக்கம். குளக்காவல் செய்வோர் நீர்வாய்க்கால்களையும் அணைகளையும் காவல் செய்வர். இந்நீர் வாய்க்கால்களில் மீன் படுப்போர் அரசிறை கொடுப்பர். கிராமச் சபைகளே கமத் தொழிலை மேற்பார்த்து குடிகளின் உரிமைகளை ஈந்து குடிகளிடம் பெறவேண்டிய இறைகளைப் பெற்று வந்தன.

## நீதி

மக்கட் கொலை செய்வோர் கொல்லப்பட்டனர். அவர்களின் காணிகள் பறிபட்டன. அக் காணிகளைக் கோயிலுக்குத் தானம் அளித்தலும் வழக்கம். அக் காணிகளைக் கிராமச் சபையோரும் அரசாங்கத்தோரும் வௌவமுடியாது. கொலை செய்வோர் கொலைத்தண்டனை பெற்றால் அவர்களின் உரிமைக் காரருக்குக் காணிகள் அளிக்கப்படும். கொலை செய்வோர் எச் சாதியினராயினும் தம் முயிரையும் காணிகளையும் இழப்பர். கிராமச் சங்கங்கள் நீதி விசாரணை செய்தன. அவை பெருந் தீவினைகளை அரசவைக்கு அறிவித்தன.

புதுக்கோட்டைக் கல்வெட்டில் கோயிற் பூசாரிகள் சிலர் பொருள் வௌவினரென எழுதப்பட்டுளது. அவருள் ஒருவன்

தான் ஒரு தச்சனுக்குப் பங்கு கொடுத்தான் எனச் சான்று சொன்னான். அப் பூசாரிகள் தருமாசனம் என்னும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு சிவத்துரோகிகள் எனக்கண்டு தண்டிக்கப் பட்டனர். அப் பூசாரிகள் காய்ச்சிய இரும்பில் கைவைக்கும்படி கற்பிக்கப்பட்டுக் கைவைத்து வெந்தனர். நீதிவிசாரிக்கும் சபையில் தருமசாஸ்திர வல்லோரும் அறிஞரும் உறுப்பினரா யிருந்தனர். பெண்களும் உறுப்பினராகும் உரிமை பெற்றனர். சுந்தர பாண்டியனுடைய ஆட்சிக்காலத்திலே காஞ்சிபுரத்து உத்தர மல்லூரிலே நீதியாயும் சபையிலே பெருங் கருணையாத்தை என்னும் அம்மையார் அங்கத்தினராக இருந்தனரென அறியக்கிடக் கின்றது.

### கிராமக் கோயில்கள்

ஒவ்வொரு கிராமத்திலும் கோயில்கள் இருந்தன. "திருக் கோயில் இல்லாத் திருவில் ஊர்" அடவிகாடெனா எண்ணப் பட்டது. கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் கிராமத்தவ ரால் பண்படுத்தப்பட்டன. பண்படுத்துவோரிடம் கோயிலதி காரிகள் நிலவரி பெற்றனர். கோயில் ஆராதனைக்கு மாத் திரம் உரிய இடமன்று. கோயிலின்றிச் சமூகவாழ்க்கையும் கிராமவாழ்க்கையும் அரசியலும் சீர்பெறா. கிராமத்தோரே கிராமக்கோயில்களை நடாத்தினர். ஓவியம் சிற்பம் இசை நாட கம் ஆடல் பாடல் எல்லாம் கோயிலின் ஆதரவில் வளர்ந்தன. வாசகசாலைகளும் கோயிலில் நிறுவப்பட்டன. வறியோர்க்குத் தானங்களும் கோயிலிலே செய்யப்பட்டன. கோயிற் பூசை செய்வித்தல் திருவிளக் கெரிப்பித்தல் கோயிலைப் புதுப்பித்தல் முதலிய கருமங்களைக் கிராமச்சபைகளே நடத்தின. கோயி லிற் சேவிக்கும் அடியார்கள் ஆடற்பெண்கள் பணியாளர்கள் கிராமச்சபையாரால் ஆதரிக்கப்பட்டனர். கிராமத்தவர் கட்சி பிரிந்து திருவிழா நடத்தும் முறையில் வேற்றுமைப் பட்டுக் கலகம் விளைத்தல் உண்டு. கோயிற் பிரசாதம் அளிக்கும்முறை யிலும் கலகம் விளைதல் உண்டு. இக்கலகக்காரரைக் கோயிலை நடாத்தும்சபை நட்பாக்கினர். கிராமத்தவர் கோயிலுக்குப் போய் வழிபட வேண்டுமெனப் பிரமாணம் விதிக்கப்பட வில்லை. கிராமத்தவர் தம்வீடுகளில் கடவுளைத் தியானித்து வணங்கினர். முகமதியர் தமிழ்நாடு புக்கு அரசியலைக் குழப்பிய

காலங்களில் கிராமவொழுங்குகள் முறை வழுவத் தொடங் கின; தேவராட்டியர் தீநெறியிற் செல்லா நின்றனர்; பூசாரிகள் பொருள் வெளவுதல் குற்றமன்றென எண்ணினர். கோயில்களுக்கு நிலங்கள் அரசராலும் வள்ளல்களாலும் அளிக் கப்பட்டன.

தில்லையீசர் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று விக்கிரம பாண்டீஸ்வரர் கோயிலில் சேவிக்கும் 108 பிராமணருடைய வாழ்க்கைக்கு வேண்டிய வயல்கள் அளிக்கப்பட்டவை எனக் கூறுநிற்கும். மாடுகள் புல்மேய்தற்கு நிலமும் அக்கோயிலுக்கு அளிக்கப்பட்டதாம். அக்கோயிலில் சேவிக்கும் ஓதுவார்க்கும் மருத்துவர்க்கும் எழுத்தாளர்க்கும் கணக்கர்க்கும் முரசினர்க்கும் குயவர்க்கும் இயவர்க்கும் கொல்லர்க்கும் தச்சர்க்கும் தட்டார்க் கும் நாவிதர்க்கும் வண்ணூர்க்கும் பதிகாவலர்க்கும் வாழ்க் கைக்கு வேண்டிய நிலங்கள் கோயிற்சபையாரின் மேற்பார்வை யில் இருந்தன. பண்டுதொட்டுத் தில்லைநடராசர் கோயில் சிறந்திருக்கின்றது. அக்கோயில் தமிழருடைய கலைத்திறனுக் குச் சான்ருக இருக்கின்றது. பல்வேறு திக்கிலிருந்தும் தில்லைக்கு யாத்திரை செய்கின்றனராகலின், கோயிலைச்சுற்றி நகர் எழுந்தது.

## தமிழ் நூல் வரலாறு

கி. பி. பத்தாம் நூற்றுண்டு தொடக்கம் பதின்மூன்ரும் நூற்ருண்டு வரையும் தமிழ்மொழியும் சைவ மதமும் புத்துயிர் பெற்றன என உரைத்தோம். கி. பி. 11-ம் நூற்ருண்டில் சேக் கிழார் திருத்தொண்டர் புராணம் எழுதினுர். பிற்காலத் தமிழர் இயற்றிய புராணங்களுள் திருத்தொண்டர் புராணமும் கச்சி யப்ப சிவாசாரியர் இயற்றிய கந்தபுராணமும் மிகச் சிறந்து மிளிர்கின்றன. கந்தபுராணம் நன்மையும் தீமையும் உலகில் போர்புரிதலை இனிது விளம்புகின்றது. இனிப் பன்னிராம் நூற் ருண்டில் சோழருடைய அவையில் கம்பர் ஒட்டக்கூத்தர் புக ழேந்தியார் ஒளவையார் என்போர் புரக்கப்பட்டனர். பதின் மூன்ரும் நூற்ருண்டு உரைத்தமிழுக்குரிய காலமாயிற்று. சங்க நூல்கள் ஆராயப்பட்டு உரை எழுதப்பெற்றன. இளம்பூரணர் தெய்வச்சிலையார் பேராசிரியர் நச்சினூர்க்கினியர் சேனுவரையர்

என்போர் தொல்காப்பியத்திற்கு உரைகண்டனர். பரிமேலழகர் திருக்குறளுக்கும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கும் நல்லுரை எழுதியுதவினர். இதே காலத்தில் ஒழுக்க நூல்களும் பிள்ளைத்தமிழ்களும் பரணிகளும் உலாக்களும் பள்ளுகளும் கோவைகளும் நல்லிசைப் புலவர்களால் இயம்பப்பட்டன. இதே காலத்தில் பவணந்தி முனிவர் நன்னூல் எழுதினர். இதே காலத்தில் சந்தான குரவராகிய மெய்கண்டதேவர் அருணந்திசிவாசாரியர் மறைஞானசம்பந்தர் உமாபதிசிவாசாரியர் என்போர் தத்துவ நூல்களை ஆராய்ந்து, சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தை நாடு முழுவதும் பரவச்செய்தனர். சிவஞானபோதம் சிவஞான சித்தியார் என்னும் தத்துவ நூல்கள் அளவை நூல் முறையாக உண்மையை ஆராய்கின்றன. அவை மேனாட்டுத் தத்துவ நூல்களினும் சிறந்தவை என்பதை அறிந்து மகிழ்வோமாக. பதினைந்தாம் நூற்றாண்டின் பின் தமிழரசு குன்றத்தொடங்கத் தமிழ்மொழியும் தேயத்தொடங்கியதெனலாம். தமிழர் சுவாதீனம் இழந்தபின் தமிழ்மொழியும் நலங்கெட்டது. யமகம்திரிபு உடைய அந்தாதிகளும் நாகபந்தம் முதலிய சித்திரக் கவிகளும் எழுதியோர் யாவருக்கும் புலப்படக்கூடிய எளிய நடையில் எழுதாமல் நூற்பொருளை மறைக்கும் நடையைப் பெரிதும் தழுவினர். சோனகருடைய ஆட்சியும் அங்கிலருடைய ஆட்சியும் வேரூன்ற, ஆழிவேந்தரைக் கொன்று ஆட்சிபுரியும் குறுநில மன்னரைப்போல் அங்கிலமும் தமிழும் கலந்த கொடுந்தமிழ் செந்தமிழ் நலத்தைக் கெடுத்துத் தமிழ்நாட்டில் உலாவத் தொடங்கியதாகலின்,

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே

எனப் பாடவல்ல நல்லிசைப் புலவர்களும்,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லைத்

தாமார்க்குங் குடியல்லாத் தண்மையான
சங்கரநற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமார்க்கே நாமென்று மீளா வாளாய்க்
கோய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

என்ற திருத்தாண்டகம்போல உற்சாகத்தை ஊட்டக்கூடிய நல்லாசிரியரும் இல்லாராயினர்.

---

## 10-ம் பாடம். பாண்டியவரசின் இறுதிக்காலம்

### கட்சிப்போர்

ஆழிவேந்தன் மாறவர்மன் குலசேகரருடைய காலத்திலே சதவர்மன் சுந்தரபாண்டியன் சதவர்மன் வீரபாண்டியன் என இருகுமாரர் உபராசராக ஆண்டனர். இவ்விருவரும் ஒருவரில் ஒருவர் அழுக்காறுற்றுக் கலாம்விளைத்துக் குலசேகரருடைய அரசைக் கெடுத்தனர் என உசாவ் உரைத்தனன். இவர்கள் தம்மைக் கெடுத்தது மன்றிப் பண்டுதொட்டிருந்த பாண்டிய குலத்தையும் கெடுத்தனர். 1310-ல் சுந்தரபாண்டியன் தந்தையைக் கொன்றான். சகோதரர் இருவரும் இருகட்சியினராகிப் போர்புரிந்தனர். சுந்தரபாண்டியன் தாலாச்சிக்களத்தில் வென்றான். பின்னர் திரபாண்டியன் என்னும் வீரபாண்டியன் பெரும்படை திரட்டினனாகச் சுந்தரன் நாட்டை விட்டோடி டெல்லிமன்னன் அலாவுடின் என்னும் முகமதியனிடம் துணை வேண்டினன். இக்கட்சிப் போரைப்பற்றி அமீர்குஷ்ருவும் எழுதினன். அலாவுடின் தன்படைத்தலைவன் மாலிக்கபுர் என்பவனைத் தமிழ்நாட்டைப் பிடிக்கும்படி ஏவினன். மாலிக்கபூர் சுந்தரனுக்குத் துணைசெய்யும் நோக்கத்துடன் வரவில்லை. தமிழ்நாட்டில் சில்காலம் சூறையாடியபின் மாலிக்கபூர் வீரபாண்டியனின் படைக்கஞ்சி முதுகிட்டோடினன். வீரபாண்டியன் அரசுசெலுத்தி யிருந்தான்.

### முகமதியர் படையெடுப்பு

1320 அளவில் குஷ்ருக்கான் பாண்டிநாட்டின்மீது படையெடுத்தான். பின்பு முகமதுபின் துக்லாக் தமிழ்நாட்டை ஆட்சி நாடாக்க முயன்றான். வீரபாண்டியன் முகமதியபடைத்

தலைவன் சலலுடின் என்பவனைக் கலைத்தடித்தான். 1330-ல் சலலுடின் மதுரையில் தன்னாட்சியை நாட்டினான். இச்சலலுடின் என்னும் அஷன் ஷா டெல்லி மன்னனுக்குக் கீழ்ப்படியாமல் சுவாதீனமாகவே ஆண்டனன். அவனே தமிழ்நாட்டில் முதன்முதல் அரசு செலுத்திய முகமதியன். அவன் மதுரையில் ஆண்டனனாயினும் தமிழ்நாட்டை ஆண்டனன் எனச்சொல்ல முடியாது. தமிழ்நாட்டின் மதுரை ஒழிந்த ஏனைய பகுதிகள் தமிழ் மன்னராலேயே ஆளப்பட்டன. பாண்டியர் திருநெல்வேலி முதலிய இடங்களில் அரசாண்டனர். மதுரையில் குஷ்ருக்கான் சூறையாடினன் என ஆசிரியன் பாராணி எழுதினன். குஷ்ருக்கானுடைய கையில் அகப்பட்ட முகமதிய வணிகன் தாசிக்கான் தன்பொருள் இழந்தான். முகமதியத் தேசாதிபதிகள் செல்வர்களிடம் பொருள்பறித்தது மன்றிக் கோயில்களை இடித்துச் சூறையாடினர். கோயில்கள் இடிப்போரைத் தமிழர் இதுவரையும் கண்டிலர். முகமதியர் உடைத்த கோயில்களை 1339 ல் வீரபாண்டியன் புதுப்பித்தான்.

## பாண்டியவரசு சுருங்குதல்

பாண்டியர் தம்முட் கலகப்பட்டும் சோனகருடன் போர் புரிந்தும் இளைத்திருந்த தருணத்தில் சேரமன்னன் இரவிவர்மன் குலசேகரன் பாண்டியரோடு போர் தொடர்ந்தான். இரவிவர்மன் குலசேகரன் திருவாங்கூரிலே கொல்லத்தை இராசதானியாக்கி 1311-ல் அரசு புரிந்திருந்தான். அவன் மலைநாடுகளை ஆண்டனனாகையால் முகமதியருக்குத் தப்பினான். இரவிவர்மன் சோழரோடும் பாண்டியரோடும் பொருது வெற்றியடைந்து காஞ்சிநகரைப் பிடித்தான். பாண்டியர்க்குப் பகைவர் நாலு பக்கங்களிலும் எழுந்தனர். ஓரங்கல்லில் அரசுபுரிந்த தெலுங்கர் தாம் முன்பு இழந்த நாடுகளைப் பறித்தற்குத் தருணம் வாய்த்ததென உணர்ந்து வடபகுதியிலுள்ள ஊர்களைப் பிடித்தனர். காகாதித்தியமன்னன் பிரதாபருத்திரன் ஏவ, முப்பிடிநாயகன் என்னும் படைத்தலைவன், பாண்டியரை வென்று மானவீரன் என்னும் தேசாதிபதியைக் காஞ்சியில் ஆளும்படி நியமனஞ் செய்தான். குறுநிலமன்னர் பலர் ஆழிவேந்தனுக்கு அமையாது சுவாதீனமாயினர். பாண்டியருடைய இராச்சியம் இங்ஙனம் சுருங்கியதெனினும் பாண்டியர் திருநெல்வேலியில் அரசுபுரிந்

தனர். சுவாதீனம் பெற்ற குறுநிலமன்னருள் சம்புவராயனும் இராசேந்திர சோழனுடைய மகன் சோமாப் பிள்ளையும் என இருவர் இருந்தனர். இச் சோமாப்பிள்ளையோடு சோழர்குலம் அழிவெய்திய தெனலாம்.

1340-ல் எழுதிய கல்வெட்டால் சதர்வர்மன் வீரபாண்டியன் முகமதியரைக் கலைத்து மதுரையில் அரசு புரிந்தான் எனத் தெரிகிறது. ஒய்சள மன்னன் மூன்றும் வீரவல்லாளனும் பாண்டியனும் நட்பாகி முகமதியரோடு போர் புரிந்தனர். ஒய்சளர் கண்ணூர்க் கோபத்தைத் தாக்கித் தோல்வியடைந்தனர். பாண்டியர் மதுரையைப் பிடித்து 1370 வரையும் ஆண்டனர். பின்பு மதுரையில் முகமதியர் சிறிதுகாலம் ஆண்டனர்.

மதுரையில் ஆண்ட சுல்தானை இபின்பற்றூற்று தரிசித்தனன். அச்சுல்தானைத் தெலுங்கத்தேசாதிபதி குமாரகம்பணன் என்னும் வீரகம்பராயன் வென்றான் என கம்பணருடைய தேவி மதுரைவிசயம் என்னும் நூலில் நவின்றனள். அந்நூல் அக்காலத் தமிழருடைய நிலை எவ்வளவு பரிதாபமானது என்பதைக் காட்டும். அந்நூலின் கதைப்பொழிப்பு வருமாறு: கம்பணன் காஞ்சியில் ஆண்டிருந்த காலத்தில் ஓர் தேவதை தோற்றிச் சோனகர் செய்யும் இடும்பைகளை வருணித்துத் தமிழ்நாட்டைக் காக்கும்படி பின்வருமாறு ஏவியது: "மன்னனே! சைவக் கோயில்கள் பூசைகெட்டன; மிருதங்கம் இயம்பிய மண்டபங்களில் நரிகள் ஊழையிடுகின்றன; துருக்கர் செய்யும் இடும்பை வரம்பிலதுபோல் காவிரிவெள்ளமும் வரம்பிகந்து ஊர்களை அழித்துப் பாய்கின்றது; யாகப்புகையும் வேள்விப்புகையும் மிகுந்த கிராமங்களில் துருக்கர் இறைச்சிசுடும் புகையே எழுகின்றது; மதுரையிலுள்ள தென்னந்தோட்டங்கள் பாழாயின; பொருனையாற்றை மாடுகளின் இரத்தம் கலந்து அசுத்தப்படுத்துகிறது; தமிழ்நாட்டில் செங்கோல் கோடிக் கொடுங்கோல் நிலைத்திருக்கின்றது. திராவிடமக்கள் கலங்கித் திரிகின்றனர். பாண்டியரின்வலி யற்றதாகலின் தமிழ்நாட்டை நீ காப்பாயாக!"

விசயநகர வேந்தனின் ஏவற்படி வீரகம்பணவுடையார் மதுரையை 1374-ல் பிடித்தனர். விசயநகர வேந்தருடைய உபராசர் மதுரையில் ஆளத்தொடங்கினர். விசயநகர மன்ன

ருடைய ஆதரவில் மாறவர்மன் வீரபாண்டியன் திருநெல்வேலி புதுக்கோட்டை என்னும் நாடுகளை 47 ஆண்டுகள் ஆண்டனன். 1595-ல் சதவர்மன் குலசேகரன் திருநெல்வேலியில் ஆண்டனன். திருநெல்வேலிப் பாண்டியர்கள் குன்றிப் பதினேழாம் நூற்றாண்டில் அழிந்து தொலைந்தனர்.

## இறுதிக்காலப் பாண்டியர்

| | | |
|---|---|---|
| சதவர்மன் விக்கிரமபாண்டியன் | ஆட்சிக்காலம் | 1401—22 |
| அரிகேசரி பராக்கிரமன் மானுபரணன் | ,, | 1422—62 |
| குலசேகரன் ஸ்ரீவல்லபன் | ,, | 1429—73 |
| குலசேகரன் மகன் பராக்கிரம குலசேகரன் | ,, | 1479—99 |
| பராக்கிரம வீரபாண்டியன் | ,, | 1473—1506 |
| பராக்கிரம ஸ்ரீ வல்லபன் | ,, | 1506—1534 |
| ஸ்ரீ வல்லபன் | ,, | 1534—1542 |
| குலசேகர பராக்கிரமன் | ,, | 1542—1552 |
| சாலிவாதிபதி திருநெல்வேலிப் பெருமாள் | ,, | 1552—1564 |
| அதிவீரராம ஸ்ரீ வல்லவன் | ,, | 1564—1605 |
| அதிவீரராமன் வரதுங்கராமன் | ,, | 1588—1609 |

அரிகேசரி பராக்கிரமன் சோழமன்னனை வென்று பின்பு நாராச நாயகனோடு பொருது தோல்வி யடைந்தான். அவன் கொற்கை வேந்தன் என அழைக்கப்பட்டான். அவன் தென் காசியில் விசுவநாதர் கோயில் கட்டினான். அக்கோயில் கட்டப் பதினேழு ஆண்டுகள் கழிந்தன. விசயநகர வேந்தன் அச்சுத ராயன் திருவாங்கூரைப் பிடித்து ஆண்டான். அவன் பாண்டிய குமாரியை மணம் புரிந்தான். பாண்டியர் விசயநகர வேந்தரோடு நட்பாயிருந்தனர். இறுதிக்காலப் பாண்டியருள் அதிவீர ராம பாண்டியரும் வரதுங்கபாண்டியரும் நூல்பல கற்று வல்லோராகிப் புலவர்களைப் புரந்து இருந்தனர். அதிவீரராம பாண்டியர் இம்மைவாழ்க்கையில் நல்லொழுக்க முடையராக இருக்க விரும்புவோர் கவனிக்கவேண்டிய சில உரைகள் எழுதினான்: "கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சைபுகினுங் கற்கை நன்றே!" என அதிவீரராம பாண்டியன் கூறியவாறு பாண்டியர்கள் வலிகுன்றிய காலத்திலும் தமிழை வளர்த்தனர்; அவர்கள் குளந்தொட்டும் கோயில்கட்டியும் செங்கோல்செலுத்தினர். அவர்கள் தேவபிராமண ஸ்தாபனக் காரியர் என்னும் பட்டம்

சூட விரும்பினர். 1652 தொடக்கம் பாண்டியர் விசயநகர நாயக்கரோடு நட்பாயிருந்தனர். 1753-ல் அழகன் பெருமாள் ஸ்ரீவல வரகுணராம பாண்டிய குலசேகரதேவர் அரசாண்டார். விசயநகர் அழிவெய்தியபின்னும் விசயநகர நாயக்கர் மதுரையில் அரசு செலுத்தினர்.

---

# 8-ம் அதிகாரம்: இலங்கை சூளுவம்சம்

## 1-ம் பாடம்: அநுராதபுர மன்னர்

### மேகவர்ணன்

மகாசேனனுடைய மகன் ஸ்ரீமேகவர்ணன் அரச பதவியைப் பெற்றான். அவன் மகாவிகாரப் பிக்குகளின் கட்சியைச் சார்ந்தான். அவன் பல விகாரங்களும் சைத்தியங்களும் கட்டினான்; மகேந்திரனுடைய சிலையைப் பொன்னாற்செய்து விழாக் கொண்டாடினான்; புத்தருடைய பற்சின்னம் ஒன்று இந்தியாவிலிருந்து எடுப்பித்தான். அச்சின்னம் தென்னிந்தியாவில் கங்க தேசத்தில் காப்பாற்றப்பட்டிருந்தது. அச்சின்னத்தை அயலோர் கவர எண்ணினராகக் கங்கமன்னன் அதை மேகவருணனிடம் கொடுத்தான்.

### புத்ததாசன்

புத்ததாசன் மேகவண்ணனுடைய தம்பியின் மகன். புத்ததாசன் பக்தி மிகுந்தோன் எனப் புகழ்பெற்றான். அவன் மருத்துநூல் நன்குணர்ந்தோன். அவன் மனவருத்தங்களைச் சுகப்படுத்தும் ஆற்றல் உடையவன். அரசன் ஊர்வலம் வந்துழி, குஷ்டரோகி ஒருவன் அரசனை நிந்தித்துப் பேசினான். அரசன் அவன் பைத்தியத்தினாற் தன்னை நிந்தித்துப் பேசினானென்பதை உணர்ந்து அவனைச் சுகப்படுத்தும் வழியைத் தன் பணியாளன் ஒருவனுக்கு உணர்த்தினான். பைத்தியக்காரன் சுகமடைந்து நன்றி மறவாதிருந்தான். பின்பு அரசன் இறந்ததைக் கேள்வியுற்றுத் துயராற்றாது தானுமுயிர் நீத்தானாம். அரசன் மருந்து செய்யும் சாலைகள் ஏற்படுத்தினான். மருத்துவர் நாடெங்கும் சாலைகள் நிறுவியிருந்தனர். கமக்காரர் தம்

வருமானத்தில் இருபதிலொரு பங்கு மருத்துவருடைய வேதனத்திற்காகக் கொடுத்தனர். குருடர் முடவருக்கு உண்டியும் உறையுளும் கொடுத்தற்கு அரசாங்கத்தினர் சாலைகள் நிறுவினர். அரசன் பாளி மொழியிலிருந்து சமயநூல்களைச் சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பித்தான். அரசன் சரார்த்த சங்கிரகம் என்னும் மருத்துநூலை இயற்றினன். இவ்வண்ணம் புத்ததாசன் 29 ஆண்டு செங்கோலோச்சினன். அவன் மகன் உபதீசன் அரச பதவியைப் பெற்றான். அவன் கமக்காரரைப் புரந்தும் பௌத்த மதத்தைக் காத்தும் அரசு புரிந்தான். அவனை அவன் மனைவி கொல்வித்தாள். அவன்பின் அவன் தம்பி மகாநாமன் அரசனானன். அவன் சீனத்திற்கும் உரோமாபுரத்திற்கும் தூதுக்கூட்டம் அனுப்பினன்.

### பாகியன் (பாஹியன்)

கி. பி. 412ல் சீனயாத்திரீகன் பாகியன் இலங்கையிலுள்ள பௌத்தப் பள்ளிகளைத் தரிசித்தான். அவன் அநுராதபுரத்துக் கோயில்களும் விகாரைகளும் வெள்ளரசுகளும் தூபிகளும் நகரைச் சிறப்பித்தவை எனக் குறிப்பிட்டான். நகரில் 5000 பிக்குகள் வசித்தனரென எழுதினன். அரசாங்கத்தினருடைய மாளிகைகளும் பிறதேய வணிகருடைய இல்லங்களும் ஞானோபதேசச்சாலைகளும் நகரை அணிபெறச் செய்தவை என உரைத்தனன். பாகியன் அநுராதபுரத்தில் ஈராண்டு கழித்துப் பௌத்த நூல்களை ஆராய்ந்தனன். பின்பு இருநூறு (200) வணிகரோடு கடல்வழியே சீனத்திற்குச் சென்றான்.

### புத்தகோசன்

5-ம் நூற்றாண்டில் புத்தகோசன் என்னும் மகததேயப் பிராமணன் இலங்கை வந்தான். அவன் பௌத்த மதத்தினனாதலின் பௌத்த நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதினன். சில நூல்களைப் பாளி மொழியிலிருந்து சிங்களத்தில் மொழிபெயர்த்தான். அவன் திரிபிடகத்தின் பொழிப்பைத் தன்னகத்தே உடைய விசுத்திமார்க்கம் என்னும் ஓர் நூலை இயற்றினன். புத்தகோசன் இலங்கையில் மூவாண்டு கழித்து உபந்நியாசங்களும் செய்தனன். இங்ஙனம் இந்திய ஆசிரியர்கள் பலர் இடையிடையே இலங்கை வந்து இந்து மதத்தையும் பௌத்த

மதத்தையும் பரப்பினர். இவ்வாசிரியர்கள் இந்திய மொழிகளை யும் இந்திய வருணுசிரம தர்மங்களையும் பரவச் செய்தனரென் பது கூறுமலே அமையும். இந்தியர்களிடம் சிங்களர் இலக்கிய மும் ஓவியமும் சிற்பமும் கற்றனர் எனத் தெரிகிறது.

## குழப்பக் காலம்

மகாநாமன் 22 ஆண்டு அரசுபுரிந்து மரித்தான். அவன் இறந்தபின் அரசியற் குழப்பங்கள் தொடங்கத் தமிழரும் அரசை வெளவினர். மகாநாமனுடைய மகன் சோதிசேனன் அரசு கட்டிலேறியவன்றே கொல்லப்பட்டான். அவன் தாய் தமிழ்ப் பெண். அவளை அவனுடைய சகோதரி முறையினளாகிய சங்கா என்பவள் கொல்வித்தாள். சங்காவின் கணவன் சத்தகாக்கா முடிபெற்ருன். அவன் ஓர் ஆண்டு முடியுமுன் இறந்தான். அவன்பின் மித்தசேனன் என்பவன் முடிபெற்ருன். அவன் குலம் யாதெனத் தெரிகின்றிலது. மன்னன் மித்தசேனனைத் தமிழர் கொன்றனர். கி. பி. 437 முதல் கி. பி. 461 வரையும் பாண்டிய நாட்டுத் தமிழர் அநுராதபுரத்தில் ஆண்டனர். அக் காலத்தில் சிங்கள மேன்மக்கள் உருகுணையில் மறைந்திருந்தனர். தமிழ்த் தலைவர் அறுவர் இலங்கையில் அரசுபுரிந்தனர். அவர் கள் பௌத்த சைத்தியங்களையும் விகாரைகளையும் ஆதரிக்க வில்லை. அறுவரில் கடை மூவரையும் தாதுசேனன் என்னும் உருகுணை மன்னன் கொன்று 461 ல் அரசுகட்டிலேறினுன்.

## மகாவம்சம்

தாதுசேனனுடைய ஆட்சிக் காலத்தில் குளங்கள் கட்டப் பட்டவை யெனவும் பௌத்த மடங்கள் புதுப்பிக்கப்பட்டவை யெனவும் பௌத்த சரித்திர வாசிரியர் கூறுப. அக் காலத்தில் வருங்காலப் புத்தர் என்னும் போதிசத்துவருடைய சிலை ஒன்று எழுதப்பட்டது. தீபவம்சம் என்னும் இலங்கைச் சரிதை கூட் டங்களில் வாசிக்கப்பட்டது. தாதுசேனன் மாமன் மாநாமன் என்னும் பிக்கு மகாவம்சநூலை இயற்றினுன். அவன் விஜயன் வருகையிலிருந்து மகாசேனன் காலவரையும் எழுதினுன். மகா வம்சம் பாளி மொழியில் எழுதப்பட்டது. மகாவம்சத்தின் இரண்டாம் பகுதியாக கி. பி. 400 முதல் கி. பி. 1758 வரை யும் நிகழ்ந்தவற்றைப் பௌத்த பிக்குகள் எழுதினர். பௌத்தர்

எழுதிய சரிதை பௌத்தமத வரலாற்றினை விரித்துரைக்கின்ற தொழிய, அரசியலைப்பற்றியும் சமூக வாழ்க்கையைப்பற்றியும் விரித்து ஆராய்கின்றிலது. தாதுசேனன் இரு மனைவியரை மணமுடித்தனன். ஒரு மனைவி காசியப்பன் என்பவனைப் பயந்தாள்; ஒரு மனைவி முகலன் என்பவனைப் பெற்றாள். காசியப்பன் தந்தையைச் சிறையிட்டு அரசை வௌவினான். தாதுசேனன் உயிரோடு மதிலுள் இடப்பட்டான் என்ப. முகலன் தென்னிந்தியா சென்றான். காசியப்பன் தன் பகைவற்கஞ்சி சிகிரியா என்னும் குன்றில் ஓர் அரண் கட்டியிருந்தான். சிகிரியா என்பது சிங்கக் குன்றெனப் பொருள்படும். காசியப்பன் தந்தையைக் கொன்றானாகையால் மனம் நொந்து துன்புற்றான். பிராயச்சித்தங்கள் பல செய்தும் குற்றம் அகன்றிலது. முகலன் பன்னிராண்டு தமிழ் நாட்டில் கழித்துத் துணைபெற்று ஈழத்தில் இறங்கி சிகிரியாவை முற்றுகையிட்டு நின்று காசியப்பனைக் கொன்று வெற்றி முரசறைந்தான்.

## குமாரதாசன்

முகலன் அநுராதபுரத்தைத் தலை நகராக்கி அரசுபுரிந்தான். சிகிரியாவை அவன் பௌத்த விகாரையாக்கி மகாவம்சம் எழுதிய மாநாமனுக்கு அளித்தான். அரசனுடைய நண்பன் ஒருவன் சில காலம் புத்தருடைய மயிர்க்கற்றை ஒன்றைப் புத்த சின்னமாக வைத்திருந்தான். முகலனுடைய மகன் குமாரதாசன் புலமை மிக்கோன் எனப் பாராட்டப்பட்டான். அவன் சானகி காரணம் என்னும் சிங்களக் காவியத்தை எழுதினான். அக்காவியம் இராமாயணக் கதையை உரைக்கின்றது. குமாரதாசன் ஒரு முறை மாத்தறை சென்றபொழுது ஒரு வீட்டில் பாவடிகள் சில எழுதி அதை முடிப்பவனுக்கு வெகுமதி நல்குவன் என அறிவித்தான். காளிதாசன் என்னும் புலவன் எஞ்சிய அடிகளை எழுதினான். அவ்வீட்டுப் பெண் அதையறிந்து காளிதாசனைக் கொன்று தான் அவ்வடிகளை எழுதினள் எனக்கூறி வெகுமதியை வேண்டி நின்றாள். அரசன் உண்மையை உணர்ந்து துயருற்றுக் காளிதாசனைத் தகனஞ் செய்யும் இடம் சென்று தீப்பாய்ந்திறந்தான்.

## அரசியற் குழப்பம்

குமாரதாசனுடைய மகன் கீர்த்திசேனன் ஒன்பது மாதம் ஆண்டான். அவனை அவன் மகன் சிவன் கொன்றான். இரு

பத்தைந்து நாள் சென்றபின் சிவனை அவன் மைத்துனன் உப தீசன் கொன்றான். உபதீசன் சீலகாலனைப் படைத் தலைவனாக் கினான். சீலகாலன் உபதீசனுடைய மகளை மணந்தான். சீல காலன் அரசை வௌவினனாக உபதீசனுடைய மகன் காசி யப்பன் போர்க்கெழுந்தான். காசியப்பன் தோல்வியடைந்து தற்கொலை புரிந்ததைக் கேள்வியுற்று உபதீசனும் துஞ்சினான். சீலகாலன் அரசு கட்டிலேறி 13 ஆண்டு ஆண்டான். அவன் வைத்தூலியக் கொள்கைகளை உபதேசிக்கும் பிக்குகளைப் புரந்தான். அவன் யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களைத் தகர்த்துத் தமிழ் நூல்களை எரித்தானும். அவன் மரிக்க, அரசை அவனுடைய இளைய மகன் தப்புலா I (தர்மபாலன்) வௌவினன். மூத்த மகன் முகலன் II அவனைக் கொன்று முடி பெற்றான். முகலன் 20 ஆண்டு இராச்சிய பரிபாலனஞ் செய்தான். முகலன் புலவனாகவும் சமயபக்தி மிகுந்தோனாக வும் வள்ளலாகவும் திகழ்ந்தான். குடிகள் அவனை மிகவும் நேசித்தனர். அவனுடைய மகன் கீர்த்திசிறீமி ஆண்ட காலத்தில் அரசாங்கத்தினர் கைக்கூலி பெற்றனர், செல்வர் வறியோரை வருத்தினர்; தீயார் தலையெடுத்தனர் என்ப.

## அக்கிரபோதி I

கீர்த்திசிறீமியின் மருகன் (அக்கிரபோதி I) 564 முதல் 598 வரையும் ஆண்டான். அக்கிரபோதி புகழால் சூரியனை ஒத்தவன் எனச் சரித்திர நூலோரால் புகழப்பட்டான். அவன் புலவரைப் புரந்தான்; பௌத்தத்தை வளர்த்தான்; மிகுந்தலையில் குளந்தோண்டினான். அக்கிரபோதியின் மகளை மணந்த மருகன் அக்கிரபோதி II குளங்கள் பல கட்டினான். அவன் ஆண்ட காலத்தில் கலிங்க மன்னன் பௌத்த சங்கத்தைச் சேர்ந்து இலங்கையில் காலங் கழித்தான். அக்கிர போதி II மரித்தபின் சங்கதீசன் II அரசனானான். இருமாசம் செல்லுமுன் அவனைத் தாலமுகலன் கொன்று ஆறு வருடம் ஆண்டான். தாலமுகலனை அசிக்கிரக்காகன் கொன்றான்.

## 2-ம் பாடம் பொலநறுவேர மன்னர்

### தமிழரும் சிங்கள மன்னரும்

கி. பி. 6-ம் நூற்றாண்டு தொடக்கம் தமிழர் படைத் தலைவராயும் அமைச்சராயும் படை வீரராயும் சேவித்து அதிகாரம் பெற்றிருந்தனர். தமிழர் சங்கதீசனுடைய சகோதரன் ஸ்ரீ நாகனுக்கு உதவிபுரிந்தனர். அசிக்கிரக்காகன் ஸ்ரீநாகனைக் கொன்று தமிழரையும் புடைத்தான். பின்பு அக் கிரபோதி III ஸ்ரீ சங்கபோதி என்னும் பெயரைத் தரித்து ஆறு மாசம் ஆண்டான். அவன் தமிழருக்கும் சிங்களருக்கும் வேற்றுமை காட்டாமல் ஆண்டனன். அவன் விஷ்ணு கோயில் ஒன்று கட்டினான். அவனைச் சங்கதீசனுடைய மகன் வென்று ஆறு மாசம் ஆண்டான். அக்கிரபோதி தமிழ்நாடு சென்று துணைப்படை பெற்றுவந்து காலவாவிக்களத்தில் சங்கதீசனுடைய மகனை வென்று 16 வருடம் ஆண்டிருந்தான். அவனோடு ததோபதீசன் I அமர்புரிந்தான். ததோபதீசன் தமிழரிடம் துணைபெற்றானாக, அக்கிரபோதி உருகுணைக்கு ஓடித் தப்பினான். தமிழ்ப்படை வீரர் விகாரைகளைச் சூறையாடித் திரிந்தனர். சிங்கள மன்னரும் பௌத்த மடங்களின் பொருளை வெளவினர். சிங்களக் குடிகள் தமிழ் நாட்டிற்கு ஏகினர், கமங்கள் பாழாயின; கலகங்கள் எங்கும் மூண்டன; குடிகள் வருந்தினர்.

அக்கிரபோதியின் தம்பி காசியப்பன் II ததோபதீசனை வென்று ஒன்பதாண்டு அரசுபுரிந்தான். அவன் தமிழரை உத்தியோகங்களிலிருந்து நீக்கினான். அவன்பின் உருகுணை மன்னன் தப்பிலன் II இராசரத்தையில் மன்னனாயினன். ததோபதீசன் II தமிழரிடம் துணைபெற்றுத் தப்புலனைக் கலைத்தான். ததோபதீசனுடைய சகோதரன் அக்கிரபோதி 4-வது அரசனானான். அக்கிரபோதி பௌத்த மதத்தை ஓம்பி—மகாவிகாரைப்பிக்குகளைப் புரந்து 16 ஆண்டு ஆணை செலுத்தினான். தமிழர் பலர் பௌத்த மடங்கள் கட்டிப் பிக்குகளை ஆதரித்தனர். அக்கிரபோதி தமிழரின் ஆதிக்கம் மிகுவதைக் கண்டு அஞ்சித் தன் இறுதிக்காலத்தைப் பொலநறுவேரையில் கழித்தான். அவனுடைய படைத் தலைவன் பூதகூத்தன் என்னும் ஓர் தமிழன் இருவரை மன்ன

ராக்கினன். இருவரும் யாதொரு ஆற்றலுமின்றி இருந்தனர். தமிழரே அவ்விருவர் ஆண்ட காலத்தில் அரசியலை நடாத்தினர். காசியப்பனுடைய மகன் மானவம்மன் தமிழரிடம் துணை பெற்றுப் பூதகூத்தனைக் கலைத்தான். பூதகூத்தன் நஞ்சுண்டு இறந்தான்.

## பொலநுவேரை மன்னர்

மானவம்மன் 35 ஆண்டு அரசியலை நடத்தினன். அவன் பின் அக்கிரபோதி 5-வது பௌத்த மதத்தைப்புரந்து அரசுபுரிந்தான். அவன்பின் காசியப்பன் III என்பவனும் காசியப்பன் பின் மிகுந்து I என்பவனும் ஆண்டனர். மிகுந்து தன் நண்பன் ஒருவன் இறந்தானகத் துயருற்று ஆடையாபரணங்களை அணிய மறுத்தான். ஆனல் அரசருக்குரிய கடமைகளைக் கவனமாகச் செலுத்தினன். அவனுடைய மருமகன் அக்கிரபோதிசாலமேவன் 44 ஆண்டு ஆண்டான். அவன்பின் மிகுந்துவின் மகன் அக்கிரபோதி 7-வது கி. பி. 781 முதல் 787 வரையும் ஆண்டான். அவன் பொலநுவரையை இராசதானியாக்கினன். தமிழரை அஞ்சியே அக்கிரபோதி அநுராதபுரத்தை விட்டு நீங்கினன்.

அக்கிரபோதி இறக்க அவன் மருகன் மிகுந்து II. அரச பதவியைப் பெற்ருன். அக்காலத்தில் வடவிலங்கைத் தலைவர் பகைத்தெழுந்து அரசிறைபளிக்க மறுத்தனர். அரசி மிகுந்துவைக் கொல்ல முயன்ருள். அரசன் பகைஞரை ஒருவாறு அடக்கினன். உருகுணை மன்னன் தப்புலன் படையெடுத்து அநுராத புரத்தைச் சூழ்ந்து நின்ருன். இருமன்னரும் பன்முறை பொருது பின்னர் தம் இராச்சியங்களுக்குக் காலுகங்கையே எல்லையாகு மென உடன்படிக்கை எழுதினர். மிகுந்து தமிழ்க் குடிகளை நட்பாக்குதற்கு இந்துக்கோயில்கள் கட்டிப் பூசாரிகளுக்குப் பொருள் அளித்தான். மிகுந்துவின் மகன் தப்புலன் III. பொலநுவேரையில் பெரிய வைத்தியசாலை ஒன்று ஏற்படுத்தினன். அவன் நீதிப்பிரமாணங்களை முறைவகுத்து நீதி செலுத்தினன். அவன் பின் மிகுந்து III. பக்தி மிகுந்தோன் என்பான் அரசாண்டான். அவன்பின் அக்கிரபோதி 8-வது முடிபெற்ருன். அக்கிரபோதி தாயை மிகவும் நேசித்துக்

குற்றேவல் செய்திருந்தான். தாய் இறந்தபின், அவன் அவளுக் குக் கோயில் கட்டிப் பூசை செய்தான். அவன் தன் கையாலே தாய்க்கு எண்ணெய் வைத்து நீர் அள்ளிக்கொடுத்து உண வளித்து அமளி விரித்து மும்முறை வணங்கி நின்றான் என்ப. தாய் துயிலுமுன் அவன் துயிலான். அவன் தாயைச் சேவிக்கும் பணியாளருக்குப் பொருள் நனி கொடுத்தானும்.

## பாண்டியர்

அக்கிரபோதியின் பின் தர்மபாலன் என்னும் தப்புலன் IV. ஆண்டான். அவன்பின் ஆண்ட அக்கிரபோதி IX அநு ராத புரத்தில் ஆண்டான். ஆனால் சேனன் I. 846 முதல் 866 வரையும் பொலநறுவையில் அரசு புரிந்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்பவனுடைய வீரர்வந்து சூறையாடித் திரிந்து மகாபலகாமத் தில் ஓர் அரண் கட்டினர். சேனன் I. மலைநாட்டிற்கு ஓடினான். சேனனுடைய சகோதரர் தமிழரோடு பொருது தோல்வியடைந் தனர். அவருள் மிகுந்து கொல்லப்பட்டான்; காசியப்பன் ஓடித் தப்பினான். தமிழர் அநுராதபுரத்துள் புகுந்து சூறையாடினார். பாண்டியர் பௌத்த விகாரங்களிலுள்ள பொற்கலங்கள் முத லியவற்றையும் பௌத்த தூபிகளில் இடப்பட்ட பொன்முடிகள் முதலியவற்றையும் சூறையாடினர். பாண்டியர் சேனனோடு உடன்படிக்கை எழுதித் தம் நாடு திரும்பினர். போர்க்களத்தில் முதுகிட்டோடிய காசியப்பனுடைய மகன் சேனன் II. பாண்டி நாட்டில் கட்சிக்கலகம் உண்டாகியதாகப் பாண்டியன் ஒருவனுக் குத் துணைபுரிந்து மதுரையில் ஆண்ட பாண்டியனைக் கொன் றான் என்ப. அதன்பின் பௌத்த பிக்குகள் சிலர் தமிழ்நாட்டுப் பிக்குகளைப்போல் நீலவாடை அணிந்தனர். சேனன் II. குளந் தொட்டு வளம்பெருக்கி அரசாண்டான்.

## வணிகம்

ஒன்பதாம் நூற்றாண்டில் அராபியர் கிழைத் தேசங்களுக் குச் சென்று பண்டங்களைப் பெற்று மேனாடுகளில் விற்றுப் பொருளீட்டினர். அராபியர் இந்தியத் துறைகளிலும், மலாக் காத் துறைகளிலும் கடைகள் கட்டினர். அராபியர் வருமுன் பார்சியரும் யவனரும் இலங்கையில் வணிகம் நடாத்தினர்.

ஆறும் நூற்றாண்டிலே சோபாதர் என்னும் யவனன் (கிரேக்கன்) அபிசீனியாவிலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்தான். அவன் இலங்கையில் இறங்கிய நாள் பாரசீகக் கப்பல் ஒன்று இலங்கைத் துறையையடைந்தது. கிரேக்கனும் பாரசீகனும் அரசனை நேர்முகமாகக் கண்டனராம். அரசன் பாரசீகர் வேந்தனோ உரோமர் தனிக்கோலனோ வலி மிகுந்தவன் என வினவினன். பாரசீகன் தன் வேந்தன் குறுநில மன்னர் பலரை அடக்கியாளும் ஆழிவேந்தன் எனக் கூறினன். சோபாதர் மௌனமாக நின்றான்; அரசன் "நீவிர் உரையுமென"ச் சோபாதர் "நான் என்ன சொல்வேன். இரு வேந்தரும் ஈங்குளர். வேந்தே! நீங்களே உண்மையை ஆராய்வீராக" என மொழிந்தனன். அரசன் அஃதெங்ஙனமெனச் சோபாதர் இருதேயக் காசுகளையும் காட்டினனும். பாரசீகருடைய வெள்ளி நாணயத்திலும் உரோமருடைய பொன்னாணயமே சிறந்த தென்பதை அரசன் உணர்ந்து சோபாதரை யானையேற்றி ஊர் காண்பித்தானும்.

கஸ்மாஸ் என்னும் எகிப்தியனும் இலங்கையிலும் இந்தியாவிலும் பிரயாணஞ் செய்தான். அவன் இலங்கையைச் சோபாதர் வருகையின்பின் 30-ம் ஆண்டில் தரிசித்தான். அவன் இலங்கையில் இரண்டு இராச்சியங்கள் உண்டெனவும் ஒரு மன்னன் விலை உயர்ந்த இரத்தினம் வைத்திருந்தான் எனவும் மற்றவன் கரைநாடுகளை ஆண்டு அந்நியருடன் செய்யும் வணிகத்தில் சுங்கம் பெற்றான் எனவும் எழுதினன். இலங்கை மன்னர் இருவரும் சுதேசிகள் அல்லர் எனக் குறிப்பிட்டான். பாரசீகக் கிறித்தவர் இலங்கையில் வணிகஞ் செய்தனர். பாரசீகரே குதிரை விற்றனராகலின், பாரசீகர் தாம் பெறும் பண்டங்களுக்குச் சுங்கம் இறுக்கா திருக்கும் உரிமை பெற்றனர்.

9-ம் நூற்றாண்டில் சுலைமான் என்னும் ஓர் அராபிய முகமதியன் இலங்கையில் பிரயாணஞ் செய்தனன். அவன் சமந்தகூடம் ஏறிச் ஸ்ரீபாதம் கண்டனன். அவன் சமந்தகூடத்தின் அயலில் இரத்தினம் மாணிக்கம் முதலிய கற்கள் உளவென உரைத்தனன். சுலைமானும் இலங்கையில் இருமன்னர் ஆண்டனர் என மொழிந்தனன். யாழ்ப்பாண மன்னர் கடற்கரை

களை ஆண்டு துறைகளில் சுங்கம் பெற்றனர். சுலைமான் வந்தபின் முகமதியர் பலர் சமந்தகூடத்தில் வணங்குவதற்கு வந்தனர். சுலைமான்வந்து அறுபதாண்டு கழிந்தபின் அபுசயித்து வந்தான். அவன் சிங்களர் பௌத்த நூல்களை நன்கு கற்றனர் எனவும் சைத்தியங்களை அலங்கரித்தலில் விருப்புடைய ரென வும் புத்தருடைய சிலைகள் எழுதினர் எனவும் அரசன் பிற மதத்தினரைத் தமக்கிசைந்தவாறு வணங்கும்படி உத்தரவு கொடுத்தனன் எனவும் குறிப்பிட்டான். யூதரும் கிறித்தவரும் தம்கோயில்களில் வணங்கினர். சிங்களவர் இன்பம் நுகர்த லில் விருப்புடைய ரெனவும் தேன்கலந்த மதுகுடித்தன ரென வும் சூதாடலில் மிகவிருப்புடைய ரெனவும் கோழிச்சண்டை பார்த்துக் களித்தனரெனவும் 'அபுசயித்து' உரைத்தனன். கோழிச் சேவல்கள் பொருதலைப் பார்ப்போர் பந்தயம் பிடித் துச் சூதாடினர்.

அராபிய வணிகர் இலங்கை சீனத்திற்குப் போகும் வழி யில் இருப்பதால் இலங்கைத் துறைகளில் இறங்கினர். இலங் கையில் மூத்து இரத்தினம் மிளகு கறுவா ஏராளமாய் இருந் தமையால் அராபியர் இலங்கையில் கடைகள் பல கட்டினர். உரோம நாடுகளுக்கும் சீனநாடுகளுக்கும் இடையில் இலங்கை இருப்பதால் இலங்கையில் துறைகள் எழுந்தன. உரோம ருடைய நாணயங்களும் சீனருடைய நாணயங்களும் இலங்கை யில் எடுக்கப்படுகின்றன. அராபிய வணிகர் 9-ம் நூற்றாண்டு தொடக்கம் 16-ம் நூற்றாண்டு ஈறாக இலங்கையில் பண்டம் மாறினர். பண்டுதொட்டு மாதோட்டமே (மாந்தை) சிறந்த துறைமுகமாக இருந்தது.

## சோழர் ஆதிக்கம்

முதலாம் இராசேந்திர சோழதேவர் இலங்கை மன்னன் ஐந்தாம் மிகுந்துவைச் சிறையிட்டனராகச் சிங்களர் அவ னுடைய மகன் காசியப்பனை உருகுணையில் மறைத்து வைத் திருந்தனர். தமிழரும் சிங்களரும் பன்முறை பொருதனர். தமிழர் தம் மாணையைப் பொலநறுவரையிற் செலுத்தினர். இராசரத்தையும் மாயரத்தையும் தமிழரால் ஆளப் பட்டன. உருகுணையிலிருந்த சிங்களச் சிற்றரசன் காசி

யப்பன் தான் தமிழரைக் கலையாமல் அபிடேகம் செய்கிறதில்லை என உரைத்தனன். காசியப்பன் விக்கிரயபாகு எனப் பெயர் பூண்டு பன்னீராண்டு படைதிரட்டிப் பயிற்றிப் போராரம்பம் செய்தான். உருகுணையில் அரசியற் குழப்பம் தொடங்கியது. கீர்த்தி ஏழுநாள் ஆண்டான். அவனைக் கொன்று அரசை வௌவிய மாலான கீர்த்தி மூவாண்டு அரசுபுரிந்தான். அவன் சோழரோடு பொருது தோல்வியடைந்து தறகொலை புரிந்தான். விக்கிரமபாண்டு கழுத்துறையைத் தலைநகராக்கி அரசுபுரிந்தான். வடவிந்திய வரசன் யாகாதிபாலன் அவனைக் கொன்று உருகுணையில் நாலாண்டு ஆணைசெலுத்தினன். அவனைச் சோழர் கொன்றனர். பின்னர் பராக்கிரமபாகு அரசு பெற்றான். அவனை அவன் சேனாதிபதி உலோகேஸ்வரன் கொன்றனன். உலோகேஸ்வரன் கதிர்காமத்தை இராசதானியாக்கி ஆறுவருடம் ஆண்டான். மிகுந்து ஐந்தாவதின் குலத்துதித்தோன் முதலாம் விசயபாகு என்போன் உலோகேஸ்வரன் இறந்தபின் அரச பதவியைப் பெற்றான். அவன் முன்கூறிய காசியப்பன் என்னும் தலைவனை அட்டுத் தன்னுரிமையை நாட்டினன். விசயபாகு 45 ஆண்டு அரசுபுரிந்தான். அவன் தமிழரைக் கலைத்து இலங்கையை ஒரு குடைக்கீழாண்டு பௌத்த மதத்தைக் காக்க முயன்றான். தமிழர் மாவலிகங்கைக்கு வடமேற்பால் உள்ள நாடுகள் யாவற்றையும் ஆண்டனர்; கி. பி. 1027 முதல் கி. பி. 1070 வரையும் இலங்கை சோழருடைய ஆட்சிநாடாயிற்று. கங்கை கொண்ட இராசேந்திர சோழன் முதலியோருடைய உபராசர்கள் பொலநுவேரையைத் தலைநகராக்கி ஆண்டனர். யாழ்ப்பாணமும் சோழராசனால் ஆளப்பட்டதாம். சோழருடைய ஆட்சி 50 ஆண்டுகளுக்கு நிலைத்தது. இலங்கை சோழமண்டலத்திற்குரிய ஒரு சிறு மங்கலமாயிற்று. இலங்கைக் கிராமச் சங்கத்தினர் சோழருடைய கிராம மகாசபைக்குப் பிரதிநிதிகள் தெரிந்தனுப்பினர். சோழர் மகாவலி கங்கையைக் கடந்தனராக விசயபாகு அஞ்சி மலைநாட்டரணுள் ஒளித்தான். சிங்களர் பொருளின்மையால் போர்புரிய வியலாமல் பர்மாதேசத்தோரிடம் துணையிரந்தனர். சோழருடைய அரசு தமிழ்நாட்டில் வலிகுன்றத்தொடங்கியது. 1069-ல் வீரராசேந்திரன் II. இறந்தானாகச், சளுக்கியரும் பாண்டியரும் சோழருடன் பொருதனர்.

அத்தருணத்தில் சோழர்படையைச் சிங்களர் ஒருமுறை வென்றனர்.

### முதலாம் விசயபாகு

மலைநாட்டி லிருந்த விசயபாகு அநுராதபுர மடைந்து தமிழரோடு பொருது தோல்வி யடைந்தான். பின்னர் விசயபாகு சோழருடைய அரண்களை ஒவ்வொன்றாகப் பிடித்தான். முடிவில் பொலநறுவேரையையும் பலமாசம் முற்றுகை யிட்டுக் கைப்பற்றினன். விசயபாகு அநுராதபுரத்தையும் பிடித்து ஆண்டான். 1070-ல் விசயபாகு சோழருக்கு மிக அஞ்சியே, பொலநறுவேரையை இராசதானியாக்கினன். தமிழரை வென்ற பின் விசயபாகு உண்ணாட்டுப் பகைவரை அடக்குதலில் சில வாண்டு கழித்தான். பகைவரை அடக்கி அரசியலைச் சீர்திருத்தி அரசிறைகளை நீதிவழுவாது பெற்று அரண் பல கட்டிக் காவல் புரிந்தான். அரசனுடைய அவையைப் புலவர்கள் நாடினர். பௌத்தர் தீநெறியிற் சென்றனராகலின் சன்மார்க்க நெறியில் இருக்கும் பிக்குகள் ஐவரைத் தெரிந்தெடுக்க முடியாதென விசயபாகு விளம்பினன் என்ப. அவன் பிக்குக்கள் பலரைப் பர்மாவிலிருந்து வரவழைத்தான்; விகாரைகளும் மடங்களும் பல கட்டினன்; சமந்தகூடத்திற்குச் செல்லும் யாத்திரிகர்க்கு உணவளித்தற் பொருட்டுச் சில வயல்களிற் பெறப்படும் அரசிறையைச் சேமித்து வைத்தான்; பிக்குக்கள் திரிபிடகங்களைப் பயிலுதலைக்கண்டு மகிழ்ந்தான்; தமிழர் பெருந் தொகையினர் வடபகுதியிற் குடியேறினராகலின், சைவக் கோயில்களை ஆதரித்தான்.

### சிற்றரசர்

விசயபாகு இருமுறை மணஞ்செய்தான். முதலாம் மனைவி வடவிந்திய மன்னன் யாகதிபாலனுடைய மகள் லீலாவதியாம். விசயபாகுவின் இரண்டாம் மனைவி கலிங்க மன்னனது மகளாம். அவள் ஐந்து பெண்குழந்தைகளையும் ஓர் ஆண்குழந்தையையும் பயந்தாள். அவ்வாண்குழந்தை விக்கிரமபாகு எனப் பெயர் பெற்றது. விசயபாகு மரணமடைந்த காலத்தில் விக்கிரமபாகு உருகுணையில் இருந்தானாகலின், விசயபாகுவின் தம்பி சயபாகு I முடிபெற்றான். விக்கிரமபாகு சயபாகுவோடு அறுமுறை

பொருது தன்னுரிமையைப் பெற்றான். அக்காலத்தில் உருகுணையில் உபராசர்கள் ஆண்டனர். விசயபாகுவின் சகோதரி மித்தை மூன்று குமாரரைப் பெற்றாள். அவர்களுள் மானாபரணன் என்பான் விசயபாகுவின் மகள் இரத்தினாவலியை மணந்து பராக்கிரமபாகு என்னும் குரிசிலைப் பெற்றான். மானாபரணனின் சகோதரன் கீர்த்தி ஸ்ரீமேகன் இரத்தினாவலியின் சகோதரியை மணந்தான். மித்தையின் இளையகுமாரன் ஸ்ரீவல்லவன் விசயபாகுவுக்கும் முதலாம் மனைவி லீலாவதிக்கும் பேரப்பிள்ளையாகிய சுகலையை மணந்தான். மித்தையின் குமாரர் மூவரும் உருகுணையில் உபராசராக இருந்தனர். விக்கிரமபாகு பௌத்த குருமார் தனக்கு எதிராகச் சயபாகுவிற்குத் துணைபுரிந்தனர் என்பதை நினைந்து பௌத்த பிக்குக்களை ஆதரிக்கவில்லையாகலின், பிக்குக்கள் உருகுணையை நாடினர். கூலிப்படையில் சேவிக்கும் தமிழர் மேன்மக்களை ஆறலைத்தனர். அரசியல் சீர்கெட்டது; குளங்கள் பார்ப்பாரின்றிப் பாழாயின. குடிகள் கலகம் விளைத்தனர். சிங்கள மன்னருடைய கோல் கோடிற்றென்றனர். அத்தருணத்தில் மானாபரணன் மரிக்க, கீர்த்தி ஸ்ரீமேகன் உருகுணையில் மன்னனாயினன். விக்கிரமபாகு 1 ஆண்டு ஆணைசெலுத்தி இறக்க அவன்மகன் இரண்டாம் கயவாகு அரசனாகி உருகுணையில் ஆளும் உபராசரிடம் திறைபெற முயன்றான். கடவாகு II. பொலநறுவரையைத் தலைநகராக்கி அரசாண்டான்.

---

## 3-ம் பாடம் பெரிய பராக்கிரமபாகு I

### ( ஆட்சிக் காலம் 1164 — 1186 )

பிற்காலத்து இலங்கை வேந்தருள் புகழ் பெற்றோன் பராக்கிரமபாகுவே. அவன் வதுளைக்கு அண்மையிலுள்ள சங்கத்தாலை என்னும் கிராமத்தில் பிறந்தான். அவன் தந்தை மானாபரணன், தாய் விசயபாகுவின் மகள். அவன் இளமையிலேயே இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளவிழைந்தனன். அவன் யானையேற்றம், குதிரையேற்றம், வாள் வித்தை, வில் வித்தை என்பவற்றைப் பயின்று போர்ப் பிரியனானான். அவன் ஆடல் பாடலிலும் இன்புற்றான். அவன் வேட்டையாடலிலும்

விருப்பமுடையவன். அவனுடைய பேச்சு நகைச்சுவை விரவிய தென்ப. அவன் இலக்கியவிலக்கணங் கற்றுச் சமய நூல்களையும் ஆராய்ந்தான். நூல் பல கற்றோனுகலின் பராக்கிரமபாகு தன் தேயத்தின் தேவைகளை நன்கு உணர்ந்தான். படைத் தலைமை வகித்தலிலும் அரசியல் நடாத்தலிலும் இலங்கை மன்னருள் அவனை ஒப்பார் இல்லையெனலாம்.

பராக்கிரமபாகு உருகுணைக்கும் மாயரத்தைக்கும் மன்னனுகிய கீர்த்தி ஸ்ரீ மேகவருணன் என்பானுடைய சேனுதிபதியாகிய சங்கனைக் கொன்று வதுளையைப் பிடித்தான். பின்பு அவன் பொலநறுவேரை சென்று கசபாகுவினுல் நன்கு உபசரிக்கப்பட்டான். நன்றியற்ற பராக்கிரமபாகு அரசவையிலிருந்து கசபாகுவைக் குடிகள் நேசிக்கிறுர்களோ என்பதை ஒற்றர் மூலம் ஆராய்ந்தான். அவனுடைய ஒற்றர் பாம்பாட்டிகளாயும், பாணராயும், சாத்திரம் சொல்வோராயும் கூலிக்காரராயும் வணிகராயும் வைத்தியராயும், சமய துறவியராயும், யாத்திரீகராயும் வேடம்பூண்டு திரிந்து, கசபாகுவின் குடிகளின் உள்ளத்தை ஆராய்ந்தறிந்தனர். பராக்கிரமபாகு தான் அறிய விரும்பியதை அறிந்தபின் தன்மீது கசபாகு அழுக்காறுறுதலை உணர்ந்து கீர்த்தி ஸ்ரீ மேகனேடு நட்பாயினன். கீர்த்தி ஸ்ரீ மேகன் இறக்க பராக்கிரமபாகு உருகுணையில் அரசுபுரிந்தான். பராக்கிரமபாகு உருகுணையில் குளந்தொட்டு வளம் பெருக்கித் தானியங்களைச் சேகரித்து வைத்தான். சிங்களர், தமிழர், வேடர் என்போர் யாவரையும் படைக்கலங்களில் பயிற்றினுன்; போர் நடாத்தற்கு இரத்தினம் விற்றுக் காசு தேடினுன்; அரசிறைகளும் கடமைகளும் உருகுணையில் அளவுகடந்து பெற்றுன். கசபாகுவின் மலைநாட்டுத் தலைவனை வேந்தனுடன் பகைக்கப்பண்ணித் தன்னேடு நட்பாக்கினுன். இங்ஙனம் ஆயத்தம் செய்தபின் பராக்கிரமபாகு போர் முரசறைந்து போரை ஊக்கமாக நடாத்தினுன். அரண்கள் பலவற்றை ஒன்றன்பின் ஒன்ருகப் பிடித்தான்; முடிவில் அநுராதபுரத்தையும் பொலநுவேரையையும் பிடித்தான். கசபாகுவும், பராக்கிரமபாகுவும் நண்பராக விரும்பினர். இருவரும் சந்தித்துப் பேசுமுன் பராக்கிரமபாகுவின் படைவீரர் கலகம் விளைத்தனராக, கயவாகுவின் அமைச்சர் சமாதானப் பேச்சை நிறுத்தி அரசை உரு

குணையில் ஒருபகுதியில் சிற்றரசனுயிருந்த மானுபரணனுக்கு அளித்தனர். குடிகள் பராக்கிரமபாகுவின் வீரர்களை வெறுத்துப் பராக்கிரமபாகுவைக் கலைத்தனர். மானுபர்ணன் வெற்றியடைந்து முடிபெற்றுன். அவன் கசபாகுவின் அமைச்சரைக் கொன்று கசபாகுவையும் நஞ்சூட்ட முயன்றுன். கசபாகு பராக்கிரமபாகுவின் உதவியை இரந்தான். பின்னர் கசபாகுவின் கட்சியார் பராக்கிரமபாகுவின் அதிகாரத்தைக் கெடுக்க எண்ணினராக அவர்களைப் பராக்கிரமபாகு அடக்கினுன். கசபாகு பிக்குக்களைத் தூது அனுப்பி தனக்கு வயசு முதிர்ந்தமையாலும் பிள்ளைகள் இல்லாமையாலும் தன்னைச் சாகுந்துணையும் அரசியலை நடாத்த விடும்படி பராக்கிரமபாகுவை இரந்தான். பராக்கிரமபாகு அவ் வேண்டுகோட்கு இசைந்தான். இதையறிந்த மானுபர்ணன் தான் துணைபுரிவான் எனச் சொல்லியனுப்பவும் கசபாகு II துணை உடன்படிக்கைக்கு மாறுகப் பராக்கிரமபாகுவோடு போர்புரிய மறுத்தனன். தான் இறந்தபின் அரசு பராக்கிரமபாகுவுக்கே உரியதாகுமென முரசறைவித்தான். கயவாகு மரிக்க, மானுபர்ணன் முடிபெற முயன்று பராக்கிரமபாகுவோடு அமர்புரிந்து தோல்வியடைந்தான். இவ்வண்ணம் பராக்கிரமபாகு I பொலநறுவரையிலிருந்து இலங்கை முழுவதையும் ஆண்டனன். பராக்கிரமபாகு I. 1153 ல் இராசரத்தை மாயரத்தை என்னும் இராச்சியங்களை ஆண்டனன். மானுபருணன் இறந்தபோதிலும் உருகுணைத் தலைவர்கள் அவனுடைய தாய் சுகலையைப் பராக்கிரமபாகுவோடு போர் தொடரும்படி ஏவினர்.

### பராக்கிரமபாகுவின் போராற்றல்

பராக்கிரமபாகு உள்நாட்டுப் பகைவரை அடக்கியபின் பர்மா தேயத்தாரோடு போர் தொடர்ந்தான். பர்மா தேயத்தினர் பௌத்த மதத்தினராகலின் சிங்களரோடு பலநூற்றுண்டுகள் நட்பா யிருந்தனர். 12-ம் நூற்றுண்டில் பர்மா நாட்டினர் பர்மாவில் வணிகஞ்செய்திருக்கும் இலங்கை வணிகரைத் துன்புறுத்தினர். இலங்கையிலிருந்து கம்போடியாவுக்குச் சென்ற அரசகுமாரத்தியைச் சிறையிட்டனர். பராக்கிரமபாகு போர் முரசறைந்து அதிகாரம் என்னும் ஓர் தமிழனைத் தானைத் தலைவ

னுக்கிப் பர்மாதேசத்து அரமான நாட்டு மன்னனைப் புடைத்து வரும்படி ஏவினன் அவன் சென்று பர்மவரசனைக் கொன்று சிங்களக்கொடியை அரமான நாட்டில் நாட்டினுன். அப்போர் கி. பி. 1180ல் நடந்தது.

பாண்டியரும் சோழரும் சிங்களரைப் பன்முறை வென்று துன்புறுத்தினர் என்பதைப் பராக்கிரமபாகு நினைந்து அவர்களின் செருக்கடக்குதற்குப் படை திரட்டினன். சிங்களர் தமிழரை வென்று இராமேஸ்வரத்தைப் பிடித்தனர். பராக்கிரமபாகுவினுடைய படைத்தலைவன் இலங்காபுரன் பாண்டிநாட்டில் பாண்டியரைப் புடைத்தான். பாண்டியருடைய தலைநகராகிய மதுரையைப் பிடித்துக் குலசேகர பாண்டியனைக் கலைத்து வீரபாண்டியனை அரசனுக்கினுன். சிங்களர் பாண்டியர் இருகட்சியினராகிப் போர்புரிந்த காலத்தில் ஒருகட்சியைச் சார்ந்தனர் என்பதுதான் உண்மை. ஒருகட்சியினரின் வெற்றிகளைத் தம்முடைய படைகளே அளித்தன எனச் சிங்களப் பிக்குக்கள் எண்ணினர். இலங்காபுரன் சோழநாட்டில் அமர் செய்து சூறையாடி நின்று சிங்கள நாணயங்களை வழங்கும்படி கற்பித்துத் திரும்பினுன் என்பர். வீரபாண்டியனையும் இலங்காபுரனையும் பாண்டியர் சோழருடைய உதவிபெற்று வென்றனர். இலங்காபுரன் போரில் கொலையுண்டான்.

## உள்நாட்டு அரசியல்

பராக்கிரமபாகுவினது ஆட்சிக் காலத்தில் பௌத்தர் மகாவிகாரமதத்தினர், அபயகிரி விகாரமதத்தினர், சேதுவன விகாரமதத்தினர் எனக் கட்சி பிரிந்து கலகப்பட்டனர். 1165-ல் பௌத்த பிக்குக்கள் அரசனுடைய ஆதரவில் ஒரு சபை கூடினர். சபை கூடியும் மதபேதம் அழியவில்லை. ஆயினும் மும்மதத்தினரும் நட்பாயிருக்க முயன்றனர்.

## கமம்

பராக்கிரமபாகு பலவிடங்களில் இளமரக் காக்களும் பூந்தோட்டங்களும் நீராடுந் தொட்டிகளும் மண்டபங்களும் நாட்டினுன்; குளங்கள் பல தோண்டுவித்துக் கமத்தொழிலைப் புரந்தான். அம்பன் கங்கையிலிருந்து ஒரு வாய்க்கால் மின்னேரி கந்த

ளாய் என்னும் இருபெருங் குளங்களையும் கிரித்தலை தொப்ப வாவி என்னும் குளங்களையும் இணைத்திருந்தது. அது 54 மைல் நீளமானது. அவ்வாய்க்காலைப் பராக்கிரமபாகு புதுப்பித்தான். அவ்வாய்க்காலை இக்காலத்தவர் பராக்கிரமபாகுவின் கடல் என அழைக்கின்றனர்.

### சிற்பம்

பராக்கிரமபாகு அநுராதபுரத்துக் கட்டிடங்களைப் புதுப்பித்தான். பொலநறுவேரையை அரண்களாலும் மதிலாலும் காவல்செய்தான். அம்மதில் பத்து மைல் நீளமானதெனத் தெரிகிறது. அவன் ஏழடுக்கு மாடமுடைய மாளிகை ஒன்று கட்டினான். அவன் ஓலக்க மண்டபமும் விளையாட்டு மண்டபமும் இந்துக்கோயில்களும் கட்டினான். இந்துக்கள் பலர் பொலநறுவேரையில் குடியாயிருந்தனராகலின் சிவன் கோயில்கள் பல கட்டினர். அவை இப்போது பாழாயிருக்கின்றன. அக்கோயில்களில் பிரதிட்டை செய்யப்பட்ட இலிங்கங்கள் அசைவற்றவையாய் இருக்கின்றன. இந்துச் சிற்பிகளின் கலைத்திறனை பொலநறுவேரையில் பாழாயிருக்கும் கோட்டங்களைப் பார்த்து அறியலாம். நந்திச் சிலைகளும் நடராசருடைய நடனச் சிலைகளும், தமிழருடைய சிற்பத்திறனுக்குச் சான்றாக இருக்கின்றன. பொலநறுவேரையில் புத்தருடைய சிலைகளும் பல எழுதப்பட்டன. புத்தர் மரிக்கும் பாவனையாக எழுதப்பட்ட கற்சிலை ஐந்தடி உயரமானது. அது ஏறக்குறைய ஐம்பது அடி நீளமானதெனலாம். அச்சிலையின் பக்கத்தில் சிஷ்யன் ஒருவன் கவலையுடன் நிற்பதைக் காணலாம். இவ்விரு சிலைகளும் உருவிலும் திருவிலும் மிகச் சிறந்தவை. பொலநறுவேரையில் பாழாயிருக்கும் சைத்தியங்களும் தமிழ்ச் சிற்ப முறையைத் தழுவியவை என்பதற்கு ஐயமில்லை. அரச மாளிகைக்குரிய கேணி மிக அழகாகக் கல்லால் கட்டப்பட்டிருக்கின்றது. அரச மாளிகை செங்கல்லாற் கட்டப்பட்டது. அரசனுடைய ஓலக்க மண்டபம் கல்லாற் கட்டப்பட்டது. பொலநறுவேரையில் முனிவர் சிலையொன்று ஏடு கைப்பிடித்த நிலையில் கற்பாறையில் எழுதப்பட்டுள்ளது.

### கலிங்கர்

பெரிய பராக்கிரமபாகு மரித்தபின் அவன் மருகன் விசயபாகு II அரச பதவியைப் பெற்றான். அவன் பாளிமொழி கற்

றேன். அவன் ஓர் ஆண்டு அரசியலை நடாத்தினான். கலிங்க தேசத்தவன் ஒருவன் அவனைக் கொன்று மிகுந்து 6-வது எனப் பட்டம் பெற்றான். அவன் முடிபெற்று ஐந்துநாட் கழியுமுன் நிசங்கமல்லன் என்னும் கலிங்கனால் கொல்லப்பட்டான். நிசங்க மல்லன் தான் பாண்டிய சோழ மன்னரை வென்றனன் எனப் புளுகினான். அவன் பாண்டிய சோழரிடம் விருந்தினனாகப் போனானேழிய அமர் செய்யப் போகவில்லை எனப் புலப்படுகிறது. அவன் 1198முதல் 1207வரையும் அரசாண்டான். அவன் கோயில்கள் குளங்கள் வாய்க்கால்கள் முதலியவற்றைப் புதுப்பித்தான்; நீதிமன்றங்கள் பல நாட்டினான்; வறியோர்க்கு நிலமளித்து உதவி செய்தான். அவன் தன் கொடைகளை ஓலையேட்டில் எழுதாமல் செப்பேட்டில் எழுதினான். அவனுடைய அரண்மனையைத் தாங்கிய சிங்கம் ஆங்கிலரால் கொழும்புக் காட்சிச்சாலையில் இடப்பட்டுளது.

விசயபாகு இறந்தபின் பராக்கிரமபாகுவின் விதவை லீலாவதி மும்முறை முடிபெற்று மும்முறை முடி இழந்தாள். கீர்த்தி நிசங்க மல்லனுடைய விதவை ஆறு வருடம் ஆண்டாள். லீலாவதி அரசுபுரிந்த காலத்தில் பாண்டியர் படையெடுத்து வந்து பொலநறுவேரையில் ஆண்டனர். இலங்கையில் ஆண்ட பாண்டியன் பெயர் பராக்கிரம பாண்டு. கலிங்கத்து மாகன் 20,000 வீரரோடு வந்து பாண்டியரைக் கலைத்து அரசபதவியைப் பெற்றான். கலிங்கர் இரக்கமின்றிக் குடிகளை வருத்தி அரசிறை பெற்றனர். தூபிகள் விகாரைகள் மடங்கள், முதலியவற்றைச் சூறையாடினர்; சனங்களை அடிமைகளாக்கினர்; பௌத்த நூல்களைத் தீயிலிட்டனர்; சிங்களரை இந்து மதத்தினராக்க முயன்றனர். மாகன் 21 ஆண்டு கொடுங்கோலோச்சினான். அவன் யப்பாகு தம்பதேனியா என்னும் அரண்களைப் பிடிக்கவியலாதிருந்தான். தம்பதேனியாவில் இருந்த விசயபாகு, கலிங்கரை மெல்லமெல்லக் கலைத்துத் தன்னாட்சியை உருகுணையிலும் மாயரத்தையிலும் நாட்டினான். விசயபாகு III இறந்தபின் பராக்கிரமபாகு II முடி பெற்றான். அவன் கற்று வல்லுநனாகிப் பண்டித பராக்கிரமபாகு எனப் பட்டம் பெற்றான். பராக்கிரமபாகு காளவாவிக் களத்தில் வென்று கலிங்க மாகனைக் கலைத்தடித்தான். பராக்கிரம

பாகு ஆண்டிருந்த காலத்தில் தாமிரலிங்கத்துப் பௌத்த மன்னன் சந்திரபானு என்பான் மலையரோடு பற்சின்னம் பெற வந்து இறங்கிக் கடற்கரைகளில் சூறையாடினன். பராக்கிரமபாகு அவனைப் பலமுறை புடைத்தான். சந்திரபானு பாண்டி நாட்டிலும், சோழ நாட்டிலும் படை திரட்டிப் பின்னருஞ் சூறையாடினன். பராக்கிரமபாகு அவனைப் பின்னரும் புடைத்தான். பராக்கிரமபாகு கோயில்கள் விகாரைகள் குளங்கள் என்பவற்றைப் புதுப்பித்துத் தம்பதேனியாவில் அரசாண்டிருந்தான். அவன் சமந்த கூடத்திற்குச் செல்லும் வழியைப் புதுப்பித்தான். சமனொளி இக்காலத்தில் சிவனொளி மலை எனச் சொல்லப்படும். பராக்கிரம பாகுவினது ஆட்சிக் காலத்திலே தர்மகீர்த்தி என்னும் பிக்கு மகாசேனனுடைய காலந் தொட்டுப் பராக்கிரமபாகுவினது காலம்வரையும் நிகழ்ந்தவற்றை எழுதி மகாவம்சத்துடன் சேர்த்தான். பூசவலியா என்னும் நூலும் அவன்காலத்துப் பிக்குக்களால் எழுதப்பட்டது. பூசவலியா பௌத்த வழிபாட்டையும் இலங்கைச் சரித்திரத்தையும் ஒருங்கு கூறுகின்றது.

---

## 4-ம் பாடம் யாழ்ப்பாணவரசு.

பராக்கிரமபாகுவின் மூத்தமகன் விசயபாகு 4-வது முடி பெற்றுத் தன் நண்பன் வீரபாகுவின் புத்தி கேட்டு ஆண்டனன். அவன் தம்பதேனியாவை மதிலால் காத்தான். யப்பாகு என்னும் மலையரணைத் தமிழரினின்றும் காக்கும்படி தன்தம்பி புவனேகபாகுவை ஏவினன். விசயபாகு தந்தையின் உபராசனாக இருந்தபொழுது சமந்தகூடம், கம்பளை, குருநாகலை, யப்பாகுவை முதலிய இடங்களைத் தரிசித்தான். அவன் கடற்கள்வன் சந்திரபானுவைக் கலைத்தான்; அவன் முடி பெற்று இரண்டு வருடம் கழியுமுன் அவனை அவன் படைத்தலைவன் மித்திரன் கொன்றான். விசயபாகுவினுடைய சகோதரன் புவனேகபாகு மித்திரனைக் கொன்று அரசனானன். அக்காலத்தில் யப்பாகுவைப் பிடித்தற்குக் குலசேகர பாண்டியன் தன் படைத்தலைவன் சயவீரசிங்க ஆரியச் சக்கரவர்த்தியை அனுப்

பினுன். அவன் புவனேகவாகுவை வென்று பற் சின்னத்தை எடுத்தான். அவன் யாழ்ப்பாணத்தில் ஓர் அரசை நாட்டினுன். யாழ்ப்பாணத்தரசர்கள் தமிழ் நாட்டரசரோடு நட்பாயிருந்து இலங்கையின் பெரும்பகுதியை ஆண்டனர். அவர்கள் தம்மை ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைத்தனர். அவர்கள் தலைநகர் நல்லூர். அவர்கள் 13ம், 14ம், 15-ம் நூற்றுண்டுகளில் வலி மிகுந்து வடவிலங்கையில் மாத்திரமன்றி சயவர்த்தன கோட்டைவரையும் தம்மாணையைச் செலுத்தினர். சயசிங்களின் மகன் குணவீரசிங்கவாரியன் கம்மியத் தொழிலாளரைத் தமிழ் நாட்டிலிருந்து கொணர்ந்து குடியேற்றினுன்; அவன் பருத்தி நூற் றெழிலையும், சாயங் காய்ச்சுந் தொழிலையும் புரந்தான்.

தென்னிலங்கையில் அரசாளும் பராக்கிரமபாகு III குலசேகர பாண்டியனேடு பொருது வெல்லமுடியா தென்பதை நன்கு உணர்ந்து திறையளித்து அவனுடைய நட்பைப் பெற முயன்றுன். அவன் பாண்டியநாடு சென்று ஆழிவேந்தன் குலசேகரனிடம் பற் சின்னத்தை இரந்து பெற்றுத் திரும்பினுன். அச்சின்னம் பொலநறுவேரையில் வைக்கப்பட்டது. பின்பு பராக்கிரமபாகுவின் மைத்துனன் புவனேக பாகு II குருநாகலையை இராசதானியாக்கினுன். தமிழரின் நெருக்கத்தால் சிங்கவர் மலைநாடுகளில் ஒதுங்கினர். பொலநறுவேரையும் அநுராதபுரமும் தமிழர் வசமாயின. புவனேகபாகுவின் மகன் பராக்கிரமபாகு 4-வது கி. பி. 1305-ல் முடிபெற்றுன்; அவன் குருநாகலில் மூவடுக்கு மாளிகை கட்டி அதில் பற் சின்னத்தை வைத்திருந்தான். அவன் சீதவாகையில் கண்ணபிரானுக்கு ஓர் கோயில் கட்டினுன். அவன் பௌத்தசாதகக் கதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பித்தான். சிதச்சங்கிரகம் என்னும் சிங்களவிலக்கணம் அவன் காலத்தில் எழுதப்பட்டது.

## இபின்பற்றூற்று

1344ல் இபின்பற்றூற்று என்னும் முகமதியன் மேலாபிரிக்காவிலுள்ள தஞ்சியர் என்னும் ஊரிலிருந்து புறப்பட்டுவந்து இலங்கை இந்தியா முதலிய தேசங்களைத் தரிசித்தான். அவன் மத்தித்தரைக்கடல் வழி வந்து அராபிக்கடல் அடைந்து கிழக்காபிரிக்காவில் உள்ள சாஞ்சிபாரில் தங்கிச் சீனத்திற்குச் செல்

லும் நோக்கத்துடன் கலமேறினன். கலமோட்டிய மாலுமி மாலைதீவு கண்டு இந்தியாவுக்குச் செல்ல எண்ணினன். வழி தெரியாமல் மாலுமி ஒன்பதுநாள் கடலில் அலைந்தான். பின்பு சேரன்தீவின் மலை புகைபோல் வானில் உயர்ந்து எழுவதைக் கண்டு கரைசேர்ந்தான். இபின்பற்றூற்ரு வடவிலங்கையில் இறங்கி ஆரியச் சக்கரவர்த்தியைத் தரிசித்தான். அவன் ஆரியச் சக்கரவர்த்தியோடு பார்சியமொழியில் பேசினன். ஆரியச் சக்கரவர்த்தி பெரிய கப்பற்படை வைத்திருந்தான் என அவன் குறித்தான். இபின்பற்றூற்ரு குருநாகலை அடைந்து உத்தரவு பெற்றுச் சமந்தகூடம் ஏறினன். அதன்பின் காலி, குருநாகலை முதலிய நகரங்களைக் கண்டு யாழ்ப்பாணம் திரும்பினன். யாழ்ப்பாணத்தி லிருந்து அவன் தமிழ்நாடு சென்ருன். பாண்டிநாட்டில் சிலகாலம் கழித்து பின்னர் அவன் சுமத்திரை சீனம் முதலிய கீழைத் தேசங்களைத் தரிசித்துத் தாய்நாடு திரும்பினன். அவன் நாடு காண்பதில் 24 ஆண்டு கழித்தானும்.

1347-ல் புவனேகபாகு குருநாகலையை விட்டுக் கம்பலையை இராசதானியாக்கினன். கம்பலையில் பராக்கிரமபாகு 5 என்பவனும் அவன்பின் விக்கிரமபாகு III என்பவனும் அரசாண்டனர். விக்கிரமபாகுவின் அமைச்சன் அழகேஸ்வரன் என்னும் அழகக்கோனரன் சயவர்த்தன் கோட்டையைக் கட்டினன். அக்காலத்தில் யாழ்ப்பாணத் தமிழர் சிலாபம், நீர்கொழும்பு என்னும் பட்டினங்களில் அரசிறை பெற்றனர். அழகேஸ்வரன் தமிழரைப் போரில் வென்ருனதலின் திறையளிக்க மறுத்தான். யாழ்ப்பாண மன்னன் குணவீரசிங்கனின் தம்பி தோல்வியடைந்து தொண்டமானற்றுக்கு அண்மையிலுள்ள பிலத்துவாரத்தில் ஒளித்தானும்.

அழகக்கோனரான் புவனேகபாகு என்னும் பெயர்பெற்று சயவர்த்தன கோட்டையில் (கொற்ரு) 1378 முதல் 1398 ஈருக ஆண்டான் 1405-ல் சீனர் புத்தரை வழிபடுதற்கு இலங்கை வந்தனர். மிங்பெச்சத்து மன்னன் யங்ஓ என்பவனின் ஆணைப்படி பற்சின்னம் பெறவந்த சிங்கோ என்பவனைச் சிங்கள மன்னன் விசயபாகு 6-வது இகழ்ந்தனுகலின், சீனர் 1408-ல் படையெடுத்து வந்து சிங்கள மன்னனையும் தேவியையும் சிறையிட்டுச் சென்றனர். சீனருடைய ஆழிவேந்தன் சிங்கள அர

சனையும் அரசியையும் விடுதலையாக்கினன். பராக்கிரமபாகு VI 1415 முதல் 1467 வரையும் ஆண்டனன். அவன் சீனருக்குத் திறையளித்தான். அவன் சயவர்த்தன கோட்டையில் மூவடுக்கு மாளிகை கட்டி, அதிற் பற்சின்னத்தைப் பொற் கலத்தில் இட்டு வைத்திருந்தான். அவன் இந்து மதத்தையும் ஆதரித்தான். கன்னட மன்னன் தேவராயன் II அனுப்பிய படையொடு பராக்கிரமபாகு பொருது வென்றான். அக்காலத்தில் மலைநாட்டினர் பகைத்தெழுந்து அடக்கப்பட்டனர். வன்னியரும் அரசனோடு பகையாயினர். அவர்களுடைய அரண்கள் சிலவற்றைப் பராக்கிரமபாகு பிடித்தான். அதன்பின் 1450-ல் ஆரியச் சக்கரவர்த்தியோடு அமராடும்படி அவன் சுப்புமால் குமாரனை ஏவினன். அவன் யாழ்ப்பாணத்தில் பொருது தமிழரைக் கொன்று வெற்றி முரசறைந்தான். பராக்கிரமனுடைய அரசவையைப் புலவன் ஸ்ரீ இராகுலன் சிறப்பித்தான். அவன் ஆறு மொழிகள் கற்று வல்லுநனாயினன். 1449-ல் அவன் காவிய சேகரம் என்னும் நூலை இயற்றினான்.

பராக்கிரமபாகுவின் பேரன் சயபாகு II முடிபெற்றான். ஈராண்டு கழியுமுன் சுப்புமால் அவனைக் கொன்று அரசுகட்டிலேறிப் புவனேகபாகு 6-வது எனப் பட்டம் பெற்று ஏழு வருடம் ஆண்டான். அவன்பின் பண்டித பராக்கிரமபாகு 7-வது அரசுபுரிந்தான். அவனைச் சுப்புமாலின் சகோதரன் பகைத்தெழுந்து அரசைப் பெற்று விக்கிரமபாகு 8-வது (விசய பாகு) என 20 வருடம் ஆண்டனன். அவன் இறந்தபின் அவனுடைய மூத்த மகன் தர்மபராக்கிரமபாகு 9-வது அரசனானான்.

### யாழ்ப்பாண மன்னரும் பறங்கியரும்

ஆரியச் சக்கரவர்த்திகள் வடவிலங்கையிலுள்ள குடாநாட்டில் ஓர் அரசை நாட்டினரெனக் கூறினோம். வடவிலங்கையிலுள்ள குடாநாடு யாழ்ப்பாணம் எனப் பெயர் பெற்றது. யாழ்ப்பாணவரசைப்பற்றிக் கைலாயமாலை கூறும் வரலாறு வருமாறு. சகராசச்சோழன் மகள் மாருதப்புரவீகவல்லி குதிரைமுகம் என்னும் நோய் நீக்கும் நோக்கத்துடன் கீரிமலையில் இருந்த காலத்தில் ஈழமண்டலத்துக் கதிரமலையில் ஆண்டிருந்த சிங்கமுகமுடைய வாலசிங்க மகாராசன் அவளை மணந்

தான். அவர்கள் புதல்வன் நரசிங்கன் அரசுபுரிந்த காலத்தில் வடவிலங்கையிலுள்ள குடாநாட்டை யாழ் இசைவல்லோன் ஒருவனுக்குப் பரிசிலாக அளித்தான். குடாநாடு இங்ஙனம் யாழ்ப்பாணம் எனப் பெயர்பெற்றது. யாழ்வல்லோன் இறந்த பின் யாழ்ப்பாணத்தோர் குலசேகர பாண்டியனிடம் ஓர் அரசனைப் பெற்றனர் என்ப. இப் பழங்கதையைக் கூறும் கைலாயமாலை சோழமண்டலத்து உறையூர்ச் செந்தியப்பன் மகன் முத்துக்கவிராயரால் இயற்றப்பட்டது. இந்நூல் கம்பர் உரைத்தகவி ஏரெழுபதுக்கும் மெனக் கவியரசு கம்பரைச் சுட்டுகின்றமையாலும் "சேதுபதிக்கும் செழும்பாசுரம் அனுப்பி" எனச் சேதுபதியைச் சுட்டுகின்றமையாலும் விசயநகர நாயக்கரின் ஆதரவின்கீழ் இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதியின் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆரியச் சக்கரவர்த்திகள் வருமுன் நிகழ்ந்தவை தெரியாமையால், புலவர் இக்கதையைச் சிருட்டித்தனர் போலும். இதுநிற்க.

குணவீரசிங்கவாரியன் இறந்தபின் கனகசூரியன் அரசபதவியைப் பெற்றுச் சிங்களரைக் கலைத்தான். வன்னியரும் சிங்களரும் அவனைக் கொலைசெய்ய முயன்றனராக, அவன் தன் தேவியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தொண்டை நாட்டுக்கு ஏகினன். அவன் காசி யாத்திரை சென்று மீண்டு வந்து பாண்டியனிடம் துணைபெற்று யாழ்ப்பாணக் குடிகளை வருத்தியிருந்த விசயபாகுவை வென்றான். அப்போரில் கனகசூரியன் மகன் பரராசசேகரன் வாள்வீரரோடு சிங்களருடைய சேனையுட் புகுந்து விசயபாகுவைக் கொன்றனன் என்ப. கனகசூரியன் தான் முன் பகைவர்க்கு அஞ்சி யோடியபொழுது துணைசெய்த சிவிகைத் தலைவனுக்கு பரராசசேகரக் கூறியான் என்னும் பட்டத்தையளித்துச் சிவியாதெருவையும் கொடையளித்தான். தன்னைக் கப்பலேற்றிய முக்கியனுக்குப் பட்டங்கட்டி என்னும் பட்டத்தை ஈந்தான்.

### பரராசசேகரன்

கனகசூரியனின்பின் அவன் மூத்த மகன் பரராசசேகரன் அரசனானான். இளைய மகன் சகராசசேகரன் இளவரசனானான். பரராசசேகரன் முடி சூடுமுன் சோழவரசன் புத்திரியாகிய

இராசலக்குமியை விவாகஞ் செய்தான். அவன் தன் இரண்டாம் பத்தினியாக பாண்டிய மழவன் மரபில் வந்த அரசகேசரியின் மகளாகிய வள்ளியம்மையை மணமுடித்தான். பின்பு காமக் கிழத்தியாக மணக்குடியிலிருந்த மங்கத்தம்மாளைக் கொணர்ந் தான். இராசலக்குமி சிங்கவாகு பண்டாரம் என்னும் இரு குமாரரைப் பயந்தாள். வள்ளியம்மை பரநிருபசிங்கன் என் னும் ஒரு குமாரனைப் பயந்தாள். மங்கத்தம்மாள் சங்கிலி என் னும் குமாரனைப் பெற்றாள். அரசன் தன் குமாரர் யாவரை யும் அன்போடு வளர்த்துக் கல்வியிலும் போர் வித்தையிலும் வல்லவர்களாக்கினான்.

## சகராசசேகரன்

சகராசசேகரன் மகா பண்டிதனாகத் துலங்கினான். அவன் ஊர்கடோறும் பாடசாலைகள் நிறுவிக் கல்வியை ஓம்பினான். யாழ்ப்பாணத்திலே தமிழ்ச்சங்கம் நிறுவிப் பல நூல்களைத் தமிழ் நாட்டிலிருந்து எடுப்பித்துச் சரசுவதி மகாலயத்தில் வைத்தான். பரநிருபசிங்கனின் சகோதரியை மணந்த அரச கேசரி என்னும் புலவனைக் கொண்டு இரகுவம்சத்தை மொழி பெயர்ப்பித்தான். தன் பெயரால் சகராசசேகரம் எனச் சோதிட நூல் இயற்றுவித்தான். தமயனின் பெயரால் பரராசசேகரம் என்னும் வைத்திய நூலை இயற்றுவித்தான். யாழ்ப்பாணப் புலவர்களுள் சின்னத்தம்பிப் புலவர் சிறந்தவராவர். அவர் பருளை விநாயகர் பள்ளு இயற்றினார்.

## பரராச சேகரனது அரசியல்

பரராச சேகரன் அரசியற் கருமத்தில் கண்ணும் கருத்து மாய் இருந்தான். அவன் யாழ்ப்பாணத்தை 32 வட்டமாகப் பிரித்து முப்பத்திரண்டு தண்டாதிகாரிகளை நியமித்தான்; கிராமந்தோறும் கிராமச்சபைகள் நிறுவினான். அச்சபைகள் கிராமக் காரியங்களைப் பார்த்தன. அவன் நாட்டைக் காத்தற்கு நிலப்படையும் கடற்படையும் தொகுத்துப் பயிற்றினான். பல விடங்களில் வைத்திய சாலைகளும் அன்ன சத்திரங்களும் அமைப்பித்தான். தன்னுடைய இளமரக்காவின் ஒரு பகுதி யில் மூலிகைகளை உற்பத்தி பண்ணினான். இங்ஙனம் செங்கோ

லோச்சிய காலை அரசவையைச் சுபதிருஷ்டமுனிவர் தரிசித்தனர். இவ்விராச்சியத்திற்கு இனியாது நிகழுமென விண்ணப்பஞ் செய்ய, அரசியல்நூல்வல்ல முனிவர் "வேந்தே, உன்னரசு குறைவின்றி நடக்கும். உன் மூத்த குமாரன் நஞ்சூட்டிக் கொல்லப்படுவான்; இளையவன் வெட்டுண்டு இறப்பான். இரண்டாம் பத்தினியின் வயிற்றில் பிறந்தவன் சங்கிலியின் மாய வலைக் குட்பட்டு அரசை அவன் கையிற் கொடுத்திடுவான்; சங்கிலியிடம் பறங்கியர் அரசைப் பறித்துக் கொடுங்கோலோச்சுவர். பறங்கியரிடம் ஒல்லாந்தர் அரசைப்பறித்து கொடுங்கோலோச்சுவர். ஒல்லாந்தரிடம் அங்கிலர் அரசைப் பறிப்பர். உன் சந்ததிக்கு அரசு ஒருகாலமும் மீள்வதில்லை" என்றாராம். இப் பழங்கதை திரிகோணமலைக் கல்வெட்டைப் பார்த்துச் சிருட்டிக்கப் பட்டது. அக்கல்வெட்டு வருமாறு:

"முன்னாட் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கி பிடிப்பானே — பொன்னாரு
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணர் போய்மாற
மானே வடுகாய் விடும்."

இப்பாட்டு சுபதிருஷ்டரின் சிஷ்யராகிய சித்தையாரின் சிஷ்யராகிய வையாபுரி ஐயரால் பாடப்பட்டதென்ப. இது மேனாட்டார் பலரும் இலங்கையில் வணிகஞ் செய்ய வந்த காலத்தில் 16-ம் நூற்றாண்டு அரசியல் வல்லோனால் இயற்றப்பட்டதாதல் கூடும். முனிவர் கூறியவாறு சங்கிலி அரசகுமரன் சிங்கவாகுவை நஞ்சூட்டிக் கொன்றான். சங்கிலிதான் நஞ்சூட்டினான் என்பது அரசனுக்குத் தெரியாது.

பரராசசேகரன் தன் இளைய குமாரன் பண்டாரத்தை இளவரசனுக்கித் தான் தீர்த்த யாத்திரை சென்றான். கும்பகோணத்தில் அவன் சோழனைச் சந்தித்தான். சங்கிலி சோழனுடைய தேர் எதிரே வழிவிடாமல் நின்றானாகச் சோழன் அவனைச் சிறையிட்டான். பரராசசேகரன் சோழன்பால் சங்கிலியை விடுதலையாக்கும்படி கேட்கச் சோழன் அரசனையும் சிறையிலிட்டான். இச்செய்தியைக் கேள்வியுற்ற பரநிருபசிங்கன் படையெடுத்துச் சோழனை அறைகூவினன். சோழனோடு பரநிருபசிங்கன் போர்செய்து தன் தந்தையையும் தம்பியை

யும் மீட்டான். உபகாரமாகப் பரநிருபசிங்கன் சில கிராமங் களைத் தந்தையிடம் பெற்றான். சங்கிலி அழக்காறுற்று அரசை வெளவுதற்குத் தருணம் பார்த்திருந்தான். ஒருநாள் பண்டாரம் நிராயுதனாய் பூந்தோட்டத்தில் உலாவும்போது அவனைச் சங் கிலி கொன்றான். சங்கிலி பரநிருபசிங்கனை நட்பாக்கி அரசை அவனுக்கும் பங்கிட்டான். சங்கிலி தானைத் தலைவனையும் தானை வீரரையும் பொருள் கொடுத்துத் தன்வசமாக்கினான். பரராசசேகரன் வலியற்று ஒன்றுஞ் செய்யமுடியாதிருந்தான்.

பரராசசேகரன் சோழன் அச்சுதப்பனுக்குத் தனக்குரிய திறையை அனுப்பவேண்டாமெனத் திருமுகம் விடுத்தான். பின்பு பரராசசேகரன் முடியையும் திரவியங்களையும் பிலத் துவாரத்தில் மறைத்து வைத்துத் திருக்கேதீச்சுரம் சென்று சுவாமி தரிசனஞ் செய்து, இராமேச்சுரஞ் சென்றான். அங்கே சித்திரக்கால் மண்டபமும் கர்ப்பக்கிரகமும் பழுதுற்றிருத்தலைக் கண்டு, அவற்றினைப் புதுப்பிக்குமாறு மந்திரியைக் கற்பித்தான். அவன் திரும்பி வருமுன் திருக்கேதீச்சுரத்தையும் பாலாவியின் மேற்குப் பாகத்தையும் கடல் கொண்டது. இது கி.பி. 1540ல் நிகழ்ந்ததென்ப. யாழ்ப்பாணத்தரசர் இராமேச்சுரம் திருக்கே தீச்சுரம் திரிகோணமலை என்னும் மூன்று ஆலயங்களையும் தரி சித்தற்கு யந்திரப் பறவை ஒன்று வைத்திருந்தனர் எனவும், அதனைச் சங்கிலி கவர்ந்து அக்கினிக்கு இரையாக்கினான் என வும் ஓர் பழங்கதை உண்டு.

### சங்கிலி

மன்னாரில் கிறித்தவராகிய 600 மக்களைச் சங்கிலி கொன் றான். 1564-ல் பறங்கியர் படை யாழ்ப்பாணத்தை அடைந்தது. சங்கிலி பறங்கியரின் நட்பைப் பெற விரும்பிச் சமாதானம் பேசிப் பதினோராயிரம் பவுண் கொடுத்தானும். பின்பு சங்கிலி யாழ்ப்பாணத்தில் வசித்த சிங்களர், சாவகர், வன்னியர் என்போரில் ஐயங்கொண்டு அவர்கள் யாவரையும் நாட்டை விட்டு ஏகும்படி முரசறைவித்தான். அக்காலத்தில் ஐம்பது வன்னியர் பாண்டி நாட்டிலிருந்து புறப்பட்டு நெடுந்தீவுக்கரை யில் மரக்கலங் கவிழ்ந்தமையால் இறந்தனரெனவும் ஒரு வன்னியன் தப்பினன் எனவும் கதை உண்டு. அவ்வன்னியன்

படைச்சேவை செய்திருந்தான். அவனுடைய படையில் தமிழ் நாட்டிலிருந்து வந்த அறுபது நம்பிகள் சேவித்தனர் இந்நம்பி கள் சாண்டாராயினர்.

இது நிற்க, குடிகள் சங்கிலியை விரோதித்துப் பரநிருப சிங்கனிடம் முறையிட்டனர். பரநிருபசிங்கன் குடிகளைக் காத் தற்குப் பல உபாயங்கள் தேடினன். சங்கிலிக்குப் புத்தியுரைக் கும்படி பலரை ஏவினன். முடிவில் பரநிருபசிங்கன் பறங்கிய ரிடம் துணை கேட்டான். சங்கிலி நஞ்சூட்டக்கூடுமென அஞ் சித் தான் சமுசயப்பட்டோரை மடைப்பள்ளியிலிருந்து நீக்கி னன். சங்கிலி சூறையாடும் மறவரை அடக்கிச் செங்கோல் செலுத்தினன் எனத் தெரிகிறது. பாண்டி நாட்டில் பஞ்சத் தால் வருந்திய குடிகள் பலரை யாழ்ப்பாணத்துக் கரண வாயில் குடியேற்றினன். சங்கிலி தன் அமைச்சன் அப்பா முதலியினுடைய புத்திரியைக் களவிற் புணர எண்ணினன். தந்தை தன் புதல்வியோடு அரசனையடைந்து பரநிருபசிங்க னிடம் அபயங் கேட்டான். அதன்பின் பரநிருபசிங்கன் சங்கிலி யோடு அமர்புரிய விழைந்து பறங்கியரிடம் துணை வேண்டி ஊர்காவற்றுறையிலிருந்த காக்கை வன்னியனை அத்துணையைப் பெறும்படி ஏவினன்.

## பறங்கியர் போர்

பறங்கியர் வணிகரைப்போல் வேடம்பூண்டு பண்ணைத் துறையில் இறங்கினர். சங்கிலி அவர்களை நகரில் இரவில் தங் கப்படாதெனவும், கலத்திற்கு மீளுதல் வேண்டுமெனவும் கற் பித்தான். பின்பு பறங்கியர் சங்கிலியோடு நட்பாயினர்போல் நடித்து பண்டசாலை கட்ட உத்தரவு பெற்றனர். சங்கிலி ஒரு நாள் வேட்டையாடிக் கடலோரமாக வந்து பறங்கியரின் கோட்டையைக் கண்டு கோட்டையை இடிக்கும்படி பறங்கி யரைக் கற்பித்தான். அடுத்தநாள் பறங்கியரும் சங்கிலியும் போர்புரிந்தனர். பறங்கியர் பீரங்கிப் படைகளையும் உபயோ கித்துச் சங்கிலியின் வில் வீரரையும், கவண் வீரரையும் கலைத் தனர். போர் பத்து நாள் நீடித்தது. 1700 பறங்கிய படை வீரர் மாண்டனர். முடிவில் பறங்கியர் புதுப்படை பெற்று ஊக்கங் கொண்டனர். பதினோராம் நாள் சங்கிலி பரநிருபசிங்

கன் போர்க்களத்தில் போர்க் கருத்தின்றி இருத்தலைக் கண்டான். சங்கிலி வீரர்களை உற்சாகப்படுத்தி 2400 பறங்கியரைக் கொன்றான். அப்போரில் பறங்கியருடைய வாட்படைத் தலைவன் இறந்தான். அதன்பின் பறங்கியர் ஓட்டம் பிடித்தனர். பறங்கிகள் ஊர்காவற்றுறையை அடைந்து காக்கை வன்னியனின் துணையோடு திரும்பி வந்தனர் சங்கிலியின் வீரர் வீரமாகாளிக்கு வேள்வி செய்யும் முறையைப்பற்றி தம்முள் வேற்றுமைப்பட்டிருந்தனர். சங்கிலி காக்கை வன்னியனின் வரவைக் கேள்வியுற்று மகிழ்ந்து அவனைக் காணுதற்குச் சென்றான். காக்கை வன்னியன் சங்கிலியை முத்தமிட்டுக் கட்டிப்பிடிக்க அவனுடன் வந்த வீரர் சங்கிலியை விலங்கிட்டனர். பரநிருபசிங்கன் சங்கிலியின்றிப் போர் செய்யப்படாதெனப் படை வீரருக்குக் கட்டளையிட்டான். சங்கிலியுடன் சென்ற படைத் தலைவனைப் பறங்கியர் கொன்றனர். அப்போது படை வீரர் ஓட்டம் பிடிக்கப் பறங்கியர் வெற்றி முரசறைந்து ஆரவாரித்தனர்.

இவையெல்லாம் கேட்ட பரராசசேகரன் காட்டுக்கோடினான். அவனைப் பிடித்துக் கொடுப்போர்க்குப் பரிசு கொடுக்கப்படுமெனப் பறங்கியர் முரசறைவித்தனர். முன் அமைச்சனாயிருந்த பார்ப்பான் ஒருவன் அரசனைத் தலை கொய்தற்குத் தேடித் திரிந்தான். பார்ப்பான் அரசனைத் தமியனாகச் சந்தித்துக் கபடமாக அவனுடைய வாளைப் பெற்று அரசனின் சிரசைக் கொய்தானாம். அப் பார்ப்பானைப் பறங்கியர் கொன்றனர். பின்பு பறங்கியர் சங்கிலியைக் கொன்றனராகச், சங்கிலியின் தேவி தீப்பாய்ந்தாள். சங்கிலியின் பிள்ளைகள் கோவைக்கு அனுப்பப்பட்டனர். பறங்கியர் பரநிருபசிங்கனைத் திறையரசனாக்கினார்கள். பரநிருபசிங்கன் ஒன்பது ஆண்டு திறை கொடுத்திருந்தான். பரநிருபசிங்கன் இறந்தபின் பறங்கியர் நல்லூர்க் கோட்டையை இடித்தனர்; கோயில்கள் பலவற்றைத் தகர்த்தனர்; திரவியங்களைச் சூறையாடினர்; சனங்களைக் கத்தோலிக்கராக்க முயன்றனர். சூறையாடிய திரவியங்களுள் வலம்புரிச் சங்கு ஒன்று மிக விலையுயர்ந்ததாம் யாழ்ப்பாணத்தரசருடைய முத்துப் பந்தரும், முத்துக் குடையும் கோவைக்கு அனுப்பப்பட்டனவாம்.

பரநிருபசிங்கன் இறந்தபின் பறங்கியர் அவனுடைய மகன் பரராசசிங்கனை மந்திரியாக்கினர். அவன் தன் மரண காலத்தில் தன் இல்லங்களையும் கிராமங்களையும் தன் பிள்ளைகளுக்குக் கொடுத்தான். அவன் இறந்தபின் பறங்கிகள் நல்லூர்க் கந்தசாமி கோவிலையும் மாவிட்டபுரம் கோவிலையும் இடித்தனர்.

1658-ல் ஒல்லாந்தர் உலகுகாவல் முதலியின் துணைபெற்று யாழ்ப்பாணக் கோட்டையை இலகுவில் பிடித்தனர். அவன் சோழ நாட்டிலிருந்து அரச துரோகியென நாடு கடத்தப்பட்டுக் காரைதீவில் குடியேறியவன். அவன் பறங்கியரோடு நட்பாயிருந்தபோதிலும் அவர்களுடைய கொடுங்கோலை வெறுத்து ஒல்லாந்தருக்குத் துணைபுரிந்தான்.

---

# 9-ம் அதிகாரம்:
# உரோமர் தனிக்கோல் இறுதிக்காலம்

## 1-ம் பாடம்: கன்ஸ்ராந்தையினும் கிறிஸ்தவ மதமும்.

கி. பி. 305ல் மாச்சிமியன் தன்னரசைத் துறந்து தன் ஊரில் இளைப்பாறினன். கலேறியஸ் தாசர் என்னும் தன் மருகருக்கும் சவரஸ் என்னும் ஓர் ஏவலாளனுக்கும் கைசர் பட்டத்தை நல்கினன். மச்சந்தியஸ் என்போன் ஆபிரிக்க நாட்டில் பகைப்படை திரட்டினன். கலேறியனுக்கு எதிராகக் கன்ஸ்ராந்தையினும் கல்லியநாட்டிற் படை சேர்த்தான். கன்ஸ்ராந்தையின் கி. பி. 274-ஆம் ஆண்டில் டேசியமாகாணத்திற் பிறந்தான். 306-ல் கல்லியா தேசத்திற்குச் தனித் தலைவனானன். பிறநாட்டிற் பிறந்தோர் அரசு செலுத்தியமையால் தம் உரிமைகள் குன்றின என உரோமர் எண்ணினர். தாம் இறை இறுக்கவும் நேரிடுமென ஐயுற்றனர். உரோமர் தம்நாட்டிற்பிறந்த மச்சந்தியனுக்குத் தலைமைப்பதவியை அளித்தனர். இச்செய்தியைக் கலேறியஸ் என்னும் தலைவனும் சவரஸ் என்னும் தலைவனும் கேள்விப்பட்டு உரோமாபுரத்திற்கு விரைந்

தனர். கலேறியஸ் தன் நண்பன் லிசினியஸ் என்போனைத் துணைவனுக்கிச் சவரஸ் என்பவனை எதிர்த்தான். மச்சந்தியஸ் தன் தந்தை மாக்சிமியனோடு கலகப்பட்டான். கலேறியன் மச்சந்தியனை வென்றுனுக, மாக்சிமியன் நாணய சாலையைத் தன் வசமாக்கினுன். கன்ஸ்ராந்தையின் மாக்சிமியனோடு பொருது வென்றுனுக, மாக்சிமியன் தற்கொலை புரிந்துகொண்டான். கலேறியஸ் சிற்றின்பங்களை நுகர்ந்து நோய்வாய்ப்பட்டு உடம்பு வீங்கி இறந்தான். கன்ஸ்ராந்தையின் கல்லியா தேசத்திற் செங்கோல் செலுத்தினுன். மச்சந்தியஸ் உரோமாபுரத்திற் கொடுங்கோலோச்சினுன். அவனுடைய காற்படை 170,000; பரிப்படை 18,000. கன்ஸ்ராந்தையின் 8000 குதிரைகளோடும் 90,000 காற்படையோடும் அல்புமலையைக் கடக்க, மச்சந்தியனுடைய படை கலைந்தது. கன்ஸ்ராந்தையின் உரோமாபுரத்தில் அரசியல் செலுத்தத் தொடங்கினன். அவன் காவற்படையைக் குலைத்தான். மேன்மக்கட்சபையின் அதிகாரம் உடனே குன்றிற்று. கன்ஸ்ராந்தையின் லிசினியஸ் என்பவனுக்குத் தன் தங்கை கன்ஸ்ராந்தியாவை மணம்பேசினுன். இத் தருணத்தில் எகிப்தில் இருந்த தேசாதிபதி மச்சிமின் என்போன் தனித் தலைமைப் பதவியை விழைந்தான். லிசினியஸ் 30,000 வீரரோடு சென்று அவனை அடக்கினுன். பின்பு லிசினியஸ் நன்றிமறந்து தன் நண்பன் கலேறியனுடைய மனைவி மக்களைக் கொன்றுன். கி. பி. 314-ல் கன்ஸ்ராந்தையின் மேல்நாடுகளை ஆண்டான். கீழ்நாடுகளை லிசினியஸ் ஆண்டான். கன்ஸ்ராந்தையின் லிசினியனோடு போர் தொடர்ந்தான். இங்ஙனம் ஆங்காங்கெழுந்த தலைவர் பலரை யடக்கி உரோம நாடுகள் யாவற்றிற்கும் கன்ஸ்ராந்தையின் தனித் தலைவனுனுன்.

### கிறிஸ்து மத வரலாறு

கிறிஸ்து மதம் பரம்பியதற்கு முக்கிய காரணம் கிறிஸ்தவரின் சமயாபிமானமே. பண்டைக்காலத்துக் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்திற்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ் செய்தனர். முதல் நூற்றுண்டில் யூதர்மாத்திரமே கிறிஸ்துமதத்தை வழிபடுதற்கு உரிமை யுடையவராயிருந்தனர் பின்னர் அஞ்ஞானிகள் எனப்படும் பிறமதத்தோரும் கிறிஸ்தவராயினர்.

கிறிஸ்தவ சமயகுரவர் செய்த அற்புதங்களை நம்பிய பலர் கிறிஸ்தவராயினர். மேலும் குருமாரின் சங்கம் குருமாருடைய ஒழுக்கத்தைக் காத்தது. துறவிகளும் குருமாரும் தங்கள் மதத்தைப் பரப்புதற்கு நனி முயன்றனர். உரோமர் தனிக்கோலர் கிறிஸ்துமதத்தைத் தழுவியதும் கிறிஸ்துமதம் பரம்புதற்கு ஒரு சிறந்த காரணமாகும். யூதருடைய கிரியைகளைச் சகலரும் வெறுத்தனர். யூதர் பன்றியிறைச்சி உண்ணார். கைசர்கள் யூதரை முரடர் என எண்ணினர். எருசலம் நகரிலுள்ள யூதர் கோயிலைக் கைசர்கள் இடித்தனராக, யூதர் சமயம் ஒடுங்கிக் குன்றியது. இத் தருணத்தில் கிறிஸ்தவர் யூத கிரியைகள் அவசியமற்றவை எனப் போதித்துக் கிறிஸ்தவராதற்கு நுனித்தோலைக் கத்தரிக்க வேண்டியதில்லையெனத் தீர்மானித்தனர். கிறிஸ்தவ சமயம் பெருகியதாக அலெக்சாந்திரியாநகர், கொறிந்துநகர், நிக்கமீடியாநகர் உரோமாபுரம் முதலிய இடங்களில் வெவ்வேறு கொள்கையுடைய கிறிஸ்து சமயச் சங்கங்கள் தோன்றின. யூதகிறிஸ்தவர்கள் தம் கொள்கைகளை இச்சங்கங்கள் பாராட்டாமையை யுணர்ந்து தாம் ஒரு தனிக் குழுவாக இருந்தனர். கிறிஸ்தவர்கள் விக்கிரக ஆராதனையை வெறுத்தனர்; நாடகக் காட்சியைக் கண்டித்தனர்; கிரேக்க தேவதைகளைப் பசாசுகள் எனப் பழித்தனர்; ஹோமர் வேசிலியஸ் என்னும் புலவர்களைப் பாசாசுகளின் துணைவரெனக் கூறினர். கிறிஸ்தவர் மறுமையுண்டென நம்பினர். டஸ்தின்மாட்டர் என்னும் கிறிஸ்தவ குருவும் ஐறேனியஸ் என்னும் கிறிஸ்தவகுருவும் கிறிஸ்து மறுபடியும் பிறப்பர் என வற்புறுத்தினர். கிறிஸ்தவர் இரு பெண்டிரை விவாகஞ் செய்தலைக் கண்டித்தனர். தேசாபிமானத்திலும் சமயாபிமானத்தையே போற்றினர். கிறிஸ்தவருடைய ஒழுக்கங்களைக் குருமார் கவனித்தனர். கிறிஸ்தவ கோயில்களுக்கு நிலமும் பணமும் நன்கொடையாக அளிக்கப்பட்டன. கிறிஸ்தவருடைய வரலாறுகள் கிரேக்க மொழியில் எழுதப்பெற்று, லத்தின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. தன் காலத்தில் 50000 கிறிஸ்தவர் இருந்தார் என ஆசிரியர் ரசிற்றஸ் எழுதினார். முதன்முதல் கிறிஸ்துசமயம் ஆபிரிக்க நாடுகளிற் பரம்பிற்று. கிளமன்ஸ், ரேட்டுலியன், ஒரிசின் என்னும் கிறிஸ்தவகுருக்கள் யவனருடைய தத்துவ நூல்களைக்

கற்றனர். பிளினி, ரசிற்றஸ், புளூற்ருக்கஸ், கலன், எப்பிக்ரெற்றஸ் என்னும் அறிஞர்கள் கிறிஸ்தசமயக் கொள்கைகள் சிறப்பற்றவை எனக் கிளந்தனர். அந்தோநயினர், ஔறிலியர் என்னும் தலைவர்கள் கிறிஸ்து சமயத்துக்கு ஆதரவளிக்க வில்லை. உரோம தேசாதிபதிகள் கிறிஸ்துமதத்தை மதித்திலர். கிறிஸ்தவர்கள்மேற் றொடரப்படும் வழக்குகளை ஏற்றிலர். கிறிஸ்தவரும் யூதரும் சொற்பிரயோகங்களைப்பற்றி வீண் வாதாடுகின்றன ரென நினைத்தனர். தலைவன் நீரோ கிறிஸ்தவரைத் துன்புறுத்தினன். உரோமாபுரம் தீப்பற்றியதாக, சனங்கள் நீரோமீது ஏற்றிய குற்றத்தை அவன் கிறிஸ்தவர் மீது ஏற்றினன். நீரோவினுடைய காமக்கிழத்தி பப்பியாசபினு என்பவள் யூதசாதியினளாதலின் நீரோ யூதரைக் காத்தான். இளைய பிளினி கிறிஸ்தவரைத் தண்டித்தற்குப் பிரமாணங்கள் ஏற்படாமையால் தான் தேசாதிபதியாக இருந்துழி அவர்களைத் தண்டிக்கவில்லையென எழுதியிருக்கிறார். உரோமர் கீழ்மக்கள், கிறிஸ்தவர்களை வெறுத்து வழக்குத் தொடர்ந்தனர். உரோமர் தலைவர்கள், கீழ்மக்களின் சான்று நீதிமன்றத்திற் செல்லாதென விடுத்தனர். டேசியர், மச்சிமின் என்னும் தனிக்கோலர்கள் தம்மைத் தேவரென மதித்துப் பலியிடுகின்றிலர் எனக் கிறிஸ் தவரைத் தண்டித்தனர். ஓரிசின் என்னும் குரு தனிக்கோலன் பிலிப்பின் ஆதரவைப் பெற்றான். டையக்கிளீசியன் கிறிஸ் தவரை வருத்தினனெனக் குருமார் கூறினர். ஆனால் அவன் ஒன்பது குருமாரை மாத்திரம் கொன்றான் எனத் தெரி கின்றது.

### கன்ஸ்ராந்தையின் அரசியல்

கி. பி. 324-ஆம் ஆண்டு லிசினியஸ் என்னும் தலைவனை வென்றபின், கன்ஸ்ராந்தையின் கன்ஸ்ராந்திநப்பிள் என்னும் பைசாந்தியத்தைத் தலைநகராக்கினன். கன்ஸ்ராந்தையின் உருவில் உயர்ந்தோனெனவும் திருவிற் சிறந்தோனெனவும் ஊக்கமுடையவன் எனவும் கத்தோலிக்க கிறிஸ்தவரால் பாராட்டப்பட்டான். அவன் அரசர்க்குரிய அணிகலன்களை யணிதலில் விருப்பமுடையோன். அவனுடைய முதன்மனைவி மினேர்வின கிறிஸ்பஸ் என்னும் ஒரு மகனைப் பெற்றாள். இரண்டாம் மனைவியாகிய பௌஸ்தா என்பவள் மாக்சிமிய

னுடைய மகள். அவள் மூன்று ஆண்குழந்தைகளையும் மூன்று பெண் குழந்தைகளையும் பயந்தாள். அம்மூன்று ஆண்குழவிகளின் பெயர் கன்ஸ்ராந்தையின், கன்ஸ்ராந்தியஸ், கன்ஸ்ரான்ஸ் என்பன. வேந்தனுடைய சகோதரர் மேன்மக்கட் குடும்பத்தில் மணம் புரிந்தனர். யூலியஸ் கன்ஸ்ராந்தையின் என்பவன் கல்லஸ், யூலியன் என இரு குமாரரைப் பெற்றான். வேந்தனுடைய மகன் கிறிஸ்பஸ் தன் தந்தைக்குத் துணைபுரிந்து தலைவன் லிசினியனைக் கடற்போரில் வென்றான். வேந்தன் தன் முதன்மனைவி பயந்த கிறிஸ்பஸ் என்போனை வீட்டில் வைத்து இரண்டாம் மனைவியின் குமாரரைக் கைசராக்கி அரசுரிமையை ஈந்தான். பெஸ்தாவின் தூண்டுதலால் கிறிஸ்பஸ் கொல்லப்பட்டான். அவள் கிறிஸ்பஸ் தன்னைக் காமுற்றான் என வழக்குரைத்தாள். பதிலுக்குப் பதிலாக, கிறிஸ்பனுடைய பாட்டி எலீனா என்பாள் பெஸ்தா ஓர் அடிமையோடு கூடினாள் எனச் சான்று சொல்லிப் பெஸ்தாவை வெந்நீரில் அமிழ்த்திக் கொன்றாள். கன்ஸ்ராந்தையின் தன் மக்கள் மூவரையும் கிறிஸ்தவரைக்கொண்டு கற்பித்தான்,

சாமீசியர், விஸ்தியூலா, வல்கா என்னும் நதிகளின் இடைப்பட்ட முல்லை நிலங்களில் தம் பட்டிகளை மேய்த்தனர். அவருடைய பண்டிகளை எருதுகள் இழுத்தன. அவர்கள் குதிரையேற்றம் பயின்றனர். அவர்களுடைய வில்வீரர் நஞ்சு பூசிய அம்புகளை உபயோகித்தனர். மீன் முள்ளே அவர்களுடைய ஈட்டியாகும். சாமீசிய வீரரின் தோற்றம் பயங்கரமானது. அவ் வீரருடைய தாடி அச்சம் விளைக்குந் தன்மையது. சாமீசியர் தம்மைக் கொத்தர் நெருக்கினர் எனக் கூறி உரோமரிடம் துணை வேண்டினர். கி. பி. 331-ல் அலாறிக்கு கொத்தருக்கு வேந்தனானான். கொத்தரைக் கன்ஸ்ராந்தையின் தானியூபிநதியளவும் கலைத்தாளுக, 300,000 சாமீசியர் உரோம நாடுகளிற் குடியேறினர். 30 வருடம் ஆண்டபின், வேந்தன் கன்ஸ்ராந்தையின் இறந்தான். அவன் இறந்தபின்னும் அரசனுக்குரிய மரியாதை அவன் கூட்டுக்கு அளிக்கப்பட்டது, அவன் மகன் கன்ஸ்ராந்தையின் II தலைநகரில் ஆண்டான். கன்ஸ்ராந்தியஸ் கீழைத்தேசங்களில் அரசுபுரிந்தான். கன்ஸ்ரான்ஸ் உரோமாபுரத்தை ஆண்டான். கன்ஸ்ராந்தியஸ் பார்

சியரோடு போர்புரிந்து பார்சியவேந்தன் சப்போர் என்பவனுல் கி. பி. 337-தொடக்கம் 360 ஈருக உள்ள காலத்தில் ஒன்பது முறை வெல்லப்பட்டான். கன்ஸ்ரான்ஸ் கன்ஸ்ராந்தையினைக் கொன்ருன். கொன்ரேனை மக்கந்தியஸ் என்னும் வீரன் கொன்ருன். கி. பி. 351-ல் கன்ஸ்ராந்தியஸ் மக்கந்தியனை வென்று தனிக்கோலோச்சினுன். அவன் யூலியனை அலிமானியரை அடக்கும்படி ஏவினுன். தனக்கடாத தொழிலைச் செய்யும்படி அரசன் ஏவினுன் எனச் சிறுவன் பிரலாபித்தான். "பிளேற்ரேவே நான் என்செய்வேன்" என அவன் அழுதான். கி. பி. 356-ல் யூலியன் றையின் நதியைக் கடந்து 20,000 அலிமானியரைச் சிறையாக்கித் திருப்பினுன்.

முதலாவது கன்ஸ்ராந்தையின் கி. பி. 306-ல் கிறிஸ்தவனுன் என ஓர் ஆசிரியர் செப்புகிருர். எசூபியஸ் என்னும் வேருேர் கத்தோலிக்கர் "கி. பி. 312-ல் வேந்தன் ஓர் அற்புதங் கண்டு கிறிஸ்து மதத்தைத் தழுவினுன்" என உரைக்கின்றனர். கன்ஸ்ராந்தையின் கி. பி. 321-ல் ஞாயிற்றுக்கிழமையைத் தெய்வ வழிபாட்டிற்குரிய நாளாகக் கவனிக்கும்படி தன் குடிகளுக்குக் கட்டளையிட்டான். கிறிஸ்தவரிடம் பறித்த நிலங்களைத் திருப்பி யளித்தான். அவனைச் சேவித்த அந்நியர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். அரசன் சிலுவைச் சின்னத்தைத் தன் கொடியில் எழுதுவித்தான். கத்தோலிக்க குருமாரை அமைச்சராக்கி, அரசியலை நடாத்தவைத்தான். அவனுடைய குருமார் உரோமருடைய கோயில்களை இடித்துக் கிறிஸ்து மதத்தைப் பரப்பினர்.

---

## 2-ம் பாடம்: யூலியனும் உரோம மதமும்

கல்லியா தேசத்தில் யூலியன் படைவீரரால் பாராட்டப்படுகிருனெனக் கன்ஸ்ராந்தியஸ் கேள்வியுற்ருன். யூலியனைப் புலம்பெயர்ந்து பார்சியரோடு போர்புரியும்படி ஏவினன். யூலியனைச் சேவித்த செர்மானியர் பிறதேசஞ் செல்ல விருப்பவில்லை. யூலியன் ஒன்றும் செய்ய இயலாது கலங்கித் தன் பதவியைத் துறக்க நினைத்தான். பின்னர்த் தன் படைவீரரை முகமன்

கூறித் தன்வசப்படுத்திப் பார்சியப்போர் நடாத்துதற்குப் புறப் பட்டான். அன்றிரவு படைவீரர் யூலியனைத் தனித் தலைவ னெனத் தொழுதனர். யூலியன் வீரரைக் கெஞ்சினுன்; படை மீது சீறினுன்; ஒன்றும் செய்யமுடியாமல் தலைமைப் பதவியை ஏற்ருன். கன்ஸ்ராந்தியஸ் யூலியனுடைய நாட்டைப் பிடிக் கும்படி கொத்தரை ஏவினுன். உரோமர் மேன்மக்கள் யூலிய னைத் தலைவனென வாழ்த்தினர். யூலியன் சிற்றின்பங்களை வெறுத்தோன், ஆதலின் உண்டாட்டுச் செலவைக் குறைத் தான்'. நாவிதர் பலர் அவசியமில்லையெனக் கூறித் தன் முன் ஞேனுக்குப் பணிசெய்த 20 நாவிதரை விலக்கினுன். யூலியன் நிலத்திலே படுத்து உறங்கினுன். யூலியன் பலபடப் புனைந்து பேசும் வல்லமையுடையவன்; உரோம தேவதைகளைப் பத்தி யோடு வணங்கினுன், யவன நூல்களுக்கு உரைகளெழுதினுன்; யவனர் கோயில்களில் அந்தரங்க கிரியைகளைச் செய்யும் உரிமை பெற்ருன். அக்கிரியைகளைச் செய்தற்குப் பிற மதத்தோர்க்கு உரிமையில்லையென யவனர் வற்புறுத்தினர். அந்தரங்கக் கிரியை கள் குகைகளில் வாத்திய ஆரவாரத்துடன் செய்யப்படும். அத் தருணத்தில் கடவுள் ஒரு சோதியாகப் பிரசன்னமாவர். யூலியன் தேவர் பலருடன் அளவளாவிப் பேசினனெனவும் அவர்களின் குரல் வித்தியாசத்தையும் அறிந்தோனெனவும் அறியக்கிடக்கின் றது. யூலியன் பிற மதத்தோரைத் துன்புறுத்தவில்லை. அவன் ஆதித்தபகவானுக்குத் தீ மூட்டிப் பலியளித்தான். அவன், எருச லெம் கோயிலைப் புதுப்பிக்க எண்ணினுனுக, யூதர் பொருளீந் தனர். கோயில் அடித்தளத்திலிருந்து தீ கனன்றதாம். ஆகலின் கோயில் கட்டப்படவில்லையெனக் கிறிஸ்தவ ஆசிரியர் எழு தினர். ஒருநாள் யூலியன் இசைக்கடவுள் அப்போலோத் தேவ ரின் விழாவைக் கொண்டாடினுனுக, கிறிஸ்தவர் பபிலாஸ் என்னும் குருவின் விழாவைக் கொண்டாடினர். அன்றிரவு அப்போலோவின் கோயில் எரிந்தது. உரோம உத்தியோகஸ்தர் கிறிஸ்தவர்களே தீயிட்டனரென ஐயுற்று அவர்களைத் துன் புறுத்தினுர்கள்.

யூலியன் அவர்களைத் துன்புறுத்தவேண்டாமென்று தடுத் தனன். அலெச்சாந்திரியா நகரத்தின் குரு யோர்ச்சு என்போன் பல கோயில்களை இடித்தான். அவனைச் சனங்கள் கொன்ருர் கள். இந்த யோர்ச்சுத்தான் ஆங்கிலேயருடைய இஷ்ட சமய

குரவனானன். அதனாசியஸ் குருப் பட்டம் பெற்றான். அவனைச் சற்சமய விரோதியென யூலியன் துரத்தினான். அவன் வனாந்தரம் சென்று வாழ்ந்தான். நிற்க, ரோமியூலஸ் தேவர்க்கு விருந்தளித்தனன் எனவும், கொடுங்கோலர் நரகத்திலிடப்பட்டனர் எனவும், யூலியஸ் கைசர், அகஸ்தஸ், திராசன், மாக்கஸ், அந்தோநயினன் முதலியோர்க்கு முதற் கடவுள் சேயஸ், கண்ணியளித்தனர் எனவும், உரோம வீரரோடு அலேச்சாந்தர் வீரம் பேசினர் எனவும், மாக்கஸ் ஒளறிலியனுடைய மௌனத்தைத் தேவர்கள் வியந்தனர் எனவும் ஓர் இனிய கட்டுரையை யூலியன் வரைந்தான். இந்தியா இலங்கை முதலிய தூர தேசத்துத் தூதர்கள் யூலியனுடைய செங்கோலைப் புகழ்ந்து பாராட்டினர். சிரியா தேசத்தில் வற்கடம் நிகழ்ந்ததைக் கேள்வியுற்றுச் செலவைச் சுருக்கும்படி யூலியன் குடிகளை ஏவினன். ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் கீழைத் தேசத்தவர்களுக்கு அப் புத்திமதி கசப்பாயிருந்தது. அவர்கள் தலைவனை இழித்துப் பாடினர். அவனும்அவர்களை இழித்து வசைப்பாட்டுக்கள் பாடினான். யூலியன் பார்சிய தேசத்தையணுகி அங்குள்ள சந்திரன் கோயிலில் வணங்கினன். பின்னர் 65,000 வீரரொடு அசிரிய நாடுபுக்கு வெற்றி பெற்றான். ஒவ்வொரு வீரனுக்கும் 130 வெண் பொற் காசு கொடுத்தான். அசிரியர் ஆற்று வெள்ளத்தைத் திறந்துவிட்டாராக, உரோம வீரர் அலைந்தனர். யூலியன் பார்சிய நாடு திரும்பிப் பார்சியரொடு பொருதான். அவன் இந்தியாவையும் பார்க்க விரும்பினானும் படைவீரர் அங்கு செல்ல விரும்பவில்லை. போரில் புண்பட்டுத் தன் 32-ஆம் வயதில் யூலியன் தன் யாக்கையை விட்டனன். அவன் கி. பி. 364-ல் சுவர்க்கம் புகுந்தான். யூலியன் இளவயதில் இறந்திராதிருப்பின் கிறிஸ்து சமயம் அழிந்திருக்கும். யோவியன் என்னும் ஒரு வீட்டுப் பணிவிடைக்காரன் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். பார்சியர் உரோமராட்சியிலிருந்த 5 நாடுகளைப் பிடித்தனர். உரோமருடைய படைவீரர் யோவியன் இறந்திருப்பதை ஒருநாட் காலை கண்டனர். வலந்தினியன் மேல்பாகத்து இராச்சியத்துக்கும், அவன் தம்பி வலன்ஸ் கீழ்பாகத்திற்கும் தலைவராயினர். இருவரும் ஒற்றர்மூலம் தம் பகைவரை ஒற்றியறிந்து கொன்றனர். இக்காலத்தில் அலிமானியர் கல்லியா நாட்டினின்று துரத்தப்பட்டனர்.

ஆங்கில சாக்சன் என்னும் செர்மானிய சாதியார் பிரித்தானியா தேசத்தில் இறங்கினர். அவர்களைத் தியடோசியஸ் துரத்த முயன்றான். பார்சிய வேந்தன் சப்போர் ஆர்மீனிய நாட்டைத் தனது ஆட்சிக்குட்படுத்தினான். கொத்தரை வலன்ஸ் துரத்தியடித்தான். வலந்தினியன் சவராவை மணந்து கிருசியானஸ் என்னும் மகனைப் பெற்றான். சில ஆண்டுகளுக்குப் பின் யஸ்தீனாவை மணந்து ஒரு குழவியைப் பெற்றான். கி பி. 365-ம் ஆண்டு மத்தியதரைக் கடலில் பூகம்பம் நிகழ்ந்தது. கடல் நிலமாயிற்று. மீன்கள் காய்ந்து வறண்டு தீ நாற்றம் வீசிற்று. பெருந் திரையொன்றெழுந்து கிரேக்கு எகிப்து என்னும் நாடுகளை அள்ளிற்று. அலெச்சாந்திரியா நாட்டில் 50,000 சனங்கள் இறந்தனரென்ப.

## அவுணர் (ஹூணர்)

கி. பி. 376 - ல் அவுணர் உரோமரைத் தாக்கினர். ஹூணர் ராட்டர் (Tartars) சாதியைச் சேர்ந்தவர்; மாடு மேய்த்தலே அவர் தொழில். அவருடைய உணவு பாலும் மாமிசமும். ஹூணர் குதிரைப் பாலிலிருந்து ஒருவகை மதுவை வடித்தனர். அவர்கள் கூடாரங்களில் வசித்தனர். கோடை காலத்தில் வட நாடுகளிலும் மாரிகாலத்தில் தென்னாடுகளிலும் மாடு மேய்த்தனர். ஹூணர் குதிரையேற்றமும் வில்வித்தையும் கற்று வல்லோராயினர். ஹூணர் வேந்தன் பத்தில் ஒரு கடமை வாங்குதல் மரபு. வேந்தன் போர்க் காலத்தில் படைத் தலைமை வகிப்பன். பெண்டுகள் வீட்டுப் பணி செய்தனர். ஹூணர் சீனா தேசந் தொட்டுப் பிரித்தானியத் தீவுவரையும் பரம்பினர். சிறந்த சீனப் பெண்களை இக்கானவர் தழுவினர். சீன நாட்டுக் கோமகளொருத்தி ஹூணர் தலைவனுக்கு அளிக்கப்பட்டாள். அவள் தான் பச்சையிறைச்சி உண்ண நேரிட்டதோ எனவும், கடவுள் மோர்குடிக்க விதித்தானோ எனவும், தான் ஒரு சிறு குருவியின் கூடுபுகுந்து சீனா தேசத்திற்குப் பறத்தலாகாதோவெனவும் புலம்பினள். கி. பி 375-ல் கொத்தர் வேந்தன் கர்மானிக்கு என்பவன் தன் சாதியாரை ஹூணருடைய கொடுமையிலிருந்து காக்கும்படி உரோமரை வேண்டினன். கொத்தர் சிலர் உரோம நாடுகளில் குடியேறினர், சிலர் உரோம வேந்தருடன் பொருதனர்.

வலன்ஸ் இறக்க, கிருசியானஸ், தியடோசியனைக் கீழைத் தேசங்களுக்குத் தலைவனாக்கினன். கிருசியன் வேட்டையாடிக் களித்தான். மச்சிமஸ் என்போன் கிருசியனை கி. பி. 383 ல் கொன்றான். தியடோசியஸ் மச்சிமஸ் என்போனைக் கொன்றான். கி. பி 390-ல் இலிறியா தேசத்தில் ஒரு கலகம் நிகழ்ந்தது. பதறிக் என்னும் கானவன் ஒருவன் படைத் தலைவனாயிருந்தான். அவனுடைய அடிமைகளுள் ஒரு சிறுவனிருந்தான். அச்சிறுவனைத் தேர் கடாவுவோனொருவன் காமுற்றானாகத் தலைவன் பதறிக்கு என்பவன் அவனைச் சிறையிட்டான். அக்காமுகன் தேர் கடாவுதலில் சிறந்தோனாகலின் அக்காலத்துக் கீழ் மக்கள் அவனை மெச்சிப் பதறிக்கென்னும் தலைவனைக் கொன்றனர். வேந்தன் தியடோசியஸ் அவ்வூர்ச் சனங்களைக் கொல்லும்படி கட்டளையிட்டான். இது நிற்க.

## உரோம மதத்தின் அழிவு

15 சமயக் குருக்கள் கொண்ட சபையார், உரோமருடைய சமயத்தைப்பற்றிய ஆசங்கைகள் யாவற்றையும் தெரிந்து தெளிந்தனர். 15 நிமித்திகர் முழுத் தங்களை ஆராய்ந்து தலைவருக்குச் சோதிடம் சொல்லுதல் வழக்காறு. 15 சமயக் கணக்கர் திருவேட்டிலே கயிறிட்டு நோக்கி எதிர்காலத்துப் பலாபலன்களை மொழிந்தனர். தேவராட்டியர் அறுவர் தீயை வளர்த்தனர். எழுவர் பலியிடுதல் முதலிய கிரியைகளையும் திருவிழாக்களையும் நடாத்தினர். தேவர்கள் உரோமாபுரத்தைக் காத்தனர். அரசியலைப்பற்றித் தனிக்கோலர் சமய குரவரோடு ஆலோசியாவிடினும், அவர்க்குத் தகுந்த மரியாதை செய்தனர்.

தலைவன் கிருசியன் 1000 ஆண்டுகளாயிருந்த இச் சமயக் கிரியைகளைக் குழப்பினான். அவன் அஞ்ஞான மதத்துக்கே ஆதரவளித்தான். அவன் உரோம நாட்டுத் தேவதைகளின் படிமங்களை வீழ்த்தினான். அப்படிமங்களிற் சிறந்தது வெற்றித் தேவதையின் விக்கிரகம் கையில் கண்ணியேந்தி உருண்டை ஒன்றின்மீதேறித் தன் பொல்லாச் சிறகை விரித்துத் தூங்கிய ஆடையணியோடு நகர் மண்டபத்தின் மத்தியில் நின்றது அவ் வெற்றித் தேவதையின் திருச்சிலை. கன்ஸ்ராந்தையின் இச் சிலையை அகற்றினன், யூலியன் அதைத் திரும்பவும் நாட்டினன்.

யூலியன் உரோம மதத்தை ஓம்பியபோதிலும் அது அழியத் தொடங்கியது.

நாட்டுச் சமயத்தைப் பாதுகாக்கும்படி சிமாக்கஸ் என்னும் நாவலன் தலைவரை வேண்டினன். "உலகு ஒரு மாயை; நாம் புத்தியால் அதை அளக்கமுடியாது; ஆகையால் வழக்கப்படி நாம் வணங்குவோமாக" என நாவலன் சாற்றினன். கிறிஸ்தவ குரு அம்புறோசு உரோம சமயத்தைக் காத்தல் பாவமெனத் தலைவன் தியடோசியனிடம் வற்புறுத்தினன். உரோம மார்க்கமோ கிறிஸ்து மார்க்கமோ சிறந்ததெனத் தலைவன் மேன்மக்கட் சபையைக் கேட்டனன். மேன்மக்கள் அவன் தண்டனைக்கு அஞ்சிக் 'கிறிஸ்து சமயமே தலைசிறந்தது' என்றனர். மேன் மக்கள் பலர் கிறிஸ்தவராயினர். உரோமர் கோயில்கள் மூடப்பட்டன. விக்கிரகங்களுக்குப் பூசனைபுரிவோர் கண்டிக்கப்பட்டனர் காமதேவதையின் கோயில் கிறிஸ்தவப் பள்ளியாயிற்று. தெய்வங்களுக்குப் பலியிடப்படாதெனப் பிரமாணம் விதிக்கப்பட்டது. அலெச்சாந்திரியா நகரத்துச் செராப்பிஸ் தேவதையின் கோயில் ஒன்றில் மாத்திரம் பூசை நடந்தது. அத்தேவதைக்குக் கிறிஸ்தவரும் அஞ்சினராம். சிலகாலம் சென்றபின் தியடோசியஸ் அக்கோயிலையும் இடிக்கச்சொன்னன். நீலநதி பெருக்கெடாதெனவும், வற்கடம் ஏற்படுமெனவும் எகிப்தியர் அஞ்சினர். கிறிஸ்தவர், கோயிலிடித்தலும், விக்கிரகங்களை வீழ்த்தலுமே தம்தொழில் என எண்ணினர். தியடோசியஸ் இறந்து 28 ஆண்டு கழிந்தபின் உரோம சமயக் கோயில்களைக் காணவே முடியாது. கிறிஸ்துமதக் குரவர்களின் உடம்பைப் பழைய கோயில்களில் புதைத்தனர். 350 வருடங்களுக்குமுன் தம்மூரில் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த குரவர்களின் எலும்புக் கூடுகள் பெயர்த்தெடுக்கப்பட்டுப் பைசந்தியத்தில் அடக்கஞ் செய்யப்பட்டன. கிறிஸ்துவின் சிஷ்யருடைய எலும்பு, மயிர், பல், ஆடை, அணி முதலியவற்றைக் கிறிஸ்தவர்கள் ஞாபகச் சின்னமாக வணங்கத் தொடங்கினர். விக்கிரக ஆராதனையின் நன்மையை முற்காலக் கிறிஸ்தவர் உணர்ந்திலர். பிற்காலக் கிறிஸ்தவர் போலிக் குருமாரின் ஞாபகச் சின்னங்களை வணங்கத் தொடங்கினர். குரு ஒகஸ்தின் செய்த அற்புதங்கள் உண்மையானவைகளெனக் கூறினர். பிற மதத்தோரை மூடரென இழித்த கிறிஸ்தவர்கள் தாமும் அவர்களைப்போல எலும்பு, தோல் முதலியவற்றைத் தொழுதனர்.

———

## 3-ம் பாடம்: கொத்தரும் அவுணரும்

கி. பி. 395 ல் வேந்தன் தியடோசியஸ் இறந்தான். அவன் மக்களுள் ஆர்க்காடியஸ் கீழைத் தேயத்தையும் அனேறியஸ் மேற்குப் பாகத்தையும் ஆண்டனர். ஆர்க்காடியஸ் தன் தோழன் ரூபினஸ் என்போனுடைய மகளை மணந்தான், அமைச்சர் சிலர் ஆர்க்காடியஸ் தன் மனைவியை வெறுத்தானென்றெண்ணி யூடோச்சியா என்னும் செர்மானியப் பெண் ஒருத்தியை வேந்தனுக்கு மனைவியாக அளித்தனர். ஸ்ரிலிச்சியோ அரசியலை நடாத்தி ரூபினஸ் என்பவனைக் கொல்வித்தான்; அவன் உடம் பின்மீதேறி உழக்கி வலது கையை வெட்டி வீதிதோறும் காட்டிச் சென்றனன்.

கி. பி. 398 ல் அனேறியனுக்கு எதிராக ஆபிரிக்க தேசாதிபதி எழுந்தான். அவன் பெயர் கில்டோ. கில்டோ தன்னுடைய 70,000 வீரரோடு சென்று, 'வேந்தனுடைய வீரரைத் தொலைப் பன்' என்றான். கில்டோவினுடைய கொடிவீரன் கையில் அனேறியனுடைய படைத்தலைவன் அடித்தான். கொடிவீரன் தலைகுனியப் பகைப் படைவீரர் யாவரும் தலைவணங்க, இரு கட்சிப் படைவீரரும், "அனேறியஸ் என்பவனே நீடூழி வாழ்க" எனக் கத்தினர்.

### கொத்தர் வேந்தன் அலாறிக்கு

கொத்தர் இறைகேட்டுக் கிரேக்க நாட்டுக்குட் புகுந்தனர்; ஆடவரை அடிமையாக்கினர்; பெண்டிரைப் புணர்ந்தனர். கொத்தர்வேந்தன் அலாறிக்கு கிறிஸ்தவனாதலின் யவனர் கோயில்களை இடித்தான். ஸ்ரிலிச்சியோ அலாறிக்கை எதிர்த்தான். அலாறிக்கு நழுவிச் சென்று இத்தாலியா நாட்டினுள் புகுந்தான். கி. பி. 403 ல் 1000 வீரரையும் அலாறிக்கென்பவனின் மனைவியையும் ஸ்ரிலிச்சியோ சிறையாக்கி வெற்றி விழாக் கொண்டாடினான். விலங்கு வேட்டமும் வாட்போரும் நிகழ்த்தப்பட்டன. கிறிஸ்தவ துறவி ஒருவன் களத்தில் குதித்து வாட்போரை நிறுத்தும்படி கதறினான். காட்சி காணச்சென்ற சனங்கள் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; தனிக்கோலன் அனேறியஸ் காட்சியை நிறுத்தினான். அவன் ருவன்னக் கோட்டையில் காலத்தைக் கழித்தான்.

ஹூணரும், சேர்மானியரும் வண்டலரும் இத்தாலியாநாட்டில் சூறையாடினர். படைத்தலைவன் ஸ்ரிலிச்சியோ வண்டலரை அடித்துக் கலைத்தான். ஆர்க்காடியஸ் அலாறிக்கு என்பாேேடு நட்புக்கொண்டாடிப் படைத்தலைவன் ஸ்ரிலிச்சியோவைக் கொல்வித்தான். இதை அறிந்த அலாறிக்கு தனக்கு நாலாயிரம்எடை பொன் கொடாவிட்டால் உரோமாபுரத்தைச் சூறையாடுவன் எனச் செப்பினன். கொத்தர் உரோமாபுரியை முற்றுகையிட்டு நின்றனர்.

## உரோமாபுரத்து மக்கள்

அக்கால மேன்மக்கள் அரசியலைப்பற்றிச் சிந்தித்திலர். உண்டுடுத்து ஊடிக் கூடிக் களித்தலே இம்மை வாழ்வின் சிறந்த நோக்கமெனஎண்ணினர். அடிசிற்றெழிலாளர் நூற்றுக் கணக்காயினரைக் கொண்டு மேன்மக்கள் பணி செய்வித்தனர்; அடிமைகளுக்கு வெந்நீராக்கச் சுணங்கினுல் கசையடி கொடுத்தார்கள். மேன்மக்கள் மீன் அணில் குருவி முதலியவற்றை நிறுத்து வாங்கினர். முகமன் கூறுவோர் மேன்மக்கள் வீட்டில் விருந்துண்டனர். உரோமர் கல்வியை வெறுத்துக் கவருடலை மிகவிரும்பினர். உரோமர் முழுத்தம் பார்ப்பதிலும், சோதிடங் கேட்டலிலும் முனைந்தனர். இக்காலத்தில் பல்வேறு தேயத்துத் தீயோரும் உரோமாபுரத்தில் உலாவினர்.

அளவு கடந்து குடிக்கும் கல்லியரும் தந்திரமிக்க கிரேக்கரும் முரட்டு யூதரும் எகிப்தியரும் சிரியா நாட்டுத் தூர்த்தரும் உரோம நாட்டுக் குடிகளெனத் திரிந்தனர். கீழ் மக்களின் உணவின் பொருட்டு அரசாங்கத்தாரால் தானியம் அளிக்கப்பட்டது. அரசாங்கத்தினரிடம் அப்பம் வாங்கும் பிரசை ஒவ்வொருவனும் உத்தரவுச் சீட்டுக் கொண்டு செல்ல வேண்டும். உரோமர் நாட்டில் வெந்நீ ராடுவோருக்கு 16,000 தொட்டிகள் நிறுவப்பட்டன. தொட்டிகளில் அடிமைகள் பணிசெய்தனர். எளிய கீழ்மக்கள் கந்தைத்துணியுடுத்துக் கடைவீதிகளில் உலாவினர். தூர்த்தர் மதுக்கடைகளிலும் வரைவின் மகளிருடைய வீடுகளிலும் தம் காலத்தைக் கழித்தனர். மழையையும் காற்றையும் கவனியாமல் கீழ்மக்கள் வேடிக்கை பார்க்கச் சென்றனர்.

இக்காலத்தில் தேர்கடாவுநர் 3600 பேரும் விறலியர் 3000 பேரும் பொதுசனங்கள் 60,000 பேரும் உரோமாபுரத்

தில் வாழ்ந்தனராம். கணித வல்லோன் அம்மோனியஸ் என்பான் உரோமாபுரியின் மதில் 21 மைல் நீளமுடைய தெனவும் உள்நகரில் 4?,3?2 வீடுகள் இருந்தனவெனவும் கணக்கிட்டான்.

கொத்தர் உரோமா நகரைச் சூழ்ந்து நின்றனர். ஸ்ரிலிச்சியோவின் கைம்பெண் கொத்தரோடு பேசினளாகத் தலைதிருகப்பட்டாள். நகரின் உணவுப்பண்டம் குறைந்தது. தாய்மார்கள் தம் குழந்தைகளைத் தின்றனர். பின்னர் 50,000 பொற்காசும், 30,000 வெண்பொற்காசும், 4000 பட்டாடையும், 3000 சிவப்புப் புடைவையும், 3000 நிறை மிளகும் பெற்றபின் அலாறிக்கு சமாதான உடன்படிக்கை எழுதினுன். அவன் தன் வீரரைச் சூறையாட விடவில்லை. பின்பு தன்னை உரோம நாட்டுப் படைத்தலைவனுக்குப்படி கேட்டான்.

அனேறியஸ் 6000 வீரரைக் கொத்தரை எதிர்க்கும்படி ஏவினன். அவ்வீரர்கள் போரில் மாண்டனர். மேன்மக்கட் சபையார், இன்னசந்து என்னும் கத்தோலிக்கக் குருவைச் சமாதானம்பேசப் போக்கினர் அவனுடன்சென்ற தூதன் ஒலிம்பியஸ் என்பவன்காது அறுக்கப்பட்டது. அலாறிக்கு உரோமாபுரியிற் புகுந்து சூறையாடினன். கி. பி. 410-ல் அலாறிக்கு ருவன்னுக் கோட்டையைப் பிடிக்கப் புறப்பட்டான், அனேறியஸ் ஓடித்தப்ப நினைந்தான். அனேறியனைக் காக்க 4000 வீரர் வந்து இறங்கினர். அலாறிக்கு உரோமாபுரியைத் தாக்கினுன். உரோமாபுரி நாட்டப்பட்டு 1101-ஆம் ஆண்டு அழிவெய்தியது. அலாறிக்கு நிராயுதரைக் கொல்லக்கூடாதெனத் தன்வீரருக்குக் கற்பித்தான். பீற்றர் போல் என்பவருடைய கோயில்களை இடிக்கக்கூடாதென ஆணையிட்டான். கொத்தர் வேந்தன் அலாறிக்கு வைரம் பதித்து, முத்துக் கோத்து, 365 இரத்தினம் இழைத்து ஒரு கட்டில் செய்வித்தான். அக்கட்டிலின் விலை 500,000 பொன். இதிலிருந்து அவன் கொள்ளை கொண்ட தொகையை ஊகிக்கலாம். உரோமர் தம் பெண்களைக் கூட்டிக்கொண்டு பிறநாடுகளுக்கு ஏகினர். அலாறிக்கு ஆறுநாள் களித்தபின் தென் இத்தாலி சென்று சிசிலித் தீவுக்குச் செல்லுவதற்குக் கப்பலேறினுன்.

பெரும் புயலடித்து, அவன் ஆவியைக் கொண்டு சென்றது. வேந்தன் அனேறியனுடைய சகோதரி பிளாசிடியா பிணையாகக் கொத்தர் வசத்திலிருந்தாள். அவளை அலாறிக்கின்மைத்துனன் அடல்பஸ் மணந்தான்.

கி. பி. 413-ல் பிரித்தானிப தேசாதிபதி கன்ஸ்ராந்தியஸ் கொத்தரை அந்நாட்டினின்றும் துரத்தினன். ஸ்பெயின் தேசத்தில் கன்ஸ்ராந்தியஸ் உரோமரோடு பகைத்துத் தோல்வியடைந்தமையால் உயிர் துறந்தான். கொத்தர் ஸ்பானிய தேசத்தை மசிமஸ் என்போனுக்கு அளித்தனர். அனேறியஸ் அவனை வென்று தொலைத்தான். கி. பி. 415-ல் கொத்தர் தலைவன் அடல்பஸ் தீவினையாளரால் கொல்லப்பட்டான். சிங்கரிக்கென்பவன் முடிபெற்று ஸ்பெயின் ஸ்பெயின் தேசத்தில் ஆண்டான். அடல்பஸ் தன்மக்களைக் கொன்றான். அவனுடைய மனைவி பிளாசிடியாவைக் கொத்தர் 12 மைல் நடத்திச் சென்றனர். கொத்தர் தம்முள் கலகப்பட்டுச் சிங்கிரிக்கு என்பவனைக் கொன்று வல்லியர் என்பவனுக்கு முடிசூட்டினர். அக்காலத்தில் பிரித்தானியா தேசத்தையும் கல்லியாதேசத்தையும் செர்மானியர் கைப்பற்றினர்.

## ஆர்க்காட்டியஸ்

இங்ஙனம் உரோமர் தனிக்கோலின் இரு கூறுகளுள் முதன்மையும் மேன்மையும் பெற்ற இத்தாலியா இராச்சியத்தை வேந்தன் அனேறியஸ் கெடுத்தான். அவன் தமையன் ஆர்க்காடியஸ் அக்காலத்தில் பொன்னாசனத்தில் வீற்றிருந்து, தூசணிந்த வெண்ணிறக் கோவேறு கழுதைகள் இழுக்க, இரதம் ஊர்ந்தான். அவனுடைய அமைச்சன் எற்றோப்பியஸ் என்னுமோர் வித்திலன், நீதி நூல்களைக் கற்றிலனாயினும் நீதிமன்றத்தில் ஏறி நீதிசெலுத்தத் துணிந்தான். அன்றியும், போர்க்களத்தில் தலைமை பூண்டும் அரசியலை நடாத்தினன். இவ்வித்திலன்தான் வித்திலருள் முதன்முதல் இணைத்தலைமைப்பதவியைப் பெற்றான். இவ்வித்திலன், பொருள்நனி கொடுப்போர்க்கு உத்தியோகங்களை நல்கினன்; பின்னர் ஹூணரோடு போர் செய்து மாண்டான்.

ஆர்க்காடியஸ் தன் மகன் தியடோசியஸ் ஏழுவயதுச் சிறுவனாகலின், தான் இறந்தபின் அவனைக் காக்கும்படி பார்சியவேந்தனை வேண்டினான். அவனுடைய மகளிர் மூவர் கத்தோலிக்கப் பள்ளிகளைச் சேர்ந்தனர். கி. பி. 421-ல் வேந்தன் இறந்தபின் அவன் மனைவி புல்கேரியா இராச்சியபரிபாலனஞ் செய்தாள். லேயந்தியஸ் என்னும் தத்துவஞானி ஒருவன் மகள் அதீனியாஸ் என்பாள் தன் சகோதரிக்கு அஞ்சி அரசியிடம் சரணடைந்தாள். இளைஞன் தியடோசியஸ் அவளைக் காமுற்றான். அவள் யூடோசியா என்னும் நாமம் புனைந்தாள்; 'பழைய ஏற்பாடு' என்னும் புத்தகத்தை எழுதினாள்; எருசலெம் நகருக்கு யாத்திரை செய்தாள். பின் அரசாள விரும்பினளாகப் புல்கேரியாவால் நாடுகடாத்தப்பட்டாள். இது நிற்க.

### வேந்தன் யோன்

அனோறியஸ் இறந்தவுடன் அவனுடைய எழுத்தாளன் யோன்என்பவன் கொத்தரின் துணைபெற்றுத் தலைமைப் பதவியைப் பெற்றான். தியடோசியஸ் II அவனைக் கொல்லும்படி ஆடபீரஸ் என்போனை ஏவினான். ஆடபீரஸ் புயலால் எற்றுண்டு யோன்கையில் அகப்பட்டான். ஆடபீரஸ் வீரர்களோடு கலந்து பேசி அவர்களைத் தன்வசப்படுத்தினான் யோனின் வலக்கையை ஒடித்து அவனைக் கழுதையிலேற்றித் துன்புறுத்திய பின் சிரச்சேதஞ் செய்தான். தியடோசியஸ் இதைக் கேள்வியுற்று மகிழ்ந்தான். தெய்வத்தின் உதவியை நினைந்து நாள் முழுவதும் செபஞ் செய்தான். தன் மகன் வலந்தினியனை இத்தாலியில் அரசாள வைத்தான்.

### வண்டலர்

கி. பி. 425 முதல் 450 வரையும் பிளாசிடியாவும் அவள் மகன் தியடோசியனும் அரசாண்டனர். பிளாசிடியா எற்றியஸ் பனிவாசு என்னும் இருவரைப் படைத்தலைவராக்கினாள். பனிவாசு ஆபிரிக்க நாட்டை ஆண்டான். பிளாசிடியா ஏற்றியின் தூண்டுகோலுக்கிணங்கிப் பனிவாசு என்பவனை நாடு திரும்பும்படி கட்டளை யிட்டாள். இதற்கிடையில் ஏற்றியஸ் 'உன்னைக் கொல்லுவதற்கே வரவழைக்கிறாளாதலின் அவ்வேவலுக்குக் கீழ்ப்படியாதே' யெனப் பனிவாசு என்பவனுக்குக்

கடிதம் எழுதினன். பனிவாசு வண்டலர் தலைவன் கன்சரிக்கு என்பவனிடம் துணை வேண்டினன். பனிவாசு ஏற்றியஸின் தந்திரத்தையுணர்ந்து நாடுதிரும்பி அரசியிடம் மன்னிப்புக் கேட்டான்; பின்பு கன்சேரிக்கோடு போர்புரிந்து தோல்வியடைந்தான்; அதன்பின் ருவன்னுக்கோட்டைக்குச் சென்று அங்கே படைத்தலைவனைச் சேவித்தான். ஏற்றியனும் பனிவாசுவும் தனிப்போர் செய்தனர். அப்போரில் பனிவாசு புண்பட்டான். அவன் அதற்குமுன் தன் மனைவியை அழைத்து ஏற்றியஸ் என்பவனைக் கொழுநனாக ஏற்கும்படி ஏவினன்.

439-ல் காதாக்கோப்பட்டினம் வண்டலர் வசமாயிற்று. இக்காலத்தில் நடந்த ஓர் அற்புதம் வருமாறு:— நீரோ கிறிஸ்தவரைத் துன்புறுத்தினனாக, எபீசஸ் நகரில் வசித்த கிறிஸ்தவர் எழுவர் ஒரு குகையினுள் ஒளித்தனர். கிறிஸ்துவின் கிருபையால் அவர்கள் இருநூறாண்டு துயின்றனர். அவர்களை அடலியஸ் என்னும் அடிமை கண்டான். அவர்கள் துயில் நீத்தெழுந்தபின் நகரத்தோர் யாவரும் கிறிஸ்தவராயிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டனராம். இவ்வற்புதத்தைப் பார்க்க வேந்தனும் சென்றனன். இதுபோன்ற பழங்கதையொன்று முகம்மதிய சமயத்தாராலும் நம்பப்படுகின்றது.

## (Huns) அவுணர் வேந்தன் அற்றில்லா.

ஹூணர் வேந்தன் அற்றில்லா, ஏற்றியஸ் என்பவனுக்குத் துணைபுரிதற்கென 60,000 படையொடு கி. பி. 431-ல் இத்தாலிய நாட்டினுள் புகுந்தான். அற்றில்லா கறுத்த மேனியன், சிறுத்த கண்ணினன், குறுகிய மூக்கினன், பரந்ததோளினன்; ஹூணரால் தெய்வமெனத் தொழப்பட்டான். அவன் சிதிய நாடு தொடங்கிச் செர்மனிய நாடுவரை ஆணைசெலுத்தினன்; உரோமர் தலைவன் தியடோசியனை மும்முறை புடைத்தான்; 2,00 பொற்காசு பெற்ற பின்னும் உரோம கிரேக்க நாடுகளில் சூறையாடினன்

அற்றில்லா மரத்தால் இணைக்கப்பட்ட மாளிகையில் வீற்றிருந்து விருந்தோம்பினன். புலவர் அவன் புகழைப்

பாடினர்; விகடர் அவனை மகிழ்வித்தனர். அவன், உரோம தூதன் மாக்சிமின் என்பவனை வரவேற்றுத் தன் செயலாள னுக்கு வாக்குப்பண்ணின மங்கையைத் தரும்படி கேட்டான். எடக்கன் ஒறிஸ்ரிஸ் என்னும் இரு தூதரை வேந்தன் தியடோசியஸ் என்பவனிடம் அனுப்பினான். மொழிபெயர்ப்பாளன் வேசிலியஸ் எடக்கனைக் கிறிசாப்பியஸ் என்னும் வித்திலனுக்கு அறிமுகப்படுத்தினான். அவ்வித்திலன் அவனை அற்றில்லாவைக் கொல்லும்படி ஏவினன். எடக்கன் உடன்படுவான்போல் நடித்து வேசிலுயனைக் கூட்டிச்சென்று அற்றில்லாவின் முன்னிலையில்விட்டு, அவனுடைய சூழ்ச்சியை வெளியிட்டான். அற்றில்லா அவனைக்கொல்லாமல் 200 பொற்காசு பெற்று விடுதலையாக்கினான்.

கி பி. 450-ல் தியடோசியஸ் குதிரையிலிருந்து வீழ்ந்து இறந்தான். அவன் சகோதரி புல்கேறியா தலைவியாகிக் கிறிசாப்பியஸ் என்னும் வித்திலனைச் சிரச்சேதம் செய்வித்தாள்; அவள், 60 வயதினனான மாக்கியன் என்னும் மேன்மகனை மணந்தாள். ஏற்றியஸ் ஹூணரோடு அளவளாவி அற்றில்லாவின் தோழனானான். இதற்கிடையில் வால்லியா இறக்க, அலாறிக்கின் மகன் தியோடறிக் ஸ்பெயின் நாட்டில் வேந்தனானான். அவன் தன்மகளை வண்டலர் வேந்தனுக்கு அளித்தான். அற்றில்லா வண்டலருக்குத் துணைபுரிந்தான். அவன் வலந்தினியனின் சகோதரி அனேறியாவைத்தான் காதலிக்கிறான் என நடித்தான். அனேறியா தலைவனுடைய குடும்பத்திற் பிறந்தவளாதலின் தான் விரும்பிய தலைவனைக் காதலிக்க முடியாது துயருற்றனள். அவள் யூசேனியஸ் என்பவனோடு கூடிக்களித்தாள். தலைவி பிளாசிடியா அதையறிந்து அவளை அவமானப்படுத்தி நாடுகடத்தினள். அனேறியா 13 ஆண்டு கதலிக்கர் பள்ளியில் வருந்தித் துயர்சகிக்கமுடியமல் அற்றில்லாவிடம் செல்ல நினைந்தாள்; தன்மோதிரத்தைத் தன் காதலன் அற்றில்லாவினுடைய கையில் கொடுக்குபடி ஓர் அடிமையை ஏவினள், அற்றில்லா அவளைக் காதலித்திலன்; கி. பி. 451-ல் அவன் கல்யநாடு புகுந்தான். எற்றியஸ் அவனை எதிர்க்கும்படி கொத்தர் தலைவன் தியோடறிக்கு என்பவனை ஏவினான்.

இங்ஙனம் ஹூணரும் கொத்தரும் போர்புரிய நேரிட்டது, இப்போரில் கொத்தருடைய வேந்தன் தியோடறிக்கு மடிந்தான். அற்றில்லா இத்தாலிய நாட்டிற்குத் திரும்பினன். வலந்தினியன் III அற்றில்லாவுக்குத் திறையளிக்க எண்ணினன். அற்றில்லாவும் சமாதானத்திற்கு உடன்பட்டான்; மனைவியர் பலர் இருந்தபோதிலும் அவன் இடிக்கா என்னும் மங்கையை மணந்தான். அன்றிரவு அற்றில்லா இரத்தக்குழாய் வெடித்ததினுல் இறந்தான். வலந்தினியன் ஏற்றியனைக் கொல்வித்தான். அவன் சின்னுள் கழிந்தபின் பெற்ருேனியஸ் மச்சிமஸ் என்னும் ஒரு மேன்மகனின் மனைவியை விரும்பினுன்.; அவள் மறுத்ததைக் கேட்டுச் சீற்றங் கொண்டான்; அவளை முயங்குதற்கு எண்ணங்கொண்டு பலரோடு ஆலோசித்தான்; அவளுடைய கொழுநன் பெற்ருேனியனேடு சூதாடி வென்று அவனுடைய கணையாளியைப் பெற்ருன் ; கொழுநன் தன் மனைவியை அழைக்கும் வண்ணம் அவளைத் தன் மாளிகைக்கு அழைப்பித்தான் ; அவள் தன் கொழுநனுடைய கணையாழியைக் கண்டவுடன் அவனுடைய ஏவலுக்குக் கீழ்ப்படிபவளாதலின் வலந்தினியன் மாளிகைக்குச் சென்று, அங்கே தன் கற்பிழந்து துயருற்ருள். தீவினையாளர் வலந்தினியனைக் கொன்று பெற்ருேனியனை வேந்தனெனத்தொழுதனர். அவன் தன் மகன் பலாடியஸ் என்பவனை இளவரசாக்கி வலந்தினியனுடைய மகளை மணஞ் செய்து கொள்ளும்படி ஏவினுன். கைம்மை விரதம் காத்துத் துயரக்கடலில் மூழ்கியிருக்கும் வலந்தினியனுடைய மனைவியைப் பெற்ருேனியஸ் மச்சிமஸ் புணர்ந்தான். அவள் கன்சேரிக்கு என்பவனிடம் துணை வேண்டினள். வண்டலர் வேந்தன் கன்சேரிக்கு, கடல் கடந்து உரேமாபுரத்தைத் தாக்கிச் சூறையாடித் தலைவி யூடொக்கியாவையும் மகளையும் சிறையிட்டுக் கதாக்கோப் பட்டினத்துக்கு ஏகினுன். கி. பி. 455-ல் பெற்ருேனியஸ் மச்சிமஸ் வண்டலரால் கொல்லப்பட்டான் ; அவனுடைய படைத்தலைவன் அவிற்றஸ் அரசனுனன். கொத்தர் வேந்தன் தியடறிக்கு உரோம வேந்தன் அவிற்றஸ் என்பவனேடு நட்பாயினுன். தியடறிக்கு சிறிய உருவினன்: கூரிய மூக்கினன் ; மெல்லிய உதட்டினன் ; அழகிய மேனியன் ; எனப் பாராட்டப்பட்டான்.

அவன் காலையில் தெய்வத்தை வழிபட்டபின் வேட்டையாடுவான்; பொது உணவையே உண்பான்; பின் சிறிதுநேரம் உறங்குவான்; பின் கவருடுவான். அவன் சுயேவி என்னும் செர்மானியர் சாதியாரை அடக்கினன்.

கி. பி. 457 ல் மசோரியன் தலைவன் றிசிமரின் உதவியைப்பெற்று இத்தாலியில் ஆண்டான். மசோரியன் பழைய கோவில்களை இடிக்கா வண்ணம் பாதுகாத்தான்; உரோமாபுரத்தில் சுத்தரோமர் குன்றுதலை அறிந்து, உரோமர் விதவைகளை விவாகஞ் செய்துகொள்ளும்படி கற்பித்தான். மசோரியன் கொத்தரோடும் ஹூணரோடும் போர்புரிந்தான்; அரசியலில் திருத்த முறைகளைக் கொணர்ந்தான். அத்திருத்த முறைகளைப் படைவீரர் உவந்திலர் என்பதை யுணர்ந்து, மசோரியன் தன் பதவியைத் துறந்தான்.

கி. பி. 461-ல் லிபியஸ் சவரஸ் தலைவனுகினன். கொத்தர் இத்தாலிய நாட்டின்மீது படையெடுக்க, மேற்பாகத் தலைவன் கீழ்ப்பாக மன்னனிடம் துணைவேண்டினன். கீழ்ப்பாக மன்னன் கன்சரிக்கு என்பவனுடைய படையை வெல்லும்படி 1113 கப்பல்களைப் பசிலிக்கஸ் என்பவனின் தலைமையில் அனுப்பிவைத்தான். கன்சரிக்கு அக்கப்பல்களைத் தீயிட்டழித்துச் சிசிலி, சாடினியா என்னும் தீவுகளைக் கைப்பற்றினன். றிசிமரின் பின் ஒலிபிறியஸ் தலைவனுயினன் அவனை ஒறிஸ்திஸ் துரத்தினன். கி. பி. 475-ல் ஒறிஸ்திஸ் தன்மகன் அகஸ்தூலுஸ் என்பவனைத் தனித்தலைவனுக்கினன். படைவீரர் தம் கூலிகேட்டுப் பகைத்தெழ, அகஸ்தூலுஸ் தன் பதவியைத் துறந்து, ஓடேசர் என்னும் ஓர் அன்னியனைப் படைத்தலைவனுக்கினன்.

## கிறிஸ்துமத வளர்ச்சி.

அன்னியராகிய ஹூணரும் கொத்தரும் இக்காலத்தில் கிறிஸ்து மதத்தைத் தழுவினர். எகிப்து நாட்டிலும் கிறிஸ்துமதம் பரம்பிற்று. கதலிக்கர் குரு அதனசியஸ் எகிப்து தேசத்தில் பல பள்ளிகளை நிறுவினன். உரோமரும் அவற்றைப் பின்பற்றி இத்தாலியா தேசத்திலும் கிறிஸ்தவப் பள்ளிகளை நாட்டினர். உரோமர் கீழ்மக்கள் உணவு பெறுதற்

காகப் பள்ளிகளில் வசித்தனர். போரை வெறுக்தும் கோழை யரும் பள்ளிகளைச் சேர்ந்தனர். பள்ளியில் வசியாமல் சிலர் தமியராக இருந்து வானப்பிரஸ்த வாழ்க்கையை நடாத்தினர்.

கி. பி. 395-ல் சிமியன் ஸ்திலிற்றிஸ் சிரியாதேச மலை யொன்றில் தவஞ் செய்தான். அவன் கற்களைக் குவித்து அதிலிருந்து ஒரு சங்கிலிபற்றி அறுபதடி ஏறி ஓர் தூணின் சிகரத்தில் நின்று தவஞ் செய்தான். காற்றிலும் மழையிலும் இவ்வண்ணம் அவன் 30 வருடகாலம் தூணேறிச் சிலுவை போலேனும் தலைகுனிந்து கால் தொடும் ஆசனத்திலேனும் இருந்து தவஞ் செய்தனன். இவ்வண்ணம் தம்மைத் தன் புறுத்துவோர் பிறரைத் துன்புறுத்தப் பின்னிடுவரோவெனப் பலர் ஆசங்கிக்கின்றனர். இத்தகையோரே கதலிக்க நியாய குழுவை நிறுவினர். அக்குழுவினர் பிற்காலங்களில் அன்னிய மதத்தோரைக் கால்கை ஒடித்து வருத்தித் தீயிலிட்டனர். கி. பி. 400-ல் உல்பியன் கொத்தர் மொழியில் பைபிளை மொழி பெயர்த்துக் கொத்தர் பலரைக் கிறிஸ்தவராக்கினன். வண்டலரும் பலர் கிறிஸ்தவராயினர். கிறிஸ்தவருள் ஆறியன் கட்சியார், பரிசுத்த ஆவி மகன் தந்தை யென்னும் மும்மைக் கடவுளர் இல்லையென வாதித்தனர். கி. பி. 500-ல் ஆறியன் கட்சியார் துன்புறுத்தப்பட்டனர்; விக்கிரக வணக்கமும் கண்டிக்கப்பட்டது.

---

## 4-ம் பாடம்: பைசாந்திய மன்னர்.

### கீழ்ப்பாக இராச்சியம்.

மேற்குப்பாக இராச்சியம் அழிவெய்திய காலத்தில் சீனோ அனஸ்தாசியஸ் யஸ்தின் என்போர் ஒருவர்பின் ஒருவராகக் கி. பி. 476-க்கும் கி. பி. 527-க்கும் இடையிட்ட காலத்தில் கீழ்ப்பாக இராச்சியத்தை ஆண்டனர். அக்காலத்தில் தியோடறிக்கு என்னும் கொத்தன் இத்தாலிய நாட்டில் ஆணை செலுத்தினன். தனிக்கோலன் லியோவின் மகள் திருஸ்கலீசியஸ் உத்தரியத்தை ஏற்றபின் தன்னைச் சீனோ என்னும் பெயரால் அழைக்கும்படி கற்பித்தான். லியோவின் விதவை

சீனோவை நீக்கித் தன் சகோதரன் பசிலியஸ் என்பவனை அரசனாக்கினாள். தன் சகோதரியைக் காலித்த அனுசியஸ் என்பவனைப் பசிலியஸ் கொல்ல முயன்றான், அவனுடைய விரோதிகள் சீனோவைத் திரும்பவும் வரவழைத்தனர். சீரியா தேசத்தில் ஒரு சிற்றரசனாயிருந்த வறினுவின் மகள் அரியத்தினி என்பவளைச் சீனோ மணந்தான். சீனோ இறந்தபின் அரியத்தினி அரண்மனைக் கூலிகளுள் ஒருவனாகிய அனஸ்தாசியஸ் என்பவனுக்குத் தன்னையும் தன்ராச்சியத்தையும் ஈந்தாள். அனஸ்தாசியஸ் இத்தாலியா நாட்டிற் கொடுங்கோல் செலுத்தும் கொத்தரை வெல்லும்படி தன்னுடைய நிலப்படையையும் கடற்படையையும் ஏவினான். கொத்தர் வேந்தன் தியோடறிக்கு ஆயிரங்கப்பல்கள் கட்டித் தன் நாட்டைக் காத்தான். அவன் குடியர் தூர்த்தர் தீவினையாளரை அடக்கிச் செங்கோலோச்சினனெனச் செப்புகின்றனர். அவன் ஆண்ட காலத்தில் தானியம் மலிந்தது. அவன் ருவன்னுக்கோட்டையில் வீற்றிருந்து, பிதியஸ் என்னும் தத்துவ ஞானியை அமைச்சனாக்கி, அரசியலை நடாத்தி வைத்தான். பிதியஸ் அரசதுரோகஞ் செய்தானெனக் கொல்லப்பட்டான். தியோடறிக் ஆறியன் கட்சியைக் கண்டித்துக் கதலிக்கர் கட்சியைச் சார்ந்தான். தன் அமைச்சனைக் கொன்றதால் தியோடறிக்கு தன் செங்கோல் கோடிற்றென்னத் துயருற்றான். தியோடறிக்கு வயிற்றுக்கடுப்பால் இறந்தான்.

## யஸ்தினியன்

அனஸ்தாசியஸ் இறந்தபின் யஸ்தின் தலைவனானான்; அவன் கமக்காரர்குலத்திற் பிறந்து போர்த்தொழில் பயின்று பதவிகள் பெற்றுத் தலைவனாயினன்; அறுபத்தெட்டாம் வயதில் அவன் தனித் தலைவனானான்; தனித்தலைவனான காலத்திலும் தன்பெயரை யெழுத அறிந்திலன். அவனுடைய மருகன் யஸ்தினியன் மேன்மக்கள் கீழ்மக்கள் கதலிக்கக் குருமார் என்போர் யாவரையும் தன் வண்மையால் வசப்படுத்தி முப்பத்தெட்டுயாண்டு செங்கோலோச்சினான். தன் காதலி தியோடோறாவுக்கு அரசிப்பட்டத்தை ஈந்தான்.

அனஸ்தாசியஸ் ஆண்டகாலத்தில் அக்காசியஸ் என்னும் ஒருவன் காட்சிச்சாலையில் உள்ள விலங்குகளைப் பராமரிக்கும் உத்தியோகம் பெற்றிருந்தான். அவனுக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்திருந்தன. அவன் இறந்தபின் அச்சிறுமிகள் மூவரும் நாடகக் கணிகையராகினர். அக்காலத்திற் கூத்தர் இருகட்சியினராகப் பிரிந்து கலகப்பட்டனர். பச்சைக் கட்சியார் இச்சிறுமிகளை ஏளனஞ் செய்தனர். நீலக்கட்சியார் அவர்களுடைய நிலைக்கு இரங்கினர். அம்மூவருள் இரண்டாவது சிறுமியின் பெயர் தியோடோரு. அவள் தலையில் முக்காலியிட்டுத் தமக்கையின் அடிதொழுது அடிமையென நடித்தாள். சிலகாலத்தின் பின் அவள் ஆடல் பாடலைவிட்டு விநோதக் கூத்துக்களை நடித்துப் புகழ் பெற்றாள். அக்கணிகையை யாவரும் கண்டு களித்தனர். காமுகர் அவளோடு கூடிக் களித்னர். சன்மார்க்கர் அவளை வீதியிற் காண்பதே பாவமென எண்ணினர். அவள் ஏகபாலனென்னும் ஆபிரிக்க தேசாதிபதியை மணந்து பின் கிரேக்க நாட்டை விட்டு நீங்கினள். ஏகபாலன் அவள் வீண்செலவு செய்பவள் என அறிந்து துரத்தி விட்டான். அவள் பசிப்பிணி தாங்கமுடியாமல் தலைநகர்க்குத் திரும்பி நூல் நூற்றுச் சீவனஞ்செய்து வந்தாள். படைத்தலைவன் யஸ்தினியன் அவளைக்கண்டு மருண்டான்; தனித்தலைமைப் பதவியை பெற்றவுடன் தியோடோருவை அரசியாக்க எண்ணினான் உரோமருடைய அரசியற் பிரமாணங்களின்படி அவளை அரசியாக்க முடியாதென அறிந்திருந்தும், நாடகக்கணிகையை மணஞ்செய்து கொள்ளவேண்டாமெனத் தாய் அழுது வேண்டியபோதிலும், யஸ்தினியன் தியோடோருவையே மணந்து கொண்டான். அடிமைப்பெண்கள்முதல் அமைச்சர் ஈறாக யாவரும் தியோடோருவின் அடிபணிந்தனர். இராணியின் ஒற்றர்கள் யாவரையும் ஒற்றினர். அவள் தேசாதிபதிகள் சிலருக்குச் சவுக்கடி கொடுத்தாள். அவள் கதலிக்கப் பள்ளி ஒன்று கட்டி 500 விலைமாதரை இருத்திக் கடவுள் வழிபாடு செய்யப்பண்ணினள் அவ்வரைவின்மகளிருள் சிலர் தற்கொலைபுரிந்து கொண்டனர்; சிலர் சன்மார்க்க வழியைத் தேடி உய்ந்தனர். கி. பி. 548-ல் இராணி தியோடோரு பற்புண்ணால் மரித்தாள். தியோடோருவும்

யஸ்தினியனும் நீலக்கட்சியாரைப் புரந்து விழாக்களை நடாத்தினர். தைமாதவிழா நடந்துழித்தேசாதிபதிகள் சிலர் கொடுங்கோலோச்சிக் குடிகளைத் துன்புறுத்தினரெனச் சனங்கள் வழக்குரைத்தனர். உடனே பச்சைக் கட்சியார் அரசனுக்குமாறாக எழுந்தனர். நீலக்கட்சியார் அரசனுக்குச் சார்பாக எழுந்தனர். அத்தருணத்தில் தீவினையாளர் எழுவரைக் கொல்லுங்காட்சி நடந்தது. தீயோரிருவர் கயிறு அறுத்துத் தப்பியோடினர். ஒருவன் பச்சைக் கட்சியினனும் ஒருவன் நீலக்கட்சியினனுமாகலின் இருகட்சியினரும் ஒன்று சேர்ந்து மருந்துச்சாலைகளுக்கும் கோயில்களுக்கும் தீயிட்டு அமைச்சர் மீது வழக்குத்தொடர்ந்தனராக, யஸ்தினியன் அமைச்சர்களைப் பதவியினின்றும் நீக்கினான். அனஸ்தாசியஸ் என்பவனுடைய மருகரிருவர் ஐப்பேசியன் பொம்பி என்போர் பகைவருக்கு ஆயுதம் அளித்தனரெனச் சிறையிடப்பட்டனர். அவர் சிலகாலத்தின் பின்பு மாளிகையினின்றும் துரத்தப்பட்டனர். சனங்கள் ஐப்பேசியனைத் தலைவனாக்க எண்ணினரென யஸ்தினியன் அறிந்து ஓடித்தப்ப நினைந்தான். அச்சமயத்தில் அவன் மனைவி தியோடோரா நீலக்கட்சியாரைப் பச்சைக்கட்சியாருக்கு எதிராகத் தூண்டிப் படைசேர்த்துத் தனிக்கோலைக் காத்தனள். படைவீரர் 30,000 பொதுசனங்களைக் கொன்றுகுவித்தனர். ஐப்பேசியனும் பொம்பியும் தலையிழந்தனர்

அக்காலத்தில் எகிப்துநாட்டிலிருந்து பல்வகைக்கூலமும் வீட்டுமிருகங்களும் ஆடையணிகளும் செங்கிறப்போர்வையும் தூசும் உரோம கிரேக்க நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்டன. பட்டு, சீனு தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. இலங்கைத்தீவு அக்காலத்தில் தப்பிரபான் எனவும் "சேரன் தீவு" எனவும் பெயர்பெற்றது அத்தீவில் மலை நாட்டை ஆண்ட அரசனிடம் உரோமர் விலையுயர்ந்த இரத்தினங்களையும் யானைத்தந்தங்களையும் வாங்கினர். அம் மலைநாட்டரசனுடைய எதிரி திரிகோணமலைத் துறையைக் காத்துப் பிறதேச வணிகரிடம் சுங்கம் பெற்றான். உரோமர் எதியோப்பியருடைய கப்பல்களிலேறி இலங்கையில் இறங்கி வாணிகஞ் செய்தனரென அறியக் கிடக்கின்றது. பார்சியரிருவர் சீனு சென்று பட்டுப்பூச்சிகளைக் கொணர்ந்து யஸ்தினியனுக்கு

அளித்தனரெனச் சொல்லப்படுகின்றது. தலைநகராகிய பைசந்தியத்தில் பட்டுநூற்றொழில் பரம்பிற்று. யஸ்தினியன் கலைஞரையும் வித்தைவல்லோரையும் வணிகரையும் புரந்தனன். அன்னியரை அணுகவொட்டாது 600 கோட்டைகளை எல்லைப்புறங்களில் கட்டுவித்தனன். கி. பி. 529-ல் இணைத்தலைவரைத் தெரிந்தெடுக்கும் வழக்கம் தொலைந்தது. படைத்தலைவன் பலிசாறியஸ் பார்சியரை வென்றான்; பின்னர் ஆபிரிக்காக் கண்டத்தில் இறங்கிக் கலிமார் என்னும் கொத்தர் வேந்தனைப் புடைத்துக் கதாக்கோப் பட்டினத்தைப் பிடித்து வெற்றிவிழாக்கொண்டாடினான்.

இத்தாலியா நாட்டில் அமலசந்தா என்னும் ஓர் அழகிய பெண் அரசாண்டாள். அவள் தன் மகன் அதலாறிக்கு என்பவனுக்குக் கல்வி பயிற்றும்போது ஒருமுறை அடித்தாள். அவன் சிணுங்கிச் சென்று கற்றல் தீதென்றான்; பின்னர் குடித்து வெறித்து உயிர்விட்டான். அவள் தன் மைத்துனன் தியோடறஸ் என்பவனுக்குத் தலைமைப் பதவியை நல்கினாள். சிலகாலம் கழிந்தபின் அவனைக் குளிக்கும் அறையில் தலைதிருகுவித்தாள். கி. பி. 535-ல் பலிசாறியஸ் தென் இத்தாலியாவில் இறங்கி உரோமாபுரத்துள் புகுந்தான். சனங்கள் வெற்றிக்கஸ் என்னும் படைத்தலைவனை அரசனாக்கினார்கள். வெற்றிக்கஸ் உரோமாபுரத்தைச் சூழ்ந்து நின்றான். கதலிக்க சமயகுரு நகர்வாயிலைத் திறந்துவிட எண்ணினான். பலிசாறியஸ் அக்குருவைநீக்கி வேறோர்குருவை ஏற்படுத்தினான். பலிசாறியஸ்கொத்தரை வென்ற பொழுதிலும், யஸ்தினியன் அவனுக்கு ஒரு பதவியும் அளிக்கவில்லை. அக்காலத்தில் இலம்பாடியர் தானியூபிநதிவழி சென்று வட இத்தாலியுட் புகுந்தனர். பல்கேரியர் பன்னோனிய கிரேக்க நாடுகளில் உலாவினர்.

கி. பி. 545-ல் துருக்கர் என்னும் சாதியார் ஆசியாக் கண்டத்தில் மத்திய மலைகளில் வசித்தனர். அம்மலை பொன்மலையெனவும் சக்கரவாளமெனவும் சொல்லப்படும். அந்நாட்டோர், நிலம் நீர் தீ வான்வளி என்பவற்றை வணங்கினர். உரோமர் துருக்கரைச்சேர்மானியரோடு போர்புரியும்படி தூண்டினர். பின்பு பார்சியருக்கு எதிராகத் துருக்கரிடம் துணை

வேண்டினர். பாரசீக வேந்தன் கஸ்ரஸ் என்னும் நஷிர்வான் கி. பி. 53 -ல் செங்கோல் ஓச்சினான். அவன் கல்வியையும் கமத்தொழிலையும் விருத்திசெய்தான்; யவனநூல்களையும் இந்து நூல்களையும் மொழிபெயர்த்தான்; கி. பி. 540 ல் உரோமருடைய சிரியாநாட்டைக் கைப்பற்ற எண்ணினான். படைத்தலைவன் பலிசாறியஸ் பார்சியப் போரை நடாத்தப்போனான். அவன் எதியோப்பியரிடம் துணை பெற்றான். இக்காலத்தில் எதியோப்பியர் அராபியாவின் சில பாகத்தில் தம் ஆட்சியைச் சிலகாலம் செலுத்தினர். கொத்தர் பின்னரும் இத்தாலியில் ஆணைசெலுத்த முயன்றனராகப் பலிசாறியஸ் புலம்பெயர்ந்து இத்தாலிய நாடடைந்து உரோமபுரத்தைப் பிடித்தான். உரோமர் தலைவன் நார்சிஸ் கி. பி. 543-ல் கொத்தரையும் பிராஞ்சிய பறங்கியரையும் வென்றான். அதற்கிடையில் பாலிசாறியஸ் பைசந்தியம் என்னும் தலைநகரைச் சூழ்ந்து நின்ற பல்கேரியரைத் துரத்தினான். யஸ்தினியன் யாதொரு உபகாரமும் செய்யாதபொழுதிலும் பலிசாறியஸ் அரசபக்தியிற் குன்றினானல்லன். மாசீலஸ் சேசியஸ் என்னும் இருவர் யஸ்தினியனைக் கொல்லமுயன்றனர். அதை வேந்தனுக்கு ஒற்றர் அறிவித்தனர் சேசியன் பலிசாறியனுடைய அடிமைகள் தன்னை அரசனைக் கொல்லும்படி ஏவினரெனச் சான்று சொன்னான். பலிசாறியன்மீது வழக்குத் தொடரப்பட்டதாயினும், அவன் தப்பினான். அதன் பின் வேந்தனும் பலிசாறியனும் இறந்தனர். யஸ்தினியன் காட்சிக்கெளியனெனவும் கடுஞ்சொல்லனல்லன் எனவும் வெகுளியைவென்றோனெனவும் நன்றியறிதலில்லாதவனெனவும் ஆசிரியர் கூறுப.

உரோமருடைய அரசியற்பிரமாண நூல்களையும் நீதிநூல்களையும் யஸ்தினியன் முறைவகுத்துத் திருத்தினான். கி. பி. 531- ல் வால்வெள்ளியொன்று 20 நாள் வரை தோன்றியதெனவும், கி. பி 539-ல் 40 நாள்வரை தோன்றியதெனவும் பின்னர்த்தோன்றிய விண்மீன் கீழ்வானையும் மேல்வானையும் அளாவிற்றெனவும் கூறுப. இத்துர்நிமித்தம் நிகழ்ந்தபின் பைசந்தியம் என்னும் தலைநகர் பூகம்பத்தால் இடருற்றது அப்பூகம்பம் 40 நாள் (இடையிடையே)

நிகழ்ந்தது. அப்பூகம்பத்தால் 2,50,000 மக்கள் மாண்டனர். கி பி 542-ல் தலைநகர் பிளேக்கு நோயால் வருந்திற்று. சனங்கள் பலர் 2½ நாட் சுரத்தின்பின் கன்னம் காது வீங்கிப் புண்ணுற்று இறந்தனர் அப்புண்கள் கறுத்த சீழ்கக்கின. அக்காலத்தில் சுகாதாரமுறை கையாளப்படாமையால் நோய் 50 வருடங்கள் நிலைத்தது.

## உரோமருடைய நீதிப் பிரமாணங்கள்

உரோமர் பண்டு தொட்டுத் தம் பிரமாணங்களை செப்பேடுகளில் எழுதினர். பதின்மர் செய்த 12 ஏடுகள் அவற்றுள் சிறந்தவை யெனவும் தனிக்கோலன் அத்திரியன் அவற்றைச் சிறிது திருத்தினனெனவும் அறிவோம் பிற்காலவேந்தர்கள் பிரமாணங்களுக்கு அடங்காது தாம் நினைத்தவாறு கொடுங்கோல் செலுத்தினரென்பது கூறவேண்டியதில்லை உரோமருடைய சட்டங்கள் சில நகை விளைக்குந் தன்மையன. கணவனைப் பிரியும் பெண்கள் வீட்டுத்திறப்பைக் கணவன் கையிற் கொடுத்து வீட்டினின்று நீங்கல் வேண்டும். கன்னத்திற் கையாலடித்து அடிமைக்கு சுவாதீனம் அளித்தல் மரபு. வலக்கையை இறுகப் பற்றி நட்புக் கொண்டாடல் வழக்கம். நிலவுரிமைக்காக வழக்குரைப்போர், சான்று கூறுவோரின் காதைத்தொட்டு எதிரியின் கழுத்தைப் பற்றி நின்று சுற்றத்தாரின் ஆதரவைக் கேட்டல் வேண்டும். தனிக்கோல் வேந்தன் அகஸ்தஸ் நகை விளைக்கும் சிலவற்றைத் திருத்தினன்.

யஸ்தினியன் 2000 நூல்களை 50 நூல்களாகச் சுருக்கி எழுதினன். உரோமர் சட்டங்கள், குடியியல் பொருளியல் வினையியல் தீங்கியல் என நாலு இயல்களாகப் பிரிக்கப்பட்டன. தந்தை தன் வீட்டிற் செய்யும் வினையொன்றையும் ஒருவரும் குற்றமெனச் சொல்ல முடியாது. தந்தை தன் பிள்ளையையும் மனைவியையும் கொல்லலாம். நூமா என்னும் வேந்தன் இளமையில் நற்பழக்கம் பழக்கலாம் என்னும் நியாயத்தைக் காட்டிப் பன்னீராட்டைப் பிராயத்துச் சிறுமிகளை மணஞ்செய்து கொள்ளலாமென விதித்தான். ஆடவன் மணமகளைக் காசு கொடுத்துப் பெறுதல் வழக்கம். பெற்றோருடைய அனுமதியுடன்தான் மணம் நிகழும். பதின்மர்

முன்னிலையில் சமயக்கணக்கர் மணக்கிரியையாகத் தெய்வங்களுக்குப் பழங்களைப் படைத்தலுண்டு மணமகளும் மணமகனும் ஓர் ஆட்டுத்தோலிலிருந்து அப்பம் உண்ணல் ஓர் கிரியை. கி. மு 250-ல் மனைவியின் நிலங்களைக் கணவன்விற்றுச் செலவு செய்யக்கூடாதெனப் பிரமாணம் விதிக்கப்பட்டது இல்வாழ்க்கைக்கு உதவாதோர், நீடியகாலம் பிரிந்தொழுகுவோர், துறவு பூணுவோர் என்போரை விட்டுப் பிரிதற்கு மனைவிகள் பிரிவுப் பத்திரம் பெறலாம். எதீனியரின் வழக்கத்தின்படி மாமன் மருமகளை மணக்கலாம். உரோமருடைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் ஒருவன் எல்வளவு காமக்கிழத்தியரையும் வைத்திருக்கலாம். ஒருவன் மரணத்தின்பின் அவன் சந்ததியார் அவனுடைய நிலம் பொருள்களுக்கு உரிமையுடையோராவர். ஒருவன் தன்னிலத்தையும் பொருளையும் தன் பிள்ளைகளுக்கு அளியாமல் பிறருக்குக் கொடுக்கலாம் கசையடிகொடுத்தலும் அடிமையாக்கலும் சிறந்த தண்டங்கள். மரணதண்டனை ஒன்பது வகைக் குற்றங்களுக்கு விதிக்கப்பட்டது அரச துரோகத்திற்குத் தண்டம் சிலுவையில் அறைதல். கொலைப்பாவம் செய்தோர் நாயோடேனும் பாம்போடேனும் குரங்கோடேனும் பையொன்றினுள் இடப்பட்டு ஆற்றில் எறியப்படுவர் தீயிடுவோர் சவுக்கடி பெற்றுத் தீயிலிடப்படுவர். பொய்ச் சான்றுரைப்போர் வரையினின்றும் வீழ்த்தப்படுவர். கைக்கூலி பெறும் நீதிபதிகள் கொல்லப்படுவர். வசைப்பாட்டு எழுதுவோர் கம்பால் அடிக்கப்படுவர். பயிரழிப்போர் தண்டமிறுப்பர். மந்திரவாதிகள் தண்டிக்கப்படுவர். இரவில் களவு செய்வோரைப் பிடிப்போர் கொல்லலாம். பிறர் மனைவிழைவோரைக் கையோடு பிடித்தால் கொல்லலாம். பெண்டிர் தாமே கற்பைக் காக்கவேண்டும். ஆடவர் காக்க வேண்டிய அவசியமில்லை. இளைஞரைக் காமுறுவோர் பெருந்தொகைக்காசு தண்டம் கொடுக்க வேண்டும். ஒருவன் பெண்தன்மையை அவாவின் பிரசைக்குரிய உரிமைகளை இழப்பன். பிறர்மனை விழைவோரின்மீது இரங்கல் வழக்கம். பெண்மையை அவாவுதல் பெரும் குற்றமாக எண்ணப்பட்டது.

யஸ்தினியன் முப்பத்தெட்டியாண்டு செங்கோலோச்சிய பின் இறந்தான். அவன் பின் அவன் மருகன் யஸ்தின் II

அரசாண்டான். அவனுடைய காலத்தில் இலம்பாடியர் போ நதிச் சமபூமிகளில் குடியேறினர். யஸ்தின் இறந்தபின் ரைபிறியஸ் என்பவன் தலைமைப் பதவியைப் பெற்றான். யஸ்தினுடைய விதவை அரசியல் நடாத்தவும் அழகிய தடமார்பரோடு கூடிக் களிக்கவும் ஆசைப்பட்டாள். அனஸ்தாசியஸ் தலைவனுகினனெனக் கேள்வியுற்று அரசி பொங்கியெழுந்தாள். அவள் தலைவனைக் கொல்லும்படி ஒருவனை ஏவினுள். தலைவன் இதையறிந்தும் மன்னித்தான். தலைவன் தன் மரணகாலத்தில் தன் மகளையும் இராச்சியத்தையும் மோரிஸ் என்பவனுக்கு அளித்தான்.

கி. பி. 582-ல் பிரான்சிய பறங்கியர் தலைவன் அதாறிஸ் என்பவன் இலம்பாடியரிடம் நிலம்பெற்றான். அவனுக்குச் சர்மான்ய அரசகுமாரியை மணம்பேசினர். அவன் காந்தருவ விவாகமே சிறந்ததென நினைந்து அரண்மனை புகுந்து தன்காதலிக்குத் தன்னை அறிமுகப்படுத்தினன். சிறிதுகாலம் இக்களவொழுக்கம் நிகழ்ந்தபின் அவன் அவளை மணமுடித்துக் கொண்டான். இது நிற்க, இக்காலத்தில் ரைபர்நதி பெருக்கெடுத்து நோய்விளைத்தது. அதனுடன் உரோமாபுரியும் பூகம்பத்தால் இடருற்றது. அக்காலத்துக் கத்தோலிக்ககுரு கிறெக்கரி உரோமர் கோயில்களை இடித்தான். அவன் நூல் நிலையங்களையும் எரித்தான். இலிவியஸ் எழுதிய சரித்திர நூல்களில் சில பாகங்கள் தீக்கு இரையாயின. அக்குரு கிறிஸ்து சமயத்தைப் பரப்புதற்கு உரோமாபுரியையே அழித்திருப்பான். கிறிஸ்து சமயகுரவர் போலும் பீற்றரும் உரோமாபுரியில் அடக்கஞ் செய்யப்பட்டனரென நம்பினனுதலின் உரோமாபுரத்தை அழியாதுவிட்டான்.

கி. பி. 579-ல் யஸ்தினியன் I பார்சியவேந்தன் நர்சிவான் மகனை வென்று உடன்படிக்கை எழுதினன். நர்சிவான் மகன் கர்மிஸ்திஸ் கொடுங்கோலோச்சினன். அவனுடைய படைத்தலைவன் பகிராம் துருக்கரைத் துரத்தியடித்தான். அவன் உரோமரோடு பொருது தோற்றுனுகப் பார்சிய வேந்தன் படைத்தலைவனுக்கு உபகாரமாக நூல்நூற்கும் ஊசியை அளித்தான். இச்செயல் படைத்தலைவனுக்குக் கோபத்தை உண்

டாக்கியது. இங்ஙனம் உள்நாட்டுக் கலகம் தொடங்கிற்று. ஜனங்கள் வேந்தனைக் கொன்று அவனுடைய மகன் கஸ்றஸ் II என்பானுக்கு முடிசூட்டினர். இங்ஙிற்க, ஆவார் என்னும் சாதியார் உரோமரோடு பொருதனர். ஆவாரை பிறிஸ்கஸ் என்னும் படைத்தலைவன் துரத்தினன். படைவீரர் மோரிஸ் என்னும் வேந்தனை வெறுத்தனராதலின், அவனைப்பகைத்தனர் வேந்தன் மோரிஸ் அரசைத் துறந்தான். ஜனங்கள் படைவீரன் பாக்கஸ் என்பவனை வேந்தனுக்கினார்கள். அவனை அராக்கிளியனும் அவன் மருகன் கிறிஸ்பனும் பச்சைக்கட்சியாரின் உதவி பெற்றுத் துரத்தினர் அக்காலத்தில் பார்சியவேந்தன் கஸ்றஸ் II எருசெலம் நகரைப் பிடித்ததுமன்றி எகிப்தையும் பிடித்தான். அவன் தலைநகரில் 900 யானைகளும் 12,000 ஒட்டகங்களும் 3000 கன்னியருள்ளிட்ட 12,000 அடிமைகளும் 6,000 கோவேறு கழுதைகளும் 6,000 மெய்காப்பாளரும் வைத்திருந்தான். அவன் தன்னுடைய மனைவி சிராவின் அழகில் மயங்கினன் அவள் சிற்றின்பத்தை அதிகம் விரும்பினளல்லளாதலின் துயருற்றான். உரோமர் வேந்தன் அராக்கிளியன் பார்சியருக்குத் திறைகொடுக்க உடன்பட்டான். ஆவாருடைய வேந்தன் சாகன் பைசந்தியத்தின்மீது படையெடுத்தானாக அராக்கிளியன் ஓடித்தப்பினன். ஆவார்கள் 270,000 சனங்களைச் சிறையிட்டனர். ஆவாரை உரோமர் கி. பி. 626-ல் துரத்தினர். பார்சியர் பைசந்தியத்தைத் தாக்க ரோமன் கத்தோலிக்கர் பார்சியநாடு புகுந்து அக்கினிதேவனின் கோயில்களை இடித்தனர். அராக்கிளியன் துருக்கரிடம் துணைபெற்றுப் பார்சியரை வென்றான்.

## கிறிஸ்துமதக் கட்சிகள்.

யூதர் பண்டுதொட்டுப் பல அற்புதங்களைக் கண்டனராதலின், கிறிஸ்து செய்த அற்புதங்களில் ஆச்சரியப்படவில்லை. யூதரல்லாதார் கடவுள் மனிதவுடம்பில் புகுதல்கூடுமோவென கிறிஸ்தவருள் ஒரு சாரார் ஐயுற்றுக் கிறிஸ்துமதத்தை நம்பவில்லை. கிறிஸ்தவருள் ஒரு சாரார் கன்னி மரியாளின் கதை நம்பத்தக்கதன்று என்றனர். கிறிஸ்தவருள் ஒருசாரார், பளிங்கினூடே ஆதித்தன் கதிர்தேய்வின்றிச் செல்லுமாறு போலப் பரிசுத்த ஆவி மரியாளினுடம்பிற் புகுந்ததாயினும்

துடக்குறவில்லையென வாதித்தனர். எகிப்திய கிறிஸ்தவர்கள் ஏசுகிறிஸ்து ஒரு மானிடகுமாரனெனவும் கடவுளின் குமாரன் ஒருமனிதன் கூட்டில் அவதரித்தானெனவும் நம்பினர். கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தகாலை கடவுள் உடம்பைத் துன்புறவிட்டுப் பரலோகமடைந்தமையால் சர்வ வல்லமைக்கு இழுக்கில்லையென அவர் வாதித்தனர். அப்பலினேறிஸ் என்னும் குரு பேரறிவு மானிட யாக்கையிற் பொருந்தியதென்பதே கிறிஸ்துவுடைய அவதாரத்தின் கருத்து என மொழிந்தான். அக்கருத்தைக் கத்தோலிக்கர் தெளியாது மறுத்தனர். பூரண குணங்களுள்ள கடவுள் பூரணமடைந்த மனிதவுடம்பு கூடுதல் கடவுளின் தூய்மைக்கு இழுக்கில்லையென்று கொறிந்திய கிறிஸ்தவர் கூறினர். இங்ஙனம் சமயக் கட்சிகள் மிகுந்து கலகங்களும் தொடங்கின. அலெச்சாந்திரியா நகரத்துக் கத்தோலிக்க சந்நியாசிகளும் ஒறிஸ்திஸ் என்னும் தேசாதிபதியின் மீது கல்லெறிந்தனர். குடிகள் அம்மனியஸ் என்னும் சன்னியாசியை உடனே கொன்றனர். இதுநிற்க கணித வல்லோன் தையன் என்பவனுடைய மகளின் பெயர் இப்பேசியா. அவள் யவனத்துவ நூல்களைக் கற்று வல்லளாயினள். பலர் அவளிடம் உபதேசங் கேட்டனர். பலர் அவளை மணக்க விரும்பிய போதிலும், அவள் துறவற வாழ்க்கையையே விரும்பினள். சிறில் என்னும் கத்தோலிக்க குரு தூண்டப் பேதுரு என்பவன் இப்பேசியாவை இரதத்தினின்றும் இழுத்து விழுத்தி முத்துச் சிப்பியால் கீறிக் கொன்றான். இது கி. பி. 415-ல் நிகழ்ந்தது. இதுநிற்க சிரியா தேசத்துக் கிறிஸ்த குரு நஸ்ரோறியஸ் என்பவன், தேவகுமாரனுகிய கிறிஸ்துவுக்குத் தச்சன் மனைவியாகிய கன்னி மரியாள் தாயாகுதல் இயலாதெனவும் கன்னி மரியாளை வணங்கக்கூடாதெனவும் நவின்றனன் இக்கொள்கை பரம்புமென அஞ்சி, சிறில் குருமார் சபையைக் கூட்டினன் நஸ்ரோறியன் சபைக்குச் செல்லுமுன் குருமார் கூட்டங்கூடி அவனுடைய மதம் இழுக்குடையதெனத் தீர்த்தனர். வேந்தன் தியடோசியஸ் நஸ்ரோறியஸ் என்பவனின்கொள்கையே சரியெனச் சொன்னான். உடனே சிறில் நஸ்ரோறியஸ் என்பவனைக் கொல்வித்தான். கத்தோலிக்கர் ஆறியன்மதத்தையும் கண்டித்தனர். ஆறியன் மதத்தோர் பரிசுத்தஆவி கடவுள் குமாரன் என்னும் முப்பொ

ருள் இல்லையென வாதித்தனர். இவ்வாதம் முடிவுபெறுமுன் விக்கிரகங்களை வணங்கலாமோ என்னும் வாதம் தொடங்கியது. உரோமபுரத்துக் கத்தோலிக்கர் விக்கிரக ஆராதனையை முதன் முதல் தொடங்கினர். கி. பி. 883 ல் கிறிஸ்துசமயம் தென்னிந்தியாவில் சிறிது பரம்பிற்று. குரு தோமாஸ் சேரநாட்டில் கிறிஸ்துமதத்தைப் பரப்பினன் என்ப. அவன் மரியாளை வணங்கக்கூடாதெனவும் விக்கிரகவாராதனை பாவமெனவும் போதித்தான். இவ்வரலாறு பிரிவினை மதத்தனாகிய ஆசிரியன் கிப்பனுடைய வரலாற்றைச் சார்ந்தெழுதப் பட்டது.

## பிற்காலவேந்தர்

அராக்கிளியஸ் தனது இல்லாள் யூடோசியா இறந்தவுடன் கத்தோலிக்ககுரு தடுக்கவும் தன்மருகி மாட்டினாவை மணந்தான். அவனுடைய முதல்மனைவிக்கு ஒருமகன் (கன்ஸ்ரான்தையின் என்பவன்) பிறந்தான். இரண்டாவது மனைவிக்குக் அராக்கிளியோனஸ் என்பவன் பிறந்தான். இவ்விரு மைந்தர்க்கும் இளவரசுப் பதவியை நல்கியபின் கி. பி. 641-ல் அராக்கிளியன் துஞ்சினன். கன்ஸ்ரான்தையின் ஓராண்டு ஆளுமுன் இறந்தான். மாட்டினா அவனுக்கு நஞ்சூட்டினளென அலராயிற்று. வீரரும் மேன்மக்களும் சீறியெழுந்து மாட்டினாவினது நாக்கை அறுத்தனர். கன்ஸ்ரான்ஸ் II பன்னீராட்டைப் பிராயத்தினனாயினும் முடிசூட்டப் பெற்றான். அவன் அராக்கிளியனின் பேரப்பிள்ளையைக் கொல்வித்தான். பொதுசனங்கள் அவனைப் பகைத்துக் கலகம் விளைத்தனர். அரசன் அஞ்சி, சிசிலித்தீவுக்கு ஓடினன். அங்கு ஓர் அடிமை அவன் குளிக்கும் பொழுது வெந்நீரூற்றித் தலையில் அடித்துக் கொன்றான். கன்ஸ்ரான்ஸ் என்பவனுடைய மைந்தர் கன்ஸ்ரான்ரையின், அராக்கிளியஸ், ரைபீறியஸ் என்னும் மூவரும் தலைவராயினர். மூத்தோன் படைவீரனின் வேண்டுகோட்கிணங்கித் தம்பியரிருவரையும் பதவியினின்றும் நீக்கினன். அவனுக்கு யஸ்தினியன் அராக்கிளியன் என இரண்டு மக்கள் உண்டு. யஸ்தினியன் வேந்தனாகியவுடன் கத்தோலிக்ககுரு ஒருவனையும்

வித்திலன் ஒருவனையும் அமைச்சராக ஏற்படுத்தினன். கி. பி. 695-ல் ஜனங்கள் யஸ்தினியனை உறுப்பழித்துக் கொன்றனர். ஜனங்கள் பிலிப்பிக்கஸ் என்பவனை வேந்தனெனத் தொழுதனர். கி. பி. 711-ல் அவன் அரசபதவியைப் பெற்று உண்டு உறங்கினன். கி. பி. 713-ல் மேன்மக்கட் சபையார் அவனுடைய எழுத்தாளன் அனஸ்தாசியஸ் என்பவனுக்கு முடியை அளித்தனர். கடற்படை விரோதித்தெழுந்து தியடோசியஸ் என்னும் வீரனுக்குச் செந்நிறப்போர்வையை அளித்தனர். அனஸ்தாசியஸ் கி. பி. 716-ல் தன் பதவியைத் துறந்தான். கி. பி. 618-ல் லீயோ என்னும் கீழைத்தேசப் படைத் தலைவன் வேந்தன் தியடோசியனை விலக்கினன். கி. பி. 741-ல் மூன்றாவது லீயோ அரசாண்டான். அவன் விக்கிரகங்களை இடித்து வீழ்த்தினன். அவனுடைய மகன் கன்ஸ்தான்ரையின் V விக்கிரக ஆராதனையைக் கண்டித்தான். அவன் பெரும் கொலைப்பாதகன், மூக்கிறைச்சி சாப்பிடுதலின் ஆசையுடையவன். தன் அடிமைகளின் மூக்கைத் தானே வெட்டிச் சமைப்பானும். அவனுடைய மகன் லீயோவும் அவன் பேரன் ஆறாவது கன்ஸ்தான்ரையினும் வேந்தராயினர். லீயோ தன் தம்பியரைவர் தலைமைப் பதவியை விழைந்தனரென எண்ணி அவர்களை மானபங்கப்படுத்தினன். லீயோவின் மகன் எதீனிய மங்கையொருத்தியைக் காதலித்துத் தன் தாயோடு கலசப்பட்டுத் தாயை நாடுகடாத்தினன். சிறிதுகாலம் சென்றபின் அவன் தன் மனைவியைத் துறந்து வேறொருத்தியை இச்சித்தான். குருமாரும் படைவீரரும் அவனை விலக்கி அவனுடைய தாய் ஜறினி என்பவளை அரசியாக்கினர். ஜறினி தன் மகனின் கண்களைப் பிடுங்கும்படி பணித்தனள். மேன்மக்கள் அவளை வெறுத்து அவனுடைய தனாதிகாரிக்கு உத்தரீயத்தை அளித்தனர். தனாதிகாரி நிக்கபோரஸ் வேந்தனாகியவுடன் சரசினரோடு பொருதான். பின்னர் பல்கேரியரோடு பொருது மாண்டான். அவனுடைய மகனும் போரில் மடிந்தான். தனாதிகாரியினுடைய சகோதரி பிறக்கப்பியாயும் அவளுடைய கணவன் மைக்கேலும் அரசியலை நடாத்தினர். மைக்கேல் கோழையனாயினும், அவனுடைய மனைவியோ ஒரு வீரப்பெண். மைக்கல் தன்பதவியைத் துறந்து முப்பத்திரண்டு ஆண்டு மறைந்து வசித்தான். பின்பு லீயோ என்பவன் அரசனானான். அவன்

தன் தோழனுக்குப் பதவிகள் அளித்தான். தோழன் திருப்தியடையவில்லை எனக் கண்டு அவனைத் தீயி லிடும்படி ஏவலாளரைப் பணித்தான். லீயோ கோயில்வழிபாடு செய்யும்போது ஒருநாள் கொல்லப்பட்டான். மைக்கல் II தலைவனாயினன். அவன் ஒரு கொன்னையன். தோமாஸ் என்னும் வீரனொருவன் படைதிரட்டி நகர் வாயிலில் பாசறையிட்டிருந்தான். மைக்கல் அவனைப் பிடிப்பித்துக் கை கால் குறைத்துக் கழுதை யேற்றினான். மைக்கலின் மகன் தியோபிலியஸ் கி. பி. 829-ல் அரசனானான். அவன் அங்கையில் பொற்பழமேந்தி மெல்லியலாரை வரிசையாக நிற்கச்செய்து தலைவியொருத்தியைத் தெரிதற்கு விரும்பினன். ஐக்கேசியாவின் வதனம் அவன் மனத்தைக் கவர்ந்தது. அரசன் தன் காதலைக் கூறியகாலையிற் பெண்களே தீமைக்குக்காரணமெனச் சொல்லாடினன். அவள் பெண்களே நன்மைக்கும் காரணமென உரைத்தாள். அரசன் அவள் நாணிலள் என நினைந்து மடந்தை தியடோருவுக்குப் பொற்பழமளித்தான் அவள் விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தினாள். கணவன் இறந்தபின் தன் மகனுக்காக கி. பி. 845-ல் அரசியலை நடாத்தத் தொடங்கினாள். அவளுடைய மகன்தான் மைக்கல் III. அவன் 18 வயசினன். நீலக்கட்சிச் சாரதிகளைச் சார்ந்து அல்லும் பகலும் களித்தாடினான். விகடனொருவனைக் கத்தோலிக்க குருமாருக்குத் தலைவனாக்கினன். அவன் திருக்கோயில்புக்குக் கோயிற் பாத்திரங்களை எச்சிற்படுத்தினனாக, கத்தோலிக்கர் அவனை வெறுத்துக் கொன்றனர்.

லீயோவின் ஆட்சிக்காலத்தில் பாதிய மன்னன் குலத்தோன் ஒருவன் கிரேக்க பட்டினமாகிய அத்திரியனப்பிளில் குடியேறினன் அவன் குலத்தோர் வறுமைப்பட்டனர். அவர்களுள் பேசில் என்போனின் தந்தை ஒரு சிறு கமத்தை நடாத்திவந்தனன். பேசில், வேந்தன் தியோபிலியனுடைய படையில் சேவித்திருந்தான். ஜனங்கள் மைக்கலைக் கொன்று பேசில் என்பவனை வேந்தனாக்கினார்கள். அவன் பொருளீட்டுதலிலும் பாக்கக் காத்தலிலும் வகுத்தலிலும் வல்லுநனாயினன். அரசாங்கத்தோரின் வீண்செலவைக் கண்டித்து நீதி செலுத்தினான். ஒருநாள் வேட்டையாடும்போது கலைமான் கோட்டில் அகப்பட்டு இறந்தான். அவன் மைந்தர் லீயோவும் அலைச்

சாந்தரும் ஆறிவேந்தராயினர். அக்காலத்தில் மக்கட்பேறு வேண்டுவோர் இருமனைவியரை மணஞ்செய்து கொள்ளலாம். மூன்று மனைவியரோடு வாழ்தல் வழக்கமில்லையாயினும் லீயோ XI மூன்று மனைவியரோடு வாழ்ந்தான். வாழ்ந்தும் மக்களைப் பெற்றிலன். சூ என்னும் நங்கை ஒருத்தியைத் தன் காமக்கிழத்தியாக்கினன். அவள் ஒருமகனைப் பயந்தாள். உடனே காமக்கிழத்தியை அரசன் மனைவியாக்கினன். அது முதல் நான்கு மனைவியரை மணக்கலா மென்பது பிரமாண மாயிற்று. லீயோவின் தம்பி அலெச்சாந்தர் தூர்த்தரோடு கூடித் திரிந்தான். தன்மரணகாலத்தில் தோழனொருவனை அரசனுக்குதற்குத் தமயனுடைய மகனை வித்திலனுக்க எண்ணினன். அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. சூவும் ஏழு அமைச்சரும் அரசியலை நடாத்தினர். அமைச்சர் தம்முட் பகைவராகிக் கலகப்பட்டனர். கி பி 919 ல் ரோமானஸ் லெக்கபீனஸ் கடற்படையோடு தலைநகரில் இறங்கி முடிசூட்டப் பெற்றான். அவனுடைய மக்கள் அவனைத் தீவாந்தரத்திற்குத் துரத்தினராக, ஜனங்கள் அவர்களை விலக்கிச் சூவின் மகன் கன்ஸ்ரான்ரையினைப் பின்னரும் வேந்தனுக்கினர். அவன் தன் மகன் ரோமானுஸ் என்பவனுக்குக் கல்விகற்பிக்கவில்லை. ரோமானுஸ் உயர்ந்த உருவினன். அவன் பன்றி வேட்டையில் மிகவும் விருப்பமுடையவன். அவன் அரசனாகியபின் அவனுடைய மனைவி தியபானு அவனை நஞ்சூட்டிக் கொன்றாள். அவனுக்கு மக்கள் இருவர். ஒருவன் பேசில் II எனவும் ஒருவன் கன்ஸ்ரான்ரையின் IX எனவும் பெயர் பூண்டு அரசாண்டனர். கணவன் இறந்தவுடன் தியபானு நிக்கபோரஸ்பக்கஸ் என்போனை மணந்தனள். அவன் சரசினருடன் பொருதான்; தன் தோழன் சிமிக்கிஸ் என்பவனை உத்தியோகத்தில் அமைத்தான். சிமிக்கிஸ் தலைவியின் காதலர் பலருள் ஒருவனுயபக்கஸ் என்போனைக் கொன்று தலைவனுனன். அவன் மரித்தபின் ரோமானுஸ் என்பவனுடைய புத்திரர் பேசில் என்பவனும் கன்ஸ்ரான்ரைன் என்பவனும் வேந்தராயினர் பேசில் கி. பி, 1025 லும் கன்ஸ்ரான்ரையின் 1028-லும் இறந்தனர். கன்ஸ்ரான்ரையினுடைய மகள் சூ என்பவள் ரோமானுஸ் ஆர்க்கிரஸ் என்பவனை மணந்து கொண்டாள். உடனே அவனை

மணந்திருந்த முதல் மனைவி கணவனைப் பிரிந்து கத்தோலிக்கர் பள்ளியைச் சேர்ந்தாள். சூ என்பவள் மைக்கல் என்பவனைக் காமுற்று அவனைக்கொண்டு கி. பி. 1034-ல் தன் கணவனாகிய ரோமானனைக் கொல்வித்தாள். மைக்கல் IV தலைவனாயினன். அவன் வலிநோயால் இறந்தான். கி. பி. 1041-ல் அவன் மருகன் மைக்கல் V அரசனாயினன். அவன் தாயை வெறுத்தானாகச் சனங்கள் அவன் கண்ணை இடந்தனர். சூ என்பாள் பின்னரும் அரசியலை நடத்தினாள். சூவினது தங்கை தியடோரா கதலிக்கர் பள்ளியைவிட்டுத் தமக்கைக்குத் துணையானாள். அவள் துறவியாதலின் விவாகம் செய்துகொள்ள விரும்பவில்லை. அதையுணர்ந்த சூ என்பாள் தன் அறுபதாம் வயதில் விவாகம் செய்துகொண்டு ஒரு ஆண்குழந்தையைப் பெற்றாள். அம்மகவுதான் கன்ஸ்ரான்ரையின் X. அவன் தன் காமக்கிழத்தி ஸ்கலிறினாவை அரசியாக்கினான். அவனுக்குப் பின் அவனுடைய சிறியதாய் தியடோராவும் அவளுக்குப்பின் ஆறாவது மைக்கலும் ஆழியுருட்டினர்.

மனுவல் என்போனுக்கு இருமைந்தர் பிறந்தனர். அவர்கள் படைத்தலைவராயினர். கி. பி. 1057-ல் மூத்தகுமாரன் ஐசாக்-கமனஸ் என்பவன் அரசனானான். அவன் தன் இராச்சியத்தைத் தன்மகளுக்கு அளியாமல் தன் தம்பி யோனுக்கு அளிக்கவும் அவன் மறுத்தான். அரசனுடைய தோழன் 'கன்ஸ்ரான்ரையின் துக்காஸ்' என்பவன் தலைமைப்பதவியை ஏற்றான். அவன் தன் மனைவி யூடோசியாவிடம் தான் இறந்தபின் விவாகம் செய்துகொள்ளாதிருக்கும்படி கத்தோலிக்க குருமுன்னிலையில் வாக்குறுதி கேட்டான். அவள் தன் கணவனைக் கொன்ற ரோமானுஸ் தியோசனிஸ் என்பவனை விவாகம்செய்துகொண்டாள். அவள் தான் அளித்த வாக்குறுதிப்பத்திரத்தைக் குருவின் வீட்டில் நுழைந்து களவாடினள். இது நிற்க, துருக்கர் வேந்தன், ரோமானுஸ் என்பவனைச் சிறைப்படுத்தினன். யூடோசியா துறவு பூண்டு கதலிக்பள்ளியைச் சேர்ந்தாள். யோன் தன்தமையனுடைய பிள்ளைகளை அரசராக்க முயன்றான். மைக்கல் VII ஒரு கோழையன். படைத்தலைவர் பகைத்தெழ, அரசு துறந்தான். அவன் மகன் யோன் கமனஸ் என்பானுக்கு மூன்று மைந்தருண்டு. அம்மூவருள் அலெச்சியஸ் என்னும்

இளையகுமாரன் சிறந்து விளங்கினன். அவன் கி. பி. 1081 தொடங்கி 37 ஆண்டு செங்கோலோச்சினன். துருக்கரோடு பொருது நாடுகள் பலவற்றைக் கைப்பற்றினன். அவனுடைய மக்கள் மூவர் அலெச்சியஸ், யோன், ஐசாக்கு என்பவர் அரசராயினர். யோனுடையமகன் மைக்கல் வேந்தனாகித் துருக் கரோடு பொருதான். அவனுடையமகன் அலெச்சியஸ் கி. பி. 1180-ல் வேந்தனானன். அலெச்சியனுடைய மூத்தமகன் யோன் தந்தையோடு கோபித்துத் துருக்க வேந்தனிடம் அடைக்கலம் புகுந்து வேந்தனுடைய மகளை மணந்தான். இளையகுமாரன் அந்துரோனிக்கஸ் வெற்றிவேற்றடக்கையனாயினும், துருக்க வேடுவர் கையில் ஒருமுறை சிக்கினன். பின்னர் தியோடோ ருவின் சகோதரி யூடோசியாவைக் காதலித்தான். தலைமைப் பதவியைப் பெறுதற்குச் செர்மானியரிடம் துணைகேட்டான். வேந்தன் மனுவல் இதையறிந்து அவனைச் சிறையிட்டான். அவன் தன் காதலியின் உதவியால் சிறையினின்றுந் தப்பி யோடி, ருஷியா போலந்து அங்கேரி முதலிய நாடுகளில் அலைந்துதிரிந்தானாக, மனுவல் இரங்கி அவனை ஒரு படைத் தலைவனாக்கினன். தலைவி மேரியாவின் தங்கை பிலிப்பாவை அந்துரோனிக்கஸ் காதலித்தான். இக்காதலால் வேந்தன் மனு வலின் பகையைத் தேடிப் பெற்றான். பின்பு எருசெலம் கோயிலுக்கு யாத்திரை செய்தான். அங்கு ஓர் அரசகுமரி யோடு கூடினன். பின்பு மனுவலின்கையில் அகப்பட்டு மன் னிப்புவேண்டினன். கி. பி. 1183-ல் அரசுகட்டிலேறி மனுவ லின் பிள்ளைகளையும் கொன்று கொடுங்கோலோச்சினன். அவன் ஐசாக்கு அங்கேலஸ் என்னும் ஒருவனைக் கொல்ல நினைத்தான். ஜனங்கள் அதையுணர்ந்து வேந்தனைச் சிகைகளைந்து தலைகீழாகத் தூக்கினர்.

## கத்தோலிக்கர் சமயம்.

கிறிஸ்தவர்கள் யூதமதத்தினரைப் பின்பற்றிப் படிமவழி பாட்டைக் கண்டித்தனர்; காலக்கிரமத்தில் சிலுவைப்படிவத் தைத் தொழத் தொடங்கினர். பின்னர் சமயகுரவரின் மயிர், தோல், பல் முதலியவற்றை ஞாபகச்சின்னங்களாக வணங்கி னர். முழந்தாளிட்டு வணங்கவும் சாம்பிராணித்தூபம் காட் டவும் தொடங்கினர். ஆறும் நூற்றாண்டில் படிமவழிபாடு

யாண்டும் நிறுவப்பட்டது. கி. பி. 726-ல் வேந்தன் லீயோ III படிமவழிபாட்டைக் கண்டித்தனன். உரோம கத்தோலிக்க குரு கிரெக்கரி படிம வழிபாட்டை நாட்ட முயன்றனன். உரோமாபுரத்திற்கூடிய கத்தோலிக்கசங்கம் படிமவழிபாட்டை நிலை நாட்டிற்று. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் செர்மானியப் பறங்கி வேந்தன் சார்ளிமேன் கல்லியர் நாட்டையும் வடஇத்தாலிய நாட்டையும் ஆண்டான். அவன் உரோமாபுரத்தைக் கத்தோலிக்க குருமாருடைய தலைவனிடம் ஒப்புவித்தான். அதன்பின் செர்மானிய வேந்தர்க்கு கத்தோலிக்க முதற்குரு முடிசூட்டுதல் வழக்கம். முதற்குரு சுவர்க்கமடைந்தால் குருமார்கூடி வேறோர் முதற்குருவைத் தெரிதல் வழக்கமாயினும், தெரியப்பட்டோன் முதற்குருவாக அதிகாரஞ் செலுத்துதற்கு வேந்தனுடைய உத்தரவைப் பெறுதல் வேண்டும். உரோமாபுரத்தில மசோறியா தியடோரா என்னும் இருசகோதரிகள் அழகியராய்ப் பிறந்து செல்வமுற்றிருந்தனராகையால் பலரைத் தம்வசப்படுத்தி வரைவின்மகளிராயினர். அவர்கள் செல்வமுற்று அதிகாரம் பெற்றுத் தாம் விரும்பியோரைக் கத்தோலிக்க முதற் குருவாக்கினர். மசோறியாவின் மகனும் பேரனும் பேரனுடைய பிள்ளையும் கத்தோலிக்க முதற் குருவாகினரென அறியக்கிடக்கின்றது.

---

# 10-ம் அதிகாரம்: முகமதியர்

## 1-ம் பாடம்: முகம்மது நபி.

### அராபியர்.

பார்த்தியரும் உரோமரும் பொருது இளைத்தனராகச் சரசினர் என்னும் அராபியர் தலையெடுத்தனர். அராபியா மணற்காடாயிருந்தது. நீரூற்றுக்கள் உள்ள இடங்களில் அராபியர் சிறுசிறு கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். பட்டிமேய்த்தலும் மீன்பிடித்தலும் அராபியரின் தொழில். சுரநிலவாழ்க்கைக்கெனப் படைக்கப்பட்ட மிருகம் ஒட்டகமே. அதன் உணவு வனாந்தரத்தி லுள்ள முட்செடிகளே. அராபியர் ஒட்டகப்

பாலை அருந்தினர்; அதன் சலத்திலிருந்து உப்பு விளைத்தனர்; அதன் சாணத்தை விறகாக உபயோகித்தனர்; ஆண்டுக்கொருமுறை உதிரும் அதன் மயிரை எடுத்து ஆடை நெய்தனர். பெண்களே ஒட்டகங்களை வளர்த்தனர். ஆடவர் குதிரையேற்றமும் வில்வித்தையும் நனிபயின்றனர் அராபியர் வளர்த்த குதிரைகளே திறமானவை. அராபியர் சுரநிலங்களில் வாழ்ந்தனராகலின், வழிபறித்தலையும் சூறையாடலையும் தம் தொழிலாகக்கொண்டனர். அராபியர் சிலர் வாணிகஞ்செய்தும் பொருளீட்டினர். அராபியருடைய பிரதானமான நகரங்கள் மக்கா மடிஞ என்னும் இரண்டுமே. எமன் என்னும் அராபிநாடு ஆதியில் பார்சியரால் ஆளப்பட்டது. எமன் தேசத்தவரைப் பார்சியர் சரசினர் என அழைத்தனர். அராபிமொழி சீர்திருந்தியதன்றெனினும் கானவரின் மொழிகளுள் சிறந்ததெனப்படும். அராபியர் பண்டு சூரிய சந்திரரை வணங்கினர்.

## முகம்மது நபி.

முகம்மது என்பவரின் பாட்டன் கப்பா என்னும் பெருங் கல்லையுடைய கோவிலில் பூசகனாக அமர்ந்திருந்தான். அக்கோயில் 360 படிமங்களை உடையது. அவற்றுள் சிறந்தது கப்பா என்னும் கல். அக்கல்லைச் சூழ்ந்திருக்கும் படிமங்கள் சில மனித உருவங்கள்; சில கழுகு சிங்கம் முதலியவற்றின் உருவங்கள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அராபியர் முகம்மதுநபி போதித்த மதத்தைத் தழுவினர். முகம்மதுவின் பாட்டன் அப்துல் மட்டலீபு என்பவன் கஷெம் என்னும் வணிகச் செல்வனின் மகனாவன். முகம்மதுவின் பாட்டனுக்கு ஆறு பெண்குழந்தைகளும் 13 ஆண்குழந்தைகளும் பிறந்தன. அவனுடைய இஷ்டபுத்திரன் அப்துல்லா என்பவனுக்கு அருந்தவப் புதல்வராகப் பிறந்தார் முகம்மது. முகம்மதுவின் தோற்றம் உரோமருடைய ஆழிவேந்தன் யஸ்தினியன் இறந்தபின் நாலாம் ஆண்டில் மாசிமாசம் நிகழ்ந்தது. முகம்மது இளவயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையானார். முகம்மதுவின் ஆஸ்தி ஐந்து ஒட்டகமே. முகம்மது தன் 25-ம் ஆண்டில் கடிசா என்னும் விதவைச்செல்வியின் ஒட்டகங்களை மேய்த்தார், அதற்குப் பிரதியாக அப்பெண் முகம்மதுவுக்குத் தன்பொருளை அளித்ததுமன்றித் தானும் இல்லாளாக இயைந்தாள். முகம்மது அவளுக்கு முக்கால்நிறை

பொன்னும் இருபது ஒட்டகமும் சீதனமாகக் கொடுத்தார். முகம்மது கம்பீரமான உருவினர்; நீண்டதாடியர்; எழுத வாசிக்கத் தெரியாதவராயிருந்தும் தமது நாவல்லமையால் மனிதரை வசீகரப்படுத்தினர். பலரோடு பேசித்தேர்தலாலும் தியானத்தாலும் தம் அறிவை வளர்த்தார். இரம்சான் (கார்த்திகை) மாதத்தில் முகம்மது கர வென்னும் முழையில் தனித்திருந்து தியானம் செய்வர். அம்முழை மக்காவிலிருந்து 3 மைல் தூரத்திலிருந்தது.

அல்லா என்னும் ஒரே ஒரு தெய்வம் உண்டெனவும் முகம்மதுவே அல்லாவின் உபதேசகர் எனவும் முகம்மதியர் நம்புகின்றனர். ஏழாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர் படிமவழிபாடு செய்யத் தொடங்கித் தேவர் பலரை வணங்கிய காலத்தில் முகம்மது கடவுளொன்றெனவும் படிமவழிபாடு குற்ற முடையதெனவும் வற்புறுத்தினர். முகம்மது ஆதாம், நோவா, ஆ பி ர கா ம், மோசஸ் என்னும் யூதருடைய மூதாதையரைக் கடவுள் புரந்தனரென நம்பினர்.

குரான் என்னும் முகம்மதிய சமயநூல் சுயம்புவானது எனவும் அது அநாதியாயுள்ளது எனவும் முகம்மதுதான் கடவுளின் கடைசித் தீர்க்கதரிசி எனவும் முகம்மதுவும் முகம்மதியரும் மொழிகின்றனர். இடையிடையே முகம்மது உபதேசஞ் செய்தனராகலின் பிற்காலத்தில் உபதேசித்தவைகளே அவற்றின்முன் உரைக்கப்பட்டவற்றிலும் பிரமாணமாகும். முகம்மது இறந்தபின் அபுபக்கர் குரான் நூலைத் தொகுத்து வெளியிட்டனர். முகம்மதுவின் உபதேசங்களைக் கேட்க மரங்கள் புடைபெயர்ந்தன எனவும், முகம்மது பசித்தோர் எண்ணிறந்தவராயினும், உணவளித்தாரெனவும் இறந்தோர்பலரை உயிர்ப்பித்தாரெனவும் முகம்மதுவின் சீடர் மொழிந்தனர். முகம்மதுகணக் கண்டெழுந்து மக்காவிலிருந்து எரிசலம் நகருக்குப் பிரயாணஞ்செய்து ஏழாஞ் சுவர்க்கத்தை நண்ணிக் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திரும்பினரெனவும் ஒரு கதையை அவர் சீடர் சிருட்டித்தனர். முகம்மது செப தபம் செய்வதில் விருப்பமுடையவர் என்பதில் ஐயமில்லை.

வெள்ளிக்கிழமைதோறும் முகம்மதியர் திரண்டு கடவுளை வழிபடுவர். ரம்சான் மாதத்தில் முப்பதுநாளும் பொழுது புலரு

முன் எழுந்து பொழுதுபடுமளவும் உண்ணுவிரதங் காப்பர். முகம்மதியர் மதுபானஞ் செய்யக்கூடாதெனவும் தம் தேட்டத்தில் பத்திலொரு பங்கைத் தருமங்களிற் செலவு செய்ய வேண்டு மெனவும் முகம்மது கற்பித்தனர். உலகு ஒடுங்கும் கடைசிநாளில் ஒவ்வொருவரும் தத்தம் பாவத்திற் கேற்பத் தண்டிக்கப்படுவரென முகம்மதியநூல் நுவல்கின்றது. அறஞ்செய்வோர் சுவர்க்கமடைந்து, பைங்காவினுள் உலாவியும், முத்து மாளிகைகளில் துயின்றும் உவைன் குடித்தும் கருங்கண்ணிணையுடைய தேவரம்பையர் எழுபத்திருவரோடு இன்புற்றிருப்பராம். ஆண் பெண் இருபாலாரும் சுவர்க்கம் சேரலாம். அஞ்ஞானிகளும் பாசாங்குக்காரரும் நரகில் வீழ்த்தப்படுவர்.

கி. பி. 609-ல் முகம்மது தன் மனைவியையும் மாணக்கனையும் அடிமையையும் நண்பனையும் தன் மார்க்கத்திற்குத் திருப்பினர். மனைவி கடிசா உண்மையாக நம்பினள். மாணவன் ஆலி ஆசிரியனைப் பின்பற்றினன். சைத்து என்னும் அடிமை சுவாதீனம் பெறும் நோக்கமாக உபதேசங்களைக் கேட்டிருக்கலாம். நண்பன் அபுபக்கர் மக்காநகரில் பதின்மரை முகம்மதியமார்க்கத்தில் சேர்த்தான்.

தேசியத் தெய்வங்களை முகம்மது பழித்துரைத்தனரென அராபியர் வெகுண்டு முகம்மதுவுக்குக் கொலைத் தண்டனை விதித்தனராம். கி. பி. 622-ல் தேவதூதன் ஒருவனால் தன் விதியை உணர்ந்து முகம்மது அபுபக்கரோடு மக்காவிலிருந்து மடினுவுக்கு ஓடித் தப்பினர். மடினுவில் 73 ஆடவரையும் 2 பெண்களையும் தம் மார்க்கத்திற் சேர்த்தார். அவர்களோடு தாம் இறக்குந்துணையும் வாழ்வாரெனவும் அவர்களைத், தாம் புரப்பாரெனவும் வாக்குப்பண்ணிப் புறநகரில் இருந்தார். கையிற் குடைபிடித்துப் பெண் ஒட்டகத்தின்மீதேறித் தம் தலைப்பாகையை அவிழ்த்துக் கொடியாகப் பாவித்து நகருட் புகுந்தனராக, 500 சனங்கள் முகம்மதுவை வணங்கினராம். ஆறு வருடஞ் சென்றபின், கி. பி. 628-ல் 1500 மக்கள் முகம்மதியராயினர். முகம்மது ஒன்பதுமுறை போர்புரிந்தார்.

அபுசபியன் என்னும் வணிகனை வழிபறித்தற்கு முதற் போரும், படிமவழிபாட்டைத் தொலைத்தற்கு இரண்டாம்

போரும் நடாத்தப்பட்டன. இரண்டாம்போரில் முகம்மது இரண்டு பற்களை இழந்தார். பின்பு யூதரொடு பொருது வென்றார். யூதநகராகிய சோபர் முகம்மதியர் வசமாயிற்று.

யூதரை ஓமார் என்னும் தலைவன் சிரியாதேசத்திற்கு அழைத்துச் சென்றனன். முகம்மதியர் அராபியரொடு சமாதானஞ் செய்துகொண்டு கப்பாக் கோயிலிலும் மக்காவிலும் தொழும் உரிமையைப் பெற்றார். கி. பி. 629-ல் முகம்மது 10,000 வீரரோடுசென்று மக்காநகரைப் பிடித்து ஆண்டார். கட்சிகளை ஒற்றுமைப்படுத்தியபின் கோயில்களை உடைத்தார். கமயின் களத்தில் போர் புரிந்தபின் ரேயிவு நகரைப் பிடித்தார். அங்கு அகப்பட்ட சூறை 6000 வீரர், 24,000 ஒட்டகம், 40.000 செம்மறிகள், 4000 வெண்காசு. இப்போர் அடிமை சயித்து என்பவனின் தலைமையில் நிகழ்ந்தது போர்முடிவில் 'சயித்து' இறந்தான். முகம்மது உரோமர் வேந்தன் எராக்கிளியனோடு நட்புக்கொண்டாடினர். சொற்பகாலஞ்சென்றபின் பகைத்துப் போர்முரசறைந்தார். முடிவில் நட்பு ஏற்பட்டது. 63-ஆம் வயதில் முகம்மது அபுபக்கரின் மகளும் தன் இஷ்ட மனைவியுமாகிய அயேஷா என்பவளின் மடியில் துஞ்சிப் பரலோகமடைந்தார். முகம்மதுவின் உடல் மடினுவிலே அடக்கம்செய்யப்பட்டது. இக்காலத்து முகம்மதியரும் மெக்கா மடினுவுக்கு யாத்திரை செய்தால்தான் பரகதி யடையலா மென நம்புகின்றனர்.

முகம்மது தம் 40-ம் வயதில் தாம் தேவனுடைய தீர்க்கதரிசியெனக் கூறினர். முகம்மது ஆடம்பர வாழ்க்கையை விரும்பினரல்லர். மனைவியர் பலரை விவாகம் செய்யும் காலத்தில் முகம்மது நாலு மனைவியருக்குமேல் அதிகமாக மணஞ் செய்யப்படா தெனக் கட்டளையிட்டார். அவருடைய முதல் மனைவி கடிஷாவுக்கு நாலு ஆண்குழந்தைகள் பிறந்து இறந்தன. மேரி என்னும் எகிப்திய மனைவிக்கும் ஒரு ஆண்குழவி பிறந்து இறந்தது. முகம்மதுவின் மகள் பற்றீமா அபுதலிப்பின் மகன் ஆலி யென்பவனை மணந்தாள்.

# 2-ம் பாடம் அராபிய காலிவ் வேந்தர்.

அராபிய முகம்மதியர் அயல்நாடுகளை வென்று தம் ஆட்சியைச் செலுத்திப் பெரிய இராச்சியத்தை நடாத்தினர். அராபிய ஆழி வேந்தர் காலிவ் என்னும் பட்டப்பெயர் பெற்றனர். அவர்களுடைய தலைநகர் பாக்தாது; அவர்களுள் தலைசிறந்தோன் அரன்அல்ரஷீத்து; அவன் தொடர்பாகவே அராபிக்கதை என்னும் புனைகதைகள் எழுதப்பட்டன. அராபியர் சீனக்கலைகளையும் இந்துக்கலைகளையும் ஓம்பினர்;-

கி. பி. 632-ல் அபுபக்கரைத் தலைவனென ஓமார் வணங்கினன். அபுபக்கர் 634-ல் இறந்தானாக, ஓமார் முகம்மதியருடைய அரசற்குரிய காலிபுப் பட்டத்தை எய்தினன். ஓமாரைத் தீயோனொருவன் கொல்ல ஒதுமான் அரசனானன். அவனுடைய தலைநகர் டமாஸ்கஸ். ஆலி அரசு தனக்கே உரியதெனக் கலாம் விளைத்தான். ஆலியைச் சந்தான குரவரில் ஒருவரென நம்பும் கட்சியினர் ஷீயரெனவும் அதை நம்பாத ஓமாரின் கட்சியார் சொன்னியரெனவும் சொல்லப்படுவர். ஆயேஷாவின் சகோதரனொருவன் கி. பி. 655-ஆம் ஆண்டு ஒதுமனைக் கொன்றான். பின்பு ஆலி அரசுகட்டிலி லேறினனாக, ஆயேஷாவின் தலைமையில் ஒதுமன் கட்சியார் பகைத்தெழுந்தனர். ஆலி அவர்களை அடக்கினன். அபுசபியனனின் மகன் சிரியருடைய துணைப்படையோடு எதிர்த்தானாக, அவனையும் வென்றான். ஆலியும் அபுசபியனின் மகனாகிய மோகவியாவும் எகிப்தை யாண்ட அமுருவும் கலகப்பட்டனராதலின், தீவினையாளர் மூவர் அவர் மூவரையும் கொல்ல எண்ணினர். அமுருவின் அமைச்சனை அமுரு என மயங்கிக் கொன்றார்கள். மோகவியா ஓடித் தப்பினான். ஆலி கொல்லப்பட்டான். மோகவியா சிரியா தேசத்தை ஆண்டான். அவன்பின் அவன் மகன் எசித்து அரசனானன். மோகவியா ஆலியின் மகன் ஆசன் என்பவனை அரசைத் துறக்கப்பண்ணினன். கூபாவை ஆண்ட ஒபியதுல்லா ஆசனுடைய சகோதரனாகிய ஹுசேயினைக்கொன்றான். ஆலியும் அவன் சந்ததியாரும் சமயகுரவராயினர். 12-வது குரவன் வழிகாட்டி யென்னும் பட்டம் பெற்றான். முகம்மதிய சமயம் கிரியைகளைக் கண்டித்தமையால் கத்தோலிக்கரும் பிறரும் முகம்மது சமயத்தைத் தூற்

றினர். பாசாங்குக்காரர் பலர் தாம் அல்லாவின் தீர்க்கதரிசிகளென எழுந்தனர். கி. பி. 632-ல் அபுபக்கர் இப்பாசாங்குக்காரரைத் தொலேத்தான். மசிலாமாதன் ஒரு தீர்க்கதரிசியென எழுந்தான். தலேவன் கலட்டு 40,000 முஸ்லீம் வீரரோடு புறப்பட்டு எதிரிகள் யாவரையும் புடைத்தான். கலட்டு அஞ்ஞானிகள் பலரைக் கொன்றான். பார்சியருடைய நகர் இரண்டைப் பிடித்தபின் சிரியாநாடு புக்கான். கி. பி. 686-ல் பார்சிய வேந்தனேக் கடிசியாக் களத்தில் வென்றான். அராபியருடைய படை பெரும்பாலும் குதிரைப் படையும் விற்படையுமே.

சயித்து என்னும் தலேவன் பார்சியத்தலேநகராகிய ரசிபனேப் பாழாக்கினான். ஒக்சஸ்நதி பாயும் துருக்க நாடுவரையும் தன் ஆட்சியைச் செலுத்தினான். கற்றீபா என்பான் துருக்கரை அப்பாலும் துரத்தினான். அபுபக்கர் சிரியாநாடு புக்கு மரங்களே வெட்டாதீர்கள், மாடுகளேக் கொல்லாதீர்கள், விரோதிகளேத் தேடிக் கொல்லுங்கள் எனத் தன் வீரருக்குக் கட்டளே யிட்டான். கி. பி. 633-ல் அராக்கிளியஸ் என்னும் உரோமர் தனிக்கோலன் 70,000 தொகையிற் படையொன்று திரட்டி முகம்மதியரோடு போர்செய்யும்படி பணித்தனன். அப்பெரும் படையைக் கலட்டு வென்றான். ஜாபர் மகன் அப்துல்லா கி. பி. 635-ல் உரோமரை யமருக்கு என்னும் களத்தில் வென்றான். ஓமர் எரிசலம் நகரைப் பிடித்தான். அதனுடன் உரோமருடைய நாடாகிய சிரியாநாடு அராபியர் வசமாயிற்று. கி. பி. 638-ல் அமுரு எகிப்தைக் கைப்பற்றினான். படைவீரர் அலேச்சாந்திரியாவிலுள்ள நூல்நிலேயத்துக்கு தீயிடலாமோ எனக் கேட்டபோது முகம்மதிய ஆழிவேந்தன் ஓமார் சொன்ன மறுமொழி வருமாறு:- "அந்நூல்கள் நுவலும்பொருள் குரான் கிளக்கும் பொருளொடு பொருந்தியவையாயின் அவைமிகையாகும்; பொருந்தாதவையாயின், அவை பொய்யாகும்" என்பது. நூல்நிலேயம் எரிவாய்ப்பட்டது.

சயித்தின் மகன் அப்துல்லா 20,000 சரசின வீரரைத் திரட்டி ஆபிரிக்காநாடு சென்று உரோமதேசாதிபதிகள் திறை கொடுக்க வேண்டுமெனவும் முகம்மதிய சமயத்தைத் தழுவ

வேண்டு மெனவும் முரசறைந்தான். தேசாதிபதி கிரக்கரி போரில் புகழ்பெறும் வீரனுக்குத் தன் மகளை அளிப்ப னென மொழிந்தனன். அவனும் அவன் மகளும் முன்னணியில் நின்று பொருதனர். அப்துல்லா முதுகிட்டுப் பின்னர் உரோமரை வென்றான். கி. பி. 665-ல் அக்பார் 10,000 வீரரோடு சிரியாநாட்டினின்று புலம் பெயர்ந்து ஆபிரிக்க நாடுகளைக் கடந்து அத்லாந்திக் சமுத்திரக்கரையை அணுகினான். பின்பு கி. பி. 692-ல் எகிப்திய அரசன் ஆசன் உரோமரை வென்று காதாக்கோப் பட்டினத்தைப் பிடித்தான்.

கதினா என்னும் அரசியின் தலைமையில் மேலாபிரிக்க நாடுகளில் வசித்த மூர்கள் அராபியரோடு பொருதனர். அந் நாடுகளில் வசித்த கத்தோலிக்கர் மூரின் கொடுங்கோலினும் அராபியரின் ஆட்சியே திறமானதெனு எண்ணி நொதுமலா யிருந்தனர். பிற்காலங்களில் இம்மூர்கள் முகம்மதியராயினர்.

ஸ்பானியர் தம்முட் கலகப்பட்டனர். யூலியன் என்னும் ஓர் குறுநிலமன்னன் அராபியரிடம் துணைவேண்டினான். கி. பி. 711-ல் தரிக்கு என்னும் அராபி ஸ்பெயினில் இறங்கி யூதருடைய துணையோடு ஸ்பானியரை அடக்கி ஆண்டான். மூசா என்னும் முகம்மதியத் தலைவனும் தரிக்கு என்னும் தலைவனும் கலகப்பட்டனர். மூசா ஐரோப்பிய தேசங்கள் யாவற்றையும் ஒரு குடைக்கீழ் ஆள எண்ணினன். முகம்மதியருடைய ஆழிவேந்தன் மூசாவைப் போர் தொடங்க வேண்டாமெனப் பணித்தனன். மூசா ஸ்பானிய குறுநில மன்னனொருவன் மகளை மணந்தான். அதைக் கேள்வியுற்ற முகம்மதிய வேந்தன் அவனை மக்காவுக்குத் திரும்பும்படி கட்டளையிட்டான். ஸ்பெயின்தேசம் முகம்மதியரின் ஆட்சியில் தலையோங்கி வளர்ந்தது. முகம்மதியராட்சி மூன்று நூற்றாண்டுகள் நிலைத்தது. அக் காலத்தில் கமக்காரரும் வணிகரும் செல்வராயினர். அடிமைகள் முகம்மதியரானவுடன் தம் எசமானனுடன், சமத்துவமாயிருக்கும் உரிமையைப் பெற்றனர். முகமதியசமயம் யாவருக்கும் சமத்துவம் அளித்தது. ஸ்பெயின் தேசத்திலுள்ள கிறிஸ்தவரை முகம்மதியர் துன்புறுத்தவில்லை. ஸ்பெயின் தேசத்தில் கோர்டோவா என்னும் நகரில் முகம்மதியர் ஓர் பல்கலைக்கழகம் நாட்டிக் கிழைத்தேயக் கல்வியை ஓம்பினர்.

கி. பி. 668-ல் மோகவியா இளங்கோ யசித்தையும், சபியன் என்னும் ஓர் தலைவனையும் கன்ஸ்ராந்தினப்பிள் என்னும் தலைநகரைத் தாக்கும்படி ஏவினன். அராபிக்கப்பல்கள் பட்டினத்தை அணுகின. பட்டினத்தின் மதில்கள் பொறிகளால் காவல் செய்யப்பட்டிருந்தமையால் அராபியர் பட்டினத்தைத் தாக்காது நாடுநகரங்களில் சூறைகொண்டனர். பின்பு ஆறு வருடம்வரை தலைநகரை இடையிடையே தாக்கினர். அப்போர்களில் 30,000 முகம்மதியர்கள் இறந்தனர்.

ஓமையா குடும்பத்தினர் சிரியாதேசத்தையும் எகிப்தையும் ஆண்டனர். அக்காலத்து முகம்மதியர் நாணயங்கள்மூலமாகவே கொடுக்கல்வாங்கல் செய்தனர். அராபியாதேசத்தில் எழுத்துக்கணிதமும் வடிவக்கணிதமும் பயிலப்பட்டன. வேந்தன் வாலட்டு சிரியாவை ஆண்டனன். அவனுடைய வீரர் ஸ்பெயினைக் கைப்பற்றினர். தலைவன் மஸ்லீமா 120,000 படைவீரரோடு பைசந்தியம் என்னும் கன்ஸ்ராந்தினப்பிள் முன் பாசறையிட்டான். அவனுடைய கப்பல்களைக் கிரேக்கர் தீயிட்டுத் தொலைத்தனர். முகம்மதிய ஆழிவேந்தன் சலிமான் இறந்தபின் அராபியப்படைவீரர் குளிர்தாங்கமுடியாது வருந்தினர். கிரேக்கருடைய தீக்கலங்கள் அராபியருடைய பிறிதோர் கப்பற்படையையும் எதிர்த்தன. உரோம கிரேக்கர் தலைவன் லீயோ பல்கேரியருடைய உதவியைப் பெற்றான். மஸ்லீமா அதைக்கேள்வியுற்றுத் தன்னூடு திரும்பினான். தீயே கிரேக்கநகரைக் காத்தது. இத்தீ ஒருவகைக் கந்தகக் கலப்பாலாகியது. இக்கலப்பை முகம்மதியன் ஒருவன் உரோமருக்குச் செய்துகாட்டினன். உரோமர் இவ்வித்தையைப் பிறர்க்குக் கற்பியாது மறைபொருளாக வைத்திருந்தனர்.

கி. பி. 731-ல் அப்துல்ரகிமான் பிரஞ்சுதேசத்தில் புகுந்து பிறைக்கொடியை நாட்டினான். அடுத்த ஆண்டு பிரஞ்சு வேந்தன் சார்ல்ஸ் முகம்மதியரை வென்றான். ஓமையா குடும்பம் முகம்மது குடும்பத்தோடு சம்பந்தம் இல்லாததாகையால் ஹசிம் குடும்பத்தார் கலகம் விளைத்தனர். ஓமையா கட்சியார் வெண்டலப்பாகை யணிந்தனர். ஹசிம் என்பவனுடைய கட்சியார் கருந் தலைப்பாகையை அணிந்தனர். கி. பி. 750-ல் ஓமையா கட்சியார் குன்றினராயினும் அப்துல்ரகிமான் ஸ்பெயின்தேசத்

தில் முகம்மதியருடைய ஆட்சியை நிலைநாட்டினன். முகம்மதிய வேந்தன் அல்மான்சர் பாக்தாதைத் தலைநகராக்கினன். அக்காலத்தில் கொன்னை மைக்கல் என்னும் உரோமகிரேக்கன் தலைவன் அரசாண்டிருந்தான்.

கி. பி. 723-ல் அராபியர் சிசிலித்தீவில் இறங்கினர். கத்தோலிக்கப்பள்ளியிலிருந்த துறவியொருத்தியை ஒரு இளைஞன் காமுற்றதினால் தன் நாக்கை யிழந்தான். அவன் முகம்மதியரை 727-ல் சிசிலித்தீவில் இறங்கும்படி தூண்டினன். சிசிலியர் முகம்மது சமயத்தைத் தழுவினர்.

அராபியர் உரோமாபுரத்திலும் சூறையாடினர். முகம்மதியர், இருகட்சியினராகப் பிரியாவிடின் இத்தாலியாதேசத்திலும் தம் ஆட்சியைச் செலுத்தியிருப்பர். கி. பி. 907.ல் ஆபிரிக்கநாட்டு முகம்மதியர் அராபிய ஆழிவேந்தனுக்கு அடங்காது சுயாதீனராயினர். கி. பி. 903-ல் பார்சியரும் சுயராச்சியம் பெற்றனர். முகம்மதுவின்பின் 39-ஆவது தலைமுறையாக ஆண்ட வேந்தன் இரதியன் காலத்தில் மூன்று நூற்றாண்டு நிலைத்திருக்க முகம்மதிய இராச்சியம் சிற்றரசுகளாகப் பிரிந்தது. கி. பி. 960-ல் நிக்கபோரஸ்பக்கர் என்னும் உரோமகிரேக்கர் தலைவன் அராபியரைச் சிரியா தேசத்தினின்றும் துரத்தமுயன்று தானே முதுகிட்டனன்.

## உரோமகிரேக்கர்.

உரோமாபுரத்தில் உரோமர் எங்ஙனம் வாழ்ந்தனரோ அங்ஙனமே கன்ஸ்ராந்திநோப்பிளில் உரோமகிரேக்கர் வாழ்ந்தனர்; போர் நடாத்தும் முறையிலாயினும் சரி சமயக் கலகங்களிலாயினும் சரி கல்விபயிற்றுமுறையிலாயினும் சரி வியாபாரமுறைகளிலும் சரி உரோமகிரேக்கர்முறை பண்டை உரோமர்முறையினின்றும் வித்தியாசப்பட்டதன்று. அராபியரும் பல்கேரியரும் ஹங்கேரியரும் ருஷியரும் வடக்கரும் துருக்கரும் ஒருவர்பின் ஒருவராகக் கிரேக்க உரோமரோடு பொருது அவருடைய இராச்சியத்தைப் பங்கப்படுத்தினர். கி. பி. 711-ல் பல்கேரியர் கன்ஸ்ராந்திநப்பிள் புகுந்து அரசன் நிக்கபோரஸ் என்பவனைக் கொன்று ஆரவாரித்தனர். கி. பி. 917-ல் சிமியன்

என்னும் தலைவன் தலைநகரை முற்றுகையிட்டுத் திறைபெற்றான். கி. பி. 924-ல் ஹங்கேரிய மைக்கியர்கள் பல்கேரியரையும் கிரேக்கரையும் துரத்தினர். சர்மானியர் மைக்கியரோடு பொருது வென்றனர். கி. பி. 950-ல் வடக்கர் இத்தாலிய கிரேக்கு என்னும் தேசங்களில் சூறையாடினர். ருஷியர் தலைவனுடைய கப்பற்படையைக் கிரேக்க தீக்கலங்கள் எரித்தன. கிரேக்கர் தலைவன் நிக்கபோரஸ் ருஷியர் தலைவனுக்குத் திறைகொடுத்து நட்புச் செய்துகொண்டான் சிமிக்கிஸ் என்னும் வேந்தன் ருஷியரை வென்றான். ருஷிய வேந்தன் வலோடிமன் உரோமரிடம் மணமகள் பெறுதற்காகக் கிறிஸ்து மதத்தைத் தழுவினான். அதன்பின் ருஷியா தேசத்தில் கிறிஸ்துமதம் பரம்பிற்று.

கி. பி. 840-க்கும் 1011-க்கும் இடையிட்ட காலத்தில் சரசினர் பறங்கியர் உரோமகிரேக்கர் என்போர் இத்தாலியா நாட்டை ஆளுதற்கு ஒருவரோடு ஒருவர் பொருதனர். தென் இத்தாலியில் கி. பி. 870-ல் சரசினர் தம்கொடியை நாட்டினர். கி. பி. 1016-ல் வடக்கர் வந்து இறங்கிச் சிசிலியில் தம் ஆட்சியை நாட்டினர். வடக்கரும் கிறிஸ்துமதத்தைத் தழுவினர். வடக்கர் துணையோடு உரோமகிரேக்கர் சரசினரை வென்றனர். கி. பி. 1049-ல் வடக்கர் கிறிஸ்தமுதற்குரு லீயோ 9 என்பவனை வென்றபின் கிரேக்க தலைநகரைத் தாக்கச்சென்றார்கள். கி. பி. 1081-ல் றப்போட் என்னும் வடக்கன் அலெச்சியஸ் வேந்தனோடு, டுறசாக்களத்தில் பொருது வென்றான். சர்மானிய ஆழிவேந்தன் மூன்றாவது ஹென்றி இத்தாலியிலும் ஆட்சி செலுத்தினான்.

---

## 3-ம் பாடம்: துருக்க மன்னர்

### துருக்கர்.

துருக்கர் சீனாவுக்கும் பர்சியாவுக்கும் இடையிட்ட நாடுகளில் வதிந்தனர். கி. பி. 977-ல் முகம்மத் கஜினி அரசு செலுத்தினான். அவன் காஷ்மீரம் டெல்ஹி முதலிய இடங்களில் சூறையாடினான். இந்துக்கோயில்களைத் தூளாக்கினான்;

படிமங்களைப் புரட்டி ஆங்கு இட்டிருந்த முத்து பொன் இரத்னம் முதலியவற்றைக்கொண்டு தன் நகருக்குத் திரும்பினான். இங்ஙனம் ஆயர்கூட்டத்தினரான துருக்கர் கள்வர் கூட்டத்தினராயினர். இத்துருக்கர் அவுண கூட்டத்தினர்.

துருக்கர் பர்சியாவிலும் சூறையாடினார்கள். துருக்கர் அராபியரைத் துரத்திப் பர்சியநாட்டுக்குத் தகுருல் என்போனை அரசனாக்கினர். கி. பி. 1055-ல் துருக்கர்வேந்தன் தன்னை ஆழிவேந்தனாக மதிக்கும்படி ஏவினன் தகுருல் என்போனின் மகன் அல்பார்சிலன் சின்னாசியாநாடு நுழைந்து சூறையாடி, உரோமகிரேக்க வேந்தன் உரோமானஸ் தியாக்கினிஸ் என்போனைச் சிறையிட்டான். உரோமர்வேந்தன் 360,000 பொன் கொடுத்து விடுதலை பெற்றான். கிரேக்கர் சிறைப்பட்ட வேந்தனுக்கு உபசாரஞ்செய்ய விரும்பவில்லை. கி பி. 1072-ல் அல்பார்சிலன் யோசேப்பு என்பவனால் கொல்லப்பட்டான்

அல்பார்சிலன் மகன் வேந்தனாயினன். அவன் பெயர் மலிக்குஷா. அவனுடைய அமைச்சன் நிசாம் என்பவன் அரசியலை நடாத்தினான். அவன் சோதிட முறைகளைத் திருத்தினான். மலிக்கு 93-ம் வயதில் இறந்தான். உடனே குறுநிலமன்னர் பலர் எழுந்து கலகப்பட்டனர். உரோமர்வேந்தன் அலேசியஸ், வடக்கருக்கு எதிராகத் துருக்கர்வேந்தன் சலிமானிடம் துணைவேண்டினன். சலிமான் சின்னாசியா முழுவதையும் பிடித்தான். அக்காலத்தில் எரிசலம்நகரில் யூதர் கிறித்தவர் முகம்மதியர் என்னும் பல்வேறு சமயத்தோரும் ஒருவரோடொருவர் கலகப்படாமல் வணங்கினர். அஞ்ஞானிகளெனச்சொல்லப்படும் கிரேக்கர் உரோமர் துருக்கர் முதலியோர் விழாக்காலங்களில் வாணிகஞ் செய்யச் சென்றனர்.

எகிப்தை ஆண்ட அரசன் ஆக்கிம் என்பவன் ஒரு மூர்க்கன். அவன் கிறுத்வரைக்கோறல் சுவர்க்கமடைதற்கு ஏதுவாகுமென எண்ணினன், கி. பி. 1009 ல் ஆக்கிம் எரிசலம் நகரைப் பாழாக்கினான். கி. பி. 1095-ல் துருக்கர் அராபியரை எரிசலம் நகரிலிருந்து துரத்தினர். அதன்பின் துருக்கர் சமயாவேசங்கொண்டு கிறித்தவரைக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டனர்.

## சமயப்போர்.

பிரஞ்சுதேசத்தில் வசித்த கதலிக்கர் துறவி பீற்றர் என் போன் எரிசலம் நகருக்கு ஒருமுறை யாத்திரை செய்தான். அவன் தான் முகம்மதியரால் துன்புறுத்தப் பட்டானெனவும் கிறித்தவர் பலரைத் துருக்கர் துன்புறுத்தியதைத் தான் கண்டு இரங்கினனெனவும் விளம்பிப் பலதேயத்தோரையும் கிறித்து சமயக்கோயிலைக் காத்தற்காக முகம்மதியரோடு போர்புரியும் படி தூண்டினன். கதலிக்கர் சமய முதற்குரு ஏர்பன் என் பவன் இம் மூர்க்கர்களை ஆதரித்தான். பீற்றர் பேசும்போது கண்ணீர் உகுப்பான். முகம்மதியரால் விளையும் இடுக்கண் தாங்கமுடியாதெனப் புனைந்துரைப்பான். பீற்றருடைய பேச்சினல் கத்தோலிக்கர் தூண்டப்பட்டு முகம்மதியரோடு போர் புரிய எழுந்தனர். குறுநில மன்னர் பலர் படைசேர்த்தனர். கிரேக்கர்வேந்தன் அலேச்சியஸ் கமனஸ் தனக்குப் பகைவர் மிகுந்தமையால் தான் உதவிபுரியவில்லை என அறிவித்தான்.

இம்முதலாம் சமயப்போருக்கு மேனுட்டுப் பெருவேந்தர் படையெடுத்துச் செல்லவில்லை. கமக்காரர் தொழிலாளர் முதலிய பொது சனங்களே இப்போர்செய்ய விழைந்தனர். ஸ்பானியர் தாம் முகம்மதியரோடு தம்மூரிலேயே போராடுவதால் துணைப்படை அனுப்ப இயலாதென விளம்பினர். வடக்கர் இங்கிலாந்தில் குடியேறும் முயற்சியிற் கண்ணுயிருந்தனர். கத்தோலிக்கர் படையை அலேச்சியஸ் வேந்தன் ஆதரித்தான்; எனினும் தன்னுட்டில் படையை பாசறையிட விட்டால் தனக்கே கேடுவிளையுமென அஞ்சினன். கத்தோலிக்கர் கடல் கடந்து சிரியாநாடுபுகுந்து துருக்கரைத் துரத்தி எரிசலம்நகரை முற்றுகை யிட்டிருந்தனர். இப்போர் நடந்தது கி பி. 1099-ஆம் ஆண்டு. கட்பிறி என்னும் தலைவன் எரிசலம்நகரில் அரசு செலுத்தி முகம்மதியரைத் துன்புறுத்தினன். அலேச்சியஸ்வேந்தன் கிறிஸ்தவத் தலைவர் தாய்நாடு திரும்பியபின் தாய்நாடு திரும்பாத தலைவருக்கு இடுக்கண் விளைத்தான். இச்சமயப் போர் செய்தோர் தனது நாட்டைக் காத்தனர் என்பதை அலேச்சியஸ் உணர்ந்திலன்.

இரண்டாஞ் சமயப்போரில் பிரஞ்சுதேசத்து வேந்தனும் சர்மானிய தேசத்து வேந்தனும் தலைமை வகித்தனர். மனுவல் அங்கேலஸ் என்னும் உரோமகிரேக்க வேந்தன் கத்தோலிக்கரைப் புரப்போன்போல் நடித்துத் துருக்கரோடும் நட்பாயிருந்தான். இரண்டாம் சமயப்போரில் கத்தோலிக்கவீரர் பசியாலும் நோயாலும் வருந்தித் தோல்வியடைந்தனர்.

கி. பி. 1145-ல் நரடின் என்பான் துருக்கரைத் திரட்டிச் சின்னாசியா எகிப்து என்னும் தேசங்களைக் கைப்பற்றினன். சலடின் என்பவன் எகிப்தில் செங்கோலோச்சினன். கிரேக்கரும் சர்மானியரும் அவன் வன்மையையும் நீதியையும் மெச்சி அவனுடைய நட்பை விரும்பினர். எரிசலம்நகரில் ஆண்ட கிறிஸ்தவ அரசன் துருக்கரால் வெல்லப்பட்டான். எரிசலம் நகரிலாண்ட அரசருள் ஒருவன் குட்டரோகி; ஒருவன் குழந்தை; ஒருவன் கோழை; ஒரு பெண்ணும் அரசாண்டாள். கி. பி. 1187-ல் சலடின் என்னும் மூகம்மதியவேந்தன் எரிசலம் நகருள் புகுந்து கிறிஸ்தவர்களைக் கலைத்துக் கிறிஸ்தவர் கோயில்களை மூகம்மதியப் பள்ளிகளாக்கினன்.

பிராஞ்சிய சர்மானியரென்னும் பறங்கியர் கி. பி. 1191-ல் ஏக்கர் பட்டினத்தைச் சூழ்ந்து நின்றனர். ஆங்கிலருடைய கப்பற்படை பிராஞ்சியருடைய கப்பற்படையோடு சேர்ந்து ஏக்கர்நகரைப் பிடித்தது. ஆங்கிலர் மன்னன் முதலாவது றிச்சார்டு சர்மானிய வேந்தரிடம் அழுக்காறுற்று மூகம்மதிய வேந்தன் சலடினோடு நட்பாயினன். இதனுடன் மூன்றும் சமயப்போர் முடிந்தது.

கத்தோலிக்கர் பெருங்குரு ஆங்கில மன்னன் யோனை அடக்கியபின், கி. பி. 1228-ல் நாலாம்சமயப்போரைத் தொடங்கினன். நாலாம் ஐந்தாம் சமயப்போர் முடிவில் சர்மானிய பறங்கியர் எரிசலம்நகரில் வணங்கும் உரிமையைப் பெற்றனர். கி. பி. 1248-க்கும்-1254-க்கும் இடையிட்ட காலத்தில் ஆறும் ஏழாம் சமயப்போர்கள் நடந்தன. பிரஞ்சுமன்னன் லூயி IX படையெடுத்துச் சென்றான். எகிப்தியர் அவனைச் சிறையிட்டுப் பொன்பெற்றுப் பின் விடுதலை செய்தனர். 16 வருடத்தின்பின் லூயி போர் தொடங்கினன். கி. பி. 1270-ல்

னுயி பாசறையிலே துஞ்சினுன். சமயப்போர் முடிவில் துருக்கர் எரிசலம்நகரில் தம் ஆணைசெலுத்தினர். இக்காலத்தில் உரோமன் கத்தோலிக்கருக்கும் கிரேக்க கத்தோலிக்கருக்கும் இடையிலே பிரிவு ஏற்பட்டது.

### பைசந்தியம்.

வெனிஸ்நகர் இக்காலத்தில் தழைத்தோங்கிச் சமயப்போரில் பங்குபெற்றது; உரோமர் முதற்குருவின் ஏவற்கிசைந்து கிரேக்கருடைய தலைநகரை (பைசந்தியத்தை) வெனீசியர் முற்றுகை யிட்டனர். வெனீசியரும் பிராஞ்சியரும் அகழிகளை நிரப்பினர்; மதில்களை இடித்தனர்; பொறிகளை விழுத்தினர்; கோட்டைகளை நொறுக்கினர்; கிரேக்கர் தம் வேந்தனைப் பகைத்தெழுந்து அவனையும் அவன் மகன் ஐசாக்கையும் கொன்றனர். வெனிஸியருடைய கப்பல்களை எரித்தற்குக் கிரேக்கர் தீக்கலங்கள் வெளிவந்தன. வெனிஸியர் தீக்குச் சிறிதும் அஞ்சவில்லை; நகரை இடைவிடாது தாக்கினர்; முடிவில் நகரைக்கைப்பற்றிச் சூறையாடினர், பைசாந்தியம் என்னும் கன்ஸ்ராந்திநப்பிளிலுள்ள கோயிலுள் புகுந்து விக்கிரகங்களின் அணிகலங்களைப் பறித்தனர். பச்சைக்கட்சியாரும் நீலக்கட்சியாரும் தேர்கடாவுவோருட் சிறந்தோர்க்கு நாட்டிய வெண்கலச்சிலைகளைத் தூளாக்கினர். பெயர்பெற்ற குதிரைச் சிலையொன்றும், ரொமியூலுஸ் என்பவனுக்கு ஓநாய் பால் கொடுப்பதாக அமைத்த சிலையும், உரோம ஆழிவேந்தரின் ஞாபகச்சின்னங்களும், பரிஸ் என்பவனுக்கு வீனஸ்தேவதை ஆப்பிள் அளித்த கதையைக் காட்டும் சிலைகளும், எராக்கிள்ஸ் என்னும் வீரன் சிலையும் உடைபட்டன. நூல் நிலையங்கள் பல எரிந்தன. வெனிஸியர் கன்ஸ்ராந்திநப்பிளில் அரசு புரிய விழையவில்லை. பால்டுவின் என்னும் ஒரு குறுநில மன்னனுக்கு உரோமர் தனிக்கோலருடைய முடியை அளித்தனர். சனங்கள் காளோயோன் என்னும் பல்கேரியனின் தலைமையில் எழுந்து நகரில் வசித்த வெனிஸியரையும் வேந்தன் பால்டுவினையும் கொன்றனர். பிரஞ்சுவேந்தன் ஹென்றி, காளோயோனைக் கொன்று, பல்கேரியரையும் கிரேக்கரையும் அடக்கினுன்.

கி. பி. 1217-ல் பிராஞ்சியர் பீற்றர் என்பவனை வேந்தனாக்கினர். அவன்பின் அவன் மகன் றப்பேடு பட்டம் எய்தினன். பால்டுவின் இரண்டாம்முறை பிராஞ்சியரிடம் துணை பெருமையால், தன் இராச்சியத்தைக் காத்தற்குத் துருக்கரிடம் துணைகேட்டான்.

தலைநகரில் வசித்த உரோமரும் கிரேக்கரும் மிகவும் வறுமையுற்றனர். மேன்மக்கள் 13,134 பொற்காசு பெற்றுக் கிறிஸ்துவுக்கு இட்ட முள்முடியை வெனிஸியருக்கு விற்றனர். அரசியலை நடாத்த நாணய மில்லாமையினால் வேந்தன் பால்டுவின் மோசஸ் என்பவனுடைய கோலையும் கிறிஸ்து அறையப்பட்ட சிலுவையின் துண்டொன்றையும் விற்றற்கு விலைபேசினன். அச்சிலுவையால் தொட்டால் பிணியர் நோய் நீங்கப்பெறுவாராம். இது நிற்க.

சிரியாதேசத்து வேந்தனா யிருந்த மைக்கேல் பலியோலோகன் கன்ஸ்ராந்திநப்பிளைக் கைப்பற்றி உரோமர் வேந்தனானன். கட்டாளர் என்னும் சாதியார் வெடக்கரைச் சிசிலித் தீவினின்றும் துரத்தியபின் வேந்தன் மைக்கலுக்குத் துணை புரிந்தனர். பின்பு கட்டாளரும் மைக்கலின் மகன் அந்திரோனிக்கனும் கலகப்பட்டனர். கிரேக்கநாட்டில் கட்டாளர் குடியேறும் உரிமையைப் பெற்றனர். அரசன் அந்திரோனிக்கனின்பின் அவன் மகன் மைக்கலும் அவன்பின் அவன் மகன் இரண்டாவது அந்திரோனிக்கனும் அரசாண்டனர். இரண்டாம் அந்திரோனிக்கன் ஒரு விலைமாதோடு கூடி இன்புற்றான்; அவள் மற்றொரு காதலனோடு கூடினளென ஒருநாள் அவன் ஐயுற்றான்; அக்காதலன் தன் சகோதரன் மைக்கல் என்பதையுணர்ந்து அவனைக் கொல்வித்தான் அதனுடன் உண்ணாட்டுக்கலகம் தொடங்கிற்று. கி. பி, 1341-ல் யோன்பலியோலோகன் அந்திரோனிக்கனை வென்றான். பின்பு இல்லறவாழ்க்கையைத் துறந்து துறவிகளின் ஆச்சிரமத்தில் காலத்தைக் கழித்தான்.

### பஜசத்து

கி. பி. 1218-ல் ராட்டர்நாட்டு வேந்தன் சிங்கிஸ்கான் வடசீனு வேந்தனை வென்று ஐந்து நாடுகளைப் பெற்றான்,

அவன் சுல்தான், முகம்மதை வென்றான். இச்சுல்தான் 500 மனைவியரோடு கூடிக் களித்தானேயொழிய, அரசியலைப்பற்றிச் சிறிதேனும் சிந்தித்திலன். சிங்கிஸ்கான் என்பவனுடைய பேரன் குபிலைக்கான் சீனு, கொறியா, திபேத், பர்சியா, சின்னாசியா என்னும் தேசங்களைத் தன் ஆட்சிக்குட்படுத்தினான். தாட்டரும் முகம்மதியரும் ருஷியாதேசம் கடந்து சென்று சர்மானியரை நெருக்கினர். சிங்கிஸ்கானுக்கு அஞ்சி இந்தியாவில் மறைந்திருந்த சுல்தான் அலடின் தன்னாடு திரும்பினான். சிங்கிஸ்கான் இறந்தபின் அலடினும் ஒதுமனும் இக்கோணம் என்னும் நகரை இராசதானியாக்கினர்.

அலடின்மகன் ஒதுமன் கி. பி. 1299-ல் சிரியாதேசத்தினுள் புகுந்தான். ஒதுமனின்மகன் கிரேக்கர்வேந்தன் அந்துரோனிக்கஸைப் புறங்கண்டான். சலிமனின் மருகன் அமுறாது கி. பி. 1360-ல் ஆமேனியா நாட்டைப் பிடித்தான். பின்னர் சேபியா (Serbia) நாட்டையும் பிடித்தான். சொற்பகாலம் அங்கு அரசாண்டிருந்தபின் சேபியன் ஒருவனால் கொல்லப்பட்டான்.

அமுறாதின்மகன் பஜசத்து என்பவன் தானியூபி நதிக்கும் யுபிறேற்றிஸ் நதிக்கும் இடையில் மின்னினும் விரைந்து திரிந்தான். முகம்மதியர் அவனை மின்னலென்றே அழைத்தனர். அவன் 1389-ல் சேபியா, பல்கேரியா, கிரேக்கு முதலிய தேசங்களைப் பிடித்து ஆண்டான்; கி. பி. 1395-ல் நிக்கபோரஸ் என்னும் களத்தில் சர்மானியர் பிராஞ்சியர் ஹங்கேரியருடைய படைகளை வென்றான்; பிரஞ்சு தேசத்து அரசகுமாரியைச் சிறையாக்கிப்பின் பெண்ணைச் சிறையிடுதல் மானமற்றசெயல் என நினைந்து விடுதலை செய்தனன். பசஜத்து கிரேக்கர்வேந்தனோடு உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டான். அவ்வுடன்படிக்கையின்படி கத்தோலிக்கர் முகம்மதிய சமயவழிபாட்டிற்கு இடர்செய்யாதிருக்க உடன்பட்டனர். வருடந்தோறும் கிரேக்கர் வேந்தன் 30,000 பொற்காசு இறையாக அளிக்கச் சம்மதித்தான். இவ்வுடன்படிக்கை பத்துவருடத்துக்கென எழுதப்பட்டது. கிரேக்கர் வேந்தன் மனுவல் பிராஞ்சியரிடம் துணைகேட்டான். சுல்தான் பஜசத்து கன்ஸ்ராந்திநப்பிளை முற்றுகை யிடுதற்குப் படையெடுத்தானாக, மனுவல்

பிரஞ்சுநாட்டிற்கு ஓடினன். பஜசத்து தலைநகரைப் பிடிக்கு முன் ராட்டரோடு போர்புரிய நேரிட்டது. ராட்டர் முகம்மதியரோடு பகையாவிடின் கி. பி. 1400 ஆம் ஆண்டிலேயே தலைநகராகிய கன்ஸ்ராந்திநப்பிள் துருக்கர் (முகம்மதியர்) வசமாயிருக்கும்.

## தீமூர்.

இராட்டர் வேந்தருட் சிறந்தோனை தீமூர் என்பவன் உலகு முழுவதையும் ஒருகுடைக்கீழாளும் நோக்கமுடையவனுன். தீமூர் தன்னுள்ளக்கிடக்கைகளையும் செயல்களையும் வாழ்க்கையின் வரலாற்றையும் குறித்து வைத்தனன். அவன் சாமர்க்கண்டு நாட்டில் பிறந்து இளவயதிலேயே படைத்தொழிலைப் பயின்றான்; 25-ம் வயதில் பெரிய வீரனென மதிக்கப்பட்டான்; சிறிது காலம் தன் சிறு இராச்சியத்தில் செங்கோல் ஓச்சினன். கி. பி. 1380-ல் படையொன்று திரட்டிப் பர்சிய நாடுபுக்குக் குறுநில மன்னர் பலரை வென்றான்; 10 வருஷத்துக்குள் சிங்கிஸ்கானுடைய இராச்சியத்தின் பெரும் பாகத்தைத் தன்வசமாக்கினன்; பின்னர் இந்தியநாட்டு அரசியற் குழப்பங்களைப்பற்றிக் கேள்வியுற்று ஆறுகள் மலைகள் கடந்து சென்று பாஞ்சால தேசத்தில் தன் கொடியை நாட்டி டெல்ஹியிலாண்ட முகம்மதியரையும் வென்றான். அவன் பெரவைக் கண்ட மன்னர் அஞ்சியோடினர். இந்திய யானைப் படைகள் வெருவியோடின. தீமூர் கங்கைநதி வழிசென்று இந்துக்களைக் கொன்றுதிரிந்தான்; கி. பி. 1400-ஆம் ஆண்டு தீமூர் 63 வயதினனுன்; பஜசத்தின் புகழைக் கேள்வியுற்றுச் சிரியா நாடடைந்து பொருது வாகை சூடினன்; பின்பு மாமலூக்கர் என்னும் எகிப்திய அரசனுல் வெல்லப்பட்டான். கி. பி 1402-ல் பஜசத்தை முறியடிக்கத் தீமூர் தீர்மானஞ் செய்தான். பஜசத்துக்குக் கெட்டகாலம் தொடங்கிற்று. அவனுடைய படைவீரர் பகையாயினர். அவன் மகன் சலிமான் போரில் முதுகிட்டோடினன் பஜசத்து, தோல்வியடைந்து சிறிதுகாலத்தில் இறந்தான். கிரேக்கர் வேந்தன் உடனே தீமூருக்குத் திறையளிக்க உடன்பட்டான். கி. பி. 1405-ஆம் ஆண்டு தீமூருடைய பேரப்பிள்ளைகள் அறுவர் மணமுடித்தனர். மணவிருந்தின் பொருட்டுத் தீமூர் பெருஞ்செலவு செய்தான். அடுக்களையில் எரிந்த விறகுக்கோ

அளவில்லை. மரங்களைப் பிடுங்கியமையால் காடுகள் பல புற்றரையாயினவாம் எகிப்து அரேபியா, இந்தியா, ருஷியா, ஸ்பானியா என்றற்றொடக்கத்து நாட்டுத் தூதர்கள் விருந்து கொண்டாடினர். யாவரும் சிறிதுகாலம் சிற்றின்பங்களில் களிக்கலாமெனத் தீமூர் முரசறைவித்தான். தீமூர் பின்பு சீனரை வெல்ல எண்ணினன். கி பி. 1407-ல் 70-ஆம் வயதில் சுர நோயால் தீமூர் இறந்தான். அவன் முகம்மது சமயத்தையே தழுவினன்; சகுனங்களை நம்பினன்; ஒருபோதும் அவன் வாக்குத் தவறவில்லை. அவன் இறந்தபின் அவனுடைய இராச்சியம் நிலைகுலைந்தது. அவன் குலத்தோனொருவன் துருக்கருக்கு அஞ்சியோடி இந்தியாவில் ஒரு சிற்றரசை யாண்டிருந்தான்.

பஜசத்தின் மக்கள் ஐவர் தம்முட் கலக்கப்பட்டனர். சலிமானை கி. பி 1410-ம் மூசா கொன்றான். மூசாவை முகம்மது வென்றான். கி. பி. 1422-ல் முகம்மது கன்ஸ்ராந்திநப்பிளைத் தாக்கினன். கி. பி 1425-ல் இரண்டாவது பலியோலோகஸ் என்பவன் துருக்கருக்குத் திறைகொடுத்தான். அவன் உரோமர்சமய முதற் குருவாகிய ஐந்தாவது ஏர்பன் என்பவனுடைய பாதத்தில் விழுந்து தொழுது துணைப்படை வேண்டினன்.

கிரேக்க சரித்திர ஆசிரியர், பிராஞ்சியர் பொய்யராயினும் கல்வி கேள்வியுடைய அறிஞரெனவும், ஆங்கிலர் வீரராயினும் கலகக்காரரெனவும் எழுதுப. ஆங்கிலர் கற்பென்பதை ஒரு அறமாக எண்ணவில்லை அறிமுகமானவுடன் ஆங்கிலப் பெண்கள் தம் விருந்ினரை முத்தமிடுவர். இச்செயல் கொழுநரல்லாதோரை இச்சித்தலோடு ஒக்கும் எனக் கிரேக்கர் எண்ணினர். இது நிற்க.

கிரேக்க கத்தோலிக்கர் குருமாரும் ரோமன்கத்தோலிக்கர் குருமாரும் ஒருங்குகூடி உரோமர்குருவே முதற்குருவென உடன்பட்டனர். முதற்குரு கத்தோலிக்கநாட்டுவேந்தர் யாவரையும் உரோமகிரேக்கவேந்தருக்கு உதவிபுரியுமாறு கற்பித்தனன். கி. பி. 1400-ல் யவன இலக்கியங்களையும் தத்துவ நூல்களையும் இத்தாலியரும் பிராஞ்சியரும் சுவைக்கத்தொடங்கினர். குறுநிலமன்னரும் குடியரசுகளும் யவனமொழிப்

புலவர்களைப் புரந்தனர். யவனநூல்களை எழுத்தாளரைக் கொண்டு எழுதுவித்தனர். கத்தோலிக்கர் குருமார் பிளேற்ரோவின் தத்துவநூல்களைக் கற்றனர். இக்கிளர்ச்சி காரணமாக யவனநாகரிகம் மேனுடெங்கும் பரம்பியதை விரித்துரைப்பின் மிகப் பெருகுமென அஞ்சி விடுகின்றேம்.

கி. பி. 1421-ஆம் ஆண்டு இரண்டாம் அமுருது தன் இராச்சியத்தை இருமுறை துறந்து தன் மகனுக்குப் பட்டத்தை அளித்தான். இதையறிந்த ஹங்கேரியர் துருக்கரோடு போர் புரிய எண்ணினர் துறவுபூண்டிருந்த அமுருது உடனே வெளிவந்து போர்புரிந்தான். ஹங்கேரியரும் போலரும், சர் மானியரும் ஒன்றுதிரண்டு அவனை எதிர்த்துத் தோல்வியடைந்தனர். கி. பி. 1444-ல் வாணுக்களத்தில் பல்கேரியரும் தோல்வியடைந்தனர். அப்போரில் .0000 கிறித்தவர் மாண்டனர். கி. பி. 1453-ல் மனுவல் மகன் கன்ஸ்ராந்தயின் முடிசூடினுன். இவனோடு உரோம கிரேக்க தனிக்கோலருடைய வரலாறு முடிவெய்தியது.

## இரண்டாவது முகம்மது

அமுருது கிறித்தவப்பெண்ணை மணந்து முகம்மது என் பவனைப் பெற்றுன். இம் முகம்மது அராபி, ஈபுரு. லத்தின், கிரேக்கு என்னும் மொழிகளைக் கற்றுணர்ந்த அறிஞனும்; ஓவியரை ஆதரித்தானும்; கிறிஸ்தவர் சிலர் அவனை மூர்க்கனெனவும் காமியெனவும் கூறினர். அக்கூற்று ஆதாரமுடையதன்று. இளங்கோ முகம்மது தந்தை அரசுதுறந்தகாலத்தில் அரசியலை நடத்திப் பயின்றுன் ; தந்தை இறந்தவுடன் தன் மாளிகையில் உண்டுகளித்த வீணரைத் துரத்தினுன் ; வேந்தனுடைய வேடர்தொகை 7000. அவரைத் தம் தொழிலைத் துறக்கச் செய்து போர்வீரர்களாகவும் தொழிலாளராகவும் சேவிக்கும்படி ஏவினன். கி. பி. 1453 ல் முகம்மது துருக்கர் படையோடு கன்ஸ்ராந்திநப்பிளைச் சூழ்ந்து நின்றனன். பீரங்கிப்படை தலைநகரின் மதிலை உடைத்தது. கத்தோலிக்க வேந்தர்களைக் முதற்குரு ஏவியும் அவர்கள் கிரேக்கர் வேந்தனுக்குத் துணைபுரிதலைப்பற்றிச் சிந்திக்கவில்லை.

உரோமர் முதற்குரு நிக்கொலாஸ், கிரேக்க கத்தோலிக்கர் தவறான கொள்கைகளை அநுசரித்தமையால் கிரேக்கருடைய தலைநகர் பாழாகுமெனச் சபித்தான். கடைசித் தனிக்கோலனின் அமைச்சன் பிரான்சா என்பவன் 4970 உரோமகிரேக்க வீரரை மதிலைக் காக்கும்படி ஏவினன். கி. பி. 1453-ஆம் ஆண்டுச் சித்திரைத் திங்கள் வேந்தன் கன்ஸ்ராந்தையின் மதிலேறிப் பொருதான். முகம்மதியர் அகழிகளை நிரப்பியும் மதிலை இடித்தும் நகருட் புகமுடியாது நின்றனர். கத்தோலிக்கருடைய 5 கப்பல்கள் அஞ்ஞானிகளுடைய 300 கப்பல்களோடு பொருதனவென அமைச்சன் பிரான்சா எழுதினான். கன்ஸ்ராந்தையின் கொலையுண்டான். அவன் சாவோடு உரோமகிரேக்கர் தனிக்கோலும் அழிவெய்தியது.

ஆழிவேந்தருடைய தலைநகரை முகம்மதியர் கைப்பற்றினர். கத்தோலிக்கருடைய மடங்களையும் துறவிகளின் ஆச்சிரமங்களையும் முகம்மதியர் சூறையாடினர். பள்ளிகளில் தவஞ்செய்யும் பெண்துறவிகள் ஓலமிட்டழுதனர். பொதுசனங்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். நூல் நிலையங்கள் எரிக்கப்பட்டன. 120,000 கையெழுத்துப் புத்தகங்கள் அழிந்தனவென ஆசிரியர் கூறுப. சாலச்சிறப்புடைய சோபியாக்கோயில் முகம்மதியர் கோயிலாயிற்று. முகம்மது பைசாந்தியம் என்னும் கன்ஸ்ராந்திநப்பிளைத் தன் தலைநகராக்கி அரசாண்டான். கிரேக்கரைத் தலைநகரிற் குடியேற்றினான். கி. பி 1481-ல் 51-ஆம் வயதில் இரண்டாவது முகம்மது இறந்தான். இவ்வளவில் பண்டை மேனாட்டாருடைய வரலாறு முற்றுப்பெற்றது.

---

# 11-ம் அதிகாரம்: ஆங்கிலர்

## 1-ம் பாடம்: அங்கிலர் குடியேற்றம்.

### பிரித்தானியர்.

உரோமர் தம் வரலாறுகளில் பிரித்தானியரைப்பற்றி விரிவாக எழுதவில்லை. தனித் தலைவன் யூலியஸ் கைசர் தாம்

எழுதிய கல்லிய யுத்த வரலாற்றில் பிரித்தானியருடைய ஊண் உடை பழக்கம் வழக்கம் சமயம் அரசியல் என்பவற்றைப் பற்றிச் சில குறிப்புக்கள் குறித்தனர். அக்குறிப்புக்கள் மொழி நூல் வல்லோர் உயிர்நூல் வல்லோர் பண்டைப் பொரு ளாராய்ச்சி வல்லோர் ஆகிய கலைஞர் தெளிந்த துணிபுகளால் வலியுறுத்தப்படுகின்றன. அக்குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டே பண்டைய பிரித்தானியரின் வரலாற்றை எழுது வாம்.

பிரித்தானியர் உரோமருக்கு எதிராகக் கல்லியருக்குத் துணை புரிதலை அறிந்து கைசர் பிரித்தானியரைக் கண்டித்தற் கெனப் பிரித்தானியர்மீது படையெடுத்துச் சென்றனர். பிரித் தானியர் 'கல்லியர் இனத்தைச் சேர்ந்தவரெனவும் அவர்கள் பிரித்தானியத் தீவிலும் அதையடுத்த அயர்லாந்துத் தீவிலும் வதிந்தனரெனவும் அறிவாம். பிரித்தானிய கல்லியர் பருத்தி நூல் நூற்க அறிந்திலரெனவும், காட்டு விலங்குகளின் தோலையே ஆடையாக அணிந்தனரெனவும், குருவிச்சையே தெய்வமென வணங்கினரெனவும் கைசரின் வரலாறு கூறு நிற்கும். பிரித்தானியர் தேரோட்டவும் செம்பினால் செய்த படைக்கலங்களைத் தொடவும் பயின்றனரெனவும் போர்க்களத் தில் அஞ்சா நெஞ்சினராக அமர் புரிந்தன ரெனவும் புகழப் பட்டனர்.

கைசர் தாம் கி. மு. 55 ல் கல்லியர் நாட்டுக் கரையி லிருந்து கப்பலேறிக் கடல்கடந்து பிரித்தானியத் தீவின் தென் கிழக்கரையில் இறங்கிப் பிரித்தானியரோடு பொருது கழுகுக் கோலை நாட்டிக் கசிவலானன் என்னும் தலைவனை வென்று ஏகினரெனச் செப்பினர். கானவர் வசிக்கும் தீவாகலின் உரோ மர் பிரித்தானியாவில் குடியேற எண்ணவில்லை கி. மு. 44 லிலும் கைசர் பிரித்தானியாவில் இறங்கிப் பொருதனரென அறியக் கிடக்கின்றது. கி. பி. 43-ல் உரோமருடைய ஆழி வேந்தன் குளோடியஸ் பிரித்தானியத் தீவிலும் தன் ஆணை யைச் செலுத்த எண்ணினன். உரோமர் கறற்றுக்கஸ் என்னும் தலைவனைச் சிறைப்படுத்தி உரோம நகருக்குக் காட்சி காண்போருக்குக் காட்டக் கொண்டுசென்றனர். உரோமர் படைத்தலைவன் சுவற்றோனியஸ் பௌலீனஸ் பிரித்தானியரை

மேற்பாக மலைநாடுகளுக்குத் துரத்தினன். அவன் பிரித்தானிய ருடைய பூசாரிகள் பலரைக் கொன்றனன் இதற்கிடையில் கீழ்ப்பாகத்தை ஆண்ட அரசி போயடீசியாவுக்கு உரோமர் கசையடி கொடுத்தனராகலின், பிரித்தானியர் பலரும் அரசியின் தலைமையில் திரண்டு எழுந்தனர் பௌலீனஸ் அவர்களை வென்று உரோமருடைய ஆட்சியை நிலைநாட்டினன். கி. பி. 75 முதல் கி. பி. 85 ஈறாக உரோமர் தலைவன் யூலியஸ் அக்கிரிக்கோலா காடு கெடுத்து நாடாக்கி உரோமருடைய நாகரிகத்தைப் பரப்பிச் செங்கோல் செலுத்தினன். உரோமருடைய இலத்தின் மொழியே அரசாங்க பாஷையாயிற்று. இலண்டன் நகர் அக்காலத்தில் மிகச் சிறிய நகராயிருந்தது. அதிலிருந்து பல திக்குக்கும் செல்லும் தெருக்கள் உரோமரால் அமைக்கப்பட்டன. பிரித்தானியர் கமஞ்செய்து தானியம் விளைத்துச் சீர்மையுற்றனர். கி. பி. 119-ல் உரோமர் தனிக்கோலன் அத்திரியானுஸ் பிரித்தானியாவுக்கு நாடுகாணச் சென்றான். வடபாகத்து முரடர், உரோமராட்சிக்குட்பட்ட தென்பாகக் கமக்காரரை வருத்தாவண்ணம் ஹத்திரியானுஸ் ஒரு மதில் கட்டுவித்தான். அம்மதில் பிரித்தானியாவை இரு கூறாக்கியது. அம்மதிலின்கண் அமைக்கப்பட்ட காவலரண்கள் அழிவெய்தின. கலிடோனியா என்று சொல்லப்படும் வடபாகப் பிரித்தானியாவையும் உரோமர் கைப்பற்றி ஆண்டனர். கி. பி. 400ல் உரோமர் உரோமாபுரத்தைத் தம் பகைராகிய கொத்தரின் நின்றும் காத்தற்காகப் பிரித்தானியாவை விட்டுநீங்கினர் பிரித்தானியர் போர்த் தொழிலை மறந்து உரோமரைப்போல் உண்டுடுத்துக் களிக்கப் பழகினரொழிய அரசியலை நடாத்தப் பயின்றிலர்

## சாய்ச்சனர் குடியேற்றம் : கி. பி. 400 — 800.

உரோமர் அகன்றவுடன் செர்மானியச் சாதியர் பலர் பிரித்தானியாவில் குடியேறினராகலின், பிரித்தானியாவில் உரோமர் நாகரிகம் நிலைக்கவில்லை. பிரித்தானியரைச் செர்மானியர் இடைவிடாது தாக்கினராதலின், பிரித்தானியர் மேற்பாக மலைநாடுகளில் ஒதுங்கினர். பிரித்தானியர் தம்முள் ஒற்றுமையின்றிக் கட்சிகளாகப் பிரிந்து கலகப்பட்டனர். வோற்றிக்கண் என்னும் தலைவன் உண்ணாட்டுப் பகைவருக்கெதிராகப் பிறநாட்டாராகிய

யூற்றர் என்னும் தேனரிடம் துணை இரந்தனன். கி. பி. 450-ல் சாய்ச்சனர் என்னும் செர்மானியர் கீழ்க்கரை நாடுகளில் குடியேறி அந்நாடுகளுக்குப் புதுப்பெயர்களைச் சூட்டினர். அப்பெயர்களே இன்றும் வழங்குகின்றன. அங்கிலர் என்னும் இங்கிலரும் ஒரு செர்மானியச் சாதியரே. அவர்களும் தாம் குடியேறிய நாடுகளுக்குத் தமக்கிசைந்த நாமங்களை யிட்டனர். பிரித்தானியாவில் குடியேறிய செருமானியர் யாவரும் செருமனி தென்மார்க்கு, நோர்வே, சுவீடின், என்னும் தேசங்களிலிருந்து புலம் பெயர்ந்த கடற்கள்வரே.

கி. பி. 6-ம் நூற்றுண்டில் பிரித்தானியத் தீவின் தென் பாகம் இங்கிலாந்தெனப் பெயர் பெற்றது. இங்கிலாந்து என்பது இங்கிலருடைய நாடென விரியும். அங்கிலர் இங்கிலர் என்னும் சொற்கள் தமிழ்மொழியில் சொந்த நாடில்லாமல் அலைந்து திரிபவரைக்கருதுமாயினும் அக்கருத்து அங்கிலருடைய வாழ்க்கையை நோக்குமிடத்துப் பொருத்தமாகத் தோற்றுமாயினும் அங்ஙனம் நாம் கருத்துரைத்தல் பிழையாகும். அங்கிலர் தேவுக்களைப்போல் உருவிலும் திருவிலும் பொலிந்தனரெனக் கதலிக்கசமய முதற்குரு ஒருவர் கூறினரெனத் தெரிகிறது. தேவதூதரைச் சுட்டும் அஞ்சில் என்னும் மொழியின் மருவே அங்கில் எனத்திரிந்தது என்ப. இங்கிலாந்தில் குடியேறிய செருமானியர் யாவரும் சுதந்திரமாயிருக்க விரும்பிச் சிறுச்சிறு கூட்டமாகவே இருந்து சிற்றரசுகளை நிறுவினர். பின்பு சிற்றரசுகள் குன்றத் தனியரசு ஒன்று நிலைத்தது. பொதுசனச்சபை கூடியே அரசரைத் தெரிதல் செர்மானியரின் வழக்கம். அதில இங்கிலாந்துப் பொதுச்சனசபையைக் கூட்டியே அரசர்கள் முக்கிய அரசியற் சீர்திருத்தங்களைச் செய்தல் வழக்கமாயிருந்தது. பண்டைக் காலத்தில் படைத்தலைவர்களே அரசராயினர் என்பதும் அரசரே படைத்தலைமை வகித்தனரென்பதும் உணரற்பாலன.

### கதலிக் மதம்

செர்மானியர் இங்கிலாந்தில் இறங்குமுன்னரே பிரித்தானியர் பலர் கிறிஸ்தவராயினர். கி. பி. 597-ல் கதலிக்க முதற்குரு கிரெக்கரி அகஸ்தின் என்னும் குருவை இங்கிலாந்து

சென்று கதலிக் சமயத்தைப் பரப்பும்படி ஏவினன். செர்மானியர் ஒடின்தோர் முதலிய வீரரைத் தேவுக்களென வணங்கினர். அத்தேவுக்கள் போர்புரிதலும் குடித்தலுமே தொழிலாகவுடையர். சிற்றரசர் சிலர் கிறித்து மதத்தைத் தழுவினர். பின்பு கிறித்துமதச் சிற்றரசரும் அஞ்ஞானமதச் சிற்றரசரும் பலகாலம் பொருது முடிவில் யாவரும் கிறிஸ்தவராயினர். கிறித்த மடத்தில் இருந்த கிட்மன் என்னும் இடையன் ஒருவனுக்குக் கடவுள் சொப்பனத்தில் தோன்றிக் கடவுளின் மகிமையைப் பாடும்படி அடியெடுத்துக் கொடுத்தனரெனத் தெரிகிறது. கிட்மன் யாப்புக் கற்றிலனாயினும் செய்யுள் இயற்றத் தொடங்கினன். அக்காலத்தில் குரு பீட் என்பவன் போதனை செய்வதில் புகழ் பெற்றிருந்தான். அவன் அங்கில உரோமன் கதலிக் சமய வரலாற்றை எழுதியுள்ளான். அந்நூல் அங்கில சாய்ச்சன் மொழியில் எழுதப்பெற்றுள்ளது. அங்கில சாய்ச்சன் மொழியில் இயற்றப்பட்ட சில இலக்கியங்கள் இன்றும் மொழிநூல் விருப்புடையோரால் பயிலப்படுகின்றன. அங்கில சாய்ச்சன் மொழியில் ஆதி அங்கிலருடைய வரலாறுகளும் தொகுக்கப்பட்டன. தொகுத்தோன் அல்பிறட்டு என்னும் அரசனே.

### சாய்ச்சன் மன்னர்.

அகில இங்கிலாந்தையும் முதன் முதல் ஒரு குடைக்கீழாண்ட சாய்ச்ச வேந்தன் பெயர் அல்பிறட்டு. அவன் காலத்தில் தென்மாக்கு நோர்வே முதலிய தேயங்களிலிருந்து வடக்கர் என அழைக்கப்படும் கடற்கள்வர் இங்கிலாந்தின் கீழ்க்கரைகளில் இறங்கிச் சூறையாடினர். இக்கள்வர் வடகடலில் மிக்கனராதலாலும் வடதேசங்களில் வசித்தனராதலாலும் வடக்கரெனப்பட்டனர். வடக்கர் இங்கிலாந்தில் மாத்திரமன்றிக் கல்லியாவிலும் இத்தாலியிலும் அமரிக்காவுக்கு வடபாலுள்ள தீவுகளிலும் கி. பி. 8-ம் நூற்றாண்டில் குடியேறினர். அல்பிறட்டு கப்பல் கட்டுவித்துக் கரைகளைக் காத்ததுமன்றி வடக்கரைப் பன்முறை புடைத்தனன். வடக்கர் குதிரம் என்னும் தலைவன் கீழ் இங்கிலாந்தில் இறங்கித்தோல்வியடைந்தனர். அல்பிறட்டு தம் குடிகளைப் போர்ச் சேவை செய்யப்பண்ணி வருத்த விரும்பவில்லையாகலின், வடக்கரைக்

கிழ்க்கரை நாடுகளில் குடியேறும்படி உத்தரவு அளித்தனன். வடக்கர் தாம் கிறித்து மதத்தைத் தழுவிச் சமாதானமாக வாழ்வரென வாக்களித்துக் குடியுரிமை பெற்றனர். இங்ஙனம் அரசியல் ஞானியாகவும் படைத்தலைவனாகவும் செங்கோல் செலுத்திய அல்பிறட்டு தாய்மொழியை வளர்த்தற்கும் உழைத்தனன். இலத்தின் மொழியிலிருந்து சில நூல்களை மொழிபெயர்த்தான். அன்றியும் சாய்ச்சன் வரலாற்றை அங்கில சாய்ச்சன் என்னும் பழைய அங்கிலமொழியில் எழுதினன்.

**சாய்ச்சன் மன்னர்.**

எக்பேட் 802—39
அல்பிறட்டு
எதல்வல்

எதல்பால்டு — எதல்றிட்டு I — எதல்பிறட்டு
எதல்பிறட்டு → எட்டுவாட்டு

எட்டுவாட்டு → எதல்ஸ்த்தான் — எட்மண்டு — எட்டிறிட்டு
எட்மண்டு → எட்டுவின் — எட்கார்
எட்கார் → எட்வாட்டு II — எட்மண்டு I
எதல்றிட்டு II

இருநூறாண்டுகள் மேற்காட்டிய சாய்ச்சன் வேந்தர் அரசாண்டுவந்தனர். அல்பிறட்டின் பின் ஆண்டோர் கிறித்து சமயத்தைப் புரந்து செங்கோலோச்சினர். எதல்றிட்டு இரண்டாவது ஒரு கோழையன்.

**வடக்கர் (வடவர்)**

வடக்கர் அங்கிலரோடு பொருது வென்று அங்கில நாட்டைச் சிறிதுகாலம் ஆண்டனர். எதல்றிட்டின் மகன் எட்மண்டு வடக்கரோடு பொருதான். அங்கில நாட்டில் ஆண்ட வடக்கர் வேந்தன் பெயர் கனியூற்று. அவன் வடக்கரைத் தன் நாட்டுக்கு அனுப்பி அங்கிலப் பிரபுக்களை அமைச்சராக்கி ஆண்டனன். அவனுடைய மூத்த குமாரன் நோர்வே தேயத்தை

யும் இளையகுமாரர் இருவர் இங்கிலாந்தையும் ஆண்டனர். இவர்கள் இறந்தவுடன் அங்கிலர் அல்பிறிட்டின் வம்சத்தில் தோன்றிய எட்வாட்டு என்பவனுக்கு அரசை அளித்தனர். இந்த எட்வாட்டு நோர்மண்டி நாட்டில் வளர்ந்தோனாகலின் நோர்மண்டியில் குடியேறிய வடக்கர் இவனுடைய தோழராயினர். அரசனுக்கு மக்கள் இன்மையால் நோர்மண்டி நாட்டுக் குறுநிலமன்னனாகிய உவில்லியம் என்பானுக்கு அங்கில நாட்டரசை அளிப்பான் என வாக்குப்பண்ணினான். அங்கிலருக்கு இது வெறுப்பை விளைத்தது. அங்கில பிரபுக்களுள் புகழ்பெற்ற கோட்டுவினும் மக்களும் அரசனை எதிர்த்தார்கள். கோட்டுவினது மூத்தமகன் ஒருகாமி; அவன் கதலிக் மடத்துத் தேவராட்டி ஒருத்தியோடு கூடினனாதலின் நாடுகடத்தப் பட்டனன். அதன்பின் வடக்கருக்கு உத்தியோகம் அளிக்கப் படாதெனக் கோட்டுவினும் மக்களும் வாதித்தனர் இங்ஙனம் அரசனோடு பகைத்தமையால் தாய் நாட்டைவிட்டு நீங்கினர். கோட்டுவினும் அவன் மகன் அரல்டு என்போனும் நாடுதிரும்பிப் போர்முரசு அறைந்தனராக, எட்வாட்டு அவர்களுக்கு உத்தியோகம் அளித்து நட்பாக்கினான். அரல்டு ஒரு புயலில் அகப்பட்டு நோர்மண்டிக்கரையில் இறங்கினானென வும் உவில்லியத்தின் கையில் அகப்பட்டு இராச்சியம் உவில்லியத்திற்கு உரியதெனக் கூறினானெனவும் சொல்லப்படும். எட்டுவாட்டு இறந்தவுடன் அரல்டு அரசனாகத் தெரியப்பட்டான். உவில்லியம் இதைக் கேள்விப்பட்டுப் படைதிரட்டினான். தனக்கு உதவிசெய்யும் வீரர் யாவருக்கும் இங்கிலாந்தில் நிலமளிப்பான் எனப் பல்வேறு தேயத்து வீரர்களையும் கூவித் தன் உள்ளக்கிடக்கையை அறிவித்தனன். அரல்டு தன் சகோதரன் ஒருவனோடு பகைத்துப் பொருதனன். அத்துடன் உவில்லியம் இங்கிலாந்தில் இறங்கிய காலத்தில் தானும் ஒரு படையுடன் இறங்கினான். ஹரல்டு தன் சகோதரனோடு பொருது வென்றனன். 1000-ல் உவில்லியம் ஹேஸ்திங் களத்தில் ஹரல்டு என்பவனை வென்று வாகைசூடினன். அங்கில மழுவீரரையும் வேல்வீரரையும் வடக்க வில்வீரர் எய்து விழுத்தினர். உவில்லியம் இங்கிலாந்தில் அங்காங்கு பகைத்தெழும் பிரபுக்கள் யாவரையும் வென்று வேந்தனாயி

னன். நாடு முழுவதும் அரசனுக்கே உரியதென விளம்பி நிலங்களைத் தன் வீரருக்கு அளித்தான். அவ் வீரர்கள் தம் மைச்சேவிப்பாரைத் தம் நிலங்களில் குடியேற்றினர். அங்கிலர் தம் நிலங்களை இழந்தனர். வடக்கருடைய மொழி பிராஞ்சு மொழியோடு கலந்து திருத்தமடைந்தமையாலும் அரசவை மொழியாகலாலும் தலையெடுத்தது. காலக்கிரமத்தில் சாய்ச்சன் மொழியும் வடக்கர் மொழியும் இன மொழிகளாகலின் கலந்து ஒரு மொழியாயின. இம்மொழியே பழைய அங்கில மென இக்காலத்து அங்கிலரால் கருதப்படுகின்றது. கல்லிய மொழியும் சாய்ச்சன் மொழியும் வடக்கர் மொழியும் இலத்தின் மொழியும் கலந்தே இக்காலத்து அங்கிலமொழி பிறந்தது. பிரித்தானியக் கல்லியரும் சாய்ச்சனரும் பல்வேறு வடக்கரும் கலந்தெழுந்த சாதியே அங்கிலர் என்பதைக் கடைப்பிடிக்க.

## 2-ம் பாடம்: அங்கிலவரசர்

### உவில்லியம் I. 1066 —

உவில்லியம் தனக்கு இஷ்டமானவர்களை அமைச்சராக்கி அரசியலை நடாத்தினன். அரசாங்கத்தோர் பல இடங்களிலும் அரண்களை அமைத்துக் குடிகளைப் பயமுறுத்தினராகக் குடிகள் அரசனே தம்மை அரசாங்க உத்தியோகத்தருடைய கொடுமைகளிலிருந்து காக்க வல்லோனென நினைத்தனர். வடக்கர் பொதுச் சனங்களின் நிலங்களை வெளவினராக நில வழக்குகள் மிகுந்தன. இக்கலகங்களை நிறுத்துதற்காக உவில்லியம் நில வுரிமையேட்டில் நிலங்களின் பெயரையும் உரிமையையும் பரப்பையும் விலையையும் கணக்கிட்டு வைத்தனன். உவில்லியம் பொதுசனங்களைத் தன் வீரருடைய இடும்பைகளிலிருந்து காத்தானாயினும் கன்னெஞ்சனெனச் சொல்லப்பட்டான். தான் வேட்டையாடுதற்காகப் பல கிராமங்களை அழித்துக் காடாக்கினனென உரைக்கப்படுகிறது.

### கதலிக் சங்கம்

வடக்கர் வேந்தருடைய காலத்தில் உரோமன் கதலித் துறவிகள் மடங்களை நிறுவி கோயில்களுக்கென வரி பெற்றதுமன்றி நீதி செலுத்தியும் அமைச்சராக அரசியலை நடாத்தி

யும் வந்தனர். பொதுசனங்கள் அரசனுடைய பிரமாணங்களுக்கு அமைந்து ஒழுகுதல் மாத்திரமன்றி, உரோமன் கதலிக் குருமாருடைய பிரமாணங்களுக்கும் அமைய வேண்டியதாயிற்று. உரோமன் கதலிக் குருமார் அரசனுடைய அதிகாரத்திலும் குருமாருடைய அதிகாரம் பெரிதென வாதித்தனர்.

## ஆதிகாலத்து அங்கிலவரசர்.

உவில்லியத்தின் மூத்த மகன் 'றப்பேட்டு' நோர்மண்டி நாட்டையும் இரண்டாம் மகன் உவில்லியம் II இங்கிலாந்தையும் ஆண்டனர். இரண்டாம் உவில்லியம் வேட்டையாடும் போது அம்புபட்டு இறந்தான். தன்னம்பாலோ, பிறரம்பாலோ இறந்தானெனத் தெரியாது. அவனுடைய தம்பி முதலாவது ஹென்றி நோர்மண்டியையும் இங்கிலாந்தையும் ஆண்டனன். ஹென்றி என்பவனுக்கு ஆண் மக்கள் இல்லாமையால் தன் மகள் 'மோட்' என்பாளுக்கு இராச்சியத்தை அளித்தான். ஹென்றியின் சகோதரியின் புதல்வன் ஸ்ரீபின் என்பான் முடி தனக்குரியதென முரசறைந்தான். போரில் ஸ்ரீபின் தோல்வியடைந்து சிறையிடப்பட்டான். பின்பு பிரபுக்கள் கட்சிபிரிந்து கலகப்பட்டனராகப் போர் நீடித்தது. இறுதியில் ஸ்ரீபின் தன் சீவிய காலத்தில் அரசியலை நடாத்தவும் அவன்பின் மோட்டின் மகன் ஹென்றி II அரசியலை நடாத்தவும் கதலிக் குருமார் ஏற்பாடு செய்தனர். ஹென்றி II குருமாரோடு கலகப்பட்டுத் தோமாஸ் பக்கற் என்பவனைக் கொன்றான். ஹென்றியின் மக்கள் தந்தைக்கு எதிராக எழுந்தனர். றிச்சாட் என்பவன் எரிசலம் நகரில் போர்புரிதலில் ஊக்கமாக இருந்தானொழிய உண்ணாட்டரசியலைப்பற்றிச் சிறிதும் சிந்தித்திலன். அவனுடைய தம்பி 'யோன்' முடியைக் கவர எண்ணினன். 'றிச்சாட்டு' இறந்தபின் 'யோன்' அரசனானன். யோன் கொடுங்கோலனாதலின், பிரபுக்கள் திரண்டெழுந்து அரசன் நியாயம் கூறாமல் பிரசைகளைச் சிறையிடவியலாதெனவும் பாராளுஞ் சபையால் ஆக்கப்படும் பிரமாணங்களுக்கு அமைந்தே அரசியலை நடாத்த வேண்டுமெனவும், அதன் உத்தரவின்றி அரசிறை பெறக் கூடாதெனவும் கி. பி. 1215-ல் ஒரு பத்திரம் வரைந்து அரசனுடைய கைச்சான்றையும் பெற்றனர். இதே ஆங்கிலேயருடைய சிறந்த குடியுரிமையெனப் பாராட்டப்படுகின்றது.

யோனுக்குப்பின் அரசாண்ட ஹன்றி III எட்டுவேட்டு I என்னும் அரசர்கள் பொதுச் சனவுரிமையைக் காத்தே வந்தனர். கி. பி. 1258-ல் பொதுசனப் பிரதிநிதிச் சபையினரென்னும் பாராளும் மன்றத்தினரோடு ஹன்றி கலகப்பட்டான். மேன் மக்கள் 'சைமன் மன்போட்டு' என்பவனின் தலைமையில் எழுந்து பொருதனர். அரசன் தோல்வியடைந்தான். பின்பு ஹன்றியின் மகன் எட்வேட்டு படை திரட்டிச் சைமனைக் கொன்றுனும் பொதுசன வுரிமைப் பத்திரத்திற்குக் கைச் சான்றிட்டே அரசுரிமை பெற்றன். 1265-ல் மேல் மக்களும் சமய குருமாரும் மேன்மாடத்திலும் பொதுசனப் பிரதிநிதிகள் கீழ்மாடத்திலும் கூடிப் பிரமாணங்களை வகுத்து அரசியலை நடாத்தினர்.

முதலாவது எட்டுவாட்டு பிரித்தானியாவின் மேற்குப் பாகமாகிய உவேல்ஸ் நாட்டையும் வடபாகமாகிய கலிடோனியாவையும் கைப்பற்றிப் பிரித்தானியத் தீவு முழுவதையும் ஆண்டனன். இதன்பின் இளங்கோவை உவேல்ஸ் இளவரசன் எனக் கூறுதல் வழக்கமாயிற்று. உவேல்ஸ் நாட்டிலேயே முதல் இளங்கோ பிறந்தனன். அவன் எட்டுவேட்டு II எனப் பெயர்பெற்று கலிடோனியரோடு பொருதான்.

அவன் மகன் எட்டுவேட்டு III தாய்வழி யுரிமையால் பிராஞ்சு தேயத்து அரசு தனக்குரியதெனக் கூறிப் பிராஞ்சியரோடு பொருதான். ஆங்கிலரும் பிராஞ்சியரும் 100 வருடம் இடையிடையே பொருதனர் எனத் தெரிகிறது. அங்கில வில்வீரரே அங்கிலர் பலமுறை வெற்றியடைந்ததுக்குக் காரணராயிருந்தனர். பிராஞ்சு தேசத்தில் ஒரு பகுதி அங்கிலராலே ஆளப்பட்டது. மூன்றுவது எட்டுவேட்டும் அவன் மூத்த மகனுகிய 'இளங்கருங்கோ'வும் போரை நடாத்தினர். இளங்கோ இறந்தபின் போர் நிறுத்தப்பட்டது. இக்காலத்தில் இங்கிலாந்தில் கருநோய் எனப்படும் தொற்று நோயால் எண்ணிறந்த மக்கள் மாண்டனர். மூன்றுவது 'எட்டுவாட்' இறந்தபின் அவனுடைய பேரன் இறிச்சாட் II அரசாண்டான். அவன் சிறுவனுகலின் அவனுடைய தந்தையின் சகோதரரே அரசியலை நடாத்தினர். அவர்களுள் ஒருவன்

யோன் என்பான். அவனுடைய மகன் என்றி IV இரண்டாவது 'றிச்சாட்டை' சிறையிட்டு அரசை வெளவினன். என்றி IV என்பவனின் மகன் என்றி V புகழ்பெற்ற போர் வீரன். அவன் இளமையில் வீணரோடு கூடி ஆறலைத்துக் களித்துத் திரிந்தான். அவனையும் அவனுடைய கேளிரையும் பாத்திரங்களாக அமைத்து என்றி V எனனும் ஒரு நாடகத்தை அங்கில நாடகவாசிரியர் சேக்ஸ்பியர் மிக அழகாக இயற்றியுள்ளார் என்றி V முடிபெற்றபின் செங்கோலோச்சிப் பிராஞ்சியரோடு போர் தொடர்ந்து புகழ் பெற்றனன். அவன் பிராஞ்சிய அரசனின் மகளை விவாகம் செய்து இருந்தான். இத்துடன் நூற்றுண்டுப்போர் முடிவெய்தியது. என்றி V இளவயசிலே இறந்தான். அவனுடையமகன் என்றி VI அரசுகட்டிலேறினன்- அவனுடைய இனத்தோர் அவனோடு கலகப்பட்டு இரு கட்சியாராயினர். மேன்மக்களும் கட்சி சார்ந்து போர் தொடங்கினர். மேன்மக்கள் தம் நிலங்களில் வசிக்கும் குடிகளைப் போர்ச்சேவை செய்யும்படி கட்டளையிட்டுப் படை சேர்த்தல் வழக்கமாகலின் அரசன் மேன்மக்களோடு பகைத்தால் முடியை இழக்க நேரிடும். என்றியின் கட்சியர் வெண்பூக்கட்சியரெனவும் எதிர்க் கட்சியர் செம்பூக்கட்சியரெனவும் சொல்லப்படுவர். பொதுசனங்கள் இப்போரில் விருப்புடன் பங்குபெறவில்லை. அரசகுடும்பம் இரு கட்சியாகியதாகலின் அரசிளங்குமாரர் பலர் கொல்லப்பட்டனர். போர் முடிவில் ஹென்றியின் கட்சி தோல்வியடைந்தது. செம்பூக்கட்சித்தலைவன் எட்வேட்டு IV வேந்தனுயினன். எட்வேட்டு IV இறந்தவுடன் அவனுடைய தம்பி இறிச்சாட்டு III தன் தமையனுடைய பிள்ளைகள் இருவரையும் கொல்வித்து அரசாண்டான். அவனை முதுகு கூனன் எனவும் கொடுங்கோலனெனவும் நாடகவாசிரியர் சேக்ஸ்பியர் இனிது வருணிக்கின்றார். இக்கொடுங்கோலனை வெண்பூக்கட்சித் தலைவன் ஹென்றி 7-வது கொன்று எட்வேட்டு 4-வது என்பவனுடைய மகளை மணந்து இரு கட்சியாரையும் நட்பாக்கி அரசியலை நடாத்தினன். இப்போரால் விளைந்த நன்மை பல. பொதுசனங்களை வருத்தும் மேன்மக்கள் பலர் இறந்தனர். என்பதும் அவர்களின் உரிமைகள் குன்றியவென்பதும் கருதப்படும். படைச்சேவை செய்யும்படி பொதுசனங்களை அரசனெழித்த மேன்மக்கள்

கட்டளைப்படுத்தக் கூடாதென்பது பிரமாணமாயிற்று. ஹென்றி 7-வது கலிடோனிய அரசனை நட்பாக்கித் தன்மகள் 'மாக ரத்தை' மணமகளாக அளித்தான். தன்மகன் ஆதருக்கும் ஸ்பானிய தேயத்து மன்னன் மகளுக்கும் மணம்பேசி வைத்தனன். இங்ஙனம் ஹென்றி 7 பிரான்சியருக்கு எதிராக ஸ்பானியரின் துணையைப்பெற எண்ணினன்.

## அங்கிலர் வாழ்க்கை.

உரோமருடைய தனிக்கோல் அழிவெய்திய காலந்தொட்டு கி. பி. 15-ம் நூற்றாண்டு ஈறாக உள்ள காலத்தில் மேனாடு முழுவதிலும் கல்வியறிவில்லாத கானவரே வாழ்ந்தனரெனக் கூறலாம். பொதுசனங்களுக்கன்றி மேன்மக்களுக்கும் அரசருக்குமே எழுத வாசிக்கத் தெரியாது. சனங்கள் மூர்க்கராயும் மூடராயும் காட்டு விலங்குகள்போல ஒருவரோடு ஒருவர் பகைத்தே இருந்தனர். பஞ்சமாபாதகங்களாகிய பொய் கொலை களவு கள் காமம் மிகுந்தன. அரசனுடைய ஒழுக்கத்திற்கும் அடிமையினுடைய ஒழுக்கத்திற்கும் யாதொரு வேற்றுமையும் இருந்ததில்லை. மதுபானஞ் செய்தல் குற்றமாக எண்ணப் படவில்லை. கிறிஸ்துசமய குருமாரே மதுபானஞ் செய்தனராகலின், பொதுசனங்களைப்பற்றி ஏன் ஆராய்வான்? வாள் வீரராகச் சேவிக்கும் செல்வர்கள் வாட் போர்க்காட்சி காட்டிச் சனங்களை இன்புறுத்தினர். இப் போரைப் பார்ப்பதற்குச் சனங்கள் திரள் திரளாகச் சென்றனர். வீரர் குதிரை மீதேறி ஒருவர்மேல் ஒருவர் மோதுவர். குதிரையினின்று விழுவோன் தோல்வி யடைந்தோனாகக் கருதப்பட்டான். வில்வீரரும் கூடித் தம் வில்வித்தையைக் காட்டினர். மேன்மக்கள் தம் கோட்டைகளில் இருந்து அடிமைகளைக் கொண்டு பணி செய்வித்தனர். அடிமைகள் இருப்புச்சங்கிலி அணிதல் வழக்கம். மேன்மக்களை இன்புறுவிக்கும் நகைவேழம்பரும் விகடரும் வெள்ளிச் சங்கிலி அணிதல் வழக்கம். வீணை வாசிப்போர் கிராமத்துக்குக் கிராமம் சென்று மேன்மக்களை இன்புறுத்தித் தம் பசியைத் தணிப்பர். வாள்வீரர் அநீதி செய்வோரைத் தண்டித்தல் உண்டு. ஒருவாள் வீரன் அநீதி செய்தானாயின் பிறிதோர் வாள்வீரன் அவனுடன் தனிப்போர் செய்யலாம். தனிப்போரில் வெல்

வோன் நீதி செய்தோனெனவும் தோல்வியடைந்தோன் தவ றிழைத்தனன் எனவும் கருதப்படும். பேராற்றலுடையோர் சொல்வதே நீதிஎனப்பட்ட தெனலாம். அங்கிலச் செல்வர் மான் வேட்டையாடுவதில் மிகப்பிரியமுடையவர்கள். மான்வளர்த் தற்கெனக் காடுகள் பல நாட்டப்பட்டன. பொதுசனங்கள் அக்காடுகளில் களவாக நுழைந்து வேட்டையாடுதல் உண்டு. நாடகவாசிரியன் சேக்ஸ்பியரே இளவயதில் இக்களவில் அகப்பட்டான் எனக்கதையுண்டு. எல்லைப்புறத்தில் கலி டோனியரும் அங்கிலரும் ஒருவர் காட்டில் ஒருவர் வேட்டை யாடிப் பகைத்துப் பொருதனர். 10-ம் நூற்றாண்டு தொடக் கம் 15-ம் நூற்றாண்டு ஈறானகாலம் குழப்பக் காலமாகவே இருந்தது. மேன்மக்கள் தமக்கு இசைந்தவாறு ஒருமுறை செம்பூக்கட்சியாரையும் ஒருமுறை வெண்பூக்கட்சியாரையும் அரசராக்கின ரென்பதை அறிவோம். அக்காலத்து மேனாட் டாரை அரக்கர் குலமென்றே கூறலாம்.

## கதலிக் சமயம்.

யவன உரோம நாகரிகங்களின் பயனை உணராத மேனாட்டா ரைச் சீர்திருத்தியோர் யாவரெனின் உரோமன்கதலிக் குருமாரே யென்பது மிகையாகாது. கதலிக்குருமார் தேசந்தோறும்சென்று மடங்களை நிறுவி, கல்வியை வளர்த்தனர். கற்கவிரும்புவோரைத் தம் மடங்களில் கற்பித்தனர். குருமாரின் வாழ்க்கை மிகவும் கட் டுப்பாடுடையது. குறித்த நேரத்தில் துயில் நீத்துச் செபம் செய்து உண்டு, போதனைசெய்தல், கல்விபயிற்றல், கமஞ்செய் தல் முதலிய தொழில்களைக் குறித்த குறித்தநேரத்தில் செய் தனர். ஐம்புலவின்பங்களில் அளவுகடந்து இன்புறும் துறவி களும் இருந்திருக்கலாம். மடங்களில் கூட்டம் கூட்டமாக வசிக்கும் துறவிக்குருமார் பொருள் தேடினர். அவர்கள் மாந்திரீகப் பெண்களைத் தீயிடுதலில் விருப்பமுடையவர். சந்நி யாசிகள் சிலர் ஊர்தோறும் கால் நடையாகத் திரிந்துபோதனை செய்தனர். அவர்களுள் சிலர் பொதுசனங்களை ஏமாற்றிப் பொருளீட்டினர். சோசர் என்னும் பழைய ஆங்கிலப் புலவன் இத்தகைய ஓர் கதலிக்க சந்நியாசியை இனிது வர்ணித்தனன். எலும்பு, தோல் முதலியவற்றை யேசுகிறிஸ்துவின் ஞாபக

சின்னங்களென்று கூறி அவற்றில் தொட்டாலே பிணிநீங்கு மெனக்கிளந்து பொதுசனங்களைத் துறவிகள் ஏமாற்றினர். கதலிக்குருமார் அமைச்சராக அமைந்து கதலிக் சங்கத்தைப் பெலப்படுத்தினர். கதலிக்குருமாரின் தூண்டுதலாலேயே முகமதியருக்கும் கிறித்தவருக்கும் இடையில் போர் நிகழ்ந்ததென அறியக்கிடக்கின்றது; அங்கிலர் சிலர் 15-ம் நூற்றாண்டில் கதலிக் குருமாரின் ஒழுக்கத்தைக் கண்டிக்கத் துணிந்தனர் இப்பிரசாரஞ் செய்த 'யோன் உவிக்கிளிவ்' முதலியோர் தண்டிக்கப்பட்டனர்.

---

## 3-ம் பாடம்: மேனாட்டுக் கல்விப் புனருத்தாரணம்.

கொத்தரும் அவுணரும் செர்மானியரும் உரோம ராச்சியத்தை அழித்தனர். உரோமர் பிறசாதியாரோடு கலந்தனராக, உரோமருடைய மொழியாகிய இலத்தின் மொழி ஏட்டு வழக்கு மொழியாயிற்று. உரோமர் பரப்பிய கலைகளும் வித்தைகளும் பயில்வாரின்றிச் சிறிதுகாலம் மறைந்தன. கி. பி. பத்தாம் நூற்றாண்டுமுதல் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரையும் ஐரோப்பிய நாடுகள் அஞ்ஞானம் என்னும் இருளால் மூடப்பட்டன. 15-ம் நூற்றாண்டில் இத்தாலிய நாட்டில் இத்தாலி மொழி பேச்சுவழக்கில் இருந்தது. இத்தாலிய மொழி என்பது இலத்தின் மொழி பிறமொழிகளோடு கலந்து சிதைந்து தோன்றியதெனலாம் 15-ம் 16-ம் நூற்றாண்டு இத்தாலியில் சிற்றரசுகள் பல தோன்றின. சிற்றரசர் யவனக் கலைகளையும் யவன மொழியையும் இலத்தின் மொழியையும் ஓம்பினர். பொதுசனங்களும் கிரேக்கு இலத்தின் என்னும் மொழிகளில் இயற்றப்பட்ட காவியங்களையும், கலை நூல்களையும் வாசிக்க ஆவலுடையோராயினர். கதலித் துறவிகளும் துறவிகளல்லாதோரும் யவனருடைய தத்துவ நூல்களையும் இலக்கணவிலக்கியங்களையும் கற்க விழைந்தனர்.

கன்ஸ்ராந்திநப்பிள் என்னும் பைசந்திய நகரைக் கி. பி. 1453-ல் துருக்கர் கைப்பற்றினராக, ஆங்கிருந்த கிரேக்கர் தம்

நூல்களை எடுத்துக்கொண்டு இத்தாலி நாட்டுக்குச் சென்று அவற்றை இத்தாலியருக்குப் பயிற்றினர். இங்ஙனம் இத்தாலிய நாட்டில் கல்வி புத்துயிர் பெற்றது. இத்தாலி மொழியில் சிறந்தநூல்கள் என உரைக்கப்படும் காப்பியமும் சிறு கவிகளும் உரைக்கதைகளும் முறையே தாந்தே, பற்றாக்கு, பக்காச்சியோ என்னும் புலவர்களால் இயம்பப்பட்டன. கலைகளும் வித்தைகளும் ஆராய்ச்சி வல்லோரால் நன்கு ஆராயப்பட்டன. லியனாடோவிஞ்சி, சிறந்த ஓவியனாகவும் கலைஞனாகவும் துலங்கினான். மைக்கல் அங்கேலோ சிறந்த சிற்பியாகவும் ஓவியனாகவும் புகழ் பெற்றான். இத்தாலியர் கலைகளை ஆராய்தலிலும் பார்க்க வித்தைகளையே பயின்று இசை ஓவியம் சிற்பம் முதலிய கவின்கலைகளில் இன்புற்றனர்.

இத்தாலியிலிருந்து கல்வி பிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து என்னும் தேசங்களுக்குப் பரம்பிற்று. மேனாட்டார் யாவரும் இலத்தீன் கிரேக்கு முதலிய மொழிகளைக் கற்கத் தொடங்கினர். அம்மொழிகளைப் பயிற்றுதற்குப் பல்கலைக் கழகங்களும் பாடசாலைகளும் நிறுவினர். அங்கிலர் தம் மொழியில் நூல்களை எழுத நாணி இலத்தின் மொழியில் எழுதினர். இலத்தின் மொழியை மேனாட்டார் யாவரும் செம்மொழியெனக் கற்றனர். ஏட்டுவழக்காயிருந்த இலத்தின்மூலமே கலைஞர் தம் அறிவை வெளியிட்டனர். இத்தாலியர் இலத்தின்மொழியை மாத்திரமன்றிப் பழைய ஓவியம், சிற்பம், இசை என்னும் கவின் கலைகளையும் வளர்த்தனர். 'புளோறென்ஸ்' நகரத்திற்குத் தலைவன் 50 எழுத்தாளரை ஏற்படுத்தி நூற்பிரதிகளை எழுதுவித்தானாம். அச்சியந்திரத்தை இக்காலத்தில் செருமனியில் குட்டன்பர்க்கு என்பான் உபயோகிக்கத் தொடங்கினனாகப் புத்தகங்கள் மிக மலிந்தன. பொதுஜனங்கள் புத்தகங்களை வாங்கி வாசிக்கத் தொடங்கினர். பொதுஜனங்கள் கிறீஸ்துசமய நூல்களை வாசித்து உணரவியலா திருந்தனர். கிறீஸ்தவசமய நூல்கள் ஈபுரு மொழியிலும் கிரேக்க மொழியிலும் இலத்தின் மொழியிலுமே எழுதப்பெற்றவையாகலின் பொதுஜனங்கள் தம சமயக் கொள்கை யாவையெனத் தெரியாதிருந்தனர். பொதுஜனங்களில் இரங்கிய சிலர் சமயநூல்களை அங்கிலம், பிரான்சு, செர்மானியம் முதலிய மொழிகளில் மொழிபெயர்த்து உதவினர்.

ஐரோப்பியாவிலுள்ள தென்னாடுகள் ஓவியம் சிற்பம் முதலிய வித்தைகளை ஓம்பின. அங்கிலம், செருமனி, பிராஞ்சு முதலிய வடநாடுகளில் கலைகள் நுணுகி ஆராயப்பட்டன. கலையாராய்ச்சி சமயவளர்ச்சிக்குத் தடையாகுமெனச் சிலர் எண்ணினர். பொதுஜனங்கள் நூல்களை வாசித்துணர்ந்தால் அவர்களைத் தம்வயப்படுத்த முடியாதெனக் கதலிக் குருமார் எண்ணிச் சமய நூல்களை மொழிபெயர்க்கப்படாதென மொழிந்தனர். இதுவே கதலிக் சமயம் குன்றுதற்கு முக்கிய காரணம்.

---

## 4-ம் பாடம்: கதலிக் மதமும் பிரிவினை மதமும்

### மாட்டின் லூதர்

ஒரு சாதியாரின் தாய்மொழி தழைக்க அச்சாதியாரின் நாகரிகமும் திருத்தமுறுதல்போலக் கல்வி வளர ஒழுக்கமுந் திருத்தமடையும். சமயநூல்வளர்ச்சிக்குக் கலைவளர்ச்சியும் மொழிவளர்ச்சியும் இன்றியமையாதவை. 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் மேனாட்டார் கல்வியை வளர்த்தலில் ஊக்கமாயிருந்தனர். அதன் பயனாக, சமயவுணர்ச்சியும் பெருகிற்று. 16-ம் நூற்றாண்டில் செர்மானிய தேயத்தில் கமக்காரர் குடும்பத்தில் கிறீஸ்துசமயத்தைத் திருத்தற்கென மாட்டின்லூதர் திருவவதாரஞ் செய்தார். அவர் கடைமாணாக்கனென இகழப்பட்டாரெனவும், கதலிக் குருவாதற்கு மடஞ்சேர்ந்தாரெனவும் வரலாறுகள் கூறுநிற்கும். சமயகுருவாதற்குத் தன் தகுதியின்மையைப்பற்றிப் பலமுறை சிந்தித்துத் தான் மாபாவியென்பதை நன்கு உணர்ந்திருந்தனராகலின் கி. பி. 1508-ல் மடத்தைவிட்டு நீங்கினர். பின்பு சமயநூல் கற்பிக்கும் பேராசிரியராக உவிற்றன்பார்க்கு என்னும் தனிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் சேவித்தனர். ஆங்குக் கிறிஸ்துசமய நூலாகிய பைபிளைப் பன்முறை வாசித்துத் தெளிந்தனர். அக்காலத்தில் கதலிக் சமய முதற்குரு உரோமாநகரில் பீற்றர் என்னும் சமயகுரவற்குப் பெரியதோர் கோயில் கட்ட எண்ணினன். அந்நோக்கத்தை நிறைவேற்றப் பொருளின்றி வருந்தினன். பொருள் நனி கொடுப்போருக்குப் பாவமன்னிப்புச்சீட்டுக் கொடுக்கப்படுமென விளம்பரஞ் செய்தனன். பாவஞ் செய்தோரைக் கதலிக்கு குருமார் தண்டித்தல்

வழக்கம். அத் தண்டனைக்குத் தப்ப விரும்புவோர் கோயில் கட்டுதற்குப் பொருள் உதவிசெய்து மன்னிப்புச் சீட்டைப் பெறலாமென்பது 'லூதருக்கு' உரைக்கொணுக் கவலையை விளைத்தது. பொது சனங்களை இவ்வண்ணம் ஏமாற்றல் பாவமென லூதர் வற்புறுத்தினர். ஒருவன் செய்த பிழையை உணராமல் பொருள் கொடுத்துச் சுவர்க்கமடையலாமெனக் கல்லாத சனங்கள் எண்ணக் கூடுமென லூதர் வாதித்தனர். தனது உள்ளக் கிடக்கையை 'உவிற்றன் பக்குக்' கோயிற் சுவரில் எழுதிவிட்டுக் கதலிக் முதற்குருவின் அபிப்பிராயத்தை அறிய விரும்பினன். கதலிக்குரு லூதரை வாய்மூடப்பண்ணு தலே புத்தியென எண்ணினன். கதலிக்குருமாரின் ஏவலை மீறுவோர் உலகில் வாழவே முடியாது. கதலிக்குருமார் தமக்குக் கீழ்ப்படியாதோருக்குக் கிரியை செய்யார்; அன்றியும் கதலிக் மதத்தார் கீழ்ப்படியாதோரைப் பகிஷ்காரஞ் செய்யும்படி ஏவுவர். மணவிழா, மரணவிழா, கோயிற் பூசை ஒன்றும் குருவின்றிச் செய்யமுடியாது. கதலிக்கர் தம் சமயத்திலிருந்து வழுவுவோரை ஒறுத்தற்கெனத் தண்டச் சபை ஒன்றை ஏற்படுத்தினர். லூதர் அஞ்சா நெஞ்சினன். தன் மதத்திற்காகத் தன்னுயிரையும் இழக்கத் துணிந்தனன். கோழையனுயின் லூதர் மௌனஞ் சாதித்திருப்பன். சமய முதற்குரு தன்னை வாய்மூடச் சொன்னதற்கு நியாய முண்டோ வென லூதர் வினவினன். சமய முதற்குரு தவறிழைக்குந் தன்மையன் அல்லனோ என்னும் வினு எழுந்தது. சமயமுதற் குரு லீயோ 10-வது மனிதனோ தேவனோ எனப்பலர் வாதிக்கத்தொடங்கினர். முன்பு சிலர் கதலிக்குருமாரோடு வாதித்துக் கொல்லப்பட்டதை உணர்ந்திருந்தும் லூதர் அஞ்சாதிருந்தார். செர்மானிய தேசத்துச் சிற்றரசர்களும் பொது சனங்களும் லூதர் தவறிழைக்கவில்லை என எண்ணினர். செர்மானிய ஆழிவேந்தன் சார்ள்ஸ் 5 வது சமய முதற்குருவின் ஆஞ்ஞைப்படி 'லூதரைத்' தனது அவைக்குச் சமுகமளிக்கும்படி கற்பித்தான். 1521-ல் ஆழிவேந்தனுடைய ஆதரவில் கூடிய சமய கூட்டம் லூதர் பிழை செய்தாரெனத் தீர்மானித்தது. லூதரை அவருடைய நண்பர் மறைத்து வைத்தனர். பின்பு ஆழிவேந்தன் சார்ள்ஸ் V என்பவனும் சமய

முதற்குருவும் அரசியல் விஷயமாகக் கலகப்பட்டனர். சமயக் கொள்கைகளைத் தாம் நினைந்தவாறு அநுசரிக்கலா மெனத் தன் குறுநிலமன்னருக்கு ஆழிவேந்தன் அறிவித்தான். ஆழி வேந்தன் உரோமாபுரத்தை முற்றுகையிட்டு சமய முதற்குருவைச் சிறையிட்டான். லூதர் தன் கொள்கைகளைச் செர்மானிய நாட்டில் பரப்பினான். பிராஞ்சு தேயத்தில் 'யோன் கல்வின்' என்பவனும் கலிடோனிய தேயத்தில் 'யோன் நொக்ஸ்' என்பவனும் லூதருடைய கொள்கைகளைப் போதித்தனர்.

யோன் கல்வின் என்பவன் செனீவா நகரிலிருந்து பிரிவினைக் கிறிஸ்து மதக்கூட்டத்தை வளர்த்தற்குப் பல உரைகள் எழுதினான். லூதர் சமயக்கூட்டம் தேவையில்லை என எண்ணினர். லூதர் புதிய வேற்பாடு என்னும் நூலை பொது மக்கள் வாசித்து உணருதல் அவசியம் எனக்கருதினர், ஆகலின் அவர் பைபிளைச் செருமானிய மொழியில் மொழி பெயர்த்து உதவினர். இனி அங்கில தேயத்தில் சமயவுணர்ச்சி எங்ஙனம் இயங்கிற்றென்பதைத் தேர்வாம்.

### என்றி 8-வது

ஹன்றி 7-வது உண்ணுட்டுக் கலகங்களை நீக்கி நெசவுத் தொழிலாளரை இலண்டன் புறநகரில் குடியேற்றி நாட்டைச் செழிப்புறச் செய்தனன். அவனுடைய மூத்த மகன் ஆர்தர் இறந்தானாக, அவனது இளையகுமாரன் ஹென்றி எட்டாவது எனப்பட்டம் பெற்றான். ஹென்றி 8-வது தன் தமயனுக்கு மணம்பேசிய ஸ்பானிய அரசகுமாரியை மணஞ் செய்தான். ஹன்றி 8 உருவிற் பொலிந்தவனெனவும் தைரியசாலியெனவும் குதிரையேற்றம் மல்யுத்தம் முதலியவற்றில் பயின்றோனெனவும் பிராஞ்சு இத்தலி முதலிய மொழிகளைக் கற்றோனெனவும் பாராட்டப்பட்டான்.

ஹன்றியினுடைய முதன் மந்திரி உலூல்சி ஒரு கதலிக்குரு. உலூல்சி ஒரு வணிகனின் மகன். 15 வயசிலேயே சர்வகலாசாலையிலே கலைஞனெனப் பட்டம் பெற்ற ஒரு விவேகி. உலூல்சி அரசவையில் மரியாதை பெற்றானாக, உத்தியோகம்

பெறவிரும்புவோரும் அரசவை மேன்மக்களும் உலூல்சியோடு தோளில் கைபோட்டு அவனைத் தோழனென அழைத்துக் கொண்டனர் உலூல்சி கதலிக் சமய முதற்குருவாதற்கு விரும் பினன். அரசியலை இனிது நடாத்திச் சேர்மானியா பிராஞ்சு முதலிய வல்லரசுகளின் மதிப்பை இங்கிலாந்து பெறவேண்டு மென எண்ணினன். அவன் அரசியலைக் காக்கும் தந்திரம் வருமாறு. ஐரோப்பாக் கண்டத்தில் யாது அரசு வலிமிகுந்து வளர்கின்றதோ அவ்வரசுக்கு எதிராக ஏனைய அரசுகள் திரண்டு அதன் வலியைக் குறைக்கவேண்டுமென்பது. சேர்மா னிய தேசம் வலிமிகுமாயின், பிராஞ்சு இங்கிலாந்து நோர்வே ருஷியா முதலியதேசங்கள் சேர்மானியாவுக்கு எதிராகப்போர் செய்யவேண்டும் இந்நோக்கத்தைக் கொண்ட உலூல்சி பிராஞ்சு வேந்தனுடன் நட்புக்கொண்டாடினன். சேர்மானியரும் பிராஞ் சியரும் போர் தொடங்கினர். பிராஞ்சு வேந்தன் தோல்வி யடைந்தானாக, உலூல்சி அவனுக்குத் துணைப்படை அனுப் பினன் பின்னர் சேர்மானியர் வேந்தன் சாள்ஸ் 5 தோல்வி யடைந்தானாக உலூல்சிதன் நண்பனாகிய பிரஞ்சு வேந்தனுக்கு எதிராகச் சேர்மானிய வேந்தனுக்குத் துணைப் படை அனுப் பினன். இவ்வண்ணம் அங்கிலரின் உதவியைப் பிராஞ்சியரை யும் சேர்மானியரையும் ஆவலோடு தேடப்பண்ணினன். இதற் கிடையில் சேர்மானிய ஆழிவேந்தன் சார்ள்ஸ் ஸ்பெயின் தேசத் திற்கும் வேந்தனாயினன். அவன் கதலிக் சமய முதற்குருவை உரோமா நகரில் முற்றுகையிட்டிருந்தான். இந்தச் சார்ள்ஸ் ஹன்றி 8 மணமுடித்த அரசி கதறினாவின் மருகனே. ஆனது பற்றிக் ஹன்றி 8 சர்மானிய ஆழிவேந்தன் கட்சியைச் சார்ந் திருந்தான். இது நிற்க, பதினெட்டாண்டாக கதறினாவோடு தான் கூடிவாழ்ந்தும் மேரி என்னும் ஒரு பெண்குழந்தையே பிறந்தொழியத் தனக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கவில்லையே யெனக் கவலைப்பட்டான். தன் தமயன முடித்த பெண்ணைத் தான் விவாகஞ் செய்தது பிழை என வாதிக்கத் தொடங்கிக் கதலிக் சமய முதற் குருவை அவ் விவாகம் முறையில்லாததென சொல்லும்படி ஹன்றி கேட் டனன். கதலிக் சமய முதற்குருவின் உத்தரவின்றி மேனாட் டில் அக்காலத்தில் அரசனாயிருந்தாலும்சரி அடிமையாயிருந் தாலும்சரி விவாக சம்பந்தத்தைக் குலைக்கமுடியாது.

கதலிக் சமய முதற் குரு ஆழிவேந்தன் சார்ள்ஸ் 5 என்பவன் வசம் இருந்தமையால் ஹன்றியினது விண்ணப்பத்திற்கு இசையவில்லை. முதற்குரு வழக்கை விசாரணை செய்யும்படி உலூல்சியையும் ஓர் இத்தாலிய சமய குருவையும் ஏவினன். உலூல்சி தனது எசமானைத் திருப்தி செய்வதற்கு முயன்றும் விவாக சம்பந்தத்தைக் குலைக்கமுடியாதிருந்தனன். வழக்கு விசாரணை நீடித்ததாக, ஹன்றி வெகுண்டு உலூல்சியை அமைச்சுப்பதவியினின்றும் நீக்கினான். பழையதோர் பிரமாணத்தின்படி அங்கிலக் குடியானவன் கதலிக்சமய முதற்குருவுக்கு அரசனின் உத்தரவின்றிக் கடிதம் எழுதக்கூடாது அப்பிரமாணத்தை உலூல்சி மீறியொழுகினனெனக் குற்றஞ்சான்று உரைக்கப்பட்டது. உலூல்சி அரசனின் விருப்பத்திற்கிசைந்தே சமய முதற்குருவோடு அரசனின் விவாகசம்பந்தமாகக் கடிதம் எழுதினானாயினும் அரசன் பகைவனாகலின் என் செய்யக்கூடும். தான் நன்றிகெட்ட அரசனைச் சேவித்தது போல் கடவுளைச் சேவித்திருந்தால், தனக்கு இந்த இழிவு விளைந்திராதெனப் புலம்பினான்.

ஹன்றி தன்மனைவியை நீக்க மிகவும் அவசரப்பட்டதற்கு உண்மையான நியாய மென்னவெனின், அரசன் தனது இராணியின் தோழி 'ஆன்பாலின்' என்பாளைக் காமுற்றதே. ஆன்பாலின் அழகிற்சிறந்த ஆங்கிலப் பெண்ணாதலின் ஹன்றி அவளோடு களவாகக் கூடினன். அவளை இராணியாக்குதற்கே தன் மனைவி கதறினாளைத் துறக்க முயன்றனன். அரசனின் நோக்கத்தை நிறைவேற்றுதற்குக் கிரன்மர் என்னும் ஓர் அறிஞன் உபாயம் எடுத்துரைத்தான். கதலிக் சமய முதற்குருவிடம் விவாக சம்பந்தத்தைக் குலைப்பதற்கு உத்தரவு பெறுதல் அவசியம் அன்றெனக் கிரன்மர் சொன்னான். பேனாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிற்றும் ஆசிரியர்களின் தீர்ப்புச் சமய குருவின் தீர்ப்பிலும் சிறந்ததாகுமெனக் கிளந்தான். ஹன்றி ஆசிரியர்களுக்குக் கடிதங்கள் எழுதினான். ஆசிரியர்கள் பலருக்குக் கைக்கூலியாகப் பொருளை வீசினன். ஆசிரியர்கள் சிலர் தமயனுக்கெனப் பேசிய பெண்ணைத் தப்பி மணமுடித்தல் பிழையெனவும் சிலர் சமய முதற்குரு சரியென்றமையால் ஹன்றி தமையனின் பெண்ணை

விவாகஞ் செய்தலில் ஒரு குற்றமுமில்லை யெனவும் உரைத்தனர்.

### சமயக் குழப்பம்

ஹென்றி கதலிக் சமய முதற்குருவிற்கு ஆங்கிலநாட்டில் யாதொரு உரிமையுமில்லையெனக் கழறினான். சமய முதற்குரு அரசுரிமையை என்றி இழந்தானெனவும் வேற்று நாட்டு வேந்தன் யாவனாயினும் ஹென்றியைக் கலைத்து இராச்சியத்தைப் பெறலாமெனவும் விளம்பினான். ஹென்றி கோபாவேசங் கொண்டு தானே இங்கிலாந்தில் உள்ள குருமாருக்குத் தலைவன் எனவும் தானே ஆங்கிலச் சமயமுதற் குருவெனவும் அதற்குடன்படாதோர் யாவரும் அரசதுரோக மென்னும் குற்றஞ்செய்தாராகிச் சிரச்சேதஞ் செய்யப்படுவ ரெனவும்முரசறைவித்தான். அரசியல் விஷயத்திற்போல சமய விஷயங்களிலும் அரசனின் தீர்ப்பே முடிவானதென உத்தியோகத்தர் யாவரும் சத்தியம் செய்யவேண்டுமென அறிவித்தான். 1599-ல் அரசன் பாராளும் சபையைக்கூட்டித் தனக்கு உவப்பாகும் பிரதிநிதிகளை அங்கத்தினராக்கினான் பாராளும்சபை அரசன் விதித்த பிரமாணம் முறையானதெனவும் அரசனே சமய முதற்குருவெனவும், வேற்று நாட்டுக் குருமாரின் சொல்லுக்கு ஆங்கிலக் குடிகள் கீழ்ப்படியக் கூடாதெனவும், வேற்று நாட்டுக் குருமாருக்குப் பணங் கொடுக்கக்கூடாதெனவும் தீர்மானஞ் செய்தது. இங்ஙனம் இங்கிலாந்தில் கதலிக் சமய குருவின் அதிகாரம் கெட்டது. எனினும் ஹென்றி லூதரைப்போல் கதலிக் சமயக் கொள்கைகளைப் பிழையென எண்ணவில்லை. குடிகள் சிலர் லூதரைப் பின்பற்றினராக, ஹென்றி அவர்களைச் சமய துரோகிகள் எனத் தண்டித்தான். தன்னை முதற் குருவென உடன்படாதோரை அரச துரோகிகளெனத் தண்டித்தான். அரசவையில் அமைச்சனாகவிருந்த தோமஸ் மூர் என்னும் பெரியோன் ஓர் அறிஞன். அவன் கதலிக் சமயகுருவே முதற்குரு, அரசன் சமயகுருவாதல் கூடாதென வாதித்துக் கொல்லப்பட்டான்.

### தோமஸ் குறம்வெல்

தோமாஸ் குறம்வெல் என்போன் அரசனே முதற்குருவெனக் கூறிக் குருமாரைத் தான் அடக்குவான் எனச்சொல்லி

அமைச்சனானன். கதலிக்குருமாரும் துறவிகளும் பஞ்சமா பாதகங்கள் செய்கின்றாரோ என விசாரணை செய்யும்படி ஒரு சபையை நிறுவினான். சபையோர் அரசனின் நோக்கத்தை உணர்ந்து கதலிக்குருமாரும் துறவிகளும் தம் மடங்களில் வீண் பொழுது போக்குகின்றனர் எனவும் அம்மடங்களில் கொலை களவு கட் காமம் முதலிய பாவங்களைத் தினந்தோறும் செய்கின்றனர் எனவும் மொழிந்தனர். ஹன்றி தன்னை முதற்குரு எனப்பணியாத குருமாரை நாட்டினின்றும் கலைத்து அவரின் மடங்களையும் நிலங்களையும் தனது உத்தியோகத்தருக்கு அளித்தான். தனக்குமுன் உபாயங்கூறிய கிரன்மரே இங்கிலாந்துக் குருக்களுக்குத் தலைவன் என அறிவித்தான் ஹன்றி தன் எண்ணங்களை நிறைவேற்றி ஆன்பாலினோடு கூடிக்களித்து எலிசபத்து என்னும் பெண்குழவியைப் பெற்றான். பின்னர் ஆன்பாலின் கூடாவொழுக்கத்தினைப்பலன விளம்பி அவளைக்கொல்வித்தான். ஹன்றியின் மூன்றும் மனைவி எட்வாட் VI என்னும் ஆண்குழந்தையைப் பெற்றுப்பிரசவச்சாலையிலேயே இறந்தாள். தோமாஸ் குறம்வெல் செர்மானிய தேசத்து அரசகுமரி ஒருத்தியை மணம்பேசினன். அரசகுமரியின் உருவமெனு அழகிய ஓவியப்படத்தைக் காட்டினன். இம்மணத்தால் ஆங்கில வரசை லூதரின் புதிய பிரசினைச் சமயக் கொள்கைகளை அநுசரிக்கும் அரசரோடு நட்பாக்க எண்ணினன். அப்பெண்ணைக்கண்டவுடன் ஹன்றி வடிவில்லாதவளென உணர்ந்து தோமாஸ் குறம்வெல் என்னும் அமைச்சனைக் கொல்வித்தான். பொதுசனங்கள் தங்கள் சமயமடங்களை இடிப்பித்துக் கெடுத்த தீயோன் இறந்தனனென மகிழ்ந்தனர். வடபாகங்களில் பொதுசனங்கள் அரசனுக்கெதிராகத் திரண்டெழுந்தனராகக் குறம்வெல் பொதுசனங்களாற் பகைக்கப்பட்டான்.

## புதிய சமயம்

ஹன்றி ஆறுவது மனைவியாக 'கதறினுபாறு' என்பாளை மணமுடித்திருந்தான். தன் மரணசாதகத்தில் தன் மகன் எட்வேட்டு அரசுரிமை யுடையோனெனவும், அவனுக்குச் சந்ததியில்லாவிடின் மேரிக்கு அரசு உரியதாகுமெனவும் அவளுக்கும் சந்ததி இல்லாவிடின் ஆன்பாலினுடைய மகள் எலிசபத்துக்கே அரசு உரியதாகுமெனவும் எழுதிப் பாராளும் சபையிலும் தீர்

மானஞ் செய்வித்தான். இம் மூவருக்கும் சந்ததி இல்லாவிடில் தன் தங்கையின் சந்ததிக்கே உரிமை செல்லும் எனவும், தன் தமக்கையின் சந்ததிக்கு உரிமையில்லை எனவும் எழுதினான். எட்வாட்டு VI புதிய சமயக் கொள்கைகளைத் தழுவுவோரால் கல்வி பயிற்றப்பட்டான். எட்வாட்டு இளைஞனாதலின் ஹன்றி தன் மரணகாலத்தில் அமைச்சர் சபையொன்றை அரசியல் நடாத்தும்படி ஏற்படுத்தினான். அச் சபையோர் புதிய சமயக் கொள்கைகளைத் தழுவியோராகையால் உரோமன் கதலிக் மதத்தோரைத் துன்புறுத்தினர். ஆங்கிலக் கோயில்களில் விக்கிரக வணக்கஞ் செய்யப்படாதெனவும், கிறீஸ்து மரியாள் பீற்றர் முதலியோரின் படிமங்களையும் சிலைகளையும் படங்களையும் கோயில்களில் நாட்டக்கூடாதெனவும், ஆங்கிலத்தில் எழுதிய பைபிள் நூல்களே கோயில்களில் ஆராதனைக் குரியவை எனவும், ஆங்கிலரால் புதிய கொள்கைகளைத் தழுவி எழுதப்பட்ட தோத்திரப் பாடல்களே பாடப்படவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. கிறிஸ்து தன் 12 சிஷ்யருக்குத் தன் இறுதிகாலத்துக்குமுன் ஒருமுறை விருந்தளித்தகாலை, அன்று சிஷ்யர் பருகும் உவையின் தனது இரத்தமெனவும், அவை தின்னும் கோதுமை தன் இறைச்சியெனவும் புகன்றனராதலின், உரோமன் கத்தோலிக்கர் அவ்விருந்தைக் கொண்டாடும் தினத்தில் தாம் குடிக்கும் உவையினும் தாம் தின்னும் கோதுமையப்பமும் கிறிஸ்துவின் இரத்தமும் இறைச்சியுமாகப் பரிணமிக்குமென நம்பினர். புதிய கொள்கையைத் தழுவுவோர் தம் உவையினும் கோதுமையும் கிறீஸ்துவின் இரத்தத்தையும் இறைச்சியையும் சுட்டும் என்றும் அவை இரத்தமாகவும் இறைச்சியாகவும் மாறாவெனவும் விளம்பினர். மேற்கூறிய புதிய ஏற்பாடுகளும் கொள்கைகளும் ஆங்கிலக் குடிகள் பெரும்பாலாருக்கு வெறுப்பினை விளைத்தன. ஆங்கிலர் உரோமன் கத்தோலிக்கராதலின், அமைச்சரைப் பகைத்துப் போருக்கெழுந்தனர். அமைச்சர் சபையோர் முதலமைச்சனை நீக்கி வேறோர் அமைச்சனை நியமித்தனர். நீக்கப்பட்ட அமைச்சன் நல்லோனாயினும் கமக்காரருடைய கஷ்டங்களுக்கு இரங்கியபோதிலும், கமக்காரருக்கு உடனே உதவி செய்யாதிருந்தானாகையால், கமக்காரரும் அவனுக்கெதிராக எழுந்தனர். அக்காலத்தில் கலிடோனிய அரசனின் மகள் மேரி என்பாளுக்கும் எட்வாட்டு என்னும் அரசனுக்கு அவன் விவா

கம் எழுதிவைக்க எண்ணினன். அவ்வெண்ணம் நிறைவேறி யிருப்பின் கலிடோனியாவும் இங்கிலாந்தும் ஒரு மன்னனால் ஆளப்பட்டிருக்கும். அமைச்சன் படை அனுப்பித் தன் எண்ணத்திற்கு இசையும்படி கலிடோனியரை வெருட்டினனாகையால், அவர்கள் அவ்விவாகத்திற்கு உடன்படாது தமது இளவரசியைத் தாயிடம் பிராஞ்சு தேசத்திற்கு அனுப்பினர். இன்னோரன்ன பல காரணங்களால் முதலமைச்சன் சம்மர்சற்பிரபு பகையை வளர்த்தனன். அமைச்சர் சிலர் அழுக்காறு காரணமாகவும் அவனைப் பகைத்தனர். அமைச்சர் சபை, முதலமைச்சனை நீக்கித் தம்முள் ஒருவனை முதலமைச்சனாக்கினர். அவனும் புதிய மதக் கொள்கைகளைத் தழுவினன். அவன் ஹன்றியினுடைய தங்கையின் பேரப்பிள்ளையாகிய யேன்கிரே என்பாளுக்குத் தன் மகன் தத்திலியை மணமுடிப்பித்து அவர்களுக்கு அரசு உரியதாகுதல் அரசனுக்கு விருப்பமென அறிவித்தான். எட்வாட்டு பிணியனாதலின் சிறு பராயத்திலேயே இறந்தான். உடனே அமைச்சன் தன் மருமகளை அரசியென முரசறைவித்தான்.

## மேரி

இதற்கிடையில் ஹன்றியின் மூத்த மகள் மேரியைச் சனங்கள் யாவரும் அரசியென வாழ்த்தினர். மேரி அரசியாகித் தன் எதிரிகளைச் சிரச்சேதஞ் செய்வித்தாள். மேரி கதலிக் சமயத்தில் மிக்க பக்தி உடையளாதலின் தன் தந்தையின் குற்றத்திற்காகக் கதலிக் சமய முதற் குருவிடம் முழந்தாளிட்டு மன்னிப்புக் கேட்டனள். தன் தாயை வருத்திய கிரூன்பர் முதலியோரை மேரி தீயிலிட்டனள். பிரிவினை மதம் என்னும் புதிய சமய ஏற்பாடுகளைத் தழுவுவோர் யாவரையும் துன்புறுத்தினள். கதலிக் சமய முதறகுருவை ஆங்கிலக் கோயில்களுக்கு அதிகாரியென உடன்படாதோர் யாவரையும் சிறையில் இட்டனள். நூற்றுக் கணக்காகப் புதிய மதத்தினரைத் தீயிலிட்டனளாதலின் சனங்கள் மேரியைப் பகைத்தனர். மேரி ஸ்பெயின் தேசத்து அரசன் பிலிப்பை மணந்து அவன் உதவியால் ஆங்கிலர் யாவரையும் உரோமன் கத்தோலிக்கராக்க எண்ணினள். கோயில்களில் பழையபடி விக்கிரகங்களை அமைத்து வணங்கும்படி விதித்தாள். சனங்கள் சிலர் பகைத்தெழுந்து தலைநகருக்குச் சென்றனர்.

மேரி அவர்களோடு பேசி அவர்களை நட்பாக்கி கலகத் தலைவனைக் கொன்று கொடுங்கோலோச்சினுள். இவள் இறந்த செய்தியைக் கேட்டுச் சனங்கள் மகிழ்ந்தனர்.

**எலிசபத்து**

மேரியின் தங்கை எலிசபத்து அரசியானுள். உரோமன் கதலிக் கட்சியார் தம்மைச் சாரவாளெனவும் எதிர்க்கட்சியார் புதிய பிரிவினை மதத்தையே வளர்ப்பாளெனவும் எதிர்பார்த்திருந்தனர். எலிசபத்து கதலிக் சமய முதற் குருவுக்கு இங்கிலாந்தில் அதிகாரமில்லையெனத் தன் தந்தையின் பிரமாணத்தைக் காட்டினள். ஆங்கிலர் யாவரும் ஆங்கிலக் கோயில்களுக்குச் சென்று ஆலய வழிபாடு செய்யவேண்டுமென முரசறைவித்தாள். புதிய சமயக் கொள்கைகளை அநுசரிப்போர் சிலர் இச் சீர்திருத்தம் போதியதன்றெனக் குறை கூறினர். அரச துரோகம் செய்வோர்களைத் தண்டிக்கும்படியும் சமய விதிகளை மீறுவோரைத் தண்டிக்கும்படியும் எலிசபத்து தன் தந்தை ஏற்படுத்திய இரு தண்டச் சபைகளை ஏவினள். இத் தண்டச் சபை வேந்தரால் நாட்டப்பட்ட தொழிய பாராளும் சபையால் நிறுவப்படவில்லை. பிலிப்பு வேந்தன் எலிசபத்தை மணஞ்செய்ய விரும்பியபோதிலும் எலிசபத்து சம்மதிக்காது கடத்தினள். எலிசபத்து புதிய சமயத்தைச் சார்ந்தனள். ஒல்லாந்தரைப் பிலிப்பு துன்புறுத்தினுக ஆங்கிலக் குடிகள் அவர்களுக்கு இரங்கி உதவிபுரிந்தனர். கலிடோனிய தேசத்திலும் பிரிவினை மதம் பரம்பியது. கலிடோனியர் தமது அரசியாகிய மேரியொடு பொருது அவளின் மகவுக்கு முடிசூட்டி மேரியை நாட்டினின்றும் துரத்தினர். மேரி இங்கிலாந்தில் இறங்கினளாக, இங்கிலாந்தின் அரசுக்கும் அவள் உரிமையுடையாளாதலின், எலிசபத்து அவளைச் சிறையிட்டனள். இடையிடையே கதலிக் பிரபுகள் எலிசபத்தைக் கொன்று மேரியை அரசியாக்க முயன்றனர். அங்ஙனம் சூழ்ச்சி செய்வோர் அகப்பட்டு எலிசபத்தின் அமைச்சராற் கொல்லப்பட்டனர். அடிக்கடி இக்கலகங்கள் நிகழ்ந்தமையால், மேரியைக் கொல்லுதல் அவசியமென அமைச்சர் நினைத்தனர். மேரி தீவினையாளர்களைக் கலகம்பண்ணும்படி தூண்டினளெனச் சான்றுபெற்றவுடன் எலிசபத்து மேரியைக் கொல்லுதற்கு உடன்பட்டாள். எலிசபத்து மணஞ்செய்

யாமையால் மேரியின் மகன் யேம்ஸ் அரசுக்குரிமையுடையோ னென எலிசபெத்து எண்ணினள். ஆங்கிலரைக் கத்தோலிக்க ராக்கும் எண்ணத்தைக்கொண்ட பிலிப்பு ஆங்கில நாட்டைக் கைப்பற்றுதற்குக் கப்பல்கள் கட்டுவித்தான்.

### கொலம்பஸ்.

ஹன்றி ஆண்ட காலத்தில் துருக்கர் மேனாட்டாரை இந்தியாவுக்குச் செல்லவொட்டாது தடுத்தனராதலின் இந்தியரோடு வணிகஞ் செய்யாமல் மேனாட்டார் தம் நாகரிகவாழ்க்கையை நடத்தவியலாது எனவும் உண்ண உணவுமின்றி உடுக்க உடையுமின்றி அலங்கரிக்க அணியுமின்றி இருப்பதற்கு நேரிடுமெனவும் அஞ்சி இந்தியாவுக்குச் செல்வதற்குப் புதுவழிகளைத் தேடினர்.

1492-ல் பர்தலமியுதையாஸ் இந்தியாவை அடைய வழி தேடித் தென்னாபிரிக்க முனைவரையுஞ் சென்று திரும்பினான். 1496-ல் வஸ்-கடி-காமா தென்னாபிரிக்க முனையால் சென்று தமிழ் நாட்டுக்கரையை அடைந்தான். இவன் இந்தியாவைக் காணுமுன், கொலம்பஸ் வழியறிதற்கு மேற்குச் சென்றான். கொலம்பஸ் உலகு உருண்டை என எண்ணினன். உருண்டையில் மேற்கே சென்றால் கிழக்கை அடையலாமெனக் கொலம்பஸ் ஊகித்தான். மூன்று சிறுக்கப்பலோடு கனெறித் தீவுகளை அடைந்து அத்திலாந்திச் சமுத்திரத்திற் பிரயாணஞ் செய்யத் துணிந்தனன். கடலோடிகள் இரண்டுமாசம் கரைகாணாமல் அஞ்சிக்கொலம்பஸைக் கடலில் தள்ளிவிட்டு வீடு திரும்ப எண்ணினர். கொலம்பஸ் இரண்டொருநாளிற் கரைகாணாவிட்டால் தன்னைக் கடலில் தள்ளிவிடும்படி சொன்னான். இரண்டொருநாளில் பாகமாஸ் தீவுகளை அடைந்தார்கள். அதனைபின்னரே 1496ல் வஸ்-கடி-காமா எனபோன் ஆபிரிகாக் கண்டத்து மேற்கரைவழிச்சென்று இந்தியாவுக்குப் புதியதோர் வழியைக் கண்டனன். வேறுபலர் அமரிகாக்கண்டத்தில் இறங்கினர். மகலன் என்னும் ஸ்பானிய தேயத்தவன் அத்திலாந்திப் பௌவத்தைக்கடந்து தென்னமரிக்க முனையால் சென்று பசுபிக்சமுத்திரத்தை அடைந்து வந்து இந்து சமுத்திரத்தைக் கடந்து தென்னாபிரிக்க முனையை அடைந்து ஸ்பானிய தேயத்திற்குத்

திரும்பினன். ஸ்பானியர் அமரிக்காக் கண்டம் தமக்குரிய தெனப் புகன்றனர். கோட்டிஸ் பிசாரோ என்போர் மத்திய அமரிக்காவிலும் தென்னமரிக்காவிலும் ஸ்பானிய நடைய ஆணையைச் செலுத்திப் பொன் வெள்ளிகளை எடுத்துக் கொண்டு வந்தனர். இக்காலத்தில் 1505-ல் இலங்கையிலும் போர்த்துக்கேயர் இறங்கினர்.

## அங்கிலக் கடற்கள்வர்.

அமரிக்க தேசத்திலிருந்து பொன் கொண்டுவரும் ஸ்பானிய கப்பல்களை வழிபறித்தல் நன்றெனை ஆங்கிலக் கடற்கள்வர் எண்ணினர். எலிசபத்து என்னும் அரசியும் கடற்கள்வரை ஒருவாறு புரந்தனள் எனலாம். அக்கடற்கள்வருள் ஒருவன் ஹோக்கின்ஸ் என்பவன். அவன் ஆபிரிக்க நாட்டவரைப் பிடித்து அடிமைகளாக அமரிக்க நாட்டிலே விற்றுப் பொருளீட்டினன். அக்காலத்துக் கடற்கள்வருள் திறெக்கு என்பவன் மிகப் புகழ்பெற்று அரசவையில் சன்மானமும் பெற்றன். திறெக்கு ஸ்பானியருடைய அமரிக்க நாடுகளில் இறங்கி ஸ்பானியரைக் கொன்று பொன்பெற்றுத் திரும்பினன் ஆங்கிலருள் முதன் முதல் உலகு முழுவதையும் சுற்றிப் பல கடல்களிலும் சூறையாடி வீடு திரும்பியோன் 'திறெக்கு' என்பவனே அவன் செய்த தீவினைகளை ஸ்பானியர் சகிக்க முடியாது வருந்தினர். ஸ்பெயின் தேசத்துத் தாய்மார் தம்குழந்தைகளை அச்சுறுத்துவதற்குத் திறெக்கு வருகிறானெனச் சொல்லுதல் வழக்கமாம். வேந்தன் பிலிப்பு கப்பல் கட்டுவதை "திறெக்கு" கேள்வியுற்று அவற்றை அழிக்கத் துணிந்து எலிசபத்தின் ஆஞ்ஞைப்படி ஆங்கிலக் கப்பல் சிலவற்றோடு காடிஸ் என்னுந் துறையடைந்து அங்குள்ள கப்பல்களை உடைத்துத் திரும்பினன்.

## ஸ்பானியர் கப்பற்படை.

பிலிப்பு பின்னும் ஓர் கப்பற்படை திரட்டி இங்கிலாந்தை அணுகினன். ஆங்கிலக் கப்பல்கள் மிகச்சிறியவை யெனவும் ஸ்பானிய கப்பல்கள் மிகப் பெரியவை எனவும் சொல்லப் படும். ஸ்பானியர் ஆங்கிலக் கப்பல்களைக் கொளுக்கியால் இழுத்துத் தம் வீரரை ஏணிகள்மூலம் ஆங்கிலக் கப்பல்களில்

இறக்கிப் போர்புரிய எண்ணினர். அங்கிலர் தூரத்தினின்று தம் பீரங்கிகளை உபயோகித்துப் பகைவருடைய கப்பல்களை உடைத்தனர். ஸ்பானிய கப்பல்கள் பெரியவை ஆதலின் அவற்றை இலகுவில் செலுத்த முடியாது. ஆங்கிலக்கப்பல்கள் சிறியவையாகலின் அவை இலகுவில் திரும்பியோடும். பல கப்பல்கள் உடைந்த போதிலும் ஸ்பானிய கப்பல்கள் ஒல்லாந்து தேயத்துத் துறைமுகத்தை யடைந்து அந்நாட்டில் ஸ்பானிய வேந்தன் தொகுத்து வைத்திருந்த படையை ஏற்றி இங்கிலாந்தில் இறக்கும் நோக்கமாக நின்றன. அங்கிலர் பகைவர்களுடைய கப்பல்களை உடைக்காவிடின் தாம் தம் சுயாதீனத்தை இழக்க நேரிடுமென உணர்ந்தனர். அங்கிலர் சமயக் கலகங்களை மறந்து தம் தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்குப் பண்ட மாற்றுச் செய்யுங் கப்பல்களையும் போர்ச்சேவைக்கென அரசினருக்கு அளித்தனர், திறேக்கு இலகுவாய்த் தீப்பற்றக் கூடிய பண்டங்களால் ஓடங்களை நிரப்பி நள்ளிரவில் அவற்றை ஸ்பானிய கப்பல்களுக்கிடையில் செலுத்தும்படி ஏவினன். இவ்வோடங்கள் தீமூட்டப் பெற்றவை யாதலின் ஸ்பானிய கப்பல்களும் தீப்பற்றின. துறையினுள் நிற்க முடியாமல் பகைவருடைய கப்பல்கள் வட கடலில் வெளிவந்தன. அங்கிலக் கப்பல்கள் உடனே போர் தொடர்ந்தன. வந்தவழியே திரும்பிப்போக அஞ்சினராதலின் ஸ்பானியர் பிரித்தானியாத் தீவைச் சுற்றி ஓடினர். இங்ஙனம் தீக்குத் தப்பிய கப்பல்கள் புயலில் அகப்பட்டு உடைந்தன. தெய்வமே தங்களைக் காப்பாற்றியதென அரசி கூறினள்.

## ‘இரூலி’

அங்கிலர் அமரிக்காவில் வணிகஞ் செய்யவும் குடியேறவும் முயன்றனர். குடியேற்ற நாடுகள் அவசியமென முதன்முதல் உணர்ந்தோன் ‘ரூலி’ என்பவனே. அவன் அழகிய ஆடவன் ஆதலின் எலிசபத்து அவனைத் தன் அரசவையில் வைத்திருக்க எண்ணினள். அரசி இளைஞர் பலரோடு களித்தாலும் அரசியலை வயசு முதிர்ந்த அமைச்சரைக்கொண்டே நடாத்தினள்,

## எலிசபத்தின் அரசியல்

எலிசபத்து தன் நண்பர் சிலருக்குச் சில பண்டங்களில் வியாபாரஞ் செய்யும் தனியுரிமை அளித்திருந்தாள். அங்ஙனம் தனியுரிமை பெற்றோர் தாம் நினைந்தவாறு தாம் விற்கும் பண்டத்தின் விலையை ஏற்றி விற்கலாம். இரலி முதலியோர் இத்தனியுரிமைகளைப் பெற்றுத் திரவியந்தேடினர். இத்தனியுரிமைகளை நீக்கவேண்டுமெனப் பாராளுமன்றச் சபை கேட்டது. அரசி அவ்வேண்டுகோட்கிணங்கினள். அரசியின் மணத்தைப் பற்றிச் சபை பேசியபொழுது அரசி 'அரசியலைப் பற்றிச் சபை புத்தியுரைப்பதொழிய அரசியை இன்னவாறு ஒழுகென' ஏவுதற்குச் சபைக்கு ஆற்றல் இல்லையென அறைந்தனள். எலிசபத்தும் அவள் தந்தையும் கொடுங்கோலர்போல் தாம் எண்ணியவாறு அரசியலை நடாத்திய போதிலும் நாட்டின் நலத்தையே நோக்கினராதலின், பிரசைகளால் நேசிக்கப்பட்டனர். எலிசபத்து ஆண்ட காலத்திலே அங்கிலர் கிழக்கிந்திய வணிகர் கூட்டத்தை நிறுவி இந்தியரோடு பண்டமாற்றுச் செய்யத் தொடங்கினர்.

## சேக்ஸ்பியர் (செகப்பிரியர்)

அரசி எலிசபத்தின் காலத்தில் நாடகங்கள் பல நடிக்கப்பட்டன. பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகள் அங்கில நாடகம் செம்மையுற்ற காலமாகும். மேனாட்டார் யாவராலும் உலகியல் ஞானி எனப் பாராட்டப்படும் நாடகவாசிரியர் சேக்ஸ்பியர் தன் இன்பவியல் நாடகங்களையும் துன்பவியல் நாடகங்களையும் எழுதி நடித்தான். அவர் இயற்றிய நாடகங்கள் ஒப்பற்றவை என்வும் செய்யுள் உரை இசைப்பாடல் என்பவற்றால் சிறந்தவை எனவும் ஆட்டக் கூத்து சைகைக் கூத்து அகத்துறை புறத்துறை என்னும் பல்வகை உறுப்புக்களை உடையவை எனவும் பொருளை நவச்சுவை ததும்ப உரைக்கின்றவை எனவும் அறிக.

## 30 ஆண்டுச் சமயப்போர் 1619—1649

லூதரின் கொள்கைகள் தேசந்தோறும் பரப்பியவையாக, உரோமன் கதலிக்கர் தம் மதத்தினர் தொகை குறைதலை

உணர்ந்தனர். கதலிக்கர் தம் சங்க விதிகளைத் திருத்தித் தம் சமயத்தைப் பல நாடுகளிலும் பரப்ப விழைந்தனர். அம் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டோன் இக்நாசியஸ் லோயலா என்பவன். அவன் ஸ்பானிய தேசத்தில் படைவீரனாகச் சேவித்துப் போரிற் புண்பட்டுச் சத்திர வைத்தியம் செய்யப் பெற்றானாகத் தன் உள்ளத்தை ஆராய்ந்து தான் சமயத் தொண்டு செய்யவேண்டுமென நிச்சயித்தான். கால் நொண்டியாயினும் அவன் உரோமாபுரக் கோயில்களுக்கும் எரிசலம் கோயிலுக்கும் யாத்திரைசெய்தான். அவன் ரோமன் கதலிக் கிறிஸ்த சங்கமொன்றை நிறுவி அமரிக்காவிலும் இந்தியா முதலிய கீழைத் தேயங்களிலும் கிறிஸ்த சமயத்தைப் பரப்ப முயன்றான், இச் சங்கம் இன்றும் இலங்கையிலும் நிலைத்திருக்கின்றது.

செர்மானிய ஆழிவேந்தன் தன் குடிகள் யாவரும் கதலிக் சமயக் கிரியைகளையே செய்ய வேண்டுமென்று விதித்தனன். குறுநில மன்னர் பலர் புதிய மதக்கொள்கைகளையே அநுசரித்தனர். செர்மானியர் இவ்வண்ணம் இரு கட்சியினராகப் பிரிந்து போர் செய்யத்தொடங்கினர். ஸ்பானியர் கதலிக் கட்சியாருக்கு உதவி செய்தனர். கதலிக்கட்சியார் எதிரிகளைப் பன்முறை புடைத்துப் புதியபிரிவினை மதத்தினரைக் கொன்றனர். புதிய மதத்தினர் தம் மதத்திறகாகத் தம்முயிரையும் தியாகஞ் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தனர். சுவீடின் தேசத்து வேந்தன் புதிய மதத்தைத் தழுவினன். அவன் சிறந்த படைத் தலைவனாகவும் துலங்கினன். அவன் கதலிக் கட்சியாருக் கெதிராகப் போர் புரிந்து வெற்றி பெற்றான். அவன் போரிற் புண்பட்டு இறந்தானாகக் கதலிக் கட்சியார் பின்னரும் வெற்றியடைந்தனர். பிரான்சு தேசத்திலே 'றிச்லேயு' என்னும் கதலிக்குரு அமைச்சனாக அமர்ந்திருந்தான். அவன் கமம், வணிகம் முதலியவற்றை வளர்த்துச் செங்கோலோச்சினன். பிராஞ்சியர் கதலிக் சமயத்தினராயினும் அமைச்சன் கதலிக் கட்சியாருக்கெதிராகப் புதிய பிரிவினை மதத்தினருக்கு உதவி செய்தான். இங்ஙனம் புதிய மதத்தினர் வெற்றியடைந்தனர். இத்துடன் முப்பதாண்டுச் சமயப்போர் முடிவெய்தியது. பதினேழாம் நூற்றாண்டிலே சமயத்தின் பெயராலே செய்த பாவத்திற்கு அளவில்லை.

# 12-ம் அதிகாரம்:

# முகம்மதியரும் இந்துக்களும்

## 1-ம் பாடம்: இந்தியச் சுல்தான்கள்.

### அராபிய முகமதியர்

அராபியர் 8-ம் நூற்றுண்டில் வல்லரசு நடாத்தி உரோமருடைய ஆட்சிநாடுகள் பலவற்றைக் கைப்பற்றினர். பத்தாம் நூற்றுண்டில் அராபியர் பார்சியநாடு புக்கு பார்சியா என்னும் இராணியரை முகமதிய மதத்தைத் தழுவச் செய்தனர். அத்துடன் நில்லாமல் அராபிய ஆழிவேந்தர் ஆரியனு காந்தாரம் முதலிய நாடுகளையும் தம்முடைய ஆட்சிநாடுகளாக்கினர். பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் அராபிய முகமதியர் சிந்துராச்சியத்தைப் பிடித்தனர். கசினி நகரமன்னன் சுபுற்கின் கி. பி. ௯86-ல் சிந்துதேய மன்னன் சயபாலனோடு போர் தொடர்ந்தான். சயபாலன் இந்துமன்னராகிய இராச்சியபாலன் தங்கன் முதலியோருடைய நட்பைப் பெற்றும் குறம் என்னும் பள்ளத்தில் தோல்வியடைந்தான். அத்தோல்வியால் சயபாலன் புருஷபுரத்தை இழந்தான்.

### கசினி முகமது

கி. பி. 997-ல் கசினி நகரமன்னன் முகமது இந்துதேயத்தில் சூறையாடத் தொடங்கினுன். இம்முகமது சுபுற்கினுடைய மகன். இம்முகமது இந்துக்கள் படிமங்களை வழிபடும் மூடராகலின் இந்துக்களை கொல்லுதல் புண்ணியம் என நம்பினன். ஐப்பசி கார்த்திகை மார்கழி மாசங்களில் முகமது சூறையாடுதல் வழக்கம். இந்திய வினைஞரை அவன் அடிமையாக்கித் தன்னுடு கொண்டு சென்றுன். 1001-ல் முகமது சயபாலனை முறிய அடித்தான். சயபாலன் மானம் இழப்பதிலும் உயிர் நீத்தல் சிறந்ததெனு எண்ணித் தீப்பாய்ந்தான். சயபாலனுடைய மகன் ஆனந்தபாலன் உச்சினிமன்னன் கனேசி மன்னன் முதலியோரின் துணைபெற்று முகமதியரை எதிர்த்தான். இந்துப்படையும் முகமதியப்படையும் புருஷபுரத்தில் சந்தித்தன. இந்துக்கள் முகம்மதியருடைய பாசறையை

மோதியடித்து 3000 முகமதியரைக் கொன்றனர். அத்தருணத்தில் ஆனந்தபாலன் ஏறிய யானை களத்தில் நிற்கமாட்டாமல் வெருண்டோடியதாக, உடனே முகமதியருடைய புரவிப்படை களைதீர்ந்து இந்துப் படையை நெருக்கி யடித்தது. 8000 இந்துக்கள் மாண்டனர். முகமது சூறையாடித் திரிந்து தன்னுட்டிற்கு ஏகினன்.

கி. பி. 1009-ல் முகமதியர் வீமாநகரைத் தாக்கி ஆங்குள்ள கோயிலைச் சூறையாடிப் பொற்கலங்களையும் முத்து, இரத்தினம் இடப்பெற்ற அணிகலன்களையும் எடுத்தார்கள். இவ்வீமநகர் 1705-ல் நடந்த பூகம்பத்தால் அழிவெய்தியது. வீமநகரைப் பிடித்தபின் முகமதியர் கனோசி தேயத்தினுள் புகுந்தனர். கனோசி மன்னன் இராச்சிய பாலப் பிராத்திகாரன் முதுகிட்டோடினன். 1018-ல் முகமதியர் 10,000 இந்துக்களை முகமதியராக்கினர். வடமதுரை முகமதியர் வசமாயிற்று. மதுரையில் உள்ள கோயில் ஒன்று மிகத் தொன்மையானது. அதுகட்ட 2000 ஆண்டுகள் கழிந்திருக்கும். அக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருந்த படிமங்களுள் ஐந்து சிறந்தவை. அவ்வைந்தும் 15 அடி உயரமானவை. அவை இரத்தினக் கண்கள் உடையவை. இத்தகைய படிமங்களை எல்லாம் முகமதியர் சூறையாடிக் கோவில்களையும் துகளாக்கினர். கோவில் மாத்திரமன்றி மதுரா நகரையும் நூறினர். இராச்சியபாலன் அஞ்சி யோடினுகை, இந்து மன்னர் அவனைக் கொன்று அவனுடைய இராச்சியத்தை திரிலோக பாலனுக்கு அளித்தனர்.

கி. பி. 1019-ல் முகமதியர் சாண்டலருடைய நாட்டுள் புகுந்து 500 யானைகள் பிடித்தனர். சாண்டலர் மன்னன் கந்தன் பொருள் கொடுத்து முகமதுவின் நட்பைப் பெற்றுன். முகமது சோமநாதர் கோயிலைச் சூறையிட எண்ணிப் பதினேராம் முறை படையெடுத்தான். சோமநாதம் என்னும் பிரபாச நகரம் கதியவார் நாட்டில் உளது. 1023-ல் முகமது கசினியிலிருந்து 30,000 புரவிகளோடு புறப்பட்டு ஒருவருடகாலம் சூறையாடித் திரிந்து 59,000 சனங்களைக் கொன்றுன். அதன்பின் முகமது சோமநாதர் கோயிலை அணு

கினன். கோயில் மரத்தால் கட்டப்பட்டதெனவும் அதனுள் பிரதிட்டை செய்த லிங்கம் மிகச் சிறந்த தெனவும் கோயிலி லுள்ள திரவியங்கள் யாவற்றையும் முகமதியர் கொண்டு போனுர்கள் எனவும் கூறுப. முகமது 17-ம் முறையும் இந்து நாடுகளில் சூறையாடி ஏகினன். முகமது 62 வயசினனுகித் தன் பிள்ளைகளின் கலகங்களைச் சகிக்கமுடியாமல் துயருற்று 1030-ல் இறந்தான்.

## அல்பரூனி

முகம்மதுவின் காலத்திலே கி பி. 973-ம் ஆண்டிலே அபுறிகான் மாமத் என்பவன் பிறந்தான். அவனை அல்பரூனி என அழைத்தல் உண்டு அவன் கீராவில் பிறந்து கசினியில் வளர்ந்து சமஸ்கிருதமும் தத்துவஞானமும் பயின்று அறிஞனு கத் திகழ்ந்தான். அவன் பகவத்கீதையைப் பாராயணம் பண் ணினன். அவன் சமயநூல்களை ஆராய்ந்தது மன்றி விண்ணூல் கணிதநூல் மண்ணூல் என்பவற்றையும் கற்றான். அவன் இந்தியர் வரலாறு ஒன்று எழுதினன். அவன் எழுதிய நூல் பல அழிவெய்திய போதிலும் அவனுடைய சரித்திர நூலின் பொழிப்பு பார்சிய மொழியில் எழுதப்பட்டுளது.

## கோரி முகமது

முகமதியர் தாம் இந்து தேயத்தினுள் நுழைந்து இந்துக் களை வென்று ஆட்சிசெய்த வரலாற்றைத் தமக்கிசைந்தவாறு எழுதினர். இந்துக்கள் ஒருவரும் முகமதியருடைய ஆட்சி வரலாற்றை எழுதவில்லை யாகலின், இந்துக்களின் சார்பாக இச்சரித்திரம் எழுதப்பெற்றிலது. இந்துதேயத்தின் வடமேற் கெல்லையில் ஆரியானுவில் உள்ள மலைச் சாரல்களில் கோரி என்னும் நகரில் அரசு புரிந்த மன்னர் கசினி நகரில் ஆண் டிருந்த முகமதுவின் சந்ததியாரோடு கலகப்பட்டனர். கசினி மன்னன் பராம் கோரிமன்னகுமாரர் இருவரைக் கொன்றான். பதிலாக கி. பி. 1150-ல் கோரிமன்னன் அலாடின் உசேயின் என்பவன் கசினி நகரில் சூறையாடி ஆடவர் பெண்டிர் குழந் தைகள் என அகப்பட்டவர் யாவரையும் வெட்டி வீழ்த்தி னன். கி. பி. 1173-ல் கோரிமன்னன் கியாசுடின் கசினியில் தனது ஆட்சியை நிலை நிறுத்தினன். இக் கோரிமன்னனு

டைய உபராசனுகக் கசினியில் முகமது என்பவன் ஆண்டான். இக் கோரி முகமது தான் இந்து தேயத்தில் முகமதியருடைய அரசை நாட்டினுன்.

1175-ல் கோரி முகமது இந்துநாடுகளில் இறங்கி மூவாண்டு சூறையாடிக் குசரத்துட் புகுந்து குசரமன்னன் மூலராசனேடு பொருது தோல்வி யடைந்து தன்னுடு திரும்பினுன். 1187-ல் முசமது புதியதோர் படைதிரட்டி பாஞ்சாலையில் ஆண்டிருந்த முகமதிய மன்னனேடு போராடி நின்று 1191-ல் இந்துகங்கைச் சமபூமியில் சூறையாடினுன். இந்துமன்னர் பலர் டெல்லியில் அரசுபுரிந்த இந்து மன்னன் பிரிதிராசனுக்குத் துணைப் படை அனுப்பினர். தாராபாய் (தலவாறி) என்னும் களத்தில் இந்துக்களும் முகமதியரும் அமர் புரிந்தனர். முகமதிய மன்னன் ஒருவன் இந்து மன்னன் ஒருவனைத் தனிப்போர்க் கழைத்தனன். அம் முகமதியனை இந்து மன்னன் கொன்ருன். இந்துக்கள் போரில் வென்றனர். இந்துக்கள் தம் நாட்டைக் காக்க எண்ணினுரொழிய முகமதியரின் நாட்டைப் பிடிக்க முயலவில்லை. இந்துக்கள் ஒற்றுமையின்மையாலும் அரசியல் ஞானம் உணராமையாலும் இவ் வெற்றியின் பின்வாளா இருந்தனர். அடுத்தவாண்டு கோரிமுகமது 10,000 வில் வீரரோடும் பல்வேறு தானைகளோடும் வந்து தாராய்க் களத்தில் இந்துக்களோடு அமர் புரிந்து வாகை சூடினன். இந்துக்கள் தம் கசரததுரகபதாதிகளே திறமான படைகள் எனவும் தம் போர் முறைகளே சிறந்தவை எனவும் தம் யானைப்படைகளை மிலேச்சர் ஒருபோதும் வெல்லமுடியாதெனவும் நம்பியிருந்து கெட்டனர். இந்துக்களின் யானைப் படைகளே இந்துக்களின் தோல்விக்குக் காரணமாயின. யானைகள் வெருண்டு தம் படைகளின் அணியைக் குலைக்க, இந்துக்கள் தோல்வியடைந்தனர். பிறிதோர் களத்தில் இராசன் சயசந்து தோல்வியடைந்தான். முகமது தன் படைத்தலைவன் குற்பிடின் ஐபாக் என்பவனைப் போரைத் தொடரும்படி ஏவித் தான்பெற்ற சூறையோடு கசினிக்குத் திரும்பினுன்.

குற்பிடின் ஐபாக் 1193-ல் காசிவரையும் சென்று சூறையாடினுன். பின்பு 1197-ல் குசரத்தில் பிறைக் கொடியை நாட்டினுன். குற்பிடின் என்பவனுடைய உபதலைவன் முகமது

கில்ஜி 1197-ல் பீகார் என்னும் அங்கநாட்டிலுள்ள ஓர் கோட்டையைப் பிடித்து அவண் இருந்த பௌத்தர்களைப் படிம வழிபாடு செய்யும் இந்துக்கள் என மயங்கிக் கொன்றான். அவன் புத்தருடைய சிலைகளை உதைத்து வீழ்த்தினான்; அவன் புத்தகங்கள் பலவற்றைத் தீயில் இட்டான். பிக்குக்கள் ஓடித் தப்பினர். சிலர் நீர்வள தேயத்திலும் சிலர் தென்னிந்தியாவிலும் உறைந்தனர். இதன்பின் வடவிந்தியாவிலே, பௌத்தம் பிறந்த விடத்திலே, பௌத்தரைக் காணவே கிடையாமல் போயிற்று.

முகமது கில்சி அங்கத்தைப் பிடித்தபின் வங்கத்தைப் பிடிக்க முயன்றான். 1199-ல் இலட்சுமணசேனன் வங்கத்தில் அரசு புரிந்தனன். அவன் ஆண்டு நிறைந்த வயோதிகன். முகமதிய வீரர் பதினெண்மர் அரசகோட்டத்தை அணுகி வாயில்காப்போரைத் தாக்க, உணவருந்திக்கொண்டிருந்த அரசன் பின் வாயிலால் ஓடித்தப்பினான் என ஒருகதை உண்டு. இஃதெங்ஙனமாயினும் வங்கத்தோர் தோல்வி யடைந்தனர் என்பதற்கு ஐயமில்லை. 1200-ல் நூடியா என்னும் தலைநகர் நூறப்பட்டது. முகமதியர் வங்கத்தில் முகமதியப் பள்ளிகளை நிறுவித் தம் மதத்தை நாட்டத் தொடங்கினர். முகமது கில்ஜியின் வெற்றிகளைப் புகழ்ந்துரைக்கும் சரித்திரவாசிரியன், முகமதியர் சாண்டலருடைய 'விந்துல்கண்ட்' என்னும் அரணைப் பிடித்து ஆங்கிருந்த கோயில்களை முகமதியப் பள்ளிகளாக்கினரெனவும் படிமங்களை இடித்து வீழ்த்தினரெனவும் உருத்திராக்கம் தரித்துச் செபஞ் செய்திருந்த பலரை வெட்டினரெனவும் வெட்டுண்ட இந்துக்களின் இரத்த வெள்ளம் வீதிதோறும் நாறியதெனவும் சிறைப்பட்ட 50,000 இந்துக்கள் அடிமைகளாயினர் எனவும் விளம்பினர்.

1205-ல் முகமது கில்ஜி தீபத்து நாட்டைப் பிடிக்க விழைந்தனன் அவன் 10,000 வீரரைக் கூவி மலை கடந்து தீபத்திற்கு போகும்படி ஏவினன். படை பனியிலும் மழையிலும் நனைந்து அழிவெய்தியது. முகமதும் 100 வீரரும் மாத்திரம் தப்பினர். பின்பு முகமது துயருற்று இறந்தானும். இந்தியச் சுல்தான்கள் சுத்த அராபியர் அல்லர். அவர்கள் பார்சியாவிலிருந்து வந்த துருக்கரே.

## முதலாம் சுல்தான் 'குற்பிடின் ஐபாக்' ஆட்சிக்காலம் 1206 — 1211

'கோரி முகமது' 'கசினியில்' சிலகாலம் கொடுங்கோலோச்சியிருந்தான். 1205-ம் ஆண்டில் அவன் பாஞ்சாலை வந்து பகைவரை அடக்கினான். அடுத்தவாண்டு அவன் கசினிக்குத் திரும்பிப்போகும் வழியில் கொலையுண்டான். குற்பிடின் சுவாதீனமாக ஆண்டு சுல்தான் என்னும் பட்டம் பெற்றான். குற்பிடின் 1206-ல் "இலாகூரிலே" முடி சூட்டப்பெற்றான். குற்பிடின் குதிரைச்செண்டு விளையாடும்போது ஏற்றுண்டு விழுந்து இறந்தான். குற்பிடின் முரடனாயினும் தன்படை வீரருக்குக் கூலி தவறாது கொடுத்தான் எனவும் இந்துக்களைத் துன்புறுத்திப் பத்திமானாக விளங்கினான் எனவும் முகமதியச் சரிதையாகிய 'தபக்தி நசிரி' நவில்கின்றது. குற்பிடின் டெல்லியில் நாட்டிய பள்ளி இந்திய விணைஞரால் கட்டப்பட்டதாம். இருபத்தைந்து இந்துக்கோயில்களை உடைத்தெடுத்த கற்களால் அப்பள்ளி கட்டப்பட்டதாம். முகமதியர் இந்திய சிற்ப முறையைத் தழுவித்தம் உயரிய கோபுரங்களைக் கட்டினர்.

## இலத்துத் மிஷ் ஆட்சிக்காலம் 1212 — 1236

குற்பிடின் மகன் 'ஆராம்' தந்தை உவக்கத்தக்க வீரன் அல்லன். அவனை அவனுடைய தங்கையின் கணவன் இலத்துத் மிஷ் கலைத்துச் சுல்தான் பட்டத்தைத் தான் வெளவினான். இலத்துத் மிஷ் சமயபக்தியைக் காட்டுதற்குத் தன் பெயர் 'ஷாம்சிடின்' என விளம்பரஞ் செய்தான். அப்பெயர் சமய சூரியன் எனப் பொருள்படும். அவன் 1236-ல் இறந்தான்.

### அவுணன் சிங்கிஸ்கான்

சிங்கிஸ்கான் 1162-ல் பிறந்து 1227-ல் இறந்தான். அவன் புகழ்பெற்ற பெரிய போர் வீரனானான். அவன் மங்கோலிய ஆழிவேந்தன் காக்கான் (பெரிய கான்) எனப் பெயர்பெற்றான். சிங்கிஸ்கான் துருக்கிதேயத்துக் கீவா நகர மன்னன் சாலுடின் மாங்பரணி என்பவனைக் கலைத்துக்கொண்டு இந்து நதிவரையும் வந்து புருஷபுரத்தாற் புலம்பெயர்ந்து போனான். சிங்

கிஸ்கானுடைய இயற்பெயர் தமூர்ச்சி. அவன் மங்கோலியாவில் மன்னனாக இருந்தான். அவன் சாமர்க்கண்டு கசினி முதலிய துருக்கி நாடுகளைத் தன்னாட்சிக்குள் கொணர்ந்து பசுபிக் சமுத்திரம் தொட்டு ருஷியாவரையும் தன்னாணை செலுத்தி ஆழி வேந்தனாயிருந்தான். சிங்கிஸ்கான் உட்குதலைச் செய்யும் உயரிய உருவினன் எனவும் மயிரில்லா வெளிறிய முகத்தினன் எனவும் பூனைக்கண்ணன் எனவும் கொலைத்தொழில் புரியும் புலைஞன் எனவும் சொல்லப்பட்டான். அவன் இடையிடையே வலியால் வருந்தி மூர்ச்சையாகிக் கிடந்தானாக, அறிவில்லாத சனங்கள் அவனைப் பசாசுடன் பயிலும் மாந்திரீகன் என உரைத்தனர். இது நிற்க.

## அரசி இராசியத்துடின் 1236 — 1240

சுல்தான் இலத்துத்மிஷ் தன்குமாரர் அரசியல் நடாத்தும் ஆற்றல் இல்லாதவர் என உணர்ந்து தன்னரசை தன் மகள் இராசியத்துடின் என்பாளுக்கு அளித்தான். முகமதிய தலைவர்கள் அவளுடைய சகோதரன் உருக்முடின் என்னும் ஓர் காமிக்கு அரசபதவியை நல்கினர். சிலமாசங்கள் கழிந்தபின் அத் தலைவர்கள் அவனை வெறுத்து இராசியத்துடினை அரசியாக்கினர்கள். அவள் யானை யேற்றம் பயின்று போர்க்களத்துக்குச் சென்றாள். அவள் தன்னரசை நிலைநாட்டற்குத் தன்னோடு பகைத்திருந்த தலைவன் ஒருவனை நட்பாக்கி மணமுடித்தாள். இருவரும் மூவாண்டு செல்லுமுன் இந்துக்களால் கொல்லப்பட்டனர். 'தபக்தி நசரி' எழுதிய நூலாசிரியன் அவளை அரசியல் ஞானியெனப் புகழ்ந்து அவள் ஆண்மகனாகப் பிறக்கவில்லையே எனக் கவன்றான்.

## நசருடின் ஆட்சிக்காலம் 1246 — 1266

இலத்துத் மிஷ் என்பானுடைய மகன் ஒருவனும், மகன் பின் ஓர் பேரனும் அரசு செலுத்தினர். 1246 ல் இலத்துத்மிஷ் என்பவனுடைய இளைய மகன் நசருடின் அரசை வெளவி இருபது ஆண்டு ஆண்டான். சரித்திர வாசிரியன் மினுஜி சிருஜ் என்பான் அரசனின் கீழ் உத்தியோகம் பார்த்தானாகையால் தான் எழுதிய நூலை தபக்தி நசரி என அரசனின் பெய

ரால் வழங்கினான். நசருடின் தன்மனைவியின் தந்தை பல்பான் என்பவனை அரசியலை நடாத்த விட்டனன். தனக்குப் பிள்ளைகள் இல்லாமையால் பல்பானுக்கு அரசை அளித்தான்.

## பல்பான் ஆட்சிக்காலம் 1266 — 1186

பல்பான் இலதுதுத் மிஷ் என்பவனுடைய குலத்துக் குழந்தைகள் யாவரையும் கொன்று தன் வம்சத்தில் அரசை நிலைநிறுத்தினான். அவனுடைய குலத்தினர் அடிமைக் குலத்தினர் எனப்பெயர் பெற்றனர். பல்பான் நகைத்ததை ஒருவரும் கண்டிலராம். அவன் ஒற்றர் மூலம் தன் பகைவரை அறிந்து அவர்களை வேழங்களால் உழக்குவித்தான் எனவும் டெல்லியில் உலாவும் கள்வர் கூட்டத்தினரைக் கலைத்துக் கொன்றான் எனவும் இந்துக்களை இருகூறாக வெட்டித்தொலைத்தான் எனவும் எழுநூறு இந்துக்களை உயிரோடு தோலுரித்து வைக்கோலடைந்தாள் எனவும் முகமதிய நூலாசிரியன் கூறுகின்றான். கள்வர் கூட்டத்தினர் 12,000 கொல்லப்பட்டனர். நசருடின் தன்னைப் பகைத்தெழுந்த வங்கத்து மன்னனைக் கொன்று தன் இனத்தோன் ஒருவனுக்கு அரசை அளித்தான்.

## கைக்கோபன் 1286 — 1290

1286-ல் பல்பான் மூப்பெய்தி இறந்தான் பின்பு பல்பானுடைய பேரன் கைக்கோபன் அரசனானான். தலைவர்களே அவனை அரசனாகத் தெரிந்தனர். அவன் 18 ஆண்டு நிறைந்த இளைஞன். அவன் சிற்றின்பம் விழையும் காமியானான். சிறிது காலத்தில் அரச பதவியினின்றும் நீக்கப்பட்டான். 1290-ல் கைக்கோபன் கொலையுண்டானாக. அடிமைக்குலவரலாறு முற்றுப்பெற்றது. இங்ஙனம் முகமதிய படைவீரரே அரசியலை நடாத்தினர் என்பதைக் காண்க 13-ம் நூற்றாண்டிலே வடஇந்தியா முழுவதும் முகமதியரால் ஆளப்பட்டபோதிலும் மழவமும் குசரமும் இந்துக்களாலேயே ஆளப்பட்டன.

## சுலலுடின் பிரோஜ்ஷா ஆட்சிக்காலம் 1290—1296

கில்ஜி குலத்தோனொருவன் பிரோஜ்ஷா என்றும் பெயரினன் டெல்லியில் அரசனானான். அவன் சுல்தான் சலலுடின்

என்னும் பட்டம் பெற்றான். அக்காலத்திலிருந்த ஆசிரியன் சுயாடின் பராணி சலலுடின் துருக்கன் அல்லன் என மொழிந்தான். சலலுடின் அரசபதவியைப் பெற்றகாலை எழுபது வயசினன். அவன் தீவினையாளரையும் கொலைத்தொழில் அஞ்சாக் கள்வரையும் கொலை செய்யாமல் நாடு கடாத்தினான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் வற்கடம் நிகழ்ந்தது. நல் கூர்ந்த இந்துக்கள் பசியால் வருந்தி யமுனையில் விழுந்து துஞ்சினர். அக்காலத்தில் மங்கோலிய துருக்கர் இந்துச் சமபூமிகளில் சூறையாடினர். சுல்தான் பணம் கொடுத்து மங்கோலியரை நட்பாக்கினான். மங்கோலியர் சிலர் தம் நாடு திரும்பினர்; சிலர் இந்து நாடுகளில் குடியேறி முகமதியராயினர். இம் மங்கோலிய துருக்கர் ஔணச் சாதியார்.

## அலாவுடின் 1296—1316

1294-ல் சலலுடின் மருமகன் அலாவுடின் மழவர்மீது படையெடுத்தும் தேவகிரி யாதவர்குலத்து இராமச் சந்திரனிடம் எலிச்புரம் என்னும் ஊரைப் பறித்தும் ஆண்டு, 1296-ல் டெல்லிக்குச் சென்று அரசவையில் இருந்த மாமன் சலலுடினுடைய தலையைக் கொய்தான். இந்தியாவில் பிரயாணஞ் செய்த மேலாபிரிக்கன் இபின் பற்றூற்று அலாவுடினைச் செங்கோலன் எனக் கூறினன். அக் கூற்றுப் பிழையானது. அலாவுடினைக் கொலைத் தொழில் புரியும் புலைஞன் என சியாவுடின் பாராணி எழுதியிருத்தலை அறிக. அலாவுடினைக் கொல்லுதற்குப் பலர் பல முறை சூழ்ச்சி செய்தனர். அவன் ஆண்ட காலத்தில் மங்கோலியர் சூறை யாடற்கு அறுமுறை இந்தியாவினுள் நுழைந்தனர். கி. பி. 130‌‌‌-ல் மங்கோலியர் பெரும் தொகையினர் வந்து முகமதியருடைய தலை நகராகிய டெல்லியை இரு மாசம் சூழ்ந்து நின்று ஏகினர். 1305-ல் மங்கோலியர் மேற்கு நாடுகளில் சூறையாடினர். 1316-ல் தை மாசம் அலாவுடின் பிணியால் இறந்தான். அவன் பிணியால் வருந்திய பொழுது அவனுடைய நண்பன் மாலிக்கபூர் அவனைக் கொன்றான் எனவும் சிலர் கூறுவர்.

அலாவுடின் என்பவனுடைய படைத்தலைவன் மாலிக்கபூர் என்னும் ஓர் வித்திலன் 1311-ம் தக்கண தேயத்தின்மீது

படை யெடுத்தான். அவன் தேவகிரி, ஒய்சளம் துவார சமுத்திரம் என்னும் நாடுகளில் சூறையாடினன். முகமதியர் சித்தூரைத் தாக்க அவ்வூர் இராச புத்திரர் தம் மனைவி மக்களோடு தீப் பாய்ந்து துஞ்சினர். மாலிக்கபூரின் வெற்றி களைக் கேள்வியுற்று அலாவுடின் பெரு மகிழ்ச்சியடைந்தான். அவன் இந்துக்களை முகமதியராக்க எண்ணினன். முகமதியர் பலர் அவ் வெண்ணம் கை கூடாதெனத் தடுத்தனர். அலாவு டின் இந்துக் குடிகளை வருத்திப் பறிக்கக் கூடிய பொருள் களைப் பறிக்கும்படி ஏவினன். பயிர் நிலங்களில் இரண்டில் ஒரு பங்கு வருமானம் பெற்றான். இந்துக்களை வறியவராக்கி அவர்களை அடக்கலாமென எண்ணினன். அந்நோக் கத்துடன் இந்துக்கள் சிறு பிழை செய்தாலும் உரைக் கொணுத் தண்டனை விதித்தான். ஒற்றரை ஏவிச் செல்வரை அறிந்து பொருள் வௌவினன். அவன் புதிய டெல்லி யொன்று கட்டிச் சீரி எனப் பெயரிட்டான். அலாவுடின் நகரெடுக்கு முன் குருதி தெளித்தல் நல்ல நிமித்தமாகுமென எண்ணி, முகமதிய விருத்தர் பலரைத் தாடியால் பற்றி இழுத்துக் கொன்று அவர்களின் உதிரத்தைப் பூமியில் தெளித்தான். அலாவுடின் கல்லா மூடனாயினும் வயசினனாயபின் பார்சிய மொழியைப் பயின்றான். அவனுடைய அவையில் அமீர்குஷ்ரு என்னும் வரலாற்றாசிரியன் இருந்தான்.

## குற்பிடின் என்னும் முபார்க்கான் ஆட்சிக்காலம் 1316 — 1320

அலாவுடின் மரித்தானாக மாலிக்கபூர் அவனுடைய குடும் பத்தினர் யாவரையும் சிறையிலிட்டுப் பலரைக் கண்கெடுத்து அவயவம் ஒடித்துக் கொன்றான். அலாவுடினுடைய சிறு குழந்தை ஒருவனை மாத்திரம் கொல்லாது அரசனாக்கித் தன் னதிகாரத்தை நாட்டினன். 35 நாள் செல்லுமுன் கபூரைப் படைவீரர் கொன்று குற்பிடின் என்பவனைச் சிறையிலிருந்து எடுத்து அரசனெனத் தொழுதனர். குற்பிடின் அலாவுடின் என்பவனுடைய மகன். அவன் ஒரு எளிய தூர்த்தன். அவன் ஆசன் என்னும் கீழ்க்குல இளைஞன் ஒருவனைக் காத லித்துக் குஷ்ருகான் என அழைத்தான். குற்புடின் கூத்தரோடு

கூடிக் குடித்து வெறித்துத் திரிந்து இன்னியம் இயம்பக்கணி கையர் ஆடக் காமக் கிழத்தியரோடு கூடிக்களித்தான். அவன் தன்னைத் தேவகிரி இந்துமன்னன் அரிபால்தேயோ பகைத்துப் படைதொட்டானாக அவனை உயிரோடு தோலுரிப்பித்தான். குற்பிடின் தனது இந்து மனைவியைத் தான் காதலித்த ஆதன் என்னும் குஷ்ருவுக்கு அளித்தான். குற்புடின் இந்துக்களைச் சார்ந்தானாக காஜி மாலிக் என்னும் துருக்கன் அவனைக் கொன்றான்.

## கியாசுடின்துக்லாக் ஆட்சிகாலம் 1311 — 1315

முகமதியத் தலைவர்கள் காஜிமாலிக் என்பவனை மன்னனாகத் தெரிந்தனர். 1321-ல் காஜிமாலிக் அரசபதவியைப்பெற்று கியாசுடின் துக்லாக் என்னும் நாமத்தைத் தரித்தான். அவனுடைய தந்தை பல்பானுடைய அடிமைகளில் ஒருவனாம். காசிமாலிக் என்பவனின் மகன் யூனாக்கான் ஓரங்கல் என்னும் அரணை முற்றுகையிட்டு இருந்து தன்படையில் நோய் பெருகியதாக ஏகினான். பின்பு பிறிதோர் படையோடு சென்று ஓரங்கலலை முற்றுகையிட்டுப் பிடித்தான். யூனாக்கான் தன் தந்தையைக் கொல்ல எண்ணி யமுனைக் கரையில் ஓர் பந்தலை அமைத்துத் தந்தையை உபசாரத்தோடு வரவேற்றான். தன் யானைத் தொகுதியைச் சபையோர்க்குக் காட்டுவான் போல் பந்தருள் கொணர்ந்தான். யானைகள் ஒன்றுடன் ஒன்றுமோதப் பந்தல் விழ மன்னன் துக்லாக் மரணமடைந்தான். யூனாக்கான் துக்க சாகரத்தில் மூழ்கிடவன்போல் நடித்தான். இபின் பற்றுற்றாவும் இச்சம்பவம் நிகழ்ந்ததென உரைத்தனன்.

## முகம்மது பின் துக்லாக் ஆட்சிக்காலம் 1325 — 1361

யூனாக்கான் 1325-ல் முகமது பின் துக்லாக் என்னும் நாமம் புனைந்து 26 ஆண்டு கொடுங்கோலோச்சினான். அவனுடைய சபையில் இபின்பற்றுற்றா 1347 வரையும் இருந்து பின்னர் சீனத்திற்குச் செல்லும் வழியில் கலமுடையக் கடல் நீந்தித் தப்பிக்கரையேறி தன் தாய்நாட்டுக்குப் பிரயாணம் செய்தான். ஆசிரியன் பாராணி முகமது பின் துச்லாக்கைப் புகழ்ந்து ஓர்வரலாற்றை எழுதினன். அவ்வரலாறு முகமது பின் துக்

லாக் வைத்தியசாலைகளும் அன்ன சத்திரங்களும் கட்டினான் எனவும், கற்றறிந்தோர் முகமதியராயின் கொடையளித்தான் எனவும், தானே அராபி பார்சிய மொழிகளைக் கற்றான் எனவும் கணிதநூல்களும் சமயநூல்களும் வாசித்தான் எனவும், ஒருபோதும் மதுபானஞ் செய்யாது இருந்து முகமதிய மார்க்க நீதிப்படி நீதி செலுத்தினான் எனவும் கூறா நிற்கும். ஆனால் அவன் இந்துக்களைத் துன்புறுதினான் எனத் தெரியவருகிறது.

1326-ல் குடிகள் சிலர் அவனுடைய அரசியலைக் கண்டித்துச் சில கடிதங்களை அரசவையில் இட்டனராக அவன் டெல்கியை அழிக்க எண்ணினான். அவன் தேவகிரியைத் தலைநகராக்கும் நோக்கத்துடன் டெல்கியை அழிக்க எண்ணினான் என்பது பொருந்தும். குடிகளைக்கூவி காணிகளை மதித்துப் பொருள் கொடுத்து வேறு ஊர்களுக்குப் போகும்படி கட்டளையிட்டான். மூடன் ஒருவனும் குருடன் ஒருவனும் நகரைவிட்டு நீங்கவில்லையெனவும் அவ்விருவரையும் அரசன் தெருவழியே இழுத்துத் திரிந்தான் எனவும் கட்டுரையுண்டு. அரசன் தேவகிரியைத் தலைநகராக்கித் தோலாத்பாத் எனப் பெயரிட்டான். பாராணி பற்றாற்றா என்னும் இருவரும் இக் கதையைக் கூறுகின்றனர்.

அரசன் பார்சியரோடு அமர் புரிந்து தோல்வியடைந்தான். அரசன், பொருட்சாலையில் காசு குறைய, யாது செய்யலாமென ஆலோசித்தான். சீன வேந்தன் கடுதாசிக் காசு வழங்கினான் என்பதைக் கேள்வியுற்று மகிழ்ந்து வெள்ளிக்காசுக்குப் பதிலாகச் செப்புக் காசுகளை வழங்கும்படி கற்பித்தான். இந்துக்கள் மறைவாகச் செப்புக்காசு அச்சிடத் தொடங்கினராகச் செப்புக் காசுகளைப் பெற்றுக் குவித்து செப்புக்காசு வழங்கப்படாதென்றான். அவன் 100,000 வீரரைக் கூவி குஷ்ரு மாலிக் என்பவனைத் தலைவனாக நியமித்து நீர்வாளத்தூடாகச் சீனம் புக்குப் போர் புரியும்படி ஏவினன். படை பனியிலும் மழையிலும் அகப்பட்டு அழிவெய்திய செய்தியைப் பதின்மர் தப்பி வந்து அறிவித்தனர்.

அரசன் முகமது பின் துக்லாக் புலைஞன் என்பதற்கு ஐயமில்லை. அரசனுடைய மருமகன் பகைவனாக அவனைப்

பெண்களின் முன்னிலையில் துப்பி அவமானப் படுத்தித் தோலு ரிப்பித்தான். அவருடைய இறைச்சியைச் சமைப்பித்து அவற்றை அவனுடைய மனைவியையும் பிள்ளைகளையும் தின்னும்படி ஏவினான். இபின் பற்றூற்ரு இது உண்மையென உரைத்தனன்.

முகமது பின் துக்லாக் ஆண்டகாலத்தில் குசரம் மழவம் சிந்து பாஞ்சாலை அங்கம் வங்கம் மரதம் கங்கம் என்னும் நாடுகள் எல்லாம் முகமதியரால் ஆளப்பட்டன. இந்துக் குடிகள் அரசிறை இறுக்க முடியாது ஊரை விட்டோடினர். ஊரைவிட்டுப் போவாரையும் அவன் தொடர்ந்து கொன்றான்.

## உபராசர்

வங்கத்திலாண்ட முகமதிய மன்னர் டெல்லியில் ஆளும் சுல்தான்களுக்கு அமைந்தே ஆண்டனர். டெல்லி வேந்தர் தம் குடும்பத்தினரையே உபராசராக்கிய போதிலும் வங்க மன்னர் பலமுறை டெல்லி வேந்தருக்கு எதிராக எழுந்து சுவாதீனம் பெற முயன்றனர். 1338-ல் முகமது பின் துக்லாக் என்பா னோடு வங்கத்து உபராசன் பகருடின் இகலாகித்தன் சுதந் தரத்தை நாட்டினான். 1340-ல் தக்கணத் தேசாதிபதி சயித் கான் சுவாதீனம் பெற எண்ணி இகலாயினன். துக்லாக் அவனைத் தண்டித்தற்குப் படையெடுத்தான். அப்படை பேதி நோயால் மாண்டது. அரசனும் நோயால் பிடிக்கப் பட்டுத் தப்பினான்.

1336-ல் விசய நகரில் கன்னட தெலுங்கர் தலையெடுத் தனர். பத்தாண்டில் விசய நகரம் வலிமிக்க தாயிற்று. 1346-ல் விசயநகர மன்னர் முகமதியரைத் தென்னாடு புகவிடாமல் காத்தனர். துக்லாக் தென்னாடு செல்ல முடியாமல் இருந்தான். துக்லாக்கு எகிப்திய முகமதிய மன்னனுக்குத் தூது அனுப்பி னான். எகிப்திய மன்னனைக் 'காலிபு' ப் பட்டத்தைச் சூடி தன்னை ஆசிர்வதிக்கும்படி கேட்டான். அவன் பின் அரசாண்ட பிரோஸ்கானும் எகிப்திய மன்னனின் நட்பைப் பெற விழைந்து அவனைக் 'காலிபு' என வணங்கினான். பல விடங்களில் உப ராசர்கள் பகையாயினராக, துக்லாக் சிந்து தேயத்தோரை

அடக்குவான் சென்று அவண் இருந்துழி சுர நோயால் பீடிக்கப்பட்டிறந்தான்.

### சுல்தான் வேந்தரின் அரசியல்

சுல்தான்களின் கொடுங்கோன்மையின் பயனாக வானம் பிழைத்தது; நாடுகள் பஞ்சம் அடைந்தன; வயல்கள் பாழாயின; மாடுகள் இறந்தன. டெல்லிச் சுல்தான்கள் முகமதிய சமயாபிமானிகள் ஆகலின் தம் சமயத்தைப் பரப்ப எண்ணி இந்துக்களை வருத்தி இடும்பை பல செய்தனர். பிற மதத்தினருக்கு முகமதியர் இரக்கங் காட்டவில்லை. முகமதிய சமய குருமார் அரசவையில் மிகவும் மரியாதை பெற்றனர். அரசனுடைய மாளிகை மூன்று வாயில் உடையது. முதலாம் வாயிலில் தண்டச் சேவகர் இருந்து கொலைக்குத் தீர்க்கப்பட்டோரைக் கொன்றனர். கொல்லப்பட்டோரின் உடம்புகள் மூன்று நாள் கழிந்தபின் கிடங்கில் எறியப்படும். இனத்தவரை அவ்வுடம்புகளை எடுத்துத் தகனஞ் செய்யவிடவில்லை. வெளிவாயிலில் பிரேதங்கள் குவிந்தன. முதலாம் வாயிலைக் கடந்து இரண்டாம் வாயில் வழியாக பெரிய மண்டபத்தை அடையலாம். உள் வாயிலில் அமைச்சரும் உத்தியோகத்தரும் இருந்து சுல்தானுடைய அனுமதிபெற்று நேர்முகமாகக் காண விரும்புவோரைக் கூட்டிச் செல்வர். செபம் முடிந்தபின் சுல்தான் ஆயிரங்கால் மண்டபத்தில் அரசு கட்டிலில் வீற்றிருந்து முறை குறை வேண்டுவோரைக் காண்பான்.

சுல்தான் நேர்முகமாகக் காண விரும்புவோருள் முகமதிய சமய நீதி வல்லோருக்கே முதல் உத்தரவு அளிக்கப்படும். அவர்க்குப்பின் அரசியல் வல்லோருக்கும் சமய போதகர்க்கும் படைத்தலைவர்க்கும் முறையே ஒருவர் பின் ஒருவராகக் காட்சியளித்தல் மரபு. சுல்தான்கள் சிலர் இந்து மன்னருடைய மகளிரைத் தம் மனைவியில் ஆடல் பாடல் செய்யும் கணிகையராக வைத்திருந்தனர். முகமதியருடைய திருவிழாக்காலத்தில் பெரியதோர் பொற்பாத்திரம் எடுக்கப்படும். அப்பாத்திரத்துள் முகமதியர் சிலர் இருந்து வாசனைத் திரவியங்களை எரிப்பர். சபையோர்மீது அத்தர் முதலிய நறுமணங்கமழும் நீரைத் தெளித்தல் வழக்கம். சுல்தான் யானை ஊர்ந்து மாளிகை வலம் வரும் பொழுது சமுகமளிக்கும் சனங்கள் ரோசா நீர்த்தீர்த்தம்

பெறுவர். உலாவும்போது சுல்தான் வெள்ளிக்காசு வீசுதல் வழக்கம், சுல்தான் துக்லாக் சபை மண்டபத்தில் இருபது விருந்தினரோடு உண்ணுதல் உண்டு. அப்பம் சோறு இறைச்சி என்பவற்றை அவன் விரும்பி உண்டனன்.

சுல்தான்களுடைய வரலாறுகளால் சுல்தான்களும் அவர்களுடைய உபராசாக்களும் இந்துக்குடிகளை நனிவருத்தினர் எனக்கருதப்படும். முகமதியருடைய ஆணையை ஏற்றிருந்த இந்துக்குறுநில மன்னரும் தம் குடிகளை அரசிறை அதிகம் பெற்று வருத்தினர். அரசாங்கத்தினருடைய சமயம் முகமதிய சமயமாதலாலும் இந்து சமயத்தினரைச் சுல்தான்கள் துன்புறுத்தியமையாலும் இந்துக்கள் பலர் முகமதியராயினர். இந்துக்கல்வியும் கலையும் சீர்கெட்டன. இந்துமொழிகளும் அந்நியமொழிகளுடன் கலந்து திரிபடைந்தன இந்து நாடுகளில் அரசியற் குழப்பமும் சமயக்குழப்பமும் பிணியும் குடிகொண்டன; களவும் கொலையும் மிகுந்தன; நல்லொழுக்கமும் ஆசாரமும் தேசபக்தியும் கடவுட்பக்தியும் அற்றன.

## பிரோஸ்ஷா ஆட்சிக்காலம் 1351—1388

சிந்து தேயத்தில் சுல்தான் முகமது பின் துக்லாக் மடிய, படை தலைவரின்றி இருந்தது. சிந்து தேயத்தோரும் மங்கோலியத் துருக்கரும் கள்வர் கூட்டத்தினரும் இந்து தேய முகமதியரோடு அமர்க் கெழுந்தனர். அத்தருணத்தில் முகமது பின் துக்லாக் என்பவனின் மைத்துனன் பிரோஸ்ஷா பலர் தூண்டினராக அரச பதவியை ஏற்றான். பிரோஸ்ஷா இறந்தான் என அலர் பரம்பியது. டெல்லியில் இருந்த குறுநில மன்னன் குவாஜயகான் சுல்தானுடைய முடி தனக்கு உரிய தென்றான். பிரோஸ்ஷா டெல்லி சென்று அவனைக் கொன்று தன் ஆணையைச் செலுத்தினான். பின்பு பிரோஸ்ஷா 90,000 இவுளிகளோடும் 480 வேழங்களோடும் சிந்து தேயத்தோரை அடக்குவான் சென்று வழி தெரியாது அலைந்து திரிந்து டெல்லியை அடைந்தான். பிரோஸ்ஷா போர்ப் பயிற்சி யில்லாதவன். அவன் உவைன் குடித்தலிலும் வேட்டையாடலிலும் இன்பம் விழைந்தானுயினும் சமய பக்தி யுடையவன் என்பர். அவன் சரித்திரம் படித்தலிலும் கோட்டம் கட்டுதலிலும் ஆசை

மிகுந்தவன். அவன் அரண்களும் முகமதியப் பள்ளிகளும் நீர் வாய்க்கால்களும் பாடசாலைகளும் கட்டுவித்தான்.

கான்யகான் என்னும் அமைச்சன் அரசியலை நடத்தினான். அவன் இந்து மதத்திலிருந்து வழுவியவனாயினும், முகமதிய சுல்தான் அவனை அமைச்சனாக்கினான். அமைச்சருக்கு வேதனமாகச் சில ஊர்களின் அரசிறை கொடுக்கப்பட்டது. பிரோஸ்ஷா செங்கோலோச்சினன் எனச் சியாடின் பாரானி மொழிந்தனன். குடிகள் செல்வராயும் பெண்கள் அணிகல னுடையராயும் காணப்பட்டனரெனக் கூறினன். பிரோஸ்ஷா என்பவனுடைய அவையில் பாரானி இருந்தமையால், இது முகமன் கூறும் நோக்கமாக எழுதப்பட்டதென ஒழிக. அன்றி முகமதியர் இந்துக் குடிகளை வருத்திச் செல்வமுற்று வாழ்ந் திருக்கலாம் எனினும் பொருந்தும். அரசாங்கத்தோர் இந்துக் குடிகளின் பசுக்களையும் கவர்ந்தனர். குடிகள் பசுக்கள் பல வைத்திருந்தால் அவற்றை இழந்தனர். இந்துக்குடும்பம் ஒன்று ஒரு பசுவே வளர்க்கலாம். குடிகளை அடிமைகளாக விற்றல் வழக்கம். 12,000 தொழிலாளர் அடிமையாகினர். 40,000 அடிமைகள் பிரோஸ்ஷா என்பவனின் மாளிகையில் காவல் புரிந்தனர். தலைநகரில் பல்வகைப் பணி செய்வோருமாக 180,000 அடிமைகள் இருந்தனர் இவ் வடிமைகள் எல்லோரும் முகமதிய சமயத்தினராயினர். பிரோஸ்ஷா செய்த ஒரு நன்மை யாதெனின் விசாரணையில் இருப்பாரைத் துன்புறுத்தப்படா தென்பதே. அவனுடைய முன்னோராகிய டெல்லி வேந்தர் காலத்தில், கை கால் ஒடித்தல், காது மூக்கரிதல், கண் தோண் டல், தீக்காய்ச்சுதல், நகத்துள் ஊசியேற்றுதல் பாதங்களில் ஆணி அறைதல் இரு கூறாக வாளால் வெட்டுதல் ஈயம் உருக் கித் தொண்டையில் வார்த்தல் என்னும் அநாகரிகமான தண் டனைகள் விதிக்கப்பட்டன. அவற்றினைப் பிரோஸ்ஷா கண் டித்தான்.

முகமதியர் சொன்னியர், சீயர் (ஷீயர்) என இருவகுப் பினராயினர். ஷீயர் தம் ஏனைய சமயகுரவரோடு ஆலி என் பவனையும் குரவன் என வணங்குபவர். சொன்னியர் ஆலியைக் குரவராகக் கொள்ளவில்லை. பிரோஸ்ஷா சொன்னியமதத்தின

ஞுதலால், ஷீயமதமுறைப்படி வழிபடக் கூடாதெனக் கட்டளையிட்டான். முகமது ஒழியவேறு தீர்க்கதரிசிகள் இல்லையென்பது உண்மை மதமாகலின், ஷீயர் மாடி என்னும் தீர்க்கதரிசிப்பட்டம் உடையராயிருந்ததால் கொல்லப்பட்டனர்.

ஷீயரை வருத்திய சொன்னியர் இந்துக்களைத் துன்புறுத்தாது விடுவாரா? இந்துக்கோயில் கட்டப்படாதென முரசறையப்பட்டது. ஆராதனைக்குரிய கிரியைகளைச் செய்யும் பிராமணர்கள் உயிரோடே தீயில் இடப்பட்டனர். இந்துமதத்தினர் இஸ்லாம் மதத்தைத் தழுவினுல் அரசிறை இறுக்கவேண்டியதில்லை யெனப் பிரோஸ்ஷா அறிவிக்க இந்துக்கள் பெருந்தொகையினர் முகமதியராயினர். பிராமணர் தம்மிடம் அரசிறை பெறப்படாதென மாளிகை வாயிலில் உண்ணு விரதம் இருந்தனர். அரசன் மனமிரங்கி அரசிறை சிறிது குறைக்கப்படுமென அறிவித்தான். 1388-ல் பிரோஸ் மூப்பெய்தி மரிக்கக் குறுநிலமன்னர் சுவாதீனமாயினர். பிரோஸ் என்பானுடைய பேரனும் சுற்றத்தான் ஒருவனும் டெல்லியில் அரசாள எண்ணிக் கலகம் விளைத்தனர். முகமதியச் சிற்றரசர்கள் கலகப்பட்டு ஒருவரை ஒருவர் கொன்றனர்.

### அந்நியர் ஆட்சியால் விளைந்த பலாபலன்

சுல்தான்கள் பலர் இந்துக்களை அரசியலை நடாத்த விட்டுத் தாம் திறைபெற்றிருந்தனர். திறை நாட்டு அரசு கொடுங்கோலோ செங்கோலோ என்பதைப்பற்றிச் சுல்தான் சிறிதும் சிந்தித்திலர். இந்துக்கள் அருருதலைப்பார்த்து முகமதியர் கவலைப்பட்டிலர். இந்துக்கள் உணவின்றித் துயருற்று உருச்சிறுத்தனர். முகமதியர் பிறர்பொருள் வெளவி உண்டுகளித்தனராகலின் பெரிய உருவினராயினர். இந்துக்கள் சமபூமிகளில் வசித்து நாகரிகமுறையாக வாழ்ந்தனராகலின் உருச்சிறுத்தனர் எனவும் முகமதியர் மலைநாடுகளில் வசித்து இருந்து இந்து நாடுகளில் இறங்கினராகலின் உருப்பெருத்தனர் எனவும் கூறுதலும் ஒக்கும். வடபுற மலைகளிலிருந்து முகமதியர் ஆண்டுதோறும் இந்து நாடுகளில் குடியேறினராகையாலும் இந்துக்களை முகமதிய மதத்தைத் தழுவச் செய்தனராகையாலும் முகமதிய மதத்தினர் மிகப்பெருகினர். இனி முகமதியர்

மனைவியர் பலரை மணமுடித்தனராகையாலும் பெருகினர் எனலாம். சாக்கியரும் அவுணரும் இந்துக்களோடு ஒன்றாகக் கலந்தமாதிரி முகமதியர் இந்துக்களோடு கலக்கவில்லை. முகமதியர் இந்துக்களை எழுத்தாளராயும் கணக்கராயும் பணியாளராயும் ஏற்படுத்தினராகலின், இந்துக்கொள்கைகளைச் சிறிது அறியத் தொடங்கினர். இங்ஙனம் காலஞ் செல்லச் செல்ல முகமதியர் இந்துக்களின் ஆசாரங்களைப் பற்றத்தொடங்கினர். முகமதியர் இந்துமொழியைக் கற்கத் தொடங்கி இந்தியும் பார்ச்சியமும் கலந்த உருடுமொழியைப் பேசுகின்றனர்.

### கபீர்

முகமதியர் இருநூறு வருடங்கள் ஆண்டும் இந்துக்களின் சாதி வருணங்களைக் குலைக்க முடியாதிருந்தனர். 14-ம் நூற்றாண்டிலே இராமானந்தர் என்னும் தென்னிந்தியர் ஒருவர் இந்திமொழியில் உபதேசஞ் செய்து தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென வற்புறுத்தினர். அவர் பன்னிரண்டு சிஷ்யரைத் தெரிந்தனர். அவருடைய சிஷ்யருள் ஓர் இராச புத்திரனும் ஒரு நாவிதனும் ஒரு முகமதியனும் ஒரு நெசவுக்காரனும் இருந்தனர். அவருடைய முகமதியச் சிஷ்யன்தான் கபீர் என்பவர். கபீர் தீண்டாமை என்னும் சாதியாசாரத்தையும் படிமவழிபாட்டையும் கண்டித்தனர். கபீருடைய மதத்தினர் கடவுள் அல்லா இராமர் எனப் பலர் அன்றி ஒருவரென்றும் கடவுளைத் தரிசித்தற்கும் தொழுதற்கும் மெக்காவுக்கும் கைலாயத்துக்கும் போகவேண்டியதில்லையென்றும் கடவுளை அறிதற்குக் கிரியைகள் தேவையில்லை என்றும் உபதேசித்தனர். சீக்கியர் குரு நானக் என்பவர் கபீருடைய உரைகளைச் சிந்தித்துத் தெளிந்தனர் என்ப.

## 2-ம் பாடம்: சிற்றரசுகள்

### தீமூர்

கி. பி. 1340 தொடக்கம் 1525 ஈறானகாலம் அரசியற் குழப்பம் மிகும் காலமாயிற்று. அக்காலத்திருந்த குறுநில மன்னரின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுமுன் அமீர் தீமூர் என்

பவனின் வரலாற்றைக் கூறுவாம்: தீமூர் துருக்க நாடாகிய சாமர்க்கண்டில் 1336-ல் பிறந்தான். அவன் சிற்றரசனுயிருந்து தன் ராச்சியத்தைப் பெருக்கி ஆழி வேந்தனுயினன். அவன் அராபியரையும், மங்கோலியரையும் அட்டு வெற்றி வேற்கையனுகி மேற்கே பார்சியா, சின்னுசியா என்னும் நாடுகளிலும் கிழக்கே சிதியா, மங்கோலியா, ராட்டறி என்னும் துருக்கி நாடுகளிலும் தனது ஆணையைச் செலுத்தினுன். தீமூர் சீனரை முகமதியராக்க எண்ணினுன். 1405-ல் அவன் இறந்தமையால் சீனர் தப்பினர். தீமூர் இந்தியருடைய செல்வத்தைப் பற்றியும் அரசியற் குழப்பங்களைப் பற்றியுங் கேள்விப்பட்டு இந்து தேயத்துட் புகுந்தான். தீமூர் 90,000 புரவிப் படையோடு இந்து நதியைக் கடந்து 1398-ல் டெல்லி நகருள் புகுந்தான். அவன் 10,000 சனங்களைக் கொன்று குவித்தானெனவும் கலைஞரையும், வினைஞரையும் சிறையிட்டானெனவும் யமுனைக் கரைவழிச் சென்று சூறையாடிய பின் தன் நாடு திரும்பினுனெனவுந் தெரிகிறது. தீமூரின் வரலாற்றினை துருக்கரின் வரலாற்றின் கண் காண்க.

### பாலல் கான் லோடி

தீமூர் ஏகியபின் பாஞ்சாலே, அபுகானிஸ்தானம் என்னும் நாடுகளில் அரசுபுரிந்திருந்த பாலல்கான் லோடி என்னும் அபுகான் 1450-ல் டெல்லியில் சூறையாடி அரசை வௌவினுன். அவன் தான் இந்து நாட்டில் முதல் ஆண்ட பட்டாணி. அவன் மகன் நிசாம் கான் தன்னைச் சுல்தான் சிக்காந்தர்க் காஜி என அழைக்கும்படி அறிவித்தான். அவன் குரான் என்னும் முகமதிய சமயநூலை வாசித்தலிலும் மருத்துநூல் கற்றலிலும் விருப்பமுடையவன். அவன் இந்துக்களைத் துன்புறுத்தினுன். மதுராவிலுள்ள கோவில்களை யிடித்தான். அந்நகரக் குடிகள் மிக வருந்தினர். 1505-ல் வடவிந்தியர் பூகம்பத்தால் இடருற்றனர். 1517-ல் நிசாம் கான் மரணமடைந்தானுக இந்துக்கள் கொடுங்கோலன் இறந்தானென மகிழ்ந்தனர்.

### சயபுரம்

சயபுரத்தில் ஓர் முகமதியச் சிற்றரசு 1394-ல் முகமது பின் துக்லாக் என்னும் சுல்தான் ஆண்ட காலத்தில் நாட்டப்பட்

டது. குவாசகான் என்னும் வித்திலன் டெல்லி வேந்தனின் கீழ் குறுநில மன்னனாக ஆண்டனன். தீமூர் வந்த காலத்தில் சயபுரம் சுவாதீனம் ஆயிற்று 1400,ல் இபிரகாம் ஷா அரசாண்டான். 1476-ல் ஆண்டிருந்த மன்னன் 'பாலல்கான் லோடியால்' புடைக்கப்பட்டான். சயபுர மன்னர் அராபி மொழியையும் பார்சிய மொழியையும் ஓம்பினர்.

## வங்கம்

அலாடின் உசெயின் ஷா என்பவன் ஓர் அராபி. அவன் சாம்சுடின் என்னும் கொடுங்கோலனுடைய ஆமைச்சனாயிருந்தவன். முசாபர்ஷா என்பவன் சாம்சுடின் என்னும் கொடுங்கோலனைக் கொன்று அலாடினை அரசனாக்கினான். அலாடின் 24 ஆண்டு செங்கோலோச்சினான். அவன் பின் நுஸ்ராத்ஷா தன் சுற்றத்தாரை நேசித்து அயல் வேந்தரோடு நட்பாயிருந்தான். அக்காலத்தில் சிக்காந்தர்கான் என்னும் சுல்தான் அதீனாப் பள்ளியைக் கட்டுவித்தான். அப்பள்ளி 400 சிறு கோபுரங்களுடையது. 1346-ல் பிறந்த 'கிரித்துவாசர்' இராமாயணத்தை வங்காள மொழியிற் பெயர்த்தார்.

## காசுமீரம்

இராசதரங்கினி காசுமீரவரலாற்றைக் கூறும். காசுமீரம் சேலநதிக்கும் இந்து நதிக்குமிடையிலுள்ள நாடு. அது 85 மைல் நீளமுடையது. தீமூர் வந்த காலத்தில் காசுமீரத்தில் 1386-ல் சாம்சுடின் என்பவன் அரசாண்டான். அவன் மகன் சிக்காந்தர் இந்துக்கோயில்களை யுடைத்துப் பிராமணரைக் கொன்றான். அவன் குலத்து 8-ம் மன்னன் உசயின் அபிடின் இந்துக்களைத் துன்புறுத்தவில்லை. அவன் 1417 முதல் 1467 வரையும் ஆண்டனன். அவன் பசுக்கொலை செய்யக்கூடா தெனக் கட்டளையிட்டான். அவன் இசைவல்லோரையும் ஓவியரையும் புரந்தான். அவன் ஒரு மனைவியை மாத்திரம் மணம் செய்திருந்தான்.

## மழவம்

மழவநாட்டில் சுல்தான் ஷியபுடின் என்னும் குறுநில மன்னன் தீமூர் வந்தகாலத்தில் சுவாதீனமாயிருந்தான். அவனுடைய தலைநகர் தார் என்பது, அது போசராசரால் நாட்டப்பட்டது. 'கோசாங்ஷா' 'மண்டு' என்னும் நகரைத் தலைநகராக்கினான். அவன் மகன் முகமது III குடிகாரன். கில்ஜி என்னும் அமைச்சன் அவனை நஞ்சூட்டிக் கொன்று அரச பதவியைப் பெற்று, இந்துக்களும் முகமதியரும் ஒப்ப, நீதி செலுத்தி அரசு புரிந்தான். கில்ஜியும் சித்தூர் ராணாவும் பொருது இருவரும் தாம் வெற்றியடைந்தனர் என வெற்றித் தூண் எழுப்பினர். கில்ஜி இறந்தபின் ஆண்ட மன்னன் கியாசுடின் தன் மகன் நசருடின் என்பவனால் நஞ்சூட்டப்பட்டான். பிற்காலத்திருந்த துருக்க வேந்தன் யகங்கிர் தான் தீயோன் நசருடின் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தைப்பார்த்துக் காலால் உதைத்துக் கட்டிடத்தை உடைத்து எலும்புகளை எடுத்து வீசினன் என எழுதினன். முகமதியர் கட்டிய மாண்டு என்னும் நகர் 25 மைல் நீளமான மதில் உடைந்து, அந்நகர் பாழூராயிற்று.

## குசரம்

1400-ல் குசர மன்னன் டெல்கிச் சுல்தானின் ஏவலைப் பொருட்படுத்தவில்லை. மன்னன் அலவ்கான் தன் பாட்டனை நஞ்சூட்டிக் கொன்று 1411 வரையும் சுவாதீனமாயிருந்தான். அவன் அசுவால் என்னும் நகரை ஆமதாபாத் எனப் பெயரிட்டான். அவனுடைய பேரன் 'மாமத்பிகரா' 52 யாண்டு ஆண்டனன். மாமத்பிகரா துருக்கருடைய உதவியைப் பெற்றுப் போத்துக்கேயரைத் தனது துறைகளிலிருந்து கலைத்தான். போத்துக்கேயருடைய கப்பல் ஒன்று உடைபட்டதாயினும் முகமதியருடைய கப்பற் படையே தோல்வியடைந்தது. போத்துக்கேயர் கோவையை 1510-ல் பிடித்தனர். இதுநிற்க, இத்தாலியப் பிரயாணி, லுடுவிக்கோ-டி-வார்தேமா குசரச் சுல்தான் நீண்ட வீசை வளர்த்துத் தலைமேல் முடிந்தனன் எனவும் அவனுடைய தாடி அரையளவும் நீண்டதெனவும் வருணித்தான். இச்சுல்தான் போசனப் பிரியனும். இவனுடைய பேரன் பகதூர்ஷா போத்துக்கேயரால் கொல்லப்பட்டான்.

## பாமினி ராச்சியம்

தக்கணம் என்பது தென்பீடபூமி: தக்கண தேயத்தில் ஆசன் என்னும் சாபார்க்கான் 1347-ல் அலாடின் என நாமம் புனைந்து சுவாதீனமாயினன். அவனுடைய தலைநகர் குலபர்க் என்னும் ஆசனபாத். அவன்பின் 1397 முதல் 1422 வரையும் அரசுபுரிந்த முகமதுஷா I விசய நகரவேந்தரோடு அமர் புரிந்தான். அப்போரில் 50,000 கன்னடர் கொல்லப்பட்டனராம். முகமதுஷா 8000 கள்வரைக் கொன்றனும். அவன் 3000 யானைகள் வைத்திருந்தான் என்ப. முதலாம் முகமதுஷா என்பவனின் இளைய சகோதரனுடைய மகன் பிரோஸ் என்பான் ஆண்டகாலத்தில் 1376-ல் துர்க்க தேவி என்னும் பஞ்சம் மகாராட்டிரத்தைப் பீடித்தது. அப்பஞ்சம் 12 ஆண்டு நிலைத்தது. கோதாவரிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடையில் உள்ள நாடுகளில் சனங்கள் பெருந்தொகையினர் மாண்டனர் பிரோஸ், விசய நகர வேந்தனிடம் திறை பெற்று, இராச மகேந்திரம் வரையும் தன் ஆணையைச் செலுத்தினன். பிரோஸ் எண்ணிறந்த மனைவியரை வைத்திருந்தான. அவருட் சிலர் ஐரோப்பியப் பெண்கள். இன்னிசை செவிமடுப்பதிலும் மதுக் குடிப்பதிலும் அவன் காலங்கழித்தான். அவன் ஐரோப்பரிடம் இருந்து நூதனமான பொருட்களைப் பெறுதலில் விருப்புடையன். அவன் பைபிளை வாசித்தானும். அவன் இந்துப் பெண்கள் இருவரை மணஞ் செய்தான். 1400-ல் அவனை விசய நகர வேந்தன் பங்கல் என்னும் களத்தில் புடைத்தான். 1422-ல் பிரோஸ் என்பவனையும் அவனுடைய மகனையும் அவன் தம்பி ஆமத் கொன்று 1422 முதல் 1435 வரையும் ஆண்டான். ஆமத் கன்னடரோடு போர்தொடர்ந்து ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என யாவரையும் கொன்று கோயில்களை இடித்து இருந்தான். அவன் குசரத்தாரோடும் மழவத்தாரோடும் பொருதான். அவன் பீடார் என்னும் புதியதோர் தலைநகரை அமைத்தான். பீடார் 2500 அடி உயரமான பூமியில் கட்டப்பட்டதாகலின் மிகவும் சுவாத்தியமான தென்பர் ஆமத் என்பவனுடையமகன் அலாடின் II 1435முதல் 1457 வரையும் ஆண்டு விசயநகர மன்னரோடு போர்தொடர்ந்தான். அப்போர் நடந்த காலத்தில் விசயநகர வேந்தன் தேவ

ராயன் II முகமதியரையும் தன்படையில் சேர்த்தான் என வரலாற்றாசிரியன் பிரிஸ்தா உரைத்தனன். அலாடின் II தன் கடமையை மறந்து குடித்து வெறித்துப் பெண்டிரோடு கூடிக் களித்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் சொன்னியரும் ஷியரும் கலகப்பட்டனர். ஷியர் அன்னியராகலின் துன்புறுத்தப்பட்டனர். 1200 ஷியர் கொல்லப்பட்டனராம். அலாடினுடைய மூத்தமகன் குமாயூன் கொடுங்கோலன். அவன் 1457 முடிபெற்று 1461 வரையும் அரசு புரிந்தான். அவன் மழுவிசிப் பெண்களையும் குழந்தைகளையும் வெட்டி யெறிந்தான். குடிகள் அவனைக் கண்டாலுமே அஞ்சியோடினர். அவனுடைய மரணத்தைக் கேள்விப்பட்டுக் குடிகள் தேவுக்களைப் பரவினராம். அவன் அஞ்ஞானிகளைக் கொன்றுணுகலின் காஜி எனப்பட்டான். முகமது ஷா III 1463—1482 ஈறுக ஆண்டான். 1433-ல் முகமது ஷா III என்பவனுடைய அமைச்சன், குவாசா முகமத்காவான், படைத்தலைமை வகித்து விசய நகர வேந்தரோடு பொருது கோவையைப் பறித்தான். அவன் கல்விக் கழகம் ஒன்று நிறுவிச் செங்கோலோச்சினுன். ஆனுல் அவன் இந்துக் கோயில்களை இடித்தானும்.

### காஞ்சிபுரம் :

காஞ்சிபுரத்தின் செல்வத்தைக் கேள்வியுற்று மூன்றுவது முகமது ஷா என்பவன் அதைச் சூறையாடுதற்கு விழைந்து படையெடுத்து வந்து கொண்டப்பள்ளியில் பாசறை யிட்டிருந்தனன். கச்சியப்பசிவாச்சாரியார் காஞ்சியின சிறப்பைப் புனைந்துரைத்தனன் அல்லரெனத்தெரிகிறது. உம்பர்களே இந்திர லோகத்தை விட்டுக் காஞ்சியில் இருக்க விரும்பினராம். காஞ்சிபுரத்து வீடுகள் பொன்னுலும் இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டவையாம். முகமது ஷா III 600 குதிரைப் படையோடு காஞ்சியைப் பிடித்தற்கு விரைந்தனன். முகமது ஷா என்பவனும் 21 விரரும் யாவரையும் முந்தினர் எனவும் இந்துக்காவலர் சிலர் எதிர்த்தன ரெனவும் எதிர்த்தோரைக் கொல்ல இந்துக்கள் முதுகிட்டனரெனவும் உடனே முகமதியர் நகருட் புகுந்து சூறையாடின ரெனவும் ஒரு கதை உண்டு உண்மை யென்னவெனின், முகமதியர் நகரை முற்றுகையிட்டு நின்று கைப்பற்றினர் என்பதே. முகமதியர் நகருள் கிடந்த

பொற்பாத்திரங்களையும் திரவியங்களையும் கொண்டேகினார்கள். முகமதியர் காஞ்சிபுரத்துப் புராதனக் கோயில்களுள் நுழைந்து பொன் முத்து இரத்தினங்கள் முதலியவற்றை எடுத்தனர்.

1474-ல் ருஷியன் ஒருவன் பீடாரில் பிரயாணஞ் செய்தனன். அவன் மேல்மக்கள் செல்வராய் இருந்தாரெனவும் பொது சனங்கள் மிக வறியவராயிருந்தனர் எனவும் உரைத்தனன். சுல்தான் முகமது ஷா 10,000 குதிரைப் படையோடும் 50,000 காலாட் படையோடும் 200 யானைப் படையோடும் தன் மனைவிமாரையும் தாயையும் கூட்டிக்கொண்டு வேட்டையாடச் செல்லல் உண்டு. சுல்தான் முகமது ஷா III நூறு மனைவியரை வைத்திருந்தான். அவருட்பலர் மேனாட்டினர். முகமதுவின் மகன் முகமது, 12 வயசினன், அரசைப் பெற்றானாக, அரசகுடும்பத்தினர் கலகப்பட்டனர். முகமது 1482 முதல் 1518 வரையும் ஆண்டனன். இவனோடு பாமினிச் சுல்தான்குலம் அழிந்தது. பின்பு 1526-ல் ஓர் துருக்கன் அமீர்பரிது பீடாரில் ஆண்டான். தென்னிந்தியாவில் முகமதியர் சிலகாலம் ஆண்டபோதிலும் சனங்கள் இந்துக்களாகவே இருந்து வருகின்றனர்.

பாமினி இராச்சியம் சிற்றரசுகளாகப் பிரிந்தது. பீரார் என்னும் விதர்ப்பம் இமத்ஷா என்பவனால் ஆளப்பட்டது. பரித்து என்னும் நகரில் காசிம் பரித்து என்பவனும் அவன் மகன் அமீரும் ஓர் அரசை நாட்டினர். கோதாவரிக் கரையில் கொல்குண்டா என்னும் ஓரங்கல்லில் சுல்தான் கூலிகுலிஷா ஓர் அரசை நாட்டினான். அவனை அவன் மகன் சாம்ஷத் 1543-ல் கொன்றான் 1550 ல் இபிராகாம் அரசைப் பெற்றான். அவன் மகன் முகமத் கூலி 1611-ல் அரசுபுரிந்தான். அவன் ஓரங்கல் என்னும் நகரைவிட்டு பாவ நகர் என்னும் கைதராபாத்தைத் தலைநகராக்கினான்.

மூன்றாம் முகமதுஷா என்பவனின் அமைச்சன் குவாச முகமத்காவான் என்பவனைக் கொன்ற நிசாமுல் முல்பாரியும் அவன் மகன் ஆமதும் 1470-ல் சுல்தானை எதிர்த்துச் சுவாதினமாகி ஆமத்நகரில் ஓர் அரசை நாட்டினர். 1499-ல் ஆமது தேவகிரியைப் பிடித்தான். 1508 முதல் 1553 ஈறான காலம்

அவன் ஆண்டனன். அவன் விசய நகரத்தாரோடு நட்பாகி முகமதியச் சிற்றரசரோடு பொருதான். நிசாம்ஷா ஷீயமதத்தினன்; அவன் மகன் உசேயின்ஷா முகமதியரோடு நட்பாகி விசயநகரத்தாரோடு அமர் புரிந்தான். ஆமத் நகரில் அரசு புரிந்த முகமதிய அரசி சாந்பீபி அக்பாருடைய மகன் மருத் என்பவனோடு 569-ல் போராடினுன். 600-ல் அரசு சுவாதீனம் இழந்தது.

## பீசாப்பூர் மன்னர் 1490 — 1678

1489-ல் பீசாப்பூர் சுவாதீனமாயிருந்தது. யூசுவ் அடில் கான் அரசுபுரிந்தான். அவன் குவாச முகமத்காவானைச்சேவித்த ஓர் அடிமை. 1510-ல் போத்துக்கேயர் கோவையை அவனிடம் பறித்து முகமதியர் பலரைக் கொன்றனர் பீசாப்பூரில் முகமதியப் பள்ளிகளும் வாசகசாலைகளும் கட்டப்பட்டன. நகரக்குடிகளுக்கு நீரளித்தற்கு வாய்க்கால் ஒன்று கட்டப்பட்டது. யூசுவ் அடில் மரதிமன்னன் ஒருவனை வென்று அவனுடைய சசோதரியாகிய இந்துப்பெண்ணை மணமுடித்தான். அவளுடைய பிள்ளைகள் அரசராயினர். ஸ்மேயில்ஷா 1510-ல் அரசைப்பெற்று ஷீயமதத்தைப் பரப்ப முயன்றான். 1534-ல் அவன் இறக்க, அவன் மகன் மல்லு அரசனுன். மல்லு தூர்த்தனுகலின் கண் கெடுக்கப்பட்டான். மல்லு அரசபதவியைத் தன் சகோதரன் இபிராகிம் என்பவனுக்கு 1535-ல் அளித்தான். இபிராகிம் சொன்னிமதத்தைப் பரப்பினுன். அவன் குடித்து வெறித்துப் பரத்தையரோடு முயங்கித் தன் தேகசுகத்தை இழந்தான். அவனைச் சுகப்படுத்த முயன்று சித்தியடையாத வைத்தியர் பலர் தலையிழந்தனர். 1557-ல் இபிராகிம் மரித்தான். அவன் மகன் ஆலி அடில்ஷா அரசனுனன். அவன் ஷீய மதத்தினன். அவன் ஆமத்நகர மன்னனுக்கு எதிராக விசய நகரத்து இராமராயனுக்குத் துணை புரிந்தான் பின்னர் இராமராயன் ஆமத்நகரைப் பிடித்து முகமதியரைக் கொன்றுனுக, அடில்ஷா இராமராயனோடு பகைத்து முகமதியர் கட்சியைச் சேர்ந்தான். அடில்ஷா ஆமத் நகரத்துச் சாந்பீபியை மணமுடித்து முகமதியரோடு நட்பாயினன். 1579-ல் அவனை வித்திலன் ஒருவன்

கொன்றுன். அடில்ஷா என்பவனது மகன் இபிராகிம் அடில் ஷா II 80,000 குதிரைப் படை வைத்திருந்தனன். அவன் ஆசிரியன் பிரிஸ்தா என்பவனைக் கொண்டு பாமனி ராச்சியங் களின் வரலாற்றை எழுதிவித்தான் அவன் கதலிக்குருமா ருக்குத் தன்னுட்டில் உபதேசிக்க உத்தரவு கொடுத்தனனும். 1656-ல் அடில்ஷாவின் மகன் முகமது 'ஷாஜகானுக்கு' த் திறையளித்து ஆண்டனன். அவன் மகன் அலி II 1656-ல் சிவாஜியோடு பொருதான். இறுதியில் இருந்த மன்னன் சிக் காந்தரை ஆழிவேந்தன் 'ஔறங்கசீபு' சிறை யிட்டான். பாமனிராச்சியங்கள் ஒன்று சேர்ந்து இந்து இராச்சியமாகிய விசயநகரத்தோடு பொருதன அக்காலத்தில் துருக்கர் வட விந்தியாவினுள் புகுந்து துருக்க ராச்சியத்தை நாட்ட முயன் றனர். துருக்கவேந்தர் வடவிந்தியச் சிற்றரசுகள் யாவற்றை யும் பிடித்துப் பின் தக்கணத்துச் சிற்றரசுகளாகிய பாமினி ராச்சியங்களையும் பிடித்தனர்

---

## 3-ம் பாடம்: விசயநகரவரசு

### விசய நகர வேந்தர்

| | | |
|---|---|---|
| அரியரன் | I | கி. பி. 1336 — 1343 |
| பக்கன் | I | ,, 1343 — 1376 |

### சங்கநாமர் குலம்

| | | |
|---|---|---|
| பக்கனுடைய மகன் அரியரன் | II | 1379 — 1404 |
| அரியரன் மகன் பக்கன் | II | 1404 — 1406 |
| தேவராயன் | I | 1406 — 1410 |
| வீர விசயன் | | 1410 — 1424 |
| பிரதாபன் தேவராயன் | II | 1424 — 1365 |
| விருப்பக்கன் | | 1465 — |

### சாளுவாகுலம்

| | |
|---|---|
| தர்மராய நரசிங்க சாளுயா | 1486 — 1492 |

## துளுவர் குலம்

| | | |
|---|---|---|
| நாராச நாயக்கன் | | 1492 — 1505 |
| வீர நரசிங்கன் | | 1509 — 1520 |
| கிருஷ்ண தேவராயன் | | 1520 — 1629 |
| அச்சயுத்தன் | | 1229 — 1542 |
| அச்சயுத்தன் தம்பி சதாசிவன் | | 1542 — 6575 |

## கன்னடர் குலம்

| | | |
|---|---|---|
| திருமாலன் | | 1570 — 1573 |
| திருமாலன் மகன் இரங்கன் | | 1573 — |
| இரங்கன் தம்பி வேங்கடன் | | 1685 — 1642 |
| இரங்கன் | II | 1642 — 1684 |

## விசயநகர வேந்தர் 1336 — 1565

விசயநகர் கன்னட தேயத்தின் தலைநகராயிருந்து கி. பி. 13 6 முதல் 1565 வரையும் முகமதியரைத் தென்னாடு செல்ல விடாது காத்தது. அதன் வரலாறு ஐரோப்பியப் பிரயாணிகள் எழுதிய குறிப்புக்களாலும் முகமதிய வாசிரியன் பிரஸ்தா எழுதிய சரிதையாலும் கல்வெட்டுக்களாலும் தெளிவாகின்றது. விசயநகர் கன்னட நாட்டின் தலைநகராயினும் அந் நகரில் தெலுங்கரும் துளுவரும் கன்னடரும் ஆண்டனர். தெலுங்கரும் கன்னடரும் ஒருமதத்தினராகலானும் திராவிடச் சாதியினராகலானும் முகமதியரைப் பகைத்தனராகலானும் ஒருங்கு ஒற்றுமையாக இருந்தனர். விசயநகர மன்னருடைய அவையில் சமஸ்கிருதமும் தெலுங்கும் கன்னடமும் ஆதரவு பெற்றன. சாயனர் என்னும் வேதநூல் வல்லோன் அரியரன் II காலத்தில் இருந்தான்.

## ஆதிவரலாறு

விசய நகரின் ஆதி வரலாறு தெரிகின்றிலது. முகமதியர் ஓரங்கல் மன்னரையும் துவார சமுத்திர மன்னரையும் நெருக்க அவர்கள் விசய நகரை நாடினர். ஒருசாரார் சங்கமனுடைய குமாரர் ஐவர் 1323-ல் ஓரங்கல் என்னும் தெலுங்கு இராச்சியத்திலிருந்து வந்து விசய நகர ராச்சியத்தை நாட்டினர் என்ப. ஒருசாரார் ஓய்சள நாட்டுத் தலைநகராகிய

துவார சமுத்திரத்தில் இருந்த கன்னட மன்னர் தம் நகர் அழிய, 1327-ல் விசய நகரில் ஓர் அரசை நாட்டினர் என்ப. எங்ஙனமாயினும் விசய நகரம் கன்னட தெலுங்கரால் ஆளப் பட்டதென்க. விசய நகர் ஆனைகுந்தி என்னும் அரணுக்கு எதிரே 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே அமைக்கப்பட் டது. 1336-ல் அரியரன் I முதலரசனாகி சீனருடைய மிங் வம்ச வேந்தன் தையிற்சு என்பவனுக்குத் தூது அனுப்பி னான். பின்பு அரியரனுடைய சகோதரன் பக்கான் I ஆண் டான். 1358 முதல் 1373 ஈறான காலத்தில் முகமது ஷா I விசயநகரைப் பலமுறை தாக்கினான். அப்போர்களில் விசய நகரத்தோர் 500,000 மாண்டனர் என்ப. முகமது ஷாவின் மகன் புறமதிலேறி ஆங்கிருந்த அநுமான் விக்கிரகத்தைத் தண்டால் அடித்தானாம். முகமதியர் நகரைப் பிடிக்கமுடியா மல் விட்டனர்.

பக்கானுடைய மகன் அரியரன் II தென்னாடுகள் சில வற்றைத் தன்னாட்சிக்குள் கொணர்ந்தான். அரியரன் I காஞ்சி வரையும் தன் ஆட்சியை நாட்டினான் என்ப. அவன் சைவ மதத்தினன்.

### சங்கநாமர்

அரியரன் II துஞ்சினனாகச் சங்கநாம குலத்தினர் பலர் அரசை வெளவிக் கலகப்பட்டனர். அவருள் அரியரனுடைய மகன் பக்கன் இரண்டாவது என்பவனும் தேவராயனும் கலகப்பட்டனர். முடிவில் 1406-ல் தேவராயன் I அரசைப் பெற்றான். தேவராயன் சுல்தான் பிரோஸ் என்பானோடு பன்முறை பொருதனன். பிரோஸ் விசய நகரை அணுகி நாலு மைல் தூரத்தில் நின்றனன். தேவராயன் தன் மகளை மணமுடித்துக் கொடுத்து உடன்படிக்கை எழுதினான். 1410 ல் வீர விசயன் வேந்தனானான் அவன் பின் 1419 ல் தேவராயன் II வேந்தனானான். அவன் பிரோஸ் என்பவனின் தம்பி ஆமத்ஷாவோடு பொருதான். 1422 ல் தேவராயன் II கூலிப்படை சேர்த்தான். அப்படையில் முகமதியர் பலர் சேர்த்தனர். தேவராயன் II அரச தந்திரியாயினும் போரில் தோல்வியடைந்து திறையளித்தான். அவன் ஆண்ட காலத்

தில் நிக்கோலோக் கந்தி என்னும் ஓர் இத்தாலியன் விசயநக ரைத் தரிசித்தான். அவன் விசயநகர் வலிகுன்றியிருந்ததென விளம்பினன். 1447 ல் தேவராயனுடைய மகன் மாலிக்க ருச்சுனன் அரசு செலுத்தினன்.

### சாளுவர்

1484 ல் சந்திரகிரி மன்னன் நரசிங்க சாளுவா விசய நகரத்தில் அமைச்சனுயிருந்து அரசியலை வௌவினன். அவ னுடைய குலத்தினர் வைஷ்ணவ மதத்தினர். அவன் தமிழ் நாட்டாரோடு போர் புரிந்தான். 1505 ல் அவனுடைய மகன் இமாதிநரசிங்கனைப் படைத்தலைவன் நாராச நாயக துளுவன் கொன்று அரசை வௌவினன்

### துளுவர்

1509 தொடக்கம் 1529 வரையும் கிருஷ்ண தேவராய துளுவன் ஆட்சி செய்தான். அவன் நெல்லூரிலிள்ள உதய கிரி என்னும் அரணைப் பிடித்தான். அவன் பீசபுரத்தில் ஆண்ட அடில் என்பவனை வென்று பீசபுரத்தின் தலை நக ராகிய குல்பரிக் என்பதையும் அழித்து வெற்றிவேற்கைய னுகத் துலங்கினன். கிருஷ்ண துளுவராயன் உயரிய உருவி னன் அல்லனுயினும், கண் கவர் நிறத்தினன் எனவும்; அம்மை நோய்த் தளிப்புகள் முகத்தின் அழகைக் கெடுத்த வையாயினும்; மலர்ந்த முகத்தினன் எனவும் முகமதியரை வெறுத்தோனுயினும் அந்நியரை விருப்புடன் உபசரித்தனன் எனவும்; சினம் மிகுந்தோனுயினும், செங்கோலோச்சினன் எனவும் பாயில் வரைந்துளன். கிருஷ்ணராய துளுவன் வைஷ்ணவ மதத்தினனுயினும் பிறமதத்தினரைத் துன்புறுத் தவில்லை எனவும் இலக்கியங் கற்றோர் பலரை ஆதரித்தனன் எனவும் கோயிலுக்குப் பொருள் அளித்தான் எனவும் தெரி கிறது. அவனுடைய அவையில் அலசானி பத்தர் என்னும் வித்துவான் இருந்தனன். கிஷ்ணராயனுடைய தம்பி அச்சுத ராய துளுவன் முடிபெற்று இப்ராகிம் என்னும் முகமதிய மன்னனெடு பொருது தோல்வியடைந்து மூதுகல் என்னும் அரணை இழந்தான். 1540 ல் அவன் மரிக்க, அவனுடைய

தமயன் மகன் சதாசிவன் அரசுகட்டிலேறினன். அரசியலைக் கிருஷ்ணராயனுடைய அமைச்சன் சாலுவத்திம்மனுடைய மகன் இராமராயன் நடத்தினன்.

## இராமராயன்

இராமராயன் 1543 ல் ஆமத் நகர மன்னனோடு நட்பாகி பீசபுர மன்னனெடு போர்புரிந்து தலைநகரைப் பிடித்தான். பின்பு பாமனி இராச்சியங்களாகிய பீசபுரம், கல்கொண்டை, ஆமத்நகர், பீடார் என்பனவற்றை ஆண்ட முமகதிய மன்னரோடு இராமராயன் போராடினன். முகமதிய மன்னர் விசய நகர ராச்சியத்தை அழித்தற்குச் சூழ்ச்சி செய்தனர். 1564-ல் கிறிஸ்து பிறந்த நாள் முகமதிய மன்னர் நால்வர் ஒருங்கு சேர்ந்து போர் புரசறைந்து தாலு கோட்டையிலிருந்து முப்பது மைல் தூரத்தில் பாசறையிட்டனர். இராமராயன் தன்னுடன் பிறந்தோர் திருமாலையும் வேங்கடகிரியையும் கூவி முகமதியரைக் கிருஷ்ண நதியைக் கடக்க விடாமற் காக்கும்படி ஏவினன். முகமதியர் இந்துக் காவலரை ஏமாற்றி ஒருவாறு நதியைக் கடந்தனர். இராமராயன் முதுகல் என்னும் இடத்தில் பாசறையிட்டு 1565-ல் தை 23-ல் போர் புரிந்தான். முகமதியர் படையின் மத்தியில் ஆமத் நகர மன்னன் உசேயின் நிசாம்ஷா 600 பீரங்கிகளோடு நின்றான். அவன் வலத்தில் பீசபுரமன்னன் அடில்ஷா என்பவனும் இடத்தில் ஓரங்கல் மன்னன் ஆலிபரித்து என்பவனும் தலைமை வகித்து நின்றனர். கன்னடருடைய படையின் நடுவில் இராமராயனும் இடப்பக்கத்தில் திருமாலனும் வலப்பக்கத்தில் வேங்கடகிரியும் தலைவராக நின்று போரை நடாத்தினர். திருமாலனும் வேங்கடகிரியும் இடத்தினும் வலத்தினும் நின்ற முகமதியப் படையை முதுகிடச் செய்தனர். அத்தருணத்தில் சினமேறிய களிறு ஒன்று இராமராயனுடைய பல்லக்கைத் தாக்கியது. இராமராயன் மெய்காப்பாளர் இன்றித் தனித்து நின்றான். நடுவில் நின்ற உசேயினுடைய படைவீரர் இராமராயனைக்கொன்று அவன் தலையை ஈட்டியில் இட்டுக் காட்டினராக, இந்துக்கள் அணிகுலைந்து புறங்கொடுத்து ஓடினர். 100,000 இந்துவீரர் மாண்டனர். கிருஷ்ண நதியில் இரத்த

வெள்ளம் பாய்ந்தது. இராமராயன் தலையை அஞ்ஞானியின் தலையென முகமதியர் 1829 வரையும் தம் காட்சி மண்டபத்தில் வைத்திருந்தனராம். முகமதியர் மாடங்களையும் கோயில்களையும் இடித்துச் சூறையாடினர் விசய நகரத்துள்ள நரசிம்மர் கோயிலை இடித்து நூறினர். விசய நகர் அழிவெய்தியது. விசய நகர் வேந்தர் இரு நூறுண்டுகள் தென்னிந்திய நாடுகள் எல்லாவற்றையும் ஆண்டு ஆழிவேந்தராகச் செங்கோல் செலுத்தினர். அவர்கள் கன்னடர் துளுவர் தெலுங்கர் என்னும் திராவிட மக்களை முகமதியர் செய்யும் இடும்பைகளினின்றும் காத்தனர். விசய நகர ஆழிவேந்தர் தென்னிந்திய வேந்தரிடம் திறைபெற்றனரெனலாம். அக்காலத்தில் பாண்டியர் வலிகுன்றியிருந்தனர். விசயநகரத்து வேந்தரோடு பாண்டிய மன்னர் சிலர் நட்பாகவும் சிலர் போர்புரிந்தும் இருந்தனர். விசயநகர் முகமதியர் கைப்பட்டதும் தமிழ்நாடும் சுவாதீனம் இழந்து முகமதியரால் ஆளப்பட்டது. விசயநகரத்தில் கடைசியாக ஆண்ட வேந்தன் சதாசிவன் ஓடித் தப்பினன். இராமராயனுடைய சகோதரன் திருமாலன் 1570-ல் சந்திரகிரியில் ஓர் சிற்றரசை நிறுவினன். அவன் மகன் இரங்கன் 1573 அளவில் சிறிது காலம் ஆண்டான். பின்பு திருமாலன் மகன் வேங்கடன் I 1585-ல் சந்திரகிரியில் தெலுங்கு மொழியையும் வைஷ்ணவ மதத்தையும் புரந்து ஆண்டான். அவனுடைய குலத்தினன் இரங்கா II என்பவனிடமிருந்து ஆங்கிலர் 1639-ல் ஆவணங் கட்டற்கென மதுராஸ் என்னும் நிலத்தைப் பெற்றனர். ஆனைகுந்தி மகாராசர் தாம் இராமராயனுடைய குலத்தினரென்பர்.

## விசயநகர்

விசய நகர் 1400 அளவில் மிகப் புகழ்பெற்றிருந்தது. தேவராயனுடைய மகளைப் பிரோஸ்ஷா என்பவனுக்கு மணமுடித்துக் கொடுத்தபொழுது தெருவீதிகளில் பொன்னுடைகள் விரிக்கப்பட்டன. விசய நகர் 60 மைல் சுற்றளவு உடையதென நிக்கலாகொந்தி எண்ணினன். நகர் மதில்களாலும் அரண்களாலும் அகழியாலும் காவல் செய்யப்பட்டது. அரசன் 12,000 மனைவியரை வைத்திருந்தான் என்பது நம்பத்தக்கதன்று. அவருள் 2000 மகளிர் முறைப்படி விவாகஞ் செய்யப்பட்டனர் என்பதும் கட்டுக்கதையே.

1443-ல் தீமூரின் மகன் சுல்தான் ஷாருக்கு என்பவன் கலிகற்றிலிருந்த சமூரி (சமோரின) என்னும் மன்னனிடம் இராசிக் என்பவனைத் தூது அனுப்பினான். சமூரி சுவாதீனமாயிருந்த போதிலும் விசய நகர வேந்தனை அஞ்சினானாதலின், அவனுடைய வேண்டுகோட்கிணங்கித் தூதனை விசய நகருக்கு அனுப்பினான். தூதன் நகரில் இனிது உபசரிக்கப்பட்டான்.

விசயநகர் ஏழு மதிலால் காக்கப்பட்டது முதலாம் இரண்டாம், மூன்றும் மதில்களுக்கிடையில் கமங்களும் தோட்டங்களும் வீடுகளும் இருந்தன மூன்றும் மதிலுக்கும் ஏழாம் மதிலுக்குமிடையில் கடைவீதிகளிருந்தன. அரசமாளிகையைச் சுற்றி நாலு ஆவணங்களுண்டு. சுற்றிக்கப்பட்ட வாய்க்கால் ஊடாக நீர் உள்நகரில் பாய்ச்சப்பட்டது. நகரில் பெருந்தொகை சனம் குடியிருந்தனர் சனங்கள் செல்வரும் வறியோரும் பேதமின்றி, காதுகளிலும், கழுத்துக்களிலும் கைகளிலும் விரல்களிலும் ஆபரணங்கள் அணிந்தனர். கிருஷ்ணராயன் காலத்தில் 1522ல் டொமிங்கஸ் பாயஸ் என்னும் இத்தாலியன் நகரைத் தரிசித்து வருணித்தான். பாயஸ் எழுதிய வரலாறு நம்பத்தக்கது. விசயநகர் ரோமா புரத்திலும் பெரியதென்றான். நகர் 100,00 இல்லங்களும் பூந்தோட்டங்ளும் பழத்தோட்டங்களும் குளங்களும் உடையதாயிருந்ததென்றான். மாளிகையைச் சுற்றி உள் நகரில் 34 தெருக்களுண்டு. மாளிகையில் ஒரு மாடச்சுவர் யானைத் தந்தத்தால் அமைக்கப்பட்டதாம். யானைத் தந்தங்களில் பூக்களும் செடிகளும் எழுதப்பட்டன.

## அரசியல்

அச்சுதராயன் ஆண்டகாலத்தில் நகரைத் தரிசித்த நூனிஸ் என்னும் போத்துக்கேயன் அரசமாளிகையில் பொற்பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்களும் உபயோகிக்கப் பட்டன எனவும் அரசனுடைய ஏவல்களை அமைச்சர் நேர்முகமாகக் கேட்டு எழுதி வைத்தனர் எனவும் எழுதினான். அரசன் வெண்பட்டாடையும் வெண் தலைப்பாகையும் அணிதல் வழக்கம். அவனுடைய தானை ஒரு இலட்சம். அவற்றுள் 35,000 புரவிப் படைகள். வீரர் உயரிய உருவினராயும் தடமார்பராயும் இருந்

தனர் நகர் 200 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவின் அரசிறைகளைப் பெற்று அரசனுக்குக் கொடுத்தற்கு உத்தியோகத்தன் ஒருவன் நியமிக்கப்பட்டான். விசயநகரில் ஆறிலொரு கடமையன்றிக் காசே அரசிறையாகக் கொடுக்கப்பட்டது. அரசர் நீதி செலுத்தலிற் கண்ணுயிருந்தனர். கள்வர் கையிழந்தனர். கற்புடைய மகளிரைக் கெடுக்கும் காமிகள் தலையிழந்தனர். அரச துரோகிகள் கழுவேற்றப்பட்டனர். பொதுசனங்களைத் தெருவீதியில் தண்டித்தல் வழக்கம். குற்றஞ் செய்வோரை யானைகளிடையில் எறிதலும் முதுகில் கல்லேற்றி வீதியில் நிற்கச் செய்தலும் உண்டு. தண்டம் பெரிதாகலின், களவு அரிதாயிற்று தன் பகைவனோடு தனிப்போர் செய்து வெற்றியடைபவன் தோல்வி யடைவோனின் பொருட்களைப் பறிக்கலாம். தனிப்போர் செய்ய விரும்புவோர் அமைச்சரிடம் உத்தரவு பெறவேண்டும். பிரிஸ்தா வென்னும் சோனக வாசிரியன் தனிப்போர் செய்யும் வழக்கம் பிறிதோர் தேயத்திலும் இல்லையெனவும் விசயநகரில் மாத்திரம் நடைபெற்றதெனவும் அது அநாகரீகமானதெனவும் எழுதினன். தனிப்போர் செய்து நீதியை நாட்டலில் விசய நகரத்தோர் விருப்புடையர். செல்வரும் வறியோரும் கற்றோரும் கல்லாதாரும் புலவரும் பாமரரும் தனிப்போர் செய்ய விழைந்தனர்.

## வரைவின் மகளிர்

விசயநகரில் வரைவின் மகளிர் நகரப்பேர் வீதிகளில் இருந்தனரெனப் பாயஸ் உரைத்தனன். நல்ல குலத்தினரும் பரத்தையர் இல்லங்களுள் நுழைந்தனர். பரத்தையர்கள் வேந்தனுடைய பெண்களோடும் கலந்துபேசி வெற்றிலை உண்டனர். நாள்முழுதும் பரத்தையர் வெற்றிலை உண்டபடியே இருப்பர். ஒருத்தி 100,000 பொற்காசு வைத்திருந்தனள் எனவும் பொதுவாகப் பரத்தையர் செல்வராயிருந்தன ரெனவும் பாயஸ் எழுதினன். இனிப் பரத்தையர் அழகு யாவரையும் கவரும் தன்மையதெனவும் அவர்கள் புன்முறுவல் செய்து ஒசிந்த நோக்கினராய்ப் பார்த்தாராயின் குலமக்களும் சற்புத்திரரும் மருளுவர் எனவும் இரசிக் உரைத்தனன். பரத்தையருடைய வீடுகள் கடைவீதியில் இருக்கும். அவர்களுடைய வீட்டு வாயில்களில் கல்லாசனம் இடப்பட்டிருக்கும். அவ்

வாசனங்களில் சிங்கம் புலி முதலிய விலங்கினங்கள் எழுதப்பட்டிருக்கும். பார்ப்போர் அச்சிலைகளை உயிருள்ளவை என மயங்கினராம். பரத்தையர் செபமுடிந்தபின் நடுப்பகல் பட்டாடை உடுத்து முத்து மாலைகள் சூடி, நறுமணங் கமழும் விரையிட்டுத் தம் வாயிலில் நாற்காலியில் இருப்பர். ஆடவர் வீதியில் சென்று பார்த்துத் தாம் விரும்பிய வீடுகளுள் நுழைவர். பரத்தையர்கள் 12,000 பணம் அரசிறை கொடுத்தனராம். 12,000 பணமும் காவலர்க்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டன.

காவலர் 12,000 நகரில் சேவித்தனர். ஒருகாவலன் நாட்கூலி ஒரு பணம். காவற்தலைவன் காசு அச்சிடும் சாலையின் முன் இருந்தான். காவலர் நகரில் நடக்கும் செய்திகள் எல்லாவற்றையும் அறிந்திருந்தனர். எந்தமூலையில் களவு நடந்தாலும் எந்த முடக்கில் வண்டிகள் மோதுப்பட்டாலும் எந்தச் சந்தியில் கலகம் நடந்தாலும் அவை எல்லாவற்றையும் காவலர் அறிவர்.

பொதுசனங்கள் மாமிசம் உண்டனர். பிராமணர் சுத்த போசனமே உண்டனர். ஒவ்வொரு வீதியிலும் ஆட்டிறைச்சி விற்கப்பட்டதெனப் பாயிஸ் எழுதினான். புறாவிறைச்சி, கோழியிறைச்சி முயலிறைச்சி மிக மலிவு. பன்றிகள் சுத்தமான சாலைகளில் வளர்க்கப்பட்டன. மாட்டிறைச்சியைத் தவிர்த்து ஏனைய இறைச்சிகளையும் ஆற்று மீன்களையும் சனங்கள் உண்டனர் என நூனிஸ் எழுதினான் குருவிகளும் முயல்களும் உயிரோடும் விலைப்பட்டன. சில கோயிலில் ஆடுகளைப் பலியிடுதல் வழக்கம். 150 ஆடுகளும் 24 எருமைகளும் ஒரு கோவிலில் ஒரு நாள் தலை வெட்டப்பட்டன.

---

## 4-ம் பாடம்: துருக்க மங்கோலிய வேந்தர்

### பாபர் ஆட்சிக்காலம் 1519 — 1530

13-ம் நூற்றாண்டில் துருக்கர் வலிமிகுந்து அராபியரை அட்டு அவர்களுடைய ஆட்சி நாடுகள் பலவற்றைப் பிடித்தது

மன்றி உரோமரோடு பொருது பைசந்தியம் என்னும் தலை நகரையும் பிடிக்க முயன்றனர். இத்துருக்கருள் ஒரு சாதியார் ஆரியானுவில் ஆண்டிருந்து இந்து தேயத்தினுள் புகுந்தனர். இந்து மலைக்கும் ஆரியானுவுக்கும் வடபாலுள்ள இராட்டிறி என்னும் துருக்க நாட்டில் தீமூர் என்னும் பெரிய ஆழி வேந்தன் இருந்தனன். அவனுடைய சந்ததியில் ஐந்தாம் தோன்றல் பாபர் எனப் பெயரினன். பாபரின் இயற்பெயர் சயிருடின் முகமது என்பது. பாபர் தான் தாய்வழியால் அவுண வேந்தன் சிங்கிஸ்கானுடைய வம்சத்தினனெனக் கூறினன். பாபர் 150 -ல் கபுல் நகரில் அரசாண்டிருந்தான். 1519-ல் பாபர் இந்துநதிப் பக்கங்களில் சூறையாடினன். 1524-ல் டோலற்கான் அவனை உபசரித்து வரவேற்று டெல்லிச் சுல்தானுக்கு எதிராகத் துணைபெற்றான். டோலற்கான் தன்னுடன் உட்பகையினன் என்பதைப் பாபர் உணர்ந்து அவனுடைய ஊரைவிட்டு ஏகி அடுத்தவாண்டு 12,000 வீரரோடு போர்முரசறைந்து பானிப்பற்றுக்களத்தில் நின்றான். சுல்தான் இபிராகிம் 100,000 வீரரோடும் 100 யானைகளோடும் மங்கோலிய துருக்க முகமதியரை எதிர்த்தான். இந்திய முகமதியர் அறியாத தீப்படையை (பீரங்கிப்படையை பாபர் உபயோகித்தமையாலும் பாபருடைய புரவிப் படைக்கு இந்தியப் புரவிப்படை அஞ்சியமையாலும் இந்திய முகமதியர் தோல்வியடைந்தனர். அப்போரில் 15,000 வீரர் சிறையாயினர். பாபர் டெல்லியையும் அக்கிராவையும் கைப்பற்றினன். பாபர் வந்திராவிட்டால் இந்துக்கள் சுல்தானைக் கலைத்து இந்துராச்சியத்தை நாட்டியிருப்பர். பாபர் வருமுன்னரே இந்துராச்சியங்கள் பலதிக்கிலும் எழுந்தன.

சித்தூர் (உடைப்பூர்) அரசனாகிய இராணசங்கர ராம் சிங்கி இந்து மன்னருள் சிறந்தோனாயினன். அவன் 100 போர் கண்டு அனுபவம் மிகுந்தவன். போரில் ஒரு கையும் ஒரு கண்ணும் இழந்தும் ஒருகால் முடவனாகியும் போரை வெறுத்திலன். அவனுடைய உடம்பில் வடு இல்லாத இடம் இல்லை. 80 அடையாளங்களை எண்ணியறியலாம். 1527-ல் பங்குனியில் 80,000 புரவிகளோடும் 500 யானைகளோடும், அக்கிராவுக்கு 23 மைல் அப்பாலுள்ள கானு என்னும் களத்தில்

இந்தியச் சுல்தான்களும் மங்கோலிய முகமதியரும் பொருதனர். பாபர் வெற்றி பெற்று யமுனை கடந்து சந்தேரி என்னும் அரணைக் கைப்பற்றிப் பீகார் நாட்டுள் புகுந்தான். பாபர் அக்கிராவைத் தலைநகராக்கி அரசியல் நடாத்தி 1530-ல் இறந்தான். அவனுடைய உடம்பு கபுல் நகருக்குக் கொண்டுபோகப் பட்டது. பாபர் கற்றறிந்தவனாதலின் தன் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில எழுதினான். அவை மங்கோலிய துருக்க மொழியில் எழுதப் பெற்றவை. பின்பு அவை அக்பாரின் ஆஞ்ஞைப்படி கான்கானன் என்பானால் பார்சிய மொழியில் பெயர்க்கப்பட்டன.

## உமாயூன் ஆட்சிக்காலம் 1530—1565

பாபரின் மூத்தமகன் 'காமுரூன்' கபுலில் அரசு செலுத்தினான். இளையமகன் உமாயூன் அக்கிராவில் அரசு புரிந்தான். அவன் அபின் தின்பவனாயினும் போர்க் களத்தில் வீரனாகத் தோன்றினான். 1536-ல் அவன் தன் பகைவர் யாவரையும் வென்று சாம்பனூர் என்னும் அரணைப் பிடித்தான். பார்சிய மன்னன் ஷேர்ஷா என்பான் சோராக் களத்தில் உமாயூனைப் புடைத்ததுமன்றிப் பாஞ்சாலையைக் காமுரூனிடம் பறித்தான். உமாயூன் சிந்து தேயத்திற்கு ஓடினான். ஆங்கு வைகும் காலத்தில் அவன் அக்பார் என்னும் குமாரனைப் பெற்றான். 1544-ல் உமாயூன் பார்சிய நாடடைந்து ஷீய மதத்தைத் தழுவுதற்கு உடன் பட்டுத் துணைப்படைபெற்றான். அதற்கிடையில் காம்ரூன் தன் தம்பியின் மகன் அக்பாரைச் சிறையிட்டான். 1545-ல் உமாயூன் காந்தாரத்தைப் பிடித்துக் காம்ரூனின் கண்ணைக் கெடுத்து இந்தியாவினுட் புகுந்தான். இந்திய நாடுகளைப் பிடித்தபின் 1555-ல் அக்கிராவைத் தலைநகராக்கி யரசாண்டான் 1565-ல் அவன் மேல் மாடத்திலிருந்து உருண்டு விழுந்திறந்தான்.

## ஷேர்ஷா

உமாயூனுடைய காலத்தில் சூர் குலத்து ஷேர்ஷா இராசபுத்திர நாட்டில் ஆண்டிருந்தான். அவன் 150,000 குதிரை

களும் 5,000 யானைகளுமுடைய பெரிய வேந்தனுயிருந்தனன். அவனுடைய நிலவளவை முறையையும் அரசிறை முறையையும் நீதிமுறையையும் அக்பார் படித்துக் கையாண்டனனென்ப. ஷேர்ஷா அகன்ற தெருக்கள் அமைத்தும் நிழல் மரங்கள் நட்டும் குளம் தொட்டும் மடங்கள் கட்டியும் செங்கோல் செலுத்தினுன். அவன் மகன் சாலல்கான் "இஸ்லாம் ஷா" எனப்பட்டமெய்தினுன். அவனை 1553 ல் ஷேர்ஷாவின் மைத்துனன் முகமது அடில்ஷா ஓட்டிக் கலைத்தான். முகமது அடில்ஷா இறந்தபின் ஈமு என்னும் இந்து வணிகன் அரச பதவியைப் பெற்றிருந்தான்.

## அக்பார் ஆட்சிக்காலம் 1555—1605

ஷேர்ஷாவின் மருகன் ஷா அடில் என்பானும் சிக்காந்தர் என்பானும் அரசு தமக்குரியதென விளம்பினர். ஈமு டெல்லியையும் அக்கிராவையும் கைப்பற்றி அவுகானிய வீரரை நட்பாக்கி விக்கிரமாதித்தன் என்னும் நாமம் பூண்டு அரசாண்டான். அக்பார் 13 வயசுச் சிறுவனுகையால் அவனுடைய மாமன் பைரம் கான் அரசியலை நடாத்தி ஈமுவை பனிப்பற்றுக் களத்தில் எதிர்த்தான். போர்தொடக்கத்தில் ஈமு வெற்றியடைந்தான். முடிவில் ஈமு கண்ணில் அம்பு தைத்ததாக படைகுலைந்து ஓடியது. இவ்வண்ணம் மங்கோலிய முகமதியர் அக்கிராவில் தம் அரசை நிலை நாட்டினர்.

வடமேலெல்லையால் வருபவர் பஞ்சத்தையும் நோயையும் கூட்டி வருதல் வழக்கமாதலின் அராபிய முகமதியர் காலத்தில் நிகழ்ந்த பஞ்சம் மங்கோலிய முகமதியர் காலத்திலும் நிகழ்ந்தது என்க. அக்கிரா நகரத்தோரும் டெல்லி நகரத்தோரும் மிக வருந்தினர்.

அக்பார் 18 வயசினனுனுன். தாய் அமீது அவனைத் தூண்ட அவன் பைரம் கானைக் கலைத்தான். ஈராண்டுகள் அக்பார் தன் தாயும் செவிலித்தாயும் உரைக்கும் புத்திகளைக் கேட்டு அரசியலை நடத்தினன். அக்பாருடைய அமைச்சன் ஒருவனைத் தீவினையாளன் ஒருவன் கொல்ல, அக்பார் கண்டு அத்தீயோனை வெட்டி வீழ்த்தினுன். அதன் பின் அக்பார்

ஒருவர் சொல்லும் கேளாமல் தன் வயத்தனுனன். அக்பார் சிறு தொகையினரான முகமதியர் நட்பிலும் பெருந்தொகை யினரான இந்துக்களின் நட்பைப் பெறுதல் அவசியமென உணர்ந்தான். அக்பார் இந்துக்குடிகளைக் காத்தோம்பினுன். இந்துக் குடிகள் அந்நன்றியை மறந்திலர். அக்பார் இந்துக் களும் முகமதியரும் ஒப்பச் செங்கோலோச்சினுன் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மை. அக்பார் சயபுர இந்து மன்னனுடைய மகளை மணமுடித்து யகங்கீர் என்னும் மகனைப் பெற்றுன் இந்து மதத்தைக் குன்றச் செய்யும் நோக்கமாக இந்து யாத்திரீகரிடம் டெல்லிச் சுல்தான்கள் பெற்ற அரசிறை யை அக்பார் பெருது விட்டான். அக்பார் தன் பகைவரை அடக்கினுன். தான் பிறநாடுகளைப் பிடிக்கா விட்டால் தன்னு டுகளைப் பிறநாட்டார் பிடிப்பரென அக்பார் விளம்பினன். மத் திய இந்தியாவிற் செங்கோலோச்சியிருந்த இந்து இராணி துர்க்கவதியோடு அக்பார் பொருதான். அவன் சித்தூரைப் பலமாசம் முற்றுகையிட்டு நின்று சயநால் என்னும் அரசனை எய்து விழுத்திச் சித்தூரைப் பிடித்து 30,000 சனங்களைக் கொன்றுன். சித்தூர் அதன் பின் கடாகிப் புலிகள் உலாவு மிடமானதாம்.

## அக்பாரின் அரசியல்

தன் பிள்ளைகள் பலர் இறந்தனராக, அக்பார் முகமதிய பக்கீர் ஒருவனேடு மிகவும் நட்பாகினுன். அப் பக்கீர் வணங் குதற்கென முகமதியப் பள்ளி யொன்று கட்டுவித்தான். அவன் பெயரால் 'பாத்பூர் சிக்கிரி' என்னும் நகரை யமைத்தான். 1573-ல் அக்பார் குசரத்தினுட் புகுந்து பகைவரை வென்று கடற்கரை மட்டும் கலைத்தான். ஆங்கு போர்த்துக்கேயரைச் சந்தித்து கதலிக் சமயப் போதகரை உபசரித்தானுக, முகமதியர் தம் சமயம் குன்றுமென அஞ்சினர். அக்பார் குதிரைக்களவு மிகுதலைக் கண்டு குதிரைகளைக் குறிசுடும்படி கற்பித்தான். அரசிறை பெறுவோர்க்குக் கூலி கொடுத்து அரசியல் முறை களைச் சீர்திருத்தினன். அக்பார் பொன்னுணயங்கள் அச்சிட் டான் 1575-ல் அக்பார் வங்காளச் சுல்தானைத் துகரோ வென்னும் களத்தில் வென்று தன்னுட்சியை நாட்டிய பின் ஒரிசாவையும் பிடித்தான். அதன்பின் தன் சகலன் 'கூன்வார்

ராய்சிங்' என்பவனின் துணையோடு காசுமீரம், மீர்வார், சிந்து என்னும் நாடுகளையும் தன்னுட்சிக் குட்படுத்தினுன். 1580-ல் முகமதியர் அக்பாரை வெறுத்துப் பகைவராயினர். அக்பார் அவர்களை யடக்கினுன். அக்பார் எல்லாச் சமயத்தினரும் தாம் நினைத்தவாறு வணங்கலாமென விளம்பினன் 1582-ல் அக்பார்தான் இஸ்லாமியன் அல்லன் என விளப்பிச் சமணச்சின்னங்களும் இந்துச் சின்னங்களும் அணிந்தான். அத்துடன் 'குருன்' படித்தல் அவசியமில்லை யெனவும் கிளந்தான். அதுவுமன்று அக்பார் பிள்ளைகளுக்கு முகமது எனப் பெயரிடப் படாது எனவும் முரசறைவித்தான். இந்துக்களை நட்பாக்குதற்கு ஒருவரும் மாட்டிறைச்சி யுண்ணப்படாதென உரைத்தானும். 1598-ல் அக்பாருடைய ராச்சியத்தில் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சத்தோடு நோயும் பரம்பியது. 1600-ல் அக்பார் தக்கணம் சென்று முகமதியச் சிற்றரசுகளைத் தன்னுணைக்குள் கொணர்ந்தான். அக்காலத்தில் அக்பாருடைய ஆணை நருமதையாறு வரையும் சென்றது. 1605-ல் அக்பார் வயிற்றுக் கடுப்பால் வருந்தியிறந்தான். அக்கிராவில் அக்பார் அடக்கம் பண்ணப்பட்டான். யாற்றஸ் என்னும் சாதியார் அக்பாரின் பகைவராதலின் அடக்கம் பண்ணப்பட்ட சாலையைப் பிரித்து எலும்புகளைப்பிரித்து எடுத்தெறிந்தனர். அக்பார் 5 அடி 7 அங்குலமே உயரமாவனுயினும் தைரியசாலி யெனப் பெற்றுன். அவன் ஒளிவீசும் கண்ணினனெனவும் சினம் மிகுந்தவனெனவும் வருணிக்கப்பட்டான்.

அக்பார் அரசியலை முறைவகுத்துத் தேசாதிபதிகளை நியமித்துச் செங்கோல் செலுத்தினுன். தனக்கு வாசிக்கத் தெரியவிட்டாலும் பிறரைக்கொண்டு சமய நூல்களை வாசிப்பித்துக் கேட்டனன். அக்பார் சொன்னிய மதத்தினனுயினும் ஷீய மதத்தினரைத் துன்புறுத்தவில்லை. இந்துக்களையும் முகமதியரையும் ஒரு சாதியினராக்கவும் ஒரு சமயத்தினராக்கவும் முயன்முன். அவன் குடிகளை உத்தியோகத்தர் செய்யும் இடும்பைகளிலிருந்து காத்தான். அக்பாருடைய நண்பன் அபுல் பசில் அறிஞனுகலினுலும் அரசியல் ஞானியாகலினுலும் அக்பார் அவனை அமைச்சனுக்கினுன். அக்பாருடைய வரலாற்றை அபுல் பசில் பார்சிய மொழியில் எழுதினுன். அக்பாருடைய தானைத்

தலைவன் இராமன் சிங்கி இந்துமதத்தினன், அவன் கீழைத் தேயங்களை யாண்டான். பிறிதோர் தலைவன் இராசா தோடார் மால் வருமானப் பகுதிக்குத் தலைமை வகித்தான். அக்பார் பார்சிய நாகரிகத்தைப் போற்றினுதலின் ஓவியரும் சிற்பி களும் பார்சியமுறையைப் பயிலத் தொடங்கினர். அக்பார் ஆண்டகாலத்தில் துல்சிதாஸ் இந்திமொழியில் இராமாயணத் தை எழுதினுன். அக்பாருடைய அரசவையில் இசை வல்லோ ரும் புலவர்களும் சமயப் போதகாசிரியர்களும் ஆதரிக்கப் பட் டனர்.

## யகங்கிர்—ஜஹங்கிர் ஆட்சிக்காலம் 1605—1627

அக்பாரின் மகன் ஜஹங்கிர் முகமதிய மதத்தை ஓம்ப உடன்பட்ட பின்புதான் முடிபெற்றுன். அவனுடைய இயற் பெயர் சாலிம். அவனுடைய முழுப்பெயர் சாலிம்நூருடின் முகமது யகங்கிர் பட்ஷா காஜி என்பது. அவனுடைய மகன் குஷ்ரு தந்தை தன்னைக் கொல்வானென அஞ்சி யோடிப் படை திரட்டினன். ஜஹங்கிர் பகைவரைக் கொன்று மகனை விலங்கிட்டான். சீக்கியர் குரு அருச்சுனன் குஷ்ரு என்பவ னுக்கு 5,000 ரூபா கொடுத்து உதவிய படியால் 200,000 ரூபா குற்றமிறுத்தான். யகங்கிர் தன் மகன் குஷ்ருவின் கண்ணைப் பிடுங்கும்படி விதித்தான். 1616 ல் குஷ்ரு என்பவனைத் தோமாஸ் ரேவும் கிறித்தகுரு 'பெரியும்' சிறையிற் கண்டு பேசினராம். இவ் விருவரும் அங்கிலர்கள். குஷ்ரு பொது ஜனங்களால் நேசிக்கப்பட்டான். அவன் ஒரு மனைவியை மாத்திரம் மண முடித்தான்.

அக்பாரின்கீழ் படைவீரனுகச் சேவித்த பார்சிய னொருவ னின் மகள் மிருநிசை என்பவளை யகங்கிர் மோகித் திருந்தனன். அவள் வனப்பு வாய்ந்தவளாதலின் நூர்ஜகான் என அழைக் கப்பட்டாள். அவளை அரசிறை தொகுப்போனுகச் சேவித் திருந்த ஆலிகூலி யென்பான் மணமுடித்தான். ஜஹங்கிர் அவனைப் பகைத்து 1607-ல் தன் நண்பன் குற்பிடின் கோக்கா என்பவனை யழைத்து ஆலிகூலியைக் கொல்லும்படி ஏவினன். ஆலிகூலி புலியோடு மல்லுக் கட்டிய வீரனெனப் புகழ்பெற் றிருந்தான். ஆலியும் குற்பிடினும் மல்லுக்கட்டி ஒருவரை

யொருவர் கொன்றனர். ஆலி கூலியின்மனைவி ஜஹாங்கீரை மணமுடித்தற்கு நாலாண்டு மறுத்திருந்து முடிவில் இசைந்தாள். அவள் தன்மகளை ஜகங்கீரின் மகனை ஷாரியாருக்கு மணமுடிப்பித்தாள்; இனத்தோர் பலருக்கு, அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றுக் கொடுத்தாள்; தன் உருவத்தை நாணயங்களில் இலச்சினை யிடும்படி தன் கணவனைத் தூண்டினாள்

யகங்கீர் கத்தோலிக்கரை உபசரித்தான். மரியாள், யோன், அந்தோனி, முதலியோரின் ஓவியங்களை வைத்திருந்தானெனக் கதலிக்கர் எழுதுகின்றனர். 1607-ல் யகங்கீர் தன் நண்பன் 'முகரத்' என்பவனைக் கோவைத் தேசாதிபதிக்குத் தூதனுப்பினான். கதலிக்கரின் புத்திகேட்டு ஜகங்கீர் கோக்கின்ஸ் என்னும் அங்கிலனை அரசவையைவிட்டு ஏகும்படி ஏவினான்.

1616-ல் பாஞ்சாலையில் முதன் முதல் எலிநோய் என்னும் பிளேக்கு நோம் பரம்பியது. அதன்பின் 1703 தொடக்கம் 1812 வரையிலும் பிளேக்நோய் பரவியது. அந்நோய்க்கு மருந்தில்லையாதலின் பெருந்தொகை மக்கள் மாண்டனர்.

யகங்கீர் தன் இளைய மகன் குறம் என்னும் ஷாஜகானை இளங்கோவாக்கினான். 1622-ல் ஷாஜகான் இராணி நூர்ஜகானுடைய ஏவற்கிசைந்து குஷ்ருவைச் சிறைச்சாலையிற் தலை திருகுவித்தனன். 1622-ல் ஜகங்கீர் காந்தாரத்தை இழந்தான். தக்கணத்தில் ஓர் எதியோப்பியன் மாலிக் அம்பர் என்பான் யகங்கீருக்கு விரோதியானான், ஷாஜகான் தந்தையோடு விரோதித்துப் பின் ஒருவாறு நட்பாயினன். 1626-ல் ஷாஜகானுடைய நண்பன் மாபற்கான் வேந்தன் ஜகங்கீரைப் பிடித்தானாக, இராணி வேந்தனைத் தந்திரமாகத் தப்பவைத்தாள். மாபற்கான் பார்சியாவுக்கு ஓடித்தப்பினான். 1627-ல் ஜஹாங்கீர் இறந்தான். அவன் இலாகூரில் அடக்கம் பண்ணப்பட்டான். அவன் மத்தியானத்தில் குடிகளுக்குத் தரிசனங் கொடுத்தானெனவும் இடை நேரங்களில் அளவுகடந்து மது பானம் செய்தான் எனவும் தெரிகிறது.

### ஷா ஜகான் ஆட்சிக்காலம் 1627 — 1656

ஷா ஜஹானும் அவன் சகோதரன் ஷாரியாரும் அரச பதவியைப் பெறவிரும்பினர். 1628-ல் இராசபுத்திரர் முகம

தியரை எதிர்த்தனர். அபுகானிய வீரர் கான்லோடி என்பானின் தலைமையில் போர்க்கெழுந்தனர். ஷா ஜகான் பகைவரை அடக்கி அரசனானான். அவன் தன் இனத்தோர் பலரைக் கொன்றான். ஷாஜகான் மங்கோலிய முகமதியர் தேடிவைத்த பொருளைத் துய்த்தற்குப் பிறந்தவன். ஒரு மாடம் நிறையப் பொற்காசும் ஒருமாடம் நிறைய வெள்ளிக்காசும் முகமதியர் வைத்திருந்தனர். ஷா ஜகான் அக்காசுகளைச் செலவு செய்தான். அவன் இரத்தினக் கட்டிலொன்று செய்வித்தான். அக்கட்டில் 12 காலுடையது. ஒவ்வொரு காலையும் இருமயில்கள் தாங்கி நின்றன மயில்களிடை நின்ற கால்கள் முத்து, இரத்தினம், வைரம் பதிக்கப் பெற்றவை. இந்த அரசு கட்டிலை 1739-ல் பார்சிய மன்னன் நதிர்ஷா சூறையாடிக்கொண்டு பார்சியாவுக் கேகினான்.

1630-ல் குசராத்திலும் தக்கணத்திலும் பஞ்சமேற்பட்டது. பசியால் வருந்திய சனங்கள் நாய்களைக் கொன்று தின்றனர் மனிதரொருவரை யொருவர் கொன்று தின்னத் தொடங்குவரோவென ஐயம் எழுந்தது. பீற்றர் மண்டி என்னும் ஆங்கிலன் அக்காலத்தில் இந்தியாவில் நாடுகாண வந்தான். அவன் அப்பஞ்சம் மிகக் கொடுமையானது என்றான் ஷா ஜகான் அரசிறையில் பதினொன்றில் ஒருபங்கைப் பெறுது விட்டு ஒன்றரை இலட்சம் ருபா தருமத்திற்கெனக் கொடுத்தான்.

1612-ல் நூர்ஜஹானுடைய சகோதரன் ஆசவ்கான் என்பானுடைய மகளை ஷா ஜகான் மணமுடித்திருந்தான். அவளின் இயற்பேர் 'அர்ச்சுமான் பான் பீகம்' அவள் மும்தாஸ்மகால் (மாளிகையை அலங்கரிக்கும் அழகி) என்னும் பெயரால் அழைக்கப்பட்டாள். 1631-ல் பிரவசச்சாலையில் அவள் மரித்தாள் அடுத்த ஆண்டு அவளின் ஞாபகசின்னமாக ராஜ்மகால் கட்டப்பட்டது மூர்தஸ்மகால் மிகவும் வனப்புவாய்ந்தவளெனவும் சமய பக்தியுள்ளவளெனவும் கூறப்படும் அவள் கிறித்தவரைத் துன்புறுத்தும்படி தன் கணவனை ஏவினள். வங்கத்தில் வணிகஞ் செய்திருந்த போர்த்துக்கேயர் சிலர் இராணிக்குப் பணி செய்யும் மங்கையரைப் பிடித்தமையினாலும் நாட்டவர் சிலரைப் பிடித்து அடிமைகளாக்கியமையினாலும் ஷாஜகான் வங்கத்து

மன்னனைப் போர்த்துக்கேயருடன் போர் தொடரும்படி ஏவினன். போரில் 300 போர்த்துக்கேயரும் 600 இந்து துணைப் படை வீரரும் 150,000 முகமதியரோடு பொருது 10,000 முகமதியரைக் கொன்றனரென்ப. ஷா ஜஹான் கத்தோலிக் கரை மாத்திரமன்று இந்துக்களையும் துன்புறுத்தினன். அவன் இந்துக்கோயில்கள் பலவற்றை இடிப்பித்தான்.

மாலிக் அம்பர் மகன் பாதுகான் பகைத்தெழுந்தானாக அவன் நட்பை ஷா ஜஹான் பொருள் கொடுத்துப் பெற்றான். அத்துடன் அவனுக்கு அரசாங்கவுத்தியோகமுங் கொடுத்தான். அதன்பின் ஷா ஜகான் தக்கண மன்னரை அடக்குவான் தொடங்கினன். தக்கணத்தில் மரத வீரன் ஷாஜி (சாகு) என்பவன் ஆமத் நகரில் நிசாம்சாயி யென்னும் ஒருசிறுவனை மன்னனாக நியமித்துத் தன்னாணையைச் செலுத்தினன். இம்மரத வீரன் ஷிவாஜி (சிவாசி) என்பவனுடைய தகப்பன். இதுநிற்க பீசாப்பூர் மன்னன் 'அடில்ஷா' 'ஷா ஜஹானை' ஆழிவேந்தனெனத்தொழுது திறையளிக்க உடன் பட்டான். தமிழ்நாடு ஒழிந்த தக்கண தேயங்கள் யாவற்றிலும் ஷா ஜகானுடைய ஆணை சென்றது. இளங்கோ ஔறங்குசீபு 18 வயசினனாயினும் தக்கண நாடுகளுக்குத் தேசாதிபதியானன். அவன் தைலாஸ் பானபீகம் என்பவளை மணமுடித்து அசாம், அக்பார் என இருகுமாரரைப் பெற்றான். பின்பு ஔறங்குசீபு தந்தையோடு விரோதித்துத் தன் பதவியைத் துறந்தான்.

### ஷா ஜகானுடைய மக்கள்

ஷா ஜஹான் காந்தாரம், சாமர்க்கண்டு என்னும் நாடுகளைப் பிடித்து ஔறங்குசீபு என்பவனைக் காவல் செய்யும்படி ஏவினன். ஔறங்குசீபு காந்தாரத்தை இழந்தானாக, ஷா ஜஹான் தன் அமைச்சன் சாடுல்லாக்கான் என்பானைப் போரைத்தொடரும்படி ஏவினன் பார்சிய மன்னருடைய பீரங்கிப்படை கேடுவிளைத்ததாகச் சமாதானஞ் செய்யப்பட்டது. பின்னர் 1653-ல் ஷா ஜஹானுடைய மூத்த குமாரன் தாராஷிக்கோ காந்தாரத்தைப் பிடித்தற்குப் படையெடுத்துப் பெருந்தொகை பணஞ் செலவுசெய்தான். 1653-ல் ஔறங்குசீபு தக்கணத்தில் மறு முறையும் தேசாதிபதியானன். அவன் ஈரபாய் என்னும்

பாடினியை மோகித்து அரசியலைக் கவனியாது விட்டானாக, நாடு சீர் கெட்டது. வருமானத்தைச் சேகரிக்கும் உத்தியோகத்தன் முர்ஷித் கூலிக்கான் என்பவன் தோடர் மாலுடைய அரசிறை முறையைக் கையாண்டான். காசில்லாதவரிடம் அரசிறையாகத் தானியம் பெற்றான். அவன் தக்கணக் குறுநிலமன்னராக விருந்த ஷீய முகமதியரைத் தொலைக்க முயன்றான். பார்சிய வர்த்தகன் மிர்யும்லா என்பான் ஔறங்குசீபு என்பானுக்கு உதவிசெய்து ஓரங்கல் மன்னனாகிய சந்திரகிரி ராயனைக் கலைத்தான். பின்பு சாடுல்லா இறக்க மிர்யும்லா ஷா ஜகானின் அமைச்சனானான். ஔறங்கு சீபு தக்கணதேயத்து முகமதியக் குறுநில மன்னர் யாவரையும் வென்று மரதர் தலைவன் ஷிவாஜி பொன்சாலன் என்பவனோடு போர் தொடர்ந்தான்.

தன் மக்கள் ஒருவரோடு ஒருவர் கலகப்பட்டனராதலின் ஷாஜஹான் அவர்களை உபராசராக்கினான். மூத்த குமாரன் தாராஷிக்கோ என்பவனுக்கு இராச்சியத்தை யளிக்க எண்ணி அவனை அரசவையில் வைத்திருந்தான். மூரத்பக்ஷ் குசரத்தி லும் ஷூஜ வங்கத்திலும் ஔறங்கு சீபு தக்கணத்திலும் தேசாதிபதிகளாக நியமிக்கப்பட்டனர் ஔறங்கு சீபு தக்கணத்து ஷீயமுகமதியக் குறுநிலமன்னரோடு போர்புரிந்து வெற்றியடைந்தான்.

ஷாஜஹான் பிணியால் வருந்தினனாக மக்கள் நால்வரும் அரசைப்பெற நினைந்து போர்புரியத் தொடங்கினர். அமைச்சன் மீர்யும்லா ஔறங்குசீபு என்பவனுடைய கட்சியைச் சார்ந்தான். ஔறங்குசீபு தன் சகோதரன் மூரத்பக்ஷ் என்பவனின் துணைபெற்று 1658-ல் தப்தி நதியைக் கடந்தான். தாராஷிக்கோ தன் மூத்த மகன் சுலைமான் ஷிக்கோவை தானைத் தலைவனாக்கி ஷூஜாவை அடக்குப்படி ஏவினான். தான் ஔறங்குசீபுவை எதிர்த்தான். போர் அக்கிராவின் அயலில் நடந்தது. தாராஷிக்கோ தான் ஏறிய யானையை வீழ்த்தப் பீரங்கிப்படை முயலுவதைக்கண்டு யானையினின்று இறங்கிக் குதிரை ஏறினன். படைவீரர் பலர் தாராஷிக்கோ கொல்லப்பட்டான் என எண்ணிக் களத்தைவிட்டோடினர். ஔறங்கு

சீபு வெற்றி முரசறைந்து தன் தந்தையைச் சிறையிலிடுவித்தான். அவன் தனக்குத் துணைபுரிந்த சகோதரன் முரத்பக்ஷ் என்பவனையும் கொல்வித்தான். 1660-ல் அவன் தாராஷிக்கோவின் மகன் சுலைமான் என்பவனையும் போரில் வென்றான். தாராஷிக்கோ சிந்து தேயத்திற்கு ஓடிச்சீபுகான் என்பவனிடம், சரண் புகுந்தான் ஔறங்குசீபு, சீபுகான் என்பானை கல்லெறிந்து கொல்வித்தான். தாராஷிக்கோவும் அவனுடைய இளைய மகன் சிப்பிர்ஷிக்கோவும் சிறைப்பட்டனர். ஔறங்குசீபு தமையன் தாராஷீக்கோவைக் கந்தையுடுத்தி டெல்லி வீதியில் உலாத்தி இழிவு படுத்திக் கொல்வித்தான். ஷாஜஹான் சிறைச் சாலையில் இறந்தான். 666-ம் "ஔறங்குசீபு ஆலங்கிர்" முடிபெற்றான் அவனுடைய துணைவன் 'நீர்யுமலா' ஷாஜா என்பானோடு பொருது வென்றான். ஷாஜா அரக்கனுக்கு ஓடித்தப்பினான் ஔறங்குசீபு சீனத்தில் தன் கொடியை நாட்டும்படி ஏவினன். அவன் ஏவிய படை மலைச்சாரல் வழிச் சென்று பனியிலும் மழையிலும் அகப்பட்டு அழிவெய்தியது

## ஷாஜஹான் அரசியல் :

ஷாஜஹான் பகைவரை யடக்கிப் பொருள் திரட்டித் தனி மனைவியோடு வாழ்ந்து ராஜ்மஹால் கட்டியபடியால் அவனைச் செங்கோலனெனச் சரித்திரகாரர் சிலர் எண்ணினர். அங்ஙனம் கோடல் தவறென ஒழிக.

அவன் 'மும்தஸ் மகாலோடு' கூடி 14 குழந்தைகளைப் பெற்றானொழிய பிறிதோர் நன்மையும் செய்தானல்லன். அவன் படைத்தலைமை வகித்தலிலேனும் நீதி செலுத்துதலிலேனும் சிறந்தோனல்லன். அவன் தான் வெறுக்கும் அரசாங்கத்தினரைச் சிறையிட்டுத் துன்புறுத்திக் கொல்வித்தான். அரசவையில் வெற்றிலை ஏந்தி நிற்கும் ஒருவனைச் சாகும் துணையும் அடித்தானும் பீற்றர் முண்டி மண்டி என்னும் அங்கிலன் ஷா ஜகான் கொடுங்கோலோச்சின னெனவும் குடிகளுக்குத் தான்செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி ஒருபோதும் சிந்தித்திலன் எனவும் எழுதினன். ஷாஜகான் இந்துக் கோயில்கள் கட்டப்படாதெனக் கட்டளை யிட்டான். ஷாஜ

கான் நியமித்த தேசாதிபதிகள் குடிகளைத் துன்புறுத்தினர். தேசாதிபதி ஔறங்க சீபு இந்துக்களைத் துன்புறுத்தலில் இன்பம் விழைந்தான். குடிகள் ஊணும் உடையுமின்றி இருந்தனரெனவும் குழந்தைகள் பசியால் இறந்தனரெனவும் வறியோரைச் செல்வர் வருத்தினரெனவும் மேனாட்டிலிருந்து நாடு காணவந்த பிரயாணிகள் எழுதியிருக்கின்றனர்.

## சிவாஜி பொன்சாலன்

மரதியர் குலதிலகன் சிவாஜி 1627-ல் பிறந்தான். அவன் தந்தை ஒரு கள்வர் கூட்டத்தின் தலைவனும். சிவாஜி இளவயசிலேயே துடியனெனப் பெயர் பெற்றான். அவன் தன் பத்தொன்பதாம் ஆண்டு நிறையுமுன் மழவதேயத்து 'தோரணு' என்னும் அரணைப் பிடித்தான். அவனுடைய கூட்டத்தினர் குன்றுதோறும் ஏறி இறங்குதலில் நனி பயின்றவர். 1655 ல் சிவாஜி தன்னோடு பகைத்த 'சேயேலி' என்னும் ஓர் சிற்றரசனைக் கொன்றான். சிவாஜியைப் பிடிக்கும்படி 'ஔறங்கு சீபு' 'அவ்சல்கானை' ஏவினன். அவ்சல்கான் பீரங்கிப் படையோடு சென்றான். சிவாஜி அவ்சல்கானை நேர்முகமாகச் சந்திக்க விரும்புவான்போல் நடித்து ஓர் பிராமணனைத் தூது அனுப்பினன் இருவரும் இருதோழரோடு மாத்திரம் சந்தித்தற்கு ஒழுங்கு செய்தனர். சிவாஜி 'அவ்சல்கானை முத்தமிடும் போது சிறு ஈட்டி ஒன்றால் குத்திக் கொன்றான். உடனே மறைவில் இருந்த வீரர் முகமதியரைக் கலைத்தடித்து 4000 குதிரைகள் பிடித்தனர். சிவாஜியைப் பிடிக்கும்படி ஔறங்கு சீபு தன் மாமன் ஷாஸ்த்தியக்கானை ஏவினன். சிவாஜி அவன் வீட்டுள் நுழைந்து அவன் மகனைக் கொன்று அவனுடைய விரல்கள் மூன்றை வெட்டினன். ஷாத்தியக்கான் அஞ்சியோடி அரசவைக்குச் சென்று தன்னை வங்கத்திற்குத் தேசாதிபதியாக நியமிக்கும்படி இரந்தான்.

ஔறங்குசீபு தன் மகன் மூசேயின் என்பவனையும் சயபுர ராசா சயசிங்கி என்பவனையும் சிவாஜியைக் கொல்லும்படி ஏவினன். 'இராச சயசிங்கி சிவாஜியைக் கண்டு வேந்தனின் நட்பைப் பெறும்படி புத்திகூறினன். சிவாசி உடன்பட்டு அரசவை சென்றான். சிவாசி சின்னாள் உபசரிக்கப்பட்டு சய

சிங்கியின் மகன் இராம் சிங்கியின் காவலில் இருந்தான். சிவாசி தன்னை வேந்தன் கொல்ல முயலுதலை உணர்ந்தும் அறியான் போல் நடித்து வேந்தனின் நட்பைப் பெற விழைவான்போல் பழங்கள் முதலிய பண்டங்களை அளித்தான். காவல் குறைந்திலதாகச் சிவாசி, வேந்தன் அளித்த உணவுகளை மிக்கு உண்டு பிணியெய்தினன்போல் தன் மாடத்தில் படுத்திருந்தான். காவல் சிறிது குறைந்தது. சிவாசி காவற்காரனுடைய உடையணிந்து வெளியேகினன். ஔறங்குசீபு சிவாசி வங்கத்தில் இருத்தலை அறிந்து அவனைப் பிடிக்கும்படி அமைச்சரை ஏவினன். சிவாசி தக்கணநாடுவந்து முகமதியர் ஆளும் நாடுகளில் சூறையாடினன்.

1669-ல் யாற்றஸ் என்னும் சாதியார் முகமதியரைப் பகைத்தெழுந்து மங்கோலிய மன்னர் அடக்கம் செய்யப்பட்ட சாலைகளை உடைத்தனர். அந்நாட்களில் தட்டார் தச்சர் கொல்லர் என்போர் வேந்தனை விரோதித்துக் கலகம் விளைவித்தனர். ஔறங்குசீபு பகையை ஒருவாறு அடக்கினன். 1675-ல் சீக்கியருடைய ஒன்பதாங் குரு 'ரெக்பகதூர்' முகமதிய மதத்தைத் தழுவ மறுத்தமையால் கொல்லப்பட்டான். இங்ஙனம் பகை யடக்குதலில் ஔறங்குசீபு கண்ணுயிருக்கச் சிவாசி 'இரையக்கார்' என்னும் அரணில் முடிபெற்றிருந்து தக்கண நாடுகளில் சூறையாடினன். முகமதியக் குறுநில மன்னர் மிகவும் அஞ்சி சிவாசியினது நட்பைப்பெற விழைந்தனர். ஔறங்குசீபு அபுகானியரை அடக்குதலில் ஊக்கமாயிருந்தானெழிய சிவாசியைப் பற்றிச் சிந்தித்திலன் சிவாசி அரசாண்டிருந்து 1680-ல் தன் 53 ம் வயசில் மரித்தான். அவனுடைய மரண காலத்தில் தூமகேது என்னும் வால்வெள்ளியும் சந்திர வில்லும் தோன்றிய வென்பர்.

சிவாசி ஆண்ட தேயம் விந்திய மலைக்கும் நருமதையாற்றுக்கும் இப்பாலுள்ள மராட்டி தேயமெனப்படும். மராட்டியர் என்னும் மரதர் மரதிமொழி பேசினர். மரதரை முகமதியரும் அங்கிலரும் முரடரென அஞ்சினர். மரதவீரர் குதிரையேற்றத்திலும் வாட்போரிலும் சிறந்து விளங்கினர். மரதர் கள்வர் கூட்டமாக இருந்து வழிபறித்துத் திரிந்து பின்பு இராச்

சியமும் நடத்தினர். அங்கிலர் இந்து நாடுகளைப் பிடிக்காவிட்டால் இந்து நாடுகளில் மரதர் தமது ஆணையைச் செலுத்தியிருப்பர். இராம்தாஸ் துகராம் என்னும் இரு மரதிப் புலவர்கள் சிவாசியைப் பற்றிப் பலபடப் புனைந்தனர். சிவாசி அவர்களிடம் சமய நூல் கேட்டனன். புலவர்கள் இருவரும் இந்துக்களாயினும் கொலை புரிதலையும் சூறையாடலையும் கண்டிக்கவில்லை. சிவாசி சூறையாடலும் முகமதியரைக் கோறலும் தருமமெனக் எண்ணினன். சிவாசி பெண்களை ஒருபோதும் துன்புறுத்தப்படாதெனத் தன் வீரரைக் கற்பித்தனன். அவன் சோனகப் பள்ளிகளை இடிக்கவில்லையெனத் தெரிகிறது. தானையில் சேவிப்போர் பெண்டிரோடு பாசறையில் இருக்கக்கூடாதென்பது சிவாசியின் ஒழுங்கு. சிவாசி காலாட்படையையும் புரவிப் படையையும் பயிற்றி ஒவ்வொரு 5000 வீரர் கூட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்தான். சிவாசி ஐப்பசி தொடக்கம் சித்திரை வரையும் சூறையாடுதல் வழக்கம். அரசனாக முடி பெற்றபின் சிவாசி அரண்பல கட்டித் தன் நாட்டைக்காத்தான். அபிசீனியக் கடற்கள்வரை அடக்குதற்குக் கப்பற்படையையும் சேர்த்தான். தக்கண நாட்டு முகமதியச் சிற்றரசரை சூறையாடுதலே அவன் தொழில். தக்கணக் குடிகள் நிலவருமானத்தில் நாலிலொருபங்கு சிவாசிக்குக் கொடுத்தனர். இங்ஙனம் பொருள் கொடாத கிராமங்களில் மரதர் சூறையாடினர். மரதவீரர் எழுத வாசிக்கத் தெரியாதவர். அவர்கள் பிராமணரைக் கொண்டு கணக்குப் பார்ப்பித்தனர். சிவாசி இந்துவாகலின் பசுக்களையும் பிராமணரையும் காத்தான். சரித்திரமெழுதிய அங்கிலர் சிவாசியைப் புலையனெனவும் கள்வனெனவும் இகழ்தலுண்டு.

## கொடுங் கோலன் "ஆலங்கீர் ஔறங்குசீபு"
## ஆட்சிக்காலம் 1667 — 1707

ஔறங்குசீபு தன் குடிகள் யாவரையும் முகமதியராக்க முயன்றனன். அவன் ஷீயரைச் சொன்னியராக்க மிகவும் முயன்றான். அவன் பிராமணர் இந்து சமய நூல்களை உபதேசிக்கப்படாதென விதித்தான். வடமதுரையில் கேசவதேவருடைய சிறந்தகோவிலை இடிக்கும்படி கற்பித்தான். அக்கோ

வில் அபுல் பசில் என்பவனைக் கொல்வித்த இராச 'பீர்சிங்கி' என்பவனால் 33 இலட்சம் ரூபா செலவு செய்து கட்டப்பட்டது. ஔறங்குசீபு இந்துச் சிலைகளை எடுத்துத் தன் மாளிகையில் படிக்கல்லாக வைத்துக் கட்டினான். அவன் தகர்த்த கோயில்கள் 252 என்ப.

1679-ல் ஔறங்குசீபு இராச புத்திரரை அடக்குவான் தொடங்கினன். அவனுடைய மகன் அக்பர் தன் தந்தை இந்துக்களைத் துன்புறுத்துதலைக்கண்டு வெறுத்து இராச புத்திரரோடு நட்பாயினன். ஔறங்குசீபு இதை உணர்ந்து மகனைத் தந்தரத்தினால் தன் வசப்படுத்த முயன்றான். இராச புத்திரர் அக்பரில் ஐயங்கொண்டனராக அக்பர் சிவாசியின் மகன் சம்பாஜியிடம் சரண் புகுந்தான். பின்பு அக்பர் பார்சியாவுக்குச் சென்று துணைபெற்று 12,000 புரவிப்படையோடு கபுல் நகரைத் தாக்கினான். 1704-ல் அக்பர் இறந்தான்.

1689-ல் ஔறங்குசீபு தக்கணஞ் சென்று சம்பாஜியோடு பொருது அவனைக் கொன்றான். அத்துடன் நில்லாது தமிழ் நாட்டெல்லை கடந்து தஞ்சையில் அரசாண்ட அரசனிடம் திறை பெற்றான். ஔறங்குசீபு தன் மகன் முசேயின் தக்கணத்தார்க்குத் துணைபுரிதலை அறிந்து அவனைச் சிறையிட்டான். பின்பு அவனை விடுதலையாக்கிக் கபுல் நகரைக் காக்கும்படி ஏவினன்.

சம்பாஜி இறந்தபின் அவன் தம்பி இராயராம் அரசியலை நடாத்தினான். அவன் 1700-ல் மரிக்க, அவனுடைய விதவை 'தாராபாய்' அரசியலை நடாத்தினாள்.

ஔறங்குசீபு ஆண்ட காலத்தில் தக்கணதேயக் குடிகள் மிக வருந்தினர். பேதி நோயால் மக்கள் மாண்டனர். நோய் எட்டு ஆண்டுகள் நிலைத்தது. ஔறங்குசீபு நோயைத் தடுக்கும் உபாயங்களைப்பற்றிச் சிந்தித்திலன். தக்கணத்தில் தன் ஆணையைச் செலுத்தலே அவனுடைய நோக்கம். ஔறங்குசீபு தன் எண்பதாம் வயசில் தக்கணதேயம் சென்று கிருஷ்ணா நதிக்கரையில் பாசறையிட்டான். பாசறையில் 100,000 வீரரும் 50,000 ஒட்டகங்களும் இருந்தனவாம். அவன் 80 ஆண்டு நிறைந்த விருத்தனாயினும் கண்ணாடியின்றி வாசித்தான். அர

சன் சிறிய உருவினன் எனவும் பெரிய மூக்கினன் எனவும் நரைமயிரினன் எனவும், வெண்டலைப்பாகை அணிந்தனன் எனவும் செபஞ் செய்தலிலும் 'கூறுனை' நெட்டுருப் பண்ணுதலிலும் விருப்புடையன் எனவும் தாவர உணவு உண்டனன் எனவும், சிறிது துயின்றனன் எனவும் வருணிக்கப்பட்டான். 1707-ல் தன் 91 ஆண்டு நிறைந்து மூப்பெய்தி இறந்தான். அவன் இலக்கியங்களும் சரித்திரங்களும் எழுதப்படாதெனக் கற்பித்தான் என்பது அறியற்பாலது.

ஔறங்கசீபு தன் குமாரர் கலகப்படுவர் என்பதை உணர்ந்து, முசேயின், அசாம், காம்பாக் என்னும் மூவரையும் அழைத்து ஒருவரோடு ஒருவர் நட்பாயிருக்க வேண்டுமெனப் புத்தியுரைத்தான். தந்தை இறந்தவுடன் மக்கள் மூவரும் கலகப்பட்டனர். மூசெயின் அசாம் என்பவனை வென்று கொன்று பகதூர்ஷா எனப்பட்டம் சூடி அரசு செலுத்தினன். அவன் வீரருக்குப் பொருள் கொடுத்து நட்பாக்கிய பின் தக்கண நாடுபுக்குக் கப்பாக் என்னும் சகோதரனை வென்றான். மூசேயின் மரத நாட்டில் கட்சிக்கலகம் உண்டு பண்ணுதற்கு எண்ணிச் சப்பாஜியின் மகனை விடுதலை யாக்கினன். அவனுடைய எண்ணம் கை கூடிற்று. சம்பாஜியின் மகன் சிவாசி II (ஷாகு) என்பவனும் அரசி தராபாயும் போர்புரியத் தொடங்கினர்.

### சீக்கியர்

சீக்கியர் பாஞ்சால தேயத்தினர்; அவர்கள் முகமதியரை விரோதித்திருந்தனர். சீக்கியர் இந்துமதத்தினர். அவருடைய குரு 'நானக்' கிரியா மார்க்கத்தைக் கண்டித்தனர். அவர் சாதிக்கட்டுப்பாட்டைத் தொலைக்க முயன்றனர். 1577-ல் அக்பார் சீக்கியரை நேசித்து அமரிற்சார் என்னும் இடத்தில் தங்கக் கோயில் கட்டிக் கொடுத்தான் 1606-ல் சீக்கியருடைய ஐந்தாம் குரு அருச்சுனன், ஔறங்குசீபு என்னும் வேந்தனாற் கொல்லப்பட்டான். இவனே ஆதி கிரந்தம் என்னும் சீக்கிய சமயநூலை இயற்றியோன். ஆறுவது குரு ஆரிகோவிந்து. 1606 முதல் 1645 ஈறுகச் சீக்கிய சமுகத்தை ஓர் போர்வீரர் கூட்டமாக்கினன். ஔறங்குசீபு சீக்கியருடைய ஒன்பதாம்குரு 'ரெக்பகதூரையும்' சிரச்சேதம் செய்வித்தான். 1675 தொடக்கம்

1708 வரையும் குருவாயிருந்த பத்தாம் குரு கோவிந்துசிங்கி சீக்கியரைப் படைக் கலங்களில் நனி பயிற்றினுன். 1708-ல் கோவிந்துவை ஓர் அபுகான் கொன்ருன். கோவிந்துவுடைய குழந்தைகளை உவாசிர்கான் கொன்ருன். கோவிந்து இறந்த பின் சீக்கியர் ஆதி கிரந்தத்தையே குருவெனத் தொழுதனர். சீக்கியர் தாம் சாதிவேற்றுமை பாராட்டுபவர் அல்லர் என்பதைக் காட்டுதற்கு ஒருங்கிருந்து உணவருந்தி நீர் பருகுவர். சீக்கியர் மதுபானஞ் செய்தலையும் புகையிலை புகைத்தலையும் தவிர்த்தனர். அவர்கள் நீண்ட தாடி வளர்த்தல் வழக்கம். சீக்கிய சமூகத்தில் சமத்துவம் ஏற்பட்டதாகக் கீழ்மக்கள் பெருந்தொகையினர் சீக்கிய மதத்தைத் தழுவினர்.

## துருக்க மன்னரின் இறுதிக்காலம் 1707 — 1800

பண்டா என்னும் பணியாளன் தன்னைப் படைத்தலைமை வகித்துச் சீக்கியருடைய போர்களை நடத்தும்படி பத்தாம் குரு கோவிந்து பணித்தனன் என விளம்பினன். இப்பண்டாவை பகதூர்ஷா I ஒருவாறு வென்ருன். பகதூர்ஷா தன் 69 வயசில் (1712-ல்) இறந்தான். அவனுடைய குமாரர் நால்வரும் கலகப்பட்டனர். யகாந்தர்ஷா என்னும் மூத்தவன் அரச பதவியைப் பெற்ருன். அவன் தூர்த்தனுகலின் பதினொரு மாசம் கழியுமுன் கொல்லப்பட்டான். அவனைக்கொன்ற பாருக்கியார் என்பவன் ஓர் காமி. அவன் பிரபுக்களைக் கொன்று கொடுங்கோலோச்சினுன்.

1719-ல் அப்டுல்லா, உசேயினலி என்னும் இரு சகோதரர் அரசனைக் கொன்றனர். அவர்கள் ஷாஜகான் II என்பவனையும் நெக்கூசியர் என்பவனையும் இபிராகிம் என்பவனையும் ஒருவர் பின் ஒருவராக 1719-ம் ஆண்டில் மன்னராக்கினுர்கள். பின்பு அவர்கள் முகமத்ஷா என்பவனை அரசனென வணங்கினர். அவன் உசேயினலியைக் கொன்று அப்டுல்லாவைச் சிறையிட்டான். 1722-ல் முகமத்ஷாவினுடைய அமைச்சன் 'சின்கிலிக்கான்' தன் பதவியை விட்டுத் தக்கணத்தில் ஓர் அரசு நாட்டி 'நிசாம்' எனப் பெயர் பெற்று ஆண்டனன்.

## மரதர் :

இங்ஙனம் அரசியற் குழப்பங்களால் மங்கோலிய துருக்க வேந்தருடைய இராச்சியம் கி. பி. 1720-ல் நிலை குலைந்ததெனலாம். வங்கம் தக்கணம் அபுகானிஸ்தானம் முதலியவை சுவாதீனமாயின. முகமதியச் சிற்றரசர்கள் ஆங்காங்கு சுவாதீனமாய் ஆண்டனர். தக்கணத்து முகமதியச் சிற்றரசர்களை மரதர் வெருட்டிப் பொருள் பெற்றனர். மரத நாட்டில் 'இராசா ஷாகு' பெயரளவில் அரசு புரிந்தான். மரதவரசை இராசா ஷாகுவினுடைய அமைச்சன் நடத்தினன். அமைச்சன் பெயர் 'பாலாஜி விசுவநாதன்' அவன் ஓர் பிராமணன் அவனும் அவன் சந்ததியாரும் 'பீஷ்வா' எனப் பட்டம் பெற்றனர். பீஷ்வாக்கள் தக்கண தேயக் குடிகளிடம் நில வருமானத்தில் நாலில் ஒரு பங்கு பெற்றனர். முகமதியச் சிற்றரசர்கள் மரதருக்கு அஞ்சினராகலின் தம் குடிகளை மரதருக்கும் இறை கொடுக்கும்படி ஏவினர். பீஷ்வாக்கள் 1714 முதல் 1818 வரையும் அரசியலை நடத்தினர். மரத நாட்டிலிருந்த ஏனைய இந்துச் சிற்றரசர்கள் கயிக்குவார், சிந்தியா, ஓல்கார் என்போர் தாம் சிவாஜியின சந்ததியினர் எனப் பகர்கின்றனர். இம் மரதர்கள் ஒருங்கு சேர்ந்து டெல்லியைப் பன்முறை தாக்கிச் சூறையாடினர்.

## பார்சிய மன்னன் நதிர்ஷாவும் துருக்கரும்

1739-ல் பார்சிய வேந்தன் நதிர்ஷா கபுல்கசனி என்னும் நகரங்களைக் கைப்பற்றியபின் இந்துநாடு புக்கு 'லாகூரைப்' பிடித்தான். அவன் மங்கோலிய துருக்க மன்னன் முகமதுஷா என்பவனோடு 'பனிப் பற்று'க் களத்திற்கு அண்மையிலுள்ள 'கானூல்' என்னும் களத்தில் பொருது 20,000 வீரரைக் கொன்றான். நதிர்ஷா 58 நாள் டெல்லியில் சூறையாடியபின் 'ஷாஜகான்' செய்வித்த மயிலாசனத்தைக் கொண்டு ஏகினன். இதற்கிடையில் 1748-ல் துருக்க முகமதிய மன்னன் முகமத்ஷா இறந்தான். அவன் மகன் ஆமத்ஷா அரசனானான். அவனை அவனுடைய அமைச்சன் 'காசியுடின் நிசாம்' எனபவன் கண் கெடுத்து கொன்று ஆலங்கீர் II என்பவனை மன்னனாக்கினன், ஆலங்கீர் II சிற்றரசனாக டெல்லியில் ஆண்டிருந்து 1759-ல்

கொலையுண்டான். அவன் பின் ஷாஆலம் என்பவன் 1806 வரையும் ஆண்டனன். அவன் பின் அக்பர் II அங்கிலரின் ஆதரவின்கீழ் 1837 வரையும் ஆண்டனன். அவன் பின் பகதூர்ஷா II 1837 தொடக்கம் 1857 வரையும் பெயரளவில் அரசனுயிருந்தான். அங்கிலர் அவனை 1858-ல் அரசைத் துறக்கும்படி ஏவினர்.

## அபுகானிய மன்னன் தூராணி

மூன்றும் பீஷ்வா பாலாஜ் மரதராச்சியத்திற்குப் 'பூனு' வைத் தலைநகராக்கினுன். அவனுடைய படைத் தலைவன் 'சதாசிவன் பாயோ' 10,000 படை வீரரை வைத்திருந்தனன். 1576-ல் அப்கானிய மன்னன் ஆமத்ஷா துராணி யமுனையாற்றுக்கரையில் தோற்றினுன். மரதர் யாவரும் ஒருங்கு திரண்டனர். மரதர் தலைவர் படைத் தலைமை வகிக்க மறுத்தனராக பீஷ்வாவினுடைய மகன் 'விசுவாஸ்ராயோ' பெயரளவில் தலைமை வகித்தான். மரதர் தம் பீரங்கிப் படையில் நம்பியிருந்தமையால் தோல்வி யடைந்தனர் என்ப. ஆமத்ஷா தூராணி ஆற்றை விரைந்து கடந்து நின்றனனுக, மரதர் விரைந்து சென்று அமர் புரிய முடியாது நின்று பாசறையில் காலங் கழித்தனர். உணவின்மையால் மரதர் படை வருந்தின தூராணி 38,000 காலாட்படையும் 418,000 புரவிப் படையும் வைத்திருந்தான். மரதர் 15,000 காலாட்படையும் 55,000 புரவிப் படையும் வைத்திருந்தனன். போர்க் களத்தில் விசுவாஸ்ராயோ கொலையுண்டானுக மரதவீரர் ஓட்டம் பிடித்தனர். தலைவர்கள் ஓல்க்காரும் சிந்தியாவும் ஓடித்தப்பினர். இந்துக்கள் பெருந்தொகையினர் மாண்டனர். அபுகானியப் படை வீரர் தாய் நாடு திரும்ப விரும்பித் தூராணியினுடைய கட்டளையைப் பொருட்படுத்தாது பகைப்படையாயினராகத் தூராணி இந்தியாவைக் கைப்பற்றும் நோக்கத்தை விட்டுத் தாய் நாட்டிற்குப் புலம் பெயர்ந்தான்.

———

# 13-ம் அதி. இலங்கை மலைநாட்டரசர்
# கி. பி. 1515—1815

## 1-ம் பாடம்: சிங்களரும் போத்துக்கேயரும்

### பறங்கியர் வருகை

போத்துக்கேயர் என்னும் பறங்கியர் ஐபீரியக் குடாநாட்டின் மேல் கரையில் வசித்தனர். கி. பி. 1497-ல் அங்கில ஆடித்திங்கள் வாஸ்கடிகாமா என்னும் போத்துக்கேயன் லிஸ்பன் என்னும் தலைநகரிலிருந்து புறப்பட்டு ஆபிரிக்கத் தென்முனையால் வந்து மெலிந்தையில் தங்கிப் பருவக் காற்றுப் பெயர்ந்தபின் அராபிக்கடலைக் கடந்து விசயநகரத்தின் ஆதரவில் கலிக்கற்றில் அரசு புரியும் சமூரி எனப் பட்டம் பெற்ற இந்து மன்னனை 1498-ல் தரிசித்தான். கலிக்கற்றில் வாணிகஞ் செய்திருந்த அராபியர் முகமதியராதலின் அவர்களை மேலாபிரிக்காவில் வசிக்கும் மூர்கள் எனப் போத்துக்கேயர் மயங்கினர். மூர்கள் முகமதியராகலின் அராபியரை ஆடை அணிகலன்களால் ஒத்தனர். போத்துக்கேயர் இந்தியாவிலுள்ள கோவையில் கடைகட்டித் தம் கடைகளைக் காத்தற்கு அரண்களும் கட்டினர். போத்துக்கேயருடைய துறைகளை ஆளும் தேசாதிபதி பிரான்சிஸ்கோ-டி-அல்மீடா 1505-ல் இலங்கைத் துறைகளைத் தரிசிக்கும்படி கட்டளை பெற்றான். போர்த்துக்கேயருடைய மன்னனின் ஏவலைக்கேட்டு அல்மீடா தன்மகன் லொறஞ்சோ டி அல்மீடாவை அனுப்பினான். அவன் மாலைதீவுகளையும் கொழும்புத் துறையையும் கண்டு திரும்பினான். போர்த்துக்கேயரைக் கண்ட சிங்களவர் அஞ்சியோடிக் கோட்டை மன்னனுக்குப் பின்வருமாறு அறிவித்தனர். "எங்கள் கொழும்புத் துறையில் வெண்ணிறத்தினர் இரும்பினால் செய்த ஆடையினர் அரக்கர்போன்றவர் யாரோவந்து உலாவுகின்றனர். அவர்கள் உண்பது கல், குடிப்பது குருதி. அவர்களுடைய பீரங்கி உருமினும் உரத்து முழங்குகின்றது" இதை அரசனும் அமைச்சரும் கேட்டு என் செய்யலாம் என ஆலோசித்தனர். சக்கரயுத்தனை ஒற்றி வரும்படி அமைச்சர் ஏவினர். அவன் அந்நியருடன் நட்பாதலே புத்தியென உரைத்தனன்.

சிங்களர் போர்த்துக்கேயரைக் காட்டு வழியாகக் கோட்டைக்குக் கூட்டிச் சென்றனராகப் போத்துக்கேயர் பல காவதங் கடந்து அலைந்தனர். இவ்வண்ணம் சிங்களர் தம் தலைநகரை அந்நியர் அணுகமுடியா தென்பதை உணர்த்தினர். போர்த்துக்கேயர் இச்சூதை உணர்ந்தனர். 1518-ல் போத்துக்கேயன் அல்பக்காரியா கொழும்பில் அரண்கட்டிப் பண்டசாலை அமைத்தனன். இப்போத்துக்கேயரைப் பறங்கிகள் எனத் தமிழர் அழைத்தனர். கோட்டையரசன் பராக்கிரமபாகு 8 பறங்கியரை வரவேற்றான். கொழும்பில் வணிகஞ்செய்திருந்த சோனகர் 1520-ல் பறங்கியருடைய பண்டசாலையை முற்றுகையிட்டனர். பறங்கியர் சோனகரை வென்று கலைத்தனர். சோனகர் தம் வணிகம் கெடுதலை உணர்ந்து சிங்களரையும் போர்த்துக்கேயரையும் பகைவராக்கினர். போர்த்துக்கேயரைச் சிங்களர் முற்றுகையிட்டனர். டிபிற்றோ என்பான் அரணைக்காத்தான். பின்னர் போத்துக்கேயர் அரணை இடித்துப் புதியதோர் பெரிய அரணைக் கட்டினர்.

## கோட்டை யரசு

பராக்கிரமபாகுவின் மகன் பராக்கிரமபாகு 9 சிறிதுகாலம் ஆண்டான். அவன் தம்பி விசயபாகு 5 கி. பி. 1527 முதல் 1534 வரையும் கோட்டையில் அரசுபுரிந்தான். அவனை அவனுடைய குமாரர் பகைத்தனர். மூத்த மகன் புவனேகபாகு தந்தையைக் கொன்று கோட்டையைப் பிடித்து ஆண்டான். அவனுடைய சகோதரன் மாயதுன்னி சீதவாகையில் அரசு செலுத்தினன். மாயதுன்னியின் தமயன் இராயகம் பண்டாரம் இராயகாமத்தில் ஆண்டான். புவனேகபாகு தன் பேரப்பிள்ளை தர்மபாலன் தனக்குப்பின் அரசுரிமை யுடையவன் என விளம்பினன். தர்மபாலனுடைய தாய் புவனேகபாகுவின் மகள். அவனுடைய தந்தை வித்தியபண்டாரம். அவன் போர்த்துக்கேயருடன் நட்பாக இருந்து பின்னர் பகைவனாயினன். அவன் போர்த்துக்கேயருடைய சிறையிலிருந்த காலத்தில் அவனை அவன் மனைவி சமுத்திரதேவி சுரங்கமறுத்துத் தப்புவித்தனள். அவன் இறந்தபின் அவன் மாயதுன்னியின் மகளை மணந்தான். பின்பு மாயதுன்னியோடு கலகப்பட்டு யாழ்ப்பாண மன்னனிடம் துணைபெறச் சென்று தெருக்கலகம் ஒன்றில் கொலையுண்

டான். மாயதுன்னி விரோதியாகப் புவனேகபாகு அவனைச் சீதவாகையினின்றும் கலைத்தான். மாயதுன்னி அராபியரின் துணையோடு போரை நடாத்தினான். புவனேகபாகு போத்துக்கேயரிடம் துணைபெற்று சீதவாகையைப் பிடித்தான். மாயதுன்னி தெரனியகாலை என்னும் மலையரணிலிருந்து போரைத் தொடர்ந்தான். புவனேகபாகு போத்துக்கேய மன்னனுக்குக் கீழமைந்து அரசுபுரிய இசைந்தான். தர்மபாலன் கிறிஸ்து மதத்தைத்தழுவி தொன்யோவா எனப்பெயர் பெற்றான். புவனேகபாகு இறந்தகாலத்தில் மாயதுன்னி சீதவாகையிலும் விக்கிரமபாகு கண்டியிலும் அரசு புரிந்தனர். சிங்கள மன்னன் கிறிஸ்தவ மதத்தினனானதைக் கண்டு குடிகள் பலர் கிறிஸ்தவராயினர். 1554-ல் போர்த்துக்கேயர் மன்னாரில் இறங்கினர். சேவியர் என்னும் கதலிக்குரு தமிழர் பலரைக் கதலிக்மதத்தைத்தழுவும்படி தூண்டினான். மன்னார் யாழ்ப்பாண மன்னரால் ஆளப்பட்டது. மன்னன் சங்கிலி 600 கதலிக்கரைக் கொன்றான். அதன்பின் போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க முயன்றனர்.

## இராசசிங்கன் I

மாயதுன்னியும் அவன் மகன் திக்கிரிபண்டாவும் போத்துக்கேயரைக் கலைக்க முயன்றனர். மாயதுன்னி சமூரியினது துணைபெற்றுப் போத்துக்கேயரை வென்று கோட்டையிலிருந்து கலைத்தான். தர்மபாலன் கொழும்பில் இருந்தான். மாயதுன்னி வயசு முதிர்ந்து இறக்க, அவன் மகன் திக்கிரிபண்டா 'இராசசிங்கன்' எனப் பெயர்பெற்று 1581 முதல் 1592 ஈறாக ஆண்டான். போத்துக்கேயர் சீதவாகையைப் பிடிக்க முயன்று தோல்வியடைந்தனர் பின்னர் இராசசிங்கன் போத்துக்கேயரையும் கோட்டைச் சிங்களவரையும் முலேரியாவை என்னும் களத்தில் 1584-ல் முறிய அடித்தான். போத்துக்கேயருடைய படையில் இந்தியரும் சிங்களரும் கூலிப்படையாகச் சேவித்தனர். போத்துக்கேயர் படையில் 17,000 வீரர் மாண்டனர். இராசசிங்கன் கோட்டையைப் பிடித்தான். போத்துக்கேயர் கோவையிலிருந்து புதுப்படை பெற்றுப் போர்முரசறைந்தனர். பின்னரும் இராசசிங்கன் போத்துக்கேயரைப் புடைத்தான். அதன்பின் இராசசிங்கன் கொழும்பை முற்றுகையிட்டு நின்றான்.

அவனோடு சிலர் சோற்றுப்பால பண்டாரத்தின் தலைமையில் பகைத்தெழுந்தனராக, அவர்களை அடக்குதற்கு இராசசிங்கன் கொழும்பைவிட்டேகினன். கப்பல்கள் இல்லாமையால் இராச சிங்கன் கொழும்பைப் பிடிக்கவியலாது விட்டான். போத்துக் கேயர் கோவையிலிருந்து உணவும் படையும் பெற்றிருந்தனர்.

கண்டிராசன் விக்கிரமபாகு 1580-ல் மாயதுன்னியொடு பொருது தோல்வி யடைந்து யாழ்ப்பாணஞ் சென்று போத் துக்கேயரிடம் அடைக்கலம் புகுந்தான். விக்கிரமபாகு தொன் பிலிப்பு எனப் பெயர் பெற்றான். அவனுடைய மகள் தொன் ஞக் கதறீனு மன்னாரில் வசித்தாள். அவளைப் போத்துக்கேயர் மலை நாட்டரசியாக்க எண்ணினர். இது நிற்க மலைநாட்டுத் தலைவன் வீரசுந்தரபண்டாரம் என்பவனை இராசசிங்கன் பகைவன் என எண்ணித் தீவினையாளரைக் கொண்டு அவனைக் கிடங்கில் வீழ்த்திக் கொல்வித்தான். வீரசுந்தரனுடைய மகன் கொன்னப்பு பண்டாரம் கொழும்பை யடைந்து போத்துக் கேயரிடம் துணைபெற்று மன்னார் சென்று படை திரட்டிய பின் கண்டியை நோக்கினான். கொன்னப்பு 1592-ல் இராச சிங்கனைக் கடுகணுவையில் சந்தித்துப் பொருது வென்றான். இராசசிங்கன் குதிரையிலிருந்து மூங்கிற் கட்டையின்மீது விழுந்து புண்பட்டிறந்தான். அவனுடைய இறுதிக்காலத்தில் பௌத்ததுறவிகள் தனக்குப் பகையாதலை உணர்ந்து இராச சிங்கன் சமந்தகூடத்தை இந்துக்களுக்கு அளித்தான். ஆகலின் குடிகள் சிலர் அவனை விரோதித்தனர். இராசசிங்கன் ஆண் மக்களின்றி இறக்க அவனுடைய அரசு நிலைகுலைந்தது. அவனுடைய படைத்தலைவன் மானம்பேரி என்னும் சயவீர பண்டாரம் மலையாள தேயத்தவன். அவன் போத்துக்கேயர் கட்சியைச் சார்ந்து அவரிடம் துணைபெற்று சீதவாகையில் அரசு செலுத்த விழைந்தனன். இராசசிங்கனுடைய பேரன் நிக்கப்பிட்டிய பண்டாரம் சிறைப்பட்டான். போத்துக்கேயர் சீதவாகையை நூறினர். இங்ஙனம் சீதைவாகை கோட்டை என்னும் இராச்சியங்களுக்குரிய நாடுகளைப் போத்துக்கேயர் ஆளத்தொடங்கினர்.

**விமலதர்ம சூரியன் I (கொன்னப்பு பண்டாரம்)**

கொன்னப்பு பண்டாரம் போத்துக்கேயரிடம் துணைபெறு தற்குக் கதலிக்மதத்தைத்தழுவி தொன்யோன் எனப் பெயர்

பெற்றபோதிலும் கண்டியரசைக் கைப்பற்றியவுடன் தான் பௌத்தன் என விளம்பி விமல தர்ம சூரியன் எனப்பெயர் புனைந்தான். போத்துக்கேயர் 1598-ல் இலப்பஸ் டிசொயிசாவின் தலைமையில் கண்டியைப் பிடிக்கச் சென்றனர். டிசொயிசா கண்டி நாட்டைத் தொன கதறினாவுக்கு அளிப்பன் எனக் கூறினன். கண்டியைப் பிடித்தபின் கதறினாவைத் தன் மருகனுக்கு மணஞ் செய்ய எண்ணினன். இராச சிங்கனைச் சேவித்த சயவீர பண்டாரம் கூலிப்படையோடு போத்துக்கேயர் கட்சியைச் சேர்ந்தான். விமல தர்மன் சயவீரனையும் போத்துக்கேயரையம் பேதப்படுத்தற்குச் சூழ்ச்சி செய்தான். "தருணம் பார்த்து நீ வாக்குப் பண்ணியவாறு ஒழுகுவாயாக" என ஒருகடிதத்தை சயவீரனுக்கு எழுதி அதை டிசொயிசாவின் கையில் இடுவித்தான். டிசொயிசா சயவீரனை உடனே கொல்வித்தான். கூலிப் படைவீரர் உடனே போத்துக்கேயரை விரோதித்து விமல தர்மனுடைய கட்சியைச் சார்ந்தனர். கனோராவைக் களத்தில் விமலதர்மன் டிசொயிசாவை முறிய அடித்து தொன்னாக் கதறினாவைச் சிறையிட்டான். பின்பு அவன் தொன்னாக்கதறினாவை மணமுடித்துக் கண்டியில் அரசு புரிந்தான். 16 3-ல் போத்துக்கேயருடைய தேசாதிபதி டி. அசவீடோ பாலானைக் கணவாயில் விமலனோடு பொருது முதுகிட்டான். அச்சமயத்தில் போத்துக்கேயரால் ஆளப்பட்ட கரை நாடுகளில் சிங்களவர் தமனிங்கஸ் கொறியா என்பவனுடைய தலைமையில் பகைத்தெழுந்து முதலியார் சமரக்கோன் என்னும் திசாவையால் அடக்கப்பட்டனர். அதன் பின் தமனிங்கஸ் கொறியாவின சகோதரன் சிமியோக்கொறியா மாத்தறையில் கலகம் விளைத்து சமரக்கோனால் அடக்கப்பட்டான். எல்லாவிடங்களிலும் பகை மூண்டதென அசவீடோவுக்கு அறிவித்து அவனைக்கொழும்புக்குத் திருப்பும்படி சமரக்கோன் ஏவினான். டி அசவீடோ காலி மட்டக்களப்பு திரிகோணமலை என்னும் துறைகளைப் பிடித்தான். அவன் பௌத்த விகாரங்களையும் முனீஸ்வரம் முதலிய கோயில்களையும் சூறையாடினான். அவன் குடிகளை வருத்திக் கொடுங்கோலோச்சுதலில் இன்புற்றான். டி அசவீடோ கோவைத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டு இலங்கையை விட்டுப் புலப்பெயர்ந்தான்.

விமலன் ஆண்டகாலத்தில் ஒல்லாந்தர் இலங்கையில் வணிகஞ் செய்ய விழைந்தனர். ஸபில்பர்க்கன் விமலனைத்தரிசித்து ஒல்லாந்தர் போர்த்துக்கேயரின் பகைவர் என்பதை உணர்த்தினன். டிவேட் என்பவனை அரசவையில் விட்டு ஸ்பில்பர்க்கன் ஏகினன். விமலன் 'டிவேட்' என்பானைக் காலியைப் பிடிக்கும்படி ஏவினன். டிவேட் உவையின் குடித்து மயக்கமுற்றிருந்தமையால் அரசியைப்பற்றி ஏதோ பேசினன். உடனே விமலன் அவனைக் கொல்வித்தான்

## செனரத்

விமலன் இறக்கச் சமந்த கூடத்தில் துறவியாக இருந்த செனரத் காவியைக் களைந்து கதறீனவை மணமுடித்து அரசு கட்டில் ஏறினன். செனரத் விமலனுடைய தம்பியாதலின் அரசுரிமையைப் பெற்றான். செனரத்தும் ஒல்லாந்தரும் ஒருவர்க்கொருவர் துணைபுரிவரென உடன்படிக்கை எழுதினர். அவ்வுடன்படிக்கையின்படி ஒல்லாந்தர் இலங்கையில் வணிகஞ் செய்யும் உரிமை பெற்றனர். பதிலாக ஒல்லாந்தர் போத்துக்கேயரை இலங்கையினின்றும் கலைக்க இசைந்தனர். ஒல்லாந்தர் தூதன் டிபஸ்கோவர் ஒல்லாந்து சென்று துணைப் படை பெறுமையால் தேனரிடம் துணைபெற்றான். அவன் கடல்வழியில் இறந்தானாகச் செனரத் தேனரோடு உடன்படிக்கை எழுத மறுத்தனன். பின்பு 1612-ல் சிமியோ கொறியா கொட்டியாரத்தில் ஒல்லாந்தரைப் புடைத்தான். செனரத் தன் படையை ஏவிச் சிமியோ கொறியாவைப் புடைத்தான். அதன் பின் செனரத் 50,000 வீரர் சேர்த்து கொழும்பையும் காலியையும் பிடிக்க முயன்றான். அச்சமயத்தில் அநுராதபுரத்தில் ஒருவன் தான் இளங்கோ நிக்கப்பிட்டிய பண்டாரம் எனக் கிளந்து போத்துக்கேயரைப் பகைத்தெழுந்து செனரத்திடம் உதவி பெற்றான். அவன் செனரத்தின் இல்லக் கிழத்தியரில் ஒருவரைத் தரும்படி வேண்டினனாகச் செனரத் சினந்து மறுத்தான். இக்குழப்பக்காரனைப் போத்துக்கேயர் அடக்கினர்.

1630-ல் கோவையிலிருக்குந் தலைமைத் தேசாதிபதி "டி அசவீடோ", "கன்ஸ்ராந்தைன் டி சா டி நொரோனவை"க் கண்டியைப் பிடிக்கும்படி ஏவினன். 1500 போத்துக்கேய

ரோடும் 20000 கூலிப் படையோடும் டி சா சாகிறதுக்குச் சென்ருன். செனரத் மலைச்சாரல்களில் மூதுகிட்டு நின்ருனுகப் போத்துக்கேயரும் சிங்களக் கூலிப்படையும் வெலவையை அணுகினர். செனரத்தின் மகன் இராசசிங்கன் படையை அணி வகுத்து நின்று போத்துக்கேயர் ஒருவரையும் தப்பவிடாமல் கொன்ருன். டிசாவும் மடிந்தான். இலங்கையைத் தரிசித்து அதன் இயற்கையழகையும் வணிகத்தையும்பற்றி ஒரு வரலாறு எழுதிய போர்த்துக்கேயன் ரைபீறியோ என்பான் டிசா கைக் கூலி பெருமல் செங்கோல் செலுத்தினன் எனக் குறிப்பிட்டான். இந்த டிசா கோணேசர் கோயிலை இடிப்பித்தான்.

## இரண்டாம் இராசசிங்கன்

1632-ல் செனரத் இறக்க அவன் மகன் இராசசிங்கன் கண்டியில் அரசாண்டான். போத்துக்கேயர் தேசாதிபதி டையொ டி மெல்லோ டி கஸ்திரோ கண்டி நாடுகளில் சூறையாடினுன். இராசசிங்கன் அவனை நட்பாயிருக்கும்படி வேண்டிக் கதலிக் துறவி ஒருவனைத் தூது அனுப்பினுன். டிகஸ்திரோ அதற்கு இசையவில்லை. 1638-ல் அவனைப் புடைப்பதற்கு இராசசிங்கன் பாலானைக் கணவாயில் காத்திருந்தான். அவன் போத்துக்கேயரைக் கனேருவைக் களத்தில் சந்தித்துப் பொருது வென்ருன். போத்துக்கேயரை இலங்கையினின்றும் கலைத்தற்குத் துணைவேண்டி வெஸ்தர்வல்ட் என்னும் ஒல்லாந்தனேடு உடன்படிக்கை எழுதினுன். அவ்வுடன்படிக்கையின்படி கறுவா முழுவதையும் இராசசிங்கன் ஒல்லாந்தருக்கே விற்க வேண்டும். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை இலங்கையினின்றும் கலைக்கவேண்டும். இராசசிங்கன் போர்ச் செலவைக் கொடுத்தவுடன் ஒல்லாந்தர் தாம் பிடிக்கும் கரை நாடுகளை இராசசிங்கனுக்கு அளிக்கவேண்டும். 1638-ல் ஒல்லாந்தர் நீர்கொழும்பு காலி மாத்தறை திரிகோணமலை என்னும் துறைகளைப் பிடித்தனர். இராசசிங்கன் துணைப்படையும் போர்ச் செலவும் அளிக்காமையால் ஒல்லாந்தர் தாம் பிடித்த நாடுகளை அளிக்க மறுத்தனர். இராசசிங்கன் ஒல்லாந்தர் வலி மிகுதலைக்கண்டு அஞ்சி ஒல்லாந்தர் தலைவன் யாக்கப்பு கொஸ்தரைக் கொன்ருன். இராசசிங்கன் போத்துக்கேயரோடு நட்பாயிருக்க விரும்

பின்னர், போர்த்துக்கேயர் ஒல்லாந்தரை நீர்கொழும்பிலிருந்து கலைத்தனர், 1644-ல் ஒல்லாந்தர் மறுபடியும் நீர்கொழும்பைப் பிடித்தனர். அதன்பின் பத்தாண்டுகள் ஒல்லாந்தரும் போர்த் துக்கேயரும் பகையின்றி யிருந்தனர். 1656-ல் ஒல்லாந்தர் கொழும்பைப் பிடித்துப் போர்த்துக்கேயரை இலங்கையினின்று கலைத்தனர். 1658-ல் ஒல்லாந்தர் மன்னாரையும் யாழ்ப்பாணத் தையும் கைப்பற்றினர்.

### அரசியல் :

1660-ல் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகர் கப்பல் ஒன்று புயலில் அகப்பட்டுவந்து திரிகோணமலையிலுள்ள கொட்டி யாரத் துறையுள் புகுந்தது. அக்கப்பலின் பெயர் ஆன். அதன் மாலுமி நொக்ச் என்பவனைச் சிங்களர் பிடித்தனர். நொக்ச் தன் மகன் இறபேட் நொக்சு என்பவனைத் தப்ப வைக்க எண்ணினான். ஆனால் அவன மகன் கப்பலைப் பாயெடுக் கும்படி ஏவித் தந்தையிடம் திரும்பினான். இருவரும் கண் டியில் சிறையிடப்பட்டனர். தந்தை சுரநோயால் இறந்தபின் இறப்பெட்டு மாத்தளையில் அலைந்து திரிந்தான். 1679-ல் நொக்சு அனுராதபுரம் அடைந்து யானைகள் முதலைகள் எரு மைகள் எனபவற்றிற்குத் தப்பி மன்னார்க்கரையை அடைந்து ஒல்லாந்தருடைய கப்பலில் ஏறினான். நொக்சு கண்டி மன்ன னுடைய அரசியலைப் பின்வருமாறு வருணித்தனன்.

இராசசிங்கன் பெரிய உருவினன்; கறுத்த மேனியன்; சுழல்கண்ணன். அவன் 70 ஆண்டு நிறைந்தோனாயினும் வயோ திகனாகத் தோன்றினான் அல்லன். அவன் போர்த்துக்கேயரைப் போல் மெய்ப்பை அணிந்தான். பொன்னுறையிட்டு பொற்பிடி யுடைய வாளொன்றைத் தன்னரையில் கட்டியிருந்தான் அவன் தன் குடிகளை நம்பாமல் ஆபிரிக்க தேயத்துக் காப்பிரிகளையே மெய்காப்பாளராக வைத்திருந்தான். ஒல்லாந்தர் அவனை முக மன்கூறி வணங்கி நட்புப் பெற்றனர். சிலசமயங்களில் மன் னன் முகமன் கூறுவோரை வெறுத்தனன். அவன் ஐரோப் பியரைத் தன்னவையில் வைத்திருந்து அரசியலைப்பற்றிப் பேசு தலில் மிகவிருப்புடையவன்.

மன்னன் ஈர் அதிகாரிகளை நியமித்து அரசியலை நடாத்தினான். அதிகாரியின்கீழ் திசாவைகள் சேவித்தனர். திசாவைகள் தட்மாகாணங்களைக் கோறளைகளாகப் பிரித்து ஒவ்வொரு கோறளையிலும் ஒவ்வொரு விதானையை ஏற்படுத்தினர். கோறளைகள் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டன. பற்றுக்களில் அட்டுக் கோறளைகள் நீதிசெலுத்தி அரசிறை பெற்றிருந்தனர். குடிகள் பெரும்பாலும் கமத்தொழிலைச் செய்தனர். வீடுகள் வைக்கோலாலும் ஓலையாலும் வேயப்பட்டன. குடிகள் மிருகங்களைக் கொன்று தின்னவில்லை. சிங்களர் கல்விகற்க அதிகம் விரும்பவில்லை. அரசன் பிறசமயத்தாரைத் துன்புறுத்தாது அவர்க்கு இசைந்தவாறு வணங்கவிட்டான். கிராமச் சபைகள் குளங்கட்டல் நீர்ப்பாய்ச்சுதல்நீதிசெலுத்தல் அரசிறை பெறுதல் முதலியவற்றைச் செய்து வந்தன. நகரங்களில் சிறு சபைகள் பதிக்காவல் சுகாதாரம் முதலிய பொதுக்காரியங்களை நடாத்தின.

## போத்துக்கேயருடைய கொடுங்கோல்

போத்துக்கேயர் சிங்களருடைய அரசியன் முறையை அதிகம் மாற்றாமல் அரசாண்டனர் போத்துக்கேயர் பலர் திசாவைகளாகச் சேவித்துக் குடிகளிடம் கைக்கூலி பெற்றுத் திரவியந்தேட விழைந்தனர். அரசாங்கசேவை செய்து தேசாதிபதியின் ஆணைகளுக்கு இசைந்து ஒழுகுவோர் முதலியார்ப் பட்டம் பெற்றனர். சமரக்கோன் உருகுணையைப் போத்துக்கேயருக்கு வென்று கொடுத்து மாத்தறையில் திசாவையாக இருந்து முதலிப்பட்டம் பெற்றான். போத்துக்கேயர் தம் பெண்டிரைக் கொண்டு வரவில்லை யாகலின் இலங்கைப் பெண்களோடு கூடிவாழ்ந்தனர். தீவினையாளரும் மூடரும் முரடரும் படையில் சேவித்துக் குடிகளைப் பலவிதமாகவும் துன்புறுத்தினர். இலங்கையில் இருக்குந் தேசாதிபதிகள் கோவையிலிருக்குந் தலைமைத் தேசாதிபதிக்கு அமைந்தொழுகினர். போத்துக்கேயர் தலைவன் டி அசவீடோ மல்வானையில் சிங்களத்தலைவர்களைக் கூவி அரசியலை எங்ஙனம் நடாத்த வேண்டுமெனக் கேட்டான். அவர்கள் பழைய முறைப்படியே அரசியலை நடாத்த வேண்டுமென இரந்தனர். போத்துக்கேயர் தென்னிலங்கையை மாத்தறை முக்கோறளை நாற்கோறளை எழுகோ

ருளே என நான்கு திசாவனிகளாகப் பிரித்துத் திசாவைகளை நியமித்தனர். போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் ஒரு தலைவனையும் மன்னூரில் ஒரு தலைவனையும் நியமித்தனர். அவர்கள் சேனாதிபதிகள் எனப்பெயர் பெற்றனர் இச்சேனாதிபதிகள் கொழும்புத் தேசாதிபதியின் ஏவலைக்கேட்டொழுக வேண்டியவர்கள். கொழும்புத் தேசாதிபதி தனாதிகாரி தலைமை நீதிபதி தலைமைச் சமயகுரு என்போரிடம் புத்திகேட்டு அரசியலை நடாத்தினான். போத்துக்கேயர் அரசிறைகளைப் பெற்றனரொழிய குடிகளைக் காத்தோம்பவில்லை. அவர்கள் ஆண்ட காலத்தில் குளங்களும் வாய்க்கால்களும் பாழாயின. குடிகள் நெற்செய்கையை விட்டுக் கறுவாச்செய்கையை விரும்பினர். சிங்களருடைய பழக்கவழக்கங்களும் நிலைகுலைந்தன. கதலிக்க சமயம் அரசாங்க சமயமாகப் பௌத்தம் குன்றியது. சிங்களருடைய வாழ்க்கையும் நாகரிகமும் மேனாட்டு மயமாகத் திரிபடைந்தன. போர்த்துக்கேய மொழிகள் சிங்களத்திலும் தமிழிலும் ஏறின. மேசை கதிரை அலுமாரி என்பன போத்துக்கேயச் சொற்களாதல் காண்க. இனிச் சிங்கள மக்களின் பெயர்கள் பெரும்பாலும் போத்துக்கேயருடைய பெயர்களே. சில்வா பெரீரா பெரியரா கொறியா பெர்னாண்டோ சொயிசா என்பவை எல்லாம் போத்துக்கேயரின் பெயர்களே.

---

## 2-ம் பாடம்: ஒல்லாந்தர் கோல்

ஒல்லாந்தர் இலங்கையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து மூன்று தேசாதிபதிகளை நியமித்தனர். கொழும்புத் தேசாதிபதியே முதன்மைபெற்றான். யாழ்ப்பாணத் தேசாதிபதியும் காலித் தேசாதிபதியும் கொழும்புத் தேசாதிபதியின் ஏவலைக் கேட்டனர். கொழும்புத் தேசாதிபதி சாவகத்துப் பட்டாவியத்திலே இருந்த தலைமைத் தேசாதிபதிக்குக் கீழமைந்து ஒழுகினான். ஒல்லாந்தர் நிலவழக்குக்களையும் தீவினைகளையும் விசாரணைசெய்தற்கு நீதிமன்றங்களை நிறுவினர். அம் மன்றங்களின் தீர்ப்பிற்கு இசையாதோர் கொழும்புக் தலைமைத் தேசாதிபதியிடம் முறைகேட்கலாம். ஒல்லாந்தருடைய தேசாதி

பதிகளுள் வான்இம்கோவ் என்பவன் குடிகளை ஓம்பிச் செங்கோல் செலுத்தினன். அவன் குளங்கள் சிலவற்றைப் பழுது பார்த்துக் கமத்தொழிலைப் புரந்தான் இனி ஒல்லாந்தருடைய கிழிந்திய வணிகர் கூட்டமே இலங்கையைக் கைப்பற்றியதாதலின் ஒல்லாந்தர் தேசாதிபதிகளை வணிகவதிபர் என அழைத்தனர். அரசாங்கச் சேவைசெய்யும் ஒல்லாந்தர் உயர்தர வணிகர் கீழ்தரவணிகர் கணக்கர் எனப் பெயர் பெற்றனர். அவர்கள் அரசாங்க சேவையோடு வணிகமும் நடாத்திப் பொருளீட்டினர். ஒல்லாந்தர் குடிகளின் நிலவுரிமைகளைத் தோம்புகளில் பதிந்து வைத்தனர் ஒல்லாந்தர் தமிழருடைய தேசவழமையை நீதிமன்றங்களில் கையாண்டனர். ஒல்லாந்தருடைய அரசியற் சட்டங்கள் இன்றும் இலங்கையில் வழங்குகின்றன ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி நாடாக்கும் நோக்கத்துடன் வரவில்லை. ஒல்லாந்தர் கறுவா பெறுதற்கே வந்தனரெனலாம். ஒல்லாந்தர் கதலிக் மதத்தைக் கண்டித்துப் பிரிவினைக் கிறிஸ்த மதத்தை நாட்டமுயன்றனர். இந்துக்களும் பௌத்தர்களும் தம் கோயில்களில் வணங்கப்படாதெனக் கட்டளை பெற்றனர். யாழ்ப்பாணத்தவர் தம் தேவுக்களை இல்லங்களில் வணங்கினர். யாழ்ப்பாணத்தவர் கிறிஸ்த மதத்தை விரும்பித் தழுவுகின்றிலர் என யாழ்ப்பாணத் தேசாதிபதி சுவாட்குருன் எழுதினன். ஒல்லாந்தர் பாடசாலைகளை நாட்டி ஒல்லாந்த மொழியைக் கற்பித்தனர். அவர்கள் கொழும்பில் ஓர் அச்சுயந்திரமும் நாட்டினர்.

## யாழ்ப்பாணம்

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியவுடன் (கதலிக் துறவிகளை மறைத்து வைத்துச் சரணளிப்போர் தண்டம் பெறுவர் என முரசறைந்தனராகக் குடிகள் கொடுங்கோல் முடிந்ததென அகமகிழ்ந்தனர். பின்னர் ஒல்லாந்தர் குரு பால்டியஸ் பிரிவினைக் கிறிஸ்த மதத்தை உபதேசித்தான். 1680-ல் அவன் யாழ்ப்பாணத்தில் 180,000 மக்களைக் கிறித்தவராக்கினன் என்ப. போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கிய காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 500,000 சனம் வாழ்ந்தனர் என்ப. ஒல்லாந்தர் கிறிஸ்த மதத்தைப் பரப்புதற்கு விழைந்து பல விடங்களில் பாடசாலைகளை நாட்டினர். பாடசாலைகளில் படித்து உத்தியோகம் பெற விரும்புவோர்

கிறிஸ்த மதத்தைத் தழுவினர். சிலர் உத்தியோகம் பெறுதற்கு மதம் மாறினராயினும் சிலர் சைவசமயப் பற்றைக் காட்டற்கு உத்தியோகங்களைத் துறந்தனர். சண்முகநாதமுதலி என்போன் பசுக்கொடை மறுத்துத் தன் பதவியைத் துறந்தான். சைவர் புலைத்தொழில் செய்ய மறுத்தனராக, ஒல்லாந்தர் நெடுந்தீவுப் பறையரைக் கிறிஸ்தவராக்கிக் கோவதை செய்வித்தனர். அக் காலத்தவருடைய சைவப்பற்றை யாம் பாராட்டவேண்டியவ ராவேம். என்னை. போத்துக்கேயர் ஆண்ட காலத்திலே பசுக் கொலை செய்யும் நாட்டில் இருக்கப்படாதென்றே ஞானப்பிர காசர் யாழ்ப்பாணத்தை விட்டுச் சிதம்பரம் சென்றிருந்து சித்தியார்க்கு ஓர் உரை எழுதினர். இதுநிற்க. ஒல்லாந்தர் குடிகளைத் துன்புறுத்தி வரிகள் பெற்றனர். ஆபரணவரி பல் லக்குவரி எனப் புதிய அரசிறைகளை விதித்தனராக ஆபரணம் அணிதலையும் பல்லக்கு ஊர்தலையும் பலர் விட்டனர். மேள வாத்தியத்தோடு மணவிழாச் செய்தோரும் வரியிறுத்தனர். பண்டுதொட்டு வேளாளர் பெற்றிருந்த உரிமைகள் ஒல்லாந்தர் காலத்தில் வேறு வருணத்தினருக்கும் அளிக்கப்பட்டன. வேளா ளர் மணவிழாவிற்கு மேளம் நிலபாவாடை குடமுழா முதலிய உரிமைகள் உடையவராயும் கோவியர் சாவிழாவிற்குப் பறை யடிப்பிக்கும் உரிமையுடையவராயும் முக்கியர் சாவிழாவிற்கு சங்கு ஊதுவிக்கும் உரிமையுடையவராயும் இருந்தனர். இவ் வுரிமைகள் கெட்டு நிலைமாறின எனத்தெரிகிறது. இராச காரியம் செய்யும் வழக்கமும் ஒல்லாந்தர் காலத்திலேயே நிலை குலையத் தொடங்கிய தெனலாம். ஆரியச்சக்கரவர்த்திகள் செங் கோல் செலுத்திய காலத்தில் உழுதுவித்துண்போர் தம் வயல் களில் வேலை செய்வோரை இராச காரியம் செய்தற்குப் பதி னைந்துநாள் அனுப்பவேண்டும்.

மறவர் போர்த்தொழில் செய்யாக் காலங்களில் அரசாங்கத்துக்குரிய நிலங்களில் பயிர் செய்யவேண்டும். சிவி யார் சிவிகை காவுதலோடு உப்பளத்தில் வேலை செய்தனர். இறைகொடாது முடிக்குரிய நிலங்களில் வசிப்போர் அரசாங் கத்துக்குரிய நிலங்களில் பயிர் செய்யவேண்டும். இறைகொ டாது முடிக்குரிய நிலங்களில் வசித்த கொல்லர் தச்சர் தட்டார் கன்னார் ஓவியர் முதலியோர் அரண்மனையிலேனும் எட்டுநாள்

இராசகாரியம் செய்ய வேண்டும். ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் பஞ்சமும் நோயும் ஏற்பட்டன. 1785-ல் மழைக்குறைவால் நெல்விளைவு குன்றப் பஞ்சம் ஏற்பட்டது. வைசூரி நோய் பரம்பியதாக மாரியம்மன் கோவில்கள் பல விடங்களில் தோன்றின. இங்ஙனம் கோல் கோடியதாக நில வழக்குக்கள் மிகுந்தன. ஒல்லாந்தர் காணிப் பெயர் அளவு உரிமை முதலியவற்றைத் தோம்புகளில் எழுதி வைத்தனர். சண்முகநாதமுதலி எழுதிய தோம்பை ஒல்லாந்து சென்று கல்வி பயின்றுவந்த இலங்கைக் குடிமகன் ஒருவன் எழுதி முடித்தனன் எனத் தெரிகிறது. ஒல்லாந்தர் கொடுங்கோலோச்சினர் என்பது பூதத்தம்பியின் வரலாற்றால் இனிது புலப்படுகிறது. ஆதலின் அதைக் கூறுவாம்.

## பூதத்தம்பி

ஒல்லாந்தர் அரசிறை தொகுத்தற்கு வேளாம் பிள்ளையாகிய பூதத்தம்பி முதலியையும் செம்படவனாகிய மனுவல் அந்திராசியையும் நியமித்தனர். பூதத்தம்பி அந்திராசியுடன் நட்பாயிருந்தனன். ஒருநாள் பூதத்தம்பி தனது மாளிகையில் அளித்த விருந்துக்கு அந்திராசியையும் அழைத்தனன். பூதத்தம்பி அந்திராசியை நன்கு உபசரித்தனன். அத்தருணத்தில் அந்திராசி பூதத்தம்பியின் மனைவியின் அழகைக்கண்டு மயங்கினான். அந்திராசி காமபரவசனாய் வீடு திரும்பினான். ஒரு தூதனிடம் வெண் பொற்காசும் பட்டாடை முதலியனவும் கொடுத்துப் பூதத்தம்பியின் மனைவி அழகவல்லியிடம் யாவரும் அறியாவகை அளித்து அவளைக் காணுதற்கு ஏற்றகாலம் யாதெனக் கேட்டு வரும்படி ஏவினான். அவள் சினந்து ஒரு செருப்பை எடுத்துத் தூதனிடம் கொடுத்தனுப்பினாள். அந்திராசி அவளுடைய செருக்கை அடக்குதற்குத் தருணம் பார்த்திருந்தான். அந்திராசி கச்சாய்த் துறைக்கு மரங்கள் அனுப்புதற்கு உத்தரவு கேட்டு நின்று வெண்தாளில் பூதத்தம்பியின் கையெழுத்தைப் பெற்றான். அத்தாளில் ஒல்லாந்தரை ஓட்டுதற்குப் பூதத்தம்பி பறங்கியருக்குத் துணைபுரிய இசைந்தான் என எழுதப்பட்டது. அக் கடிதத்தை அந்திராசி ஒரு தூதனிடம் தான் பறித்தெடுத்தான் என ஒல்லாந்த தேசாதிபதிக்குச் சொன்னான். அரச துரோகம் செய்யும் பூதத்தம்பியை

அன்றிரவே கொல்ல வேண்டுமெனத் தேசாதிபதிக்குப் புத்தி கூறினான். தேசாதிபதியின் சகோதரன் அறியின் பூதத்தம்பி யைத் தப்பவைப்பன் என எண்ணியே அவன் ஊர்காவற்றுறை யில் கோட்டை கட்டுவிக்கும் காலத்தில் அந்திராசி பூதத்தம்பி யைக் கொல்வித்தானும். பூதத்தம்பி கொலையுண்டதை அழக வல்லி கேள்வியுற்று உயிர் நீத்தாள். பூதத்தம்பியின மைத் துனன் கைலாய வன்னியன் கொழும்பு சென்று தலைமைத் தேசாதிபதிக்கு அந்திராசி செய்த சூழ்ச்சியை அறிவித்தான். விசாரணைக்குச் சென்ற யாழ்ப்பாணத் தேசாதிபதி கடலிற் பாய்ந்து தற்கொலை புரிந்தான். அந்திராசியை யானை அடித் துக் கொன்றது. இந் நிகழ்ச்சியை ஒல்லாந்தர் விரித் தெழுத வில்லை. அரச துரோகம் செய்த பூதத்தம்பியும் பறங்கியர் ஐவரும் தண்டிக்கப் பட்டனர் எனப் பால்டியஸ் எழுதினுன். அரசதுரோகம் செய்தோர் சிலரைச் சிலுவையில் அறைந்தும் நெஞ்சைக் கொத்திப் பிளந்தும் ஈரலைப் பிடுங்கியும் வதைத் தனர் எனவும் எழுதினுன். அந்திராசியின் வஞ்சனையால் பூதத்தம்பி கொல்லப்பட்டான் என்பது பாரம்பரையாக வழங் கும் கதையாலும் பூதத்தம்பி நாடகத்தாலும் தெளிவாகின்றது. பூதத்தம்பி நாடகம் இயற்றியோன் மாதோட்டத்துச் சுவான் கொஸ்தான் மகன் தாவீது கிறிஸ்தவனுகையால் அந்திராசி யைப் பற்றிப் பொய்க்கதை சிருட்டித்திரான் என்பதும் அவன் சம்பவத்திற்குச் சமீப காலத்தவனுகையால் உண்மையையே கூறி யிருப்பான் என்பதும் பொருந்தும். இனி ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் இந்துக்களும், சோனகரும் கலகப்பட்டனர். காயல் என்னும் நகரத்துச் சோனகர் சிலர் உசனில் குடியேறி னர். அவர்கள் பின்னர் நல்லூரில் குடியேறினர் அவர்கள் நல்லூர்க் கோயிலருகில் சோனகப்பள்ளி ஒன்று கட்டினர். இந்துக்கள் சோனகப்பள்ளியை மூடும்படி இரந்தனர். சோன கர் இசையாமையால் தேசாதிபதியை இரந்தனர். தேசாதிபதி காலம் போக்க, இந்துக்கள் பன்றி யிறைச்சியை முகமதிய ருடைய வீட்டுக் கிணறுகளில் எறிந்தனர். சோனகர் குடி யெழும்பி நாவாந்துறையை உறைவிடமாகக் கொண்டனர்.

———

## 3-ம் பாடம்: இறுதிக் காலக் கண்டி மன்னர்

இராசசிங்கன் II ஐம்பது ஆண்டு அரசுபுரிந்து 1687-ல் இறக்க, அவன் மகன் விமலதர்மன் II அரசுகட்டிலேறினன். அவன் தன் ஆட்சிக்காலமாகிய 22 ஆண்டும் ஒல்லாந்தரோடு நட்பாயிருந்தனன். விமலதர்மனுடைய ஆட்சிக் காலத்தில் 1697-ல் வைசூரி நோய் கண்டி நாடுகளில் பரம்பியது. அக்காலத்தில் இந்தியப் பிராமணனுயிருந்த ஒருவன் கதலிக்கமதத்தைத்தழுவித் துறவியானுன். அவன் யோசேப்புவாஸ் எனப் பெயர் பெற்றுன். அவன் பிணிவாய்ப்பட்டோருக்குத் தொண்டு செய்து சனங்களால் மிகவும் நேசிக்கப்பட்டான். பலர் அவனுடைய உபதேசங்கேட்டுக் கதலிக் மதத்தைத் தழுவினர்.

விமலன் இறந்தபின் அவன் மகன் நரேந்திரசிங்கன் முடிபெற்றுன். அவன் பௌத்த மதத்தைப் புரந்தான். அவன் மதுரை மன்னன் மகளை மணமுடித்தான். அவனுடைய காலத்தில் கரை நாடுகளில் ஒல்லாந்த தேசாதிபதியாக இருந்த பீற்றஸ் வூஸ்ற் என்பவன் இலங்கையை ஆளுவதற்குத் தனக்கு இரண்டு கண்களும் தேவை இல்லை என மொழிந்தானும். அவன் குடிகளைத் துன்புறுத்தினுன். ஒல்லாந்தரே அவனைக் கொடுங்கோலன் எனத் தண்டித்தனராயின், அவனுடைய கொடுங்கோல் எத்தன்மைய தென்பதைச் சிந்தித்துணர்க. 1736-ல் தேசாதிபதியாக இருந்த வான் இம் கோவ் என்பான் கமத்தொழிலை விருத்தி செய்தான்; தென்னை நடுவோர்க்கு உதவி புரிந்தான்; நீதிசெலுத்தலிலும் கவனமாக இருந்தனன். 1737-ல் அவன் அச்சுயந்திரம் ஒன்று நிறுவினுன்.

நரேந்திரன் ஆண்டகாலத்தில் விசய நகர மன்னருடைய உபராசரின் குலத்தினர் மதுரையில் ஆண்டனர். அவர்களை நாயக்கர் என அழைத்தல் உண்டு. மதுரை நாயக்கக்குடும்பத்தில் கண்டிமன்னர் விவாகசம்பந்தம் செய்துஇருந்தனர் 1739-ல் நரேந்திரன் பிள்ளைகளின்றித் துஞ்சினுன. அவனுடைய மனைவியின் சகோதரன் மதுரையிலிருந்து வந்து கண்டியில் ஆண்டான். அவன் பெயர் ஸ்ரீவிசயராசசிங்கன். அவன் முடி பெற்றவுடன் பௌத்த மதத்தைத் தழுவிக் கதலிக்கரைத் துன்

புரிந்தினன். அவன் இறந்தபின் அவனுடைய மைத்துனன் கீர்த்திஸ்ரீ மதுரையிலிருந்து வந்து 1747 முதல் 1780 வரையும் அரசுபுரிந்தான். 1750-ல் அவன் பௌத்த பிக்குக்களைச் சீயத்திலிருந்து வரவழைத்தான் அவன் பற்சின்னத்தை யானைமீது ஏற்றி ஊர்வலம்செய்து விழாநடத்தும் வழக்கத்தைத் தொடங்கினன். 1765-ல் அவனை ஒல்லாந்தர் பகைத்திருந்த போதிலும் அவர்கள் கண்டியைப் பிடிக்க முயலவில்லை. பின்பு ஒல்லாந்தர் அவனோடு நட்புடன்படிக்கை எழுதினர்.

கீர்த்திஸ்ரீயின் சகோதரன் இராசாதிராசசிங்கன் 1780 தொடக்கம் 1798 வரையும் ஆண்டான். அவனுடன் அங்கிலரும் பிராஞ்சியரும் உடன்படிக்கை எழுத முயன்றனர் திரிகோணமலையில் முதல் அங்கிலர் தம் கொடியை நாட்டினர். பிராஞ்சியர் அங்கிலரைக் கலைத்துத் தம் கொடியை நாட்டினர். 1795-ல் அங்கிலர் பிராஞ்சியரைக் கலைத்துப் பட்டினத்தைக் கைப்பற்றினர். பிராஞ்சியருடைய அரசியற் குழப்பத்தின் பயனாகப் பிராஞ்சியர் அயலாரோடு அமர் புரிந்தனர். ஒல்லாந்தர் தோல்வியடைந்து பிராஞ்சியரோடு உடன்படிக்கை எழுதினர். ஒல்லாந்தர் உடன்படிக்கை எழுதிய போதிலும் அங்கிலர் போரைத் தொடர்ந்தனர் 1796-ல் ஒல்லாந்தர் இலங்கையில் ஆண்ட கரைநாடுகளைப் பிராஞ்சியர் கைப்பற்ருவண்ணம் தாம் காவல் செய்ய வேண்டுமென விளம்பி அங்கிலர் இலங்கையில் இறங்கினர். இங்ஙனம் இலங்கைக் கரைநாடுகளை அங்கிலர் நட்புமுறையாகக் கைப்பற்றினர்.

கீழிந்திய அங்கில வணிகர் கூட்டம் வங்கத்தையும் சென்னையையும் ஆண்டது. இவ்வணிகர் கூட்டத்தின் படையே இலங்கையைக் கைப்பற்றியது அங்கிலர் இலங்கையைப் பிராஞ்சிய அரசியற் புரட்சிப் போர் முடிந்தவுடன் ஒல்லாந்தருக்கு அளிக்க எண்ணியிருந்தனராகலின், சிறிது காலத்துக்கு இலங்கையை ஆளும்படி கீழிந்திய வணிகர் கூட்டத்தை வேண்டினர் சென்னையிலிருந்த தேசாதிபதி இலங்கையை ஆளும்படி ஒரு தேசாதிபதியை நியமித்தான். நயம் காட்டலே வணிகர் நோக்கமாகலின் இலங்கையில் அரசிறைகளைத் தொகுத்தற்கு அந்துரூஸ் என்பவனை நியமித்தனர். அவனோடு சேவித்

தற்கு இந்திய உத்தியோகத்தர் பலர் இலங்கை வந்தனர். அங்கிலர் இலங்கைக் கரைநாடுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அரசிறை தொகுப்போர் மூவரை யாழ்ப்பாணம், கொழும்பு, திரிகோணமலை என்னும் நகரங்களில் நியமித்தனர். இவ்வரசிறை தொகுப்போருக்குக் கீழ் சேவகர்கள் சேவித்தனர். இவர்களைத் தானியம் முதலிய பெருமல் காசு பெறும்படி அந்துரூஸ் ஏவினன் அரசிறையின் தொகையையும் அரசிறை கொடாதோர் இறுக்கும் தண்டத்தையும் அரசிறை தொகுப்போரே விதித்தனர். இங்ஙனம் வழக்குரைத்தலும் நீதி செலுத்தலும் ஒருவரால் செய்யப்பட்டதாகலின் இவ்வரசியன்முறை கொடுங்கோலாயிற்று. புதிய அரசிறைகளுள் தென்னைவரி மிகவும் அநீதியானது. தென்னை காய்த்தாலும் காயாவிட்டாலும் அரசிறை பெறப்பட்டது. பழையமுறைப்படி அரசிறை பெறப்படாமையால் குடிகள் அரசிறை தொகுப்போரைப் பகைத்தனர். ஒல்லாந்தரும் அங்கிலருக்கு எதிராகப் பகை மூட்டினர். 1796-ல் திரிகோணமலையில் சேவகன் ஒருவன் கொல்லப்பட்டான். குடிகள் பலவிடங்களிலும் பகைத்தெழும்பிய போதிலும் அடக்கப்பட்டனர். இக்கலகத்தின் காரணம் யாதென விசாரணை செய்யும்படி டிமுறன் முதலிய மூவரை அங்கிலர் நியமித்தனர். விசாரணை முடிவில் இந்திய உத்தியோகத்தர் அரசிறை தொகுக்கப்படாதெனவும் தென்னை வரி பெறப்படாதெனவும் தீர்மானம் ஆயிற்று. இதன் பயனுகவே 1805-ல் இலங்கை முடிக்குரிய குடியேற்றநாடென மன்னனுல் நியமிக்கப்படும் தேசாதிபதியால் ஆளப்பட்டது. தேசாதிபதி 'நோத்' என்பவன் குடியேற்றநாட்டமைச்சனுல் நியமிக்கப்பட்டு இலங்கை வந்து சேர்ந்தான்.

### கண்டி மன்னன் கண்ணசாமி

1798-ல் இராசாதி ராசசிங்கன் பிள்ளைகளின்றி மரித்தான். அதிகாரி பிலாமித்தலாவை அரசனுடைய இல்லக் கிழத்தி ஒருத்தியின் மருகனுகிய கண்ணசாமியை அரசனுக்கினுன். கண்ணசாமி ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் எனப் பட்டம் பெற்றுன். இராசாதி ராசசிங்கனுடைய சுற்றத்தார் பலரைச் சிறையிடும்படி பிலாமித்தலாவை புத்தியுரைத்தான். நாயக்கரை அந்நியரெனச்

சிங்கள அதிகாரிகளும் திசாவைகளும் வெறுத்தனர். பிலாமித்தலாவை சிங்கள கட்சித்தலைவனாகலின் நாயக்கரைச் சிறையிடும்படி உரைத்தனன். இராசாதிராசனைத் தன் பதவியைத் துறக்கும்படி பிலாமி ஏவினான் எனவும் முடியைத்தான் பெற விழைந்த போதிலும் திசாவைகள் அழுக்காறு காரணமாகத் தன்னைப் பகைப்பார் என எண்ணியே முடியைக் கண்ணசாமி என்னும் இளைஞனுக்கு அளித்தான் எனவும் கூறப்படும். இராசாதி ராசனுடைய பட்டத்து மனைவியின் சகோதரன் முத்துச்சாமி முடிதனக்கு உரியதெனக் கிளந்தான். அங்கிலத் தேசாபதி 'நோத்' என்பான் பிலாமித்தலாவை என்பவனுக்கு உதவி செய்ய உடன்பட்டான். அவனுடைய ஏவற்கிசைந்து படைத்தலைவன் மக்டோவல் 2000 வீரரோடு கண்டிராசனைச் சந்திக்கப் போனான். அரசன் மக்டோவல் என்பவனை நகருள் புகவிடவில்லை. பிலாமித்தலாவை நோத் என்பானுக்கு கண்ணசாமி அங்கிலரைப் பகைத்திருக்கிறான் எனவும் கண்ணசாமிக்கு நோத் என்பான் கண்டியரசைப் பிடிக்கக் கருதுகிறானெனவும் புறங்கூறி ஒருவரை ஒருவர் பகைக்கப் பண்ணினான். பிலாமி அங்கிலரைக் கொண்டு கண்டியரசைப் பிடித்து ஆள எண்ணினன். ஆனால் அங்கிலர் பிலாமியைக் கொண்டு கண்டியரசைத் தம் காவலுக்குள் கொணர எண்ணினர். அங்கிலர்க்கும் கண்டியரசர்க்கும் இடையில் கலகம் மூண்டால் தன் எண்ணம் சித்திக்கும் எனப் பிலாமி எண்ணினான். அங்கிலக் குடிகளாகிய சோனகர் சிலர் கண்டியில் பாக்கு வாங்கினர். சோனகர் வாங்கிய பாக்கைப் பறிக்கும்படி கண்ணசாமியை பிலாமி தூண்டினன். இதற்குக் கண்ணசாமி இசைந்தானாக. அங்கிலர் பகை தொடர்தற்கு ஏதுப்பெற்றனர். அங்கிலர் கண்டியைப் பிடிக்க முயன்றனராக. பிலாமியும் கண்ணசாமியும் அங்குருங்கற்றையில் மறைந்து இருந்தனர். மக்டோவல் 1803-ல் கண்டி சென்று முத்துசாமியை மன்னனாக்கித் திரும்பினான். பிலாமித்தலாவை தன்னை அரசனாக்காமையால் அங்கிலரைக் கெடுக்க எண்ணினன். அரசனைப் பிடித்தற்குத் தான் உதவி புரிவான் எனச் சொல்லி அங்கிலருடைய படையை மலைப்பாதைக்குள் கூட்டிச்சென்று தொலைக்க எண்ணினன். அங்கிலர் அதற்கு இசையவில்லை. பின்பு பிலாமி அரசனை ஏவிப் படை சேர்த்

துக் கண்டி நகரைப் பிடித்தான். முத்துச்சாமியையும் அங்கில வீரரையும் திரிகோணமலைக்குப் போகவிடும்படி படைத்தலைவன் டேவி இரந்தான். அரசன் அதற்கு உடன்பட்டு அங்கிலர் படைக்கலம் இன்றிப் போகலாமென உத்தரவு அளித்தான். அரசன் அங்கிலரை இருவர் இருவராகக் கொல்லும்படி காப்பிரிகளை ஏவினான். அதன்பின் அங்கிலரை விரோதித்து மன்னார் சிலாபம் புத்தளம் கொட்டியாரம் முதலிய இடங்களில் குடிகள் எழும்பினர். இப்பகை அடக்கியபின் அங்கிலர் கண்டி ராசனுடைய படைகளை ஆனுவெல்லை என்னும் களத்தில் புடைத்துப் பின்னர் சீதுவன் வலையிலும் கலைத்தடித்தனர். அங்கிலர் வெற்றியடைந்த போதிலும் கண்டியைப் பிடிக்க முயலவில்லை.

ஸ்ரீவிக்கிரமராசன் கண்டி நகரை அலங்கரித்தான். அவன் பற் சின்னம் வைக்கத் தலத மாளிகை என்னும் கோட்டத்தைக் கட்டினான். கேகாலைக் குடிகள் அரசனைப் பகைத்து அரசிறை யிறுக்க மறுத்தனராகப் பிலாமி அக் குடிகளின் அரசிறையைத் தன்னைத் தொகுக்கவிட்டால் தான் பகை யடக்குவான் என மொழிந்தான். அங்ஙனம் பகையடக்கியபின் பிலாமி தன் மகனைக் கீர்த்திஸ்ரீயின் பேரப்பிள்ளைக்கு விவாகஞ் செய்தான். அரசன் அமைச்சன் முடியைக் கவர எண்ணுகிறான் எனத் துணிந்து அவனை விரோதித்தான். பிலாமியை அதிகாரப் பதவியைத் துறக்கும்படி கற்பித்தான். பிலாமி சினந்து அரசனைக் கொல்விக்க முயன்றான். அரசன் அதை யறிந்து பிலாமியை 1811ல் சிரச்சேதஞ் செய்வித்தான். அரசன் தன் குடிகளை அதிகாரிகள் திசாவைகள் முதலியோருடைய கொடுங் கோலிலிருந்து காக்க முயன்று அதிகாரிகளால் பகைக்கப் பட்டான். அதிகாரிகள் தாம் செய்யும் தீவினை எல்லாம் அரசனுடைய ஏவற்படியே செய்யப்படுகின்றன எனக் குடிகளுக்கு உரைத்தனர். குடிகள் அவ்வுரைகளை நம்பி அரசனைப் பகைத்தனர்.

பிலாமியின் மருகன் எகலப்பொலை அதிகாரப் பதவியைப் பெற்றான். மொலிகொடா இரண்டாம் அதிகாரப் பதவியைப் பெற்றான். எகலப்பொலையை அரசன் தன் பகைவன் என

எண்ணினன். அவனை விசாரணை செய்வதற்குக் கண்டிக்கு வரும்படி கட்டளை யிட்டான். எகலப்பொலா கொழும்புக்கு ஓடி அங்கிலரைக் கண்டியைப் பிடிக்கும்படி தூண்டினன். அரசன் வெகுண்டு எகலப்பொலையின் மனைவியையும் மக்களையும் கொன்றான். பிள்ளைகளின் தலையை உரலில் இட்டுத் துவைக்கும்படி தாய் கட்டளை பெற்றுளாம். இக்கதை யோன் டேவி என்பவனால் எழுதப்பட்டது. கதை அவனால் சிருட்டிக் கப்பட்டதெனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். 1815ல் கரைநாட்டுக் குடிகள் சிலரை ஒற்றர் எனத் துணிந்து மன்னன் துன்புறுத்தினனாக, அங்கிலர் தாம் சிங்களரைக் கொடுங்கோலிலிருந்து காத்தற்கு வந்தனரெனக் கிளர்ந்து கண்டி நாட்டைப் பிடித்தனர்.

---

## 14-ம் அதிகாரம்

## அங்கிலர் முடியும் குடியும்

### 1-ம் பாடம்: யேம்ஸ் I

அங்கிலர் தம் அரசியல் குடியுரிமைகளை இனிது காக்கின்றதெனவும் தம்மரசியல் ஏனைய அரசியல்களிலும் சிறந்ததெனவும் விளம்புகின்றனராகலின் அதனை ஈண்டு ஆராய்வாம். அரசி எலிசபத்தின் பின் கலிடோனிய தேயத்து மன்னன் ஆறுவது யேம்ஸ் அங்கில மன்னன் ஏழாவது ஹன்றியின் வழித்தோன்றியவனாகலின், அங்கிலவரசைப் பெற்றான். யேம்ஸ் கலிடோனியாவையும் இங்கிலாந்தையும் ஆண்டனன் ஆதலின் பிரித்தானியா ஒரு மன்னனால் ஆளப்பட்டது. யேம்ஸ் அங்கில வரலாற்றில் முதலாம் யேம்ஸ் எனச் சொல்லப்படுவன். முதலாம் யேம்ஸ் பலமொழிப் புலமையினும் கற்ற மூடன் என இகழப்பட்டான். அவனுடைய மனசில் ஸ்பானியரோடு பகையாகாதென்பது நன்று பதிந்திருந்தது. அங்கில மக்கள் புதிய மதமாகிய பிரிவினைக் கிறிஸ்தவ மதத்தினருக்குத் துணை

புரிய விரும்பியபோதிலும் அரசன் யேம்ஸ் முப்பதாண்டுச் சமயப்போரில் கலக்க விரும்பவில்லை.

யேம்ஸ் அரசுரிமை பெற்றதும் அவனுக்கு எதிராகச் சிலர் சூழ்ச்சி செய்தனர். யேம்ஸ் இருலி என்பவனின் செல்வாக்கில் அழுக்காறுற்று அவனைச் சிறையிட்டான். அவன் பன்னீராண்டு சிறையிலிருந்து சரித்திர நூலொன்று எழுதியது மன்றிப் பலகலைகளையும் ஆராய்ந்தான். பின்பு அரசன் பொருள் தேவைப்பட்டானாகத் தான் அமரிக்கா சென்று பொன்பெற்று வருவான் என விளம்பி விடுதலையாயினன். அரசன் இருலியைத் தென்னமரிக்காவில் ஸ்பானியரோடு போர் செய்யப்படாதெனக் கட்டளையிட்டான். இருலி பொற்சுரங்கத்தைத் தேடி அலையுங்காலை ஸ்பானியரோடு போர் செய்ய நேரிட்டது. இருலியின் மகன் ஒருவன் அப்போரில் இறந்தான். இருலி இங்கிலாந்து திரும்பியவுடன் ஸ்பானியரைத் திருப்திப்படுத்தற்காக அவனை அரசன் சிரச்சேதஞ் செய்வித்தான்.

1605-ல் கதலிக்கர் சிலர் அரசனையும் பாராளுஞ் சபையையும் மன்றத்திற் கூடியிருக்கும் சமயத்தில் வெடியுப்பு வைத்துத் தொலைக்க முயன்றனர். அங்ஙனம் முயன்றோரில் ஒருவன் தன் நண்பனைக் குறித்தநாள் பாராளுஞ் சபைக்குச் சமுகமளிக்க வேண்டாமெனக் கடிதமூலம் அறிவித்தான். அக்கடிதம் அரசன் கையில் அகப்பட்டது. அரசன் நடுநடுங்கி மன்றத்தைப் பரிசோதனை செய்யும்படி ஏவினன். மன்றத்தின் கீழுள்ள சாலைகளில் வெடியுப்புக் குவிக்கப்பட்டிருப்பதையும் ஒருவன் தீக்கொழுவ எத்தனம் செய்வதையும் கண்டனர். அதன்பின் உரோமன் கதலிக் துறவிகள் பலர் நாடுகடாத்தப்பட்டனர்.

சமயக் கட்சிகள் பல்வதலை நன்குணர்ந்த யேம்ஸ் பல மதத்தோரையும் ஒருங்குகூடி வாதித்து ஒரு முடிவுக்குவரும்படி கற்பித்தான். அச்சபை கி. பி. 1604ல் கூடியது. அச்சபைக்குத் தானே தலைமை வகித்தான். கதலிக் கட்சியார் தம் மதத்தை மொழிந்தனர். புதிய மதத்தினர் தம் மதத்தை மொழிந்து கதலிக் குருமாரின் அதிகாரத்தை முற்றும் அழிக்கவேண்டுமென வற்புறுத்தினராக, யேம்ஸ் வெகுண்டனன். "என்னை! குரு

மாரின் அதிகாரம் கெட்டால் அரசனின் அதிகாரம் கெடு மல்லவா" வெனக் கழறிக் கூட்டத்தைக் குலைத்தனன். இதன் பின் புதிய மதத்தோரைத் தண்டச் சபையை ஏவித் துன்புறுத்தினன். புதிய மதத்தோர் பலர் தம் நாடு துறந்து ஒல்லாந்து சென்று அவண் சிலகாலம் வைகிப் புலம் பெயர்ந்து வட அமரிக்காக் கண்டத்தில் குடியேறினர். இவர்கள் பெருக, அமரிக்க ஒற்றுமைக் குடியரசு என்னும் இராச்சியம் உண்டானது.

## அரசியலுரிமை

அரசர் யாவரும் செங்கோலோச்சும்படி இறைவனால் நியமிக்கப்பட்டன ரென்றும் அரசர் தம் செயல்களுக்கு இறைவன் ஒருவருக்கே பாத்திரரொழிய வேறொருவர்க்கும் பாத்திர ரல்லர் என்றும் யேம்ஸ் நம்பியிருந்தனன். அன்றியும் அரசர் பொது சனங்களால் தெரியப்படுபவர் அல்லர் என்றும் பாராளும் சபைக்கு அரசரைத் தெரியுமுரிமை யில்லை யென்றும் வாதித்தனன். அங்கிலருள் ஒரு சாரார் அரசன் தன் வினைக்கு உத்தரவாதி யாவனெனவும் இறைவனால் நியமிக்கப்பட்டவன் அல்லனாதலின் பாராளும் சபை ஆக்கும் பிரமாணங்களுக்கு அமைந்தே ஒழுகவேண்டுமெனவும் விளம்பினர். இவர்கள் பெரும்பாலும் புதிய மதத்தோரே. பிறிதோர் சாரார் இறைவனாலே அரசன் நியமிக்கப்பட்டவனெனவும் அரசனுக்கு அரசுரிமை பரம்பரையாக வுரியதொழியப் பாராளுஞ் சபையால் அளிக்கப்பட்டதன்றெனவும் உரைத்தனர். இவர்கள் கொள்கைப்படி பாராளுஞ் சபை அரசனுக்குப் புத்தியுரைப்பதொழிய அரசனைக் கட்டுப்படுத்தும் ஆற்றலில்லாத கூட்டமாகும். இவர்கள் பெரும்பாலும் அங்கிலக் கதலிச் சமயத்தையே தழுவினர். அங்கிலக் கதலிக்கர் அங்கில வரசனே தம் சமயமுதற்குரு வெனவும் அங்கிலக் கதலிக் கிரியைகளே முறையானவை எனவும் நம்பினர். எதிர்க்கட்சியார் அரசனுக்கும் சமய வழிபாட்டுக்கும் யாதொரு தொடர்பும் இருக்கக்கூடாதெனவும் ஒவ்வொருவரும் தாமுணர்ந்தவாறு தம் தெய்வத்தை வழிபடும் உரிமை உடையராதல் வேண்டுமெனவும் லூதரின் கொள்கையே சிறந்ததெனவும் பாராளும் சபையோடு இணங்கி அரசியலை நடாத்தும் குடியரசுமுறையே சிறந்த

தெனவும் எண்ணினர். இங்ஙனம் இங்கிலாந்தில் சமயக் குழப்பமும் அரசியற் குழப்பமும் ஒருங்கு நிகழ்ந்தன.

### சுங்கவுரிமை

கி. பி. 1604-ல் யேம்ஸ் பாராளுஞ் சபையைக் கூட்டினன். பிரதிநிதியாகத் தெரியப்பட்ட கோட்டுவின் என்பவனைக் கலகக்காரன் என நீதிபதிகள் துணிந்தனராதலின் அவன் பாராளுஞ் சபைக்கு அங்கத்தினனாகு முரிமையை இழந்தானென அரசன் பகர்ந்தனன். சபையோர் கோட்டுவினுடைய உரிமையைப் பற்றித் தாமே தீர்மானிக்க உரிமையுடையோரெனவும் நீதிபதிகளுக்கும் அரசனுக்கும் உரிமையில்லையெனவும் வாதித்தனர். முடிவில் அரசன் தன் அதிகாரத்தைச் செலுத்தாமல் சபையோடு இசைந்தான். அரசனின் வாழ்க்கைச் செலவுக்கென இறக்குமதி செய்யும் பண்டங்களில் பெறப்படும் அரசிறையை அரசனுக்குக் கொடுத்தல் வழக்கம். அப்பணம் தன் செலவுக்கும் போதியதன்றென எண்ணிய வரசன் ஒவ்வொரு எடைக்குரிய சுங்கத்தைச் சிறிது கூட்டினன். சுங்கப் பணத்தைக் கூட்டுதற்கு அரசனுக்கு உரிமையில்லையெனச் சிலர் சாற்றினர். பேற்ஸ் என்னும் வணிகன் சுங்கங் கொடுக்க மறுத்தனன். அரசன் அவன்மீது வழக்குத் தொடர்ந்தான். துறைமுகம் அரசனுக்குரியதாதலின் அரசன் சுங்கத்தைக் குறைக்வும் கூட்டவும் உரிமையுடையவன் என நீதிபதி தீர்ப்புச் சொன்னான். அத்தீர்ப்பைப் பெற்றபின் எல்லாப்பண்டங்களின் சுங்கத்தையுங் கூட்டினன். 1611-ல் அரசன் பாராளுஞ் சபையைக் குலைத்துப் பத்தாண்டு தன்னிஷ்டப்படி ஆண்டனன். அரசன் தன் மகள் எலிசபெத்தை செர்மனிய குறுநில மன்னன் பிரட்ரிக் என்பவனுக்கு மணமுடித்தனன். அம்மன்னன் புதிய மதத்தினனாதலின் 30 ஆண்டுச் சமயப்போரின் தொடக்கத்தில் தன்னாட்டை யிழந்தான். தன்னுடைய நாட்டைக் கைப்பற்றிய கதலிக்கருடன் பொருதற்கு அங்கில மன்னனிடம் பொருளுதவி வேண்டினன். யேம்ஸ் பாராளுஞ் சபையிடம் பொருள் பெறலாம் என எண்ணிச் சபையைக் கூடும்படி விளம்பரஞ் செய்தான்.

### அரசனும் பாராளுஞ் சபையும்

பாராளுஞ்சபை இரு பிரிவாகக் கூடுதல் வழக்கம். மேன் மக்களும் சமய குருமாரும் மேல் மாடத்தில் கூடுவர். பொது சனப் பிரதிநிதிகள் கீழ்மாடத்தில் கூடுவர். அரசன் ஒருவனுக்கே இச்சபைகளைக் கூட்டும் உரிமையுண்டு. கீழ் மாடச் சபையாகிய பொதுச்சபை தீர்மானம் ஒன்றைக் கொணர்ந்தால் அது மேன்மாடச் சபையாலும் அரசனாலும் அங்கீகரிக்கப்பட்டால் பிரமாணமாகும். பொதுசனச் சபை அமைச்சரைக்கண்டிக்கும் உரிமையையுடையது. 1621-ல்கூடியசபை அமைச்சன் பேக்கனைக் கைக்கூலி பெற்றானெனக் கண்டித்தது. பேக்கன அறிஞனாயினும் அக்காலத்தில் பலரும் கைக்கூலி பெற்றமையால் அவனும் பெற்றான். இது நிற்க ஸ்பானிய வேந்தனுடைய மகளை யேம்ஸ் தன் மகன் சாள்ஸ் என்பவனுக்கு மணம் பேசினன். பொதுசனச் சபையார் அவ்விவாகம் நடந்தால் அரசயிலுக்குக் கேடுவிளையுமெனப் பேசினர். சபையோர் அரசியலைப்பற்றித் தாம் நினைத்தவாறு பேசவியலாதெனவும் அரசனுடைய உத்தரவின்றிச் சிலவிஷயங்களைப் பற்றிப் பொதுசனச்சபை பேசக்கூடாதெனவும் யேம்ஸ் I கூறினன். சபையோர் எவ்விஷயத்தைப்பற்றியும் தாம் பேசலாமென வாதித்தனராக, அரசன் குறிப்புப் பத்திரத்தைக் கிழித்தெறிந்து சபையைக் குலைத்தனன். பின்பு 1624-ல் பிறிதோர் சபைகூடி ஒருவாறு அரசனோடு ஒத்துழைத்து முப்பதாண்டுச் சமயப் போரிலும் சிறிது காலம் பங்குபெற்றது. இவ்வண்ணம் வேந்தனுக்கும் பாராளுஞ் சபையாருக்கும் தம் உரிமைகளைப்பற்றி அபிப்பிராயபேதந் தொடங்கியது. யேம்ஸ் முதலாவது என்னும் அரசனுடைய காலத்தில் கட்சிக்கலகம் கால்கொண்டதெனக் கூறலாம்.

## 2-ம் பாடம்: கொடுங்கோலன் சார்ள்ஸ் I

சார்ள்ஸ் I என்பவனுக்கு ஸ்பானிய அரச குமாரத்தியை மணம் பேசினர். அப்பேச்சுக் குழம்பியபின், பிராஞ்சிய வேந்தன் மகள் அன்றியற்றாவை மணமுடித்து வைத்தனர். சார்ள்ஸ் அரசு கட்டி லேறியவுடன் அவனைப் புதிய சமய ஏற்பாடுகளை மாற்றும்படி அன்றியற்றா தூண்டினள். அரசன் மும்முறை

பாராளுஞ் சபையைக் கூட்டி மும்முறையும் சபையுடன் ஒத் துழைக்க முடியாமல் சபையைக் குலைத்தனன். அதன்பின் பதினொரு வருடங்களாகக் கொடுங்கோலோச்சினன். முப்பதாண் டுச்சமயப் போரில் புதிய பிரிவினை மதக் கட்சியினருக்கு உதவி செய்தற்குப் பெருந் தொகை பணம் வேண்டுமென விளம் பினனெழியத் தனது தேவை யாவை என்பதையும் எவ்வளவு பணம் வேண்டுமென்பதையும் கூறவில்லை. பாராளுஞ் சபை அரசனின் நோக்கத்தை ஐயுற்றுச் சிறுதொகைப் பணம் கொடுத்தது. அத்துடன் வேந்தருக்கு ஆயுட் காலத்துக்குக் கொடுக்கும் சுங்கத்தை மறுத்து இவ்வேந்தனுக்கு ஒரு வருடத் திற்குரிய பணத்தை மாத்திரம் கொடுத்தது. சார்ள்ஸ் பாரா ளுஞ் சபையின் அநுமதியின்றிப் பதினொரு வருடமும் சுங்கப் பணத்தைப் பெற்றான். 1626-ல் கூடிய பாராளுஞ் சபை அமைச்சன் வில்லியர் என்பவனைக் கண்டித்தது. "யோன் எலியற்று" எழுந்து அமைச்சனைக் கண்டித்தானாக, அரசன் அமைச்சரைக் கண்டிக்கும் உரிமை சபையாருக்கு இல்லையென மொழிந்து சபையைக் குலைத்தனன். 1628-ல் சார்ள்ஸ் தன் மூன்றும் பாராளுஞ் சபையைக் கூட்டினன். இப்பாராளுஞ் சபை சபையின் உத்தரவின்றி அரசன் குடிகளிடம் கடன் கேட்கக்கூடா தென்றும் அரசிறை பெறக்கூடா தென்றும் நியாயங் கூறாமல் குடிகளைச் சிறையிடக்கூடா தென்றும் நிலைப் படைக்கு உண்டியும் உறையுளும் அளிக்கும்படி குடிகளை ஏவக்கூடாதென்றும் சமாதான காலத்தில் படை நீதி செலுத் தக்கூடா தென்றும் தீர்மானஞ் செய்தது. அரசன் பொருள் தேவைப்பட்டபடியால் பொருள் பெறுதற்காக இவ்வுரிமைப் பத்திரத்துக்குக் கைச்சான்றிட்டான். 1629-ல் இம்மூன்றும் சபை இரண்டாம்முறை கூடி மேற்கூறிய தீர்மானத்தின்படி அரசன் ஒழுகவில்லையென முறை வேண்டிற்று. அரசன் சபை யைக்குலைக்கும்படி சபைத் தலைவனுக்குக் கட்டளையிட்டான். சபைத்தலைவன் சபையைக் குலைத்தற்கு எழுந்தனனாக, அங்கத் தினர் இருவர் எழுந்து தலைவனை ஆடையாற் பற்றிப்பிடித்து ஆசனத்தில் அமர்த்தினர். அங்கத்தினர் சிலர் வாயிலை அடைத் துப் பூட்டி ஓர் பிரமாணத்தைத் தீர்மானித்தனர். அதுவரு மாறு; "யாவனாயினும் பாராளுஞ் சபையின் உத்தரவின்றி

சமயத்தில் புதிய ஏற்பாடுகள் செய்யும்படியேனும் அரசிறை பெறும்படியேனும் அரசனுக்குப் புத்தி யுராத்தால், அவன் தாய் நாட்டுத் துரோகி யெனத் தண்டிக்கப் படுவன்." என்பது. அரசன் யோன் எலியற்று என்னும் பிரதிநிதியைச் சிறையிட்டு 1629 தொடக்கம் 1640 வரைக்கும் உவந்துவேது லோட்டு என்னும் அமைச்சர் இருவரைக்கொண்டு அரசியலை நடத்தினன். லோட்டு என்னும் சமயகுரு அங்கிலக் கதலிச் சமயத்தைப் பரப்புதற்குத் தன்னால் இயன்றவளவு பிரயத்தனஞ் செய்தான். தனது ஒழுங்குகளை மீறி நடப்போரைச் சமயத் தண்டச் சபையைக்கொண்டு தண்டித்தான். அங்கிலச் சமயத்தைக் கண்டித்தற்காகப் பிறினி என்னும் வழக்கறிஞனும் பாஸ்துவிக் என்னும் மருத்துவனும் 500 காசு குற்றங் கொடுக்கவும் தம் காதுகளை இழக்கவும் நேரிட்டது. தலைநகரத்துச் சனங்கள் இவ்விருவர்மீதும் பூமாரி பொழிந்தனர். அரசன் சனங்களின் எண்ணத்தைப் பொருட்படுத்தவில்லை.

## கரைக் காவற் காசு

முற்காலங்களில் அரசன் கரைக்காவற்காசு கரை நாடுகளில் வசிப்போரிடம் பெறுதல் வழக்கம். அரசனின் கப்பல்கள் கரையைக் காவல் செய்தலால் உண்ணாடும் காக்கப்படுகிறதாகலின் உண்ணாட்டோரும் கரைக் காவற்காசு கொடுக்கவேண்டுமெனச் சார்ள்ஸ் I முரசறைவித்தனன். காசு சொற்பமாயினும் அப்டன் என்போன் கொடுக்க மறுத்தனன். அரசனுக்கு உண்ணாடுகளில் கரைக்காவற் காசுபெற உரிமையில்லையெனவும் பாராளுஞ் சபையின் உத்தரவின்றி அரசன் அரசிறைபெறக் கூடாதெனவும் 1629-ம் ஆண்டுக்கூடிய சபையின் உரிமைப் பத்திரத்தை மீறி அரசன் ஒழுகக் கூடாதெனவும் அப்டன் வாதித்தான். ஏழு நீதிபதிகள் கொண்ட சபையின் முன்னிலையில் அரசன் தன் வழக்கை உரைத்தான். ஐவர் அரசனுக்குக் கரைக் காவற்காசு உண்ணாட்டாரிடமும் பெறுதற்கு உரிமை உண்டெனக் கிளந்தனர். அப்டன் சிறையிடப்பட்டான். எனினும் அவன் எடுத்துக்காட்டிய நியாயம் ஊரில் பரம்பிற்று.

### கலிடோனியர் சமயாபிமானம்

புதிய சமயக் கொள்கைகளை அநுட்டிப்போரை லோட்டு துன்புறுத்தினுன். அவன் அங்கிலக் கதலிக்கருடைய பிரார்த்தனைப் புத்தகத்தையே கலிடோனியரும் தம் கோயில்களில் உபயோகிக்க வேண்டுமென விதித்தான். கலிடோனியர் தாம் விரும்பியவாறு பிரார்த்திக்கும் உரிமை தமக்கு உண்டெனக் கூறினர். கோயில் ஒன்றில் அங்கிலப் பிரார்த்தனையைச் செபிக்கும் ஆடவன் ஒருவனை யென்னிகிறஸ் என்னும் ஒரு பெண் பைபிள் புத்தகத்தால் புடைத்தனள் எனவும் பூசை நடாத்திய குருவின்மீது தான்குந்திய நாற்காலியை வீசினள் எனவும் சொல்லப்படுகின்றது. கலிடோனியர் அங்கிலக் கதலிக் சமய விரோதிகள் என்பது தெற்றெனப் புலப்படும். 1639-ல் சார்ள்ஸ் கலிடோனியரோடு பொருது தோல்வியடைந்தான். 1640-ல் சார்ள்ஸ் பாராளுஞ் சபையைக்கூட்டிக் கரைக்காவற்காசைப் பெருமல் விடுதலும் வேண்டியபொருளைச் சபையோரிடம் பெறுதலும் சபையோடு ஒத்துழைத்தலும் நீதியான அரசியல் முறையெனவிளம்பினன். அத்தருணத்தில் பிம் என்னும் பிரதிநிதிஎழுந்து அரசனுடைய பதினெரு வருடக் கொடுங்கோலைக் கண்டித்தாருக, அரசன் சபையைக் குலைத்தான். அரசன் கலிடோனியரோடு போர் நடத்த முடியாமல் அவருடைய நட்பைப் பெறுதற்கு 800 பவுண் (பொற்காசு) கொடுக்க உடன்பட்டான்.

### அரசியல் வாதம்

அரசன் பொருள் தேவைப்பட்டு 1641-ல் பாராளுஞ் சபைத்தெரிவை நடத்தினன். பாராளுஞ் சபையோர் மூன்ருண்டுக் கொருமுறையாயினும் அரசன் சபையைக் கூட்ட வேண்டு மெனவும் கரைக் காவற்காசுபெறுதல் பிரமாணங்களுக்கு விரோதமெனவும் அரசதுரோகத் தண்டச் சபையும் சமயத்துரோகத் தண்டச் சபையும் பாராளுஞ் சபையால் ஏற்படுத்தப்படாமையால் குலைக்கப்பட வேண்டு மெனவும் தீர்மானித்தனர். இங்ஙனம் பாராளுஞ் சபையோர் சர்வ சம்மதமாகவே முரணின்றித் தம் தீர்மானங்களைச் செய்தனர். சமய வழிபாட்டைப்பற்றிச் சபையில் அபிப்

பிராய பேதமுண்டாயிற்று. ஒருசாரார் அரசன் விதித்த அங்கிலக் கதலிக் சமயக் கிரியைகளைச் செய்து வணங்க வேண்டுமென வாதித்தனர். ஒருசாரார் சமய விஷயங்களில் யாதொரு கட்டுப்பாடு மிருக்கக் கூடாதெனவும் புதிய பிரிவினை மதமே அரசாங்க மதமாதல் வேண்டுமெனவும் வாதித்தனர்.

1615-ல் பொதுசனப் பிரதிநிதிகள் 'உவந்து வேது' என்னும் அமச்சனை மேன்மக்கட் சபையின் முன்னிலையில் கண்டித்து அவனைத் தண்டித்தற்குப் போதிய நியாயமின்மையால் அவனைத் தாய் நாட்டுத் துரோகி என மொழிந்து விசாரணையின்றிக் கொல்ல வேண்டுமென ஓர் தீர்மானம் கொணர்ந்தனர். மேன் மக்கட்சபை அவனைக் கொலைக்குத் தீர்த்தது. அரசன் அத்தீர்மானத்திற்குக் கைச்சான்றிட மறுத்தான். சனங்கள் அரச மாளிகையைச் சுற்றிநின்று அமைச்சனைக் கொல்லும்படி இரந்தனர். இரண்டு நாள் கழிந்தபின் சார்ள்ஸ் உடன்பட்டான். இது நிற்க:

அயர்லாந்தோர் உரோமன் கதலிக் சமயத்தின ராதலின் புதிய மதத்திலரைத் துன்புறுத்தினர். அந்நாட்டிற் குடியேறிய அங்கிலரே புதிய மதத்தினராதலின் துன்புறுத்துவோரைத் தண்டிக்கும்படி பாராளுஞ்சபை அரசனை ஏவிற்று. அத்தருணத்தில் படைத்தலைவன் அரசனுக்கோ பாரளுஞ் சபைக்கோ கீழ்ப்படியவேண்டு மென்னும் வாதம் தொடங்கிற்று.

## குடியரசுக் கட்சி

பிம், அம்டன், முதலியோர் அரசன் இழைத்த தீமைகளை ஒருபக்கதிலெழுதிப் பாராளுஞ்சபை செய்த நன்மைகளை ஒரு பக்கத்தில் தொகுத்து ஒரு பத்திரம் வெளியிட்டனர். பாராளுஞ்சபை இரு கட்சியாகப் பிரிந்தபோதிலும் அரசனைச் சார்ந்தோரினும் பார்க்கக் குடியரசுக் கட்சியினரில் பதினொரு பிரதிநிதிகள் மேலதிகமாக விருந்தனர். கட்சிப்போர் கால்கொண்தெனப் பலர் பகர்ந்தனர். 1642-ல் சபையோர் அரசியைக் கண்டிக்க வெண்ணுகிறார்களென அரசன் அஞ்சிப் பிம் அம்டன் என்றற் றொடக்கத்து ஐவரைச் சிறையிடும் நோக்கமாகச் சபை

கூடும் மன்றத்தைப் போர்வீரரோடு அணுகினன். அரசன் அவையுள் நுழைந்து அக் கலகக்காரரைவரும் எங்கேயென வினவ, அவைத் தலைவன், "வேந்தே! நும் கண்கள் எம் கண்களினும் சிறந்தன: சபை நம்மைப் பார்த்தபடி ஏவினு லன்றி நம் கண்கள் பார்க்கமாட்டா" வென உரைத்தான். அரசன் வெகுண்டு ஆசனங்களை யெவ்வொன்றாகப் பார்த்து ஐவரையுங் காணப் பெறாமையால் தான் சிமிழ்க்க எண்ணிய குருவிகள் பறந்து விட்டன என விளம்பித் துயரத்தோடு திரும் பினன். அரசன் சபை மன்றத்தினுள் போர் வீரரோடு புகு தல் வழக்க மன்றெனப் பொதுசனச் சபையோர் கத்தினர். லண்டன் நகரத்தோர் ஐவரையும் காத்து வீதிதோறும் கொண்டு உலாத்தினர். இத்துடன் அரச கட்சியாருக்கும் குடியரசுக் கட்சியாருக்கும் இடையில் போர் மூண்டது.

## கட்சிப்போர்

அரசன் தன் பாசறையை அமைத்துப் படை சேர்த்த னன். அரசி தன் அணிகலன்களை விற்றுப்படை சேர்க்கப் பிராஞ்சு தேசத்திற்குச் சென்றனள். பாராளுஞ் சபையினரும் போருக்கு ஆயத்தம் செய்தனர். பாராளும் சபையைச் சார்ந் தோர் குடியரசுக் கட்சியினர். என அழைக்கப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் புதியபிரிவினை மதத்தையே தழவினர். அரச கட்சியினர் அங்கிலக் கதலிக் சமயத்தை நாட்ட விரும் பினர். மேன் மக்கள் பெரும்பாலும் அரச கட்சியைச் சார்ந் தார்கள். வணிகரும், கமக்காரரும், தொழிலாளரும், பாரா ளுஞ்சபையின் கட்சியைச் சார்ந்தார்கள். பொதுவாகக்கூறின் வடமேற் பாகங்கள் அரசனையும் தென்கிழ்ப்பாகங்கள் எதிர்க் கட்சியையும் சார்ந்தனர். லண்டன் நகரத்தோர் குடிகளின் உரிமைகளுக்காகப் போர்புரிதற்குப் படைக்கலங்களில் பயின் றனர். அரச கட்சியினர் தனவான்கள்; எதிர்க் கட்சியினர் வறியவர்கள். அரச கட்சியார் நீண்ட தாடியும், மீசையும் கூந்தலும் வளர்த்தார்களாக, எதிர்க்கட்சியார் மயிரைக் குறுகக் கத்தரித்தனர். அரசனுடைய புரவிப்படைக்கு அரசனின் மருகன் 'றுப்பேட்' தலைமை வகித்தான். பாராளுஞ்சபை யங்கத்தினர் படைப் பயிற்சியில்லாத போதிலும் தாமே தம்

படைக்குத் தலைவராயினர். அக்காரணத்தால் போர்த்தொடக்கத்தில் அரச கட்சியினரே வெற்றியடைந்தனர். தேசநேசன் அம்டன் போரொன்றில் வெட்டுண்டு இறந்தான். அக்காலத்தில் குடிகளின் உரிமைகளைக் காத்தற்கெனக் குறொம்வெல் என்னும் பெரியோன் தோற்றினன். 'ஒலிவர் குறொம்வெல்' பாராளுஞ்சபை யங்கத்தவனாக விருந்து பின்பு தன் கமத்திற் காலங்கழித்தான். போராரம்பமானவுடன் 'குறொம்வெல' குடியரசுக்கட்சியரின் குறைகளைத் தேர்ந்தான் குடியரசுக் கட்சியினர் கல்லா வறியவராகையினால் கல்வியறிவுடைய எதிர்க்கட்சியரை வெல்லமாட்டாரென்பதை நன்குணர்ந்தான். அவன் ஒழுக்கத்தில் சிறந்த வீரரைத் திரட்டி படைக்கலக்களில் பயிற்சி நிகரற்ற படையொன்று சேர்த்தான். இங்ஙனம் பயிற்றப்பட்ட வீரர் 'தம் கட்சியினரைப் பழிக்கக்கூடாது, சத்தியம் செய்யக்கூடாது, மதுக் குடிக்ககூடாது' என்றாற்போன்ற நல்லொழுக்கங்களில் வழுவாது ஒழுகவேண்டும். குறொம்வெல் பயிற்றிய படையே பாராளுஞ்சபைக்கு வெற்றியை அளித்ததென்ப.

---

## 3-ம் பாடம்:

## தேச காவலன் ஒலிவர் குறொம்வெல்

பாராளுஞ் சபையங்கத்தினர் படைப்பயிற்சி யில்லாதோராதலின் தம் படைத்தலைமையைத் துறக்கவேண்டுமென ஒரு பிரேரணையைக் குறொம்வெல் கொணர்ந்தனன். சபையோர் அப்பிரேரணையை அங்கீகரித்தது மன்றி குறொம் வெல் என்பவனைப் புரவிப் படைக்குத் தலைமை வகிக்கவேண்டுமெனவும் வேண்டினர். குறொம்வெல் என்பவனுடைய புதியபடை மாட்சன் களம், நேசிபிக் களம், நியூபெரிக் களம், என்னும் பெரும் போர்களில் வெற்றி பெற்று றுப்பேட்டின் புரவிப் படையைப் பன்முறை முதுகிடச் செய்தது. அரசன் தன் பகைவரை வெல்ல முடியாதென வுணர்ந்து பகைவருள் பிரிவு ஏற்படுத்தற்கு உபாயம் தேடினன். பாராளுஞ் சபையாருள் சிலர் அரசனோடு உடன்படிக்கை யெழுத யெண்ணினர்; சிலர் அரசனை முறியஅடிக்க எண்ணினர். கலிடோனியர் தம்

சமயத்தைப் புரப்பவர்க்கு உதவிபுரிவரெனக் கூறிப் பாராளுஞ் சபையோர்க்குத் துணைபுரிந்தனர். அரசன் போரில் தோல்வி யடைந்தான். பின்பு அரசன் புதிய மதத்தைப் புரத்தற்கு இசைந்து கலிடோனியரைத் தன் வசப்படுத்தி அவரிடம் சரண் அடைந்தான். அரசனுடைய மனம் ஒருநிலையில் ஒருபோதும் நில்லாது. பின்பு புதிய சமயத்தைப் புரத்தல் தவறெனச் சார்ள்ஸ் உரைத்து கலிடோனியரைத் தன் வயப்படுத்தாது விட்டான். அரசன் பாராளும் சபையினருள் குரோம்வெல் என்பவனை எதிர்க்கும் கட்சியரைத் தன் வசப்படுத்தித் தன் உரிமையைப்பெற வெண்ணினன். கலிடோனியர் தம்போர்ச் செலவென 40,000 காசுபெற்று அரசனைப் பாராளுஞ் சபையிடம் கொடுத்தனர். கி. பி. 1645-ல் பாராளுஞ்சபை இரு கட்சியாகப் பிரிந்தது புதிய மதத்தினராகிய பாராளும் சபையினர் யுத்தம் முடிந்ததாதலின் படை தேவையில்லை யெனவும் வீரர்க்குச் சிறுதொகைக்கூலி கொடுத்தாற் போது மெனவும் வாதித்தனர். படை வீரர் இவர் தம் நோக்கத்தை யறிந்து கூலி முழுவதும் கொடுக்கப்படவேண்டு மெனவும் அரசனோடு சமாதானம் செய்யப்படா தெனவும் விளம்பினர். பாராளுஞ் சபை தம் கூற்றைப் பொருட்படுத்தாதென உணர்ந்த படை வீரர் அரசனைச் சிறையிட்டு தமக்கெதிராகப் பேசா நிற்கும் அங்கத்தினரைத் துரத்தினர். குரோம்வெல் இரு கட்சியையும் நட்பாக்க முயன்றான். கட்சிக்கலகம் பெருகிற்றாகக் குரோம் வெல் படைவீரருடைய கட்சியைச் சார்ந்து பாராளுஞ்சபை யைக் குலைத்தான்.

## குடியாசு.

'குரோம்வெல்' என்பவனுடை மருமகன் ஐரட்டன் அமைச்சர் கூட்டமொன்றை நிறுவி அதற்குக் குரோம்வெல் என்பவனைத் தலைவனாக்கி அரசியலைக் குடியரசு முறைப்படி நடத்தும்படி வேண்டினன். அரசன் குரோம்வெலோடு நட் பாகுதலினும் கலிடோனியரோடு உடன்படிக்கை எழுதித் தன் னுரிமைகளைப் பெறலாம். என வெண்ணினன். கலிடோனி யர் ஏமாற்றப்பட்டு அரசனுக்கு உதவிபுரிந்தனராகப் போர் பின்னரும் மூண்டது. அத்தருணத்தில் பாராளுஞ்சபையினர் சிலர் அரசனோடு சமாதானம் பேசுதலை குரோம்வெல் அறிந்து

அவ்வங்கத்தினரை மண்டபத்திலிருந்து உலைத்துக் கதவைப் பூட்டிச்சென்றான். 1649-ல் குரொம்வெல் ஒரு சபையைக் கூவி அரசன் சார்ள்ஸ் கொடுங்கோலனோ அல்லனோ என்பதைத்தீர்க்கும்படி கற்பித்தான். குரொம்வெல் நியமித்த சபை எத்தகைய தீர்ப்புச் சொல்லுமென்பது சொல்லாமலே விளங்கும். வேந்தனுடைய குற்றங்களை விசாரணை செய்யவேணும், வேந்தனைத் தண்டிக்கவேணும், பாராளுஞ் சபைக்கு உரிமை இல்லை. விசாரணை முடிவில் அரசன் சார்ள்ஸ் I கொல்லப்பட்டான். "கொடுங்கோலனின் தலையைப் பார்மின்" எனக் கொலைச் சேவகன் தலையை யெடுத்துக் காட்டினுனெனவும் கொலைக்காட்சி பார்த்தோர் சிலர் உள்ளமுருகி அழுதனரெனவும் படைவீரர் காவனின்றமையால் காட்சி பார்த்தோர் கலகமின்றி வீடு திரும்பினரெனவும் கூறுப குரொம்வெல் அரசனைக் கோறல் அவசியமாயிற்றெனமொழிந்து பாராளுஞ் சபையினரில் எஞ்சிய அங்கதினரின் துணையோடு அரசியலை நடாத்தினன். குரொம்வெல் என்பவனுக்குத் "தாய் நாட்டுப் புரவலன்" என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

குரொம் வெல் 'அயர்லாந்து தேசத்து' அரச கட்சியரை அடக்கும்படி ஏவல்பெற்றுக் கடல் கடந்து சென்று புதிய மதத்தோரைத் துன்புறுத்தி யிருந்த கதலிக்கரைக் கொன்று குவித்தான். நகர் வீதிகளில் இரத்த வெள்ளம் பாய்ந்தது. இதற்கிடையில் சார்ள்ஸ் என்பவனுடைய மகன் சார்ள்ஸ் கலிடோனிய நாட்டில் இறங்கி வேந்தனெனத் தொழப்பட்டான். 1650-ல் குரொம் வெல் புலம்பெயர்ந்து டன்பார்க்களத்தில் கலிடோனியரைக் கலைத்தடித்தான். சார்ள்ஸ் அடுத்தவாண்டு இங்கிலாந்தினுள் நுழைந்து வூஸ்தர்க்களத்தில் தோல்வியடைந்தான் இளங்கோ சார்ள்ஸ் இரண்டுநாள் கருவாலி மரத்தில் மறைந்திருந்தான். குரொம்வெல் என்பானுடைய படைவீரர் இளங்கோவைத்தேடித் திரிந்தனர். சார்ள்ஸ் பெண் வேடம் பூண்டு பிரான்சு தேசத்திற்கு ஓடித்தப்பினுன். குரொம் வெல் புதியதோர் பாராளுஞ் சபையைத் தெரிந்தான. அச் சபையோர் தாம் சமய சாஸ்திரம் உணர்ந்த ஞானிகளொழிய அரசியல் நடாத்த வல்லோரல்லர் என்பதை நன்குணர்ந்து 'குரொம் வெல்' என்பவனைப் பிறிதோர் சபையைக் கூட்டிச்

செங்கோல் செலுத்தும்படி கூறிக் குலைந்தனர். தேசகாவலன் 'ஒலிவர் குறெம் வெல்' அரசனுக்குரிய உரிமைகள் யாவற்றையும் பெற்ருன். அக்காலத்திற் கட்சிகள் பல்கியமையால் குறெம் வெல்' பாராளுஞ்சபையோடு ஒத்துழைக்க முடியாதிருந்தனன். பாராளுஞ்சபை தவறிழைக்கும் போதெல்லாம் சபையைக் குலைத்தனன். பின்னர் சபையைக் கூட்டுவதிற் பிரயோசன மில்லையென வெண்ணித் தனிக்கோலோச்சினன். அவனுடைய தனித்தலைமையைக் கொடுங்கோலெனப் பகைவர் பகர்ந்தனர். குறெம்வெல் தனது நோக்கங்களை நிறைவேற்றுதற்குத் தருணத்திறகேற்ற சமய வாக்கியங்களைப் பேசுமோர் பாசாங்குக்காரனெனப்பட்டான். அக்கூற்று அரசியல் நூல் கல்லாதோர் கூற்றெண விடுக.

## மங்கு

'குறெம் வெல்' இறந்தவுடன் படைவீரர் பல கட்சியாயினர். கலிடோனியாவை குறெப் வெல் என்பவனின் ஏவற்கிசைந்து ஆண்டிருந்த மங்கு என்பவன் இங்கிலாந்தைத் தானைத் தலைவரொருவராலும் ஆளமுடியாதென்பதையும அரச குமாரன் சார்ள்ஸ் II என்பவனை வரவழைத்தலே சனங்களுக்குப் பிரியமென்பதையு முணர்ந்து இளங்கோவை வரவேற்க எத்தனித்தான். அரச குமாரன் தன் தந்தையைக் கொன்ருரைத் தவிர ஏனையோரைத்தான் மன்னிப்பானெனவும் பாராளுஞ் சபையின் பிரமாணங்களுக் கமைந்து அரசியலை நடாத்துவானெனவும் வாக்குப்பண்ணிஞன். அரசனின் வரவை எதிர் பார்த்திருந்த குடிகள் பூமாரி பொழிந்தனர்; கோயிலதிகாரிகள் மணியடித்தனர்; குடிகள் பலர்தெருவீதிகளை அலங்கரித்தனர். இவ்வண்ணம் 1660-ல் குடியரசாட்சி முடிவெய்தியது. எங்ஙனமாயினும், குறெம் வெல் தனிக்கோலோச்சிப் பாராளுஞ் சபையின் உரிமைகளைப் பொருட்படுத்தாது விட்டாலும் அங்கிலக்குடிகளையும் புதிய மதத்தையும் காத்தோம்பினுனென்பதில் ஐயமில்லை. குறெம் வெல் ஆண்ட காலத்தில் பிறசாதியினர் அங்கிலப் படைக்கு மிக அஞ்சினர். பிரான்சியர் ஸ்பானியரோடு விரோதித்தபோது அங்கிலரிடம் துணைகேட்டனர்.

குறம்வெல்லின் மகனை அரசியலை நடாத்தும்படி சிலர் வேண்டினர். அவன் தன்னுல் நடாத்த முடியாதெனக் கூறி

நாடு துறந்தனன். சார்ள்ஸ் II அரசியலைப் பெற்றவுடன் தன் பகைவரைத் துன்புறுத்தினான். இறந்த பகைவர் சிலரின் எலும்புக் கூடுகளை எடுத்தெறிந்தான். குடியரசுக் கட்சிக்காக உழைத்த பெரும் புலவன் மில்ற்றன் என்பவனையும் வருத்த வெண்ணினன்.

### மில்ற்றன்

புலவன் மில்ற்றன் பல்கலைக் கழகத்தில் கற்று பல பாடல்கள் இயற்றினான். அவன் தன் கண்ணொளியை இழந்த பின் பெரிய காவியம் ஒன்று இயம்பினான். கிறித்தவருடைய கடவுளாகிய ஏகோவர் என்பவர்க்கும் தீமைத் தெய்வமாகிய சேற்றனுக்கும் இடையில் நடந்த போரையும் அத்தீயோன் மக்களைத் தீயவழிப்படுத்தும் நோக்கத்துடன் ஆதியில் படைக்கப்பட்ட மனிதனாகிய ஆதாம் என்பவனையும் வென்று அவன் துணைவியாகிய ஏவாளையும் கடவுளின் ஏவலை மீறி யொழுகப் பண்ணியகதையையும் கடவுள் மானுடர் மீதிரங்கி தன் மகன் ஏசு கிறீத்துவை மனித சமூகத்தை இரட்சிக்கும்படி அருளியதும் அதன் பயனாகக் கிறீத்து திருவவதாரம் செய்து சிலுவையில் உயிர்நீத்த வரலாற்றையும் புராண காவியமாக மில்ற்றன் புனைந்துரைத்தனன்.

---

## 4-ம் பாடம்:
## சார்ள்ஸ் II ஆட்சிக்காலம் 1660 — 1685

பிறப்புரிமையாக சார்ள்ஸ் II முடிபெற்றான். முடிபெறுதற்குப் பிறப்புரிமை மாத்திரமன்றி குடிகளின் அனுமதியும் வேண்டுமாதலின் அரசனாவோன் பொதுசனப் பிரதிநிதிகளான பாராளுஞ் சபையோரால் அங்கீகரிக்கப்படவேண்டும். பாராளுஞ் சபையைத் தெரியுமுரிமை அரசனொருவனுக்கே உரியது. சார்ள்ஸ் II அரசு கட்டில் ஏறுமுன் பாராளுஞ்சபை கூடி அவனை அரசனெனத் தெரிந்திருத்தல் வேண்டும். அவ்வண்ணம் தெரியப்படாமையால் சார்ள்ஸ் முறைப்படி தெரியப்பட்ட அரசனாகான். குறோம்வெல் அரசியலை நடாத்திய காலத்தில் பாராளுஞ்சபை கூடாமையால் சனப இங்கிலாந்தில் இல

தாயிற்று. மங்கு முதலியோரின் புத்திகேட்டு சார்ள்ஸ் ஒரு விளம்பரத்தை வெளியிட்டான். அதுவருமாறு :-

யாதாயினும் ஒரு பாராளுஞ் சபையில் அங்கத்தினரா யிருந்தோர் யாவரும் குறித்த தினத்தில் சபை கூடும்படி வேண் டப்படுகின்றனர். அப்பொழுதக் கூட்டம் சார்ள்ஸ் என்பவனை வேந்தனெனத்தொழுதது. 1660-ல் சார்ள்ஸ் முடிபெற்று முறைப் படி ஒரு பாராளுஞ்சபையைத் தெரிவு செய்தான். அச்சபை சார்ள்ஸ் II என்பவனுக்கே அரசு உரியதெனத் தீர்மானம் செய் தது. அரசன் தன்னுரிமைகளைப் பெற்றபோதிலும் பாராளுஞ் சபை தன்னுரிமைகளை இழந்திலது. என்னை ! அரசன் தன் னமைச்சரைத் தெரியு முரிமையைச் செலுத்தினனாயினும் சபை அமைச்சரைத் தம் பதவியினின்றும் நீக்கு முரிமையுடை யதாயிருந்தது. சபையினுத்தரவு பெற்றே அரசன் அரசிறை பெற்றான். புதிய பிரிவினை மதமே அரசாங்க மதமாக ஏற்படுத் தப்பட்டது. அரசன் நிலைப்படை ஒன்று வைத்திருக்கு முரிமை யைப் பெற்றானுகையால் அரசனுடைய அதிகாரம் பெருகிற் றென மொழியலாம். அரசனைக் கொன்றோர் பலர் தண்டிக் கப்பட்டனர். குடியரசுக் காலத்தில் அரசகட்சியாரிடம் பறிக் கப்பட்ட நிலங்கள் பழைய உரிமையாளருக்கு அளிக்கப்பட் டன. இவ்வொழுங்கு யாவர்க்கும் பிரியமானதன்று.

### ஒல்லாந்தர் பகை

1652-ல் ஒல்லாந்தருக்கும் அங்கிலர்க்கும் இடையில் பகை மூண்டது. இரு சாதியரும் புதிய மதத்தைத் தழுவியவராகை யாலும் குடியரசுமுறையை ஏற்படுத்தியவராகையாலும் நட்பா யிருந்து ஏனையோருடன் பகைப்பர் என வெண்ணுதல் பொருந் தும். எனினும் இரு தேயத்தோரும் வணிகம் செய்து திரவியம் தேடினராதலின் ஒருவரில் ஒருவர் அழுக்காறுற்றுப் பகைத் தனர். கீழைத்தேயத்து வணிகம் ஒல்லாந்தர் கையிலிருந்தது. 1651-ல் அங்கிலர் அவ் வணிகத்தில் தாமும் பங்கு பெறுதற்கு எண்ணங் கொண்டு வணிகப் பிரமாணம் ஒன்றை விதித்தனர். அது வருமாறு: "இங்கிலாந்தில் இறக்கும் பண்டங்கள் அங்கிலக் கப்பல்களாலேனும் அப்பண்டங்களை அனுப்பும் தேயத்துக் கலங்களாலேனும் கொண்டுவரப்பட வேண்டும் என்பது"

ஒல்லாந்தர் பல பண்டங்களை இந்தியா, சீன முதலிய கீழைத் தேயங்களிலிருந்து அங்கில நாட்டிற்குக் கொணர்ந்தனராதலின் அவர்களுக்கு இப்பிரமாணம் பிரியமானதன்று. ஒல்லாந்தருடைய மரக்கலங்கள் அங்கிலச் சிறுகடலூடாகச் செல்லும்போது அங்கிலப் போர்க்கலங்களைச் சந்தித்தால் தம் கொடியை இறக்கி மரியாதை செய்ய வேண்டுமென அங்கிலர் உரைத்தனர். 1652-ல் கடற்போர் தொடங்கிற்று. ஒல்லாந்தர் தோல்வியடைந்து சமாதானம் இரந்தனர். வேந்தன் சார்ள்ஸ் II என்பவனுடைய தாய் பிராஞ்சிய அரச குடும்பத்தினளாதலின் பிராஞ்சியரும் அங்கிலரும் நட்பாயிருந்தனர். 1665-ல் அங்கிலர் ஒல்லாந்தரோடு பின்னரும் போர் தொடர்ந்தனர். அரசனுடைய தம்பி ஜேம்ஸ் கப்பற்படைத் தலைமை வகித்து வெற்றிபெற்றான். 1667-ல் ஒல்லாந்துக் கப்பல்கள் அங்கிலத் துறைகளிற் புகுந்து கப்பல்கள் பல வற்றை எரித்தேகின. அதன்பின் சமாதானம் ஏற்பட்டது. இங்கிலாந்தும், ஒல்லாந்தும், சுவீடினும் நட்பாகிப் பிராஞ்சு தேயத்திற்கு இகலாயின. இந்நட்பு பொது சனங்களுக்கு மிகப் பிரியமானது. ஆனால் அரசன் சார்ள்ஸ் இந் நட்டைப் பொருட்படுத்த வில்லை. 1672-ல் சார்ள்ஸ் பிராஞ்சிய மாமன்னன் லூயி 14 என்பவனோடு மறை யுடன்படிக்கை ஒன்று எழுதிப் பொருள்பெற்று ஒல்லாந்தரோடு போர்க் கெழுந்தான். ஒல்லாந்தரைப் பிரான்சியர் தாக்கினராக அவர்கள் தம் அணைகளை உடைத்துக் கடல்நீரை வரவிட்டுப் பகைவரைத் தம் நாட்டினின்றும் ஓட்டினர். 1667-ல் சார்ள்ஸ் தன் சகோதரன் ஜேம்ஸ் என்பவனுடைய மகள் மேரியை ஒல்லாந்து நாட்டரசனுக்கு மணமுடித்துக் கொடுத்து ஒல்லாந்தரோடு நட்பாயினன்.

## அரசியல்

அரசன் சார்ள்ஸ் II தேகாப்பியாசம் செய்வதில் விருப்பமுடையவன். காலையில் பந்தடித்தலிலும் வேட்டையாடுதலிலும் இன்பம் நுகர்ந்தான். இங்ஙனம் காலங்கழித்துத் தனது கடமை ஒன்றையும் செய்யாமல் இருந்தனன். சோம்பல் தன்னைக் கெடுக்குமென உணர்ந்தபோதிலும் தன்னால் ஒன்றுஞ் செய்யமுடியாதென விளம்பினன். ஒல்லாந்தருடைய கலங்கள் அங்கிலத்துறைகளில் தீயிடும் சமயத்தில் சார்ள்ஸ் சிறு பூச்சி

யொன்றைப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தாலும், சார்ள்ஸ் பிறர் நயங் கருதவில்லை. அவன் தனது நண்பருடைய நன்மையைப் பற்றியும் சிந்திக்கவில்லை. அரசுரிமை யிழந்து பிறதேசத்தில் சஞ்சரித்த காலத்தில் மிக வருந்தினுனைகையால் இன்பம் நுகர்ந்து பெண்களோடு கூடிக்களிக்க விரும்பினுன்.

## அங்கிலச் சமயம்

சார்ள்ஸ் கதலிக் மதத்தை நாட்ட முயன்றால் தனது இராச்சியத்தை இழக்க நேரிடுமெனவ அஞ்சினன். அவ்வச்சம் மிக்குடையோனுயினும் பிராஞ்சிய மாமன்னன் லூயி 14 என்பவனிடம் பொருள் பெறுதற்காகக் கதலிக்சமயத்தை அங்கிலநாட்டில் நாட்ட முயன்றுன். அங்கில மன்னன் சார்ள்ஸ் அங்கிலர் யாவரும் தாம் எண்ணியவாறு வணங்கலாமென ஒரு பத்திரம் வெளியிட்டான். இதுகாரணமாகப் பாராளுஞ்சபை அரசனைக் கண்டித்ததாக அரசன் தான் செய்தது பிழையென மொழிந்தான். பாராளுஞ்சபை அரசனோடு குடிகள் ஒருவரும் விரோதிக்கக் கூடாதெனவும் அரச துரோகஞ் செய்யவில்லை எனச் சத்தியஞ் செய்யாதார் கண்டிக்கப்படுவரெனவும் பிரமாணம் ஒன்றை விதித்தது அத்துடன் அங்கிலச் சமயத்தின்படி ஒழுகாதோர் எந்நகர்க்கும் ஐந்துமைலுக்கு அப்பாலே ஒழிய; நகரிலேனும் நகரண்மையிலேனும் வசிக்கக் கூடாதெனவும் விதித்தது.

கிளாறண்டன் பிரபு என்னும் அமைச்சன் அங்கிலச் சமயத்தை நிலை நாட்டினுன். அவன் அரசியலை நடாத்திய காலத்தில் இலண்டன் நகர் தீப்பற்றி ஐந்து நாள் எரிந்தது. நகர் தீப்பற்றிய ஆண்டு நகரில் பிளேக் என்னும் தொற்று நோய் ஒன்று பரம்பியிருந்தது. அந்நோயால் பெருந்தொகை சனம் மாண்டனரென்ப. இது நிற்க, ஒல்லாந்தர் அங்கிலத் துறைகளில் இறங்கி அங்கிலருடைய கப்பல்களை உடைத்தனராக, அரசன் அமைச்சன் கிளாறண்டன் என்பானை அமைச்சுப் பதவியினின்றும் நீக்கினுன். அரசன் பின்னர் அமைச்சர் ஐவரிடம் புத்திகேட்டான். ஐவரில் இருவர் கதலிக்கராகவின் அவ்விருவரும் சார்ள்ஸ் பிரான்சிய மன்னன் லூயி என்பவனோடு கதலிக் சமயத்தைப் பரப்புதற்குச் மறையுடன்படிக்

கையை அறிந்திருந்தனர். அவ்வுடன்படிக்கை வெளியாகிய வுடன் இவ்வமைச்சர் கூட்டம் குலைந்தது.

1678-ல் பிரபு டான்பி என்பான் அமைச்சனாயினன். அக் காலத்தில் டைடிற்றஸ் ஓற்ஸ் என்னும் ஓர் வீணன் கதலிக்கர் அரசியலைக் குழப்ப எண்ணுகிறார்களென ஒரு நீதிபதிக்குச் சொன்னான். அந்நீதிபதி அடுத்தநாள் கொல்லப்பட்டானாதலின், கதலிக்கரே அவனைக் கொன்றார் என அலர் பரம்பிற்று. வீணனுடைய வார்த்தையை நம்பி அரசாங்கத்தோர் கதலிக்கர் பலரைத் தண்டித்தனர். கதலிக்கரை அங்கில மதத்தினர் வெறுத்தனராகலின், சிலர் அரசனுடைய தம்பி யேம்ஸ் என்பவனுக்கு அரசை அளிக்கப்படாதென வாதித்தனர். அரசனுக்குப் பிள்ளைகள் இன்மையால் அரசனுடைய தம்பிக்கே அரசு உரியதெனச் சிலர் உரைத்தனர். யேம்ஸ் கதலிக் சமயத்தினனாயினும் அரசு அவனுக்கே உரியதாகுமெனச் சார்ள்ஸ் உரைத்தனன். அரசன் கொடுங்கோலோச்சத் தொடங்கக் குடியரசுக் கட்சியினர் பலர் நாடு துறந்தனர். அவருள் சூப்பர் என்பவன் ஒல்லாந்து தேயத்திற்கு ஓடினான். 1685-ல் சார்ள்ஸ் மரிக்க, யேம்ஸ் அரசுகட்டிலேறினன்.

---

## 5-ம் பாடம்: யேம்ஸ் II 1685–1688.

யேம்ஸ் பகுத்தறிவில்லாதவனாயினும் நேர்மையானவன்; தான் நினைத்த காரியத்தை முடிக்க எண்ணும் இயல்பினன்; தமையனைப்போல் தருணத்திற்கு ஏற்றவாறு நடிக்கத் தெரியாதவன். பாராளுஞ்சபை தன்னை எதிர்த்தபோதிலும் தன் எண்ணத்தையே நிறைவேற்ற முயற்சிசெய்தான். கதலிக் மதத்தில் மிகப் பற்றுடையனாகலின் தன் குடிகள் யாவரையும் அம் மதத்தினராக்க முயன்றனன். கதலிக் சமயத்தைப் பரப்புதற்கு முதற்படியாகக் குடிகள் தாம் நினைத்தவாறு சமய வழிபாடு செய்யலாமென விளம்பினான். யேம்ஸ் அவ் விளம்பரத்தைக் கோயில் ஒவ்வொன்றிலும் போதனை செய்யும் குருமார் வாசித்து விளக்க வேண்டுமெனக் கற்பித்தான். அங்கிலக் குருத் தலைவனும் ஆறு குருமாரும் அரசனுடைய ஏவலைப் பொருட்

படுத்தினுர் அல்லர். இவ்வெழுவரும் அரசதுரோகஞ் செய்தன ரென விசாரணை செய்யப்பட்டது. நீதி விசாரணைச் சபையின ருள் ஒருவன் தன் வாக்கைக் கொடுக்க வியலாது இருந்தான். அரசன்பால் சார்ந்தால் சனங்கள் தன்னை விரோதிப்பார்கள் எனவும், அரசனுக்கு எதிராகத் தீர்ப்புச் சொன்னல் அரசன் தன்னைத் தண்டிப்பான் எனவும் மொழிந்தனன். அவன் இரு தலைக் கொள்ளியில் அகப்பட்ட எறும்புபோல முடிவு சொல்ல இயலாது இரவு முழுவதும் வருந்தினன். முடிவில் எழுவரும் சுத்தர் என நீதிவிசாரணைச் சபையினர் யாவரும் கூறினர். பொது சனங்கள் இவ்வெற்றியைக் கொண்டாடினர்.

யேம்ஸ் II கொடுங்கோலன் எனப்பட்டான். குடிகள் அரசியற் பிரமாணங்களுக்கு உடையாமல் ஒழுகுதற்கு அரசன் உத்தரவு அளிக்கலா மெனவும் அரசியற் பிரமாணங்களைப் பிரமாணமல்ல வெனச் சிறிது காலம் நிறுத்தும் உரிமை அரச னுக்கு உண்டெனவும் யேம்ஸ் செப்பினன். யேம்ஸ் சில பிர மாணங்களை மீறி ஒழுகும் வண்ணம் கதலிக்கர் சிலரை ஏவினன். கதலிக்கர் அரசாங்க உத்தியோகத்தரா யிருக்க முடியாதாயினும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுத்தான். நீதிபதிகள் அரச னுக்கு இவ்வுரிமை உண்டெனக் கூறினர். குடியரசுக் கட்சியர் யேம்ஸ் என்பவனுடைய மகளை மணமுடித்திருந்த ஒல்லாந்து தேயத்தரசன் உவில்லியத்திற்கு முடியை அளித்தனர். யேம்ஸ் தன் படைவீரரும் தனக்குப் பகையாயினர் என உணர்ந்து இலச்சினையை ஆற்றில் வீசிவிட்டு ஓடினன். பாராளுஞ் சபை யோர் அரசன் தன் கடமையைச் செலுத்தாது அரசைத் துறந் தான் என விளம்பினர். உவில்லியம் தேசகாவலனுகவும் மேரி அரசியாகவும் அரசியலை நடாத்தல் முறையென ஒரு சாரார் உரைத்தனர். இவ்வொழுங்கு மேரிக்கும் உவில்லியத்திற்கும் விருப்பமானதன்று. பின்னர் சபையார் மேரியையும் உவில்லி யத்தையும் அரசியும் அரசனுமாக ஆளும்படி வேண்டினர். இவ்வண்ணம் இரத்தக் கலகமின்றி 1688-ல் அரசியற் புரட்சி நடந்து முடிந்தது.

### உரிமைப் பத்திரம்

ஆங்கிலரின் துணைபெற்று ஒல்லாந்தைப் பிரான்சியரினின்று காக்கும் நோக்கத்துடன் உவில்லியம் ஆங்கில நாட்டு முடியை

ஏற்றனன். இவ்வரசியல் மாற்றத்தின் பயனாகப் பாராளுஞ் சபையின் உரிமைகள் பல வலியுறுத்தப் பெற்றன. உண்மையான குடியரசு இதன்பின் ஏற்பட்டதெனக் கூறலாம்; என்னை! அரசனின் செலவுப் பொருள் சபையால் அளிக்கப்பட்டது. அரசன் அரசிறை பெறுதற்குப் பாராளுஞ் சபையை ஆண்டு தோறும் கூட்டல் அவசியமாயிற்று. கீழ்மாடச் சபை பொருளீட்டல் காத்தல் வகுத்தல் என்னும் உரிமைகளைப் பெற்றது. 1689-ல் தீர்மானிக்கப்பட்ட உரிமைத் தொகுதி வருமாறு (1) உவில்லியமும் மேரியும் அரசனும் அரசியாயும் ஆள வேண்டுமெனவும் அவர்பின் அவர்களின் பிள்ளைகளுக்கே அரசு உரியதெனவும் அவர்களுக்குச் சந்ததி இல்லாக்கால் மேரியின் தங்கையாகிய ஆன் என்பவளுக்கும் அவளின் பிள்ளைகளுக்கும் அரசு உரியதாகுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (2) உரோமன் கதலிக்கரும் உரோமன் கதலிக்கரை மணமுடிப்போரும் அரசுரிமையை இழப்பர் எனவும் தீர்மானமாயிற்று. (3) பிரமாணங்களைச் சில சமயங்களில் பயனற்றவையாகவும் பிரமாணங்களை மீறியொழுகுதற்குச் சிலருக்கு உத்தரவழிக்கவும் அரசனுக்கு ஆற்றல் இல்லை எனவும் தீர்மானிக்கப் பட்டது. (4) பாராளுஞ் சபையால் நிறுவப்படாத தண்டச் சபைகள் தண்டம் செய்யக்கூடா தெனவும் அரசன் நிலைப்படை வைத்திருக்கக் கூடாதெனவும் விதிக்கப்பட்டது. (5) வேந்தனிடம் முறைகேட்கும் உரிமையும் குறை வேண்டும் உரிமையும் குடிகளுக்கு உண்டெனவும் நாட்டப் பெற்றது. 1701-ல் 'ஆன்' என்னும் அரசியின் பிள்ளைகள் யாவரும் இறந்தமையால் யேம்ஸ் I என்பவனின் மகள் எலிசபத்தின் சந்ததியாருக்கு அரசு உரியதாகுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சர் பாராளுஞ் சபையால் தண்டிக்கபடலா மெனவும் அங்ஙனம் தண்டிக்கப்படுவோரை அரசன் காக்கக்கூடாதெனவும் பிரமாணமாயிற்று.

———

# 15-ம் அதிகாரம்
# பிருத்தானிய இராச்சியம்

## 1-ம் பாடம்: அங்கிலரும் பிராஞ்சியரும்

### பிராஞ்சிய மகாமன்னன் லூயி 14.

பிராஞ்சிய மன்னன் லூயி 14 வது அரசாண்டகாலத்தில்
பிராஞ்சுதேயம் வலிமிகுந் திருந்தது. லூயி இறையின் நதி
யைப் பிராஞ்சுதேயத்தின் கிழக் கெல்லையாக்க முயன்றான்.
அவ்வெண்ணத்தை நிறைவேற்றவிடாது ஒல்லாந்தர் தடுத்த
னர். ஒல்லாந்து தேயத்து மன்னன் உவில்லியம் இங்கிலாந்
தையும் ஆண்டான் ஆகலின், பிராஞ்சியர் அங்கிலரையும்
பகைத்தனர். பிராஞ்சியர் அங்கிலரைப் பகைத்தற்கு வேறு
காரணங்களும் உள. 18-ம் நூற்றாண்டில் அங்கிலரும் பிராஞ்
சியரும் அமரிக்காவிலே குடியேற்றங்களை நாட்டினராகலின்
ஒருவர்மீது ஒருவர் அழுக்காறுற்றனர். மேலும் இந்திய நாட்டு
வணிகத்தில் பங்கு பெறுதற்கு இரு சாதியினரும் ஒருவரை
ஒருவர் பகைக்கத் தொடங்கினரெனலாம்.

அங்கில மன்னர் சார்ள்ஸ் II யேம்ஸ் II என்போருக்குப்
பொருள் கொடுத்து வசப்படுத்தியவாறு உவில்லியத்தை வசப்
படுத்த வியலாதென்பதை லூயி உணர்ந்தான். அங்கிலவரசு
உவில்லியத்திற்கு உரியதன்றெனவும், யேம்ஸ் II என்பவனுக்கே
உரியதெனவும் விளம்பினன். லூயி அங்கிலவரசைத் துறந்த
யேம்ஸ் என்பவனை மறுபடியும் தன்னரசைப் பிடிக்கும்படி
போருக்குத் தூண்டினன். யேம்ஸ் பிராஞ்சியரிடம் துணை
பெற்று அயர்லாந்து தேயத்தில் இறங்கினான். அயர்லாந்தோர்
கதலிக்கராகலின் அவன் கட்சியைச் சார்ந்தனர்.

### அங்கில அரசுரிமைப்போர்

கலிடோனியாவிலும் உவில்லியத்திற்குப் பகைவர் எழுந்
தனர். வட கலிடோனியர் கதலிக்கராகலின் 'உவில்லியத்தோடு'
பகைத்துக் கலகம் பண்ணினர். கலிடோனியர் கில்லிக்கிறங்கிக்
களத்தில் வெற்றியடைந்த போதிலும் அவர்களுடைய தலை

வன் 'கிரகம்' போரில் மடிந்தமையால் தம் வீடு திரும்பினர். அயர்லாந்து தேயத்தில் உவில்லியத்துடைய ஒல்லாந்த வீரரும் அங்கில வீரரும் கதலிக்கரோடு 'பாயினுற்று'க் கரையில் பொருதனர். அப்போரில் பிராஞ்சியர் அங்கிலருக்கு எதிராக யேம்ஸ் என்பவனுக்குத் துணை புரிந்த போதிலும், அங்கிலரே வெற்றியடைந்தனர். அங்கிலரும் ஒல்லாந்தரும் கடற்போரில் பிராஞ்சியரைத் துரத்தித் துரத்தி அடித்தனர். நிலப்போரில் உவில்லியம் பலமுறை தோல்வியடைந்தபோதிலும், பிராஞ்சியரின் நிலப்படை ஒல்லாந்தினுட் புகமுடியாது நின்றது. 1697-ல் சமாதானம் ஏற்பட்டது. லூயி அங்கில அரசு உவில்லியத்திற்கே உரியதெனச் உடன்பட்டான்.

## ஸ்பானிய அரசுரிமைப்போர்

ஸ்பெயின் தேயத்து மன்னன் சார்ள்ஸ் II என்பவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையை உணர்ந்த பிராஞ்சிய மன்னனும் செர்மானிய மன்னனும் ஸ்பெயின் தேசத்தைத் தம்முள் பங்கிட எண்ணினர். அங்கில அரசன் உவில்லியம் ஸ்பெயின் தேயம் செர்மானிய வேந்தனுடைய பேரப்பிள்ளைக்கு உரியதாகுமென ஒழுங்கு செய்தான். அக்குழந்தை வைசூரி நோயால் இறந்ததால் அவ்வொழுங்கு குழம்பிற்று. 1700-ல் ஸ்பெயின் தேசம் செர்மானிய வேந்தனின் இரண்டாம் மகனுக்கு உரியதாகு மெனவும் ஒழுங்கு செய்யப்பட்டது. ஸ்பெயின் தேயத்து மன்னன் உத்தரவின்றி இராச்சியத்தைப் பங்கிட்டனரென வெகுண்டு தனது இராச்சியத்தையும் அதன் ஆட்சி நாடுகளையும் பிராஞ்சு வேந்தன் லூயி என்பவனுடைய இரண்டாவது பேரப்பிள்ளைக்கு அளித்தான். லூயி சம்மதங்கொடுத்த ஒழுங்கைப் பொருட்படுத்தாமல் இக்கொடையை ஏற்றான். 1702-ல் ஸ்பெயின் தேயத்து அரசுரிமைப்போர் தொடங்கிற்று.

## படைத் தலைவன் சர்ச்சில்

ஸ்பானிய அரசுரிமைப் போர் ஆரம்பித்ததாக உவில்லியம் இறந்தான். 'ஆன்' அரசுரிமை பெற்று யோன் சர்ச்சில் என்பவனைப் படைத்தலைவனாக்கினுள். அவன் 1650-ல் பிறந்து யேம்ஸ் II என்பவனுடைய படைத்தலைவனாகச் சேவித்தான். சார்ள்ஸ் II என்பவனுக்கும் அவனுடைய காமக்கிழத்திக்கும் பிறந்த பிரபு ஒருவன் அரசு தனக்குரியதெனக் கிளர்ந்து படை

திரட்டினுகை, யோன் சர்ச்சில் அவனைச் சர்ச்மூர்க் களத்தில் புடைத்தான். பின்னர் யேம்ஸ் அரசு துறந்து ஓடினுகை, உவில்லியத்தின் கட்சியைச் சார்ந்தான். யோன் சர்ச்சில் நம்பிக்கைத் துரோகஞ் செய்தற்குக் கூசான் என்ப. எனினும் அவன் செர்மானிய துணைவருக்குத் துணைபுரிய வாக்களித்து அவ்வாக்கை நிறைவேற்றிச் செர்மானியரைப் பிரான்சியரிலிருந்து காத்தான் என்பதில் ஐயமில்லை. போர் நடாத்தலில் சர்ச்சிலிலும் திறமை வாய்ந்தோர் இல்லையெனச் செப்பலாம்.

1704-ல் பிரான்சிய படை ஒளஸ்திரிய நாட்டினுள் புகுந்ததாகச் சர்ச்சில் ஒல்லாந்து நாட்டிலிருந்து விரைந்து பிளாங்கிம் என்னும் ஊரில் பிரான்சியபடையை எதிர்த்தான். பிரான்சியப்படை தானியூயி ஆற்றங்கரையில் அணிவகுத்து நின்றது. எதிரிகளின் படைக்கும் தப்படைக்கும் இடையில் உள்ள நிலம் சதுப்பாகலின் பிரான்சியர் தம் நடுவில் நின்ற படையைக் காவாமல் இடத்திலும் வலத்திலும் நின்ற படைகளைப் பெலப்படுத்தினர். இதையுணர்ந்த சர்ச்சில் சதுப்பு நிலத்தை ஒருவாறு கடக்கலாமெனை ஆராய்ந்தறிந்தபின் அதை விரைந்து கடந்து நடுவில் நின்ற பிரான்சியப் படையைக் கலைத்தடித்து இடத்திலும் வலத்திலும் நின்ற படைகளைச் சூழ்ந்து பொருது பெரிய வெற்றி பெற்றான். பின்னர் சர்ச்சில் றமிலிஸ், ஓடிநாடி, மலப் பிளாக்கி என்னும் களங்களில் நடந்த போர்களில் வெற்றியடைந்தான். சர்ச்சில் பொருத போர் ஒன்றிலும் தோல்வி யடையவில்லை என்பது அறியற்பாலது. படைத் தலைமை வகித்தலில் சர்ச்சில் மிகச்சிறந்தோனெனப் பாராட்டப்பட்டான். ஒல்லாந்தருக்காகத் தாம் ஏன் போர் செய்ய வேண்டும் எனப் பாராளுஞ் சபையோர் வாதித்து 1713-ல் போரை நிறுத்தும்படி கற்பித்தனர். சமாதான உடன்படிக்கையின்படி ஸ்பெயின் பிரான்சிய வேந்தனுடைய இரண்டாம் பேரப்பிள்ளைக்கு அளிக்கப்பட்டது. அங்கிலருக்குச் சில குடியேற்ற நாடுகள் பிரான்சியரால் அளிக்கப்பட்டன. அத்துடன் ஸ்பானியரால் ஆளப்படும் தென்னமரிக்க நாடுகளுக்கு வருடத்துக்கொருமுறை ஒரு கப்பல் அனுப்பி வணிகஞ் செய்யும் உரிமையும் அங்கிலருக்கு அளிக்கப்பட்டது.

## 2-ம் பாடம்: உண்ணாட்டு அரசியல்

உவில்லியம் III முடியைப் ஏற்றவுடன் எதிரிகள் நண்பர் எனப் பேதங் காட்டாமல் இருபாலாரிலிருந்தும் அமைச்சர் களைத் தெரிந்தான். பொதுசனங்கள் உவில்லியத்தை அரசனாகத் தெரிந்தாலும் அவனை நேசித்தாரெனக் கூறமுடியாது. ஒல் லாந்து தேயத்தின் சுயாதீனத்தைக் காப்பாற்றுதற்காக உவில் லியம் பிராஞ்சியர் முதலிய பிறநாட்டாரோடு கலந்து உடன் படிக்கை எழுதுதலும், போர்புரிதலும் அங்கிலருக்கு வெறுப்பா யிருந்தன. கண் கூரியனாய் இருந்தபோதிலும், உருவிற் சிறிய னாகலினால் உவில்லியம் பொதுசனங்களின் மனதைக் கவரும் சக்தியற்றவனெனவும், தன் நண்பரோடு கூடி இனியவை கூறி அளவளாவாமல் தமியனாக இருக்கும் இயல்பினனாகலின், பொது சனங்கள் அவனை வெறுத்தனரெனவும், அரசி மேரி தனது வாக்குச் சாதுரியத்தால் சனங்களை வசீகரிக்கும் வல்லமை வாய்ந்தவள் எனவும், உவில்லியம் ஒருவருடனும் பேசாமல் எவ்வளவுக்கு ஆழ்ந்து யோசிப்பானோ அவ்வளவுக்கு மேரி பலரோடும் கூடி அளவளாவி, இனியவை கூறி, யாவரையும் இன்புறுத்துவாளெனவும் ஆசிரியர்கள் கூறுப. மேரி இறந்த பின் சனங்கள் உவில்லியத்தை மிகவும் வெறுத்தனர். உவில்லி யம் ஒல்லாந்தர் சிலருக்கு நிலம் அளித்தான். பாராளுஞ்சபை அயர்லாந்து நிலங்களை ஒல்லாந்தருக்கு அளிக்கக்கூடாதெனக் கற்பித்தது. கதலிக் கட்சியார் எதிரிகளைத் தூண்டினராக, உவில் லியம் அரசு துறந்து ஒல்லாந்துக்கு ஏக எண்ணினன். உவில் லியம் பிறதேயத்தோரின் துணை பெற்றுப் பிராஞ்சியரோடு பொருது இங்கிலாந்தைக் காத்தான் என்பதை அக்காலத்து அங்கிலர் உணர்ந்திலர். பிராஞ்சியரின் வலியை உவில்லியம் குன்றச்செய்திலனாயின், பிராஞ்சியர் அங்கிலருடைய குடியேற் றங்களை அழித்திருப்பர். உவில்லியம் அரசியல் ஞானி என்பது பிறநாட்டு வரலாற்றாலன்றி உண்ணாட்டு வரலாற்றாலும் இனிது புலப்படும். அவன் அங்கிலருடைய வணிகத்தைப் பெருகச் செய்தற்காக நாணயக் கழகம் ஒன்று இங்கிலாந்தில் ஏற்படுத் தினான். கமக்காரர் வணிகர் முதலியோர் நாணயக் கழகத்தில் கடன் பெறலாம். நாணயக் கழகம் நாட்டப்பட்ட பின்ன அங்கிலருடைய வணிகம் பெருகிற்று. நாணயங்களைச் சில

வெட்டிப் பொன் களவாடினராக நாணயங்களின் விலை குறைந்தது. பழைய நாணயங்கள் சில தேய்ந்து நிறை குறைந்தமையாலும் விலை குறைந்தன. உவில்லியம் பழைய நாணயங்களை ஏற்றுப் புதிய நாணயங்களைப் பதிலாகக் கொடுத்தான். புதிய நாணயங்கள் கருக் கோரமுடையவாகச் செய்யப்பட்டமையால் அவற்றைப் பொன் கள்வர் வெட்டினால் அந்நாணயங்கள் விலை குறைந்தவையெனப் பொதுசனங்களுக்கும் இலகுவில் தெரியும். கருக் கோர முடையவையாக நாணயங்களை அச்சிடுதல் பொதுசனங்களுக்கும் இலகுவில் தெரியும். கருக் கோர முடையவையாக நாணயங்களை அச்சிடுதல் பொதுசனங்களுக்குப் பெரு நன்மையாகும் இனி அரசியலை நடாத்தப் பொருள் இல்லாதபோதிலும் உவில்லியம் அரசிறையைக் கூட்டாமல் குடிகளிடம் கடன் வாங்கினான் கடன் கொடுக்கும் குடிகளுக்கு வட்டி கொடுத்தான். இக்கடனைத் தேசியக் கடன் என்பர். நாட்டின் நன்மை கருதித் தாம் எடுத்த முயற்சிகளைச் செய்து முடித்தற்கு அரசாங்கத்தார் குடிகளிடம் கடன் பெறுதல் வழக்கமாயிற்று.

### கட்சியரசு

இனி உவில்லியம் குடியரசு முறையாகச் செங்கோல் செலுத்தினன் என்பது உணரற்பாலது. அவன் கட்சி சாராமல் அரசாள எண்ணியபோதிலும் புதிய மதத்தினரைச் சார நேர்ந்தது. பாராளுஞ் சபையில் கூடிய தொகையான அங்கத்தவரை உடைய கட்சியிலிருந்து அமைச்சரைத் தெரியும் வழக்கத்தை உவில்லியம் நாட்டினன். இவ்வழக்கம் குடியரசாட்சிக்கு அடிப்படையானது என்பதைக் கடைப்பிடிக்க.

'ஆன்' அரசாண்ட காலத்தில் இருவேறு கட்சிகள் இங்கிலாந்தில் தோன்றின. ஒரு கட்சியார் பிராஞ்சியரோடு பொருது குடியரசை நிலைக்கச் செய்யவேண்டுமென வாதித்தனர், ஒரு கட்சியார் பிராஞ்சியரோடு நட்புப் பூண்டு யேம்ஸ் II என்பவனின் சந்ததியாரை அரசராக்கவேண்டுமென எண்ணினர். இவ்விரு கட்சியாரின் அபிப்பிராயங்களை முறையே அடிசன் என்னும் உரையாசிரியனும் சுவிவ்ற்று என்னும் வசைநூல் வல்லோனும் புதினத் தாள்களில் வெளியிட்டனர். அக்காலத்

திலேயே இங்கிலாந்தில் புதினத் தாள்கள் வெளியிடப்பட்டவை யென அறியற்பாலது. அக்காலத்தில் அங்கில உரை நூல்கள் பல தோன்றின. 'கோல் சிமிது' என்னும் புலவன் நகைச்சுவை விரவிய பல வியாசங்கள் எழுதினன். இங்ஙனம் பொதுசனங் கள் புதினத் தாள்களை வாசித்து அரசியல் விஷயங்களில் தலை யிட்டுத் தம் வாக்குரிமையை நன்முறையிற் செலுத்தப் பயின் றனர்.

அரசி 'ஆன்' என்பவளுடைய முதலமைச்சன் குடல்பின் என்போன் ஸ்பானிய அரசுரிமைப் போரை நடாத்திப் புகழ் பெற்றான். 1710-ல் குடியரசுக் கட்சி குன்றியதாக, எதிர்க் கட்சி தலை எடுத்தது. எதிர்க்கட்சியார் போரைத் தொடராது விடும்படி வாதித்தனர் அதன்பயனாக, 'குடல்பின்' தன் அமைச் சுப் பதவியைத் துறந்தான். சர்ச்சில் போரைத் தொடர வேண்டுமென வற்புறுத்தியபோதிலும் சமாதான வுடன் படிக்கை எழுதப்பட்டது. சர்ச்சில் தன் வாழ்நாள் முழுவதும் படைத் தலைவனாகச் சேவிக்கும் உரிமையைத் தனக்கு அளிக் கும்படி கேட்டானாகச் சனங்கள் அவன் குறம்வெல் என்பவ னைப்போல் தனித் தலைவனாக அரசுபுரிய எண்ணுகிறானென நினைந்து அவனை வெறுத்தனர். 'ஆன்' தன்னோடு தோழமை பூண்டு இருந்த சர்ச்சிலின் மனைவியை வெறுத்தனளாகவும், அங்கில மதம் அழிவெய்தப்போகிறதெனச் சிலர் ஓலமிட்டன ராகவும், குடியரசுக் கட்சி வலிகுன்றியது.

சாச்சவரல் என்னும் ஒரு தன் நாவல்லமையால் சனங் களை வசீகரித்தான். அவன் குடல்பின் முதலிய அமைச்சரைப் பரிகாசம்பண்ணிப் போர் வேண்டாமென விரிவுரை செய்தான். அமைச்சர் தம்மை அவன் பரிகாசம் பண்ணினான் என வெகுண்டு அவனை விசாரணை செய்தனர். பொதுசனங்கள் அவனை மெச்சி அவனைக்காக்கும்படி அரசியை வேண்டினர். அங்கில சமயம் அழிவெய்தும் எனக் காட்டினராக, அரசி அங்கில சமயத்தில் நம்பிக்கை யுடையளாதலின், அங்கில மதத் தைக் காத்தற்காகச் சாச்சவரல் என்பவனைக் காத்தாள். சாச் வரல் அழகிய ஆடவனாகையாலும் இனிமையாகப் பேசுபவனா கையாலும் பெண்களும் அவனுடைய போதனையைக் கேட்க ஆவலோடு சென்றனராம். சாச்சவரலுக்குத் தண்டனை விதிக்

கப்பட்டதாகப் பொது சனங்கள் அவனை உபசரித்து ஊர் வலம் செய்தனர். அரசி ஆன் அமைச்சரை நீக்கி எதிர்க்கட்சியிலிருந்து அமைச்சரைத் தெரிந்து அவர்களை அரசியலை நடாத்தும்படி கற்பித்தனள்.

எதிர்கட்சியினருள் "ஆளி" 'சென்யோன்' என இருவர் அறிஞர் எனப் பெயர் பெற்றனர். ஆளி புலவர்களைப் புரந்தனனெனவும் அவனுடைய வாசிகசாலையிலிருந்த கையெழுத்துப்பிரதிகள் மிக விலையுயர்ந்தவை எனவும் அவை இப்போது அரசாங்கப் பண்டைப் பொருட் காட்சிச் சாலையில் உண்டெனவும் அறியலாகும். அவன் அரசியலை நடாத்தற்கு வேண்டிய கடைப்பிடியில்லாதவனெனவும் நேர்மையாக ஒழுகி தனது நண்பரோடு கலகப்பட்டனனெனவும் சொல்லப்படும். சென்யோன் விவேகியாயினும் தூர்த்தன் எனச் சொல்லப்பட்டான் அவனுடைய உரைநடையை 'பிற்று' என்னும் அமைச்சன்மிக வியந்து பேசினனெனவும் அவ்வுரை நடையைப் பின்பற்றியே சரித்திரவாசிரியன் கிப்பன் தன் உரோமர் வரலாற்றை எழுதினனெனவும் சாற்றுகின்றனர் ஒரு கட்சிக்குத்தலைவனானோன் துணிகரமுடையனாதல் வேண்டுமென்பதை உணர்ந்தோனாகலின், சென்யோன் தனது கட்சிக்குத் தலைமை வகித்தான். ஆன் என்பவளின் பிள்ளைகள் யாவரும் இறந்தனராகையால் அரசு யாவருக்கு உரியதாகுமென அமைச்சர்கள் ஆலோசித்தனர். பொதுசனங்கள் யேம்ஸ் II என்பவனுடைய மகனைத் தெரிய விரும்பினர். முன் தீர்மானிக்கப்பட்ட பிரமாணத்தின்படி முதலாவது யேம்ஸ் என்பவனுடைய பேரப்பிள்ளை சோபியாவும், அவளுடைய மகன் யோர்ச்சும் அந்நிய நாட்டில் பிறந்து அந்நிய பாஷைபேசி அங்கிலரோடு யாதொரு தொடர்புமில்லாமல் இருந்தனர். அவர்கள் அங்கில மொழியைப் பேசத் தெரியாதவர்கள். யேம்ஸ் இரண்டாவதின் மகன் புதிய பிரிவினை மதத்தினனென்று சொல்ல உடன்படாமையால் தன்னரசுரிமையை இழந்தான். சென்யோன், யேம்ஸ் II என்பவனின் மகனை அரசனாக்க எண்ணினன். ஆனுக்கு நோய்மிகுந்ததாகக் குடியரசுக் கட்சியினர் அமைச்சரோடு கலந்துபேசி யோர்ச்சை அரசனாக்குதற்கு அரசிஆனின் ஆணையைப் பெற்றனர்.

## 3-ம் பாடம்: கலிடோனியா தேசச் சம்பவங்கள்

உவில்லியம் III அரசு செலுத்திய காலத்தில் கலிடோனியர் கதலிக்கர் புதிய பிரிவினைமதத்தினர் என இரு கட்சியாகிக் கலகப்பட்டனர். பொதுசனங்கள் வறியவராயினர். எல்லையில் வசிக்கும் கலிடோனியரும் அங்கிலரும் அடிக்கடி பொருதனர். வட கலிடோனியர் தென் கலிடோனியருடைய ஆடு மாடுகளைக் கவர்ந்து சென்றனர். வட கலிடோனியர் சூறையாடுதலைத் தம் தொழிலாகக் கொண்டு கானவராகவே வாழ்ந்தனர். அவர்கள் அடுக்களையில் புகைக் குழாய் அமைக்கத் தெரியாதவரென்றும் குதிரைகளைப் பண்டியில் பூட்டத் தெரியாமல் வாலால் கட்டினரென்றும் மெழுகுதிரி இருப்புக் கருவி உருளைக் கிழங்கு முதலியவற்றைக் கண்டறியாதவரென்றும் இகழப்பட்டனர். வட கலிடோனியர் கதலிக்கராகலின் உவில்லியத்தை எதிர்த்தனர். 1691 ல் உவில்லியம் கலிடோனிய தலைவரை அரசுரிமை தனக்கே உரியதெனச் சத்தியம் செய்யும்படி முரசறைவித்தான் 'கிளன்கோக்' கிராமத்துத் தலைவன் மக்டனல்டு கடைசி நாள்மட்டும் கடத்தினான். பின்பு சத்தியம் செய்யப்போய்ச் சத்தியம் கேட்போரைச் சந்திக்கவில்லை. மக்டனல்டுக் குடும்பத்தின் பகைவராகிய கமல் குடும்பத்தினர் அவர்களைக் கொல்லும்படி அரசாங்கத்தாரைத் தூண்டினர். படைவீரர் மக்டனல்டு என்பவனின் விருந்தினராய் உபசரிக்கப்பட்டிருந்தனர். ஒருநாட் காலை யாதொரு அறிக்கையும் செய்யாமல் அக்குடும்பத்தினரைப் படைவீரர் கொன்றனர். இது காரணமாக வட கலிடோனியர் உவில்லியத்தைப் பகைத்தனர். உவில்லியத்தின் ஆட்சிக்காலத்தில் கலிடோனிய தேசம் தழைத்தோங்கியது. சமயக் கலகங்கள் குறைந்தன; நாணயக் கழகம் ஒன்று நிறுவப்பட்டது ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இங்நன்மைகளைச் சிலர் உணர்ந்திலராகலின், கலிடோனியர் தாம் அமெரிக்காவில் நிறுவிய குடியேற்றமொன்று அங்கிலர் அழுக்காறு கொண்டமையால் பிழைப்பட்டதென எண்ணினர். ஆன் இறந்தபின் தாம் அங்கிலர் தெரியும் அரசனைத் தெரியாரெனப் பலர் பேசினர். ஆங்கில அமைச்சர்கள் இரு தேசத்தையும் ஓர் அரசனுக்குக் கீழ் மாத்திரமன்றி ஓர் அரசாங்கத்துக்குக் கீழேயும் இணைக்க எண்ணினர். இரண்டு

தேசங்களையும் இணைத்தல் இரு தேயத்தோருக்கும் நன்மை விளைக்குமெனவும், இரு தேயத்தோருக்கும் தீமை விளைக்குமெனவும் பிரித்தானியர் வாதித்தனர். முடிவில் இரு தேயத்தோரும் உடன்படிக்கை எழுதி இரண்டு தேயத்துப் பாராளுஞ் சபைகளையும் இணைத்தனர். கலிடோனியர் அங்கிலப் பாராளுஞ் சபைக்கு 45 பிரதிநிதிகளைத் தெரியும் உரிமை பெற்றனர்; மேலும் 40,000 பவுண் பெற்றுத் தாமும் அங்கில அரசாங்கத்தின் தேசியக் கடனில் பங்குபெற்றனர். கலிடோனிய தேயத்துச் சமயப் பிரமாணங்களையும் நீதிப் பிரமாணங்களையும் மாற்றக்கூடாதெனவும் குறிக்கப்பட்டது. கலிடோனியருக்கு அங்கிலக் குடிகளுக்குரிய வணிக உரிமை யாவும் அளிக்கப்பட்டன. இரு தேயங்களும் தழைத்தோங்கிய போதிலும், 1715 ல் வட கலிடோனியர் அங்கில மன்னன் யோர்ச்சு I என்பவனுக்கு எதிராகப் பகைத்தெழும்பினர். யேம்ஸ் II என்பவனின் மகன் பிராஞ்சியரின் ஏவலுக்கு இசைந்து கலிடோனியாவில் இறங்கினன். அவனைச் சார்ந்த கலிடோனியர் செரிவுமூர்க்களத்தில் தோல்வியடைந்தனர்.

---

## 4-ம் பாடம்:
## தென்னமரிக்க வணிகப் போரும் ஒஸ்திரிய அரசுரிமைப் போரும்

ஸ்பெயின் தேயத்து அரசுரிமைப்போர் முடிவில் எழுதிய உடன்படிக்கையின்படி ஸ்பானியர் ஆளும் தென்னமரிக்க தேயத்திற்கு ஆண்டுதோறும் அங்கிலக் கப்பல் ஒன்று சென்று வணிகம் செய்யலாமெனக் குறிப்பிட்டேம். அங்கிலர் ஒரு கப்பலை மாத்திரம் துறைமுகத்துள் அனுப்பி வேறு பல கப்பல்களில் பண்டங்களை ஏற்றிச்சென்று நடுக்கடலில் நிறுத்தி அப்பண்டங்களை அவற்றிலிருந்து பிறரறியாமல் துறைமுகத்துள் நிற்கும் கப்பலில் ஏற்றிப் பின்னர் துறையில் இறக்கினர். இக்களவை ஸ்பானியர் அறிந்து தென்னமரிக்கக் கடலில் செல்லும் அங்கிலக் கப்பல்களைப் பரிசோதிக்கத் தொடங்கினர். அங்கிலக் கப்பற்காரர் தம்மை ஸ்பானியர் துன்புறுத்தினரெனக் கூறி ஸ்பானியரோடு போர்செய்தல் அவசியமென விளம்பினர்,

'யென்கின்ஸ்' என்னும் அங்கிலன் ஒருவன் தன் காதை ஸ்பானியர் அரிந்தனரெனக் கிளந்து அதை ஒருகுப்பியில் கொணர்ந்து பாராளுஞ்சபை மத்தியில் காட்டிக் கானவர் செய்யும் இடும்பையைப் பார்க்க என அழுதுபுரண்டான். 1739-ல் அங்கிலர் ஸ்பானியரோடு போர் தொடங்கினர். முதல் அமைச்சன் உவாற்பூல் போர் செய்தால் கேடுவிளையுமென எண்ணினுன். அப்போரில் அங்கிலர் தோல்வியடைந்தனர். அப்போர்முடியுமுன் 1740-ல் பிறிதோர்போர் ஆரம்பமானது. அது ஒஸ்திரிய தேயத்து அரசுரிமைப் போர் எனச் சொல்லப்படும்.

## ஒஸ்திரிய அரசுரிமைப் போர்

ஒஸ்திரியா தேயத்து மன்னன் சார்ள்ஸ் 6-வது தனக்கு ஆண் குழந்தைகளில்லாமையால் தனது இராச்சியம் தன் மகள் 'மரியாத் திராசைக்கு' உரியதாதல் வேண்டுமென விளம்பினன். ஐரோப்பிய நாடுகளில் மகளிர் அரசுபுரிதல் வழக்கமன்று. சார்ள்ஸ் தான் இறந்தபின் தனது அரசைப் பிறநாட்டு மன்னர் வெளவுவாரென அஞ்சி அயல்நாட்டு வல்லரசுகளாகிய பிராஞ்சு ஸ்பெயின் செர்மனி இங்கிலாந்து என்னும் தேயத்து மன்னரைத் தன் எண்ணத்துக்கு இசையப்பண்ணி உடன்படிக்கை எழுதிவைத்தான். சார்ள்ஸ் இறந்தவுடன் ஒஸ்திரியா தேயத்து அரசு தனக்குரியதெனச் செர்மானிய தேயத்துக் குறுநில மன்னன் ஒருவன் கூறிப் பிராஞ்சியரிடம் துணைபெற்முன் பிறடறிக்கு என்னும் புருஷிய சிற்றரசன் சிலேசியா என்னும் நாட்டைக் கைப்பற்றினுன். அங்கிலர் தம் வாக்கைக் காப்பாற்ற வேண்டுமென மொழிந்து மரியாத் திராசைக்குத் துணைபுரிந்தனர். அங்கிலர் பிராஞ்சியரில் அழுக்காறுற்று இருந்தனராகலின், அவர்களுக்கு எதிரான கட்சியைச் சார்ந்தனரெனச் சொல்லுதல் பொருந்தும். அன்றியும் அங்கில அரசன் யோர்ச்சு செர்மானிய தேயத்துச் சிற்றரசருள் ஒருவனுகலின் ஒஸ்திரியா தேயத்து அரசிக்குத் துணைபுரிதல் இயல்பே. காட்டிறற்று என்னும் அங்கில மந்திரி செர்மானியச் சிற்றரசுகளை ஐக்கியப்படுத்திப் பிராஞ்சியருக்கு எதிராகப் போர்புரியும்படி தூண்டினன். 1743-ல் டெற்றிங்கன் என்னும் களத்தில் அங்கிலப்படை ஆறு இடையிட்டதால் முதுகிட்டோடவும் வழி

யில்லாமல் நின்றது. பிராஞ்சியர் படை குன்றில் நின்றது. பிராஞ்சியப் படைத் தலைவன் அவசரப்பட்டு குன்றிலிருந்து இறங்கிப் பொருது தோல்வியடைந்தான். 1745-ல் செர்மானிய குறுநில மன்னர் தம்முள் வேற்றுமைப்பட்டனர். அங்கிலர் வந்தனோய் என்னும் போர்க்களத்தில் பிராஞ்சியரால் புடைக்கப்பட்டனர். 1745-ல் யேம்ஸ் II என்பவனின் பேரன் 'சார்ள்ஸ் எட்டுவார்ட்டு' என்பவன் பிரித்தானிய தேயத்து அரசுரிமையைப் பெறுதற்கு வட கலிடோனிய நாட்டில் இறங்கினன். அவனுடைய வீரத்தைக் கலிடோனியர் மெச்சிப் போர்க்கெழுந்தனர். அங்கிலர் உடனே பிராஞ்சியரோடு எயிலாச்சப்பை என்னும் இடத்தில் உடன்படிக்கை எழுதினர். ஒஸ்திரியரும் 1748-ல் பிராஞ்சியரோடு சமாதானஞ் செய்தனர். மரியாத்திராசை ஒஸ்திரியாவை ஆண்டனள். இது நிற்க, 'சார்ள்ஸ் எட்டுவேட்டு' கலிடோனியாவில் படை திரட்டித் தலைநகராகிய 'எடின்பாரை'க் கைப்பற்றி அங்கிலப் படையைப் 'பிறஸ்தன் பான்ஸ்' என்னும் களத்தில் புடைத்தான். கலிடோனியர் வேற்படை எறிந்து அங்கில குதிரைப்படையையும் பீரங்கிப் படையையும் தொலைத்தனர். சொற்ப நேரத்தில் அங்கிலர் அஞ்சிய முயல்களைப்போல் விரைந்து ஓடினர். அரசிளங்குமாரன் சார்ள்ஸ் 'மறே' என்னும் பிரபுவின் உதவியோடு இங்கிலாந்தினுள் நுழைந்து இலண்டன் நகரைப் பிடிக்க விரைந்தான். யோர்ச்சு மன்னன் இங்கிலாந்தைக் காத்தற்குச் செர்மானியப் படையைக் கொண்டுவந்தான். தான் தோல்வியடைய நேரிடுமென எண்ணிச் செர்மனிக்கு ஓடித் தப்ப யோசித்தான். முதன் மந்திரி பிரபு நியூக்காசில் ஒன்றுஞ் செய்யவியலாமல் மயங்கினன். அத்தருணத்தில் கலிடோனியர் சிலர் சூறை பெற்றனராகலின் தம் வீடு திரும்பினர். 'மறே' லண்டன் நகரைத் தாக்காது திரும்பும்படி அரசகுமாரனுக்குப் புத்தி கூறினன். அரசிளங்குமரன் அப்புத்திக்குச் செவி கொடாதிருந்தால், வென்றிருக்கக்கூடுமெனச் சிலர் வாதிக்கின்றனர். பின்னர் அங்கிலப் படை கலிடோனியரைக் கல்லடன் களத்தில் வென்றதாக அரசகுமாரன் பிராஞ்சு தேயத்திற்குப் புலம்பெயர்ந்தான்.

## 5-ம் பாடம்: ஏழாண்டுப் போர்

எயிலச்சப்பை என்னும் நகரில் எழுதப்பட்ட உடன்படிக்கை பத்தாண்டு நிலைத்தது. 1756-ல் பிராஞ்சியரும் அங்கிலரும் பின்னரும் போர்புரியத் தொடங்கி ஏழாண்டு பொருதனர். ஒருவர் ஒருவரின் வணிகத்திலும் குடியேற்ற நாட்டுச் செல்வத்திலும் அழுக்காறுற்றே போர்புரியத் தொடங்கினர். வட அமரிக்காக் கண்டத்தில் அங்கிலரும பிராஞ்சியரும் குடியேறினர். இவ்விரு குடியேற்ற நாட்டாரும் போரைத் தொடங்கினர். இந்து தேயத்திலும் அங்கிலரும் பிராஞ்சியரும் அரண்களும் ஆவணங்களும் அமைத்து வணிகஞ் செய்தனர். கல்குத்தாவில் அங்கிலர் கோட்டை கட்டினராகப் பிராஞ்சியர் சந்திரநாகூரில் ஒரு கோட்டை கட்டினர். பிராஞ்சியர் புதுவையில் ஓர் பண்டசாலை அமைத்தனராக அங்கிலர் சென்னையில் ஓர் பண்டசாலை அமைத்தனர். பரத கண்டம் பலசாதியார் வசிக்கும் தேயமாயிருந்தது. கைதரபாத்தில் முகமதிய மன்னன் நிசாம் என்னும் பட்டம் பெற்று ஆண்டனன். பிராஞ்சியர் நிசாம் என்பானோடு நட்பாகினர். பிராஞ்சிய தேசாதிபதி 'டுப்பிளி' என்பான் சிற்றரசரின் அணைவோடு வணிகத்தை வளர்த்திருந்தான். 1751-ல் அங்கில வணிகர் சங்கத்தில் எழுத்தாளன் ஒருவனாகக் கிளைவு என்பான் சேவித்தான். அவன் சிறு வயசிலேயே துடியன் எனத் தன் பெற்றோரால் வெறுக்கப்பட்டவன். அவன் தன் கிராமக் கோபுரத்தில் ஏறிக் குந்திக் கீழே குதிப்பனெனக் கூறிக் கிராமத்தோரைக் கலக்கினனும். அவனுடைய பெற்றோர் அவனுடைய துடியை அடக்கமாட்டாமல் இந்தியாவுக்குச் செல்லும்படி கலைத்துவிட்டனர். கிளைவு கப்பலில் தற்கொலை புரிய முயன்றும் தப்பினனும். டுப்பிளி சென்னையை மோதினனாகக் கிளைவு ஆர்க்காட்டைக் கைப்பற்றி 23 வீரரோடு அதைக் காத்திருந்தான். 1754-ல் பிராஞ்சியர் டுப்பிளியைத் தாய்நாடு திருப்பும்படி ஏவினர். இவ்வண்ணம் அங்கிலருக்கும் பிராஞ்சியருக்கும் இடையில் இந்தியாவில் கலகம் மூண்டது. 1756-ல் ஏழாண்டுப் போர் தொடங்கிற்று. ஏழாண்டுப்போரில் பிராஞ்சியரும் ஒஸ்திரியரும் துணைவராயினர். அங்கிலருக்குப் புருஷிய செர்மானியர் துணைவராயினர். அங்கிலர் தோல்வியடைந்தனராகப் போர் நடாத்தும்

அமைச்சன் தகுதியில்லாதவன் எனக் கண்டிக்கப்பட்டான். பிங்கு என்னும் கப்பற்படைத்தலைவன் தன் கடமையைச் செய்ய வில்லையெனப் படைநீதி விதிப்படி சுடப்பட்டான். அங்கில மன்னன் யோர்ச்சு II செர்மனியில் போர்நடாத்தித் தோல்வியுற் றான். புருஷிய மன்னன் பிறடறிக் II திறமானபடை வைத் திருந்தானாகலின் பிராஞ்சியரையும் ஒஸ்திரியரையும் ருஷியரை யும் பல போரில் வென்றான். அத்தருணத்தில் அங்கில நாட் டில் 'உவில்லியம் பிற்று' என்பவன் முதலமைச்சனானான். 1758-ல் அவன் பிரித்தானிய இராச்சியத்தைக் காத்துப் பிராஞ்சிய ரை வெல்ல வேண்டுமென உரைத்தான். அவன் உவல்பு என் னும் இளைஞனைப் படைத்தலைவனாகத் தெரிந்து அமரிக்காவுக்கு அனுப்பினான். உவல்பு அமரிக்காவில் பிராஞ்சியரைக் கலைத் தான். பிற்று படைத்தலைவரைத் தெரிவதில் மாத்திரமன்றி அமைச்சரைத் தெரிவதிலும் கவனமாயிருந்தான். ஏவலுக்கு அமையாத அமைச்சரைப் பதவியினின்றும் நீக்கினான். அவன் அரசியற் தந்தரம் நன்குணர்ந்தோனாகலின் ஒப்பற்ற அமைச்ச னாகத் துலங்கினான். பிற்று புருஷியச் சிற்றரசன் பிறடறிக்கு என்பானுக்குப் பொருள் கொடுத்துக் கூலிப் படைகளைப்பெற் றுப் போரை விடாது தொடரும்படி தூண்டினான். அவன் கடல் வீரரைப் பிராஞ்சிய துறைகளில் இறங்கிச் சூறை யாடும்படி ஏவினானாகலின், பிராஞ்சியர் தம் துறைகளைக் காத் தற்கு சில படைகளைத் தம் நாட்நாட்டில் வைத்திருக்கவேண் டியதாயிற்று. இங்ஙனம் பிரான்சியர் புருஷிய மன்னனை எதிர்க் கப் பெரிய படைகளை அனுப்பவியலாது இருந்தனர். கடற் போரில் அங்கிலர் பல முறை வென்றனர். இதற்கிடையில் கிளைவு வங்காளவரசன் சுறாசுதவுலாவையும் 60,000 படை யையும் வென்றான். 1760-ல் 'ஐயர் கூற்றி' பிரான்சியப்படை யைப் புதுவையில் புடைத்தான். 1763-ல் பாறிஸ் நகரில் சமாதானம் எழுதப்பட்டது. புதுவை பிரான்சியருக்குத் திரும் பவும் கொடுக்கப்பட்டது. அமரிக்காவில் பல நாடுகளை அங்கி லர் பெற்றனர். நியுபவுந்திலாந்துக் கரையில் மீன் படுக்கும் உரிமை பிரான்சியருக்கு அளிக்கப்பட்டதாயினும், அத்தீவு அங்கிலரால் ஆளப்பட்டது.

—

## 6-ம் பாடம்: தென்னமரிக்க வணிகர் கூட்டம்

அங்கிலர் பிராஞ்சியரோடு பலமுறை பொருதும் தோல்வியடையாமல் இருந்ததற்குக் காரணமென்னையோவெனில், இப்போர்கள் ஆரம்பிக்குமுன் உவால்பூல் என்னும் அமைச்சன் இங்கிலாந்தின் வணிகத்தை வளர்த்துப் பொருள் வருவாய்களை பெருக்கியதே என்க. உவாற்பூல் யாண்டும் நட்பு நன்றெனவும் பகை ஒருபோதும் ஆகாதெனவும் கூறுவன். 17-ம் நூற்றாண்டில் பல வணிகர் கூட்டங்கள் தோன்றின. ஒரு கூட்டத்தினர் தென் அமெரிக்க நாடுகளில் வணிகஞ் செய்தால், பெருநயம் பெறலாமென மொழிந்தனர். பலர் அக்கூட்டத்திற்கு அங்கத்தினராயினர் அங்கத்தினர் பங்கு பெறவேண்டும். பங்கின் விலை நம்பமுடியாத அளவுக்கு ஏறிற்று 100 பொன் விலையுள்ள ஒரு பங்கு 1000 பொன்னுக்குப் விற்கப்பட்டது அக்கூட்டத்தினர் அரசாங்கத்தாரின் தேசியக் கடனைத் தாம் ஏற்பரெனச் சொல்லித் தம்மிடமிருந்தே அரசாங்கத்தார் கடன் பெறவேண்டுமெனவும் கேட்டனர். அரசாங்கத்தினர் உடன்பட்டமையால் இத்தென்னமரிக்க வணிகர் கூட்டம் சனங்களின் நன்மதிப்பைப் பெற்றது. யாவரும் இக்கூட்டத்தில் பங்கு பெற்றுத் திரவியந் தேட எண்ணினர். மலிவாகப் பங்கு வாங்கினோர் விலையுயர்ந்த காலத்தில் தம் பங்குகளை விற்று அதிக நயமடைந்தனர். அங்ஙனம் நயமடைந்தோருள் உவாற்பூல் என்பவனும் ஒருவன். இது இங்ஙனமாக இவ்வரிய விலைக்குப் பங்கு பெற்றால் அதற்கேற்ற நயம் பெறவியலாதெனச்சிலர் ஐயுற்றனர். பலர் தம் பங்கை விற்க ஆரம்பிக்கப் பங்கின் விலை குறைந்தது 1000 பொன் விலைப்பங்கை நூற்றுக்கும் வாங்குவோரும் இலராயினர். யாவரும் தம் பங்கை விற்க விரும்பினால் யார்தான் வாங்குவார். இவ்வண்ணம் தென்னமரிக்க கூட்டம் முறிந்தது. பலர் தாம் பாடுபட்டுத் தேடிய பொருளை இழந்தனர். நட்டமடைந்த வறியோர் வணிகர் கூட்டத்து அதிகாரிகளைக் கொல்ல விரும்பினர். கூட்டத்ததிகாரிகள் பொருளை வெளவினரெனப் பலர் பேசினர். அதிகாரிகளுள் ஒருவன் தற்கொலை புரிந்தான்; ஒருவன் வைசூரி நோயால் இறந்தான் ஒருவன் திகைத்திறந்தான்; அமைச்சர் சிலர் வணிகர் கூட்டத்து அதிகாரிகளாகலின், அமைச்சர் கூட்டமும் குலைந்தது. பொதுசனங்கள் கலங்கித்

திகைத்தனர். ஏனைய வணிகர் கூட்டங்களும் முறியுமோவென ஐயுற்றனர். இத்தருணத்தில் உவாற்பூல் ஒருவனே இராச்சியத்தைக் காக்கவல்லவன் எனப் பலர் உணர்ந்தனர்.

### உவாற்பூல்

உவாற்பூல் ஈற்றன் கல்லூரியில் கற்றவன். வேட்டைப் பிரியனாகலின், அரசியற் சம்பந்தமான கடிதங்களைப் பார்க்கு முன் வேட்டையைப்பற்றிய கடிதங்களைப் பார்ப்பானும். அவன் தெரிந்து விளையாடுவன் எனவும், முயற்சி செய்வதில் களையான் எனவும் புகழப்பட்டான். அவன் தன் தொல்லைபற்றிச் சிந்தியான் எனவும் ஒன்றற்கும் அவசரப்படான் எனவும் சொல்லப்பட்டான். உவாற்பூல் தன் உடுப்பை மாற்றும்போது தன் தொல்லைகளையும் தான் களைந்துவிடுவான் எனக் கூறினும். ஆனல் தான் சாது அல்லனெனவும் ஒழுக்கச் சீர்திருத்தம் செய்பவ னல்லனெனவும் செப்பினன். 1721-ல் உவார்பூல் அமைச்சனாகியவுடன் போரை நிறுத்தினன் யாதேனும் ஓர் ஊர் போரின்றி வணிகத்தை வளர்க்குமாயின் அவ்வூர் தழைத் தோங்குமென வற்புறுத்தினன். வணிகம் வளர்தற்குப் பண்டங்களைச் சுங்கமின்றி ஏற்றுமதி இறக்குமதி செய்தல் நன்றென விளம்பினன்.

---

## 7-ம் பாடம்: அமைச்சியல்

முதலாவது யோர்ச்சு மன்னன் அங்கிலம் பேசத் தெரியாமையால் தன்னல் அமைச்சர் கூட்டத்தில் தலைமை வகிக்க முடியாதெனவும் ஒரு முதலமைச்சனைத் தெரிதல் அவசியமெனவும் உரைத்தனன். இக்காலத்திலேயே அமைச்சர் முதல் முதல் ஒரு சபையாகக் கூடினர். சபையாகக் கூடியபோதிலும் அவர்கள் வெவ்வேறு கொள்கைகளை உடையராயிருந்து முரண்படும் உபாயங்களைக் கூறினர் பிற்காலங்களில் அமைச்சர் சபை தம்முள் முரண்படாமல் முதலமைச்சனேடு ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்னும் வழக்கம் உண்டாயிற்று பாராளும் சபையில் கட்சியாட்சி தொடங்கியதாக ஒரு கட்சியின் தலைவர்களே அமைச்சராயினராகலின், அமைச்சர் சபை அப்ப

பிராய பேதங் காட்டாதிருந்தது. முதன் மந்திரியே ஏனைய மந்திரிகளைத் தெரிதல் வழக்கமாயிற்று. அமைச்சர் தனித்தனியாகவும் சபையாகவும் தாம் ஆளும் அரசியற்றந்தரத்திற்குப் பாத்திரராயினர். பாராளும் சபை அமைச்சர் கூட்டத்தினர் பிரேரணையை ஆதரியாமல் அவர்களின் கொள்கைக்கெதிராகும் பிரமாணம் ஒன்றை விதிக்குமாயின், உடனே அமைச்சர் கூட்டம் தம் பதவியைத் துறக்கும். ஓர் அமைச்சன் செய்யும் பிழை அமைச்சர் கூட்டம் செய்யும் பிழையாக எண்ணப்படும். அமைச்சர் கூட்டத்திற்கு உரிமைகளை அளிக்கப் பாராளும்சபையோர் அஞ்சினர். ஒரு குழுவினர் ஒருங்குசேர்ந்து தாம் நினைத்தவாறு அரசியலை நடத்திக் கொடுங்கோல் புரியக்கூடுமெனப் பாராளும் சபையோர் அஞ்சினர். எனினும் காலக்கிரமத்தில் அமைச்சர் கூட்டம் அரசியலை நடாத்திற்று. முற்காலத்தில் அரசனுக்கு இசைந்து அமைச்சர்கள் ஒழுகினார்கள். இக்காலத்தில் அமைச்சருக்கு இசைந்து அரசன் ஒழுகுகிறான். இடிக்கும் துணையாரை ஆள்வாரை ஆள்வாருக்குக் கேடு விளைதல் அரிதாகலின், அங்கில அரசியன்முறை மிகச் சிறந்ததாகின்றது.

19-ம் நூற்றுண்டுப் பாராளும் சபை பூரண குடியரசு முறையைக் கையாண்டதெனக் கூறவியலாது. என்னை! பொதுசனங்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படாமையின், பொதுசனப் பிரதிநிதிகள் பாராளும் சபைக்கு உறுப்பினராகவில்லை செல்வர்களே பாராளும் சபைக்குத் தெரியப்பட்டனர் மேன்மக்கள் சிலர் தம் நண்பர்களைத் தம் செல்வாக்குச் செல்லும் தொகுதிகளுக்குப் பிரதிநிதிகளாக நியமித்து அவர்களைத் தெரிவு செய்யும்படி வாக்காளரை ஏவினர். 1832-ல் வாக்குரிமை பொதுசனங்களாகிய தொழிலாளர் யாவருக்கும் அளிக்கப்பட்டது. அரசியல் முறை திருத்தப்பட்டதாயினும், 20-ம் நூற்றுண்டில்தான் ஆண்பெண் என்னும் பேதமின்றி வாக்குரிமை கொடுக்கப்பட்டது.

### உவாற்பூலின் அரசியற்றந்திரம்

உவாற்பூல் தனக்குப் பிரியமான நண்பர் பலரைப் பாராளும் சபைக்குத் தெரிவித்தனனுகலின், 21 வருடம் முதலமைச்

சனுக அரசியலை நடத்தினுன். அமைச்சன் ஒருவன் தன்னேடு முரணின் அவனைக்குடியேற்ற நாடுகளுக்குத் தேசாதிபதியாக்கி அனுப்புவான். உவாற்பூல் தன் பதவியைத் துறக்க நேரிட்ட வரலாற்றை ஆராய்வாம்: இறக்குமதிப் பண்டமாகிய புகையிலை உவையின் என்பவற்றில் துறையில் சுங்கம் பெருமல் துறையிலிருந்து வணிகர் அவற்றை எடுத்துச் சென்றபின் கடைகளில் சுங்கத்தைப் பெறுதல் நன்றெனை உவாற்பூல் பிரேரித்தான். பாராளுஞ்சபை பிரேரணையை எதிர்த்ததாக உவாற்பூல் பகை மூளுமென அஞ்சித் தன் பிரேரணையைக் கைவிட்டனன். பொதுசனங்கள் தமது இல்லங்களில் அரசாங்கச் சேவகர் புகுந்து குடிகளின் உரிமைகளைப் பொருட்படுத்தாரெனப் பகர்ந்தனர். கலிடோனியர் தாம் முற்காலங்களில் கொடாத சுங்கம் கொடுக்க நேரிட்டதெனப் பேசினர் சிலர் சுங்கம் கொடாமல் பண்டங்களைக் களவாக இறக்குமதி செய்தனர். சுங்கங் கொடாமல் களவு செய்வோரை அரசாங்கச் சேவகர் தண்டித்தனராகக் கலிடோனியர் சிலர் கலகம் விளைத்தனர். கலகம் பண்ணிய சிலரைச் சுடும்படி போட்டியஸ் என்னும் காவற்றலைவன் கட்டளையிட்டான். பொதுசனங்கள் திரண்டு போட்டியஸ் என்னும் சேவகர் தலைவனைக் கொன்றனர். இக் காரணங்களால் 1742-ல் உவாற்பூல் தன் பதவியைவிட்டு நீங்கினன்.

## மூத்த பிற்று

1742-ல் பிற்று முதலமைச்சனுகி ஏழாண்டுப் போரை நடத்தினுன். 'உவில்லியம் பிற்று' 'ஈற்றன்' கல்லூரியிற் கற்றவன். குதிரைப் படையில் சிறிதுகாலம் சேவித்தவன். 1735-ல் பாராளுஞ் சபைக்குத் தெரியப்பட்டு உவாற்பூலை மிக உற்சாகத்துடன் எதிர்த்தான். படைத்தலைவன் சர்ச்சிலின் மனைவி அவனை மெச்சித் தன் மரண சாதனத்தால் 10,000 பவுண் பொன் அளித்தாளாம். கி. பி. 1761-ல் பிற்று ஒப்பற்ற அமைச்சனுகத் திகழ்ந்தான். அரசாங்க சேவகரைப்போல் தன் அமைச்சரும் தன் ஏவல்களைப் பொருட்படுத்த வேண்டுமெனப் பிற்று மொழிந்தனன். இது குடியரசுமுறை யாகாதெனச் சிலர் கூறினும் பிற்று பெருந்தகைமை மிகுந்தோன் என்பதில் ஐயமில்லை. அவன் கைக்கூலி பெறுவோரைத் தண்டித்தான்.

மேலும் அவன் பொதுப்பொருளை ஒருபோதும் வெளவினு னல்லன். அவனுடைய பேச்சு மிகச் சிறந்தது அவனுடைய புத்தியைக் கேட்டிருந்தால் அங்கிலர் தம் அமரிக்கக் குடியேற்ற நாடுகளை இழந்திரார் எனச் சரித்திர நூல் வல்லோர் செப்புகின்றனர். அமரிக்கரோடு அங்கிலர் போர்முரசறைய எண்ணிய காலத்தில் பிற்று வாதநோயால் பீடிக்கப்பட்டிருந்த போதிலும் பாராளுஞ்சபை சென்று அமரிக்கருடைய நட்டைப் பெறும்படி பேசினன் என்பர்.

---

## 8-ம் பாடம்: ஒழுக்கச் சீர்திருத்தம்

'யோன் உவஸ்லி' 'ஒக்ச் போட்டு' க் கலாசாலையில் கற்று அங்கில சமயகுருவாயினன். அவனும் அவன் தம்பி சார்ள்ஸ் உவஸ்லி என்பவனும் உவிற்பீல்டு என்போனும் வேறுசிலரும் தம்மைத் திருத்தற்கென ஒழுக்கச் சீர்திருத்தச் சபை ஒன்றை நிறுவினர். பின்பு யோன் உவஸ்லி அமரிக்கக் குடியேற்ற நாடுகளில் போதனை செய்தான். 1739-ல் அவன் தாய்நாடு திரும்பிப் புதுக்கோயில்கள் கட்டி அனுவசியமான கிரியைகளின்றித் தெய்வத்தை வழிபட்டனன்; மைதானங்களில் பொது சனங்களைக் கூட்டிக் கிறிஸ்துவின் போதனைகளுக்கு உரை செய்து விளக்கினுன். உவிற்பீல்டு 36 ஆண்டு போதனைசெய்திருந்தான். அவன் கிழமை ஒன்று பத்து உபந்நியாசம் செய்தனன். அவன் விரிவுரைகள் செய்யும் கூட்டம் ஒவ்வொன்றிலும் 30,000 சனம் சமுகமளித்தனர் என்ப. 'யோன் உவஸ்லி' 50 ஆண்டு போதனை செய்து 40,000 விரிவுரைகள் நிகழ்த்தினுன். அவன் சமயத்தொண்டு செய்தற்கு அமரிக்காவுக்குப் பன்னிருமுறை போனுன். உவஸ்லியின் கூட்டத்தினர்செய்த தொண்டை அங்கிலர் யாவரும் மெச்சினர். உவஸ்லி இறந்தவுடன் அவனுடைய கூட்டத்தினர் தமக்குப் புறம்பான கோயில்களை நிறுவினர். உவஸ்லியின் கூட்டத்தினர் மதுபானஞ் செய்தலைக் கண்டித்தனர். இக்காலத்தில் கோப்பி அருந்தும் வழக்கம் ஏற்பட்டது. ஈண்டு உவஸ்லியின் கூட்டத்தினர் 19-ம் நூற்றுண்டின் பிற்பாகத்தில் இலங்கையில் பாடசாலைகளும் கோயில்களும் அமைத்துத் தம்மதத்தை நாட்டினர் என்பது அறியற்பாலது.

---

## 9-ம் பாடம்: அமெரிக்க சுவாதீனப் போர்

அங்கில அமைச்சரின் புத்திக் குறைவால் அங்கிலர் தம் அமெரிக்கக் குடியேற்றங்களை இழந்தனரெனக் கூறலாம். வடபால் பிராஞ்சியர் நாட்டிய குடியேற்றமாகிய கனடா என்னும் நாடுகளை ஏழாண்டுப் போரில் அங்கிலர் கைப்பற்றினராக, அமெரிக்கக் குடியேற்றநாட்டினர் தாய்நாட்டினருடையதுணை தமக்குத் தேவையில்லையென விளம்பினர். இதுகாறும் பிராஞ்சியருக்கு அஞ்சியே அமரிக்கர் அங்கிலரின் துணை வேண்டினர். பகைவர் ஒருவரும் இன்மையால் தாய்நாட்டின் துணையும் காவலும் இனி வேண்டியதில்லை யெனக் குடியேற்றநாட்டினர் கூறினர். அங்கிலர் தாம் தம் குடியேற்ற நாட்டினருக்காகவே பிராஞ்சியரோடு பொருதனரெனவும், அப்போர்ச் செலவுக்காகக் குடியேற்றநாடுகளில் அரசிறை பெறுதல் அவசியமாயிற்றெனவும் உரைத்தனர். அமெரிக்கக் குடியேற்ற நாட்டார் தம்முள் பல கட்சிகளாகி முரண்பட்டிருந்தபோதிலும் இவ்விஷயத்தில் ஒன்றுபட்டனர்.

அங்கில மன்னரே குடியேற்ற நாடுகளுக்குத் தேசாதிபதிகளைத் தெரிந்து அனுப்பினர். குடியேற்ற நாட்டு அரசியற்சபைகள் பிரமாணங்களை ஆக்கி அரசியலை நடத்தியபோதிலும், அங்கிலப் பாராளுஞ் சபையின் தீர்மானங்களும் குடியேற்ற நாடுகளில் பிரமாணமாயின. குடியேற்றங்கள் தாய்நாட்டின் நன்மையைக் கருதியே நாட்டப்பட்டவை என அமைச்சர் பலர் நம்பியிருந்தனர். அங்கிலர் தம் நயங்கருதிக் குடியேற்ற நாட்டினரின் வணிகத்தை வளரவிடாது கட்டுப்படுத்தினர். குடியேற்ற நாட்டோர் தம் புகையிலை பருத்தி ஆட்டுமயிர் முதலிய பண்டங்களைத் தாய்நாடாகிய பிரித்தானியாவுக்கு அனுப்புதல் வேண்டும். குடியேற்ற நாட்டோர் பருத்திநூலாடை புகையிலைச் சுருட்டு முதலிய பண்டங்களை ஆக்கக்கூடாது. அப் பண்டங்களை அவர்கள் அங்கிலரிடம் பெறவேண்டும். குடியேற்ற நாட்டினருக்குத் தேவையாகும் பண்டங்களை அவர்கள் பிரித்தானியரிடம் பெறவேண்டும். பிற நாடுகளிலிருந்து பெறும் பண்டங்களை அமெரிக்கர் அங்கில வணிகர் மூலமே பெறவேண்டும். ண்டங்கள் யாவும் அங்கிலக் கப்பல்களிலேனும் அமெரிக்கக்

கப்பல்களிலேனும் ஏற்றப்படும். இத்தகைய பல ஒழுங்குகள் மிகத் தவறானவை எனினும், அக்காலத்துத் தாய்நாடுகள் யாவும் தம் குடியேற்றங்களை இவ்வண்ணமே ஆண்டவையாகலின், அமரிக்கக் குடியேற்ற நாட்டோர் அங்கிலரைப் பகைத்துப் போர்க்கெழுந்தது தவறெனச் சிலர் உரைத்தனர். அமரிக்கக் குடியேற்ற நாட்டினர் தம் புகையிலையைப் பிரித்தானியருக்கே விற்கவேண்டியிருந்ததால் அவர்களுக்கு யாதொரு நஷ்டமும் இல்லையென்பர். என்னையோவெனின், தாய்நாட்டாராகிய பிரித்தானியர் குடியேற்ற நாட்டோருடைய புகையிலையையே வாங்க வேண்டுமென்னும் பிரமாணம் இருந்தது என்க. 1763-ல் யோர்ச்சு மன்னன் III என்பவனின் அமைச்சன் கிறன்வில் சுங்கம் பெற்றால் அமரிக்கரிடம் 2000 பவுண் பெறலாமெனக் கணக்கிட்டான். குடியேற்ற நாட்டில் நிலப் படையொன்று அவசியமெனச் சாற்றி அதன் செலவுக்குப் பொருள் குடியேற்ற நாட்டினரே அளிக்கவேண்டுமென வற்புறுத்தினன். அப்படையின் செலவில் மூன்றிலொரு பங்கையாயினும் குடியேற்ற நாட்டோர் கொடுக்கவேண்டுமென விளம்பினன். அங்ஙனம் செய்யாக்கால் 1765 தொடக்கம் அங்கில முத்திரைகளே குடியேற்ற நாடுகளில் உபயோகிக்கப்படல் வேண்டுமென அறிவித்தனன். குடியேற்ற நாட்டோர் பிரித்தானிய நாட்டுப் பாராளுஞ் சபைக்குத் தாம் பிரதிநிதிகளைத் தெரியாதபடியால் தம்மை அரசிறை இறுக்கும்படி சொல்வதற்குப் பிரித்தானியப் பாராளுஞ் சபைக்கு உரிமை இல்லை எனக் கூறினர். குடியேற்ற நாடுகளில் கலகம் கால்கொண்டது. தேசாதிபதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டன. முத்திரை விற்போர் துன்புறுத்தப்பட்டனர். பதின்மூன்று குடியேற்ற நாடுகளும் ஒருமித்து ஒரு கூட்டம் கூடித்தாய்நாட்டு அமைச்சர் தவறிழைத்தனர் என மொழிந்தனர். 1766-ல் அங்கில அமைச்சன் முத்திரையை அமரிக்கர் உபயோகிக்கவேண்டியதில்லை என அறிவித்தானாக அமரிக்கர் தாம் வெற்றியடைந்தனர், என ஆரவாரித்தனர். அங்கில அரசாங்கத்தாருக்கு அரசிறை பெறும் உரிமை உண்டென்பதை நிலைநாட்டற்கு அமைச்சன் 'ரவுன்சந்துப் (பிரபு) குடியேற்ற நாடுகளில் இறக்கும் தேயிலைக்குச் சுங்கம் பெறப்படுமென 1767 ல் விளம்பினன். 1770-ல் முதலமைச்சன் 'நோர்துப்' (பிரபு) அரசனோடு இசைந்து அரசியலை நடத்தினன். அவன் குடியேற்ற நாட்டோரிடம் அரசிறை பெற முயன்றனன்.